JL.
Rm. 11, NO3.I
NO3.1
161/90

ஓம்
பரப்பிரம்மணேநமஃ

"ஏகம் சத்விப்ரா பஹுதா வதந்தி"

# இகபரசுகசாதனி.

வாலியம் I. 1903வருடம் மேமீ புத்தகம் I.

## மனனமாலை.

அத்துவித வத்துவைச் சொற்ப்ரகாசத் தனியை
யருமறை கண்முரச றையவே
யறிவினுக் கறிவாகி யானந்த மயமான
வாதியை யநாதி யேக
தத்துவ சொரூபத்தை மதசம்மதம் பெருச்
சாலம்ப ரகித மான
சாசுவத புட்கல நிராலம்ப வாலம்ப
சாந்தபதவ் யோம நிலையை
நித்தநிர் மலசகித நிஷ்ப்ரபஞ்சப் பொருளை
நிர்விஷய சுத்த மான
நிர்விகா ரத்தைத் தடத்தமாய் நின்றொளிர்
நிரஞ்சன நிரா மயத்தைச்
சித்தமறி யாதபடி சித்தத்தி னின்றிலகு
திவ்யதே சோமயத் தைச்
சிற்பர வெளிக்குள்வளர் தற்பரம தானபர
தேவதையை யஞ்சலி செய்வாம்.

---

மலரயனைப் படைத்தான் மாலவனைக் காத்தா
னிலகரனை யெல்லாந் துடைத்தவனிறைவ னனன்
மலைமகட் கொருபாலீந்து மலிபுனற் கங்கையாளைச்
சிலைமதி முடியில்வைத்தான் றிருப்புலி வனத்துளானே.

---

நீரிடை யிருப்ப னிலத்திடை யிருப்பன்
காற்றிடை யிருப்பன் கனலிடை யிருப்பன்
விண்ணிடை யிருப்பன் வெயிலிடை யிருப்பன்
மதியிடை யிருப்பன் மனத்திடை யிருப்பன்
நதியிடை நெய்போற் சங்கரன் றானே.

---

மூலமென்றழைத்த முனைக்கொம்பியானை, வருத்தந்தீர்ப்பான் வந்தனெவனோ, தூணிலுமிருப்பன் றுரும்பிலுமிருப்பன் எனுமழசொல்லுக் கெதிர்ந்தவனெவனோ, தகிலரிகாலைத்துருவதன் மகட்கு, மாளாத்துகிலை வருத்தினனெவனோ, வருச்சுனற்காக வமரிடையிருந்தாங் குணர்மெய்ஞ்ஞான முரைத்தவனெவனோ, வவனேபிரமமென் றறிமன்னே.

---

கல்லாலின் கீழ்க்கடவுளாகிப், பொல்லா ஞானம்புரிந்தவனெவனோ, மால்வரைவில்லாய் வலியவர்புரங்க, ளீரெழுவொருக்கு நின்றமூவரைச், சேவடி நீழலிற் சேர்த்தவனெவனோ, [illegible] மாட்டிக்கவின் சிறுபாலன், மரணந் தவிர்ப்பான் [illegible] வவனே பிரமமெ[illegible]ன்னே.

---

அவரவர் தாந்தா மறிந்தவா றேத்தி
இவரிவரெம் பெருமா னென்று - சுவர்மிசைச்
சாத்தியும் வைத்துந் தொழுவ ருலகளந்த
மூர்த்தி யுருவே முதல்.

---

யாருமோர் நிலைமையனென வறிவரிய வெம்பெருமான்
யாருமோர் நிலைமையனென வறிவெளிய வெம்பெருமான்
பேருமோ ராயிரம் பிரபலவுடைய வெம்பெருமான்
பேருமோ ருருவமுமுளதில்லை யிலதில்லை பிணக்கே.

---

ஒன்றெனப் பலவென வறிவரும் விடிவினுணின்ற
நன்றெழில் நாரணனான்முக னரனென்னு மிவரை
ஒன்றநும் மனத்துவைத் துள்ளிநும் மிருபசையறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடைநாளே.

---

அண்டமுமாய்ப் பிண்டமுமா யளவிலாத வாருயிர்க்கோ
ருயிரா யமர்ந்தா யானுற்
கண்டவரார் கேட்டவரா ருன்னுலுன்னைக் காண்பதல்ல
லென்னறிவாற் காணப் போமோ
வண்டுளப மணிமார்பன் புதல்வனோடு மனைவியோடுங்
குடியிருந்து வணங்கிப் போற்றும்
புண்டரீக புரத்தினிறு தாந்தமௌன போதாந்த
நடம் புரியும் புனிதவாழ்வே.

---

அறியாப் பொருளு மலனறிவானுன் கண்ணு
லறியும் பொருளு மலன்.

---

ஆருயிரி னுள்ளினிருந் தாங்காங் கறிவிப்பா
ராருயிரே மேனி யவர்க்கு.

---

அறிவுக் கறிவா யறிவிப்பான் சில்லோர்க்
கறிவுருவு கொண்டருளு வான்.

---

எங்கெங்கே பார்த்தாலு மெவ்வுயிர்க்கு மவ்வுயிரா
யங்கங்கிருப்பது நீயன்றோ பராபரமே.

---

தன்னை யறிந்தாற் றலைவன்மேற் பற்றலது
பின்னை யொருபற்று முண்டோ பேசாய்ப் பராபரமே,

---

வான்காண வேண்டின் மலையேற லொக்குமுன்னைப்
நான்கால [illegible] வினைசெய் நாட்டம் பராபரமே.

161190

## இகபரசுகசாதனி.

உலகத்தில் மனிதன் பலவேறு வகைப்பட்ட வழிகளிற் புகுந்து அளவிலாத் திரவியமும் அகண்ட பூமியையும்பெற்று, மிக்க அழகுவாய்ந்த மாதர்களை மணந்து புத்திரபௌத்திராதிகளைப்பெற்று எவ்வளவு சுகமாய்வாழ்ந்தாலும், கரையிலாத கல்வியில் மிக்கத் தேர்ச்சியடைந்த பிரபல வித்துவானானாலும், உலகிலுள்ள பலவித விசித்திரமான வஸ்துக்களின் இருப்பையும் அவைகளினாலுண்டாகும் பயனையும் அறிந்தாலும், தன் வாழ்நாளி லொருநாளாவது சிறிது ஓய்வு காலம் வாய்த்தபோது, தன்னைப்பற்றி யோசிக்கநேரிடுறது. அது என்ன யோசனை? 'இவ்வுலகில் பிறந்தாம், கல்விகற்றோம், பொன்னைச்சேகரித்தோம், வீடு ாசல் மனை இவைகளைக் குறைவின்றிப் பெற்றோம், ல்ல பெண்டிரையடைந்து நன்மக்களையும் ஈன்றோம், வைகளெல்லாம் நமக்கு என்ன பிரயோசனம்? நம்டைய தேகமானது நிலையில்லாததா யிருக்கிறதே! மின்னும் எத்தனைநாளைக்கிருப்போமென்று எண்ணடியவில்லையே! இன்றைக்கிருப்பானா நாளைக்கிருப்பன்றுசொல்லத் திறனில்லையே! இத்தனை நாளைக்குருப்போமென்று ஒருவேளை தெரிந்தாலும் அந்த நானாலிறக்கவேண்டியது நிச்சயந்தானே? அக்காலத்ல் நாமடைந்திருக்கும் பாக்கியங்களையெல்லாம் விட்ப் பிரியவேண்டியது சத்தியந்தானே? ஆகா! சீச்சீ! தென்ன உலகம்! இதில் என்னவாழ்வு! இதில் ஏதும்? எல்லாம் பயனற்றது என்றுதீர்மானித்து சிறிது க்தியடைந்து, மனிதன் ஓர் விதமான மனக்கிலேசத்தை யடைகிறான். அம்மனக்கிலேசத்தை நீக்கவகை யறியாது மறுபடியும் மனிதன் உலகவியாபாரத்தில் பிரவேசித்து முன்செய்த யோசனையையும் மறந்து விடுகிறான். இப்படியும் செய்யலாமோ? ஒருதரம்யோசித்த போது உலக சுகம் அனித்தியமென அறிந்த பின்னர் அதைமறந்து மறுபடியும் உலகத்தில் ஆசைவருமோ? ஒருதரம் நமக்கு மரணம் உண்டென அறிந்தபின்னர், மரணமாவதென்னை, ஜனனமாவதென்னை, என்றுமேல் ஆராய்ச்சிசெய்ய புத்தியைசெலுத்தாமல், நமக்குமரணமில்லை யெனத்துணிவது முண்டோ? இவ்வுலகிற் பிறக்க எங்கிருந்துவந்தோம் இறந்தபின் எங்குபோவோமென அறியாதவரையில் மனிதனுக்கு நித்திரையும் ருமோ? யோசித்தும் தெரியாவிடின் தக்கபெரியோர் டைந்து உண்மையை உணராதவரையில் உலகதில் மனமும் செல்லுமோ? இதென்ன விபரீதம்! தில் அநேகவஸ்துக்களை யறிந்தும் உலகத்தை யும் நமக்குப் புறம்பாயுள்ள களையெல்லாமறிந்தும் நம்மையறியாமலும், இப்படி முக்கியமான விஷயங்களில் மூடமாயிருப்பது மோர் விந்தையோ? இன்றைக்குச்சுகமாய்த் தோன்றியது நாளைக்குத் துன்பமாய் முடிகிறது. இன்றைக்குத் துன்பமாயிருந்தது நாளைக்கு இன்பமாய் முடிகிறது. இப்படி மாறி மாறி சுகதுக்கங்களைக் கொடுக்கும் இயல்பையுடைய உலகமெத் தன்மைத்தென்று யோசியாம லிருப்பது நியாயமோ?

தினந்தோறும் கண்டு அனுபவித்து வரும் உலகினது நிஜசொரூபத்தையும் தன்னுடைய உண்மைசொரூபத்தையும் மனிதன் அறியசக்தி யற்றவனாகில், ஒருவாறு நோக்கின் நானாவித வித்தியாசமாயும் எண்ணரிய பேதங்களையுடையதாயும், மற்றொருவாறுநோக்கின் ஓர் வித்தியாசமுமின்றி ஏகமாயும், எண்ணரிய சராசரங்களும் நோக்கும்பேதத்தால் பலவாயும் ஒன்றாயும் காலவரையறைப்படி ஓர் கிரமத்தை யனுசரித்து ஓர் சட்டத்திற்குக்கட்டுப்பட்டு நடப்பனபோலத் தோன்றியிருந்துமறையும் ஆச்சரியத்தையுடைய உலகத்திற்கு கர்த்தாவாய்விளங்கும் கடவுளினது சொரூபத்தையும் மகிமையும் வல்லமையும் அறிந்து ஆனந்த மடைவது எப்படி கைகூடும். மனிதன் தன்னையும் தனக்காதாரத்தலைவனையும் உலகையும் உண்மையிலறிந்தாலல்லாமல், மாறுதலில்லாத நித்திய சுகத்தை யடையமாட்டான். ஜகஜீவ பரங்களை யறியும்வரையில், பிறப்பு உண்டு, இறப்பு உண்டு, நரகமும் உண்டு, பயம்விடாது, மோகம் ஒழியாது, ஞானம் வாராது. அல்லலும் துன்பமும் அதிகரிக்கும்.

துக்கம் நிவர்த்தியாய் நித்திய பேரின்பத்தை யடைய ஜகஜீவபரங்களினது ஞானம்வேண்டும். அந்த ஞானத்தையடைய விசாரணை அவசியம். பெரியோர்கள் தங்கள் அனுபவத்தில் கண்டு உலகஉபகாரமாக எழுதிவைத்த சாஸ்திரங்களைப்படித்து ஆராய்ச்சிசெய்வதுதான் விசாரணை. ஜகஜீவபரங்களினது ஞானத்தைப் போதித்து மனிதனுக்குண்டாயிருக்கும் துன்பத்தைப் பரிகரித்து இன்பத்தைக் கொடுப்பதுதான் மதம். மதமானது பலதேசங்களிலுள்ள மனிதருடைய புத்தியின் சக்தியிருந்தவாறுபலவிதமாய் ஏற்பட்டிருக்கிறது. சிலதேசங்களில் ஜனங்களினுடைய நாகரீகத்திற்கு தகுந்தமாதிரி மதங்கள் மாறிக்கொண்டே வருகின்றன. சராசரங்களனைத்திலும் சமமாய்ப்பரவிநின்று அவையனைத்திற்கும் வேறாய் ஏகநாயகமாயொளிரும் ஒப்புயர்வற்ற தெய்வம்போல், எல்லாமதங்களிலும் கலந்து அவைகளுக்கெல்லாம் மேலான வேறு மதம்போல் என்றைக்கும் அறியாதநித்...ாய்ப் புனிதமாய்ப் பு... விளங்குவக... ம். இந்தம...



தென்றுசொல்லிப் புறமதங்களைத் தாழ்த்தி விட்டதாக நினைக்கக்கூடாதென்று இப்பத்திரிகையைப் படிக்கும் நண்பர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம். தனிச்சர்க்கரையின் சுவைக்கும், சர்க்கரைச்சேர்ந்த பணியாரங்களினது சுவைக்கும் எவ்வளவு வித்தியாச முண்டோ அவ்வளவு வித்தியாசந்தான் இந்துமதத்திற்கும் ஏனைய மதங்களுக்குமுள்ள வித்தியாசம். சர்க்கரையும் தித்திக்கின்றது. சர்க்கரைசேர்ந்தபணியாரமும் தித்திக்கின்றது. இரண்டுசுவைகளையும் எப்படி யறிகிறோமோ அப்படியே இந்துமதத்தையும் பிறமதங்களையும் அறிய வேண்டியது. இனிப்பென்னும் சுவையையே உடைய சர்க்கரை போன்றது உண்மையையே கூறும் இந்து மதம். பணியாரங்களில்சேர்ந்த சர்க்கரை போன்றது ஏனைய மதங்கள். ஓர் தேசத்தில் அநேகபெரியோர்கள் ஒன்றுகூடி உலகத்தைக்குறித்தும், மனிதர்களைக்குறித்தும் இன்னும் கடவுளைக்குறித்தும் சொல்லிய வசனங்களைகேட்ட ஜனங்கள், ஆஆ! இவர்கள்கூறுவது சரியெனஒப்புக்கொண்டு கொடுத்த சம்மதமேஅத்தேசத்து ஜனங்களுக்கு மதமானபடியால், இந்துமதக்கோட்பாடுகளை எம்மதத்தைச்சேர்ந்த ஜனங்களுக்கும் அவர்கள் அனுபவத்தையனுசரித்து உண்மைவழியில் கூறுவது அவர்களுக்குச் சம்மதமாயிருந்தால் அக்கோட்பாடுகளில் என்னகுறை? ஓர் காலத்தில் ஓர்தேசத்தில் கடவுளைக்குறித்து சிலகோட்பாடுகளையுடையமதம் ஒன்று ஏற்பட்டது. மற்றோர்காலத்தில் மற்றோர் தேசத்தில் கடவுளைக்குறித்தே வேறு சில கோட்பாடுகளை யுடைய பிறிதோர் மதம் உண்டாயிற்று. இவ்விரண்டுமதங்களுக்குமுள்ள வித்தியாசம் எதை ஆதாரமா யுடையது? அதாவது இவ்விரண்டு மதங்களின் வித்தியாசத்திற்கு என்னகாரணம்? அந்தந்தமதம் உண்டாகிய காலமும் தேசமும், அதை உண்டாக்கிய பெரியோர்களின்புத்தியின் பேதமே வித்தியாசத்திற்குக்காரணம். வேறுகாரணம் கிடையாது. ஆனால் இவ்விருமதங்களும் எந்த விஷயத்தில் ஒற்றுமையுடையது? இவ்விருமதங்களும் கடவுளை ஆராய்ந்து அறியவெழுந்தமையின் கடவுளே பொதுவானவிஷயம். இவ்விஷயந்தான் இவ்விருமதங்களுக்கும் ஒற்றுமையை யுண்டாக்கியது. ஆகையால் மதகோட்பாடுகளில் சில ஏற்றக்குறைவு காலத்தைப் பற்றியும் தேசத்தைப்பற்றியும் மனிதர்களின் மனப்பரிபாக முதிர்ச்சியைப்பற்றியும் உண்டா யிருப்பினும், எல்லாமதங்களும் தேடப்புகுந்தது சர்வலோகத்தையும் ஆக்கி யளித்து அழிக்கும் ஒப்புயர்வற்ற ஒரே கடவுளையாகையால், அக்கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகவாசிகளாய் எல்லாமதஸ்தர்களும் இருத்தல்பற்றி மதக்கோட்பாடுகளின் வித்தியாசங்களை கவனியாமல் ஒவ்வொருமதஸ்தர்களும் பிறமதஸ்தர்களை தங்களுக்குச் சகோதரமுறைமை யுடையவர்களென்பதை ம... மல், ஒருவரை மற்றொருவர் மேன்மேலும் உய... ஸ்திதிக்குகொண்டுவருவதே மதஸ்தர்களின் கடமையாதலால் இகபரசுகசாதனி யென்னும் பத்திரிகையில், மததூஷணையின்றியே எல்லாரும் நித்தியமானசுகத்தை யடையவேண்டிஜெகஜீவபரங்களின் ஞானத்தைப்பற்றி சுருதி, யுக்தி அனுபவமென்னு மூன்றனுள் முக்கியமான அனுபவத்தை யதிகமாய் அனுசரித்து எல்லா மதஸ்தர்களுக்கும் பயன்படும்படி தக்க விடங்களில் யுக்திகளைக்கொண்டும், மதவித்தியாசம் பாராட்டாமல் எல்லாமதக் கிரந்தங்களை யாதாரவாகக்கொண்டும், வரிசை கிரமமாய் ஆரம்பித்து எளியதமிழ் வசன நடையில் தெளிவாய் படிப்பவர் யாவரும் அறிந்துகக்கும் வண்ணம் மாதம் மாதம் எழுதப்படும். பத்திரிகை முழுவதும் மதவிஷயத்தையே யெழுதுவது நல்லவிஷயமாயினும் எல்லாஜனங்களுக்கும் திருப்தியும் பத்திரிகையில் ஆசக்தியு முண்டாகாதாகையால் அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாமென்பதை யோசித்து லௌகீகவிஷய சம்பந்தமான வியாபாரம், இராஜாங்க விஷயங்கள், கோர்ட்டு நியாயங்கள், சட்டங்கள், பலதேசத்து வர்த்தமானங்கள், மனோரஞ்சிதகதைகள் முதலான விஷயங்களும் பிரதிமாதமும் எழுதப்படும்.

---

## நன்றிமறவாமை.

யமுனாநதிக் கரையோரமாய் நெடுங்காலமாய்தழைத்து வளர்ந்திருந்த ஓர் வடவிருக்ஷத்தின்மேல் ஓர்கிளி அநேகநாளாய் வதிந்துவந்தது. வசித்துக்கொண்டுவரும் நாளில் அவ்யமுனாதீரத்தில் கையில் வில்லுங் கணையும் ஏந்தித் திரிகின்ற கானவனொருவன் பட்சிகளைக் கொல்லுந்தொழிலில் சற்றேனும் அஞ்சாதநெஞ்சனாய் பட்சிகளின்மீது வில்லுகளைத் தொடுத்துக்கொண் டிருந்தான். இப்படி யிருக்கும்நாளில் ஒருநாள் அவன் வழக்கம் போல் ஓர் பட்சியின்பேரில் தன்வில்லை எய்ய அது மரத்தின்மேற் போய்படவும் அந்தவில்லில் விஷந்தோய்ந்திருந்ததனாலே அவ்வில்பட்டு அம்மரத்தின் பிஞ்சு காய் கனி இலை முதலிய வெல்லாம் உதிர்ந்துபோய் மொட்டை மரமாய் வெட்டவெளியாச்சுது. அம்மரத்தில் வாசம்பண்ணிக்கொண்டு நெடுநாளாயிருந்த கிளியானது தழைத்திருந்தமரம் உலர்ந்துபோனதைக் கண்டு சஞ்சலங் கொண்டு "இம்மரத்தின் பழத்தைத் தின்று காலங் கருப்புத் தெறியாமல் பிழைத்திருந்தோமே இப்போதிந்த மரம் பட்டுப்போனதுபோ லாச்சே, இது தழைத்திருந்தபோது நாம் செழித்திருந்தோமே இப்

போது இளைத்தகாலத்தில் இதைவிட்டுநீங்குதல் தரும[illegible]ம்வே'' யென்று அம்மரத்தின் கண்ணேதங்கி வெய்[illegible]லுக்குக் காய்ந்து மழைக்குநனைந்து, குளிரெடுத்தும் நன்றிகுன்றாமல் அறிவையும் பலத்தையும் அனுகூலமாக்கி அவ்விருட்சத்தைவிட் டகலாமலிருந்தது. இவ்விந்தையையறிந்த ஓர் தவசிரேஷ்டர் அந்த விருக்ஷத்தினிடத்திற்குவந்து விஷக்கணைகள்பட்டு வெந்துபோயிருக்கிற மரக்கிளையி லிருக்கும் அஞ்சுகத்தைக் கண்டு சொன்னதாவது.

தவசிரேஷ்டர்.

ஓ கிளியே! உன்தேகம் இவ்வளவு வருத்த முறத்தக்கதாக இவ்விடத்திற் காய்ந்து தீய்ந்துமடிந்துபோன மரத்திலிருப்பானேன். வேறேதழைத் தோங்கி பழுத்திருக்கிற மரங்களையடைந்து சௌக்கியம் பெறக்கூடாதோ. ஏனிப்படி வருந்தப் படவேண்டும். ''தமக்கென்று ஓர் இல் இல்லார்க்கு உலகம் இல்லம் என்பதுபோல்'' கடவுள் ஏற்படுத்திய கானகங்கள் அநேகமுள, அவைகளில் வாசம்பண்ணி காலம் போக்கலாமே என்றார்.

கிளி.

ஓ ஐயா! தவசிரேஷ்டரே! நமஸ்காரம். நானிந்த மரத்தின்மீது அனேகநாள் என்சொந்தம்போலிருந்து அந்தி பகல் மாலை இம்மூன்றுகாலங்களிலேயும், பசிநோய் தாகம்தோற்றாமற்படிக்கு பழங்களைப்புசித்து பக்குவமாய் வாழ்வுபூண்டேன், இப்போது இந்தமரத்திற்கு கெடுதிசம்பவித்து விட்டதென்று மதிகெட்டமாந்தரைப்போல்செய்நன்றி குன்றி சிந்தை மறந்து அயல் விருட்சத்தனுக மாட்டேன். உலகத்தில் ஒருவன் சுகமுஞ் செல்வமும்பெற்றிருக்கும்போது அவனுடன்கூடி சுகத்தையனுபவித்து அவனுக்குக்கெடுதியும் வறுமையும் கிட்டியநாளில் கடன்காரர் முதலியபேர்களிடத்தில் அவனைக்காட்டிக்கொடுத்து அப்பாற்போகின்ற கயவர் கசடர் கல்லார்களைப்போல் நானும் நீங்கிப் போவது நியாயமோ, தருமமோ, நாதனே சுகத்துக்கெப்படி பகுத்துச் சுகித்தோமோ அப்படியே தீமைக்கும் உடன்பட்டிருக்கவேண்டும். இராமற்போலாராகில் அவர்களுக்கு பழியும் பாவமும் பங்கமும்வரும். அதுவுமல்லாமல் கொடியநரகமே அவர்களுக்குச் சொந்தவிடமாகும்.

தவசிரேஷ்டர்.

அந்தோ! தத்தையே! சுகத்தை விரும்பும் படியாகிய இந்த ஜகத்தில் தேகவருத்தம் பாராமலும் பசியைப்பாராட்டாமலும், நித்திரையில்லாமலும் பழிச்சொல்லுக்குப் பயப்படாமலும் அருமையோராமலும், இனத்தார்கள்கூறுகின்ற அவமதிப்புணராமலும் நிலை தப்பாமலும் இருப்பதனுற் பயனென்ன. என்றைக்கிருந்தாலும் இறந்துபோகிறதேகம் இருக்கின்றவரைக்கும் உண்ணல், உறங்கல் என்பதையோர்ந்து அனுபவியாமல் வருந்துவது என்னபிரயோசனம்.

கிளி.

ஓ மகானே! நீர்வேதவேதியர். சகலவிதிமுறையுந் தெறிந்தவர். தருமசொரூபி. உம்மைவிட சத்தியதருமம் வேறில்லை, நீரே இப்படிசொல்வீராகில் நீசத்துரோகிகளாகிய நன்றிமறந்தவருக்குக் கொழுகொம்புபோலாம். என்னளவில் இப்பேர்ப்பட்ட மொழியைச் சொல்லாதிருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

தவசிரேஷ்டர் ஆனந்தமடைந்து ஐயோ! அல்பமான பக்ஷிக்கு இவ்வளவு பேரறிவு பிறந்துள்ளது அருமையென்று அகமகிழ்ந்து ஓ சுகமே! நீ சுகமாயிரு உன்னுடைய நிலையுணர்வதற்காகவந்தேன்-நீ மெத்தவும் நன்னெறி பற்றியிருக்கிறாய்-அதனால்நான் கிருபைகூர்ந்தேன்-உனக்குவேண்டியதைக் கேட்பாயாகில் தட்டாமற்றருகிறேனென்றார்.

கிளி.

எனக்கு வரங்கொடுக்க உமக்கிஷ்டமிருக்குமாகில் இப்போது நான் இருக்கிறமரம் எப்போதும்போலே இடையூரில்லாம லிருக்கும்படியாக அனுக்கிரகம் பண்ணுமையா வென்றது.

தவசிரேஷ்டர் அப்படியே அடிக்கிற காற்றுக்கும் பெய்கிறமழைக்குங்கூட பயமற்றிருக்கும்படியாக கிருபை புரிந்தருளினார். உடனே அந்தவிருக்ஷம் முன்போல்தழைத்து கொழுந்தோடிப்படர்ந்து நெருக்கமாய் அடர்ந்து வானமளாவி காய்த்து பழுத்து சிரக்கம்பஞ் செய்திருந்தது. ஆகையால் நல்லவர்களாகிய உத்தமர்கள் சுகதுக்கத்திற்குடன்பட்டு நேசமா யிருப்பார்கள். கெட்டவர்கள் நீர்நிறைந்தகுளத்தில் பறவைசெறிந்து நீர்வற்றினுற் பறந்துபோம் பான்மைபோல நீங்கிப்போவார்கள்.

## மத ஆராய்ச்சி.

உலகம் உண்டாயதெப்படி? இருப்ப தெவ்வணமம்? இனி அழிவதுண்டா? என ஆராய்ச்சி செய்வதும், உலகின்தன்மையை யுணரப்புகுந்த நம்முடைய சொரூபம் எப்படிப்பட்டதென அறியப்புகுவதும், உலகம் ஜீவன் இவைகள் சுயமாய் உண்டானவைகளா அல்லது இவைகளைச் சிருஷ்டிக்கக் கர்த்தாவொருவன் உளனுவென அறிய முயலுவதுமே மதத்தின் தொழிலாம். வெவ்வேறு மதங்கள்போல் தோன்றும் பலதேசத்து மதங்களும் மேற்சொன்ன உலகம் ஜீவன் ஈசுவரன் என்னும் மூன்றனுள் ஏதாவது ஒன்றையாவது ஆராயப்புகுந்த மதங்களேயல்லாமல் வேறல்ல. மதமின்னதென்று அறியவிரும்புவோர்க்குப் பலமதங்களினுடைய பேதங்களை அநேக கிரந்தங்கள் மூலமாய்ப் படித்தறிவதே போதுமானதன்று. எல்லாமதங்களிலும் பிரதிபாதிக்கப்பட்ட ஜகஜீவபரங்களின் நிஜ சொரூபத்தை அனுபவத்தில் அறிவதுதான் முக்கியம். ஒருவஸ்துவின் சொருபம் குணம் இவைகளைக் குறித்துச் சொல்லக் கேட்டதாலுண்டாய அவ்வஸ்துவின் ஞானத்திற்கும், அந்த வஸ்துவின் சொரூபம் குணம் இவைகளை நேரில்கண்டு அனுபவமாயறிந்த அதே வஸ்துவின் ஞானத்திற்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. இந்தியாவின் வடதிசையிலுள்ள இமயமலையி லுற்பத்தியாகி வங்காளக்குடாக்கடலில்வந்து விழுகின்ற கங்காநதியைப் படத்தில்பார்த்தும் அந்நதியின்பெருமையைப் புத்தகங்களில் படித்தும் அறிந்தவனுக்கும், இமயமலையையும் அதில் கங்காநதியின் உற்பத்திஸ்தானத்தையும் அந்நதி பல ஊர்களின்மீது உருண்டு புரண்டுவந்து கடலில் கலப்பதையும் கண்காட்சியாகக்கண்டு அறிந்தவனுக்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டென்பதைச் சொல்லாமலே யூகித்து அறியலாம்.

பிரபல வித்துவானுக வேண்டுமென்னும் விருப்பத்தால் வேதாகமபுராண இதிகாசங்கள், தர்க்க வியாகரண அலங்கார சாஸ்திரங்கள் முதலானவைகளை யெல்லாம் படிக்குங்காலத்து ஜகஜீவபரங்களைக் குறித்து அரிய பெரியகிரந்தங்களில் கூறப்பட்டவைகளையெல்லாம் பாடம்பண்ணி, தேகம்வேறு ஆத்மாவேறென்று படித்தும் ஒருக்ஷணமேனும் தேகத்தி லிருந்தே தான் தனித்திருந்து சுகமடைய வகையறியாமலும், ஈசுவரன் சர்வசாட்சியாய் எள்ளிலெண்ணைபோல் எங்குமுளன் என்று பலதரம்படித்தும், உலகத்தாரைக் கண்டால் ஒருபேச்சும் தான் தனியேயிருக்கும்போது முன்பேசியதற்கு முற்றும் மாறுன எண்ணமுங்கொண்டு, உலகத்தில் சிலரைப்புகழ்ந்து சிலரைத்தூஷித்து பேதம்பாராட்டியும், தான்கற்ற வித்தை பலத்தால் தனக்கார் நிகரென எச்சபையிலும் வெகுசாமர்த்தியமாயும் மிக்க வாக்குச் சாதுரியமாயும் பேசும் வித்துவானுதலே போதுமென்று நினைத்தல்கூடாது. ''கற்க கசடறக் கற்பவை கற்றபி னிற்க வதற்குத் தக'' என்னும் ஆன்றோர் வாக்கியத்திற்கிணங்க, ஒருவன்தான் அப்போதைக்கப்போது மதசம்பந்தமாய் கற்கும் விஷயத்தின் உண்மையை உலகத்திலும் தன்னிடத்திலும் அனுபவமாய்ப்பார்த்துப் பார்த்து தெளிந்துமேன்மேலும் பெரியவிஷயங்களையெல்லாங்கற்று அனுபவத்தையே முக்கியமாய்நாடி அதற்குத்தக்கவண்ணம் தானிருந்து தன்னைப்போல் அனைவரும் அனுபவத்தில்தெளிந்து சுகமடையவேண்டுமென்னும் நல்லெண்ணத்தால் பிறருக்கு மதவிஷயத்தைப் போதிக்கும் யோக்கியதை யுடையவனுதலே மனிதனுய்ப் பிறந்ததற்குப் பிரயோசனமென்று ஒவ்வொருவரும் நினைத்தல்வேண்டும். பல சாஸ்திரங்களைக் கற்று, கற்றவிஷயங்களின் உண்மையை மௌனமாயிருந்து அனுபத்தில் காண்பதுதான் மேலானது. வெறும்படிப்பும் அதனுலுண்டாய அதிகப்பேச்சும் மதஆராய்ச்சி செய்பவனுக்கு பயனில்லை. அனுபவமே பயனையுடையது.

உயர்ந்த குலத்திற்பிறந்து வித்தையைப் படித்துவிட்டதினுலேயே பிரயோசனமில்லையெனக் காட்டவோ பஞ்சமகுலத்தில் திருநாளைப்போவாரெனும்நந்தன் தோன்றினுன். வாய்ப்பேச்சில் இலாபமில்லை, உலகப்பற்றறுத்ததை அனுபவத்தில் காண்பிப்பதே சிலாக்கியமெனத் தெரிவித்தற்கோ, கானகமேதிரிந்து கடுங்கொலையேபுரிந்து வாழ்ந்த கண்ணப்பனுக்கு முக்கண்ணன் முத்தியளித்தனன். வயதில் பெரியவராயும் நால்வேத பாராயணம் செய்தவராயு மிருத்தலே போதாதெனத் தெளிவிக்கவோ, வேதாந்தசாஸ்திர உண்மை யறிந்த அனுபவிபோல் பார்த்ததெல்லாம் பத்மநாபனேயென்று நம்பிய பாலகனுன பிரகலாதனுக்குப் பரந்தாமன் பரமபதந் தந்தருளினுன். மேற்சொல்லிய உதாரணங்களால் பலபுத்தகங்களைப் படிப்பதுதான் மத ஆராய்ச்சி, படித்ததை பாடம்பண்ணுவதுதான் மதந்தெரிந்து கொண்டாற் கடையாளமென்றெண்ணுமல், உலகத்தையோ, தன்னையோ, அல்லது தனக்காதாரத் தலைவனையோ, ஒருவன் சாஸ்திரமூலமாயாவது அல்லது அனுபவிகளான பெரியோர்கள் மூலமாயாவது ஆராய்ந்தறிந்ததை அவன் தன்தின அனுபவத்திலும் நோக்கவேண்டும். தேர்ந்த ஆராய்ச்சியில் உலகத்தை அனித்தியமென ஒருவனறிந்தபின் உலகத்தை நித்தியமென மயங்கி தனக்குண்டாயிருக்கும் பெண்டுபிள்ளை முதலானவைகளிடத்து நிச்சய புத்திவைத்தால், அவனுக்கு அனுபவம் இன்னும் வாவில்லையென்றே நினைக்கவேண்டும். ஆன்றோர்வாக்கியத்தை ஆதரித்து ஆத்மாவுக்குப் பிறப்பிறப்பில்லையென தெரிந்தபின் ஒருவன் தனக்கு மரணகாலம்வந்துவிட்டதேயெனக் காலனுக்குப்பயந்தால் அம்மனிதன் படித்தானேயொழிய படிப்பின் பிரயோசனத்தை அனுபவத்தில் பார்த்தானில்லை யெனக் கூறப்படுவன்.

ஓர் மதத்தை யறிந்துகொள்வது சுலபம், அறிந்த வண்ணம் நடத்தலேகஷ்டம். அறிந்தவண்ணம் அனுஷ்டிக்காதவனுக்கு தான் தெரிந்துகொண்ட விஷயத்தின் உண்மை விளங்காது. உண்மையில் மதத்தையறிந்து அனுஷ்டிக்க வேண்டுமாயின் ஆரம்பத்தில் ஒருவனுக்கு அம்மதசாஸ்திரங்களிலும், அம்மதத்தை யனுசரித்து ஒழுகிய ஆன்ரோர் வாக்கியங்களிலும் நம்பிக்கையிருக்கவேண்டும். ஓர்விஷயம் அறியும் முன்னமே அவ்விஷயத்தி லுண்மையிருக்கிறதென்ற நம்பிக்கையுடன் அவ்விஷயத்தை ஆராய்ச்சிசெய்ய முயலவேண்டும். அவ்வாறு நம்பிக்கையுடன் ஆராய்ச்சிசெய்து அவ்விஷயத்தின் உண்மை புலப்படும்வரையில் அவ்விஷயத்தை அலட்சியம் செய்தல்கூடாது. பெரியவர்களாலும் சாஸ்திரங்களாலும் கூறப்பட்ட விஷயங்களை ஒருவன் நம்பிவிட்டதே போதுமானதென்று நினைப்பதும்கூடாது. ஓர்விஷயத்தின் உண்மையை பெரியோர்கள் எந்தவழியாக ஆராய்ச்சிசெய்து அறிந்தார்களோ அவ்வழியாக நாமும் ஆராய்ச்சிசெய்து அனுபவத்திற்கு ஒத்திருப்பதையும் காணவேண்டும்.

உற்றுநோக்குங்காலத்து உலகத்தில் ஒவ்வொரு வேலையும் மனிதனால் நம்பிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்டு முடிந்தேறுகின்றது என்பது புலப்படும். கொடியவியாதியினால் பீடிக்கப்படும் வியாதியஸ்தன் தனக்கு இன்னமருந்தினால் குணமுண்டாகுமென்று முன்னமேநம்பி அம்மருந்தையுண்டு சுகமடைகிறான். தேசகாலவர்த்தமான மறிந்தவியாபாரிகளும் தாங்கள் இன்னகாலத்தில் இன்னதுசெய்தால் இன்னவியாபாரம் இலாபகரமாய் முடியுமென முன்னம்பிக்கையுடனே ஆரம்பித்து முடிக்கிறார்கள். இப்படியே லௌகிகத்தில் ஒவ்வொருவேலையும் நம்பிக்கையுடன் ஆரம்பிக்கப்படுகின்றன. அதுபோலவே பாரமார்த்திகவிஷயத்திலும் நம்பிக்கைவைத்து ஆரம்பிக்கவேண்டியது அவசியமன்றோ? முதலில் நம்பிக்கையுடன் ஆரம்பிப்பது எவ்வளவு முக்கியமோ அதைக்காட்டிலும் பதின்மடங்கு முக்கியம் ஆராய்ச்சிசெய்தல். நமது இந்தியாவில் அநேகர் மதவிஷய சம்பந்தமாய் எதையும் சுலபமாய் நம்பிவிடுகிறார்களே யல்லாமல் தாங்கள் நம்பியவிஷயங்களை ஆராய்ச்சிசெய்தலில்லை. அநேகர் கோயிலுக்குப்போவார்கள் கோபுரத்தைப் பார்ப்பார்கள். அநேக பிராகாரங்களையும் மூலஸ்தானத்தையுங்கண்டு அகமகிழ்வார்கள். தெய்வத்தை தெண்டனிட்டு கைகூப்பித்துதிப்பார்கள். ஆனால் கோவிலென்பதென்ன? கோபுரமேன் கட்டவேண்டும்? சுற்றுமதில்கள் அநேகமிருப்பானேன். மூலஸ்தானம் என்று தனியே ஒன்றிருப்பானேன்! என்னும் சங்கைகள் உண்டாகி ஆராய்ச்சிசெய்வதில்லை. இப்படியே ஆராய்ச்சியில்லாமலே நம்பிக்கையுடன் மாத்திரம் அநேக ஆசாரங்களையும் அனுஷ்டித்து வருகிறார்கள். ஆராய்ச்சியில்லாமல் நம்பிவிட்டதினாலே பிறர்கேட்கும் கேள்விகளுக்குச் சமாதானம் சொல்லமுடியாமல் அது எங்கள்வழக்கம், இது எங்கள் சாஸ்திரத்தில் கூறப்பட்டது, எங்கள பாட்டனாரும் அனுஷ்டித்துவந்தது, என்றுகூறினால் கேள்விகேட்டவர்க்கு திருப்திகரமாயிருக்குமா? இராது; ஆதலால் இந்துக்களில் அநேகர் குருட்டு நம்பிக்கையுள்ளவர்களென்று பிறர்சொல்லுதற்கிடமாயிற்று. மதவிஷயத்தில் எல்லாதேசங்களைக் காட்டிலும் மேன்மையுடையதாய் தெய்வத்தன்மையுடையதாய், பேசுந்தெய்வங்களான மகரிஷிகளும்தபசிகளும் யோகிகளும் விளங்கப்பெற்றதாய், அனாதிகாலமாய் தெய்வவருளினால் உண்டாக்கப்பட்ட வேதங்களும், உபனிஷத்துக்களும் அநேக சாஸ்திரங்களும், அரியவிஷயங்களையெல்லாம் அனைவரும் அறிந்துய்ய வேண்டுமென்னும் கருணையால் மகான்களாயுள்ளபெரியோர்களாலளிக்கப்பட்ட ஸ்மிருதிகளெத்தனை புராணங்களெத்தனை, இதிகாசங்களென்ன? இவைகளையெல்லாம் ஏராளமாய் உடையதாயுள்ள இந்தியாவிலுள்ள இந்துக்கள் மதவிஷயத்தில் குருட்டு நம்பிக்கையுடையவர்களென்று பிறர்சொல்லக் கேட்பதுமுண்டா?

(இன்னும்வரும்.)

## ஔவையார் சரித்திரம்.

பூர்வத்தில் அகஸ்தியமாமுனிவர் சமுத்திரகன்னியை விவாகஞ்செய்து பெருஞ்சாகர ரென்பவரை யீன்றார். இப்பெருஞ்சாகரர் திருவாரூர் புலைச்சியைச் சேர்ந்து பகவனென்பவரைப்பெற்று அவருக்கு சகலவிதமான சாஸ்திரங்களையும் கற்பித்திருந்தார். இப்படியிருக்க பிரம்மவம்சத்தில் தவமுனியென்பவர் அருண்மங்கை யென்னும் பிராமணஸ்திரீயைச்சேர்ந்து ஒருபுத்திரியைப்பெற்று வைத்துவிட்டு தான் தனதுபத்தினியுடன் திருவிராலிமலையின்கண் தவஞ்செய்யச் சென்றபோது அந்தக்குழந்தையை ஆதரிப்பவர் ஒருவருமில்லாததினால் உறையூர்ப் பெரும்பறையன் அக்குழந்தையை எடுத்து வளர்த்துவந்தான். வளர்த்துவரும்நாளில் ஓர் நாள் அவ்வூரில் மண்மாரிபெய்து இக்குழந்தை தவிர மற்றெல்லாரும் மறித்துப்போனார்கள். அந்த ஊரில் மனித சஞ்சாரமில்லாததினாலே அந்தப்பெண்குழந்தை அவ்வூர்க்கடுத்த மேலூராகரத்திலே நீதியையன் வீடு போய்ச்சேர்ந்தது. அவனும் இந்தகுழந்தையை அன்போடு வளர்த்துவந்தான். இப்படி வளர்ந்துவரும் நா



ளில் மேற்சொல்லிய பகவரென்பவர் மிக்க தேர்ச்சியடைந்த பண்டிதராய் கண்டோர்யாவரும் வியக்கும்படியாய் பிராம்மண கிருத்தியங்களில் தவராதவராய் ஸ்தலயாத்திரை செய்யவேண்டுமென்ற ஆசைமேலிட்டவராய், காசியாத்திரையாகப் போய்க்கொண்டிருக்கும் நாளில், ஒருநாள் மேற்சொல்லிய வகரத்துக் கருகாமையிலுள்ள ஓர் சத்திரத்தில் வந்திறங்கி நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு சமையல் செய்துக்கொண்டிருந்தார். இந்த சத்திரத்திற்கு நீதியையன் தலைவனாகையால் அவன் வளர்த்துக்கொண்டுவந்த பெண் பகவனென்பவர் சமையல்செய்துக் கொண்டிருந்த விடத்திற்கு நெருங்கிற்று. இப்பெண்ணைக் கண்ட அவர் புலைச்சியோ என்னமோவென்று அதட்டி தன் கையிலிருந்த அகப்பையால் அவளுடைய தலையில் இரத்தம் வரும்படி அடித்துத் துறத்தினார். உடனே அந்தப்பெண் அழுதுக்கொண்டு தன் இருப்பிடம் சேர்ந்தது. பகவனென்பவர் புனஸ்நானம்செய்து புசித்து தன்வழியேசென்று காசியையடைந்தார். காசியில் கங்காஸ்நானம்செய்து பிரயாகையிலிருந்து தீர்த்தக்காவடி ஏந்தி திரும்பிவரும்போது தான் முன் தங்கினசத்திரத்திற்கே வந்துசேர்ந்தார். அப்போது அவரிடத்தில் முன் அடிபட்ட பெண்ணானவள் மகாலட்சுமியைப் போல் அழகுள்ள யௌவன சௌந்தரியவதியாய் வந்து நின்றாள். அவளைப்பார்த்த பகவனென்பவர் அவள் மேல் மோகங்கொண்டதை யறிந்த நீதியையரென்பவர் பகவனென்பவரை அந்தப்பெண்ணை கலியாணம் செய்துக்கொண்டு அவ்விடத்திலேயே இருக்கும்படி சொன்னார். அதற்குப்பகவனென்பவர் தன் தீர்த்தக்காவடியை இராமேஸ்வரத்திற்கு கொண்டுபோய் இராமலிங்கமூர்த்திக்கு அபிஷேகம் செய்துவிட்டு திரும்பிவந்து விவாகம் செய்துக்கொள்ளுவதாகச் சொல்லிவிட்டு இராமேஸ்வரத்துக்குப்போய் தன்காரியங்களை முடித்துக்கொண்டு தான் சொன்னவண்ணம் திரும்பிவந்தார். அப்போது நீதியையர் கலியாணசடங்கை ஆரம்பித்து நான்குநாள் கலியாணத்தையும்முடித்து, ஐந்தாநாள் மங்களஸ்நானஞ் செய்துவிக்கும்போது பகவனென்பவர் அந்தப்பெண்ணினுடைய தலையில் எண்ணை பெய்யும்படி மயிரை வகிர்ந்தபோது தான் முன் அகப்பையால் அடித்தவடு அவள்தலையிலிருந்ததைக் கண்டு நீ ஆதியாளல்லவா (அதாவது பழையமனுஷி யல்லவா என்றது) என்றுசொல்லி எழுந்தோடிவிட்டார். ஆனது பற்றியே அவளுக்கு ஆதியென்றபெயர் உண்டாயிற்று. எழுந்தோடின பகவனானவர் சாயங்காலம்வரையில் நடந்து அஸ்தமித்து விட்டபடியால் அவருக்கு எதிர்ப்பட்ட ஓர் பாணர்சேரியிலிருந்த மண்டபத்தில் தங்கினார். ஆதியும் அவரைப்பின் தொடர்ந்தவளாய் அம்மண்டபத்தைச்சார்ந்து பகவனென்பவரைநோக்கி தெய்வச்செயலாக தம்மிருவருக்கும் அந்தகாரியம் நடந்திருக்கிறதாலே தன்னை அவர் கைவிடலாகாதென்றும் அப்படி அவர்கைவிடுவாராகில் தான் உயிரைமாய்த்துக்கொள்வதாயும் சொல்லினள். இதைக்கேட்ட பகவனானவர் தன்னுடைய பிராரர்த்தகர்மம் அப்படியிருந்தால்என்ன செய்கிறதென்று தமக்குள் நினைத்துக்கொண்டு ஆதியைப்பார்த்து "என்பேரில் உனக்கு ஆசையிருக்கும் பட்சத்தில் என்சொல்லின் பிரகாரம் நடக்க வேண்டியது. அதென்னவென்றால் உனக்கு எவ்வெவ்விடத்தில் குழந்தைகள் பிறக்கின்றனவோ அவைகளை அவ்வவ்விடத்திலேயேவிட்டு விட்டு வந்துவிட வேணுமென்றார்." அதற்கு ஆதியும் சம்மதித்தவளாய் அப்படியேயாகட்டுமென்றாள். அதன்பேரில் அவ்விருவரும் அன்றிரவு அம்மண்டபத்தில் கூடினார்கள். அப்போதுபிரமதேவருடைய பத்தினியாகிய கலைமகளார் அவருத்திரவினால் யாவராலும் புகழப்பட்ட தவப்பெண்ணென்று சொல்லும்படி பிறந்தாள். உலகோபகாரமாக அநேக நீதிகளையும் நன்மார்க்கத்தையும் கற்பித்து உலகத்தாரால் புகழப்படுகிற ஔவையார் என்றவர் இப்பெண்தான். இப்பெண்ணுக்கு ஔவையார் என்றபெயர் இருகாரணத்தால் கிடைத்ததென்று சொல்லப்படுகிறது. சிலர் ஓர் அசரீரிவாக்கினால் இப்பெயர் உண்டாயிற்றென்றும், வேறு சிலர் இவர் 240-வருஷங்களுக்கு அதிகமாய் ஜீவித்திருந்தபடியால் முதியவளென்ற பொருளையுடைய ஔவையார் எனப்பெயர்பெற்றார் என்றும் சொல்லுகிறார்கள். மறுநாள் தாய் தன் கணவனுக்கு வாக்களித்தபிரகாரம் நடக்கவேண்டிய தாகையால், அன்னையானவள் அக்குழந்தையை விட்டுப்பிறிய மனம் வராமல் வருந்தியபோது சேயாகிய ஔவையார் தாய் முகநோக்கி கீழ்வரும் வெண்பாவைச் சொன்னார்.

இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்றாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

இதைக்கேட்ட தாய் வருத்தநீங்கி குழந்தையை விட்டு விலகினாள். ஆகையால் இப்பேற்பட்ட மகிமை பொருந்திய ஔவையார் சரிதத்தை உரைப்போமாக. ஔவையார் இயல்பாகவே, சகலகலைகளையு மறிந்து கல்வியிற் தேர்ச்சியடைந்து ஆடவர் பெண்டிரிருவருள் முதன்மையாய்நின்று, நித்தம் விநாயகமூர்த்தியைபூஜை செய்துவந்தாள். இப்படியிருக்கும் நாளில் ஒருநாள் சைவசமயாசாரியர்களான சுந்தரமூர்த்தி சுவாமிகளும்

சேரமான் பெருமாளுயனாரும் பொன்வண்ணத் தந்தாதி பாடி அதை அறங்கேற்றும் நிமித்தம் கயிலையங்கிரிக்குச் சென்றார்கள். போகும்போது ஔவையாருடன் சொல்லிவிட்டுப்போக அவரிடம்வர, அவர் அப்போது விநாயகபூஜை செய்துக்கொண்டிருந்தார். ஔவையார் அவர்களோடு போகும்நிமித்தம் பூஜையை விரைவாய் செய்தனர். அப்போது விநாயகமூர்த்தி ஔவையாரை வழக்கப்படிசெய்யாமல் விரைந்து பூஜை செய்யவேண்டிய காரணமென்ன வென்றுவினவ, அவர்தான் வந்திருக்கிறவர்களுடன் கயிலை செல்லும் நிமித்தம் சீக்கிரம் செய்வதாக மொழிந்தனள். இதைக்கேட்ட விநாயகர் ஔவையாரைநோக்கி "நீ கிரமப்படி பூஜைசெய், அவர்கள் கயிலையைச் சேருவதற்குமுன் நான் உன்னை அவ்விடத்தில் கொண்டுபோய் விடுகிறேன்" என்றார். ஔவையாரும் சாவகாசமாய்ப் பூஜையைசெய்துமுடித்தார், செய்துமுடித்தலும் விநாயகர் ஔவையாரை தமது துதிக்கையால் எடுத்து கையிலையங்கிரியில் விடுத்தனர். பின்வந்த சமயாசாரியர்கள் இருவர்களில் சேரமான் பெருமாளுயனார் ஔவையாரைநோக்கி பூஜைசெய்துக்கொண்டிருந்த நீர் இவ்விடம் எங்களுக்குமுன் எப்படி வந்துவிட்டீர்கள் என்றார். அதற்கு ஔவையார்

மதுர மொழிநல் லுமையாள் புதல்வன் மலர்ப்பதத்தை
முதிர நினையவல் லார்க்கரி தோமுகில் போன்முழங்கி
யதிர நடந்திடு மியானையுந் தேரு மதன்பின்வருங்
குதிரையுங் காதங் கிழவியுங் காதங் குலமன்னனே.

என்றபாடலை விடைதந்து அவர்கள் அரங்கேற்றுதலுக்கிருந்து கேட்டு கைலாசபதியாகிய சிவபெருமானைத் தரிசித்து விநாயகமூர்த்தி கிருபையால் தம்மிருப்பிடம் சேர்ந்து, நித்தம் விநாயகரை பூஜை செய்துக்கொண்டு வந்தாள். அக்காலத்தில் கம்பரானவர் ஆயிரம்பொன் கொடுத்தா லன்றி ஒருவர்பேரிலும் பாடுகிற தில்லை. ஔவையாரோ ஒருகை கூழுக்குப் பாடுவதுண்டு. ஆகையால் ஔவையாருக்கு கூழுக்குப்பாடி என்றொரு பெயருமுண்டு.

சோழநாட்டிலே சிலம்பி என்றொரு தாசி இருந்தனள் அவள் கம்பர்வாக்கால் பாடியவருக்கு அதிகசெல்வமும் சம்பத்துமுண்டாகு மென்றுநினைத்து, கம்பரை தன்பேரில்ஒருபாட்டு பாடும்படியாக வேண்டினாள். கம்பர் தான் ஆயிரம்பொன்னுக்கு குறைந்து பாடமாட்டேனென்றார். அதன்பேரில் தாசிவியசனமுற்றுதான் வருத்தப்பட்டு சேர்த்துவைத்த, நகை, ஆடை முதலியவற்றையெல்லாம் விற்று 500-பொன்னைக்கி கம்பரிடத்தில் கொண்டுவந்து கொடுத்தாள். கம்பர் ஆயிரம் பொனுக்கு ஒருபாட்டுபாடுவது வழக்கமாகையால் 500 பொன்னுக்கு அரைபாட்டுதான் பாடுவேனென்று கீழ் வரும் இரண்டடியையும்பாடி அவள் தெருத்திண்ணையின் சுவரில் எழுதிவைத்து விட்டுப்போயினார்.

தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே.

தாசியானவள் தன் ஆஸ்தியெல்லாம்விற்று கம்பருக்குக் கொடுத்துவிட்டதினாலே, உண்ணச்சோறும் கட்டக்கந்தையுமின்றி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள். இப்படியிருக்கும்நாளில் ஔவையார் ஒருநாள் அதிகபசியோடு அவ்வழியாய் போய்க்கொண்டிருந்தபோது அதிக ஆயாசமாயிருந்தமையால் இத்தாசியினுடைய வீட்டுத்திண்ணையில்வந்து உட்கார்ந்து அவளைப்பார்த்து "எனக்குரொம்பவும் பசியாயிருக்கிறதென்றார்" உடனே அந்ததாசி உள்ளேபோய்த்தான் குடிப்பதற்காக வைத்திருந்த கரைத்தகூழை கொண்டுவந்து கொடுத்து மிகவும் உபசரித்தாள். ஔவையாரும் இளைப்புதீர்ந்து தலைநிமிர்ந்து சுவரில் எழுதியிருந்த இரண்டடியையுடைய பாடலைப்பார்த்து அதனுடைய வரலாற்றை தாசிமூலமாய் தெரிந்துகொண்டு,

—பெண்ணாவாள்
அம்பொற் சிலம்பி யரவிந்தத் தாளணியுஞ்
செம்பொற் சிலம்பே சிலம்பு.

என்ற இரண்டடியைப்பாடி முன் இரண்டடியோடு சேர்த்து எழுதிப் பாட்டை முடித்தாள்.

தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே-பெண்ணாவாள்
அம்பொற் சிலம்பி யரவிந்தத் தாளணியுஞ்
செம்பொற் சிலம்பே சிலம்பு.

இதன் அர்த்தமென்னவென்றால், காவிரிநதியே நதி, மாலையைத்தரித்த சோழராஜனேயரசன், சோழதேசமேதேசம், அழகியபொன்னையொத்த காந்தியையுடைய சிலம்பியென்னும் மங்கையின் தாமரை மலர் போன்ற பாதத்தணியப்பெற்ற செம்பொன்னாலாகிய சிலம்பே சிலம்பு.

இச்செய்யுளை எழுதி முடித்தவுடனேசிலம்பியானவள் காலில் செம்பொன்னாலாகிய சிலம்பைத் தரிக்கத் தக்கவளாய் செல்வவதியானாள். கம்பர் தான் 500-பொன்னுக்குப்பாடி தாசியை ஏழையாகச்செய்ததை ஔவையார் கொஞ்சம் கூழுக்குப்பாடி அதிக ஆஸ்தியையடையும்படி செய்தாளே என்றுவெட்க மடைந்தார்.

(இன்னும்வரும்.)



## மனோகரன்.

ஒருநாள்காலை மகததேசத்தில் சத்தியபுரி என்னும் பட்டணமானது பனியால்மூடப்பட்டு வெண்பட்டுத்தரித்த ஓர் பெண்ணைப்போல் விளங்கியது. சூரியனாகிய நாயகன் தன்கிரணங்களாகிய கரங்களால் சத்தியபுரியாகிய தன் புதுமணப்பெண்ணின் வெள்ளிய போர்வையை மெள்ளென இழுக்க, அக்காலத்தடிக்குங் காற்றால்மரங்கள் அசைவதானது, நாணத்தால் அப்பெண்மணிகதிரவன் கரங்களைத்தடுப்பதுபோல், அப்பனி நீக்கமானது தோன்றிற்று. பனிநீங்கவே பட்டணத்திலுள்ள பலகட்டடங்களும் பிரபுக்கள்மாளிகைகளும் அநேகவீடுகளும் அவைகளைச்சுற்றி யுள்ள பூஞ்சோலைகளும், அந்நகரின் பக்கமாயோடும் பம்பாநதியும் நன்றாய்ப் பிரகாசித்தன. பம்பாநதிக்கரையின்மீது உட்கார்ந்து தந்தசுத்தி செய்துக்கொண்டிருந்த ஓர் பெரியவர் தன் அருகாமையில் நின்றுக்கொண்டிருந்த சிறுவனைநோக்கி, ஏன் அப்பா! இன்றைக்கு என்ன விசேஷம்? என்று கேட்டார். ஐயா! இன்றைக்குப் பிரபுவின் சம்பந்திகளுக்கு விருந்து. இரவு தாசி விசாலாட்சியின் வீணைகச்சேரி, இதன் மத்தியில் சிறிது அகஸ்யம்நடக்கும். இன்றைய விசேஷம் இவ்வளவுதானென்று அச்சிறுவன்பதில் கூறினான். இதைக்கேட்ட அப்பெரியவர் சொல்லுகிறார். ஹேசம்பாதி! கல்லியாணமென்றால் உங்கள்பிரபு வீட்டுக் கல்லியாணந்தான் கல்லியாணம். பணமிருந்தாலும் அதைசெலவிடும் வகையெல்லாருக்கும் நன்றாய்த்தெரியாது. பந்துக்களை அதிகமரியாதையாக வரவழைத்து உபசரிக்குந் திறமையும், சிநேகிதர்களைக் கண்டவுடன் பிரியமுடன் அழைத்து விசாரிக்கும் அன்பும், பந்துவுமில்லாமல் சிநேகிதனுமில்லாமல் என்னைப்போல் வந்திருக்கும் அநேகர்களை ஆதரவுடன் அழைத்து அங்கீகரிக்கும் நற்குணமும், ஏழைகளுக்கிரங்கி அவர்களுக்கு வேண்டியதை யளிக்கும் கொடையும் உங்களுடையசந்திரசேகரப் பிரபுவினிடத்து அமைந்திருப்பது போல் மற்றவரிடத்து நான் கண்டதில்லை. கல்லியாணம் நடந்து இன்றைக்குப் பதினைந்துநாள்கழிந்தும் இன்னும் பிரதிதினம் விருந்துசாப்பாடு நடக்கிறது. அநேக வரிசைகள் வருவதும் போவதுமா யிருக்கிறது. காலை முதல் மாலைவரையில் மேளவாத்தியம் முழங்குகிறது. இரவில் நல்ல பாட்டுக்கச்சேரிகளும் ஆட்டக் கச்சேரிகளும் நடக்கின்றன. இப்படியாக நித்திய கல்லியாணம் போல் நடப்பது வெகு ஆச்சரியமென்று அப்பெரியவர் புகழ்ந்துபேசினார். இராமதாசரே! இவர்கள் வீட்டில் இந்தவிவாகம் இப்படிநடப்பது ஓர் ஆச்சரியமன்று. இப்போதிருக்கும் சந்திரசேகர பிரபுவின் பாட்டனார் இந்த மகததேசத்தை யாண்டுகொண்டுமகாராஜாவாக விருந்தார். யானைபடுத்தால் குதிரை உயரம் இருக்காதா என்று சம்பாதிகூறினான். ஆகா! அப்படியா, இவர்கள் இராஜவம்சத்தைச் சேர்ந்தவர்களென்று எனக்குத் தெரியாது சம்பாதி. சந்திரசேகரன் பாட்டன் இராஜாவாயிருந்தால் இவர்கள் இராஜ்ஜியத்தை யிழந்துவிட்டதற்கென்ன காரணம்? என்று இராமதாசர் கேட்க, சம்பாதி கூறுகிறான். சந்திரசேகர பிரபுவின் பாட்டனார் அவரது முன்னோர்களைப்போல் மகததேசத்தை யறுபதுவருஷம் ஆண்டு, இராஜ்ஜியத்தைத் தன் பிள்ளையினிடத்து ஒப்புவித்து, மூதோர் சென்ற நெறியை யனுசரித்து, மண்ணாசை பொன்னாசை பெண்ணாசை யென்னும் மூவகையாசைகளையும் முற்றுந்துறந்து, காட்டிற்குச்சென்று தனியே யோர் ஆசிரமத்திலிருந்து பகவானிடத்து அந்தரங்கபக்தி செய்யவேண்டுமென்று எண்ணியிருக்கையில், இப்போது மகததேசத்தையாளும் சந்திரவதனனுடைய பாட்டன் சார்வபூமன் பழய விரோதத்தால் மகததேசத்தின்மீது படையெடுத்து யுத்தஞ்செய்து தேசத்தைப்பிடித்துக்கொண்டார். தோல்வியடைந்தபின் சந்திரசேகரரின் பாட்டனார் தன்புதல்வனை யழைத்துக்கொண்டு சார்வபூமனால் கொடுக்கப்பட்ட இந்த சத்தியபுரியில் சிலநாள் வாழ்ந்துகொண்டிருந்தார். அவர்காலத்திற்குப் பிறகு சந்திரசேகரரின் பிதா சந்திரசூடன் என்பவர் பிரபுவென்னும் பட்டம்பெற்று மகதவரசனுக்கு வருஷந்தோறும் கப்பங்கட்டிக் கொண்டு சிலநாள் வாழ்ந்து சந்திரசேகரனென்னும் புத்திரனைப்பெற்று பூலோகவாழ்க்கையைத் துறந்தனர். அன்றுமுதல் சந்திரசேகரபிரபு சத்தியபுரியை யாண்டுகொண்டு வருகிறார். இவ்வளவுதான் எங்கள் பிரபுவினுடைய பூர்வசரித்திரமென்று சம்பாதிகூறி, இராமதாசரை சீக்கிரம் ஸ்நானஞ்செய்து அநுஷ்டானம் முடித்துக்கொண்டு பிரபுவின் வீட்டுக்கு வரவேண்டுமென்று சொல்லி விரைவாக நடந்தான்.

சம்பாதி என்பவன் சத்தியபுரியின் சிற்றரசனாகிய சந்திரசேகர பிரபுவினுடைய வேலைக்காரர்களில் ஒருவன். இவன் இருபத்தைந்து வயதுள்ளசிறுவனானாலும் நல்லபுத்திசாலி யாதலால் உலகத்தை நன்கறிந்தவன். மனிதர்களைப் பார்க்கும்போதே அவர்களுடைய கருத்தின்னதென்று உணரும் சக்திபுள்ளவன். நற்குணமும் நன்னடைக்கையு முள்ளவர்களைநோக்கும் பரமநேயன். தன் எஜமானனைத் தெய்வம்போலெண்ணி சகலவேலைகளையுஞ்செய்யு மியல்பினன். இவனுடைய முன்னோர்கள் மகத இராஜாங்கத்தில் சேவகஞ்செய்து பிழைத்தவர்களாதலால் அவர்கள் மூலமாக சம்பாதி மகத அரசர்

களுடைய சரித்திரத்தை நன்கறிந்தவன். வேலைக்காரனாயிருந்தபோதிலும் உலகநடவடிக்கையை நன்றுணர்ந்தவனாதல்பற்றி எவரெவர்களுக்கு எப்படி நடக்கவேண்டுமோ அது அவனுக்கு நன்றாய்த்தெரியும். அவனிடத்தில் சந்திரசேகரப்பிரபுவுக்கு அதிகப்பிரியமுண்டு. அவனுடன் பேசிக்கொண்டிருந்த இராமதாசர் என்பவர் ஓர் யாத்திரிகர். அவர்சத்தியபுரிக்கு வந்தகாலத்தில் சந்திரசேகரருக்கு விவாகம் நடக்கும் காலமாயிருந்தது. சத்தியபுரியில் வசிப்பதற்கு சௌக்கியமா யிருப்பதாலும், சம்பாஷிப்பதற்கு நல்ல ஜனங்களிருப்பதாலும் சிலநாள் அவர் அவ்வூரிலேயேதங்கினார். அவர்சிறந்த பக்தரா யிருப்பதைக்கண்ட சம்பாதி அவரைநெருங்கினான். தன் பிரபுவின் கல்லியாணத்திற்கு அவரைகூட்டிக்கொண்டுபோய் உபசரித்து வந்தான்.

சத்தியபுரிக்குச் சமீபமாக இரண்டுமைல் தூரத்தில் ஓர் காடுள்ளது. சம்பாதியும் இராமதாசரும் பம்பாநதிக் கரையின்மீது பேசியபன்று சாயந்திரம் அந்தக் காட்டின்வழியாக ஓர் ஸ்திரி சத்தியபுரியைநோக்கிவந்துகொண்டிருந்தாள். அவள்பார்ப்பதற்கு சுமார் முப்பது வயது சென்றவளாய்த்தோன்றுவாள். அவள்முகத்தின் அழகையும், சாதாரணமான ஓர் ஆடையைத்தரித்து அதன்மேல்துப்பட்டியால் அவள் போர்த்துக் கொண்டிருப்பதையுங்கண்டால், அந்தஸ்திரி நல்ல அந்தஸ்திலிருந்தவளாயும், ஏதோ ஓர் அபாயத்திலிருந்து தப்பித்துக்கொள்ள மாறுவேஷம்பூண்டவளென்று அறியலாம். அவள் அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண்டும், சிறிது தூரம் விரைவாகநடந்தும் சிறிதுதூரம் மெள்ளநடந்தும் வருவதைநோக்கின் யாராவது தன்னைப் பின்தொடர்ந்து தூரத்திக்கொண்டு வருவார்களோவென்று ஐயமுற்று அஞ்சிநடப்பவள்போல காணப்படுவள். அங்கங்கே சிறிதுநின்று பெருமூச்சுவிட்டு, ஆகா! தெய்வமே! இப்படியுமாகுமா வென்றலறும்போது கேட்டவர்கள், ஏதோகொடியதுன்பம் அவளுக்கு நேரிட்டிருக்க வேண்டுமென்று எண்ணுவார்கள். அவள்கையில் ஏதோ ஒன்றை வஸ்திரத்தால் மறைத்து ஏந்திக்கொண்டு நடந்தாள். சத்தியபுரிக்குச் சமீபமாகவரும்போது வஸ்திரத்தைநீக்கி கையிலிருந்தவஸ்துவைநோக்கி, இன்னும் நித்திரைபோகிறாயோ? உன்னை அங்கேயே கொன்றுவிடாமற் போனேனேயென்றுசொல்லி அதை உடனே வஸ்திரத்தால் மூடிக்கொண்டு விரைவாகநடந்தாள். அவள் கையிலேந்திக் கொண்டுவந்தது பன்னிரண்டு மாதஞ்சென்ற ஓர் ஆண்குழந்தை. சத்தியபுரிக்கு இன்னும் சமீபமாக வரும்போது சூரியனும் இவளுக்கு உதவி செய்பவன்போல் அஸ்தமித்துவிட்டான். சிறிது இருளாயிருந்தபோதிலும், அவ்வூர்ஜனங்கள் வருவதையும் போவதையுங்கண்ட அவள் அஞ்சினவளாய் கையில் மூடிவைத்திருக்கும் குழந்தையை ஏதோ ஒருமூட்டையை எடுத்துக்கொண்டு போகிறவள்போல நடந்தாள். ஓரிடத்தில் சிறிதுநேரம்நின்று இந்தமூட்டையை எங்கே அவிழ்ப்பேனென்றெண்ணிப் பெருமூச்செறிந்தாள். மறுபடியும் நடந்து அநேகவீதிகளைத்தாண்டி பிரபுக்கள் வசிக்கும் வீதியில் வந்துகொண்டிருக்கையில் ஓர் வீட்டில் மேளவாத்தியம் வாசிக்கக்கேட்டாள். அவ்வீட்டினருகிற்சென்று பார்த்தபோது அதுவெண்சுதை தீற்றி மிகவும் நன்றாய் அலங்கரிக்கப்பட்ட ஓர் பெரிய பிரபுவின் வீடாயிருந்தது. அவ்வீட்டில் கூட்டம் நிறைந்து அதிகசந்தடியா யிருப்பதைக்கண்டு அது ஓர் கல்லியாண வீடென்றறிந்து, அவ்வீட்டுக்கருகாமையில் ஒருவருக்கும் தெரியாமல் மறைந்து நின்றுகொண்டு இதுதான் நல்லசமயம், இந்தவீட்டில்புகுந்து இச்சுமையை இறக்கிவிடவேண்டுமென்று தீர்மானித்தாள். மேளவாத்தியம் நின்றது. அநேகபுருஷர்களும் ஸ்திரிகளும் நல்லாடையாபரணங்களை யணிந்து கும்பல் கும்பலாய் வந்து கல்லியாண வீட்டிற்குள்சென்றார்கள். முதலில் எண்ணியவண்ணம் அந்தஸ்திரியானவள் கும்பலுடன் சலந்துகொண்டு ஒருவரும் தன்னைப்பாராவண்ணம் அதிகதந்திரமாய் உட்சென்று ஜனக்கூட்ட மில்லாதிருக்குமிடத்தை நாடினாள். அச்சமயத்தில் அவ்வீட்டிலுள்ளவர்கள் மேன்மாடியில் நடக்கும் அகஸ்யத்தைக் கேட்கச் சென்றதால் சமயற்கட்டில் ஒருவரு மில்லாதிருப்பதைக்கண்டு அவ்விடத்திலிருந்த ஓர் அறையில் கையிலிருந்த குழந்தையை படுக்கவிட்டு ஒருவருக்கும் தெரியாமல் மறுபடியும் வெளியேசென்றாள்.

மேன்மாடியில் அகஸ்யம்முடிந்து சபைகலைந்தவுடன் அநேகர் கீழிறங்கிவந்து வெளியே சென்றனர். சிலர் அன்றிராத்திரி போஜனஞ்செய்ய அவ்விடத்திலேயே தங்கினர். அவ்வீட்டுப்பிரபுவானவர் தன்வேலைக்காரர்களில் ஒருவனைப்பார்த்து, ஹேசம்பாதி! சீக்கிரம் போஜனத்திற்கு ஏற்பாடுசெய். பிரபுக்கள்காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றுசொன்னார். அப்படியே மகாப்பிரபோ, இதோமுடிந்தது என்று அதிகவினயத்துடன்சொல்லி துரிதமாகச் சம்பாதி மேன்மாடியை விட்டுக் கீழிறங்கி, மூன்றாவது கட்டிற்குச்சென்று சமையற்காரர்களுக்குவேண்டிய உத்திரவையளித்தான். அக்காலத்தில் சமையற்காரர்களில் ஒருவன்விருந்து சாப்பாடு தயார்செய்யும் அவசரத்தில் அங்கு மிங்குமாக ஓடிக்கொண்டிருக்கையில் ஓர் அறையில்நுழைந்தான். அவ்வறையில் ஓர் சிறியகுழந்தை படுத்திருப்பதைக்



கண்டு ஆச்சரியங்கொண்டு, இதுயார்குழந்தை, இவ்விடத்திலிருப்பானேன், தனியே இக்குழந்தையை யார்விட்டிருப்பார்கள், ஸ்திரிகள் இவ்விடம் வருவதில்லையேயென்று பலவாறுயோசித்து அக்குழந்தையினருகிற்சென்று அதனுடைய ரூபத்தையும் அழகையுங்கண்டு அதிசயித்து அச்சமயத்தில் அதுதூங்கிக் கொண்டிருக்கிறதென்றும் அறிந்தான். அவன் எந்த வேலையாக அவ்வறையிற் சென்றானோ அதைமறந்தவனாய் வெளியேவந்து சம்பாதியினிடத்துச் சங்கதியைச் சொன்னான். அக்காலத்து தன்னுடன் பேசிக்கொண்டிருந்த பெரியவருடன் சம்பாதி அவ்வறைக்குள்சென்று குழந்தையைப்பார்த்து சற்று நாழிகை ஒன்றும் பேசாமல் யோசித்திருந்து பிறகு, இராமதாசரே! இக்குழந்தையைப் பார்த்தீர்களா? எவ்வளவு அழகா யிருக்கிறதென்று சொன்னான். ஆமாம், வெகு அழகாய்த்தானிருக்கிறது. இதுயாருடைய குழந்தையென்று இராமதாசர் கேட்டார். அதைத்தான் கண்டுபிடிக்கவேண்டும். எங்களுடைய பிரபுவீட்டில் குழந்தைகிடையாது என்று சம்பாதிசொல்ல, குழந்தையைப்பார்த்தால் இராஜவம்சத்தைச்சேர்ந்ததென்று தோன்றுகிறது, சுமார் ஒரு வயதிருக்கலாம், இக்குழந்தை தனியே இங்கேவரவேண்டிய காரணமென்னவென்று இராமதாசர் கேட்டார். இன்றையதினம் வந்த பிரபுக்கள் யாராவது இங்கே தூங்கவிட்டார்களோ வென்றால் இவ்வளவு அருமையான இளங்குழந்தையை தனியே விடமாட்டார்கள், ஒருவேளையாராவது துஷ்டர்கள் அதன் தாய்தந்தையர்களுக்குத் தெரியாமல்கொண்டுவந்து அதன் நகைகளை கழற்றிக்கொண்டு இவ்விடம் தனியே விட்டிருக்கலாமென்று எண்ணுகிறேனென்று சம்பாதிகூறவும், அப்படித்தானிருக்க வேண்டுமென்று இராமதாசரும் ஒத்துக்கொண்டனர். அக்காலத்தில் பிரபுக்கள் சாப்பிடுகிற சமயமாயிருந்ததால் குழந்தையைக்குறித்து பிரஸ்தாபிக்க நல்லதருணமல்லவென்று பிறகுதெரியப் படுத்தலாமென்றெண்ணி இராமதாசரை அக்குழந்தையினிடத்து உட்காரச்செய்து சம்பாதி பிரபுக்கள் போஜனஞ்செய்து கொண்டிருந்த விடத்திற்குச் சென்றான்.

அன்றிராத்திரி அவ்வீட்டில் அனைவரும் உண்டபின் வீணைக்கச்சேரி நடந்தது. பிறகு சபை கலைந்து அவர்கள்தத்தம் வீடுசென்றார்கள். பிரபுவின்வீட்டிற்கு வந்த பந்துக்கள்மாத்திரம் படுக்க அவ்விடத்திலேயே தங்கினர். எல்லாரும் படுக்கைக்குப்போக சமயம்வந்துவிட்டது. அதுவரைக்கும் குழந்தையைக் காணோமென்று ஒருவரும் சொல்லவில்லை. அக்குழந்தையைக் காத்துக்கொண்டிருந்த இராமதாசர் ஓர் தாதியை வரவழைத்து அதற்குபால் கொடுப்பித்தனர். பிறகு சம்பாதி அவ்விடம்வந்து, இராமதாசரே! இதென்ன ஆச்சரியம், ஒருவராவது குழந்தையைத் தேடவில்லையே; சந்திரசேகரபிரபு பள்ளியறைக்குச்சென்றார். அவரிடத்து இந்தசெய்தியைச் சொல்ல எனக்கு நல்ல சமயம் அகப்படவில்லை யாதலால் நாளையதினங் காலையில்தான் தெரிவிக்க வேண்டுமென்றுசொல்லி, அக்குழந்தைக்கு இலட்சுமியென்னும் தாதியைக்காவல்வைத்து இராமதாசரை யழைத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டகன்றனன்.

மறுநாட்காலை சந்திரசேகர பிரபுவின்வீட்டு மேன்மாடியில் சிலர் உட்கார்ந்து பேசிக்கொண் டிருந்தனர். அவர்கள் மத்தியில் ஓர் ஸ்திரி ஆண்குழந்தை யொன்றை இடுப்பில்வைத்துக் கொண்டிருந்தாள். சிலர் அக்குழந்தையினருகில் வந்துபார்த்து அதிசயித்து தலையசைத்து மூக்கின்மேல் கைவைத்தனர். சிலர்குழந்தையின் அழகைவர்ணித்தார். குழந்தையைப் பார்த்தவண்ணமே சிலர் பேசாதுநின்றனர். அப்பாலகன் அழகைக்கண்டு எடுத்துமுத்தமிட சிலர் ஆசைப்பட்டனர். முத்தமிட்ட சிலர் குழந்தையின் கன்னம் சிவந்ததைக் கண்டு மனந்தளர்ந்தனர். இவ்வருமையான குழந்தையைப்பிரிந்த தாய் தந்தையர்கள் என்னசெய்வார்களோவென்று சிலர் மனநொந்தனர். இவ்வாறிருக்கையில் பேசும் சத்தம் அடங்கிற்று. உடனே அக்குழந்தையை வைத்துக்கொண்டிருந்த ஸ்திரியானவள் அவ்விடத்து விரித்திருந்த இரத்தினகம்பளத்தின்மீது குழந்தையை உட்காரவைத்து சிறிதுதூரம் ஒதுங்கிப்போய் நின்றனள். உட்கார்ந்திருந்தவர்களில் சிலர் எழுந்து நின்றனர். சுமார் இருபத்தைந்து வயதுள்ளவராயும், அகன்றமார்பில் இரத்தினங்களிழைத்த ஆபரணங்களை யணிந்தவராயும், விசாலமான கண்களில் கருணை நிறைந்தவராயும் ஒருவர்வந்தார். அவரைக்கண்டவுடன் சம்பாதி அதிகவணக்கத்துடன் கைகூப்பிநின்று, மகாப்பிரபோ! இக்குழந்தை நேற்றிராத்திரி நமது மாளிகையில் மூன்றாவது சமையற்கட்டில் ஓர் அறையில் தனியே விடப்பட்டிருந்ததைக்கண்ட சுயம்பாகிகளில் ஒருவன் என்னிடம்சொல்ல, நானும் இராமதாசரும் போய்ப் பார்த்தோம். அப்பொழுது குழந்தை நித்திரைசெய்து கொண்டிருந்தது. இதுவரைக்கும் குழந்தை இன்னாருடையதென்று தெரியவில்லை. இந்தசமாச்சாரத்தை தங்களுக்கு நேற்றிராத்திரியே தெரிவிக்க சமயம் அகப்படவில்லையென்று அதிகவினயத்துடன் சொன்னான். இதைக்கேட்ட சந்திரசேகரர், இதென்ன புதுமையென்றுசொல்லி, குழந்தையினருகிற்சென்று பார்த்தார்.

உடனே மந்திரி சுதந்திரனை அழைத்துவா பிரபு கட்டளையிடவும் சம்பாதி உடனே சென்றான். குழந்தையை நன்றாகப்பார்த்து பிரபுவானவர் மிகவும் அதிசயித்து அக்கணத்தில் அவ்விடம் வந்த இராமதாசரை நோக்கி, ஐயா, பக்தசிகாமணியே! இக் குழந்தையைப் பாருங்கள் என்றுசொல்லி, நீங்கள் என்ன நினைக்கிறீர்களென்றுகேட்டார். சந்திரசேகரப் பிரபோ! நேற்றிராத்திரி இக்குழந்தையைத் தங்கள் மாளிகையில் கண்டேன். குழந்தையைப்பார்த்தால் மிகவும் அருமையாக வளர்க்கப்பட்ட பிரபுக்கள் குழந்தையென்று நன்றாக விளங்குகிறது. யாரோ துஷ்டர்கள் சிறிது நகைக்கு ஆசைப்பட்டு குழந்தையை எடுத்துக்கொண்டு வந்திருக்கவேண்டும். கோரியநகைகள் கிடைத்தவுடன் குழந்தையை தங்கள் திருமாளிகையில் விட்டது குழந்தையின் அதிர்ஷ்டமென்று எனக்குத் தோன்றுகிறது. வேறு இதைக்குறித்து யார்தான் என்னசொல்ல முடியும் என்று இராமதாசர் பேசிக்கொண்டிருக்கும்போது காலடி சப்தங்கேட்டது. உடனே சுதந்திர மந்திரியும் சம்பாதியும் வந்தார்கள். பிரபுவானவர் மந்திரியைநோக்கிக் குழந்தையின் வரலாறைக் கூறி இனிச் செய்யவேண்டியதென்னவென்று கேட்கும்போது, அவ்வழகிய குழந்தை மெள்ள தவழ்ந்து கொண்டு வந்து தன் இருகரங்களாலும் அருகில்நின்ற சந்திரசேகரப் பிரபுவின் காலைப்பிடித்துக்கொண்டு நின்று அண்ணாந்து அவரது முகத்தைப் பார்த்துச் சிரித்தது. இதைநோக்கியபிரபு சந்தோஷங்கொண்டு இளங்குழந்தையின் மெல்லிய கரங்கள் தன்தேகத்திற்படவும் மெய்மறந்தவராய் அக்குழந்தையை வாரியெடுத்து மார்பிலணைத்து முத்தமிட்டனர். உடனே இராமதாசர், இந்தக்காட்சி எனக்கு மிகவும் ஆனந்தமாயிருக்கிறதென்றுகூறி நகைத்தனர். அப்போது சுதந்திரன், இராமதாசரே! கொஞ்சம் விவரமாகச் சொல்லவேண்டுமென்று கேட்டான். உடனே இராமதாசர் சொல்லுகிறார். மகாப்பிரபோ! நடந்த விவாகத்தில், தங்களுக்கும் இராஜியம்மணிக்கும் பெரியோர்கள் அநேக ஆசீர்வாதங்கள் செய்தார்கள். அவைகளில் தங்களுக்கு சீக்கிரம் புத்திர சந்தானம் உண்டாகவேண்டுமென்பது ஒன்று. தங்களிடத்து இக்குழந்தை தவழ்ந்துவந்து பாதங்களைப்பிடித்து நின்றதையும், அக்கணத்தில் தாங்கள் இருகரங்களாலும் அதை அன்புடன் வாரியெடுத்துக் கொண்டதையும் காணும்போது பகவானது கிருபையால் அப்பெரியோர்கள் ஆசீர்வாதம் அதிசீக்கிரமாய்ப் பலித்து விட்டதென்று ஆனந்தங்கொண்டேன். மறுபடியும் இக்குழந்தையின் உண்மையான வரலாறு எனக்கு ஞாபகம்வரவே என்னமுடத்தனமாயெண்ணினேனென்று நகைத்தேன். இதைத்தவிர வேறொன்றுமில்லையென இராமதாசர் சொல்லிமுடித்தார். இதைக்கேட்ட சுதந்திரனும் ஐயா, இராமதாசரே! எனக்கு வேறொருவிதமாய்த்தோன்றிற்று என்றான். அதுவென்னவென்று சந்திரசேகரர் கேட்க சுதந்திரன் சொல்லுகிறான். இந்தக்குழந்தை நமது பிரபுவினுடைய பாதத்தைப் பிடித்து அவரது முகத்தை நோக்கியதைக் காணும்போது தான் நிராதரவாயிருப்பதையறிந்து பிரபுவின்பாதத்தில் சரணமடைந்து தன்னைக்காப்பாற்ற வேண்டுமென்று கெஞ்சிக்கேட்பதுபோலும், உடனே பிரபுவானவர் அதையெடுத்து மார்பிலணைத்துக் கொண்டதானது, அப்படியேகாப்பாற்றுகிறேன் நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாமென்று தைரியம் சொல்லியதுபோலும் எனக்குத்தோன்றிற்று என்று சுதந்திரன் சொல்லியதை செவியுற்றப் பிரபுவானவர் உள்ளமகிழ்ந்து மந்திரி குறிப்பாகக் காட்டியவண்ணம் தான் அக்குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமென்று நிச்சயித்து, மந்திரியைநோக்கி, இப்போது என்ன செய்யலாம், இக்குழந்தையின் தாய் தந்தையர்களைக் கண்டு பிடிக்கவேண்டுமே அதற்கு என்னயுக்தி என்று கேட்டார். சுவாமி! நாம் எல்லா தேசத்தரசர்களுக்கும் தூதுவர்மூலமாக செய்தியைத் தெரிவிக்க வேண்டும். அந்த இராஜாக்கள் தங்கள்தேசத்தில் வீதிகள்தோறும் பறையடித்து ஜனங்களுக்குப் பகிரங்கமாய் விஷயத்தைத் தெரிவிக்கவேண்டும். இதைத்தவிர வேறொரு மார்க்கமில்லை. இக்குழந்தைக் குரியவர்கள் இன்னாரென்று ஏற்படுகிறவரையில் தாங்களே குழந்தையை வளர்த்து வரவேண்டுமென்று மந்திரி கூறினான். பிறகு இராமதாசர் மகாப்பிரபோ! கண்டவர்மனதைக்கவரும் இக்குழந்தைக்கு மனோகரன் என்று பெயரிடலாமோ என்றுசொல்ல, பிரபுவும் மந்திரியும் அப்பெயரை அங்கீகரித்தார்கள். மந்திரிசொல்லிய வண்ணமே எல்லா தேசத்தரசர்களுக்கு கடிதம் அனுப்பும்படி பிரபு கட்டளையிட்டு, மனோகரனை சௌக்கியமாய்க் காப்பாற்றுவதற்குத் தகுந்த ஏற்பாடுசெய்தார்.

(இன்னும்வரும்.)

## குருசிஷ்யன் சம்பாஷணை.

சிஷ்யன்— சிவன் ஆணோ? பெண்ணோ? அலியோ?

குரு— நீ சொன்ன மூன்றும் அன்றென்பதே சித்தாந்தம்.

சிஷ்யன்— ஆனால், 'பெண்ணாகி யாணலியாய் பிறங்கொளிசேர், விண்ணாகி' என்று கூறியிருப்பானேன்.

குரு— 'ஆணல்லன் பெண்ணல்ல னல்லாவலியுமல்லன்' என்றுங் கூறப்பட்டிருக்கிறதே.



சிஷ்யன்— ஓகோ! இது வைஷ்ணவ ஆழ்வார்களிலொருவர் விஷ்ணுவைக் குறித்துக் கூறினது. சிவனைக்குறித்து சிவனடியார்கள் அப்படிக் கூறினதுண்டோ?

குரு— ஆகா உண்டு. 'வீணைப் சுழலுமெனக் கொரு ஞானவிழி யளித்துக், கோணகத்துள் ளொரு கூத்தப்பிரானுண்டக் கூத்தப்பிரான், 'ஆணுவது மன்று பெண்ணாவது மன்றலியுமன்று, காணுக்கண்கொண்டினிக் காணியென்றான் சச்சியேகம்பனே' என் னும் வசனமு மிருக்கிறது.

சிஷ்யன்— ஆணாகியும் பெண்ணாகியும் அலியாகியும் என்றும் ஆணல்ல பெண்ணல்ல அலியல்லவென்றும் கூறினால், ஒருபொருளுக் கிரண்டு தன்மையு முண்டோ?

குரு— உண்டு இல்லை யென்பன இரண்டும் பெத்தநிலை.

சிஷ்யன்— ஆனால் அந்தச்சிவன் எங்கேயிருப்பார்?

குரு— கயிலாயம், காசி, காஞ்சி முதலிய தலங்களிலிருப்பார்.

சிஷ்யன்— சிவன் எங்கும் வியாபி, சர்வேந்திரியாமி சர்வபரிபூரணன், சர்வசாட்சி, என்றுகூறக் கேட்டிருக்கிறேனே. அப்படியிருக்கநீரேன் சிலவிடங்களைக் குறிக்கிறீர்?

குரு— பசுவுக்குப் பால் சரீரமெங்குஞ் சமமாய்ப் பரவியிருந்தாலும் ஸ்தன்னியத்தின்வழியாய் வெளிப்படு மாறுபோலக் கயிலை முதலிய தானங்களிலேயும் ஞானிகள் சித்தத்திலேயும் வெளிப்படுவர்.

சிஷ்யன்— (மறுபடியும்) அந்தச்சிவன் எங்கே யிருப்பார்?

குரு— எங்கு மிருப்பார்.

சிஷ்யன்— எங்குமிருந்தால் எனக்குத் தெரிய வில்லையே?

குரு— எங்குமிருப்பவர் நின் அறிவிலேயு மிருப்பார்.

சிஷ்யன்— எந்த அறிவிலே?

குரு— சுட்டறிவுக் கெட்டாத சுகாதீத அறிவிலே.

சிஷ்யன்— அந்த அறிவுவேறு நான்வேறோ?

குரு— அந்த அறிவு நீ தான்.

சிஷ்யன்— அந்த அறிவு நானாயிருந்தால் எனக்குத் தெரியாதோ?

குரு— அங்கிங் கென்னாதபடி யெங்குமெல்லாமாயிருப்பதை பகிர்முகமாய்ச் சென்று சுட்டியறிவதினாலே தெரியாது.

சிஷ்யன்— பகிர்முகமாய்ப் போவதைவிட்டு அகமுகமாய்த் திரும்பினால் தெரியுமோ.

குரு— அகமுகமாய்ப்பார்த்து பின்பு கேள்.

சிஷ்யன்— ஆனால் அந்த அறிவு வேறுதானோ?

குரு— பகிர்முகமாய்ச் செல்லும் பழக்கம் விடுத்து பறப்பற்று சும்மாயிருந்து அகமுகமா யனுபவித்தால் தெரியும்.

சிஷ்யன்— நீர் சொன்னபடி அனுபவித்தவர் உண்டோ? அவர்கள் யார்?

குரு— ஆகா உண்டு. சுகர், வாமதேவர், திருமூலர், நந்தி, சிவவாக்கியர், அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், சடகோபர், பட்டணத்தார், பத்திரகிரி முதலிய மகாத்துமாக் களெல்லாம் அனுபவித்தவர்கள்.

சிஷ்யன்— அனுபவித்த அவர்கள் அனுபவத்தைச்சொன்னதுண்டோ?

குரு— ஆகா பலதரம் சொல்லி யிருக்கிறார்கள். உற்றுக் கவனிப்பவர்கள்தா னில்லை.

சிஷ்யன்— எப்படி சொன்னார்கள். எதோ சிலவசனம் சொல்லுங்கள்.

குரு— ஆகா! இனிச் சொல்லுகிற பாட்டைக் கவனி.

"சிவனைநான் சிந்தையுட் கண்டவாறே."

"தேடிக் கண்டுகொண்டேன் றிருமாலோடு நான்முகனுந், தேடியுந் தேடொணாத் தேவனை யென்னுள்ளே, தேடிக்கண்டு கொண்டேன்."

"உள்ளத்தி னொளியைக் கண்டதுள்ளமே."

"மாயனென் னெஞ்சினுள்ளான் மற்று மெவர்க்கு மதுவே."

"கமலக் கண்ணனென் கண்ணினுள்ளான் காண்பனவன் கண்களாலே, அமலங்களாக விழிக்கு மைம்புலனு மவன்மூர்த்தி, கமலத் தயனம்பிதன்னைக் கண்ணுதலானொடுந் தோற்றி, அமலத் தெய்வத் தோடுலகமாக்கி யென்னெற்றியுளானே."

## வெள்ளைக்குரங்கும்-குள்ளநரியும்.

முன்னொருகாலத்தில் ஒருகுள்ளநரியுடன் வெள்ளைக்குரங்கொன்று கூடி சிநேகஞ் செய்துகொண் டிருந்தது. இப்படியிருக்கையில் ஒருநாள் நரியானது மனிதர் மாமிசம் - தோல் - நரம்பு - எலும்புகளைக்கடித்துத் தின்னும்போது குரங்குபார்த்து ஓ - நரியே, நீபூர்வஜன்மத்தில் என்னபாவம்பண்ணினாய் நாயுந்தீண்டாத நரவுடலைப் பிடுங்கித் தின்கிறையே யென்றது - அதற்கு நரியானது "ஐயாகுரங்கே நான்முன்பிறப்பில் ஒருபிராமணனுக்குச்சிறிது திரவியங் கொடுக்கிறேனென்று, ஆசைவார்த்தைசொல்லி நாளைக்காகட்டும் நாளைக்காகட்டும் என்று சொல்லிக்கொண்டுவர, கடைசியில் நாளையென்னும் நாள் நமனுடைய நாளாய்விட்டபடியால் மோசம் போனேன். அந்தப்பாவத்தினால் இந்தச்ஜெனனமெடுத்தும் பூர்வக்கியானத்துடன் சொல்லுகிறேன்" என்றது. அதைக்குரங்குகேட்டு இப்படியா உன்பூர்வோத்திரமென்று போய்விட்டது. ஆகையால் பூமியிலேயாவனொருவன் பூர்வபுண்ணியவசத்தால் பொருளுடைத்தாயிருப்பானாகில் பிராமணன்முதலிய ஏழைகளுக்குச் சொல்லியபோதே கொடுத்துவிடவேணும். அப்படிக்கில்லாமல் கொடுக்கிறேனென்று பேராசைகாட்டி பிற்பாடு கொடுக்காமலும் இன்றைக்கு நாளைக்கென்றும் இழுத்தலைக் கழிப்பானாயின் அவனுக்கே பிணந்தின்னுகின்ற நாயுடைய பிறப்பு கிடைக்கும்.

## மூன்று புத்திசாலிப்பிள்ளைகள்

நெடுநாளைக்குமுன் ஒருரில் ஓர் அரசனிருந்தான். அந்த அரசனுக்கு மூன்றுகுமாரர்கள் உண்டு. ஆனால் அரசன் இம்மூவரிடத்திலும் ஒரேமாதிரி பிரீதி வைத்திருந்தான். அரசன் மூவரிடத்திலும் ஒரேமாதிரி ஆசையை வைத்திருந்தபடியால் தன் காலத்திற்கு பிற்காலம் இராஜ்ஜியத்தை யாருக்கு கொடுக்கிறதென்று அவனுக்கு புரியவில்லை. கடைசியில் அரசன் தன் மரணாந்திசையில் குமாரர்கள் மூவரையும் அழைப்பித்து உங்களில் யார் முதல்தரமான சோம்பேரியோ. அவன் தான் தனக்குப்பின் இராஜ்ஜியத்திற்கு வரவேண்டுமென்றான். அதற்கு மூன்று புத்திரர்களும் கீழ் வருமாறு பதிலளித்தனர்.

முதல்பிள்ளை.

ஐயா! "இராஜ்ஜியம் எனக்குதான் சேரவேண்டியது, ஏனென்றால் நான் தூங்கவேணுமென்று படுத்துக்கொள்ளும்போது, கண்ணில் ஏதாவது ஜலத்துளி விழுந்தால்கூட கண்ணை மூடிக் கொள்ளும்படியான கஷ்டத்தை கண்ணுக்கு கொடுக்க மாட்டேன்" என்றான்.

இரண்டாவது பிள்ளை.

"அப்பா! ராஜ்ஜியம் எனக்குதான் சேரவேண்டியது நியாயம். ஏனென்றால், வாழைப்பழத்தை கஷ்டப்பட்டு தோலைநீக்கி சாப்பிடுகிறதைப் பார்க்கிலும் அப்படியே தோலைநீக்காமல் சாப்பிடுவேன்" என்றான்.

மூன்றவது பிள்ளை.

தகப்பனாரே! "என்தமயன்மார் இருவரைக்காட்டிலும் எனக்குதான் ராஜ்ஜியங்கிடைக்கவேண்டியது. என்னகாரணத்தைப் பற்றியென்றால் யாராவது என்னை தூக்குக்கயிற்றில்கழுத்தைமாட்டி கத்தியை நோக்கினால், கையைதூக்கி கயிற்றை அறுப்பதைப்பார்க்கிலும் சும்மாயிருப்பதே நலமென்றிருப்பேன் என்றான். இப்படியாக ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பெருமையைப் புகழ்ந்தார்கள். இம்மூவருடைய சாமர்த்தியத்தையும்கேட்ட அரசன் மூன்றாவது பிள்ளையைப்பார்த்துநீ தான் சோம்பேரித் தனமென்னும் கடலினுடைய கரைகண்டிருக்கிறாய். உயிரைக்கூட லட்சியம் செய்யாதவனா யிருக்கும்படியான அவ்வளவு சோம்பேரித்தனம் மேற்கொண்டிருக்கிறது. ஆகையால் நீ தான் என் பின் ராஜ்ஜியபரிபாலனம் செய்யவேண்டியதென்றார்.

# NEWS AND NOTES.

## பலதேசவர்த்தமானங்கள்

### சுரங்கப்பொன்னுக்கு ஒருதுணிவர்த்தகன் ஏமாந்தான்.

உரிசம் கிராமத்தில் அநந்தபூர்ஜில்லா தாடிபத்திரிகாரன் ஒருவன் துணிகள் விற்கப்போனான். இவனிடத்தில் சுமார் 70-ரூபாய் துணிகள் இருந்தன. சுத்தம் பண்ணாத சுரங்கப் பொன்கட்டி ஒன்று அந்தத்துணி வியாபாரிக்கு அவ்வூர் சில போக்கிரிகள் காண்பித்து ...வன் துணிகளையெல்லாம் வாங்கிக்கொண்டு அந்தப் பொ...ான்கட்டியை துணிகளுக்குபதிலாய்கொடுத்துவிட்டு போ...ய்விட்டார்கள். அந்தக் கட்டியை அவ்வர்த்தகன் வாங்...கிக்கொண்டு அப்பால்போய் அதைபரிசோதிக்கும் போது அதுவெரும் பித்தளைக்கட்டியாயிருந்தது. அப்போது அ...வன் வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு கண்ண...ீர் தாரைதாரையாய் விட்டான். ஓவென்று கதறி அழு...தான், தன் துக்கத்தைபோலீஸ் அதிகாரிகளுக்கும் தெரிவித்தான். உபயோகமில்லாமல் போய்விட்டது. ஐயோ! பாவம்.



### இருண்டவன்கண்ணுக்கு மிரண்டதெல்லாம் பயம்.

சையாம் நாட்டில் புதிதாய் ஒரு வெள்ளைக்காரன் வந்தான். அவன் எல்லாரையும்போலவே வெகுகாலமாய் தனக்கு சிநேகமாயிருந்த ஒருவன் வீட்டிற்கு வந்தான். இராத்திரி 8-மணிக்கு அந்த புதியவன்தான் வீட்டிற்குபோகிறேனென்றுபுறப்பட்டான். அப்போது பழையமனிதனும் அவன்பின்னோடு வருகிறதாகச்சொல்லி இருவரும் புறப்பட்டார்கள். பாதிவழி படகில் போனார்கள். பிற்பாடு குறுக்குவழியாய்ப் போகலாமென்று படகைவிட்டு கீழே இறங்கி கரையோரமாய் நடந்துகொண்டிருக்கும் போது ஏதோ ஒன்று ஒருபெரிய மலைபோல எதிரில்தோற்றினது, ஓஹோ இதுயானைபோல யிருக்கிறதென்று நினைத்து அதைச்சுட்டார்கள். தாங்கள் முன்னுக்கு வெகு ஜாக்கிறதையாய்ப் போனார்கள். இவர்கள் பார்த்தது யானையா யிருந்தாலல்லவோ அப்பால் நகரும், அதுநகரவேயில்லை. உடனே ஒருகலபை உண்டாயிற்று. அவர்களுக்கு எதிரில் தோன்றினது ஒருகுடிசைதிரள். அவர்கள் அந்தகுடிசைகளைப்பார்த்து யானையென்று சுடவே அந்த குடிசையிலிருந்தவர்கள் ஏதோ திருடர்கள்வந்து விட்டார்கள் என்று எண்ணி இரவெல்லாம் சுட்டுக்கொண்டே இருந்தார்கள். துப்பாக்கி வெடிகளுக்குபயந்து இந்த இரண்டு மனிதர்களும் கீழேபுல்லில் மறைவாய் படுத்துக்கொண்டு துப்பாக்கி சுடுகிறது நிற்கிறவரையில் அங்கேயே இருந்துவிட்டு, பிற்பாடு மெல்லமெல்ல நகர்ந்துபோனார்கள். பொழுதுவிடிந்த உடன் அந்த குடிசைக்காரர்கள் தாங்கள் திருடர்களை அடித்துத் துரத்தினதாக பெருமை சொல்லிக் கொண்டார்கள்.

### மலையாளத்து ரெயில்வே.

தலைச்சேரிக்கும் கன்னனூருக்கும் பாதைமுடிந்து போக்குவரவு நடந்துவருகிறது. மேமீ 20வ முதல் டிரெயின் விடப்பட்டது. கன்னனூர் ஸ்டேஷனில் வேடிக்கையாக வெகுஜனங்கள் கூடியிருந்தார்கள்.

### ஓர் தீவிபத்து.

கீழ் பர்மாநாட்டில் சிட்டாங்கு கிளை இருப்புப்பாதையிலுள்ள ஸ்டேஷன்களில் ஒன்றாகிய பெயுண்டாவாவில் சிலதினங்களுக்குமுன்னே பெரிய தீவிபத்து நேர்ந்து அநேகவீடுகள் வெந்து தணிந்தன. அவ்வூரில் முக்கால்வாசி ஜனங்கள் இப்போது குடியிருக்க வீடில்லாமல் தவிக்கின்றார்கள். பொருள் நஷ்டமும் அதிகமென்றுசொல்லிக் கொள்ளுகிறார்கள்.

### நியாயஸ்தலத்தில் வாதியைப் பிரதிவாதி குத்தினன்.

பனதூர் என்ற இடத்தில் மேமீ 13வ மாஜிஸ்ட்ரேட்டார் ஒருசிவில்கேசு தீர்ப்புசொல்லிவிட்டு தம் அரைக்குள் போய்க்கொண்டிருந்தார். வியாஜ்ஜியம் தோற்றுப்போன பிரதிவாதி வாதியை ஒருகத்தியால் பலயிடத்தில் குத்திவிட்டான். அவன் இனி பிழைப்பது நிச்சயமில்லை. அவனிடத்தில் ஒருமரண வாக்குமூலம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்படி குத்தினதினால் சுதேசிகள் கத்திவைத்துக் கொள்ளக் கூடாதென்று சொல்லப்படுகின்றது. வெள்ளைக்காரர்கள் கத்திவைத்துக்கொண்டிருந்தா லிம்மாதிரி ஆபத்து நேராதுபோலும்.

### பம்பாய் ரெயில்வே விபத்து.

நாளது மாதம் 24வ முக்தபாய் என்ற ஒருஸ்திரீ ஜி. ஐ. பி. இருப்புப்பாதையில் தாடர் ஸ்டேஷனில் ஒரு வண்டித்தொடரின் எஞ்சின்கீழ் அகப்பட்டு மாண்டாள். அவள் தொடர் வண்டிவரும்போது இருப்புப்பாதையை தாண்டப்பார்த்தாள். பாதி தாண்டும்போது வண்டிவந்துவிட்டது. டிரைவர் என்ன கஷ்டப்பட்டு பிரேக் போட்டபோதிலும் வண்டியின்கீழ் அகப்பட்டுக் கொண்டதினால் பலயிடத்தில் காயம் உண்டாயிற்று. ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோன இரண்டுமணி நேரத்திற்கெல்லாம் அவள் இறந்துபோனாள்.

### ஒரு நியாயஸ்தலத்தில் நெருப்பு.

நாளதுமீ 20வ வீல்டான் மைகாஸ்கோர்டில் வெகு பெருந்தீபற்றியது. போலீசார் முயற்சிசெய்தில்லாவிட்டால் அந்தநெருப்பு வெகு பிரமாதமாய் இருக்கும். ஒருகடன் தீர்ப்பை நிறைவேற்றும் பொருட்டு, இருபதுவண்டி புல்கட்டுகள் ஜெப்தி செய்யப்பட்டு கோர்ட்டில்போட்டு வைக்கப்பட்டிருந்தன. சந்திவேளையில் அந்தப்புல்கட்டுகளுக்கு நடுவில் என்னமோபுகை வருவதாக காணப்பட்டது. அதைபரிசோதிக்க வருமுன்னால் இரண்டு நிமிஷத்தில் அந்தப் புல்கட்டுகள் எல்லாம் நெருப்பு பற்றிக்கொண்டது. போலீஸார் நெருப்பாட்களுடன் வந்ததினால் பக்கத்து கூறைவீடுகளில் நெருப்புபிடிக்காமல் இருந்தது. ஒருமணி நேரத்திற்

நெருப்பு முற்றிலும் அவிக்கப்பட்டது. இன்ன காரணத்தினால் நெருப்பு அங்கேபற்றிக்கொண்டதென்று இன்னும் தெரியவில்லை.

## ஒருதிருடனுடன் சண்டை.

பட்ஜ் பட்ஜ் என்ற இடத்தில் ஒருதிருடன் ஒரு வீட்டிற்குள்புகுந்து எல்லாவற்றையும் எடுத்து மூட்டைகட்டும் சமயத்தில் வீட்டுக்காரன் திருடனை நேரே பார்த்து பிடித்துக்கொண்டான். இருவருக்கும் மல்யுத்தம் நடந்தது. வீட்டுக்காரனோடு திருடன்சண்டைபோட்டு ஜெயிக்கிறதாக திருடனுக்குத் தோன்றவில்லை. திருடன் உடனே வீட்டுக்காரன் காதைக்கடித்தான். அந்தவலி பொறுக்கமாட்டாமல் வீட்டுக்காரன் திருடனை கைவிட்டுவிட்டான். திருடனும் ஓடிப்போய் பிறகு அகப்பட்டு விசாரிக்கப்பட்டான். விசாரணையில் இரண்டுவருஷங் கடுங்காவல் தண்டனையும் அதில் மூன்று மாதம் தனிக்காவல் தண்டனையும் அடைந்தான்.

### விஷமுண்டு மாண்டாள்.

சுமார் 16-வயதுள்ள பாலம்மா ளென்பவள் கணவன் தொந்திரவு சகிக்கமாட்டாதவளாய் விஷத்தை வாங்கித்தின்று வாந்திபேதி கண்டதால் அவள் தாயாரும் ஒருவயித்தியரும் வந்துபார்த்து விசாரிக்க அப்பெண் உண்மையை சொல்லிவிடவே இராயப்பேட்டை வயித்திய சாலைக்கு அனுப்பி விட்டார்கள். அனுப்பியும் அவள் அங்கேயே மரணமடைந்தாள்.

---

## வங்காளம்.

### ஒருபுலியுடன் கைச்சண்டை.

வங்காளத்தில் ஹிரணூர் என்ற கிராமத்தில் ஒருமகமதியன், கிராமத்திற்கு எட்டி மைதானத்தில் கால்கழுவ உட்கார்ந்தபோது ஒருபுலி அவனைப்பார்க்க ஓடிவந்தது. அப்போது அவன் பயந்து ஓடத் தலைப்பட்டான். இப்படி அவனோடே அதோட வெகுதூரம் ஓடினார்கள். நடுவழியில் வேறொருவன் அதன் கண்ணுக்குத்தென்பட்டான். இந்தப் புதுமனிதன் தேவளி என்றகிராமத்து வைத்தியன். அவன் ஹிரணூர்க்குப் போய்க் கொண்டிருந்தான். அப்போது மகமதியனைவிட்டு வைத்தியனைத்துரத்திற்று. அதுகண்டுவைத்தியன் வாயுவேகம் மனோவேகமாய் ஓடினான். புலி கிட்டக்கிட்ட வந்தது கண்டு தன்மேல்துணியை அதண்டைவீசி எறிந்தான், அதைப்புலி மோர்ந்துபார்த்துவிட்டு அதுமோசமென்று கண்டு மிக்ககோபம்கொண்டு அங்குகூடிக்கிடந்த கூட்டத்தார்களை உற்றுப்பார்த்தது.

இதற்குள் வைத்தியன் எங்கேயோ மறைந்துவிட்டான். அங்குக்கூடின குடிகளும் பலபேர் பல ஆயுதங்கள்கொண்டு வந்தார்கள். இதுகண்டு புலி தேவளியைப்பார்க்க ஓடிற்று, அப்போதுவழியில் ஆஷ்மன் என்ற மகம்மதியனைக் கண்டு அவனண்டைபோயிற்று. அதைக்கண்டதும் அவன் தன்காலால் அதை இரண்டு உதை உதைத்தான். உதைக்கவே கொஞ்சம்பயந்து மயங்கித் தயங்கிநின்றது. இதற்குள் அவன் ஒருமரமேலேறினான். மரமேறினபோது அவன்துணிகீழே தொங்கிற்று. அதைப்புலி பிடித்திழுத்தது. அப்போது மேலிருந்தவன் அந்தத்துணியை விட்டுவிடவே அதைப்புலி துண்டுதுண்டாய்க்கிழித்துவிட்டது. இப்படிச்செய்துவிட்டு, அந்தப்புலி அந்த ஆஷ்மன்மாட்டுக்கொட்டிலுக்குள் பாய்ந்தது. ஆஷ்மன்மெல்ல, எப்படியோ அதைவெளியில் துரத்திவிட்டான். வெளிவந்து பலமாய் பறுண்டிற்று. அப்போது ஆஷ்மன் அதன்வாயில் "காச்" என்றதை ஆழமாய்க்குத்தி அதன்கண் ஒன்றைப் பொட்டையாக்கினான். அப்படிவாயை அடைத்துக் கண்ணை பொட்டையாக்கி யில்லாவிட்டால் அது இன்னும் பலகெடுதிகள் செய்திருக்கும். இப்படித் தன் வாயில் ஆஷ்மன் குத்தினது பொறுக்காமல் அவன்தோள் மேல் இரண்டுகைகளையும் வைத்து அவனைப் பிடித்துக்கொண்டு அவன்தலையைக் கடிக்கத் தொடங்கிற்று. ஆயினும் வாயில் காச்சால் குத்தியிருப்பதினால், கடிக்கமுடியவில்லை, அதற்குள் அவன்சகோதரனும் மற்றோரும் அதை அடித்துச் சாகப்பண்ணினார்கள் அது 5-முழநீள மிருந்தது.

## ஒரு ஜீவனாம்சக்கேசு.

மிஸஸ்கேஜோ தன் கணவனிடம் ஜீவனாம்சம் ஏற்பாடு செய்துவைக்கக் கேட்டதற்கு அவள் கணவன் ஆஜராய் தன்னையவள் புதுப்பேட்டையில் சென்ற அக்டோபர் மாதத்தில் கலியாணம் செய்துகொண்டு அடுத்த ஜனவரியிலேயே பிள்ளையைப்பெற்று விட்டதால், அப்பிள்ளை தனக்கு பிறந்தில்லாமையாலும், அவள் அவசாரியானமையாலும், அவ்விருவரையும் காப்பாற்றவேண்டியது கடமையல்ல வென்றாலும், விசாரணையிலேற்பட்டபடியால் மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் ராஜரத்தினமுதலியார் மாதம் 5-ரூபாய் ஜீவனாம்ச விகிதத்தைக் கொடுத்துவரும்படி உத்திரவு செய்துவிட்டார்.

## ஓர் அதிசயம்.

நாம் இதுவரையில் பாம்புதோல் உரிப்பதாய்க் கேழ்விப்பட்டிருக்கிறோம். ஆனால் மனிதனாவது மிருகங்களாவது அப்படிச்செய்வதாய்க் கேட்டதில்லை. மனிதன்தோலுரிப்பதாய்ச்சொன்னால் யாராவது நம்புவார்களோ? சொல்பவர்களையன்றோ பயித்தியக்காரனென்பார்கள். அப்படியிருக்க அமெரிக்காகண்டத்தில் இந்தியானாபோலீஸ் என்னும் பட்டணத்தில் வருஷந்தோரும் ஒருமனிதன் தோல் உரிப்பதாகச் சொல்லப்படுகிறது. அம்மனிதனுக்கு தேகத்துத்தோல் கழன்றுபோவதுமன்றி கால் கைகளிலுள்ள நகங்களும் கழன்று போகின்றதாம், தோலும் நகங்களும் கழன்றுபோகும் காலத்தில் அம்மனிதன் தேகம் 104-டிகிரி சூடுடையதாயிருக்கிறதாம். பழந்தோல்கழன்று கொஞ்சகால மாகிறவரையில் புதுத்தோல் அதிகச்சூடு, அதிகக்குளிர்ச்சி, அதிக எரிச்சல் இவைகளைப்பொறுக்கமுடியாத ஸ்திதியிலிருக்கிறதாம். கொஞ்ச காலத்திற்கப்புரம் பழந்தோல்போலவே கெட்டியாய்ப் போய்விடுகிறதாம். வைத்தியர்கள் இன்னகாரணம்பற்றி அம்மனிதன் வருஷந்தோரும் தோலுரிக்கின்றான் என்று சொல்லத் தெரியாதவர்களா யிருக்கிறார்கள்.

---

ஓம்.

பரப்பிரம்மணே நமஃ

"ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி."


# இகபரசுகசாதனி.

வாலியம் I. } 1903ளு ஜூன்மீ {புத்தகம் II.


OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 16 OCT 1903 MADRAS

## மனனமாலை.

நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய்
நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரிய
நிறை சுடரா யெல்லாம்
வைத்திருந்த தாரகமா யானந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெருவெளியைச்
சிந்தை செய் வாம்.

---

சொல்லாலு மனனாலுந் தொடாரத சூக்குமமாய்ப்
பல்லான்ற கேள்வியரு மீதென்று பகர்வரிதா
யொல்லாத பரஞ்சுடரா யுயிர்க்குயிரா யுண்மையா
யெல்லாமா யல்லவுமா யிருக்குமந்தப் பரமசிவம்.

---

ஒன்றாயும் பலவாயு முருவாயு மருவாயுங்
குன்றாயு மணுவாயுங் குணமாயுங் குணியாயு
நன்றாயுந் தீதாயு நானாயுந் தானாயு
மின்றாயு முளதாயு மிருக்கு மந்தப் பரமசிவம்.

---

அவரவர் தமதம தறிவறி வகைவகை,
அவரவ ரிறையவ ரெனவடி யடைவர்கள்
அவரவ ரிறையவர் குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழி யடைய நின்றனரே.

---

யாவையு மெவருந்தானா யவரவர் சமயந்தோறுந் [மூர்த்தி
தோய்விலன் புலனைந்திற்குஞ் சொலப்படா னுணர்வின்
ஆவிசே ருயிரிலுள்ளால் யாதுமோர் பற்றிலாத
பாவனை யதனைக்கூடி லவனையுங் கூட்டலாமே.

---

தூக்கமில்ஞானச் சுடரொளிமூர்த்தி தூழாயலங்கற் பெருமான், மிக்கபன்மாயங் களால்விகிர்தஞ் செய்வேண்டு முருவு கொண்டு, நக்கபிரானோ டயன்முதலாக வெல்லாருமெவையுந்தன்னுள், ஒக்கவொடுங்க விழுங்கவல்லானைப் பெற்றொன்றூந்தளர்விலனே.

---

மன்னுமா லயனோடு வானும் வையமும்
பின்னமு மபினமும் பேசுஞ் சிவனும்
பன்னுமா ணவமுதற் பாசம் யாவையு
முன்னுமிச் சிவத்திடை யுதித் தொடுங்குமால்.

---

சுருதியேசி வாகமங்களே யுங்களாற் சொல்லு
மொருதனிப்பொரு ளளவையீ தென்னவா யுண்டோ
பொருதி ரைக்கட லுண்மண லெண்ணினும் புகலக்
கருத வெட்டிடா நிறைபொரு ளளவையார் காண்பார்.

---

ஈசனென்போ னெவ்வண மவன்யா, ருலகமீன்ற வொருவனுமாயி, னுங்கவ னெங்குள னாலயத்துள்ளா, னாலயம்புகினு மவனைக்காணே, னுமரூப நட்ட மாதவி, னீசனைக்காணேனென்செய் கேனே.

---

உருவோ வருவோ உபயப் பெருக்கோ, காணும் பொருளோ காணாப் பொருளோ, சரியோ செய்யோ கைகா னுண்டோ, உண்பது முறக்கமு முடையு முண்டோ, கண்டவருண்டோ கழருமி னீரே.

---

அதிதிதன் மைந்த ரலமரு காலைப், பிரம கீதையைப் பேசினனெவனோ, சிதாகாயத்திற் றிருவுருத் தாங்கி, மறலியை முனிந்தவா தனெவனோ, வான்முறை யுலகம் வயின்வயினுதிக்க, நான்முகத் திருந்து நான்மறை யுரைத்தன், றுபநிடதத்தி லொளித்தவ னெவனோ, னவனே பிரம மென்றறிமன்னே.

---

செகத்தெங்கு நிறைந்தவச் சிவனார் தம்மைச்
சிந்தையி லன்றித் தெளிவுறார் காண்
முகத்தைச முகத்தாலே காண லாமோ
முன் கையிற் கண்ணாடிதா னொழிய.

---

பந்தமின்றி வீடின்றிப் பரமேயெங்கும் விளங்கிடவும்
பந்தம்வீடுண் டெனவுரைத்தல் பார்க்கின்மாயா மோகமதில்
சிந்தை விரிவேபந்தமதாஞ் சிந்தையொடுக்கமே வீடாம்
இந்தவகை யாம்பந்தம் வீடியம்பு மபவாதமதாகும்.

---

பந்தமென்றும் வீடென்றும் பயிலுகினைவே பந்தமதாம்
பந்தமெங்காம் வீடெங்காம் பரத்தைவிட வேறிலாமையினால்
தந்தஞ்சங் கற்பந்தனிலே தாமேமோகித் திடுமுயிர்கள்
தந்தமசங் கற்பந்தனிலே தாமேநீங்கி யிடுமோகம்.

---

சங்கற்ப மென்றுஞ் சகமென்றும் வேறில்லை
சங்கற்ப மேசகமுஞ் சகமே சங்கற்பமதாம்.

---

சங்கற்ப சத்தியினாற் சகம்போலத் தோன்றியிடுஞ்
சங்கற்ப சத்தியதுந் தன்னைவிட வேறில்லை.

---

வண்டாய்த் துவண்டு மௌனமல ரணைமேற்
கொண்டார்க் கோவின்பங் கொடுப்பாய் பராபரமே.

---

எண்ணமுந்தா னின்னைவிட வில்லையென்றால் யான்முனமே
பண்ண வினையேது பகராய் பராபரமே.

---

பொய்யெல்லா மொன்றாப் பொருத்திவைத்த பொய்யுடலை
மெய்யென்றான் மெய்யாய் விடுமோ பராபரமே.

---

## வேண்டுகோள்.

இகலோகத்தையே கண்டு அதிலுள்ள அற்பசுகத்தையே யனுபவிப்பது மிருகங்கள். இகலோகத்திருந்தே பரலோக சிந்தையுற்று இனிப் பிறவாமை யென்னும் வீட்டைப் பெறவல்லவர்கள் மனிதர்கள். மிருகங்களுக்கும் மனிதர்களுக்குமுள்ள வித்தியாச மிவ்வளவுதான். தேக தத்துவங்களிலும் ஆசையுடன் உண்டு களித்து உறங்கு தொழில்களிலும் வித்தியாசமேயில்லை. முன்பிறப்பிற் செய்த புண்ணியத்தால் இவ்வுலகில் எல்லாப் பிறவிகளிலும் மேம்பட்ட மானிடப்பிறவியை யடைந்து, ஒருக்ஷணமேனும் நிலைத்திராது யோடியலையும் மனதின் வயப்பட்டு, இந்திரியங்களுக்கு முதலில் இன்பம் போலத்தோன்றி பிறகு துன்பமாய் முடியும் அற்பவிஷய சுகத்திலேயே யாழ்ந்து நமது வாழ்நாளை வீணாக்குவது நன்றோ?

உற்றுநோக்குங்கால் நமக்கிவ்வுலகில் அற்பசுகமும் பெருந்துக்கமுமே உண்டாகிறது. இந்த அற்பசுகமும் பெருந்துக்கமும் மாறிமாறிவந்துகொண்டிருக்கிறது. எக்காலமும் இவைகளில் மொத்துண்டு இவைகளினின்று விடுபட்டு மாறாத நித்திய சுகத்தையடைய விசாரியாது நாளைக்கழிப்பின் அநேக ஜன்மங்களெடுத்து அஜ்ஜன்மங்களிலும் இப்படியே மாறிமாறிவரும் அற்பசுகதுக்கங்களை யனுபவித்துக்கொண்டு வரவேண்டியதா யிருக்கிறது. இது மாளாத்தொல்லை. இதனின்றுமீள வகையறியாவிடின் மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் பேதமுண்டென நினைத்தற்கு கஷ்டமாயிருக்கிறது. இந்த அற்பசுகமும் பெருந்துக்கமும் மனிதர்களுக்கு எவ்வண்ண முண்டாகிறது? நிலையில்லாததை நிலையுடையதென்று பிரமித்தபோது அற்பசுகமும், நிலையுடையதென்று பிரமிக்கப்பட்டதொன்று நிலையில்லாததாய் முடிகிறபோது பெருந்துக்கமும் மனிதனுக்கு உண்டாகிறது. நிலையில்லாத பொருள்களை நிலையுள்ளனவென்று நினைப்பதே துக்கத்திற்குக் காரணம். ஆகையால்தான், “நில்லாதவற்றை நிலையினவென்றுணரும் புல்லறிவாண்மை கடை” என்றார் பெரியோரும். சிறிதுகாலம் தேகவாதனையில்லாமல் மரணமுண்டென்பதை மறந்திருக்கும்போது உலகம் சுகமாய்த்தான் காணும். தேகம் சிறிது வருத்தமெய்தி மரணஸ்மரணை வரும்போது மனிதனுக்கிருக்குந் துக்கத்திற்கு அளவேயில்லை. தான் முன்னம் அனுபவித்தது அற்பசுகமெனவும் தனக்கு மரணங்கிட்டியபோது உண்டாவது பெருந்துக்கமெனவும் மனிதனுக்கு அந்திய காலத்தில்தான் தோன்றுகிறது. “நெருநலுளனொருவனின்றில்லையென்னும் பெருமையுடைத்திவ்வுலகு” என்னும் ஆன்றோர் வாக்கியமும் மரணகாலத்தில்தான் மனிதனுக்கு அர்த்தமாகிறது. இவ்வாக்கியத்தின் அர்த்தமென்ன? நேற்றுப் பிறந்தவன் இன்றைக்கிறந்தானென்னும் பெருமையை இவ்வுலகமானது உடைத்தாயிருக்கிறதென்பதே இதனுடைய அர்த்தம். உலகத்தின் பெருமை யிப்படி யிருந்தும் ஒருபொழுதளவும் தாம்வாழ்வதை யறியாத மனிதர்கள் கோடிக்கு மேலான எண்ணங்களை வீணேயெண்ணி பல துன்பங்களை யடைகிறார்களென்னும் கருத்தை யடக்கி “ஒருபொழுதும் வாழ்வதறியார் கருதுபகோடியு மல்லபல” வென்று கூறினார் பெரியோர். இன்னும் “உண்பதுநாழி யுடுப்பது நான்குமுழமெண்பதுகோடி நினைந்தெண்ணுவன— கண்புதைந்த மாந்தர் குடிவாழ்க்கை மண்ணினின்கலம்போலச், சாந்துணையுஞ் சஞ்சலமேதான்.” என்றுங் கூறினர் அநுபவிகளான அறிவுடையோர்.

இப்படி நிலையில்லாத யாக்கையைப் பெற்றும் மனிதனால் சிறிதுகாலம் அனுபவிக்கப்படும் இன்பங்களுக் குறியவையாகும் விதமும், அதற்குப் பொருள் வேண்டிய விதமும் அது தம்முயற்சிகளால் வரும் விதமும், அம்முயற்சிகளைத் தாம் செய்யும் விதமும், அவைகளுக்கு வரும் இடையூறுகளும், அவைகளை நீக்கும் உபாயமும், நீக்கியபின் அப்பொருளைச் சேர்க்கும் விதமும், சேர்த்தப்பொருளைப் பிறர் கொண்டுபோகாமல் காக்கும் விதமும், பிறகு தாங்கோரிய வின்பங்களை யனுபவிக்கும் விதமும் மனிதர்கள் எண்ணி, எண்ணி, “இன்னறரும் பொருளை யீட்டுதலுந் துன்பமே, பின்னதனைப் பேணுதலுந் துன்பமே— யன்னதழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பா, லிரத்தலுந் துன்பமேயாம்” என்றவாறு அடிக்கடித் துன்பத்தையே யடைகின்றனர்.

சதா பிறந்திறந்து துன்பத்தை யனுபவிக்கத்தானே மனிதன் அடிமைப்பட் டிருக்கிறான்? பிறந்தால் இறவாமல் இறந்தால் பிறவாமல் இருந்து மாறுதலில்லாத சுகத்தை மனிதன் அடையமுடியாதோ? இது முடியாத விஷயமானால் வேதங்கள், உபநிஷத்துகள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் இன்னும் அநேக சாஸ்திரங்கள் முதலானவைகளெல்லாம் கூறுவது பொய்வார்த்தையோ? அவைகளினால் பயனிலவோ? அவைகளை யாதாரமாகக்கொண்டு அனுஷ்டித்த பெரியோர்கள் நடவடிக்கையும் பொய்யாசாரமோ? வேதத்தை நிந்தித்து தெய்வத்தைப் பழித்து உலகசுகத்தையே மெய்யென நம்பி பிறந்து பிறந்து மாளாத துக்கத்தையனுபவிப்பது தான் மெய்ஞ்ஞானமும் மெய்யாசாரமுமோ? ஆரிய நண்பர்களே! சற்றே கவனியுங்கள். யோசியுங்கள். துன்பத்திற்குக் காரண மென்னவென்று சிறிது தயவுசெய்து ஆலோசியுங்கள். காரணத்தைக்கண்டு துன்பம் நீங்கி இன்பமடைய வழியைத் தேடுங்கள். குழந்தைக்குத் தாய்போலுள்ள நமது வேதமாதாவினிடத்து அன்பு வையுங்கள். பெரியோரிடத்து மரியாதையா யிருங்கள். சகல ஜீவபிராணிகளையுங் கருணையுடன் பாருங்கள். எல்லாம் வல்ல கடவுளிடத்துப் பக்தியை செலுத்துங்கள். இவைகளே பரலோகசுகத்திற்குச் சாதனங்கள்.



## ஸ்ரீபாகவத பாரத சாராம்சமறிந்தது.

அனேக நாட்களுக்குமுன் கொங்கணநாட்டிலோர் அரசனிருந்தான். அவன் வேத சாஸ்திரங்களைக் கற்காமல் சிற்றின்பத்திலேயே காலம் கழித்தான். அவ்வரசனது மந்திரி நல்லபுத்திசாலியாகையால் அவனால் அத்தேசம் யாதொரு குறைவுமின்றி ஆளப்பட்டுவந்தது. ஒருநாள் மந்திரி அரசனை நோக்கி சுவாமி, தாங்கள் வாளாக்காலத்தைக் கழிக்கிறீர்கள். ஏதேனும் புராண சிரவணம் செய்தால் நன்றாயிருக்குமென, அதுமுதல் ஸ்ரீமத் பாகவதத்தை தினந்தோரும் படித்து அர்த்தம் சொல்லும்படி ஓர் புராணிகரை ஏற்படுத்தினான். அரசன் மனைவியும் தன் அந்தப்புரத்தில் ஓர் புராணிகரை வரவழைத்து பாரதத்தைப் படித்துப் பிரதிதினமும் அர்த்தம் சொல்லும்படி ஏற்பாடு செய்தாள். அன்று முதல் புருஷர்களெல்லாம் அரசன் சபையில் நடக்கும் பாகவதத்தையும் ஸ்திரீஜனங்கள் இராணியின் மாளிகையில் நடக்கும் பாரதத்தையும் சிரவணஞ்செய்து வந்தார்கள். ஒருவருஷத்திற்குள் இரண்டும் முடிந்து புராணிகர்களுக்குச்சம்மானம் கிடைத்தது. அதன் பிறகு அரசனும் அவன் மனைவியும் ஒருவரை யொருவர் சந்தித்துத் தாங்கள்கேட்ட புராணங்களின் ஸாராம்சத்தைச் சொல்லத் தொடங்கினார்கள். இராணி தன்புருஷனைநோக்கி “தாங்கள் பாகவதம் கேட்டீர்களே, என்ன கற்றுக்கொண்டீர்கள் அதன் சாரத்தை அறிந்ீர்களா” வென்றாள்; அதற்கு அரசன் “ஸாரத்தை அறிந்துகொண்டேன். ஆனால் அதை உனக்கு சொல்லக்கூடாது” என்றான். இராணிக்கு அந்த சாரத்தை அறிந்துகொள்ளவேணுமென்னும் ஆசை அதிகமாயிற்று. எப்படியாவது அதைச்சொல்லவேண்டுமென்று புருஷனை மன்றாடிக் கேட்டாள். அரசன் உடனே அவளை நோக்கி கூறுகிறான். ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவான் 16000-ஸ்திரீகளைக் கலியாணம் செய்துகொண்டாரென்றிருக்கிறது. அவரைப்போல்நானுமோரரசன். ஆதலின் நான்மட்டும் ஒரு பெண்சாதியுட னிருப்பானேன். இன்னும் 15999-ஸ்திரீகளைக் கலியாணம் செய்துகொள்ளப் போகிறேன். இதுதான் நான்கேட்ட கதையின்சாரம். இந்த சாரப்படி அனுசரித்துப் பலனையடையப் போகிறேன்” என்றான். இராணிக்கு அப்போது மனது எவ்வண்ண மிருந்திருக்கும்.

“ஏட்டிக்குப் போட்டி” என்பதற்கிணங்க அரசன் வார்த்தைக்குத் தக்கபடி இராணியும் சொல்லத் தொடங்கினாள். நாதா! நீங்கள் பாகவதத்தின் சாரத்தை யறிந்துவிட்டீர்கள். நான் பாரதத்தின் சாரத்தை கிரகித்துவிட்டேன். அதென்னவெனில் திரௌபதி 5-பேர்களைக் கல்யாணம் பண்ணிக்கொண்டாள். நானும் அவளைப்போல் ஒரு இராஜகுமாரத்தி. ஆதலின் நானும் தங்களைத்தவிர இன்னும் நால்வர்களை மணம்புரியலாமென்றிருக்கிறேன் என்றாள். அரசனுக்கு அடங்காக் கோபமுண்டாயிற்று. இப்படி துர்ப்புத்தி யுண்டானதற்குப் புராணங்கள்தான் காரணமென்றும், இனி புராணங்களுக்கு அர்த்தம் கூறும் பிராமணர்களை என் தேசத்திலிருந்து துரத்திவிடுகிறேன் என்றும் கூறி, உடனே மந்திரியை அழைத்து அவனிடம் நிகழ்ந்த சங்கதிகளைச் சொல்லி நமது நாட்டைவிட்டு பிராமணர்களை ஓட்டிவிடு என்றான்.

“திருடனைக் கட்டியழுதாலும் முரடனைக்கட்டியழுவது கடினமாம்” என்றபடி அரசன் முரடனாயிருப்பதை நோக்கி மந்திரி ஓர் யுக்திசெய்தான். “ஸ்வாமி இன்றையதினம் எல்லோரையும் வரவழைத்து நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்குப் பதில் சொல்லாவிட்டால் உடனே உங்களுடைய இஷ்டப்படி புராணிகர்களை ஓட்டிவிடுகிறேன்” என, அரசன் அதற்குச் சம்மதித்தான். அன்று சாயந்திரம் ஊரிலுள்ளவர்களையெல்லாம் சபைக்குவரச்செய்து ஸமஸ்தானத்துப் புராணிகரை யழைத்து பாகவதத்தைப் பரிக்ஷித்துமகாராஜன் 7-நாள் கேட்டதால் மோக்ஷமடைந்ததாக நீர் சொல்லுகிறீர். நாங்களெல்லாம் ஒருவருஷம் கேட்டும் ஏன் எங்களுக்கு மோக்ஷம் கிடைக்கவில்லை. எங்களுக்கு மோக்ஷம் கிடைக்காமற் போனாலும் போகட்டும், பரிக்ஷித்தைப்போல் நமது அரசனும் ஓர் இராஜாவா யிருக்கும்போது அவருக்குக்கூட மோட்சம் கிடைக்கவில்லையே? இதற்கென்ன காரணம்? இந்தக் கேள்விகளுக்கு நீர் எட்டுநாளைக்குள் பதில் சொல்லாவிட்டால் உம்மையும் மற்ற புராணிகர்களையும் ஊரைவிட்டு ஓட்டிவிடுவோம் என்றான்.

“கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது” போல் புராணம் படிக்கப்போய் ஊரைவிட்டு ஓடிப்போகும்படி காலம்வந்ததே யென்று பிராமணன் ஏக்கமடைந்தான். வீட்டிற்குவந்து முடுமுக்காடிட்டுப் படுத்துக்

கொண்டான். கேள்விக்கு மறுமொழி சொல்லமுடியாமல் இவன் படுகிற அவஸ்தையைக் கண்டு புத்திசாலியான இவன் பத்னி அவனிடம் வந்து "நீங்களேன் விசனப்படுகிறீர்கள். இராஜசபையில் என்ன நடந்த"தென்றாள். பிராமணன் முதலில் இவள் பெண்பால் இவளிடம் சொல்லுவானேனென்று நினைத்துக் கடைசியில் துக்கசமாசாரத்தை எப்படியும் சொல்லியே துலைக்க வேணுமென்று அரசசபையில் நிகழ்ந்ததைச் சொல்லி விசனப்பட்டான்.

மகா புத்திசாலியாகிய அந்த ஸ்திரீ தன் விவேகத்தால் அக்கேள்விக்கு சமாதானமறிந்து, தான் அதற்குப் பதில் சொல்வதாய் அரசனிடம் தெறிவிக்கும்படி கூறினாள். அவ்வாறே புராணிகர்சென்று அரசனையழைத்துவர அவனைநோக்கி அந்த ஸ்திரீ கூறுகிறாள். "மகாராஜாவே! உம்முடைய சந்தேகத்தை நிவர்த்திபண்ணப்போகிற எனக்கு என்னகொடுப்பீர் என்றாள். அதற்கு அவன் எது கேட்டாலும் தருகிறேனென, இரண்டு நாழிகை வரை உம்முடைய சகல அதிகாரத்தையும் என்னிடம் கொடுத்துவிடும் என்றாள். அவ்வாறே அரசன் கொடுத்துவிட்டான். உடனே அவள் தன் புருஷனையும் அரசனையும் இரண்டு கம்பங்களில்சேர்த்து பெரிய கயிற்றினால் கட்டி அவர்களுக்கு எதிரில் திவ்யமான பலகாரங்களைக் கொண்டுவந்து வைத்து சாப்பிடும்படி உபசரித்தாள். அவ்விருவர்களும் ஆச்சரியமடைந்து "இதென்ன பரிகாசம்! எங்கள் கைகால்கள் கட்டப்பட்டிருக்கின்றன, நாங்கள் எப்படி பக்ஷணத்தை சாப்பிடக்கூடும்" என்றார்கள். உடனே அந்த ஸ்திரீ "இதுபோல்தான் உங்களுடைய மனம் சம்சாரபந்தத்தினால் கட்டப்பட்டிருக்கிறது. பாகவதசிரவணத்தால் கிட்டும் மோக்ஷமாகிற திவ்ய பலகாரத்தை உங்களருகாமையில்கொண்டுவந்து வைத்தும் நீங்கள் அதை சாப்பிட முடியவில்லை. ஸாக்ஷாத் பரிக்ஷித்துராஜன் உலக ஆசா பாசங்களை விட்டு திடச்சித்தனாயிருந்து பாகவதங்கேட்டார். அவருக்குச் சொன்னவர் நிர்மலசித்தராகிய சுகயோகி. தாங்கள் பாகவதம் கேட்கும்போது மனதை அந்தப்புரத்தில் வைத்திருந்தீர்கள். என்பர்த்தா அதற்கு அர்த்தம் சொல்லும்போது மனதை நீங்கள் கொடுக்கப்போகிற சம்மானத்தில் நாட்டியிருந்தார். இப்படியிருந்தால் உங்களிருவருக்கும் கோடிவருஷமானாலும் பாகவதசிரவணத்தால் மோக்ஷம் கிட்டுமோவென்றாள். இதைக்கேட்ட அரசன் ஞானவானாகி அன்றுமுதல் புராணத்தில் கொண்டிருந்த அவநம்பிக்கையை விட்டொழித்து பிராமணர்களைப்பூஜித்து வந்தான்.

---

## மத ஆராய்ச்சி.

(முன்தொடர்ச்சி.)

முக்கியமான எல்லாமதங்களிலும் (1) தத்துவசாஸ்திரம், (2) புராணம், (3) கர்மம் என மூன்றுவிஷயங்களுண்டு. ஓர் மதத்தின் கொள்கையும், முடிவான நிச்சயத்தையும் அதிக சூட்சமமாய் மிக்க ஞானமுள்ளவர்க்கே தெரியுமாறு கூறுவது தத்துவசாஸ்திரம். உலகம் இத்தன்மைத்தென்றும், ஜீவர்களின் சொரூபமும், ஈசுவரனது பிரபாவமும் அறியவேண்டுமானால் நாம் படிக்கவேண்டியது தத்துவசாஸ்திரம், இதையறிந்து கொள்வது எல்லாருக்கும் சாத்தியமில்லாததால் முன்னோர்கள் தத்துவசாஸ்திரத்தின் கருத்தைவைத்து ஈசுவரனது அவதாரங்களையும், அவனது அற்புதச்செயல்களையும் இது தவிர மகாபக்தர்கள், ஞானிகள் முதலானவர்களுடைய சரித்திரங்களையும், புராணங்களாக எழுதிவைத்தனர். இதை சாதாரண ஜனங்கள்படித்து ஓர் மதத்தின் உண்மையை ஒருவாறு உணரலாம். இப்புராணங்களானது தத்துவசாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளவிஷயங்களையே ஸ்தூலமாய் எளிதில் அறியும்படி தெரிவிக்கும். இன்னும் தெளிவாகவும் சுலபமாகவும் ஜனங்கள் அறியுமாறு கர்மமும் ஏற்படுத்தப்பட்டது. சிலகாலங்களைக் குறித்து அக்காலங்களில் இன்னவிதமாய் இன்ன இன்ன கர்மங்களை மனிதர்கள் செய்யவேண்டுமெனக் கூறுவது கர்மம். இக்கர்மானுஷ்டானங்களை யனுசரிப்பவன் தேகசுத்தி, தெய்வபூசை, பெரியோரிடத்தில் மரியாதை, அதிதிபோஜனம், ஏழைக்கிரங்கல், தானம், தவம், எக்ஞம் இவைகளைக் கவனிக்கவேண்டும். தத்துவசாஸ்திரத்தின் கொள்கைகளை மிகத்தெளிவாய் யாவரும் அறிந்து அனுபவத்தில் கொண்டுவரச்செய்யும் இக்கர்மத்தை அனைவரும் அவசியமாய் அனுஷ்டிக்கவேண்டியது. இது தவரின் புராணத்தின் உண்மையும் தத்துவசாஸ்திரத்தின் அபிப்பிராயமும் சாதாரண அறிவுள்ளவர்களுக்கு எளிதில் விளங்காது. தத்துவசாஸ்திரமானது எல்லா ஜனங்களுக்கும் பொதுவாயிருக்கிறதா? இல்லை. ஒவ்வொரு மதஸ்தரும் தனித்தனியே சாஸ்திரங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒருமதஸ்தர் தங்கள் மதசாஸ்திரமே மெய், அதை நம்பாதவன் கெடுவான் என்பார்கள். மற்றொருமதஸ்தர் "எங்கள் சாஸ்திரமே உண்மையில் உண்மை. அதை நம்பாதவர்கள் போகும்வழி நரகமே" என்று கூறுவார்கள். இன்னொரு மதஸ்தர் இதோடே நில்லாது தங்கள் மதம் கூறுவதுதான் சத்தியம், கடவுளே நேரில்வந்து சொல்லியது. அதை நம்பாதவர்களைக் கொலைசெய்தல் வேண்டுமென மிக்க கோபமாய்ச்சொல்லுவார்கள். இம்மாதிரியே புராணங்களும் வேறுபட்டுக் கிடக்கின்றன.



ஒவ்வொரு மதஸ்தரும் தங்கள் புராணங்கள் கூறுவதெல்லாம் நிஜமாகநடந்தவைகள். புறமதத்தைச்சேர்ந்த புராணங்கள் சொல்லுவதெல்லாம் கட்டுக்கதையென்று எளிதாகக் கூறுவார்கள்.

இம்மாதிரியே கர்மானுஷ்டானங்களும் பேதப்படுகின்றன. எல்லாஜனங்களுக்கும் ஒரேவிதமான கர்மானுஷ்டானம் இல்லை. இப்படியிருப்பதினால் ஜனங்களெல்லாரும் அனுசரிக்கத்தக்க ஒருபொதுவான மதம் இல்லையெனவே தோன்றுகிறது. ஆனால் பொதுவாக எல்லாரிடத்திலும் ஒன்றிருக்கிறது. அதுவென்ன? நாம் எல்லாரும் மனிதர்கள்தான். ஆனபோதிலும் நாமெல்லோரும் ஒரேஸ்திதியில் இல்லை. சிலர் அதிக தேகவலிவோடிருக்கிறார்கள். சிலர் பலங்குன்றி சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். சிலர் அதிக புத்திமான்களாயும் சிலர் மந்தபுத்தியுடையவர்களாயுமிருக்கின்றனர். ஒருவர் முகம்போல் மற்றொருவர்முகம் இல்லை. இரண்டு முகங்களை ஒரேமாதிரியாய்ப் பார்த்ததே கிடையாது. ஆனால் எல்லாரும் மனிதர்களே. மானிடத்தன்மையில் எல்லாரும் ஒன்றுதான். மானிடத்தன்மை யென்பது யாது? அதுதான் தெரியவில்லை. ஆண், பெண், கருப்பு, சிவப்பு என்கிற வித்தியாசங்களை நீக்கிப் பார்த்தாலும் மானிடத்தன்மை என்பது புலப்படவில்லை. அது இப்படியிருக்கிறதென்று நினைக்கவும் முடியவில்லை. ஐம்புலன்களால் அறியக்கூடாததாயிருக்கிறது. ஆனால் மானிடத்தன்மை இருப்பது நிச்சயம். ஏதோ ஒன்று பொதுவாய் எல்லாரிடத்திலும் சமமாயிருக்கிறது. ஏதாவது மனிதர்களிடத்து பொதுவாய் ஒன்று நிச்சயமாயுண்டென்றால் அது அம்மானிடத் தன்மையேயாம். வேறன்று. ஆனால் அது நமக்குத்தெரியவில்லை; அதாவது நமக்கு நாமே இன்னாரென்று தெரியவில்லை. நமக்குத் தெரியாததாய் எல்லாரிடத்திலும் சமமாய் ஏகமாய் விளங்குவதுதான் கடவுள்.

கடவுளைக் கண்ணால்கண்டவர்கள்யார்? மனதினால் இப்படியென்று அறிந்தவர்கள்யார்? ஒருவரும் இல்லை. ஆனால் நாமிருப்பது கடவுளிடத்திலேதான். கடவுள் மூலமாகத்தான் நாம் உலகத்தைக்காண்கிறோம். கடவுளிருப்பது சத்தியத்திலும் சத்தியம். ஐம்புலன்களுக்கும் அவைகளுக்கு ஆதாரமான மனதிற்கும் எட்டாதவரானபடியால் கடவுளைக்காண முடியவில்லை. எங்கும் வியாபித்து எல்லாவற்றிலும் சமமாய் இருக்கும் கடவுள்தான் எல்லாஜனங்களுக்கும் பொதுவாகவுள்ள விஷயம். சிலர் கடவுளில்லையென்று நாஸ்திகவாதம் செய்யினும் அவர்களிடத்திலும் கடவுள் உண்டு. கடவுளில்லாதவிடமில்லையன்றோ? கடவுள் என்னும் தத்துவம் பிரவேசியாதமதம் கிடையாது. ஆதலால் எல்லாமதத்திற்கும் பொதுவாக உள்ளது கடவுள்தான். ஓர் மணிச்சரட்டில் நூல்புகுந்திருப்பதுபோல் உலகத்திலுள்ள எல்லாவஸ்துக்களிலும் கடவுள் பிரவேசித்திருக்கிறார். நூலில்லாமல் மணிச்சரடாகாதென்பது திண்ணம். அதுபோல் கடவுளில்லாமல் உலகமில்லை. மணிச்சரட்டிலுள்ள அனேகமணிகளைப்போல் உலகத்தில் அனேக மதங்களும் பிரிவுகளும், வேறுபாடுகளும் உண்டாயிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் ஆதாரமாய் உள்புகுந்திருப்பது கடவுள்தான். இதையறிந்தவர்கள் சில ஜனங்கள். அறியாதவர்கள் பலர். அவர்களிருப்பதும், பார்ப்பதும், வேலைசெய்வதும் எல்லாம் கடவுளிடத்தில்தான். கடவுளிப்படிப்பட்டவரென்று வாக்கினால் சொல்லமுடியாது.



உலகம் எவ்வளவுவித்தியாசமாகத் தோன்றினும் அதில் பேதமின்றி எங்கும் சமமாயுள்ளவஸ்து ஒன்றுண்டு. இதுதான் உலகத்தில் ஆச்சரியம். மனிதர்களாகப் பார்க்கும்போது எல்லாரும் ஒன்று. ஆனால் மனிதர்களில் புருஷன்வேறு, ஸ்திரீவேறு. உயிருள்ள ஜீவர்களாக நோக்கும்போது, மனிதனுக்கும் மிருகத்திற்கும் வித்தியாசமேயில்லை. ஆகையால் உயிருள்ள ஜீவர்களாகப் பார்க்குமிடத்து புருஷன் ஸ்திரீ மிருகம் செடிகள் எல்லாம் ஒன்றாகவேயிருக்கின்றன. பேதமேகாணோம். உலகத்தில் சத்தாயுள்ள வஸ்துக்களாக நோக்கும் காலத்து புருஷன் ஸ்திரீ மிருகம் செடி, மண், கல், மலை எல்லாம் ஓர்வித்தியாசமின்றி ஏகஸ்திதியில் தானிருக்கின்றன. உள்ளது அல்லது இருப்பது அதாவது சத்து என்கிற வஸ்துதான் கடவுள். அக்கடவுளிடத்தில் நாமெல்லாம் ஒன்று. உலகத்தில் நாமெல்லாம் வெவ்வேறாய்த் தோன்றுகிறோம். உலகத்தில் இந்தவித்தியாசம் இருந்தேதீரும். உலகம இருக்கவேண்டுமேயானால் வித்தியாசங்களுமிருக்கவேண்டும். உலகவியாபாரத்தில் வித்தியாசங்களில்லாமலிருந்தால் ஒருவேலையும் நடக்காது. என்றைக்கு எல்லாஜனங்களும் ஒரேகர்மத்தை யனுஷ்டித்து, ஒருசாஸ்திரத்தையே யனுசரித்து, ஒரேமனதுடையவர்களாய் அக்கடவுளைத்தவிர வேறே உலகம் கிடையாதென அறிந்து தெளிந்து விடுகிறார்களோ, அன்றையதினம் உலகத்திற்கு அழிவுநாளென்று நிச்சயமாய் அறியலாம். ஆகையால் உலகம் உள்ளவரையில் வித்தியாசங்களும் மதவேறுபாடுகளும் தோற்றமாத்திரமாயிருக்கும். புத்திசாலிகளாயுள்ளவர் தோற்றப்பொருளை சத்தியப்பொருளாக பிரமித்து நம்பாமல் தோற்றமாயிருக்கும் உலகத்தையும் அதனது வித்தியாசங்களையும் விசாரித்தறிந்து, சத்தியமாய் மாறுதலில்லாமல் எங்கும் சமமாயுள்ள ஏகவஸ்துவை யறியவேண்

டும். சத்தியமான ஒருவிஷயத்தை புத்திமான்கள் பலவிதமாக ஜனங்களுக்குப் போதிப்பார்களென்றும் அறியவேண்டும். ஒரேவஸ்து நோக்கும்பேதத்தால் பலவஸ்துக்களாகத் தோன்றலாம். ஆனால் உள்ளவஸ்து ஒன்றே. உதாரணமாககாலையில் சூரியன் உதயமாகும்போது பார்த்தால் ஓர் பெரிய உருண்டைவடிவாகத் தோற்றுகிறது. அப்போது ஒருமனிதன் சூரியனை சிலகருவிகளால் ஓர்புகைப்படம் எடுக்கிறான். மறுபடியும் இரண்டுமணிநேரத்திற்கெல்லாம் மற்றோர்படமும், இம்மாதிரியே சாயந்திரம் வரையில் இரண்டுமணிக்கு ஒருதரம் புகைப்படங்கள் அநேகம் எடுக்கிறான். எல்லாபடங்களிலும் சூரியனது உருவம் ஒரேமாதிரியாக இராமல் பலமாதிரிகளாகவே தோன்றும். ஆனால் சூரியன் ஒன்றே. அதுபோல் சாஸ்திரங்கள் உயர்ந்ததாயும் அல்லது தாழ்ந்ததாயும்; புராணங்கள்மெய்யாயும் அல்லது பொய்யாயும்; கர்மங்களும் ஆசாரங்களும் சீர்திருந்தினவைகளாயும் அல்லது சீர்கெட்டவைகளாயும்; எப்படியிருந்தபோதிலும், எல்லாம் ஒரேகடவுளை யாதாரமாகக் கொண்டு அக்கடவுளை நோக்கிச்செல்லுகின்றன. பலவிடங்களில் நின்று பலகாலங்களில் ஒரேசூரியனுக்கு வித்தியாசமுள்ள பலபடங்கள் எடுத்தாப்போல, ரிஷிகளும், மகான்களும் அவரவர் இருந்தவிடத்திற்கும் காலத்திற்கும் ஏற்றவாறு ஒரேகடவுளினது சொருபத்தையும் வியாபகத்தையும் பலவிதமாகச்சொல்லி அக்கடவுளையறிந்துய்வதற்கு உபாயமாக பல சாஸ்திரங்களையும், புராணங்களையும் ஏற்படுத்தினார்கள். ஆற்றுநீர்கொண்டுவர ஒருவர்குடத்தையும் ஒருவர் தவலையும் ஒருவர் சிறியசொம்பையும், இப்படியாக பலவிதமான பாத்திரங்களை எடுத்துக்கொண்டு சிலர் ஆற்றுக்குச் சென்றார்கள். எல்லாரும் தங்கள் தங்கள் பாத்திரங்களில் நீரை நிரப்பிக்கொண்டார்கள். குடத்திலிருந்த நீர்குடத்தினுருவமாகவும், தவலையிலிருந்தநீர் தவலையினுருவ மாகவும் நின்றது. மற்றபாத்திரங்களிலிருந்தநீர், அந்தபாத்திரங்களின் உருவமாகவே தங்கிற்று. குடத்துநீரென்றும் தவலைநீரென்றும் சிறுசொம்பு நீரென்றும் அவர்கள் பெயரிட்டார்கள். வித்தியாசமின்றி ஒரேவிதமாய் ஆற்றில் ஓடிக்கொண்டிருந்தநீரானது பலரூபத்தையும் பலபெயரையும் அடைந்தது. பலரூபமும் பெயருமடைந்தபின்னும் வாஸ்தவத்தில் உள்ளது ஆற்றுநீர்தான். அந்தபாத்திரங்களிலிருந்த நீரையருந்தினவர்கள் ஆற்றுநீரைக் குடித்ததாக எண்ணினார்களே யல்லாமல் வேறில்லை. அதுபோல் அந்தந்த ஊர்களில் அந்தந்த புத்திமான்களுக்கு இருந்த மனோசக்திக்குத் தகுந்தவாறு எழுதிவைத்த சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் பேதமிருப்பினும், சொல்லும்விதம் பலவாக விருப்பினும், அவைகளெல்லாம் ஒரேமுடிவைக்கருதி கூறுகின்றனவென்று நாம்நன்றாய் அறியவேண்டும். இப்படி யறியின் மதச்சண்டைகள் ஒழிந்துபோகும். சகோதர வொற்றுமையும் உண்டாகும். பொதுவான மதத்தையொழுகவேண்டுமானால் ஒன்றினுங்குற்றங்கூறாது எல்லாம் முடிவில் சரியென நன்றாக அறிந்து, எந்த மதத்தில் பிறந்தாலும் அந்தமதத்தைவிடாது அனுசரித்து உண்மைதெளிந்து பொதுவாக எல்லாருக்கும் போதிக்கவேண்டும்.

(இன்னும்வரும்.)

## ஔவையார் சரித்திரம்.

(முன்தொடர்ச்சி.)

ஒருநாள் ஔவையார் காடுகளு மலைகளு மடர்ந்த ஓர் கானகத்தின்வழியே போய்க்கொண்டிருக்கையில்சுப்பிரமணியர் ஔவையாரை யேமாற்றிப் பரிகாசம்செய்ய நினைத்து, ஒருமாட்டுக்காரப் பையன் வேடம்தரித்து ஓர் நாவல்மரத்தின் மேலேறிப் பழங்களைப் பறித்துத் தின்றுகொண்டிருந்தார். ஔவையாரும் நடந்துபோன ஆயாசத்தால் அம்மரத்தடியில்வந்து உட்கார்ந்து மரத்தின்மேலிருக்கும் மாயோனுகிய மாட்டுக்காரப்பையனைப்பார்த்து "அடாதம்பி! எனக்கு அதிக ஆயாசமாயிருக்கிறபடியால் கொஞ்சம் நாவற்பழம்பறித்துப்போடு" என்றுகேட்டார். அதற்கு அந்தப்பையன் "ஓ கிழவியே! உனக்குச்சுடுகிற பழங்கள்வேண்டுமா? சுடாதபழங்கள்வேண்டுமா? சொல்" என்றான். அதைக்கேட்ட ஔவையார் ஆச்சரியப்பட்டு நாவற்பழத்தில் சுடுகிற பழமுமிருக்குமா வென்றுலோசித்து ஒன்றுந்தோன்றாமையால் "அப்பா! சுடுகிறபழம் எனக்குவேண்டியதில்லை, சுடாதபழந்தான்வேண்டு" மென்றார். உடனே பையன் மரக்கிளைகளைக் கையால்பிடித்துக் குலுக்கிவிட்டான். அதிலிருந்து கனிந்தபழங்களும் கனியாத பழங்களும் கீழேயுதிர்ந்தன. அப்போது ஔவையார் கனிந்தபழங்களில் சிலவற்றைப் பொறுக்கிப் பார்த்து அவைகளில் கீழிருந்தமணல் ஒட்டிக்கொண்டிருந்தபடியால் அதைவாயினல் ஊதினார். அதைப்பார்த்த மாட்டுக்காரப்பையன் "ஓ கிழவியே! நீ சுடாதபழம் கேட்டவள் சுடுகிறபழத்தை தின்னப்போகிறயே, வாய்வெந்துவிடப்போகிறது, நன்றாக ஊதியாறினபின்னர் சாப்பிடு" என்றான்.

ஔவையார் அப்போது சுடாதபழம் காயென்று தெறிந்துகொண்டு இக்கருத்து முன்னமே நமக்குத்தெரியாமற்போயிற்றே என்று வெட்கமுற்று பின்வரும் வெண்பாவைப் பாடினார்.



"கருங்காலிக் கட்டைக்கு நாணுக் கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்—பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்றோற்ற
திரிரவுந் துஞ்சாதென் கண்."

இதன்கருத்து என்னவென்றால் கருங்காலி மரக் கட்டைகளை அஞ்சாமல் துண்டு துண்டாக வெட்டக்கூடிய கோடாலியானது, கையாலொடிக்கத்தக்க வாழைத்தண்டுகளைவெட்ட அதன்முனை மழுங்கி நாணுமல்லவா? அதுபோல சிறந்தவித்துவான்களும் அஞ்சும்படியான நான் இப்பெருங்கானகத்தில் எருமை மேய்க்கிற சிறுபையனுக்கு தோற்றபடியால் இனி இரண்டு இராத்திரிக்கென் கண் நித்திரை செய்யமாட்டாது என்பதாம்.

இவ்வாறு மேற்குறித்த வெண்பாவைப் பாடிய பிறகு மனதாராமல் உலகத்தாரையும் நோக்கிப்பாடிய வெண்பாக்கள் கீழ்வருவன.

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்றகலை மடந்தை யோதுகிறாள்—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந் தன்கையா லெண்சாண்.

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்-வாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லார்க்கு மொவ்வொன் றெளிது.

இவ்வெண்பாக்களைக் கேட்டவுடனே மாட்டுக்காரப் பையனாகவிருந்த சுப்பிரமணியசுவாமிகள் ஔவையார்பேரில் கருணைசொரிந்து தம்முடைய நிஜரூபத்துடனே மரத்தைவிட்டிறங்கி ஔவையார் கரங்களைப் பிடித்துக்கொண்டு நான்உம்முடன்விளையாட வந்ததேயன்றி உலகத்தில் உமக்குச் சமானமானவர்கள் ஒருவருமில்லை. ஆகையால் நீர்சந்தோஷமாக விருமென்றுசொல்லி உம்முடையவாக்கால் உலோகோபகாரமாக முக்கியமான நீதிகளை வெளிப்படுத்தவேணுமென்று எனக்குள்வெகுநாளாக இஷ்டமிருப்பதால் அவைகளைச் சொல்லவேண்டுமென அப்போது ஔவையார் அஃதென்னவென்றுவினவ, சுப்பிரமணியர் உலகத்தில் கொடியது, இனியது, பெரியது, அரியது இன்னின்ன தென்றுரைக்க வேண்டுமென அவ்வண்ணமே யாகட்டுமென்று ஔவையார் அருளிச்செய்த அகவல்கள்.

### கொடியது.

கொடியது கேட்கில் நெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றொணக் கொடுநோய்
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினுங் கொடிது கொடிது கொடிது
இன்புற வவர்கையி லுண்பது தானே.

### இனியது.

இனியது கேட்கில் தனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்த மினிது
அதனினு மினிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறிவினர் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள் ளோரைக்
கனவிலும் நனவிலும் காண்பது தானே.

### பெரியது.

பெரியது கேட்கில் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகனோ கரியமா லுந்திவந்தோன்
கரியமாலோ அலைகடல் துயின்றோன்
அலைகடலோ குறுமுனிகையி லடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலை பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர்பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம்பெருமையைச்சொல்லவும்பெரிதே.

### அரியது.

அரியது கேட்கில்வரிவடி வேலோய்
அரிது அரிது மானிடராதலரிது
மானிடராயினுங் கூன்குருடுசெவிடு
பேடு நீங்கிப் பிறத்தலரிது
பேடு நீங்கிப் பிறந்தகாலையும்
ஞானமுங் கல்வியு நயத்தலரிது
ஞானமுங் கல்வியு நயந்தகாலையும்
தானமுந் தவமுந்தான் செயலரிது
தானமுந் தவமுந்தான் செய்வாராயின்
வானவர் நாடுவழி திறந்திடுமே.

(இன்னும்வரும்.)

## பக்தி சங்கிரகம்.

எடுத்தற்கரிதாகிய இம்மானிடப்பிறவிதேவரினுஞ் சிறந்தவராவர். என்னையோவெனின்; இஷ்டகாமசுகானுபோகங்களை யிச்சித்தல்லல் படும்தேவர்களைவிட தனு, கரண, புவன, போகாதிகளைச் சார்ந்த தர்ம, காம, அர்த்த, மோக்ஷவாசிகளாக பாத்தியப் பட்டவர்களா யிருக்கிறார்கள்.

சீவேசுரன் ஜெகச்சால மித்யாரூப கற்பிதங்களில் காலத்திரயா பாத்தியமாய் சற்புத்தியொழிந்துவிவகாரம் பூண்டு, விளங்கும் உண்மை யுணர்ச்சியடையப்பெறாது கர்மகாலானுகூலமாய் பார்த்வ விச்சிகபாவ பரம பண்டிதர்களாய்விளங்கி, "உலகாயுதம், பௌத்தம், சமணம்" ஆதியதுர்மத பிரவிஷ்டர்களாய், ஏறக்குறைய ஆயிரத்தெட்டு மதஸ்தர்கள்விரிந்து அவ்விபரீதானுஷ்டானங்கள் மேலிட்டு வரம்பிகந்த மாண்பில்வதியும் மதிசூக்குமக்கிராஹ்யர் போலும் சொப்பன தேர்ச்சியினராய் அதோகதியடைந்து போகாமல் மெய்யன்புடன்கனிந்து அருட்டிருவுருவாங் குருமூர்த்தமாக எதிரிற்றோன்றி மும்மலதீவினைகளை யகற்றும் பரமசாம்பிராஜ்பகற்பகத் தருவாகிய தனிப்பெருங் கருணைவள்ளலின்தண்ணருட்டாமரை நீழலில் சேர்வதே ஞானம்.

யோகேத்தியாதிகளால் கிடைத்தற்கரிதாகிய நித்தியானந்த மோக்ஷசாம்பிராஜ்ய பதவியைப்பெற்று பிறப்பாழியை நீந்தி, பரமமுக்தனாக மாட்டான். எவ்வாறெனின்; போசனபாகத்துக்கு விறகுமுதலான சாமான்கள் குறைவற விருந்தாலும், எப்படி நெருப்பில்லாவிடில் போசனமாகாதோ? அவ்வாறு; ஞானமில்லா பாமரன் மோக்ஷகைவல்ய சுகத்தை அடைய மாட்டான் என்பது துணிபு. ஜீவேஸ்வரன் அடைய வேண்டிய அர்த்தமென்னையோ வெனின்; வீடு என்னும் பொருளாகவேமுடியும். இகத்தில் மாயாசம்பந்தவிடய ஞானங்களில் மனம் லயப்பட்டு, மாடு, மனை, மக்களைச் சதமென எண்ணி நாளெல்லா நாட்டின் மிசைதிரிந்து, சத்விடய ஞானமிழந்து, மதிமந்தர்களாய் கர்மத்தாற்கிடைத்த தேகத்தையிழந்து, அள்ளலாதி இருபத்தெட்டுகோடி நரகங்களிலமிழ்ந்து, குயவன் திகிரிபோல் சனனமெடுப்பதும் இறப்பதுமாக யிருக்கிறார்கள்.

அன்றியும்; இகத்திலடைந்த சரசலீலாசுகபோகங்களாலும் திருப்திபெறுவது துர்லபமாகி, பரத்தில்தேவபோகத்தை இச்சித்து கர்மயோக வெக்கிய யாகாதிகளை யியற்றி அப்பதவியைப் பெறுகிறார்கள்.

அவ்விந்திரபோகம் எப்பேற்பட்டது என்று ஆயப்புகின் சப்தரிஷிகள் மஞ்சத்தை தோளமைத்து சதிபாலனாகும் பெரும் பாக்கியத்தைப் பெற்றிருப்பார்கள். இவ்வித சுகபோகத்தை பலவிதத்தும் யாதொரு இடுக்கணின்றி ஈசுவர சங்கல்பானுகூலத்தா லடைந்தனனெனினும், ஆதியில் கவுதமவிருடியின் காதலியின் வேட்கையால் ஆக முழுவதும் பகப்புண்ணானான்.

கேவலம் யாதொரு பலனுமின்றியிருக்கும் அவலமான சிற்றின்பத்தை யனுபவிப்பதினும் திருப்தியடையாதவன் பலரேச்சுக்கு பாத்திரமான புலாலையிச்சிக்கும் தாலப்பாலுண்டு மதிமருண்டு திரியு மடையர்கள் பலர் நகைக்க, வதினத்திற் காந்துமிழவுந் தனது துர்புத்தியை விடாமல் திரிபவன்போலாம்.

குக்கலானது தான் குப்பைமிசையுறங்குந் தறுவாயில், இனி மலம் புசிக்கப்படாது, உச்சிட்டமுண்ணப் போகாது, நாலை தொங்கவிட்டோடி திரியக்கூடாது, தங்குலத்தாரைக் கண்டு குரைக்கலாகாது என சற்புத்திகளை யடைந்துள்ளங் கனிந்து எழுந்தமேல் தனதுடலை குலுக்கி தூசுகள் நீங்கினவுடன் பண்டுவினைபூண்டுதிரியும்வாறு, சிற்றின்பத்தாலடையு மிடுக்கண்கண்டபோது பலவிதமான சத்விடயமான வெண்ணமிட்டு, மங்கையரைக் கண்டவுடன், எதிர்காலவியல்பை நோக்காது பலவித அவமதியடைகிறார்கள்.

சில்லோர் ஞானத்துக்கு ஆதாரங் கல்வியே என காமநூல்களைக் கற்றறிந்தும், பலவிதமான மனசமாதானத்துடன் நீங்காதுயரத்தையுடைய சிற்றின்பபோகாதிகளை யநுபவிக்கிறார்கள். கல்விகற்றதாற்செருக்குற்றுதான் நடக்கிறது ஞானாதமெனவெண்ணி அலைகின்றனர். திருஷ்டாந்தமாக தருமபுரி என்னும்நகரில்பரமன் என்னும் சுஞ்ஞானி ஒருவரிருந்தார். அவரிடம் பனிரண்டு வருடகாலமாய் ஊழியம்புரிந்துக்கொண்டிருந்த சாத்மீகன் என்பவன் சுருதிஸ்மிருதி இதிகாசபுராணங்களை கசடாவுணர்ந்து பக்குவமடைந்தும், அகங்காரமமகாதிகளால் கிஞ்சித் தன்னைமறந்திருக்குந் தன்மையால் உபதேசத்திற் குரித்தானவனாகவில்லை. நாம்பனிரண்டாண்டு சற்குருசேவைசெய்து தத்துவஞானங்களை தெளிவறவுணர்ந்தும் நமக்கு சற்குருவுபதேசங் கைகூடாத காரணமென்னையோ வென வையமுற்றிருப்பதை "அகத்தினழகு முகத்தில் விளங்கும்" என்பதைப் போல் கண்டறிந்து பரமகுரு தனது மனையாளை விளித்து சாத்மீகன் வெளியேசென்றிருக்கின்றனன். வருந்தருணமாயது. கதவைதாளிட்டு வருவாயென ஆக்யாபித்தவண்ணம் கதவைதாளிட்டு வைத்தனள்.

என்றும் யாதொரு தடங்கலின்றி மனையுட்புக்குமாணாக்கன் ஆச்சரியமுற்று, இதென்னபெரும்விசேடமாயிருக்கிறது. நமதுகருத்தை எவ்வாறோ வாசான் கண்டுவிட்டார். எனமதித்து, கதவை திறக்கும்படி கூவ, சற்குரு யாரெனவினவ; சீடன்நான்தான் சாத்மீகன் என்றான்.

கேட்டசற்குரு, நீபக்குவத்தை அடைந்தாயில்லை செல் என விடையளிப்ப; சீடன் ஏது நாம்மிகபக்குவியாய் விட்டோமென கருதியிருந்தோம். அபக்குவி என



அவமதித்தாரே என எண்ணாதுமெண்ணி நாம்கதவை திறக்கும்படி செப்பப்போகாதா? என்னவோ நாளைய தினம் அவ்வாசானது மனையின்வாயற்படியில் காப்பதே கடனென அடுத்ததினஞ்சென்று, காத்திருந்தான்.

உணர்ந்த பரமகுரு சாத்மீகனைவிளித்து இன்னம் பக்குவமடைந்தாயில்லை என, பின்னும் விசனங்கூர்ந்து தன்மனையணுகி பலவாறு சிந்திக்கலானான். நாம் சென்று கதவைதிறக்கும்படி கூவாதிருந்ததினால் தீவரனாகினேனில்லை. நாளையதினஞ்சென்று அழைப்போமெனவிருந்தான்.

அடுத்தநாள்சென்று கதவைத்தட்ட, கேட்டகுரு யாவரெனவிளிப்ப; 'நான்தான் சாத்மீகனென' கேட்ட வாசான் இன்னும் பக்குவதிசையடைந்தாயில்லை என; சீடன்விசனமடைந்து, இதென்ன விந்தையா யிருக்கிறது. இப்படிகேட்டு பக்குவமடையவில்லை என்கிறாரே இந்தவார்த்தையில் என்ன சூதிருக்கிறது. பார்ப்போம். ஒன்றுந்தோன்றவில்லை என அடுத்தநாளும் சற்குரு இல்லத்தைச்சார்ந்து முன்போல் கதவையிடித்தான். சற்குரு யாரென உசாவ, சீடன் 'சாத்மீகன் வந்திருக்கிறேன்' என இன்னும் பக்குவமடைந்தாயில்லை என்றுகூற பின்னும், சீடன் துயரமடைந்து உலகத்தில் ஒருவனைவிட்டும் நீங்காதன்னவன் புத்தியில் செம்பிற்களிம்புபோல நீங்காதிருப்பது அகங்காராபிமான மன்றோ? இது துறந்தவன் அன்றோ சற்சீடனாகிறான் என கருதி அடுத்தநாள்சென்று முன்போல கதவையிடித்து கூவினான். கேட்டபரமகுரு யாரெனகேட்ப; ஸ்வாமி 'சாத்மீகன்' என கதவைதிறந்து அன்னவனது பரிபக்குவ நிலையைப்பரிசோதித்து, உபதேசித்தார்.

உபதேசத்தைப் பெற்றுக்கொண்ட சாத்மீகன் பின்னுமடிவணங்கி, ஸ்வாமி, தேவரீரிடம் பனிரண்டாண்டுகளாய் தொண்டுபுரிந்து வந்திருக்க, பக்குவதிசையில்லை எனபகர்ந்ததென்னையோவென, குரு! குழந்தாய் நல்லவாசானெனப்பட்டவன் மானிடச் சிறப்பினனாம். இச்சிறப்பின் சனனப்பகுப்பையும், சச்சிதானந்தகடவுளின் தன்மையைப்போதிக்கும், "முதல்வழிச்சார்பு" நூலாஞ் சாத்திரங்களையும், மதங்களையும், சமயாசாரியர்களையும், கிரந்தகர்த்தர்களையும், அவ்விதப் பிரயத்தனங்களைக்கற்கும் "போதகாசாரியர்தன்மை" ஞானவழியிலே புளியம்பழத்தோ டெனவிருப்பர்.

தன்னிடத்தில் மட்டில்லாதுகூடி அனேகவருடங்களாய் புடைசூழ்ந்து நின்றபக்குவிகளைத்தேர்ந்துபதேசித்த ஒருகதை கேட்பாயென சொல்லதுவக்கினார்.



## மனோகரன்.
(முன்தொடர்ச்சி.)

சத்தியபுரியிலிருந்து அநேகதூதுவர்கள் வெளிதேசத்தரசர்களுக்கு கடிதங்கள் கொண்டு போனார்கள். சிலநாள் சென்றன. ஒருவரும் குழந்தை என்னுடையதென்று வரவில்லை. சிலமாதங்கள் கழிந்தன. என்குழந்தைதானிதுவென்று ஒருவராவது சொல்லவில்லை. சிலவருஷங்களும் சென்றன. குழந்தைக் குரியவர்கள் இன்னாரென்றேற்படவில்லை. விவாகம்நடந்த இரண்டு வருஷத்திற்குள் சந்திரசேகரரின் மனைவியாகிய இரதியென்பவள் சந்திரசூடனென்னும் புதல்வனைப் பெற்றாள். புத்திரனைப்பெற்ற இரண்டு வருஷத்திற்குள் இரதியானவள் சுந்தரியென்னும் அழகுவாய்ந்த ஓர் பெண்ணையுமீன்றனள். சந்திரசேகரர் தன்னிருகுழந்தைகளையும் அருமையாய் வளர்ப்பதுபோலவே மனோகரனையும் அன்புடன் வளர்த்துவந்தார். மனோகரன், சந்திரசூடன், சுந்தரி ஆகியமூவர்களும் ஓரேவிதமான உணவையுண்டு, விலையுயர்ந்த வஸ்திரங்களை யணிந்து, ஓரேவிதமான படுக்கையில்படுத்து எல்லாவிதசதிலும் ஏற்றக்குறைவின்றி வாழ்ந்துவரக் காண்போர்கள் மனோகரனும் சந்திரசேகரரின் புத்திரன்தானென்று நினைப்பார்கள். சந்திரசூடனும் மனோகரனும் எப்போதும் ஒன்றாய்க்கூடி விளையாடுவார்கள். ஒரேகாலத்தில் அவர்களிருவரும் உண்டு, விளையாடி, உறங்கி இணைபிரியாத சகோதரர்கள்போலிருந்தார்கள். அக்ஷராப்பியாஸமானவுடன் இருவரும் நல்ல உபாத்தியாயரிடத்துச்சென்று படித்து க்ஷத்திரியவமிசத்திற் கேற்ப வில்வித்தை முதலானவைகளைக் கற்றுவந்தார்கள். இருவரும் ஒரு உபாத்தியாயரிடத்து வித்தைகற்றாலும் ஓரேமாதிரியாகவே அவர் இவர்களுக்குப் போதித்தபோதிலும், மனோகரன் அதிகசீக்கிரமாயும் சூக்ஷமமாயும் வித்தைகளைக்கற்றுக் கொண்டபடியால் உபாத்தியாயர்க்கு மனோகரனிடத்தில்தான் அதிகபிரியமுண்டு. மனோகரன் பெரியோர்களைக்கண்டால் அதிகமரியாதையுடன் விசாரித்தும், எளியோரைக்கண்டால் அவர்களுக்கு மனமிரங்கியும், மதபாஷியாயும் சாந்தமாயுமிருப்பதால் கண்டவர்யாவரும் அவனிடத்து அன்புபாராட்டுவார்கள். அவனைக் காணும்போது எல்லாருக்கும் அவனிடம் ஏதாவது பேசவேண்டுமென்ற இஷ்டமுண்டாகும். அவனுடைய ஆழ்ந்தகருத்தையும் கூர்மையான புத்தியையும் கண்டவர்கள் அவனை வியந்து பேசாமலிரார்கள். மனோகரன் உபாத்தியாயரிடத்துப் போய்ப்படித்து வீட்டிற்குவந்தவுடன் தன்சகோதரி என்று எண்ணிவந்த சுந்தரிக்குத் தமிழ்பாஷைகற்பிப்பான். சுந்தரி அதிசபுத்திசாலியாத

லால், அதிசீக்கிரத்தில் எடுத்தபுத்தகங்களை வாசிக்கவும், நன்றாய் எழுதவும் கற்றுக்கொண்டாள். அவளது தகப்பனார் அவளுக்குவீணை கற்பிக்கும்படி ஏற்பாடு செய்தார். சுந்தரிசிலவேளைகளில் மனோகரன்சொல்லிய வண்ணம்படித்தும் சிலவேளைகளில் வீணைவாசித்தும் காலத்தை இனிதாகக்கழிப்பாளேயன்றி வீணுக்கமாட்டாள். ஒருநாள்சாயந்திரம் இரதியானவள் தன்புத்திரியைப்பார்த்து, சுந்தரி! கொஞ்சம்வீணை வாசிக்கிறாயா? என்றுகேட்டாள். அம்மா! முத்தண்ணாவரும் வேளையாச்சுது. என் பாடங்களைச் சரியாகச்சொல்ல இப்போதுபடித்துக் கொண்டிருக்கிறேன். இராத்திரிக்கு வீணைவாசிக்கிறேனம்மாவென்று சுந்தரிபதில் கூறியதைக்கேட்ட இரதிமிகவும் ஆனந்தங்கொண்டு, படிப்பு விஷயத்தில் சுந்தரிக்கு இருக்கும் ஆசையையும், அவளுக்கு மனோகரனிடத்திருக்கும் பயத்தையுங் கண்டு வியந்து சென்றாள்.

உடனே மனோகரனும் சந்திரசூடனும் உபாத்தியாயரிடத்துப் பாடங்கேட்டு வீட்டிற்கு வந்தார்கள். மனோகரன்வந்ததைக்கண்டு சுந்தரி வழக்கம்போல் தன் புத்தகங்களை யெடுத்துக்கொண்டு அவனிடம் சென்று நிற்க, என்னசுந்தரி! இன்றையபாடம் நன்றாய்த்தெரியுமாவென்று மனோகரன்கேட்டான். ஆகாதெரியுமென்றுசொல்லி பாடங்களையெல்லாம் சுந்தரி ஒப்பித்தாள். மனோகரன்மிகவும் சந்தோஷங்கொண்டு அதைவெளியில் காட்டாமல் புத்தகங்களை தள்ளிப்பார்த்துக்கொண்டிருக்கையில், முத்தண்ணா! இன்றைக்கு அம்மா என்னை வீணைவாசிக்கச்சொன்னாள், அப்போது நான் பாடம் படித்துக்கொண்டிருந்தபடியால், முத்தண்ணா வரும் வேளையாச்சுது இப்போது வீணைவாசிக்கமாட்டேனென்று சொன்னேன் என்று சுந்தரி கூறினாள். சுந்தரி! நீ அப்படிசொல்லி யிருக்கக்கூடாது என்று மனோகரன் சொன்னவுடன், இல்லை முத்தண்ணா நான் வாசிக்கமாட்டேனென்று சொல்லி நிறுத்த வில்லை, இராத்திரிக்கு வாசிக்கிறேனென்றுசொல்லி யிருக்கிறேன் என்று சுந்தரிகூற, மனோகரன் எப்போது நம்முடையதாயார் உன்னை வீணைவாசிக்கச் சொன்னாளோ அப்போதே நீ வாசித்திருக்கவேண்டும், நீ அப்படிசெய்திருந்தால் அம்மாவுக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கும், அப்படி செய்யாததால் ஒருவேளை அம்மாவுக்கு உன்னிடத்தில் அதிருப்தியுண்டா யிருக்கலாமென்று சொன்னான். நீ சொல்லுவதைப் பார்த்தால் அம்மா ஏதோ கோபித்துக்கொண்டிருப்பாளென்று நீநினைக்கிறதாகத் தெரிகிறது. அப்படி அம்மா ஒன்றுங் கோபித்துக்கொள்ளவில்லை முத்தண்ணாவென்றுசுந்தரிசொல்ல, பிறகு அம்மா என்னசொன்னாளென்று மனோகரன் கேட்க, ஒன்றுஞ்சொல்லவில்லை சும்மாயிருந்துவிட்டாளென்று சுந்தரி பதில்கூற, சரி அதுதான் கோபம், வேறென்ன வேண்டுமென்று மனோகரன்சொன்னான். சுந்தரி இதைக்கேட்டவுடன், அம்மா வாய்திறந்து கோபமாக ஒன்றுஞ் சொல்லவில்லையே முத்தண்ணா! நான் நீகொடுத்த பாடங்களை படித்திருந்ததைக்கண்டு சும்மாயிருந்துவிட்டாள், அது கோபமாகுமோ? நன்றாயிருக்கிறது, நீ எப்போதும் இப்படித்தான் முத்தண்ணா, என்மேல் பழிசுமத்துகிறது என்று சிறிது கோபித்தவள் போலும் அல்லவள்போலும் நகைத்துக்கொண்டு சுந்தரிபேசினாள். ஓகோ! வாயால் வைதால்தான் கோபமாக்கும் என்று நகைத்து மனோகரன் சுந்தரியின்பாடங்களைக்கேட்டான். பிறகு சந்திரசூடன்வந்து இருவரையும் சாப்பிடக்கூப்பிட மூவருமாகச் சென்றார்கள். சுந்தரிக்கும் மனோகரனுக்கும் சற்றுமுன் நடந்த சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த இரதி தன் பர்த்தாவினிடத்துச்சொல்லி மனோகரனைப் புகழ்ந்தாள். இப்படியாக மனோகரன் சந்திரசேகரபிரபுவின் வீட்டில் அவரது சொந்தபிள்ளையைப்போல் வளர்ந்துகொண்டு வந்தான். இரதியைத் தன்தாயென்றும் சந்திரசேகரரைத் தன்தந்தையென்றும், சந்திரசூடனையும் சுந்தரியையும் தன்னுடன் பிறந்தவர்களென்றும் மனோகரன் முழுநம்பிக்கையுடனெண்ணிவந்தான். இதனாலேயே அந்தப்பிரபுவும் அவர்மனைவியும் எவ்வளவு அன்புடன் மனோகரனைக் காப்பாற்றிவந்தார்களென்று நன்றாய்விளங்குகிறது. அவ்வீட்டிலுள்ள வேலைக்காரர்களும் மனோகரனையும் சந்திரசூடனையும் ஒரேமாதிரியாகப் பார்த்து வந்தார்கள். வேலைக்காரர்களில் சிலபேருக்கு மனோகரனுடைய விருத்தாந்தம் நன்றாய்த் தெரிந்திருந்தபோதிலும் அவர்கள் அதை எப்பொழுதும் வெளியிட்டதேயில்லை. மனோகரனுக்குப் பதினெட்டுவயதாகி விட்டது. அவன் நல்ல யௌவனபருவத்தை யடைந்து பார்ப்போர் மனதைப் பரிக்கும்படியான அழகை யடைந்து விளங்கினான். மனோகரன் வீதியிற்போகுங்காலத்து அவனழகைக்கண்டு மயங்கி நிற்காதவர்களில்லை. அநேக கன்னிகைகளும் அவர்கள்வீட்டில் மறைந்துநின்று சாளரத்தின்வழியாய் மனோகரனைக் கண்டு ஆனந்தப்படுவார்கள். அவன் வில்வித்தையில் அர்ச்சுனனைப்போலவும், அழகில்மன்மதனையொத்தும், வித்தையில் பிரகஸ்பதியைப் போலவும் காணப்பட்டான். மனோகரனும் சந்திரசூடனும் அடிக்கடி வேட்டையாட காட்டிற்குப்போவதுண்டு. ஒருநாள் காலை இருவருமாக சத்தியபுரிக்கு சுமார் நாலைந்துமைல்தூரத்திலிருக்கும் காட்டிற்குச்சென்றார்கள். சரியான மிரு



கங்கள் அகப்படாததால் அவர்கள் காட்டில் வெகு தூரம்போகவே, அவ்விடத்தில் இவர்களைநோக்கி சிலர் அதிகவிரைவாக ஓடிவந்தார்கள். ஓடிவந்தவர்களைப் பின்தொடர்ந்து சிலகரடிகள் அதிககோபத்துடன் துரத்திக்கொண்டுவந்தன. இதைக்கண்ட மனோகரனும் சந்திரசூடனும் கையில் ஆயுதமொன்றுமின்றி நிராதரவாயிருந்த அந்த ஜனங்களுக்கு ஒத்தாசைசெய்யும் பொருட்டு, தங்கள் குதிரைகளை அதிகவிரைவாக ஓட்டினார்கள். கரடிக்கூட்டங்களுக்குச் சமீபத்தில் வந்து அவைகளையெல்லாம் சிறிதுநேரத்தில் கொன்று சின்னபின்னமாக்கி அம்மனிதர்களை மனோகரன் காப்பாற்றினான். இதைக்கண்ட அம்மனிதர்கள் மனோகரனது தைரியத்தையும் பராக்கிரமத்தையுங்கண்டு அதிசயித்து அவனை ஸ்தோத்திரஞ்செய்தார்கள். மனோகரன் அவர்களைநோக்கி 'நீங்கள் யார்? இந்தக்காட்டில் ஏன் வந்தீர்கள்?' என்று கேட்டான். "சுவாமி! நாங்களிருப்பது மகதபட்டணம், ஓர்வேலையாக சத்தியபுரிக்கு வந்தோம். இப்போது மறுபடியும் மகதபட்டணம் திரும்பிப்போகையில் இந்தக்கரடிகள் எங்களைத்துரத்திவந்தது. நீங்களில்லாமற் போனால் நாங்களெல்லாரும் இக்கொடிய மிருகங்களுக்கு இரையாகிவிட்டிருப்போம்" என்று அவர்களிடத்தில் ஒருவன் கூறினான். சரி நீங்கள் இனி தைரியமாய்ப்போகலாம்" என்று சொல்லி மனோகரன் அவர்களை அனுப்பிவிட்டான். சற்றுநாழிகை அக்காட்டிலேயே இங்குமங்கும் திரிந்து வேட்டையாடி இன்னும் சிலதுஷ்டமிருகங்களைக் கொன்றபின் மனோகரனும் சந்திரசூடனும் வீட்டுக்குத்திரும்பினார்கள்.

காட்டில் மனோகரனையும் சந்திரசூடனையும் சந்தித்த மகதபட்டணத்து ஜனங்கள் தங்களுடைய பட்டணஞ்சென்று மனோகரனை புகழ்ந்துபேசினார்கள். அவனது பராக்கிரமத்தையும் தைரியத்தையும் பிரியத்தினால் அளவுக்குமிஞ்சி, மகாவீரனென்றும், மகாராசனென்றும் அவர்கள் துதித்ததைக்கேட்ட அப்பட்டணத்துமந்திரி அரசனுடன்சொன்னான். மகததேசமுழுவதையும் நாம் ஆண்டுக்கொண்டிருக்கிறோம். நமதுதேசத்திலுள்ள சிற்றரசர்களில் இச்சனங்கள் துதிக்கும் வீரன்யாரா யிருக்கலாமென்று அரசனும் மந்திரியும் யோசித்து ஒன்றுந் தெரியாமல் தாங்களே அக்காட்டிற்குச்சென்று ஆட்களைக்கண்டுபிடிக்க வேண்டுமென்று எண்ணினார்கள். மறுநாட்காலை அரசனும் மந்திரியும் மாறுவேடம்பூண்டு கால்நடையாய் அக்காட்டிற்குச்சென்றார்கள். அன்றுவழக்கம்போல் மனோகரன் வெள்ளை குதிரையின்மீதும் சந்திரசூடன் ஓர் சிகப்புகுதிரையின் மீதும் ஏறிக்கொண்டு இருவருமாக வந்தார்கள். இவர்களுக்குமுன்னமே வந்திருந்த அரசனும் மந்திரியும் அக்காட்டில் ஓர்தடாகத்தினருகாமையிலிருந்த ஆலவிருக்ஷத்தினடியில்நின்றுகொண்டிருந்தார்கள். அவ்வழியே மனோகரனும் சந்திரசூடனும்வருவதைக்கண்ட மந்திரி, அரசனைப்பார்த்து "இதோ இருவர் வருகிறார்கள். இவர்களாகத் தானிருக்கலாம். ஜனங்கள் வர்ணித்தவீரன் அந்தவெள்ளை குதிரைமீது வருகிறவன்தான் போலிருக்கிறது" என்றுசொல்ல, அரசன், நாமிவர்களோடு இப்போது ஒன்றும் பேசவேண்டாம். இக்காட்டில் இவர்கள் என்னசெய்கிறார்களென்று பார்ப்போமென்றுசொல்லி சும்மாயிருக்க. சத்தியபுரி வீரர்களிருவரும் இவர்களைக்கடந்து சென்றார்கள். அவர்கள் அருகில் வந்தபோது, அரசனும் மந்திரியும் மனோகரனைத்தான் நோக்கினார்கள். சந்திரசூடனை அவர்கள் நன்றாக கவனிக்கவில்லை. "ஜனங்கள் சொல்லியது நிஜந்தான் போலும், மனிதனைப் பார்க்கும்போதே தெரிகிறது" என்று மந்திரிசொல்ல, அரசனும் தலையசைத்து இவன் இராஜகுமாரன்தான். இதில் ஐயமில்லை. இவர்கள் இந்த மார்க்கமாய் எவ்விடத்திலிருந்து வருகிறார்கள். "என்று அரசன்கேட்க, "இதற்கு சமீபத்திலிருப்பது சத்தியபுரி அவ்வூரிலிருந்துதான் இவர்கள் வரவேண்டும்" என்று மந்திரி பதில்கூற, "சத்தியபுரியில் நமக்குத்தெரியாதவர்கள்யார். அவ்விடத்திலிருப்பது சந்திரசேகரபிரபு. அவருக்கு ஓர் பிள்ளையுண்டு. அவனாயிருக்கலாமோ இவனென்று அரசன் ஐயுறும்போது மந்திரி, "இரண்டு பேர் போகிறார்களே பார்த்தால் இருவரும் சமானமான ஸ்திதியிலிருப்பவர்கள் போலத்தெரிகிறது. இரண்டுபேரும் சகோதரர்களா யிருக்கவேண்டுமென்று எண்ணுகிறேன். "என்றான். இப்படியாக இவர்கள் பேசிக்கொண்டு, மனோகரனும்சந்திரசூடனும்சென்றமார்க்கத்தை நோக்கி மெள்ளநடந்தார்கள். செடிகளும், புதர்களும் அதிக நெருக்கமாயுள்ளவிடத்தில் சத்தியபுரி வீரர்கள் போய்க்கொண்டிருந்த சந்திரசூடன் சிறிது பின்னால் நின்றான். அக்காலத்தில் அவனை ஓர் பெரியபுலியானது அதிககோபத்துடன் வந்து எதிர்த்தது. அதைக்கண்டு பயந்து சந்திரசூடன் ஓட புலியும் பின்தொடர்ந்து துரத்தக்கண்ட மனோகரன் உடனே அவ்விடத்திற்கோடிவந்து சந்திரசூடனுக்குத் தைரியமான பேச்சுகளைச் சொல்லிக்கொண்டு சிறிதும்பயமின்றி அப்புலியை எதிர்த்து தன்கையிலிருந்த ஆயுதத்தால் அதைக்கொன்று சின்னபின்னமாக்கினான். இக்காக்ஷியை தூரத்தில் நின்றுகொண்டு கவனித்த அரசனும் மந்திரியும் அதிசயங் கொண்டு மனோகரனது தைரியத்தையும் பராக்கிரமத்தையுங்கண்டு மெச்சினார்கள். "வீரன் என்றால் அவனுக்குத்தான் தகுமென்று மனோகரனைமந்திரி

சுட்டிக்காட்டினான். சிறிது நாழிகைக்கெல்லாம் இன்னும் நெருக்கமான காட்டிற்கு அச்சிறுவர்கள்வேட்டையாடப்போனார்கள். அரசனும் மந்திரியும் அவர்கள் திரும்பிவரும்போது பேசவேண்டுமென்றெண்ணி ஓர் மரத்தின்கீழ் தங்கினார்கள். என்ன அழகுள்ளசிறுவன் எல்லா இலட்சணங்களும் பொருந்தியிருக்கிறது. பெரிய அரசனுக்கிருக்க வேண்டியகுறிகளெல்லாம் இருக்கின்றன. இவன் இன்னானென இப்போதுதெரியாவிட்டாலும் ஓர் சிற்றரசனுடைய குமாரனாகத் தானிருக்கவேண்டும். சிகப்புகுதிரையின்மீது போகிறவன் அவனுடைய தம்பியாக யிருக்கவேண்டுமென்று அரசன் மறுபடியும் மனோகரனை வியந்துபேச, மந்திரி, "இவர்கள் அண்ணன் தம்பியாயிருந்தால் சத்தியபுரியைச்சேர்ந்தவர்களல்ல. சந்திரசேகரனுக்கு ஒருபிள்ளையும் ஒரு பெண்ணும் தானுண்டு" என்றுசொல்ல இக்காட்டிற்கு சமீபமாக வேறேயென்ன பட்டணமிருக்கிறது. ஜயபுரி தனே. அதுவெகுதூரம். அவ்விடத்திலிருந்து இவர்கள் வந்திருக்கமாட்டார்கள். ஜயபுரி இப்போது நம்முடைய ஆளுகையிலிருக்கிறது. அதையாண்டுவந்த சிற்றரசன் சுலோசனன் இறந்து சுமார் இருபதுவருஷமாகிறது. சுலோசனன் தம்பி நரேந்திரன் சத்தியபுரியிலிருக்கிறான். வேறெந்ததேசத்திலிருந்தாவது இராஜகுமாரர்கள் சத்தியபுரிக்கு வந்திருப்பார்களோ? என்று அரசன் கேட்க, "சுவாமி அன்னியதேசத்தரசர்களாவது அவர்களைச் சேர்ந்தவர்களாவது தங்களுடைய உத்திரவின்றி தங்கள்தேசத்திற்கு வரமாட்டார்களென்று மந்திரிகூற, இவ்வாறு பலவழியில் யோசித்தும் ஒரு முடிவுக்கும் வாராமல் அரசனும் மந்திரியும் பேசிக்கொண்டிருக்கையில், குதிரைகள் ஓடிவரும் சப்தம்கேட்டது. மனோகரனும் சந்திரசூடனும் திரும்பிவருவதைக்கண்டு அரசனும் மந்திரியும் பேசுவதை நிறுத்தினார்கள். சத்தியபுரி வீரர்கள் இன்னும்சமீபமாக வந்தார்கள். அதிகசமீபத்தில்வரும்போது மந்திரி அவர்களைநோக்கி, அருமை நேயர்களே! நீங்கள்யார்? என்றுகேட்டார்.

"சந்திரசூடன்"— நாங்கள் சத்தியபுரி சந்திரசேகர பிரபுவினுடைய குமாரர்கள் என்று கம்பீரமான தொனியுடன் சொன்னான்.

"மந்திரி"— சந்திரசேகர பிரபுவுக்கு எத்தனை குமாரர்கள்.

"சந்திரசூடன்"— நாங்களிரண்டு பேர்கள்.

"மந்திரி"— அவருக்கு ஒருபிள்ளையும் ஒருபெண்ணுந்தானே?

"சந்திரசூடன்"— இல்லை, இரண்டுபிள்ளைகளும் ஒரு பெண்ணும்.

"மந்திரி"— உங்கள் பெயரென்ன?

"சந்திரசூடன்"— "என் பெயர் சந்திரசூடன். என் பக்கத்திலிருக்கும் என்தமயனுக்கு மனோகரனெனப்பெயர்"

"மந்திரி"— சந்திரசேகரபிரபு சௌக்கியமா.

"சந்திரசூடன்"—ஆகா! சௌக்கியமே. நீங்கள்யார்.

"மந்திரி"— நாங்கள் மகதபட்டணத்திலிருக்கும் வியாபாரிகள். இன்றையதினம் ஒரு வேலையுமில்லை. இந்தகாட்டைச்சுற்றிப் பார்ப்போம் என்றுவந்தோம்.

இச்சமயத்தில் மனோகரன் சந்திரசூடனை நோக்கி, இவர்கள் நிஜமாக வியாபாரிகளாகேள் என்று சொன்னான். இதைக்கேட்ட மந்திரி சந்திரசூடன் அந்தக்கேள்வியைக் கேட்குமுன்னமே மனோகரனைப் பார்த்து "ஆம் நாங்கள் நிஜமாக வியாபாரிகள்தான்" என்று சொன்னான்.

"மனோகரன்"— நீங்கள் வியாபாரிகள் அல்லவென்று நினைக்கிறேன்.

"மந்திரி"— அதற்கென்ன காரணம்?

"மனோகரன்"— உங்கள் முகமே.

இதைக்கேட்டவுடன் அரசன் அதிசயித்து புன்னகைசெய்தார்.

"மந்திரி"— எங்கள் முகம் நாங்கள்யார் என்று தெரிவிக்கிறது.

"மனோகரன்"— "நீங்கள் வியாபாரிகளல்லவென்று தெரிவிக்கிறது. சற்றுமுன்னே நீங்கள்வியாபாரிகளல்லவென்று நான் சொல்லியபோது உங்கள் பக்கத்திலிருப்பவருடைய முகம் மாறியது. அம்மாறுதலானது நான்சொல்லியதை சரியென்று காட்டிற்று." இதைக் கேட்டவுடன் மனோகரனுடைய புத்தி கூர்மைக்கு மந்திரி அதிசயித்து மறுபடியும் கேட்கிறான்.

"மந்திரி"—வியாபாரிகளல்ல வென்றால், நாங்கள்யார்.

"மனோகரன்"— நீங்கள் யாரென்று சொல்லுவது எனக்கு ஒருகஷ்டமல்ல. நீங்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக உங்களை மறைத்துச்சொல்லி எங்களை ஏமாற்றிவிடப் பார்த்தீர்கள்.



எங்களை ஏமாற்றிவிடுவது சுலபமல்லவென்பதைமாத்திரங் காண்பிக்க நீங்கள் வியாபாரிகளல்லவென்றேன். அதுபோதும். அதற்கு மேல் உங்களை யின்னாரென்றுசொல்லி உங்களுடைய எண்ணத்தைக் கெடுக்க எனக்கு இஷ்டமில்லை. அது நியாயமுமன்று. இதுவரைக்கும் சும்மாயிருந்த மகததேசத்து அரசன் மனோகரன் பேசியதைக் கேட்டவுடன் அவனது புத்திதெளிவையும் வரம்பு கடவாத மரியாதையுங் கண்டு சந்தோஷங்கொண்டு அவனை நோக்கிப் பின்வருமாறு கேட்கிறார்.

அரசன்— ஹேமனோகர பிரபோ! நாங்கள் யார்தான் சொல்லுங்கள் பார்ப்போம்.

மனோகரன்— நீங்கள் போட்டிருப்பது வேஷம். அது இன்னகாரணத்திற்காகவென்பது எனக்குத் தெரியாது. நீங்க ளின்னாரென்று உங்கள் ஊர், பெயருடன் நான்சொல்ல வல்லவனல்ல. ஆனால் ஒருவாறு உங்கள் ஜாதியையும் தொழிலையும் சொல்லுவேன்.

(இன்னும்வரும்.)

## வினாவிடை.

வினா— மைகளில் அனேகவித மைகளிருக்கின்றன. சிலமைகள் கண்களுக்கு குளிர்ச்சியை யுண்டாக்கும். சில பார்வையை அதிகரிக்கச்செய்யும். இந்தமைகள் சிலநேரம்தான் யிருக்கும். ஜலம்பட்டால் கரைந்துபோம். ஆனால் இன்னொருவித மை உண்டு. அது எல்லாவற்றினும் சிறந்தது. அந்தமையைத் தரித்துக்கொண்டால் ஸகல சம்பத்துகளுமுண்டாகும். சத்துருக்கள் விரோதமிராது நல்ல கீர்த்தியுண்டாகும். இவ்விதமானமை என்ன மை.

விடை. அதுதான் பொறுமை.

வினா— வாசங்களில் சிரேஷ்டமான வாசமெது? காசியா, காஞ்சியா.

விடை. மேற்கூறிய இரண்டைக் காட்டிலும் ஈசுவரனிடத்தில் வைக்கும் விசுவாசமேமுதன்மையானது.



வினா— எத்தனையோ குளங்களிலும் கிணறுகளிலும் ஆமைகள் வசிக்கின்றன. அவைகளால் நமக்கு யாதொரு துன்பமுமில்லை. ஆனால் மற்றோர்வித ஆமை உண்டு. அந்த ஆமை மிகவும் பெரியது. எப்போதும் தீங்கையே உண்டாக்கும். அந்த ஆமை தண்ணீரில் வசிப்பதில்லை. பூமியிலேதான் வசிக்கிறது. அத்தகைய ஆமை என்ன ஆமை.

விடை. அதுதான் பொறாமை.

## அன்பு.

கல்விகேள்விகளிற்சிறந்த ஆரிய சிகாமணிகாள்!

புண்ணியபூமியாகிய பரதகண்டத்தில் நிலவும் மன்பதையுய்யுமாறு விளக்கியருளிய வேதாகமங்களின் முக்கிய கருத்து யாதெனக் கடாவினாருக் கறிவுறுத்திய விஷயம் அன்பு.

உலகின்கணுள்ளவைகளில் எது அரியது என்று ஆராயுங்கால்,

"அரிதரிது மானிட ராதலரிது" எனக்கூறினர் ஆன்றோர்.

அவ்வாறு எடுத்த மானிடதேகத்தினால் நமக்கு உண்டாகிய பிரயோசனம் என்னவெனில் "உடம்பினாற் பெற்ற பயனாவதெல்லாந் திடம்படு ஈசனைத்தேடு". சர்வேசுவரனை சரியை கிரியை யோக ஞானாதிகளால் வழிபடவேண்டும். ஏனெனில்,

"நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று."

என்பதற்கேற்ப இந்த தேகமானது நீடூழிகாலம் நில்லாதாகையால் கடவுளை வணங்கி அவனது கிருபையைப் பெறவேண்டுவது அத்தியாவசியம். அவ்வாறு அக்கடவுளை வழிபடுவது எதனால், அவன் எந்த வலையில் அகப்படுவன், அப்பொருள் எத்தனை வகைத்து என ஆராயுங்கால் அன்போடு வழிபடல்வேண்டும். ஏனெனில் சாதாரணமாக ஒரு சிங்கத்தைப் பிடித்துப் பழக்கவேண்டுமாயின் மற்றொரு சிங்கத்தைக் கொண்டே பழக்கவேண்டி யிருத்தல்போல, கடவுளை அக்கடவுட்குச் சமானமான பொருளைக் கொண்டே நம்வசப்படுத்தல் வேண்டும். அக்கடவுளுக்குச் சமானமாகிய பொருள் அன்பே. எவ்வாறெனில்,

"அன்புஞ்சிவமு மிரண்டென்பரறிவிலா
ரன்பேசிவமாவ தாருமறிகிலா
ரன்பேசிவமாவ தாருமறிந்தபி
னன்பேசிவமா யமர்ந்திருந்தாரே."

இன்னும்,

"என்பேவிறகா யிறைச்சியறுத்திட்டுப்
பொன்போற்கனலிற் பொரியவறுப்பினு
மன்போடுருகியகங் குழைவார்க்கன்றி
வென்போன்மணியினையெய்தவொண்ணாதே."

இதனால் அன்பினாலல்லது வேறெந்த வகையினாலும் சர்வேஸ்வரனை நம்வசப்படுத்தமுடியாது. இதைக்கொண்டே நம் மணிவாசகப் பிரபுவும் "பக்திவலையிற் படுவோன்காண்க" எனக் கூறியுள்ளார்.

இவ்வார்வம் சதுர்விதாஸ்ரமத்திற்கு மின்றியமையாதது. ஆர்வமென்பதூஉம் அன்பென்பதூஉம் ஒருபொருட்கிளவி. இவ்வன்பு மூவகைத்து. அவை மக்களின்மேலன்பு, ஆடு மாடு முதலிய பிராணிகளின்மேலன்பு, ஈஸ்வரனிடத்திலன்பு. ஈஸ்வரனிடத்தன்புக்கு நம்மக்களின்மேல் வைக்கும் அன்பும், மற்றஜீவப்பிராணிகளிடத்து வைக்கும் அன்பும் காரணம். ஆனால் மக்கள்முதலியவர்களிடத்து வைக்கும் அன்பிற்கும் கடவுளின்மேல் வைக்கும் அன்பிற்கும் வித்தியாசமுண்டு. தாய் தந்தையர்மேல் வைக்கும் அன்பு நிலையுள்ளதாகாது, அது உடல்சம்பந்த மாகையால் உடல் உள்ளவரையில்தான் இருக்கும், பின் தொடராது, முத்தியைத்தாராது. ஆனால் ஈஸ்வரனிடத்து வைக்கும் அன்பு ஆன்மசம்பந்தமாகையால் இறந்தபின்னும் தொடர்ந்துவரும், முத்தியைத்தரும். ஆகையால் பகவத் பக்தியே விசேஷம். இன்னும் இப்பக்தி அந்தர்முகபக்தி, பகிர்முகபக்தி யென இரு வகைத்து. உள்பக்தியானது வேதாகமங்களில் விதிக்கப்பட்ட சத்காரியங்களை வஞ்சனை யில்லாமல் சக்திக்குத் தகுந்தபிரகாரம் நடத்தி பகவத்கல்யாண குணங்களையறிந்து ஆன்ம விசாரணைசெய்து பகவானை நிச்சலமான மனதுடன் தியானஞ்செய்வது. வெளிபக்தியானது விக்கிரகாதிகளை அபிஷேகாதி புஷ்பாலங்காரஞ்செய்து தூபதீப நைவேத்திய சோடசோபசாரங்களை யியற்றி, 'கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்ணீர், தொடுமணற் கேணியிற் சுரந்துநீர்பாய' என ஆர்வமுடன் பூசிப்பது. அந்தர்முகபக்தியாகிய உள்பக்தியே உண்மையான பக்தியாம். பகிர்முகபக்தியாகிய வெளிபக்தி சிலசமயத்தில் வீண்டம்பத்திற்குக் காரணமாகி தூர்விஷயத்திற்கு இடமாகும். ஆனால் உள்பக்திக்கு வெளிபக்தியே காரணம்.

இன்னும் இவ்வன்பானது நான்குவகை. மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம். இவை ஒன்றிற்கொன்று மேலாம். மந்தம் என்பது மெழுகை வெயிலில் வைத்தால் எவ்வளவு சீக்கிரத்தில் உருகுமோ அதைப்போன்றது. மந்ததரம் என்பது அரக்கை வெயிலில்வைத்தால் எவ்வளவு சீக்கிரத்தில் உருகுமோ அதைப்போன்றது. தீவிரம் என்பது நெய்யை அனலில் வைத்து உருக்கினால் எவ்வளவு சீக்கிரத்தில் உருகுமோ அதைப்போன்றது. தீவிரதரம் என்பது ஒருபாத்திரத்தில் தைலத்தை வார்த்துக்கொண்டு அதைக் கவிழ்த்தால் எப்படி இடைவிடாது வீழ்ந்துகொண்டிருக்குமோ அதுபோல் ஈஸ்வரன்மீது இடைவிடாத அன்பைச் செலுத்துவது.

மேலும் அன்புக்கு உள்ள வலிமை உலகத்தில் எப்பதார்த்தத்திற்கும் கிடையாது. கொஞ்சமும் பரீக்ஷையில்லாத இருவர் அன்பு இருந்தவழி கத்தியால் வெட்டினுஞ் சலமானது எவ்வாறு பிளவுபடாதோ அவ்வாறு ஒருமித்து வாழ்கின்றனர். தாய் தந்தைமுதலானவரோடு நெடுநாள்பழகி, அவர்கள் வளர்க்க வளர்ந்து, அவர்களை விட்டு ஒரு க்ஷணமும் பிரியாத ஒரு பெண் என்றும் தான் கனவிலும் நினைத்திராத புருஷன் பர்த்தாவானவிடத்துத் தன் பந்து மித்திரர்களை யெல்லாம் மறந்து அவன்பின் தொடர்வது அன்பின் காரணமல்லவா? இதைப்பற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவரும்

"அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்."

என்று கூறியுள்ளார். கடவுளிடத்துச் செலுத்துமன்பு இம்மை, மறுமை, முத்தி இம்மூன்றினுக்குச் சாதனமாம். உண்மையான அன்பையுடையவர் தாங்கள் எப்பொருண்மீது நாட்டம்வைத்தார்களோ அதைத்தவிர வேறெதையும் விரும்பார். அதுபோல, கடவுளிடத்து அன்பு வைத்தார் கடவுளைத்தவிர வேறெதையும் ஒருபொருட்டாக நினையார். அவ்வாறு பற்றற்றிருந்த காலத்து முத்திக்கு அதிகாரியாகின்றனர்.

ஆகையால் அன்பிலார்பூசை பயன்தரா. அன்பில்லாமல் கொடுக்கப்படும் உணவைச் சிற்றறிவினராகிய நாமே அங்கீகரிக்க மாட்டோமென்றால் பக்தியில்லாமல் செய்யும் பூசையை முற்றறிவுள்ள கடவுளா அங்கீகரிப்பார்? ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டார். பக்தியில்லாமல் நடிப்பாகவும், சரீரபழக்கமாகவும் பூஜை செய்வதனாலும், ஜபஞ்செய்வதனாலும், தொழுவதனாலும், அழுவதனாலும், திருப்பணிசெய்வதனாலும் கடவுளினுடைய திருவருள் உண்டாகமாட்டாது; திருவருள் உண்டாகாதாகவே மோக்ஷமுங் கிடைக்கமாட்டாது. ஆதலால் நடிப்பின்றி உண்மையாய்ப் பக்திசெய்ய வேண்டியது. உண்மையாகப் பக்திசெய்யாமல் கடவுளுடைய அருள்கிடைக்கவில்லை யென்று கடவுளை வெறுத்துக்கொள்வதில் என்னபயன்? மெய்யன்புடன் கடவுளை வழிபட்ட மகரிஷிகள், நாயன்மார்கள், ஆழ்வாராதிகள் முதலானபேர் இஷ்டசித்திபெற்றதனோடு, முத்தியும் பெற்றார்களென்று அவர்கள் சரித்திரத்தினால் அறிந்திருக்கின்றோமல்லவா?

பத்தியானது பலபிறவிகளிலே நிஷ்காமியமாகச் செய்த விசேஷ புண்ணியத்தினாலும், நல்லொழுக்கத்தினாலும், ஜீவகாருணியத்தினாலும், சாதுசங்கப் பழக்கத்தினாலும் இவ்வொரு பிறவியிலே உண்டாகவேண்டியது. ஜீவகாருணியமில்லாமல் சப்த ஸ்பரிச ரூப ரச கந்த விஷயங்களில் சதாமனத்தைச்செலுத்தி விஷயபோகங்களில்மூழ்கி அநித்தியப்பொருளை நித்தியப்பொருளென்றெண்ணி செய்கையிலில்லாமல் வாயினால் மாத்திரம் பக்தி பக்தி யென்று சொல்லிக்கொண்டு திரியும் சிலர், "தான்கெட்டதுமன்றி சந்திரபுஷ்கரணியையுங் கெடுத்தான்" என்பதுபோல் தாங்கள் ஷை அவலசித்தாந்தத்தை நம்பிக்கெட்டதுமல்லாமல் நம்மையும்கெடுக்க முயலுகிறார்கள். செந்தமிழ்ச் செல்வர்களே! இனிமேலாயினும் அப்படிப்பட்ட அவலசித்தாந்தமாகிய மோசவலையிலகப்பட்டு ஆரியர்களாகிய நாம் அநாரியர்களாகப் போகாவண்ணம் சச்சிதானந்த நித்திய பரிபூரணராயும், எல்லாமதங்களிலிருந்து அவரவர்கள் உபாசனைக்குத் தகுந்தபடி பலனையளிப்பவராயும், வேதாகமவிதிப்படி உபாசிப்பவர்க்கு முத்தியளிப்பவராயும், பற்றற்றவராயும், மெய்யன்புடையார்க்கு சமீபராயும், பொய்யன்புடையார்க்குத் தூரராயும், நிஷ்களராயும், சகளராயும், சகளநிஷ்களாதீதராயும் சிருஷ்டி, திதி, சங்காரஞ்செய்பவராயும் ஞானயோகிகள் இருதயகமலத்தில் வீற்றிருப்பவராயும், அத்துவித சொரூபராயும் இராநின்ற பரவஸ்துவை அநுதினமும் மறவாமல் மிக்க அன்போடு வணங்குவோமாக.

(சென்னைத் தமிழ்நேசன்.)

(இன்னும்வரும்.)



# NEWS AND NOTES.

This News From The (Maha Vigada Thoothan.)

## இருமுறை எம். ஏ. பட்டம்பெற்ற ஓர் பெண்மணி.

நமது சென்னை யூனிவர் ஸிட்டியில் எம். ஏ. பரிக்ஷையில் தேறிய பெண்மணிகளிருவரின் விஷயம் நம் நேயர்களறிவீர்களல்லவா? அவர்கள்யாரெனில் சென்னை பிரிஸிடென்ஸி காலேஜியாரொரு பிரொபஸரான மிஸ்டர் சத்தியநாதன் M. A. L. L. D. அவர்களின் மனைவியாரும் அவ்வம்மையின் தங்கையுமே; இவர்கள் ஒரேமுறை எம். ஏ. பட்டம்பெற்றவர்கள். இப்போதும் கல்கத்தா யூனிவர் ஸிட்டியில் மிஸ்டிரஸ் ஷோன் என்னும் பெண்மணி இருமுறை இங்கிலீஷிலும், பிலாஸபியிலுமாக எம், ஏ. பரிக்ஷைகொடுத்துத் தேறியிருக்கின்ற செய்தி எட்டியிருக்கிறது. நிர்மால் பாலா என்னும் இந்த அம்மை தமது இளம்பிராயத்திலேயே கல்வியின் மீது ஆசைபற்றி படிக்க முயற்சி செய்யும் போதே தமது பெற்றோரின் மூடபக்தியால் புஸ்தக முதலானதும் கொடுக்காமல் மறைத்து வைக்கப்பட்டது. ஆயினும் சீக்கிரத்தில் தமது தந்தை யிறந்துபோக இந்த அம்மை பெத்தயூன் பெண்பாடசாலையில், ஆதுலர் மாணாக்கியாகச்சேர்ந்து அங்கேயே கல்விபயின்று ஒவ்வொருவகுப்பிலும் முதன்மையாக தேறிவந்து பல உபகார சம்பளம் பெற்றுவந்து தமது 15-வது வயதில் கல்வியில்மெத்த நிபுணியாக விளங்கியதைக்கண்ட காசிராஜா அவர்கள் இவ்வம்மைக்கு விலையுயர்ந்த ஒரு சேலையை இனாமளித்தனர். பிறகு 17-வயதில் எப். ஏ. பரீக்ஷையில்தேறி மற்ற மிகு உபகார சம்பளங்கள் பெற்றனர்.

இப்பரீக்ஷையில் தேறியதும் அக் கலாசாலையிலேயே ஒரு உபாத்தியாயனியாக அலுவல் வகிக்கும்போது லண்டன் மிஷன் ஸ்கூலில் ஒரு உபாத்தியாயராக விருந்த மிஸ்டர் ஷேன் என்பவர் இவ்வம்மையை மணந்துகொண்டனர். அச்சமயத்தில் இந்த அம்மாள் பி. ஏ. பரீக்ஷைகொடுக்க தயாராகவிருந்தும் தமது நாயகன் பி. ஏ. பரீக்ஷைக்குத் தயாராக வில்லாதது கொண்டு அவரும் பரிக்ஷைக்கு தயாராகும் பொருட்டு 2-வருஷம் சும்மாவிருந்தனர். 2-வருஷத்திற்கு புருஷனவர் பி. ஏ. பரிக்ஷைக்குத் தயாராக, இந்தம்மாளும் அச்சமயத்தில் ஒருபிள்ளைக்குத் தாயாராகவிருந்தும் மனஞ்சலியாது பரிக்ஷைகொடுக்க புருஷனும் மனைவியுமாக இருவரும் தேறினர். நாளடைவில் இந்த அம்மாள்

இருமுறையாக எம். ஏ. பரிக்ஷையில் தேறி தமது 25 வது வயதின்போது நாஷனல் இன்டியன் காங்கிரஸ் மஹாசபைக்கு ஒருடெலிகேட்டாகவும் அனுப்பப் பட்டனர். பிறகு தமது சகோதரரான பிரோபஸர் மூக்கர்ஜி எம்-ஏ-பி-எல். அவர்களுடன் கலந்து பலகிரந்தங் ளியற்றினர். இந்த அம்மாள் சமீபகாலத்தில்தான் இந்திய பெண்மணிகளுக்கென பெரும் பட்டங்க ளடையத்தக்க ஒருகலாசாலை(காலேஜ்)திறந்தனர். இவ்வம்மையின்பின்னடியை மற்றும் நம இந்திய பெண்மணிகள் கடைப்பிடித்து கல்வியை பயின்று தேர்ச்சி யடையின் இந்தியா என்ன மகிமையாய் விளங்கும்.

---

## ருஷிய ஆண் வேஷகாரி.

ருஷியாவின் தென்பாகமாகிய மஸ்கோவ் நாட்டின் கீப் என்ற பட்டணத்தில் ரெயில்வே கம்பனியி னொரு போர்மெனான அலெக்ஸாண்டர் ரோடிஷவிஸ்கி என்பவனொருவனுக்கு நேர்ந்துவிட்ட ஒரு அகாலவிபத்தால் தனது ஒரு உள்ரகசியம் வெட்டவெளியாகி விட்டது. இவன் 4-வருஷங்களுக்கு முன்னே இந்தகம்பெனியில் வந்துசேர்ந்து குணத்திலும் நன்னெறியிலும் நல்ல பெயரெடுத்து தனதுவலிலும் தளராமுயற்சியுடையவனென நன்குவிளங்கி படிப்படியே காவல்காரனிலிருந்து போர்மென் உத்தியோகத்திற்கு வந்தனன். இவனது விடாமுயற்சியை நன்குகவனித்த யாவருமிவன் சீக்கிரத்தில் கம்பனியின் பெரிய ஒரு உத்தியோகத்திற்கு வந்துவிடுவானென மதித்திருக்க காலகதியாலிவனுக்கு நிகழ்ந்துவிட்ட விபத்தானது எல்லாவற்றையும் கெடுத்துவிட்டது. அந்தவிபத்தால் ஷை அலெக்ஸாண்டர் ரோடிஷவிஸ்கி ஆண்பிள்ளையல்லாது பெண்ணென்று பட்டப்பகலாய்விட்டது. இப்பெண்யாரெனில் ருஷியதலைநகராகிய ஸெண்ட் பீட்டர்ஸ்பார்க்கின் ஒரு பெரும் உத்தியோகஸ்தரின் ஒரே ஒரு அரும்புத்திரி. இவளோ மெத்த செல்லப்பிள்ளையாக வளர்ந்து கல்வியில்தேர்ந்து லத்தீன்பாஷையையும் கற்று வெள்ளிபதக்கமொன்றும் பெற்று நல்லமேன்மையாய் வரும்நாளில் தான் ஒரு ஆண்சிங்கம்போல விளங்கவேண்டுமென்கிற எண்ணம் தனக்குள் உதித்ததான்று அவளை அப்படியே ஏகாந்தமாக 4-வருஷங்களுக்கு முன் வீட்டைவிட்டுப் புறப்படவைத்துவிட்டது. இவளது பெற்றோர் இவளை எங்கெங்குந்தேடிக் காணாது இறந்துபோய் விட்டிருப்பாளென நினைத்துவிட்டிருந்ததானது கடைசியாக இவள் அலெக்ஸாண்டர் ரோடிஷவிஸ்கி என்னும் ஆண் வேஷமாக உயிருடனிருக்கிறாளெனக்கேட்க அவர்கள் மனம் என்ன ஒரு குதூகலமடையும். இவள் எடுத்த ஒருமுயற்சியானது சரியாக கைகூடி யிருக்கு மாகில் ருஷிய பெண்மணிகளுக்கு என்ன ஒரு அரும் பிரயாசையான முன்மாதிரியாக விருந்திருக்கும்.

---

குற்றவாளிகள் சொல்லும் மெய்யையும் பொய்யையும் அறிந்துகொள்ளவேண்டி ரசாயன சாஸ்திரியொருவர் ஓர்வித யந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறாராம். இந்தயந்திரம் வெளிவருமானால் அதிக நலமாயிருக்கும்.

---

மாட்சிமைக்குரிய நமது அலக்சான்ட்ரா சக்ரவர்த்தினியினிடத்தில் இப்போது 200-வயதுள்ள கிளியொன்றிருக்கிறதாம். இக்கிளிக்கு டக் என்று பெயர். இதை பிட் என்னும் மகாபிரபு 1783-வது வருஷத்தில் வாங்கி 1800-ம் வருஷத்தில் மூன்றாவது ஜார்ஜ் அரசருக்கு இனாமளித்தனராம். பிரான்சுதேசத்தில் இன்னொரு கிளி யிருக்கிறதாம். அதுவோ 8-கவர்ன் மெண்டைக் கண்டிருக்கிறதாம்.

---

வேண்டியபோது மழைபெய்யச்செய்து கொள்ளுகிற யந்திரமொன்றை தற்போது பாரிஸிய முனிசிபல் இஞ்சினியரவர்கள் செய்திருக்கின்றனராம். இந்தயந்திரம் 720-பவுன் அதாவது 10800-ரூபாய் விலையுள்ளதாம்.

---

பாரெஸ்ட் என்ற பிரான்சுக்கார னொருவன் தண்ணீரின்பேரில் ஓடும் ஒரு பைசைக்கில் வண்டி கண்டுபிடித்திருக்கிறானாம். இரண்டுபெரிய மிதப்புகளால் அது தண்ணீரின்மேல் மிதந்து கால்மிதிகளோடு தொடுக்கப்பட்ட துடுப்புகளால் இயங்குகின்றதாம்.

---

இந்துசமுத்திரத்தைச்சேர்ந்த சுமத்ராதீவின் குடிகள் பால்யவிவாகத்தைத் தள்ளியும், விதவைகளின் புனர்விவாகத்தைத்தழுவியு மிருக்கின்றனர். எவ்வளவு வயதான ஸ்திரியாயிருந்தாலும் அவள் புருஷன் இறந்துபோவானாயின் அவள்வெளியேவந்து ஒருகம்பத்தைநாட்டி அக்கம்பத்தின்நுனியில் ஒருதுண்டு துணியைக்கட்டிக் காற்றில்பறக்கவிடுவள். அதிக காற்றினால் அத்துணி கிழிந்துவிடுவதை அவள் கண்டமாத்திரத்தில் இறந்துபோன தன்புருஷனுக்காக விசனமுற்றிருந்ததை யொழித்துத் தன்னைச் சிங்காரித்துக் கொண்டு முதல்முதல் வெளியில் புறப்படும்போது விவாகமாகாத எவனையாவதுகண்டால் அவனையேமணஞ்செய்வாளாம்.

---

ஓம்.

பரப்பிரம்மணே நமஃ

"ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி."

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 16 OCT 1903 MADRAS.

# இகபரசுகசாதனி.

வாலியம் I. } 1903௵ ஜூலைமீ {புத்தகம் III.

## மனனமாலை.

யாதுமன நினையுமந்த நினைவுக்கு நினைவாகி
யாதின் பாலும்
பேதமற நின்றுயிருக் குயிராகி யன்பருக்கே
பேரா னந்தக்
கோதிலமு தூற்றரும்பிக் குணங்குறி யொன்றறத்
தன்னைக் கொடுத்துக் காட்டுந்
தீதில்பரா பரமான சித்தாந்தப் பேரொளியைச்
சிந்தை செய்வாம்.

---

இனியே தெமக்குனருள் வருமோ வெனக்கருதி
யேங்குதே நெஞ்சமையோ
வின்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே
யனியாய மாயிந்த வுடலைநா னென்றுவரு
மந்தகற்கா ளாகவோ
வாடித் திரிந்துநான் கற்றதுங் கேட்டது
மவலமாய்ப் போதனன்றே
கனியேனும் வறியசெங் காயேனு முதிர்சருகு
கந்தமூலங்க ளேனுங்
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனியாகித்
தனியே யிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
சாமிநீ யறியாததோ
சர்வபரி பூரண வகண்ட தத்துவமான
சச்சிதானந்த சிவமே.

---

ஒன்றென்றும் பலவென்று முபயமென்று முருவென்று மருவென்று முறைவதென்று, நன்றென்றுந் தீதென்று நானேயென்று ஞானமென்று ஞேயமென்று ஞாதாவென்று, மன்றென்று மாமென்றுஞ் சமயப்பேய்க ளறைகின்ற பிளக்குவழி யனைத்துநீத்துக், குன்றலிலா வானந்தக்குரவனின்னைக் கும்பிட்டே னென்பிறவி பின்பிட்டேனே.

---

பூவின்மணம் போலுள்ள புண்டரீகத் துள்ளேமா
தேவியொடு நீங்காச் சிவனுரைத்—தாவிநீ
யைம்புலனை வென்றுங் கறிந்தா லவனுவை
யைம்புலனுக் கெட்டா னவன்.

---

ஆகாய மெங்கு மகண்டமாய் நின்றாற்போ
னீகாய மின்றியெங்கு நிற்பாயேல்—மாகாயத்
துள்ளொளியா மீசனுனைப் பிரியாதே நின்ற
கள்ளந் தெரியுமங்கே காண்.

---

மாயையெனுமிவ் வுரைக்கருத்த மதிக்கின்யா தொன்றி லாததுவே, மாயை யெனவிப் படியிருக்க மதிப்பரதனை யிருவகையாய், மாயை மெய்யென் றுரைத்திடுவர் மயக்கப்பட்டுத் தனைமறந்தோர், மாயை பொய்யென் றுரைத்திடுவர் மயக்கநீங்கித் தனையறிந்தோர்.

---

மித்தையதனைப் பற்றிடவும் விடவும் வேண்டா விவ்வுலகை, மித்தையெனக் காண்குதல் போதும் விட்டுநீங்கு முடனெடுங்கே, எத்தை விடுத லெதைப்பற்ற லென்னிற்சீவத்துவமான, அத்தைவிடுதல் தனைநோக்குமதைப்பற்றிடுதல் நெறியாகும்.

---

யானே யென்னை யறிய கிலாதே
யானே யென்றன தேயென் றிருந்தேன்
யானே நீயென் னுடைமையு நீயே
வானே யேத்துமெம் வானவ ரேறே.

---

எனதாவி யுட்கலந்த பெருநல்லுதவிக் கைமாறு
எனதாவி தந்தொழிந்தே னினிமீள்வ தென்பதுண்டே
எனதாவி யாவியுநீ பொழிலேழு முண்டவெந்தாய்
எனதாவி யார்யானார் தந்தநீகொண் டாக்கினியே.

---

நெஞ்சமே நல்லைநல்லை யுன்னைப்பெற்றால்
என்செய்யோ மினியென்ன குறையினம்
மைந்தனை மலராண் மணவாளனைத்
துஞ்சும்போது விடாதுதொடர் கண்டாய்.

---

## தத்துவசோதனே.

பசி, தாகம், பிணி, மூப்பில்லாமல் பிறப்பு இறப்பில்லாமல் நித்தியமான சுகத்தையே கொடுக்கும் வீட்டை அடைய மனிதர்கள் எல்லோரும் விரும்புவார்கள். அவ்வீட்டையடைய பலவழிகள் கூறப்பட்டிருந்தும் ஒன்றையாவது கைப்பற்றி அனுஷ்டித்து வீட்டையடைய யோக்கியதை யுடையவராக அதிதீவரமாய் பிரயத்தினம் செய்பவர்கள்சிலரே. அதிலும் பலவழிகளுள் உண்மையைத் தெளிவாகவும் கோரிய வீட்டை அதிக சீக்கிரத்தில் அடையச் செய்வதாயுமுள்ள வழியைக் கடைப்பிடித்து ஒழுகுவோர் மிகச்சிலர். காரணம்யாது? நாளைக்கு அகப்படும் பலாப்பழத்தைக் காட்டிலும் இன்றைக்கு அகப்படும் களாப்பழம் மேலானதென்று எண்ணுவதுபோல் ஏதோ மோக்ஷம் ஒன்றிருக்கிறதாம், அது அழிவில்லாத சுகம்கொடுக்குமாம், அதை அடைய கிரமமாக அனுஷ்டித்துவர பலவழிகளுளவாம், என்னமோ சிலர் சொல்லுகிறார்கள், இதெல்லாம் கண்டவர்கள்யார், அவர் கூறுவது மெய்யோ பொய்யோ, அதற்காக இப்போது கிடைத்திருக்கும் உலகசுகத்தை விடுவானேன், இது அற்பமானதா யிருந்தாலும் இப்போது கையிலகப்பட்டிருக்கிறது, வீடோ நாம் பலநாள்உழைத்தபின் னடையவேண்டியது, ஆகையால் உலகசுகமே மேலானதென்று எண்ணுவதுதான் காரணம். இக்காரணம் பற்றி வீட்டையடைய முயற்சி செய்யாதிருப்பது நன்றாகுமா?

எத்தனைநாளானாலும் எத்தனை ஜன்மங்களானாலும் இவ்வுலகசுகம் அற்பமானதென்றும்துன்பத்தையே தருவதென்றும் வெறுத்து வீட்டையே விரும்பி அதை அடைய முயர்சியை செய்யவேண்டியதாகவே முடியும். இதுதிண்ணம். ஆனதுபற்றி அனேகஜன்மங்களில்துன்பத்தை யனுபவித்தபின் வீட்டையடைய பிரயத்தினம் செய்வதைக் காட்டிலும் இப்போதே உண்மையில் பிரயத்தினம் செய்தால், அனேக ஜன்மங்களினுடைய கஷ்டம் ஒழிவது மல்லாமல் நித்தியமான பேரின்பம் இப்போதே கிடைக்கும். தனித்திருந்து சிறிது யோசிக்கும் புத்திமான்களுக்கு இதுவேசரியெனத் தோன்றும்.

வீடு என்றால் விடுதல் என்று அர்த்தம். விடுதலே வீடென்று கூறியதால் நாம் எதையோ இப்போது பிடித்துக்கொண்டிருக்க வேண்டும், அதை விடுதலே வீடு. நம்மை பிடித்துக்கொண்டிருப்பது எது என்று விசாரிக்கும் முன்னமே சிறிது ஜன்மாந்தரத்தைப் பற்றி யோசிப்போம். நமக்கு இதற்கு முன்னும் பின்னும்ஜன்மம் உண்டாவென்பது ஒருபெருங்கேள்வி. ஒருபெருங் கருணைத் திருவருளால் சிருஷ்டிக்கப்பட்ட ஐம்பூதச் சேர்க்கையாலுண்டாய தேகத்தைப்பெற்ற மனிதர்கள் எல்லாரும் ஒருவிதமான ஸ்திதியிலில்லாமல் சிலர் சம்பத் துடையவர்களாயும், சிலர் தரித்திரராயும், சிலர் சர்வாதி காரமுமுள்ள இராஜாக்களாயும், சிலர் அடிமைகளாயும், சிலர் எல்லா அவயவங்களும் நன்றாய்ப் பொருந்தி தேகப் பொலிவையுடையவராயும், சிலர் கையோ. அல்லது காலோ யில்லாத முடவராயும், செவிடராயும் குருடராயும் ஊமையாயும், சிலர் அதிக கூர்மையான புத்தியுடையவராயும் சிலர் மந்தபுத்தி யுள்ளவர்களாயு மிருக்கிறார்கள். உதாரணமாக கால்நொண்டியாயுள்ள ஒருமனிதனை எடுத்துக் கொள்ளுவோம். அவன்கால் ஏன் நொண்டியாயிருக்கிறது? இந்தநொண்டி சரீரத்தை அவனே எடுத்துக்கொண்டானா அல்லது வேறே யாராவது நொண்டியாக்கினார்களா? அவனிஷ்டப்படி சரீரம் எடுத்துக்கொள்ளுகிறதாயிருந்தால் அவன் நல்ல சரீரத்தையே எடுத்துக்கொள்வானே யல்லாமல் நொண்டிசரீரத்தைஎடுத்துக்கொள்ளமாட்டான். அவன்சரீரம் மாதாவினுடைய கர்ப்பத்திலேயே உண்டாகிறபடியால், கர்ப்பத்தில் பிரவேசித்து அவன்காலை நொண்டியாக்கவேறொருமனிதனாலாகமாட்டாது. இதனால்என்னஏற்படுகிறது? அவன் செய்தகுற்றம் அல்லது பாவத்திற்கு அவனுக்கு கர்ப்பத்திலேயே சிட்சை கொடுத்ததினாலே இதற்கு முந்தியஜன்மத்திலே அவன்செய்த பாவத்திற்கு கொடுத்த சிட்சையாயிருக்கவேண்டும். இதற்கு முன்ஜன்மத்தில் அவன் இல்லாவிட்டால் அவனுக்குப் பாவமேயில்லை. பாவம் இல்லாததினாலே அவன் கால்நொண்டியாகவேண்டிய நியாயம் இல்லை. பாவம் செய்யாதவனை சிட்சிக்க நியாயமில்லை. ஆகையினால் முன் ஜன்மம் உண்டென்று ஏற்படுகிறது. இதற்குமுன் ஜன்மம் இருந்தால் ஏன் இனிமேலும் ஜன்மம் இருக்கக் கூடாது. இந்தஜன்மத்தில் செய்யும் பாவபுண்ணியங்களுக்கு தக்கவாறு மறு ஜன்மமெடுக்க வேண்டியது அவசியமே. இதனால் முன்னும் பின்னும் நமக்கு ஜன்மங்கள் உண்டெனவே தெரியவருகிறது:—

சற்றேறக்குறைய ஒரேவயதுள்ளசிலமாணாக்கர்கள் ஒன்றுகூடி ஓர் உபாத்தியாயரிடத்தில் பாடம் கேழ்க்கப் போகிறார்கள். ஒருவிஷயத்தைக்குறித்து அம்மாணாக்கர்களுக்கு ஒரேகாலத்தில் ஒரேவிதமாய் அவ்வுபாத்தியாயர் பாடம் சொல்லினும், அப்பிள்ளைகளெல்லோரும் அவ்விஷயத்தைஒரேவிதமாய்த்தெரிந்துகொள்ளுகிறதில்லை. ஒருவன் விஷயத்தைப்பூரணமாய் அறிகிறான். மற்றொருவன் கொஞ்சம் குறைவாய்அறிகிறான், இன்னொருவன்



சொன்ன விஷயத்தை விட்டு வேறொருவிஷயம் சொன்னதாக அறிகிறான். மற்றுமொருவன் சொன்ன தின்னதென்று அறியவகையிலாது மற்றொரு மாணாக்கனை கெஞ்சிக்கேட்கிறான். இவர்கள் படித்தவிஷயத்தைக் குறித்து பரிட்சை செய்யுங் காலத்து எல்லாரும் ஒருவிதமான பதிலைச் சொல்லாமல் கேட்டகேள்விகளுக்கு ஏற்றக்குறைவாயும் சம்பந்த மில்லாததாயு முள்ள சமாதானங்களைச் சொல்லுகிறார்கள். இதற்கென்ன காரணம்? எல்லாரும் சமவய துடையவர்கள். கேட்டவிஷயம் ஒன்றுதான். பாடம் சொன்னவரும் ஒரேஉபாத்தியாயர். ஏன் பிள்ளைகளிடத்து வித்தியாச மிருக்கவேண்டும். அந்தந்தப் பிள்ளைகளின் மனப்பரிபாகத்திற்குத் தக்கவாறு வித்தியாசங்களும் உண்டாகிறது, மனதின் பரிபாகத்தில் வித்தியாசமிருப்பானேன்? அந்தந்தப்பிள்ளைகளின் முன்ஜன்மத்தில் அவரவர்கள் செய்துவந்த வியாபாரங்களேகாரணம். முன்ஜன்மமிருந்து அவரவர்கள் பலவித வியாபாரங்களைச் செய்து இல்லாமற்போனால் இஜ்ஜன்மத்தில் எல்லாரும் ஒருவிதமான மனப்பரிபாக முடையவர்களாய் கற்ற விஷயத்தை ஒவ்வொருவரும் ஒருவிதமாய் ஒரு அளவில் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி யில்லாததினால் முன்ஜன்மம் உண்டெனவே தோன்றுகிறது.

சங்கீதம் கற்றுக்கொள்ள வேண்டி அதற்கு ஓர் உபாத்தியாயரை ஏற்படுத்திக்கொண்டு அனேகவருஷங்கள் சங்கீதத்தை கிரமமாய் சாஸ்திரசம்மதமாய் கஷ்டப்பட்டு கற்றுக்கொண்டும் சபையில்வந்து பாடும்போது தாங்கள் கஷ்டப்படுவது மல்லாமல் பிறரையும்வருத்தி, எப்போது பாட்டை நிறுத்தி விடுவானென பிறர் எண்ணும்படி சிலர்பாடுகிறார்கள். வேறுசிலர் அதிகபால்ய வயதிலேயே நல்லசாரீரம் அமைக்கப் பெற்றவர்ளாய் யாராவது பாடும்போது ஒருதரம் இரண்டுதரம் கேட்டமாத்திரத்தில் பாட சக்தியுள்ளவர்களாகி சிறிதுநேரம் பாடினாலும் ஜீவகளையுடன் இராகங்களைச் சுகமாய்ப்பாடுகிறார்கள். அதைக்கேட்பவர்கள், இப்பிள்ளைக்கு பாட்டில் நல்லமனோதர்மமிருக்கிறது நன்றாய் விருத்தியாவானெனப்புகழ்ந்து பேசுகிறார்கள். அவர்கள்கூறியவண்ணமே நாளடைவில் மேன்மேலும் சங்கீதம் கேட்பதினாலும் சிறிதுகாலம் குருவினிடத்து கற்பதினாலும் அத்தகையச் சிறுவர்கள்விருத்தியாகி சீக்கிரத்தில் பிரபல வித்துவான்களாகிறார்கள். இதற்கென்னகாரணம்? முன்ஜன்மத்தின் பழக்கமே.

ஒருவாலிபன் பார்ப்பதற்கு அழகாயும் நல்லஆடைஆபரணங்களை அணிந்துகொண்டு அதிக கம்பீரமாய் இரண்டு குதிரைகள்பூட்டிய நல்லவண்டியிலுட்கார்ந்துகொண்டு சீமானாய் முன்னே இரண்டு வேலையாட்கள் ஓடவும்பின்னேஇரண்டுபேர் நாதம் ஒலிக்கவும் வழியிற்கண்டவர்கள்மனதைக்கவரும்படியாகச்சவாரிச்செய்யப் பார்த்தவர்கள்,"யாரோயிவன். மிக்கஅழகுவாய்ந்தவன். நல்ல சம்பத்துடையவன். வெகு உல்லாசமாய்ப் போகிறான். முன்ஜன்மத்தில்நல்லபுண்ணியம்செய்தானுக்கும். பாவத்தைப்பண்ணி நாம் பஞ்சாய்ப் பறக்கிறோமே" என்று கூறுவதை அனேகர் கேட்டிருக்கலாம். அப்படியே சொல்லியு மிருக்கலாம். இப்படிச்சொன்னவர்கள் யாராவது ஜன்மாந்தரத்தைக்குறித்து சாஸ்திர மூலமாயாவது அல்லதுதங்கள் சொந்த யுக்திகளாலாவது அறிந்தவர்களா? இல்லை. அப்படியிருந்தும் ஜன்மாந்தரம் உண்டென்னும் நம்பிக்கை ஒன்றையும் விசாரியாமலே அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதினாலே, ஜன்மாந்தரத்தின் அனுபவம்பெற்ற ஜீவன் அவர்கள் உள்ளிருந்து உணர்த்த அவர்கள் சொல்லுகிறார்களெனத் தீர்மானிக்க வேண்டியதாய் இருக்கிறது.

ஒருமனிதன் தேகஅசௌக்கியமுற்று மிகவும் கஷ்டப்பட்டுத்தேறியபின் ஐயா நான் அந்தக்கொடிய வியாதியினால் பிடிக்கப்பட்டு மிகவும் வருத்தமெய்தி மரணாவஸ்தைப்பட்டேன்என்று கூறுகிறான். மரணாவஸ்தையை இதற்குமுன் அம்மனிதன் அனுபவித்திருந்தால் அல்லாமல்மரணாவஸ்தை இன்னதென்று அவனுக்கு எப்படித்தெரியும்? முன் ஜன்மமில்லாத பட்சத்தில் அவன் மரணமடைந்தது எப்போது? முன்னும் பின்னும் இல்லாமல் ஒருஜன்மமே உளதானால் ஒரு மரணந்தானே உண்டு. அந்த ஒருமரணத்தை அடைந்தபின் அதனுடைய அவஸ்தானுபவத்தைச் சொல்ல மனிதனெங்கே? அவ்வவஸ்தானுபவத்தைக் கூற மனிதர்கள் இருப்பது கொண்டு முன்ஜன்மம் இருந்திருக்கவேண்டுமென்றும் அஜ்ஜன்மத்தை விட்டு நீங்குங் காலத்துண்டாய மரணத்தின் அவஸ்தையை அனுபவித்த ஜீவன் உள்ளிருந்து உணர்த்த மனிதன் மரணாவஸ்தைப் பட்டேனென்று கூறுகிறான் எனத்தானே முடிக்கவேண்டும். இவ்விதமாய் ஆலோசிக்கின் ஜன்மாந்தரங்கள் உண்டென்று ஸ்தாபிக்க இன்னும் அநேக அனுபவ விஷயங்கள் இருக்கின்றன. இதுநிற்க நம்மை எது பிடித்துக் கொண்டிருப்பதால் பந்தத்திலிருக்கிறோமோ எதைவிட்டால் நாம் வீட்டை யடைவோமோ அதைக் குறித்து இனிவிசாரிப்போம்:—

இதுகாறும் கூறிப் போந்ததில் நம்முடைய செய்கைக்குத் தக்கவாறு ஜன்மங்களுண்டாகிறதென்றும்,

ஒரு ஜன்மத்திலுண்டான திடமான மனோபாவம் மாறாமல் அடுத்த ஜன்மங்களிலும் வந்துகொண்டேயிருக்கிறதென்றும், ஜன்மங்களில் மாறிமாறி வந்துகொண்டிருப்பது சரீரங்களேயென்றும் ஏற்படுகிறது. முன் ஜன்மங்களிலும் இஜ்ஜன்மத்திலும் இனிவரப் போகிற ஜன்மங்களிலும் நாமிருப்பதால் நாம் நித்தியரென்றும் விளங்குகிறது. அழிவில்லாத நம்மை எது பிடித்துக்கொண்டிருப்பதால் பிறப்பதாயும் இறப்பதாயும் எண்ணிப் பந்தப்பட்டிருக்கிறோமென்பதை இனி விசாரிப்பாம்.

நாமிப்போது மனிதசரீரத்தை எடுத்திருக்கிறோம். அடுத்த ஜன்மத்தில் பசுவாகப் பிறந்தால் நமக்கு இப்போதிருக்கும் கைகள் பசுஜன்மத்தில் யிருக்கமாட்டா. ஆனதினால் கைகள் இந்த சரீரத்திலேயே நின்றுவிடுகின்றன. நமக்கு கைகள் சொந்தமாயிருந்தால் நாம் எடுக்கும்படியான பசுஜன்மத்திலும் இருக்கவேண்டு மல்லவோ, அப்படி யில்லாதபடியால் கர்மேந்திரியங்கள் நம்மைப் பிடித்துக்கொண்டிருக்கவில்லை. பசு சரீரத்திற்கு கர்மேந்திரியங்கள் ஐந்துக்குக் குறைவுபடுகிறது. இப்படியே வேறு சில ஜன்மங்களைப் பார்த்தோமானால் கர்மேந்திரியங்கள் இன்னும் குறைவுபடும். ஆகையால் கர்மேந்திரியங்கள் சரீரசம்பந்தமேயல்லது சரீரியாகிய நம்மைப் பிடித்துக்கொண்டிருக்கவில்லை.

வண்டாய்ப் பிறந்தோமானால் நமக்கு இப்போதிருக்கும் காதுகள் வண்டுஜன்மத்தில் இருக்கமாட்டா. ஆகையால் சுரோத்திரேந்திரியம் இந்தசரீரத்திலேயே நின்றுவிடுகின்றன. கறையான், எறும்புமுதலிய ஜன்மங்களெடுத்தோமானால் நமக்கு இப்போதிருக்கும் காதுகள் கண்கள் அந்த ஜன்மங்களில் கிடையா. விருக்ஷமாகப் பிறந்தோமானால் ஸ்பரிசமென்னும் ஓர் இந்திரியமாத்திரம்பெற்று இரசம் கந்தம் ரூபம் சத்தம் இவைகளை அறியவல்ல வாய், மூக்கு, கண், செவி, இவைகளில்லாமல் இருப்போம். இதனால் ஞானேந்திரியங்களும் நம்மைப் பிடித்துக்கொண் டிருக்கவில்லை. அவைகள் நமக்குச்சொந்தமாயிருந்தால் நாமெடுக்கும் எந்த ஜன்மங்களிலும் அவைகளிருக்கவேண்டும். அப்படி யில்லாததால் ஞானேந்திரியங்கள் சரீரசம்பந்தமேயல்லது சரீரியாகிய நம்முடைய சம்பந்தமல்ல. பாவபுண்ணியங்களுக்குத் தக்கவாறு சரீரங்கள் வந்துபோய்க்கொண்டிருக்கின்றன. ஆகையால்நமக்கு ஸ்திரமான சரீரமேயில்லை. ஆனதினால் சரீரம் நாமல்ல, நம்மைச்சரீரமும் பிடித்துக்கொண்டிருக்கவில்லை.

பசுவாகப் பிறந்தால் நாம் இப்போது சாப்பிடும் ஆகாரத்தைவிட்டு அப்போது புல்லை அல்லவோ புசிக்கவேண்டும், ஆகாரங்களும் சரீரத்துக்குதக்கபடி ஏற்பட்டபடியால் அவைகள் சரீரசம்பந்தமேயல்லது சரீரியாகிய நம்முடைய சம்பந்தமல்ல. ஆகாரம் நம்மைப்பிடித்துக்கொண்டிருக்கவுமில்லை.

இதுவுமல்லாமல் இந்த ஜன்மத்திலுள்ள செவிடு, ஊமை, வலி, வியாதிகள், காயங்கள் முதலானவைகள் இந்ததேகத்திலேயே நின்று மற்றொருதேகத்திற்கு வாராமலிருப்பதினாலே இவைகளும் சரீரசம்பந்தமே யல்லாமல் சரீரியாகியநம்மைப்பிடித்துக்கொண்டிருக்கவில்லை.

இந்தஜன்மத்தில் நமக்கிருக்கும் தாய்தந்தை பெண்டு பிள்ளைகள் வருகிற ஜன்மத்தில் நமக்கு என்ன முறை யாவார்களோ அறியோம். இப்போதிருக்கிற நமது தாயும் தகப்பனும் இனிவரும் ஜன்மாந்தரங்களில் நமது உடன் பிறந்தார்களாக ஆகலாம். அல்லது சத்துருக்களாகவாவது, மித்திரர்களாகவாவது ஆகக்கூடும். ஆகையால் இந்த தாய்தந்தைமுதலான பந்துக்கள் சரீரசம்பந்திகளே யல்லாமல் சரீரியாகிய நம்மைப் பிடித்துக்கொண்டிருக்கவில்லை.

இப்போது இந்தவீடு இந்தப்பணம் நம்முடையதென்றும் அடுத்த வீட்டானுடைய சொத்துக்களையும் அபகரிக்க எண்ணுகிறோம். மறுஜன்மத்தில் அடுத்த வீட்டில் நாம்பிறந்தால் இப்போது நமதென்று எண்ணியிருந்த சொத்துக்களை யல்லவோ அபகரிக்க எண்ணுவோம். இதனால் வாஸ்தவத்தில் நம்முடைய சொத்துக்கள் எவை? நமக்குச் சொந்தமான சொத்துக்களே யில்லை. ஆகையால் சொத்துக்களும் சரீர சம்பந்தமேயல்லது சரீரியாகிய நம்முடையதல்ல. அவைகள் நம்மைப் பிடித்துக் கொண்டிருக்கவுமில்லை.

இப்போது சிலர் பிராமண ஜாதியைச் சேர்ந்தவராயும் சிலர் வைசியராயும் பிறந்து இந்தஜாதி ஆசாரங்களை அனுஷ்டித்து வருகிறோம், அடுத்த ஜன்மத்தில் பஞ்சமர்களாகப் பிறந்தால் அந்தஜாதிக்கடுத்த ஆசாரத்தை யல்லவோ அனுஷ்டிப்போம். ஆகையால் வருணாசிரம தருமங்கள் சரீரசம்பந்தமேயல்லாமல் சரீரியாகிய நம்முடையசம்பந்தமல்ல, அவைகளும் நம்மைப்பிடித்துக் கொண்டிருக்கவில்லை.

இப்போது சிலர் சைவராயிருந்துகொண்டு வைஷ்ணவரை தூஷித்தும் சிலர் வைஷ்ணவரா யிருந்து சைவரை தூஷித்தும் வருகிறோம். அடுத்த ஜன்மத்தில்



இப்போது சைவராக யிருப்போர்கள் வைஷ்ணவராகப் பிறந்து சைவரையே தூஷிக்கலாம். அப்படியே இப்போது வைஷ்ணவராக யிருப்போர் மறுஜன்மத்தில் சைவராகப்பிறந்து வைஷ்ணவர்களையே தூஷிக்கலாம். ஆகையால் மதங்களும் சரீரசம்பந்தமே யல்லாமல் சரீரியாகிய நம்முடைய சம்பந்தமல்ல.

இப்போது நமக்கு கோவிந்தன் - கோபாலன் - சுந்தரன் எனப் பெயரிட்டிருக்கிறார்கள். நமக்கு முந்திய ஜன்மத்தில் என்ன பெயரிட்டிருந்தார்களோ வருகிற ஜன்மத்தில் என்ன பெயரிடுவார்களோ அறியோம். பெயரும் சரீரசம்பந்தமே யல்லாமல் சரீரியாகிய நமக்கில்லை.

இப்போது நமக்கு நூறுவயதென்று வேதம் ஆயுசு விதித்திருக்கிறது. அடுத்த ஜன்மத்தில் குதிரையாகப் பிறந்தால் அப்போது நமக்கு ஆயுசு முப்பத்திரெண்டென அவ்வேதமே சொல்லும். ஆகையால் ஆயுசு சரீரத்திற்கு விதிக்கப் பட்டிருக்கிறதே யல்லாமல் சரீரியாகிய நமக்கு ஆயுசு விதிக்கப் படவில்லை. மேற்கூறியவை யெல்லாம் சரீரத்தையே பிடித்துக்கொண் டிருக்கிறவைகளே யல்லாமல் சரீரியாகிய நம்மை பிடித்துக்கொண் டிருக்கவில்லை. "ஊனந்தம் பெற்ற போனந்தஞ் சுற்று முறவனந்தம் வினையினூ, டலனந்தஞ் செயும் வினையனந்தங் கருத் தோவனந்தம் பெற்றபேர், சீரனந்தஞ் சொற்கமு மனந்தநற்றெய்வமு மனந்தபேதந், திகழ்கின்றசமயமு மனந்தமதனூன் ஞான சிற்சத்தியா லுணர்ந்து, காரனந்தங்கோடி வருஷித்த தெனவன்பர் கண்ணும் விண்ணும் தேக்கவே, கருதரியவானந்த மழைபொழியு முகிலைநங் கடவுளைத் துரியவடிவைப், போனந்தம் பேசி மறைய னந்தஞ் சொலும் பெரிய மௌனத்தின் வைப்பைப், பேசருமனந்தபத ஞானவானந்தமாம் பெரியபொருளைப் பணிகுவாம்" என்று மௌனமென்பது ஞானவரம்பென நன்குணர்த்திய நமது தாயுமானவருங் கூறினர்.

சோதனைசெய்து பார்த்ததில் நம்முடையதென்றுவது அல்லது நம்மை பந்திக்கவாவது ஒன்றுமில்லாதிருக்க மேற்கூறியவைகளை யெல்லாம் நமதென்று பிரமித்ததே பந்தம். இப்பந்தத்தினின்று நீங்குதலே வீடு. சரீரம் நாமல்லவென்றால் நமக்கு வியாதி ஏது? சரீரத்திற்கே ஆயுசு என்றால் நமக்கு மரணமேது? மரணமில்லையேல் நமக்கு பிறப்பேது? பிறப்பு, வியாதி, மரணம் இவைகள் நமக்கில்லை யென்றால் நமக்கு துக்கமேது? ஒருகாலத்திலும் துக்கமில்லை யென்றால் உள்ளது நித்திய சுகந்தானே. அதுதானே வீடு மேற்கூறியவாறு எல்லாவற்றையும் நாமல்ல நாமல்ல வென்று நியதி களைந்தபின் மிஞ்சியது எது? இவ்வளவையும் சோதித்து அறிந்த அறிவுதான் மிஞ்சியது. அந்தஅறிவுதான் நாம். அறிவு என்று சொன்னதால் அறிவையுடையவன் ஒருவன் இருக்கவேண்டுமே. இந்தவிஷயத்தைப்பற்றி பிறகு பேசுவாம்.

## மாதர் ஒழுக்கம்.

பெண்ணிற் பெருந்தக்க யாவுளகற் பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்."

என்னும் குறளில் ஒருவன் பெறுதற்குறிய கற்புடைய மனையாளினும் உயர்வானது என்ன யிருக்கின்றது? அவளிடத்தே கற்பென்னும் கலங்கா நிலைமை இருக்கப்பெற்றால்; என்று திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தருளினபடியால் உலகத்தில் பெண்களாய்ப் பிறந்தவர்கள் தமக்குரிய நாண், மடம், அச்சம், பயிர்ப்பென்னும் நால்வகைக் குணங்களை யுடையவர்களாய் மனதைப் பலவிடத்தும் செல்லவிடாது நிறுத்திக் கற்புநிலை கெடாது காக்கவேண்டும். மேற்கூறிய நாற்குணங்களில் நாணென்பது நாணம். மடமென்பது எல்லாம் அறிந்தும் அறியாதுபோ லிருத்தல். அச்சமென்பது என்றும்காணாததைக் கண்ட விடத்தஞ்சுதல். பயிர்ப்பென்பது கணவரல்லாதவர் கைமேற்படின் உடம்பு அருவருத்தலாம். விவாகம் இல்லாமல் கன்னிகைகளாக யிருக்குங் காலத்தில் மாதா பிதாக்களினுடைய ஆதீனத்திலும், விவாகமான பின்னர் பர்த்தா ஆதீனத்திலும், பர்த்தாவிற்குப் பிற்காலம் புத்திரர் ஆதீனத்திலும் புத்திரர் இல்லாவிட்டால் சகோதரர் ஆதீனத்திலும் இருக்கவேண்டுமே யல்லாமல் பெண்கள் தாங்களே சுவாதீனமாய் யிருக்கப்படாது. கொண்ட கணவனை மேன்மையாகப்பாவித்து அவன் சொல்லைத் தடுக்காமல் அவனுக்குக் கீழ்ப்படிந்து, பொய் பேசாமல் அவன் விஷயத்தில் உண்மையாய் நகமும் சதையும்போல மனைவி அவன் கருத்தின்வழி நடக்கவேண்டும். பெண்ணை விவாகம் செய்து கொடுக்குங் காலத்து, பிதா நல்ல வித்தியார்த்திக்குக் கொடுக்கவேண்டுமென்றும், மாதா தன்மகள் ஐசுவரியவானுக்கு வாழ்க்கைப்பட வேண்டுமென்றும், சுற்றத்தார் நல்ல குலாசாரத்தை யுடையவனுக்கு கொடுக்கவேண்டு மென்றும், அந்தப்பெண்ணானவள் அழகிற் சிறந்தவனை மாலையிட வேண்டுமென்றும் நினைக்கிறதுண்டு. ஆயினும் எல்லாம் கோரியபடி கிட்டுமா? தெய்வச் செயலின்படி யல்லவோ சம்பவிக்கும். "குலமகட் கழகு தன் கொழுநனைப்பேணுதல்" என்பதனால்

தன் புருஷன் அழகிருந்த ஊரில் குடியிருந் தறியாத குரூபியா யிருந்தாலும் அவனை மன்மதனாகவும், என்றும் அசாத்திய ரோக முடையவனா யிருந்தாலும் அரோக திடகாத்திரனாகவும், நிரட்சர குட்சியா யிருந்தாலும் கல்விக் களஞ்சிய மாகவும், கணக்கறியாத நிர்மூடனா யிருந்தாலும், நிபுணனாகவும், உண்ணச் சோற்றிற்கும், உடுக்கக் கந்தைக்கும், கையில் அரைக் காசுக்கும் வழியில்லாத அஷ்டதரித்திரனா யிருந்தாலும், குபேர சம்பத் துடையவனாகவும் பாவனை செய்து அவனை அவமதியாமல் ஒழுகவேண்டும். மனைவி யானவள் பர்த்தாவிற்குத் தாதியைப்போலப் பாதப் பணிவிடை செய்பவளும் மந்திரிபோலச் சமயோசிதமறிந்து நல்லஆலோசனைகளைச்சொல்லுபவளும் ஸ்ரீமகாலட்சுமி போலப் பெண்ணைப் பெண் இச்சிக்கத் தக்க அதிரூப சௌந்தரியவதியாயும் பூமாதேவிபோலச் சலியாதபொறுமை யுடையவளும் வேசிபோலக் கணவனை சரச கேளி விநோதத்தாற் பிறியப் படுத்துகின் றவளுமாயுமிருப்பதன்றி, அன்புள்ள தாய்போல இனிய உணவுகளாற் போஷிக்கின்றவளுமாயிருக்கவேண்டும். மேலும் "தாய்க்குப்பின் தாரம்" என்றும் உலகம் கூறுகிறது. ஒருக்கால் கணவன் கோபித்தால் தானுங் கூடக்கோபியாமல் அவன்தனக்கு அநுக்கிரகித்ததாகவும், அவன் வைதால் அவனைத்தானும் வைதிடாமல் தன்னை அவன் வாழ்த்தினதாகவும்நினைத்தால், அவன்பொல்லாதமூர்க்கனானாலும் அவனுடைய கல்லான நெஞ்சங் கரைந்து பரமசாதுவாவான். "வல்லடிவழக்கைச் சொல்லடிமாமி" என்று மாமியுடனே வாதுசெய்யாமல் அவளைத்தாய்போலக்கருதி அவள்காலிலே பட்டது தன்கண்ணிலே பட்டதாகக் குடும்பபாரத்தையெல்லாம்ஏந்திக்கொண்டு அவளும் கண்மணியாகிய என்செல்வ மருமகளைப் போலத் தேடக்கிடைக்குமா என்று சொல்லும்படி அந்நியோந்நியமாய் நடந்து "மாமியார்மெச்சிய மருமகளில்லை" என்னும் பழமொழியைப் பகைக்கவேண்டும். ஒரு பெண்பேசினால்பூமிஅதிரும், இரண்டுபெண் பேசினால் நட்சத்திரம்உதிரும், மூன்றுபெண் பேசினால் கடல்சுவறும், நான்குபெண்பேசினால் உலகம்யாதாகுமோ என்பதனால் யாருடனும் இடியிடித்ததுபோல் உரக்கப் பேசாமல், குயில்கூவுதல்போல் இனியகுரலாகக், கிளிகொஞ்சுவதுபோல் மிருதுபாஷியாய் வசனிக்கவேண்டும். உலகத்தார் இராக்காலத்திற்கு உதவியாக வேண்டியதைப் பகற்காலத்திலும் மழைக்காலத்திற்கு வேண்டியதைக் கோடைகாலத்திலும் முதுமைக்கு வேண்டியதை இளமையிலும் மறுமைக்குவேண்டியதை இம்மையிலும் தேடிவைத்துப் பாதுகாப்பதைப்போல் இல்வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் தருணமறிந்து சேகரித்துப் பின்னுக்காகுமென்று சிக்கெனக்காப்பாற்ற வேண்டுமேயல்லது, வீட்டிலுள்ள பண்டங்களை அநியாயத்தில் அழிக்கலாகாது. ஆண்மக்களிலாவது, பெண்மக்களிலாவது துஷ்ட ஜெந்துக்களா யிருக்கின்றவர்கள், தாரதம்மியம் பாராமல் அக்கிரமமாய்ப் பேசினால் "நாய்குலைத்துநத்தம்பாழாகுமா" என்று நினைத்து சாதுவாய்ப்போக வேண்டுமேயல்லாமல் அவர்களை எதிரிட்டு அஞ்சாது தெருச்சண்டைக்கு வருதல் ஆகாது. புருஷனுக்குப்பொருள் வருமானமின்றி அவன் வறுமைப் படுங் காலத்தில் "ஏருழுகிறவன் என்னசெய்வான் பானைபிடித்தவள் பாக்கியம்" என்று நினைக்க வேண்டுமேயல்லாமல் அவன் சம்பாதிக்கவில்லை யென்று மனஞ்சலிக்கும்படி அவனைச் செல்லரிப்பதுபோல எந்நேரமும் வருத்தப்படுத்தலாகாது. தாமரையில்லாத தடாகமும், சந்திரனில்லாத ஆகாயமும், புலவர்களில்லாத சபையும், அரசனில்லாதநாடும், மந்திரியில்லாத அரசும், படைத்தலைவ னில்லாத சேனையும், தெய்வஸ்துதியில்லாத நாவும், நல்ல சிந்தையில்லாத நெஞ்சும், கிருபையில்லாத நேத்திரமும், பயனில்லாத சொல்லும், மணமில்லாத மலரும்போல கற்புடையமனைவியில்லாத வீடு சிறப்பின்றி இகொட்டுக்கொப்பாம்.

வித்வசிரோமணியாகிய பொய்யாமொழிப் புலவர் பூர்வம் மதுரையில்முழுகிப்போன தமிழ்ச் சங்கத்தைப் பரிபாலனம் பண்ணும்படி அக்காலத்தில் அரசாண்டு வந்த வணங்காமுடிமாறன் என்னும் பாண்டியனிடத்தில் பேசுவதற்கு அவனைத்தேடிப் போனபொழுது அவன் கோயிலுக்குச் சுவாமிதரிசனஞ் செய்யப்போயிருக்கிறதாக கேள்வியுற்று, அவர் சொக்கநாதர் சந்நிதிக்குப் போனவிடத்தில் அவ்வரசன் சுவாமியைச் சாஷ்டாங்கமாகச் சேவித்துக்கொண்டிருக்கக் கண்டு புலவரானவர்,

"குழற்கா லரவிந்தங் கூம்பக் குமுதமுங்க யவிழ
நிழற்கான் மதியமன்றோ நின்றிருக் குலநீ யவன்றன்
அழற்கா லவிர்சடைமீ தேயிருந்து மவ்வந்தி வன்னான்
கழற்கால்வணங்குதியோ வணங்காமுடிக் கைதவனே."

என்னும்பாடலைக்கேட்டு அரசன்அவரை நீர்யார்? என்ன, அவர் பொய்யாமொழியென்னும் தமது காரணப்பெயர் முதலிய பூர்வோத்தரத்தையும் தாம் கொண்ட கருத்தையும் வெளியிடப் பாண்டியன் இவரோ சங்கத்தைப் பரிபாலிப்பவர் என்று எளிதாக எண்ணி, அங்குச் சங்கத்தார்க்குப் பிரதியாகச் சிலையினால் செய்துவைத்து இருக்கின்ற பிம்பங்களைக்காட்டி, நீர்பொய்யாமொழி என்



றது மெய்யாகுமாயின், இந்த விக்கிரகரூபமா யிருக்கும் சங்கப்புலவர்கள் சிரக்கம்பம் கரக்கம்பஞ்செய்யப் பாடும் என, அவர்.

"உங்களிலே நானொருவ னொவ்வேனோ வொப்பேனோ
திங்கட் குலனறியச் செப்புங்கள்—சங்கத்துப்
பாடுகின்ற முத்தமிழ்க்கென் பைந்தமிழு மொக்குமோ
ஏடவிழ்தா ரேழெழு வீரே."

என்றுபாட அந்தபிம்பங்கள் அங்ஙனமே சிரக்கம்பம் கரக்கம்பம்செய்தன. பின்பு பொற்றாமரை என்னும் தீர்த்தத்தருகில் அவரை அழைத்துப்போய் இதில்முழுகிப் போயிருக்கின்ற சங்கப்பலகை மிதக்கப்பாடும் பார்ப்போமென, அவர்

"பூவேந்தர் முன்போற் புரப்பாரிலை யென்றும்
பாவேந்த ருண்டென்றும் பான்மையால்—மாவேந்தன்
மாறனறிய மதுரா புரித்தமி ழோர்
வீறணையே சற்றே மித."

என்றுபாடின மாத்திரத்தில் அது மிதந்தது. இப்படிப்பட்ட பலசாதுரியங்களால் அவரதுகல்வியின்அருமையும் பெருமையும் பெரும்பாலும் கண்டு தெளிந்தும் இறுமாப்பினால் அவருக்கு சம்மானஞ்செய்யாமலிருக்க, இவன் தக்கோனல்லவென்று அவர் அங்கிருந்துதிரும்பி தமது சுதேசத்திற்கு வருகையில் இந்தச் செய்தியைப் பாண்டியன் மனைவி அறிந்து அவர் பொய்யாமொழியார் ஆதலால் அவர் சொல்வது நன்றாயினும் தீதாயினும் பொய்யாது பலிக்குமேயென்று நடுநடுங்கிப், புலவர் பெருமான் கோபத்தை ஆற்றவேண்டு மென்று, தான் சிவிகை சுமப்பவரைப்போல வேடம்பூண்டுவந்து அவரது சிவிகையைச் சிலதூரம் சுமந்துசெல்ல அவர்அது கண்டு அவளைநோக்கி கற்புக்குத் தாய் போல்வாளே! நீயேன் இப்படிச்செய்தாய் என, அவள் சுவாமி! இராஜா தேவரீர் விஷயத்தில் அபசாரப்பட்டதை தாம் கருணைகூர்ந்து அவரை வாழ்த்தவேண்டுமென்னும் நோக்கத்தால் இங்ஙனம் புரிந்தேன் என, அவர் நல்லதென்று இராஜபத்தினியை முன்னிட்டு.

"உமையாளு நீயுமொருங் கொப்பே யொப்பே
உமையாளுக் கங்குண்டோ ரூனம்—உமையாடன்
பாகந்தோய்ந்தாண்டான் பலக்குழந்தான் பாண்டியனின்
ஆகந்தோய்ந் தாண்டா னரசு."

என்னும் பாடலைப்பாடினார். இவ்வரசன் தேவிபோல மனைவி புருஷனுடைய குற்றத்தால் அவனுக்குவரும் தீங்கினை ஆய்ந்துணர்ந்து வாராமற் காப்பதல்லவோ விசேஷம்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவர் தம் தேசுயரில்லாள் வாசுகியென்னும் மாசற்றொளிரு மணிவிளக்கொத்தவள் பொற்புவிளங்கிக் கற்புவழுவா தில்லறம் நடாத்தி யின்புற்றுவாழ்ந்து மாண்டபின்பு மயானத்திற்கொடுபோய்த் தகன சமுஸ்காரம் தான் செய்கையில், நெடுநாள் நகமுஞ் சதையும் போலவும் உடலும் உயிரும்போலவும், மனமொத்து பிரிவற்றிருந்த அருமை மனைவியைப் பிரியவேண்டி வந்தமைப்பற்றி அவர் கண்ணீர்விட்டு அவளை நோக்கி, வேழமுண்ட விளங்கனியாகி, சிற்பரால் எழுதரும் பொற்பாவை போல்வாளே! என் நாவிற்கினிய அறுசுவை உணவும் அமைத்து என்னருகிலிருந்துஎன்னை உபசரித்து உண்பித்துப்போஷிக்கின்றவளே! என்னிடத்தில் அனவரதமும்மாறாத உள்ளன்புடையாளே! தெருவாசற்படி கடவாதவளே! என் சொல்லுக்கு எதிர்மறுத்து உரையாது கடவுள் வாக்காகியவேதம்போல் உண்மையாகக்கொண்டு நடப்பவளே! இரவில் என்பாதத்தை நெடுநேரமாக வருடிக்கொண்டிருந்து நான் நித்திரைசெய்தபின்பு, நீநித்திரைசெய்து நான் விழிப்பதற்கு முன்விழித்து எழுந்திருப்பவளே! நீ இப்போது என்னைவிட்டுப் பிரிந்துபோய்விடுகின்றையே, இனிநான் எப்படிக்கண்ணுறக்கம் கொள்வேனென்னும் கருத்தை உள்ளிட்டு.

"அடிசிற் கினியாளே யன்புடை யாளே
படிசொற் கடவாத பாவாய்—அடிவருடிப்
பின்றூங்கி முன்னெழூஉம் பேதையே போதியோ
என்றூங்கு மென்கணி ரா."

என்ற செய்யுளைப்பாடி விசனப்பட்டார். யோசிக்குமிடத்தில் தாமரையிலை நீரும் புளியம்பழமும் போல மனைவாழ்க்கையில் ஒட்டியும், ஒட்டாத மகாத்மாவாகிய அவரும் அந்த மாதர்க்கரசியின் நற்குண நற்செய்கைகளினாலல்லவோ அப்படிப் பரிதாபிக்கும்படி நேரிட்டது. ஆகையால் மாதர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கற்புநிலைமையைக் காப்பார்களாக.

## மத ஆராய்ச்சி.

(முன்தொடர்ச்சி.)

முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆசாரங்களையாவது, ஜாதி நடவடிக்கையாவது யாரும் அழிக்க ஆரம்பிக்கக்கூடாது. ஏற்பட்டிருக்கும் நியாயங்களெல்லாம் நல்லெண்ணத்துடன் ஜனங்களின் விருத்தியைக்கருதி சுயான்மையைப்பாராட்டாத மகரிஷிகளால் உண்டாக்கப்பட்டவைக ளாதலால், ஒவ்வொருவரும் கூடுமானால் மென்மேலும் ஜனங்களுக்குப் போதித்து

அவர்களை விருத்திசெய்யவேண்டும், இருப்பதை அழித்தல் கூடாது. முடியுமானால் விஷயங்களை நன்றாய் விளக்கி விர்த்திசெய்தல் நலம். சக்தியிலதேல் இருப்பதை யழிப்பதைக்காட்டிலும் சும்மாயிருத்தல் அதிக மேன்மை. ஒத்தாசை செய்யவேண்டும்; அது முடியாத பக்ஷத்தில் தீங்குசெய்யாதிருத்தல் எவ்வளவு நன்று. ஓர் மனிதன் பக்திசிரத்தையுடன் ஒன்றையனுசரித்தால் மற்றொருவன் அதைக்கெடுத்தல் நன்றன்று. அவன் அனுசரிக்கும் மார்க்கத்திலேயே அம்மனிதனை மென்மேலும் விர்த்திசெய்யவேண்டும். எல்லாஜீவர்களும் ஒருபகவானிடத்திருந்து உண்டானவர்களாதலால் எந்த மதத்தை யனுசரித்தாலும் முடிவில் அப்பகவானிடத்தில்தான் வந்தடையவேண்டும். இதுசத்தியம். ஆனது பற்றி யொன்றையும் தூஷித்தல்கூடாது. ஒவ்வொரு மனிதனும் அவனவனுடைய சுபாவத்திற்கும் சக்திக்கும் தக்கவாறு தன்னை விர்த்திசெய்துக்கொண் டிருக்கிறான். மனிதர்கள் தாங்களே மனஊக்கத்துடன் ஓர் வேலையில் பிரவேசித்தாலல்லாமல் மற்றொருவர் சொல்லுவதேபோதாது. பிறர்சொல்லும் விஷயங்களெல்லாம் ஒருமனிதனுடைய மறதியைநீக்கி ஞாபகத்தை உண்டு பண்ணுமேயன்றி விஷயம் தெறிந்துகொள்ள வேண்டியது அம்மனிதனையாம். ஒருவன் தன்னைத்தானே விர்த்திசெய்துக்கொள்ளவேண்டும். ஓர் குழந்தைக்குக்கூட நாம் ஒன்றும் கற்பிக்கமுடியாது. அக்குழந்தைகள் தெரிந்துக்கொள்ளக் கூடாதிருக்கும் தடைகளை நிவர்த்திசெய்வதுதான் நாம்செய்யும்காரியம். ஒருசெடி வளர்க்கவேண்டுமானால் அதை இதரமிருகங்கள் அழிக்காவண்ணம் வேலிபோட்டுப் பாதுகாத்தலே மனிதன்செய்யும் தொழில். அதை வளர்ப்பிக்கும்சக்தி மனிதனுக்கில்லை. செடி தானேவளருகிறது, அதுபோல் மனிதனும் தானேதான் விர்த்தியாகவேண்டும். குருவானவர் என்ன செய்யக்கூடும்? ஒருமனிதனுக்கு உண்மையான விஷயங்களைப்போதிப்பர். அதோடே அவர்வேலை முடிந்தது. உபதேசித்த விஷயத்தை மனதில்கொண்டு சிந்தித்து உண்மை யறியவேண்டியது அம்மனிதனே யல்லவா? ஒருவனை மற்றொருவன் விர்த்திசெய்கிறான் என்பது உண்மையில் இல்லை. ஒருவனுக்கு அவன் ஆத்மாவைக் காட்டிலும் வேறேகுருகிடையாது. இதனால் குருவேண்டாமென்று அர்த்தமன்று. குருசெய்வதெல்லாம் மிகக் கொஞ்சம். அதிகம் உழைக்கவேண்டியது சிஷ்யனே யாகும்.

உலகத்தில் மனிதர்களின் சுபாவங்கள் பலவாயிருக்கின்றன. எண்ணங்களும் குணங்களும் ஒழுக்கங்களும் ஆயிரங்கணக்காயிருக்கின்றன, ஆனால் பெரும்பாலும் பொதுவாயமைந்திருக்கும் குணங்களைப்பெற்றிருக்கும் மனிதர்களை நான்குவகையாகப் பிரிக்கலாம். முதலாவது சுறுசுறுப்பாயுள்ள மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தேகத்தில் வலிவு அதிகம். எப்போதும் வேலைசெய்வதே அவர்களுக்குப் பிரியம். சத்திரங்கள் முதலானவை கட்டுதலும் இடிந்த பழையகோயில்களை புதிதாக்குகிறதும், கிராமங்களைச் சுத்தம்செய்தலும், இன்னும் பலவிதமான தர்மகாரியங்களை நடத்துவதே அவர்களுக்குக் கொண்டாட்டம். ஒரு க்ஷணமேனும் அவர்கள் சும்மாயிரார்கள். சாஸ்திரத்தில் கூறிய கர்மங்களைவிடாது செய்வதில் அதிக இஷ்டமுடையவர்கள்; இவர்களைக்கர்மகாண்டிகளெனக்கூறலொக்கும். இரண்டாவது வகுப்பினர் உலகத்தில் கம்பீரமாயும் விசித்ரமாயுமுள்ள வஸ்துக்களைப் பார்ப்பதில் இஷ்டமுடையவர்கள். அவர்களுக்கு உலகத்தில் எந்த வஸ்துவும் சுகமாகவேதோன்றும். கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட எந்த வஸ்துக்களிலும் குணங்களையே கண்டு அதிசயித்து பகவானுடைய பெருமைக்கும் சக்திக்கும் ஆச்சரியப்பட்டு, சதாபகவானை துதிப்பார்கள். வேறுயாராவது பகவானது குணநிசயங்களை எடுத்துச் சொல்லின் அதை மிகவும் ஆவலுடன் கேட்டானந்திப்பார்கள். பகவத் குணாமிருதத்தை யெல்லோரும் அருந்தி சுகமடையும்படிசெய்த மகா பக்தர்களிடத்து அவர்களுக்கு மிகுந்த அன்புண்டு. பகவானது அவதாரங்களில் மிக்கநம்பிக்கையுடையவர்கள். இராமன் பிறந்ததுண்டா? கிருஷ்ணன் இருந்ததுண்டா? வென ஆசங்கிக்கமாட்டார்கள். சந்தர்ப்பம் நேர்ந்தகாலத்தில் பகவானுடைய அவதாரங்களில் நடந்த லீலாவினோதங்களையே உபமானங்களாக எடுத்துக்கூறுவார்கள். இத்தகையோரை பக்தர்களெனச் சொல்லலாம். ஜனங்களில் சிலர், மனது எவ்வண்ணம்? தேகதத்துவம் எப்படி? தேகத்திற்குள் என்னென்ன சக்திகள் இருக்கின்றன? எத்தனை வாயுக்கள் சஞ்சாரம்? அவ்வாயுக்களாலாகும் காரியங்களென்ன? மனதிற்கும் தேகத்திற்கும் சம்பந்தமென்ன? தேகசம்பந்தத்தாலல்லவா பந்தமும் மீளாத்துக்கமு முண்டாகின்றன? மனம்கெட்ட வழிகளிலிழுத்துச்செல்லாமல் இதை அடக்க உபாயமென்ன? மனதையடக்கி யாளவல்லோமாகில் விஸ்ராந்தியடையலாம். இதற்கு உபாயமாக யோகசாஸ்திரத்தில் என்ன கூறியிருக்கிறது என்று இரவும் பகலும் இதே கவலையாய்த்தேடி சிலவழிகளைக் கண்டுபிடித்தும், சிறந்த யோகிகளிடத்துச்சென்று அப்பியாசம் செய்தும் காலத்தைக் கழிக்கிறார்கள். இவர்களை மூன்றாவது வகுப்பினராகிய யோகிகளெனச் சொல்லவேண்டும்.



மனிதர்களில் சிலர் தத்துவசாஸ்திர விசாரணைசெய்து ஒவ்வொருவஸ்துவையும் சோதித்து அவைகளுக்கிருப்பிடம் மனந்தான் என்று நிர்ணயம் செய்து அம்மனம் பிறந்தவிடத்தையும் அவ்விடத்தின் சொரூபத்தையும் வியாபகத்தையும் அறிந்து தத்சொரூபமாய் நிற்க முயலுகிறார்கள். இவர்கள்தான் உத்தமமான நான்காவது வகுப்பினராகிய ஞானிகள். மதமென்று ஒன்றிருந்தால் அது மேற்கூறிய வகுப்பினர்களுக்கெல்லாம் வழிகாண்பிக்கவேண்டும். மனபரிபாகத்திற்குத் தகுந்தமாதிரி எந்த வழியைக்கடைப்பிடித்தாலும் அவ்வழியிலேயே ஒருவனை மென்மேலும் கொண்டுபோய் அவன் கோரியதைத்தரும் மதமே சர்வ சிலாக்கியமான மதம். ஓர் மதமானது பக்தியைமாத்திரம் கூறுவதாயிருந்தால் அம்மதத்தை யனுசரிப்பவர்கள் பகவானைப் பாடுவதும் தங்கள் கஷ்டங்களைக்கூறி முறையிடுவது மாகயிருப்பார்கள். அவர்களிடத்துச்சென்று ஒருவன் உங்கள் தெய்வம் எவ்வண்ணம்? நீங்கள் யார்? உங்களுக்கு துக்கம் ஏன் வந்தது? துக்கத்திற்குப் பரிகாரமென்ன? இக்கேள்விகளுக்கு சுருதி யுக்தி யனுபவங்களுக்கு ஒத்தவாறு சமாதானம் தத்துவசாஸ்திரம் நியாயசாஸ்திரமிவைகளை யனுசரித்துச் சொல்லவேண்டும் என்றுகேட்டால், காரணத்தை விசாரியாது மிக்க அன்புடன் நம்பிக்கைவைத்து பகவானிடத்தில் பக்திசெய்யும் சாதுக்களான பக்தசிகாமணிகள் என்னபதில் சொல்லுவார்கள். இவன் யாரோ குதர்க்கன். என்னென்னமோ கேள்விகேட்கிறான், இவன் நம்முடைய மதக்காரனல்ல போலிருக்கிறது என்று நினைத்து, ஐயா நும் கேள்விகளுக்கு நாங்கள் பதில் சொல்லோம். நீர் எங்கள் மதத்தைச்சேர்ந்தவரல்ல. ஆனதால் எங்கள் மதசம்பிரதாயங்கள் நுமக்குத் திருப்திகரமாயிராது. தொந்திரவு செய்யவேண்டாம். நாங்கள் பகவானைத் துதிப்பதற்கு சமயம் வந்துவிட்டது.' நீங்கள்போகலாம் என்று அந்த பக்தர்கள் கூறுவார்கள். அம்மனிதன் போகும்வழியாது? அவனுக்கு வேண்டியதுஞானம். பக்திமாத்திரம் கூறும் மதம் அவனுக்குப் பயன்படாது. இப்படியே எந்த மதமானாலும் மனிதர்களுடைய பலவேறு எண்ணங்களுக்குத்தக்க எல்லா வழிகளையும் பொருந்தியதா யிருந்தாலல்லாமல் அம்மதம் நிலைபெற்றிராது. நீடித்திராது, விருத்தியுமாகாது.

எல்லாருக்கும் உபயோகமாகும்படியான மதத்தைப்பெற்றவர்கள் கர்மகாண்டிவந்தாலும், இதோ எங்கள் மதத்தில் உனக்குவேண்டியது ஏராளமாயிருக்கிறது அநேகவிதமான கர்மங்கள் இருக்கின்றன. பலவகைப்பட்ட பலன்களைக்கொடுக்கும் கர்மங்கள் அனந்தமுண்டு என்று சொல்லவேண்டும். பக்தர்கள் வந்தாலும் உங்களுக்குவேண்டிய விஷயங்கள் எங்கள்மதத்தில்பலவுண்டு. பக்தியை விர்த்திசெய்ய பலவழிகளுள. கோயில்கள் அநேகமுண்டு. இது தவிர பக்தியையனுசரித்து முக்தியடைந்தவர்கள் சரித்திரங்கள் கணக்கிலடங்காமலிருக்கின்றன. வாருங்கள், வந்து பாருங்கள். பக்தியைப்பற்றி முக்தியடையுங்கள். வேறெங்கும் போகவேண்டாம். வீணாகக்காலத்தைக் கழிக்கவேண்டாம் என்று கூறவேண்டும். யோகாப்பியாசம்செய்து யோகிகளாக விருப்பமுள்ளவர்கள் நேரிடின், யோகசாமான்யம், அடயோகம், லயயோகம், சிறந்த இராஜயோகமென்று பலயோகங்கள் எங்கள்மதத்திலிருக்கின்றன, நீங்கள் சந்தேகிக்கவேண்டாம். சித்தியடைந்த யோகிகளநேகருளர். ஒவ்வொரு விஷயத்தையும் எளிதாய்க் கற்பிப்பார்களென்று சொல்லவேண்டும். ஞானியாகவேண்டுமென்று ஆசைகொண்டு ஒருவன் வந்தாலும், ஞான விஷயங்கள் எங்கள் மதத்தைப்பார்க்கிலும் வேறு எந்த மதத்தில் அதிகமாயிருக்கிறது? ஞானத்தை விர்த்தியாக்கும் நூல்கள் பலவுள, அனுபவத்தை யெடுத்துச்சொல்லும் ஞானிகள் இருக்கிறார்கள். அவர்களோடு பழகலாம் என்று ஆதரவுடன் அழைக்கவேண்டும்.

இன்னும் எதைக்கோரி யார்வந்தாலும் அவர்களுக்கெல்லாம் வேண்டியதைக்கொடுக்கும் மதத்தைப்பெற்றவர்களே உயர்ந்த மதஸ்தர்கள். இதுதவிர எல்லா விஷயங்களையும் ஆதியோடந்தமாய் வியவகரித்து சித்தாந்தம் செய்து, எந்த புத்திமான்களானாலும் எந்த காலத்திலாவது எவ்விதமாய் வாதஞ்செய்யினும், சித்தாந்தப்படுத்திய விஷயம் தவறாகாமல், என்றைக்கும் சத்தியமாய், புராதனமாய், புனிதமாய், புதிதாய்ப், பூரணமாயிருக்கும் சாஸ்திரங்களைப் பெற்றிருக்கும் மதஸ்தர்களே மிக்கப்பெருமையுடையவர்கள். அவர்களே பொதுவான மதத்தை மேற்கொண்டொழுகுபவர்களாவார்கள். எவரெவர்கள் எதுவெது வேண்டினாலும் அவர்களுக்கு அவைகளைக்கொடுத்து அவர்களுடன் வித்தியாசமின்றிக் கலந்துவாழச்செய்தல்தான் பொதுவான மதத்தின்சிறப்பு. எந்த மதத்தில் மனிதன் கேட்கும் விஷயங்களெல்லாம் இல்லையோ அம்மதம் பூர்த்தியான மதமல்ல. அம்மதத்திற்கூறிய சிலவிஷயங்கள் சரியேயாயினும் அவைகளெல்லாருக்கும்பயன்படமாட்டாது. எல்லாரும் ஒருவழியை யனுசரிக்கமாட்டார்கள். ஆனதால் யார்யாருக்கு எதுவெது வேண்டியதாயிருந்தாலும் அவைகளைக்கொடுக்கச் சித்தமாயிருக்கும் மதமே பொதுவான மதம். எந்த மார்க்கத்தை யனுசரித்தாலும்,

அதில் ஊக்கத்துடன் இருந்து அதற்காகச்சொல்லியிருக்கும் நிபந்தனைகளைக் கைக்கொண்டு மற்றெதிலும் மனஞ்சலியாது ஒரே மார்க்கத்தில் நிற்பதுதான் யோகமென்று பொதுவாகக்கூறப்படும். யோகமென்பது ஐக்கியத்தைத் தரும். கர்மயோகிக்கு தான்வேறு, மற்ற ஜீவர்கள் வேறென்றில்லாமல், மற்றஜீவராசிகளும் தானும் ஒன்றுதான் என்கிற ஐக்கியத்தைக்கொடுக்கும். பக்தியோகிக்கு அன்போடு வழிபட்ட கடவுளுக்கும் தனக்கும் ஐக்கியத்தைத் தரும். இராஜயோகிக்கு தன் மனதை விஷயங்களில் செல்லவொட்டாமல் அடக்கி தான்மாத்திரமாய் நிற்பதால் மனதிற்கும் ஆத்மாவுக்கும் ஐக்கியத்தையுண்டாக்கும். அண்டபிண்டங்களும் சகல ஜீவராசிகளும் ஜடராசிகளும் தன்னைத்தவிரயில்லையென்றனுபவிக்கிற ஞானயோகிக்கு அன்னியமாகத்தோன்றிய உலகத்திற்கும் தனக்கும் ஐக்கியத்தைக்கொடுக்கும். கர்மம், பக்தி, ஞானயோகங்களில் ஒருவனுக்கு எது எளிதாயிருக்குமோ அதை அப்பியசிக்க வேண்டும். முதலில் அவைகளைப்பற்றி நன்றாய்க்கேட்டல்வேண்டும். கேட்டதை தனியே நியாயமாயிருக்கிறதாவென்றும் அனுபவத்தில் எப்படி யிருக்கிறதென்றும் சிந்தித்துப்பார்க்கவேண்டும். யுக்தி அனுபவங்களுக்கு ஒத்திருக்கும் பக்ஷத்தில் அப்பியாசத்திற்குகொண்டுவருவது அவசியம். அப்பியாசம்செய்து அனுபோகத்தில்கொண்டுவந்துவிட்ட பிறகு கேட்கவேண்டியதும், சிந்திக்க வேண்டியதும், அதைக்குறித்துப் பேசவேண்டியதும் அனாவசியமாகமுடியும். மதம் என்றால் பேசுதலல்ல. மதத்தில் கூறியவற்றை அனுஷ்டித்து அனுபோகிப்பதே மதம். அனுபோகமில்லாதவன் மதம் தெரிந்துகொண்டேன் எனக்கூறுவது தேன்ருசி பாராதவொருவன் புத்தகத்தில் தேன் என்னும் பதத்தைப்படித்துவிட்டு எனக்குத் தேன் தெரியுமெனச்சொல்லுதலொக்கும். மதமென்பது பேச்சல்ல. தன்னையறிந்து தானாய் நின்று, தானே எல்லாமாயும், அல்லவுமாகியும் சுகிப்பதே மதம். எல்லா ஜனங்களும் சுகமடைய வழிகாண்பிக்கும் மதமே பொதுவான மதம். யாராயிருந்தாலும், எச்சாதியாராயினும், எத்தேசத்தாராயினும், எத்தனை சாஸ்திரங்களைப்படித்து எவ்வளவு புத்திமான்களாயிருந்தாலும் எல்லாரும் மேன்மேலுமறிந்து நித்தியமான பேரானந்தத்தை யடையச்செய்வதுதான் பொதுவான மதம்.

ஆரிய நேயர்களே! எப்போதும் மததூஷணை செய்வதை விட்டுவிடவேண்டும். ஒரூரில் தமிழன், தெலுங்கன், துலுக்கன் ஆகிய மூவர்களும் கூடினார்கள். அவர்கள் ஒருவர் சொல்வதை மற்றொருவர் அறியமுடியாத வெவ்வேறு பாஷைகள் பேசியபோதிலும் ஒருவிதமான அன்யோன்யத்தை யுடையவர்களா யிருந்தனர். ஒருநாள் மூவரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடவேண்டுமென்று நிச்சயித்து பழம் வாங்குவதாய்த் தீர்மானித்தார்கள். தமிழன் வாழைப்பழம் நல்லருசியுள்ளது அதை வாங்கிச்சாப்பிடுதல் நல்லதென்றான். தெலுங்கன் அது கூடாது அரடிபண்டுதான் சிலாக்கியமென்றான், துலுக்கன் மவுஸ்தான் சிறந்ததென்றான். இம்மூவரும் வெகுநேரம் வாக்குவாதம் செய்துகொண்டிருக்கையில் ஒரு கூடைக்காரி கூடைநிறைய வாழைப்பழம் கொண்டு சென்றாள். மூவர்களும் அதை வாங்கி ஆசையுடன் சாப்பிட்டார்கள். அதுபோல் பற்பல மதஸ்தர்கள் பஜனை பண்ணுகிற பகவான் ஒருவர்தான். வீணாக உண்மையறியாது ஒருவரோடொருவர் சண்டை செய்வதில் பயனில்லை. 'ஏகம்சத்விப்ராபஹுதாவதந்தி' அதாவது உள்ளது ஒன்றுதான், அதை ஞானிகளும் மகரிஷிகளும் பலவிதமாகச்சொல்லுகிறார்கள்.

## ஔவையார் சரித்திரம்.

(முன் தொடர்ச்சி.)

ஒரு நாள் ஔவையார் அதிகபசியால்வருந்தி, ஒரு சமுசாரி வீட்டுத் தெருத்திண்ணையில் மிகுந்த இளைப்போடு வந்து உட்கார்ந்திருந்தனர். அந்த வீட்டுக்காரன் மிகவும் யோக்கியமானவன். அவன் மனைவியோ அதிக கடுமையானவள். அப்போது வெளியே வந்த அவ்வீட்டுக்காரனை ஔவையார் கண்டு அப்பா! எனக்கு மெத்தப்பசியாயிருப்பதால் கொஞ்சங் கூழேனும் வார்த்தால் உண்டு பசியாறிப் போவேனென்றார். சாதுவான வீட்டுக்காரன் அவருடைய பரிதாப வார்த்தைக்கிணங்கித் தன் பெண்சாதியின் குணத்தைத் தானறிந்தவனாகையால் ஔவையாரை வீட்டிற்குள் அழைத்துக்கொண்டு போகாமல் தெருத்திண்ணையிலேயே இருக்கச்சொல்லி தான் மாத்திரம் உள்ளேநுழைந்து பிடாரியைப் பெண்டாகக்கொண்ட மனையாளிடத்திற் சென்று அவளுடைய உத்திரவின்பேரில் அருகேயிருந்து, அவளுக்கு தன்னிடத்தில் விசுவாசம் உண்டாகும்படி இச்சக வார்த்தைகளைச்சொல்லி மெல்ல முகர்துடைத்து அவளுடைய தலைசீவிச்சிக்கறுத்துப் பேன்பார்த்து ஈருருவி அதிக பயபக்தியுடனே எங்கே கோபித்துக்கொள்ளுகிறாளோ என்று பயந்து சமயம் பார்த்து மெய் நடுங்கி நாக்குழறி மெல்ல உதடோடுதடசைய ஒரு கிழவி கொஞ்சங் கூழுக்கு வந்திருக்கிறாளென்று சொன்ன மாத்திரத்தில், அவள் தீயில்விழுந்த நாகம்போலச் சீறி கழுநீர்ப்பானையை யேந்திவந்து அவன் தலையிலபிஷே



கஞ்செய்து அவனை வீட்டிற்குந் தெருவிற்குமாகத் துரத்தித்துரத்தி அடித்தாள். அப்போது அவ்வீட்டுத் தலைவன் பெண்டாட்டியால் திண்டாட்டப் படுவதைக் கண்ட ஔவையார் மனமிரக்கமுற்று—

இருந்து முகந்திருத்தி யீரொடுபேன் வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப - வருந்திமிக
ஆடினாள் பாடினா ளாடிப் பழமுறத்தாற்
சாடினா ளோடோடத் தான்.

என்னுஞ் செய்யுளைப் பாடினார். அதுகேட்ட வீட்டுக்காரன் கூழிரந்தவர் வித்வசிரோமணியென்றறிந்து தனது மனையாளை வேண்டிக்கொள்ள அவள் சற்றிரங்கி ஔவையாரை உள்ளே வருவித்து அன்னமிட அப்போது ஔவையார்—

காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே-வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ
அன்பில்லா ளிட்ட வமுது.

என்றோர் கவி பாடிக்கொண்டெழுந்து வெளியே வந்து தம்மை வணங்கிய அவ்வீட்டுக்காரனை நோக்கி அவன் இல்வாழ்க்கையை இகழ்ந்துபேசி அவன் அதுமுதல் துறவு பூண்டொழுகும்படி அடியில் வரும் செய்யுட்களைப் பாடியருளினர்.—

சண்டாளி சூர்ப்பனகை தாடகையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே-தொண்டா
செருப்படிதான் செல்லாவுன் செல்வமென்ன செல்வம்
நெருப்பிலே வீழ்ந்திடுதே னேர்.

பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி யிருக்கலாம் - சற்றேனும்
ஏறுமா றாக விருப்பளே யாமாயின்
கூறாமற் சந்நியாசங் கொள்.

இதன் அர்த்தம் என்னவென்றால் மனைவி கணவன் கருத்திற்கிசைய நடப்பவளும் பதியைப் பானுகக் கருதத்தக்கவளுமாத்திர மிருப்பாளாயின் அக்கணவனுக்குத் தரித்திரம், நோய் முதலிய வியாகூலங்கள் எவ்வளவாயினும் அவை எள்ளளவும் வருத்தந் தாராதாகலின் இல்வாழ்க்கையிலேயே யிருக்கலாம். அப்படிக்கின்றி அவள் கொஞ்சமேனும் நாயகனுக்கு எதிருத்தரஞ் சொல்லத்தக்கவளாயின் எவ்வளவு சம்பத்திருந்தாலும் ஒன்றுமில்லாததாகுமாதலால் யாரோடுஞ் சொல்லாமலோடிச் சந்நியாசம் வாங்கிக் கொள்வதே தகுதி.

கிட்டேர மாக நிதிதேடு மன்னவனும்
இட்டதனை யெச்சா விரப்போனும்—முட்டவே
கூசிநிலை யில்லாக் குலக்கொடியுங் கூசிய
வேசியுங் கெட்டு விடும்.

பழிக்கஞ்சாது நிறைவுரங்கு மரசனும் கிடைத்தமட்டில் திருப்தியடையாத பிச்சைக்காரனும் பரபுருஷரைக்காணக் கூச்சமென்பது சிறிதுமில்லாத குலமாதும் கூச்சமுடைய விலைமாதும் ஒருக்காலும் க்ஷேமமடையார்கள்.

ஏசி யிடலி னிடாமையே நன்றெதிரிற்
பேசு மனையாளிற் பேய்நன்று—நேசமிலா
வங்கணத்தி னன்று வலியபகை வாழ்வில்லாச்
சங்கடத்திற் சாவதே நன்று.

ஏசியிடுதலினும் இடாமையே நல்லது, கணவன் மொழிக்கு எதிர்த்து பதில்சொல்லும் மனையாளினும் பிசாசமேநல்லது, நேயமில்லாத் தோழமையினும்வலிய பகையேநன்று வாழ்வில்லாத சங்கடத்தினுஞ் சாவதே நன்று என்பதாம்.

ஒருநாள் சோழராஜன் தன்சமஸ்தான வித்துவான்களை யழைப்பித்து மறுநாளுதயத்திற்கு நாலுகோடிக்குப் பாடல்பாடி வரவேண்டுமென்று ஆக்கியாபித்தான். அதைக்கேட்ட அவ்வித்துவான்கள் நாலுகோடிக்கு எங்ஙனம் பாடுவதென ஒன்றுந்தோன்றாது அதிக வியாகூலத்துடனே அவரவர்கள் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். ஔவையார் அவ்வழியாக வரும்போது அவர்கள் விசனமுற்றிருப்பதைக்கண்டு ஏன்முகவாட்டத்துடனிருக்கிறீர்கள் என்று கேட்க, அவர்கள் அம்மணீ! எங்களைச் சோழன் நாளைய உதயத்திற்குள்ளே நாலுகோடிக்குப் பாடல்கள் பாடிவரும்படி ஆக்கியாபித்திருக்கிறான். இன்னும் ஒருபாட்டிற்குக் கூட வழியில்லை. ஆதலின் இன்றிராத்திரிக்குள் நாலுகோடியெவ்வண்ணம் பாடப்போகிறோமென்று திகைத்திருக்கின்றோம் என்றனர். அதைக்கேட்டு ஔவையார் வருந்தாதிருங்கள் நானிதோ ஓர்நொடியிற் பாடித்தருகிறேனென்று பின்வரும் பாடலைப் பாடிக்கொடுத்தனள்.

மதியாதார் முற்ற மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்.
உண்ணீருண் ணீரென் றுபசரியார் தம்மனையி
லுண்ணாமை கோடி பெறும்.
கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்.
கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்.

இதைக்கேட்டவுடனே சூரியனைக்கண்ட தாமரைபோல் முகமலர்ந்து அப்பாடலைப் பெற்றுக் கொண்டு போய் அரசன் முன்வைத்தனர். அவனுமதைக்கண்டு ஆனந்தங்கொண்டனன்.

(இன்னும்வரும்.)

## மனோகரன்.

(முன்தொடர்ச்சி.)

அரசன்—அதைச்சொன்னால் போதுமானது.

மனோகரன்—நீங்கள் க்ஷத்திரிய வமிசத்தைச் சேர்ந்தவர்கள். பெரிய இராஜாங்கத்தை நடத்துபவர்கள். இதுவரைக்கும் எனக்குசந்தேகமில்லை. இனி எந்த இராஜாங்கம் பெயரென்ன வென்றால் என்னால்சொல்லமுடியாது.

இதைக்கேட்ட மந்திரி இனி அதிகமாய் மனோகரனிடத்துப் பேசுவதுமோசமாய்முடியுமென்று எண்ணி அரசனைப்பார்த்து அரசர்களுக்கு யாரைக் கண்டாலும் அரசர்களைப்போலத்தான் தோன்றும். இதென்னநியாயமென்று சில அர்த்தமில்லாத வார்த்தைகளைச்சொல்லி, மனோகரனைப் பார்த்து, நாங்கள் க்ஷத்திரியர்களுமல்ல, இராஜாக்களுமல்ல, நாழிகையாகிறது நீங்கள்போகலாம் நாங்கள் வியாபாரிகள். உங்களை இத்தனைநேரம்நிறுத்தி வைத்ததற்கு எங்களை மன்னியுங்கள் என்று சொன்னான்.

மனோகரன்— இன்னும் நீங்கள் உங்கள் வேஷத்தையே ஸ்தாபிக்கிறீர்கள். வேண்டுமானால் உங்களை யின்னாரென்று ஊர்பெயருடன் உங்கள் வாயிலிருந்து வரவழைப்பேன். இந்தவேஷம் எங்கள் நிமித்தம் போட்டீர்களோஅல்லவோவென்றுசிறிது சந்தேகமிருப்பதால் உங்களைசும்மா விடுத்தேன் என்று கோபித்தவன்போல் நடித்து சொல்லும்போது அவன் வலது கையானது இடுப்பில் கட்டித் தொங்கும் வாளாயுதத்தைக் கிட்டியது.

மனோகரன் பேசியதை யறிந்த மந்திரி தங்கள் நிலைமையை அறிந்து பேசாது சும்மாயிருக்க மனோகரனும் சந்திரசூடனும் தங்கள் குதிரைகளைத்தட்டி விட்டார்கள். சத்தியபுரிக்கு அருகாமையில் போய்க் கொண்டிருக்கும் போது சந்திரசூடன் மனோகரனை நோக்கி "ஏன் அண்ணா அவர்களிடத்து அவ்வளவு கோபம் வந்தது?" அவர்கள் தங்களை மறைத்துச்சொல்வானேன்? நம்மிடத்தில் ஏதோ சூதுசெய்ய வெண்ணியிருப்பார்கள். நாம் அப்படி ஏமாந்து போகிறவர்களல்லவென்று காண்பித்துவிட்டால் அதன்மேல் அவர்கள் பிரயத்தினம் அவலமாய்ப்போய்விடும். ஒரு மனிதன் நம்மை கேள்விகள் கேட்கும்போதே எந்த கருத்துடன் கேட்கிறானென்று நாம் அறிந்த பின்னரே அம்மனிதனுக்குப் பதில் சொல்லவேண்டும். இந்த நியாயத்தை நீ ஞாபகம் வைக்கவேண்டும் சந்திரசூடா என்று மனோகரன் பதிலளிக்க, ஆமாம் நான்கூட முதலில் அவர்களைக் குறித்து சில சந்தேகங்கொண்டேன். ஆனால் அவர்கள் ஏதோ கேள்விகேட்கவே அதற்குப் பதில் சொல்லுவதில் மறந்தேன், என்றுசந்திரசூடன்சொல்ல, என்ன அவர்கள் தர்க்க நியாய சாஸ்திரங்களைக் கேட்டுவிட்டது, அதற்கு தீர்க்கமா யாலோசித்து சரியான பதில் சொல்லுவதில் அவர்களிடத்து வந்த சந்தேகங்களை மறந்துவிட்டது, எனக்கு ஒன்றுந்தெரியவில்லை. நான் அநேக தரம் உனக்கு சொல்லியிருக்கிறேன் சந்திரசூடா. நீ அதை மறந்துவிடுகிறாய். யார் என்ன கேள்வி கேட்டாலும் யோசித்து தான் பதில் சொல்லவேண்டும். யோசிப்பதில் அதிக தாமதமும் கூடாது. மரியாதைக்கு குறைவில்லாமல் உடனே பதிலும் சொல்லவேண்டும். நம்மையும் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்று மறுபடியும் மனோகரன் சொல்லிக்கொண்டுபோகையில் சத்தியபுரியில் வந்து சேர்ந்தார்கள்.

அன்றையதினம் போஜனஞ் செய்தபிறகு மனோகரன் தனியே ஓர் அறையில் படித்துக்கொண்டிருந்தான். அன்று காலை காட்டில் இருவர் பேசியதை மறுபடியும் யோசிக்கலானான். அவர்கள் வேஷம் போட்டிருந்த போதிலும் நல்ல விவேகிகளாகிய க்ஷத்திரியவரசர்கள். அவர்கள் சந்திரசேகர பிரபுவை நன்றாய்த் தெரிந்தவர்கள்போலக் காண்கிறது. நமது பிதாவுக்கு ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணுந் தானே யென்று ஏன் கேட்கவேண்டும். இதில் ஏதோ இரகசியமிருக்கிறது. இதே மாதிரியாக முன்னொருநாள் சத்தியபுரியிலேயே கேள்விப்பட்டேன். இந்த சங்கதி யின்னதென்று நான் கூடியசீக்கிரத்திலறியவேண்டும். இவ்விடத்திற்கு அடிக்கடி வருகின்ற இராமதாசர் நம்மிடத்து அதிகப் பிரியமாகவிருக்கிறார். அவர் பழைய கதைகளெல்லாம் அடிக்கடி சொல்லுகிறார். அவர் எல்லாந் தெரிந்தவர். அவரைத்தான் கேட்கவேண்டும் என்று மனோகரன் எண்ணினான். உடனே சம்பாதி மனோகரனிருக்கும் அறைக்கு வந்து ஐயா! இன்றைக்கு ஏன் தாங்கள் குருவினிடத்துப் படிக்கப் போகவில்லை? சந்திரசூடன் மாத்திரம் போனாரே என்று கேட்டான். இன்றைக்கு வேட்டையாடி வந்தது முதல் எனக்கு உடம்பு சிறிது சௌக்கியமில்லை யாதலால் நான் போகவில்லை என்று பதில்கூறி, சம்பாதி இவ்வரண்மனையில் நெடுநாளாயிருக்கிறவன், இவனைக் கேட்கலாமாவென்று மனோகரன் யோசித்தான். இதைக்கண்ட



சம்பாதி ஐயா நீ ரென்னமோ யோசிக்கிறாப்போல் தெரிகிறது. அந்த யோசனை யானது தங்கள் மனதை வேறெந்த வேலையிலும் போகவிடவில்லை யென்வும் அறிகிறேன். ஏதாவது அப்படி யுண்டா? என்று கேட்க, மனோகரன், நீ சொல்லியது உண்மையே சம்பாதி! நான் இன்றைக்கு உன்னை ஒன்று கேட்கப்போகிறேன். அதற்கு உண்மையான விஷயம் எதுவோ அதைச்சொல்லவேண்டும் என்று சொன்னான்.

"மனோகரன்"—உன்னுடைய சந்திரசேகர பிரபுவுக்கு எத்தனை குமாரர்கள்? எத்தனை பெண்கள்?

'சம்பாதி"—இதுதானா? நீங்கள் என்னமோ கேட்கப் போகிறீர்களென்று இருந்தேன். இது உங்களுக்குத் தெரியாதோ இரண்டு பிள்ளைகளும் ஒருபெண்ணுந்தான்.

"மனோகரன்"—இது எனக்குந் தெரிந்த விஷயமே. ஆனால் சிலஜனங்கள் ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணும் தானுண்டு என்று சொல்ல நான்கேட்டேன். அதிலென்னவோ இரகசிய மிருக்கிறது. அது நீ எனக்குச் சொல்லவேண்டும்.

"சம்பாதி"—எனக்குத் தெரிந்தவிஷயத்தை உங்களுக்குச் சொல்லவேண்டியதென் கடமை யாயினும், சந்திர சேகரப் பிரபுவின் கட்டளைப்படி நான் நடந்து கொள்ள வேண்டுமே.

"மனோகரன்"—ஹே சம்பாதி! நீ என்னிடத்தில் எதையும் பயமின்றிச் சொல்லலாம். அதனால் உனக்கு ஒரு தீங்கும் வாராவண்ணம் காப்பாற்றுகிறேன். உடனே சங்கதியைச் சொல்.

"சம்பாதி"—அப்படியல்ல பிரபுவின் உத்திரவு கடந்து இதுவரைக்கும் நான் நடந்ததில்லை. ஆனால் நான் ஒன்று சொல்லுகிறேன். பம்பாநதிக் கரையோரமாய் ஒரு சிறிய தோட்டமிருக்கிறது. அதில் உள்ளபேர்வழி உங்களுக்கு இந்த விஷயத்தைச் சொல்லலாம்.

"மனோகரன்"—இராமதாசர்தானே.

"சம்பாதி"—ஆமாம்.

"மனோகரன்"—"அதைநான் முன்னமே யோசித்திருக்கிறேன்; சரி, நீ சொல்லாமற்போகிறாய்" என்று சொல்லி சம்பாதியின் குணதிசயத்திற்கு சந்தோஷப்பட்டு சம்பாதிக்கு விடைகொடுத் தனுப்பிவிட்டான்.



அன்று சாயந்திரம் பம்பாநதியை நோக்கி மனோகரன் தனியேசென்றான். அவ்வாற்றின் பக்கமாயுள்ள சிறியதோட்டத்தில் ஒருபெரியவர் உலாவிக் கொண்டிருந்தனர். மனோகரன் அத்தோட்டத்திற்குள் சென்று அப்பெரியவரை நமஸ்கரித்து நின்றான். பெரியவரும் உடனே மனோகரனை அதிகமரியாதையுட னழைத்துக் கொண்டுபோய் ஆசிரமத்தில் ஒரு ஆசனத்திலிருத்தி தானும் எதிரே உட்கார்ந்துகொண்டு மனோகரனது க்ஷேமத்தைவிசாரித்து அவனுடன் பேசவாரம்பித்தார்.

சில நாள் சென்றபின் சந்திரசேகர பிரபு தன் அரண்மனையில் சுதந்திரனுடன் பேசிக்கொண்டிருக்கையில் மகத இராஜாங்கத்துச் சேவகன் வாசற்படியில் காத்துக்கொண்டிருக்கிறானென்று ஒருவன் வந்து பிரபுவின் முன்னின்று சொன்னான். ஹே சாம்பா! உள்ளே அழைத்துக்கொண்டு வாவென்று பிரபு உத்திரவளிக்க சாம்பன் அவ்வாறே அச்சேவகனை உள்ளே யழைத்து வந்தான். இராஜாங்கத்துச் சேவகன் பிரபுவின் முன் வந்து நமஸ்காரஞ்செய்து தான் கொண்டுவந்த கடிதத்தை பிரபுவினிடத்துக் கொடுத்தான். சந்திரசேகரர் கடிதத்தைப் பிரித்துப் படிக்க வாரம்பித்தார். படித்துக் கொண்டு வரும்போது அவரது முகம் திடீரென்று மாறுதலையடைந்து சிறிது விசனத்தையும் கோபத்தையுங் காட்டிற்று. கடிதத்தைப் படித்து முடிக்கும் போது இவர்கள் வழக்கம் இதுதானெப்போதுமென்று சொல்லிக்கொண்டு அக்கடிதத்தை மந்திரியினிடத்துக்கொடுத்தார். மந்திரி அதை முழுதும் படித்து பிரபுவின் முகம் மாறுதலையடைந்ததற்குத் தகுந்த காரணமிருக்கிறதென் றறிந்தான். பிரபுவானவர் சிறிது நேரம் சும்மாயிருந்து மந்திரியை நோக்கி, "காரணமில்லாது அரசன் இப்படிச்செய்வது என்ன நியாயம்?" என்றார். மந்திரி, இந்த அரசன் எப்போதும் இப்படித்தான். அரசனிட்டது சட்டமென எண்ணியிருக்கிறான். காரணமிராது. நியாயமிராது. பின்னால் காரணஞ் சொல்லப்படுமாம். அது எப்போதோ? ஊரையெல்லாம் பிடித்துக்கொண்டு நிராதரவாக்கின பிறகோ? என்று கடிந்து பேசினான். "அரசனுக்குப் பலமிருப்பதினால் தர்மத்தைக் கை சோரவிட்டு அதர்மத்தை நடத்துகிறான். இவனது தேசத்தில் ஓர் சிற்றரசனாயிருப்பதைக் காட்டிலும் சாதாரணமான ஓர் ஏழைக்குடியாயிருப்பது நலம்.

(இன்னும்வரும்)

## அன்பு.

முன் தொடர்ச்சி,)

அவ்வண்ணம் வணங்குவோமாயின் நமது வைதிக சமயோத்தாரணஞ் செய்த சமயகுரவர்கள், சந்தானாசாரியர்கள் முதலாய திருவருட்பெருஞ் செல்வர்கள் அடைந்த பெரும் பயனை யாம் அடைவோமென்பதற்கையமுண்டோ! ஆகவே மேற்கூறிய பெரியோருள் ஒருவராகிய வாதவூரடிகள் விஷயத்தில் அன்பு செலுத்தக்கூடாத ஆங்கில நாட்டினரும் அவர் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகத்தினது அருமை பெருமை யறிந்து "திருவாசகத்திற்குருகாதார் ஒரு வாசகத்திற்கு முருகார்" என்பதாகவே ஆங்கிலத்திலும் அச்சாத்திரமாகிய தோத்திரத்தை மொழிபெயர்த்தருளினார். இத்துணைச் சிறப்பு வாய்ந்த பெரியோராகிய ஆளுடைய வடிகள் அன்பின் பெருக்கை விளக்கவேண்டி அன்புடையரிற் சிறந்தாரின்னாராவாரென்றும், அன்பில்லாதாரில் யானே யென்றும் தமது திருவாசகத்தில் எடுத்துக்காட்டினார். அதுவருமாறு:—

"கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபி [ருளி
னென்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்ட
வண்ணப்பணித் தென்னை வாவென்றவான் கருணைச்
சுண்ணப்பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ."

இதுவொன்றோ: ஷை மணிவாசகப் பிரபு கூறிய கருத்தை விதந்தோதுகின்றார் திருக்களிற்றுப்படியார்,

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை யென்றமையால்
கண்ணப்ப னொப்பதோ ரன்பதனை - கண்ணப்பர்
தாமறிவார் காளத்தி யாரறிவா ரல்லதுமற்
றாரறியு மன்பன் றது."

இவ்வாறு அன்பின் பெருக்கத்தைக் கூறப்போந்த பெரியோரெல்லாம் கண்ணப்ப நாயனாரையே சுட்டிக் காட்டலினாலும், திருக்களிற்றுப்படியார் கூறிய திருவெண்பாவினாலும் சாக்ஷாத் உடையவரே (பரமேஸ்வரரே) நமது கண்ணப்பர் என்பதாக விளங்குகின்றது. ஆகையால் அத்தகைய கண்ணப்ப நாயனாரது திவ்ய சரித்திரத்தைச் சங்கிரகமாக விவகரிப்போமாக.

கண்ணப்பநாயனார் சரித்திரம்:—

பூவுலகின்கண் "தெண்ணீர்வயற்றொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்பதற்குத்தக்க ஆன்றோர்கள் நிறைந்த தொண்டைவள நாட்டின்கண் விளங்கிய 32 - திவ்ய க்ஷேத்திரங்களி லொன்றாகியும், பஞ்சபூததலங்களில் வாயு க்ஷேத்திரமாகியும், தென் கைலாயமெனப் புகழ்ந்தோதப்படும் புண்ணிய சிவதளியாயும், பூர்வம் சிலந்தி, பாம்பு, யானை இவைகளால் பூசிக்கப்பட்ட காரணத்தினால் சீகாளத்தியெனப் பெயர்பெற்றதாகிய திருப்பதிக்குச் சமீபமாக "நாவலர் புகழ்ந்து போற்று நல்வளம் பெருகுகின்ற பூவலர் வாவி சோலை சூழ்ந்த போத்தப்பி நாடு" என ஒரு நாடுளது. அந்திருநாட்டின்கண் முத்துக்களை வாரிக்கொண்டு வருகின்ற அருவியோடு கூடிய மலைப்பக்கங்களையுடைய உடுப்பூரென்னும் நகரத்தில் மைக்குழம்பு திரண்டாற்போன்ற உடம்பினையும், கொடிய கொலைத்தொழிலையும், தம்மிடத்து பயமும், பிறவுயிர்மே லருளும் எந்நாளும் இல்லாதவராயும், வலிய தோலுடையை உடையவர்களாயும், காடுகளில் தேடி எடுக்கும் தேனையும் விலங்குகளின் தசையோடு கூடிய மலைநெல் முதலிய வற்றாலாகிய சோற்றையும் உணவு கொள்பவராயும், நஞ்சுபோலும் அழல் வீசுகின்ற அம்புகளையுடையவராயும் ஆகிய வேடர்களுக்கு அரசனாகிய நாகன் என்பான் இயல்பால் தவத்தை முற்பிறப்பின் சார்பால் செய்தவனாயினும், தான் பிறந்த வேடச்சாதியின் ஒழுக்கத்தால் குற்றமே குணமாகக்கொண்டு கொடுமை செய்தலையே முதன்மையான தருமமெனக் கருதி விற்றொழிலிலும் வலிமையிலும் மேன்மையுற்று கொடிய கோபத்தையுடைய ஆண் சிங்கத்தை யொத்தவனாய் விளங்கி அரசுரிமைக்குரிய வாழ்க்கைத் துணையாகிய தத்தையென்னும் மனையாளோடு இல்லறம் நடாத்தி வருங்காலத்து அவனுக்கு எல்லாச் செல்வமு நிறைந்திருந்தும் புத்திரப்பேறு ஒன்றே அரியதாயிருந்தது. அதனிமித்தம் முருகவேளைத் துதித்து திருவிழா எடுக்க அவர் கிருபா நோக்கத்தினால் ஒரு புத்திரனைப்பெற்றனர். அவ்விடத்து புத்திரோச்சவம் கொண்டாட வந்த வலிய வேடுவர் மகிழ்ச்சியால் ஆரவாரித்து "அண்ணலைக் கையிலேந்தற் கருமையாலுரிமைப் பேருந் திண்ணனென்று" நாமகரணஞ் செய்து கண்ணினுக்கு அலங்காரமாக தம் மரபுக்குரிய பல ஆபரணங்களையு மணிவித்தார்கள்.

நாகனார் தமது அருமைப் புதல்வனாகிய திண்ணனாருக்கு "வருமுறைப் பருவந்தோறும்" சிறப்பாகவே தெய்வத்திருவிழா தனது சுற்றத்தார் களிகூற நடத்துவாராயினார். இவர் இவ்விதமாகதால், சப்பாணி முதலிய பருவங்கள் கடந்தவராய் பல அற்புதமாகிய திருவிளையாடலைப் புரியா நின்றார். அவர் தந்தையும் மைந்தனை நோக்கி தன் திண்ணிய புயத்தாற்றலுவி வில்வித்தைபயிற்றுவதற்கு ஆய கிலமுதியோரை யழைத்து



சுபதினத்தைக் குறித்து தமது மரபினராய மறவர்க்குச் சொல்லிவிட்டான். அவரது பணியைச் சிரமேற் கொண்டவராகிய வேடுவரெல்லாம் தமது அரசகுமாரனுக்கு வரிசையாக மலைபடுமணியும், பொன்னுந், தாளமும், வேங்கைப்புலியின் றோலும், கொலைபுரி களிற்றின் கோடும், மயிற் பீலியின் குவையுந், தேனுங், கெடாத பலவகையான மதுமாமிசங்களும், பழங்களுங், கிழங்குகளுந் திசைதொறும் நெருங்கவைத்தார்கள். இத்துணைச் சிறப்புடனே வேடுவர் பெருமானாய திண்ணனார் தனுர்வித்யாரம்பஞ் செய்து மிக்க வல்லவராய் விளங்கி தனது தந்தையார் வயோதிகத் தன்மையைக் கருதி அவரது ராஜரீகத்தைத் தன் புயாசலத்தின்மே லிறக்கிக்கொண்டு "குடிதழீஇக் கோலோச்சு மாநிலமன்ன, னடிதழீஇ நிற்கு முலகு."

என்னும் வேதவாக்கியத்திற்கிணங்க தன்னாலும், தன் பரிசனத்தாலும், பகைவராலும், கள்வராலும், மிருகங்களினாலும் குடிகளுக்கு உண்டாகக் கூடிய ஐந்துவித பயத்தையும் நிவிர்த்திக்கும்படி எழுந்தருளிய நமது திண்ணனார் குடிகளினது முறைப் பாட்டிற் கிணங்கி சுபதினத்தில் காடன் நாணன் என்னும் உயிர்த்தோழரோடு ஏனைய வேடுவ குழாங்களுடன் வலை முதலிய கருவியாதிகளை எடுப்பித்துக்கொண்டு தன் தந்தையை வணங்கி, முதியோரால் ஆசிர்வதிக்கப்பெற்று சுபசகுணம் வாய்க்கவே எமதையர் வேட்டையாட வெளிப்போந்தனர்.

(இன்னும்வரும்.)

# NEWS AND NOTES.

(From The Maha Vigada Thoothan.)

ஐதராபாத்திலிருந்து 61-மைலில் தூரத்திலுள்ள பாடின் கிராமமட்டும் புதியரெயில்வே லயனொன்று திறக்கும்பொருட்டு, ஸ்டேட் செக்ரிடெரியவர்கள் உத்தரவளித்திருக்கின்றனர்.

---

அமெரிக்காவைச் சேர்ந்த நியூயார்க்கிலுள்ள எல்லாக்கட்டடங்களிலும் பெரிதான கட்டட மொன்றிருக்கிறது. இது 29-அடுக்குகளாய்க் கட்டியிருப்பதைப் பற்றி இதில் 1125- ஆபீசுகளிருக்க 6000-பேர் பிரதி தினமும் வேலைசெய்து வருகின்றனர்.

---

கடந்த வாரத்தில் இந்தியா முழுமைக்கும் உண்டான பிளேக் கேசின் மொத்தம் 1362-ஆனால் கடந்த வருஷத்தின் இதேவாரத்தில் உண்டானதொகை 1684. மேற்கூறியுள்ள முதலாவது தொகையில் பஞ்சாபில் மாத்திரம் உண்டான தொகை 390-ஆம்.

---

ஆக்ராவில் நர்ஸாக இருந்த சுதேசஸ்திரீயொருத்தி சிறு குழந்தையொன்றின்வாயில் எதை முன்னிட்டோ கல்லைத்துருத்தி அதைக்கொன்று விட்டதால் பிடிக்கப்பட்டிருக்கின்றனள். இவளை யென்னவொரு மூடமென்னலாம்.

---

பிரிட்டிஷ் தபால் இலாக்கா தற்போது ஓர் வித மின்சார யந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறது. இவ்யந்திரம், மனிதனொருவன் ஒரு மணி நேரத்தில் 2500 கடிதங்களுக்கு முத்திரை குத்துகிறதைவிட 20,000, அல்லது 30000-கடிதங்களுக்கு முத்திரை குத்திவிடுகிறதாம். இது புத்தியின் விசால காலமன்றோ.

---

காக்கேஸிய மலைச்சார்பையடுத்த விலாயெட் என்கிற பட்டணத்தில் கடந்த வாரத்திலுண்டான பூமியதிர்ச்சியால், 23-கிராமங்கள், 249-மனிதர், 237-ஸ்திரீகள், 299-குழந்தைகள் ஆகமொத்தத்தில் 785-பேர் கொலையுண்டதோடு வெகுவான கால்நடைகளும், வீடுகளும், ஷாப்புகளும், ஆலைகளும், மசூதிகளும், கோவில்களும், ஆஸ்பத்திரிகளும் கடைசியாக எல்லாமுமே நாசமாகி விட்டனவாம். அட, பாவமே.

---

மாட்சிமைக்குரிய நமது சக்கரவர்த்தி யவர்களின் பிறந்தநாள் உற்சவத்தின்போது கனந்தங்கிய மதராஸ் கவர்னரவர்கள், அவருக்கு வந்தனோபகார வாழ்த்துதலாக "மதராஸ் பிரசிடென்சியின் குடிகளனைவரும், உமது நீடியக்ஷேமத்தைக்கருதி வாழ்த்து கூறுகின்றனரென்று" தந்திவிடுக்க, சக்கரவர்த்தியவர்களும் அதற்கு மறுத்தரமாக "என் பிறந்தநாள் உற்சவத்தை முன்னிட்டு வந்தனோபசாரமாக அனுப்பியதந்திக்காக நான் உம்மையும் மதராஸ் குடிகளையும் விரும்புகிறேனென மறுதந்தி யனுப்பினர்.

---

ஸ்பெயின் தேசத்திலும் விசேஷமாய் மட்ரிட் நகரத்திலும் தற்போது பிச்சையிரக்கும் பிள்ளைகளின் கோஷ்டங்கள் பெருகிப்போய் ஜனங்களுக்குத் தொந்தரை கொடுத்து வருகிறதைத் தெரிந்த ஸ்பானிய கவர்ன்மென்ட், அவ்வாறு பிள்ளைகளைப் பிச்சை யிரக்க

வும், பாதைகளிலெல்லாம் படுத்துக்கொண்டிருக்கவும் விட்டுவருகிற தாய்தந்தையர்களைப் பிடித்து அபராதமாவது அல்லது சிறைச்சாலையிலாவது போட்டு அவ்வழக்கத்தை யெடுக்கவேண்டி உத்தரவொன்றைப் பிறப்பித்திருக்கிறது. இது ஒருவாறு நலந்தான்.

---

பிச்சையெடுத்த தற்காக ஒருவனைப் போலீஸார் ஹாலிபாக்ஸ் பெஞ்சு நீதிவிசாரணையில் நிறுத்தி அவன் 2000-பவுன் ஆஸ்தியுள்ளவனென்று குற்றஞ்சாட்டினார்கள். குற்றவாளியின் மருமகனும் அவ்விதமேசொல்ல அவனைப் பிச்சையெடாதபடி தடுப்பது கடினமென்றும் சொன்னான். ஷை யான் மத்தியானம் பிச்சைக்குத் துவக்கிச் சட்டைச்சாக்கின் நிறைய நாணயங்களோடு இரவுக்கு வீட்டிற்குவந்து சேருவானாம். நீதிவிசாரணையில் ஷை யானை மருமகனிடம் பிச்சைக்கு போகாதபடி வற்புறுத்தி விட்டார்களாம்.

---

பம்பாயில் ஜம்பூஸர் என்னுமூரில் அதிக ஆபரணங்களுடையளாய் ஓர் பெண் தனியே வாழ்ந்து கொண்டிருந்தனள். இவளது நகைகள்மீது காதல்கொண்ட மற்றோர் பெண் தந்திரமாய் அப்பெண்ணைத் தன்வீட்டுக்கழைத்துச் சென்று அவளைக் கொன்று நகைகளை யெடுத்துக் கொண்டு பிரேதத்தை வைக்கோற் போரில் மறைத்துத் தீக்கொளுத்திவிட்டதால் தீவாந்திரசிக்ஷை பெற்று அந்தமான் தீவுக்கு அனுப்பப்பட்டாளாம்.

---

விரோனிகா என்னும் கப்பலின் மாலுமிகள் நடுச்சமுத்திரத்தில் கப்பல் போய்க்கொண்டிருந்த போது அதிலிருந்த தலைவனையும் மற்றும் உரிமையாளர்களையும் கொன்று சமுத்திரத்திலெறிந்துவிட்டு கப்பலையும் கொளுத்திவிட்டுச் சிறுபடகிலேறிக் கரைவந்து சேர்ந்தார்கள். அவர்களோடுவந்த சமையற்காரனாகிய நீக்ரோவன் உண்மையைச் சொல்லவே நீதிஸ்தல தீர்ப்பின்படி இருவர் விடுதலையானார்கள். வாலிபனாயிருந்த மாலுமி யொருவனுக்கு முதலில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டு, பின்பு வேறுசிட்சையாக மாற்றப் பட்டது. மற்றவர்களுக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது.

---

புதுவை, சந்திரநாகர், காரைக்கால் ஆகிய இவ்விடங்களில் கன்னியாஸ்திரிகளின் பார்வைக்குள் 55 வருஷகாலமாயிருந்த பெண்பாடசாலைகளில் ஸ்தாபகம் செய்யப்பட்டிருந்த வேத சின்னங்களை எடுத்துவிடச் சொல்லிப் பிரான்சு கவர்ன்மெண்டாரிடத்திலிருந்து வந்த உத்தரவின்படி அவர்கள் அந்தச் சின்னங்களை யெடுக்க மறுத்ததின்மேல் பள்ளிக்கூடத்தை முழுவதும் எடுத்துவிட வெகு ஜரூராய் உத்தரவு வரவும் கன்னியாஸ்திரிகளனைவரும் வெகு துக்காக்கிராந்தராய்ப் பிரிந்துபோனதன்றி இனித் தங்கள் சொந்தத்தில் பள்ளிக் கூடங்களைத் திறக்க உத்தேசித் திருக்கின்றனர். இனி இவர்கள் திறக்கப்போகும் பள்ளிக்கூடங்களுக்கு பூர்வீக குடும்பங்களாய் இருக்கும்நபர்கள் தங்கள்பிள்ளைகளைத் தடைச்செய்யாமலனுப்புவரெனச் சொல்லப்படுகிறது.

---

சிக்காக்கோவில் வசிக்கும் கோடீஸ்வரர் ஒருவர், தன்வேலையிலே கருத்தாயிருப்பவளும், இதரவேலைக்காரருடனே தன் எஜமான்வீட்டுக் காரியங்களைக் குறித்துச் சம்பாஷியாதவளும், எப்போதும் கண்ணியமாயிருப்பவளும், மேசையில் போஜனம் பரிமாறப்படும் போது பிசகுசெய்யாதிருப்பவளும், ஒரு பார்வையில் விருந்தாளிக்கு வேண்டியனவும், வேண்டாதனவுமாகிய தின்வகைகளைக் கிரகித்துக்கொள்ளக் கூடியவளும், நல்ல தாதியும் சுயம்பாகியும், தையற் காரியுமாயுள்ள ஓர் பெண் தமது வீட்டிலிருந்து தாம் சாகும்பரியந்தம் வேலை செய்வாளாயின் மாதச் சம்பளத்தை நீக்கி இரண்டிலட்சம் பவுன் வெகுமானமாய்க் கொடுப்பதாகப் பிரசித்தம் செய்திருக்கிறாராம். இவ்விதமான எல்லாக் குண நலன்களும் வாய்க்கப்பெற்ற வேலைகாரப்பெண் எத்தேசத்தில் இருக்கின்றாளோ?

---

சிற்றெறும்புகளின் அதிகமான புற்றுகளாலேயே பிளேக் வியாதி அதிகமாயுண்டாகிறதென்னும் நோக்கங்கொண்டு பம்பாயிலுள்ள சிற்றெறும்பு புற்றுக்களையெல்லாம் நாசமாக்கப்பட்டதென பம்பாய் பத்திரிகையின் நேயரொருவர் கூறுகின்றனர். பிளேக் வியாதி வந்து மனிதரைத்தான் வாரிக்கொண்டு போகிறதென்றாலும்கூட கொசுவுகளுக்கும், எறும்புகளுக்கும், மனிதர் சாமான்களுக்கும் எலிகளுக்கும் சேடிகாலம் பிடித்திருக்கிறதே இதென்ன!

---

மலாய ஸ்டேட்டைச் சேர்ந்த சிலாஸ்கர் கிராமத்திற்கு, சிலோனிலிருந்து கடந்த மாதத்தில் ஏற்றுமதியான 50-காக்கைகளை யல்லாமல் பின்னும் சில காகக் கூட்டங்களை யனுப்பப்படப் போகிறது. இவ்விதம் மலாயா ஸ்டேட்டில் காகங்கள் நிரம்பப் பரவுமளவும் அனுப்பிகொண்டே வரப்படும். காகங்கள் மலாயநாட்டுக்குக் குடியேற வந்துற்றது பாக்கியந்தான்போலும்.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
16 OCT 1903
MADRAS.

ஓம்.
பரப்பிரம்மணேநம:.
"ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி."

# இகபரசுகசாதனி.

வாலியம் I.} 1903ஆகஸ்டுமீ {புத்தகம் IV.

## மனனமாலை.

---

பெருவெளியாயைம்பூதம் பிறப்பிடமாய்ப் பேசாத
பெரிய மோனம்
வருமிடமாய் மனமாதிக் கெட்டாத பேரின்ப
மயமாய் ஞானக்
குருவருளாற் காட்டிடவு மன்பரைக் கோத்தற
விழுங்கிக்கொண் டப்பாலுந்
தெரிவரிதாய்க் கலந்ததெந்தப் பொருளந்தப்
பொருளினை யாஞ் சிந்தைசெய்வாம்.

---

உணர்ந்துணர்ந்திழிந்த கன்றுயர்ந்துருவியந்தவிந்நிலைமை, உணர்ந்துணர்ந்துணரிலுமிறைநிலையுணர்வரிதுயிர்காள், உணர்ந்துணர்ந்துரைத்துரைத்தரியயனரனென்னுமிவரை, உணர்ந்துணர்ந்துரைத்துரைத்திறைஞ்சுமின்மனப்பட்டதொன்றை.

---

ஒன்றெனப் பலவெனவறிவரும் விடிவினுணின்ற
நன்றெழில் நாரணனான்முக னரனென்னுமிவரை
ஒன்றநும் மனத்துவைத்துள்ளிநும் மிருபசையறுத்து
நன்றென நலஞ்செய்வதவனிடை நம்முடைநாளே.

---

விண்ணுருவ மீசனென்பார் வேற்றுருவஞ்சீவனென்பார்
கண்ணுருவி யும்போற்கா ணென்பார்—திண்ணமதா
யத்துவித மாகாதவை யிரண்டு மாகாத
சித்துருவந் தானே சிவம்.

---

இருப்பதுபொய் போவதுமெய் யாதிருந்துமென்ற - மெவரிருந்துமென்செய்வா ரமன்வருங்காற் றேடும், பொருள்கொடுத்துப் பிழைப்பாயோ தமரையனுப்புவையோ - பொய்யுரைத்தாற் சென்றிடுமோ பிற்கணத்தேவருமே, னுருக்கம் வையுமையாவென் றழுதும்விடுவானே - வூட்டிவளர்த்திடு முடம்பிளுடு கொடுபோகானே, செருக்கெதுவோ நிலைமையில்லாப் பொருட்கமூலாய் நெஞ்சே- சிச்சிநீ யறிந்துகெட்டாற் செப்புவாருனக்கே.

---

உள்ளபடிநாம் பிழைக்கும்வகை யெதுவென்றுன்று - யுணர்ந்தவரைப் பரிகசிப்பா யுட்கருத்தை மறைத்துக், கள்ளவந்தனம் பூசைஜபதப மேற்காட்டிக் - கருத்தறியாரிடம் பகட்டிக் கண்டவர் பாலனுகா, யெள்ளளவும் வாக்குமனங்காய மொருப்படவிங் - கெத்தொழிலு முனூற்றுகிலா யெப்பய னெங்குறுவாய், பொள்ளவுடற்கே யழுவாயான்ம சுகம்பேணாய் - புறந்திரிவா யகமடங்காய் புகலுவதென் னுனக்கே.

---

வஞ்சநமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கு
மஞ்சியுனை யடைந்தே னையாபராபரமே.

ஆரிருந்தென் னார்போயென் னாமுதாகின் னருளின்
சீரிருந்தா லுய்வேன் சிவமே பராபரமே.

சினமிறக்கக் கற்றாலுஞ் சித்தியெல்லாம் பெற்றாலு
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே.

ஆனந்தமான நின்னையன்றி யொன்றை யுன்னாத
மோனந் தமியேற்கு முத்தி பராபரமே.

எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

சொல்லும் பொருளுமற்றுச் சும்மா விருப்பதற்கே
யல்லும் பகலுமெனக் காசை பராபரமே.

கொடுப்பானு மீசனதைக் கொள்வானு மீசனெனின்
மடுக்கா வெதிர்வினைகள் வந்து.

வெறுப்பு விருப்பாற் பிறப்பாமே லைக்கிப்போதே
வெறுப்பு விருப்பற்றால் விடும்.

எங்குமாய் நின்றாயை யெக்காலம் பூசித்தே
யெங்குமாய் நிற்க வெனக்கீ.

அதுவுநு வென்றெண்ணு தறிவோ டறிவாய்ப்
பதிதல்சிவ யோகம் பார்.

---

எத்தனை தாயைக் கண்டோ மெத்தனை தமரைக் கண்டோ, மெத்தனை மனையைக் கண்டோ மெத்தனை மகவைக் கண்டோ, மெத்தனை யூரைக் கண்டோ மெத்தனை பேரைக் கண்டோஞ், சித்தமே திரும்பா யீசன் றிருவடி காணு மாறே.

---

## அறிந்ததை அறிவித்தல்.

ஒரு அரசன் தனது புரோகிதரை யழைத்து எக்ஞும் பண்ணும்படி உத்திரவுசெய்து சகல சாமக்கிரிகளையுங்கொடுத்து, அதற்குத்தக்க பசு அகப்படாததால், அவ்வரசன் பசு லட்சணந்தெரிந்த ஒரு பிராமணனை வரவழைத்து அவனிடத்து சில திரவியங்களைக்கொடுத்துப் பசுவை வாங்கிக்கொண்டுவர அனுப்பினான். அப்படியே நல்லதென்றுசொல்லி அவ்விப்பிரன் சென்று சகல லட்சணமும் பொருந்திய ஒரு பசுவைக் கண்டுபிடித்து அதற்கு வேண்டிய திரவியங்கொடுத்து பசுவையோட்டிக்கொண்டு அரண்மனை நோக்கி வரும்வழியில் சில வஞ்சகர்கள் அப்பசுவின் அழகைப்பார்த்து எந்த உபாயத்தாலாவது பிராமணனை ஏமாற்றி பசுவை தாங்கள் அபகரிக்கவேண்டுமென்றெண்ணினார்கள். அவ்வஞ்சகர்களில் ஒருவன் மற்றவர்களைநோக்கி பசுவை யடித்துக்கொண்டுபோக தந்திரஞ் சொல்லுகிறான். நண்பர்களே! நாம் நாலுபேரும் அவன் போகிறமார்க்கத்தில் நாலு நாழிகை வழிக்கொருவராயிருந்து அந்தப் பசுவைப்பேய் நாயென்று சொல்லுவோம், அப்படியே நாலுபேருஞ் சொல்லுகிறதினால் அப்பிராமணன் பிரமித்து அந்தப் பசுவை விட்டுவிடுவானென்றான். அது கேட்ட மற்றவர்கள் சரியென ஒப்புக்கொண்டு பிராமணன் போகிற வழியில் நாலுபேர் நாலிடத்திலிருந்தார்கள். பிறகு அந்தப் பிராமணன் பசுவைப் பிடித்துக்கொண்டுபோகிறதைப்பார்த்து; முதல்வஞ்சகன் ஓ பிராமணா! பிராமணர்கள் நாய்வளர்ப்பதுண்டோ? அதிலும் மனிதர்களைக் கடித்துக் கொல்லப்பட்ட பேய் நாயை வளர்க்கலாமா? அது உமக்கு அடங்கியிருக்கிறதா? நால்வேதமோதும் அந்தணராய்ப்பிறந்து நாயைத்தான்வளர்க்கத் தொடங்கினீரே நல்லநாய் ஒன்று அகப்படாமற் போயிற்றா? என்று இவ்விதமாய்ப்பேசி, இது எல்லாரையுங் கடிக்கிறதாகத் தோற்றுகிறதே, ஆசையால் என்னருகாமையில் கொண்டுவரவேண்டாமெனப் பயந்தவனைப்போல ஓடிப்போனான். அதுகேட்ட பிராமணன் இவனுக்குப் பயித்தியம்போல் காண்கிறது. இவ்வளவு லட்சணமுள்ள பசுவைப்பார்த்திப்படியேன் சொல்லுகிறானென்று அவன்சொல்லை லட்சியஞ்செய்யாமல்போகிறபோது இரண்டாவது வஞ்சகன் பிராமணனைப் பார்த்து, கலிகாலத்தின் மகிமையோ பார்ப்பான் நாய்வளர்ப்பது, வெகு அழகு. நான் இதுவரையிலும் இம்மாதிரி எங்குங்கண்டதில்லை. உற்றுப்பார்த்தால் நாயிலும் பேய் நாயாயிருக்கிறது. ஒருவேளை கிட்டப்போனால் கடிக்குமோவென்று அஞ்சினவனைப்போல அவ்விடம் விட்டு அகன்றனன். அது கேட்டு அந்தப் பிராமணன் திடுக்கிட்டு, ஐயோ! இதுவென்ன ஆச்சரியம்! நாம் பேய் நாயைத்தான்வாங்கி மோசம்போனோமோவென்று சந்தேகங்கொண்டு, இந்தப்பேய்நாய் நம்மைஎங்கே கொல்லுகிறதோவென்று சிறிதுபயந்து அடிக்கடி அந்தப்பசுவைப் பார்த்துக்கொண்டே அப்பால் நடந்துபோகும்போது, மூன்றாவது வஞ்சகன் பிராமணனையும் பசுவையுங் கண்டவுடனே, ஓகோ! வென்று ஒருபெருங்கூச்சலிட்டு, பேய் நாய் வருகிறதே என்னசெய்வேன்! என்று பயந்தோடத் தலைப்பட்டான். சிறிதுதூரம் ஓடி ஓரிடத்தில்நின்று, ஓய் அந்தணரே! நீர் என்ன அந்தகரா? பேய் நாயைப்பிடித்து எங்கேபோகிறீர்? ஊரிற் சென்றால் ஜனங்கள் உம்முடையபேய் நாயைப் புடைப்பது மல்லாமல் உம்மையும் நன்றாய் புடைப்பார்கள். நானிருக்குமிடம் வரவேண்டாமென்று உரக்கச்சொல்லி கையிலிருந்த தடியையோங்கி வைத்துக்கொண்டு நின்றான். இதைப்பார்த்தப் பிராமணன் மிகவும்பயந்து நாம் பேய் நாயைத்தான் வாங்கிவந்தோம். இதில் சந்தேகமில்லை. இதைப்பார்த்த ஒவ்வொருவரும் இப்படியே சொல்லுகிறார்கள். நாம் நன்றாய் மோசம்போனோம். நாம் வாங்கும்போது பசுபோலத்தோன்றியது இப்போது நாய்போலல்லவோ தோன்றுகிறது. இதை இவ்விடத்திலேயே விட்டுப்போவோமென்றால், இது பிறகே துரத்திவந்து நம்மைக்கடித்தால் என்னசெய்கிறது. இதனுடையபற்களும் பெரியபற்களாகத் தானிருக்கிறது. ஒருவேளை கடித்தால் பிழைப்பதேயில்லை. இதற்கு என்னசெய்வோம். நாமின்றைக்கு உயிருடன் வீடுபோய்ச் சேருவோமாவென்று அப்பசுவின் வாயைப்பார்த்துக்கொண்டே சிறிதுதூரஞ்சென்றவுடன், நாலாவது வஞ்சகன், இவனைப்பார்த்து ஓ பிராமணா! உமக்குப் பயித்தியம் பிடித்திருக்கிறதோ, என்காணும் இந்தப்பேய் நாயைப் பிடித்துவருகிறீர், இதுஎவர்களையுங் கடித்துக்கொல்லுமே, உமக்குத் தெரியாதாவென்று சொல்லிவிலகிப்போனான். அதுகேட்டு அந்தப்பிராமணன்பயந்து, அப்பா, நான்தெரியாமல் இதைவாங்கிவந்தேன், இதை என்னிடத்திலிருந்து விடுவித்தால் உனக்குவெகு புண்ணியமுண்டாகுமென்று பரிதாபமாய்க் கெஞ்சினான். அப்படிகெஞ்சின பிராமணனைப்பார்த்து, ஐயா, எனக்கு உம்மிடத்தில் வரப்பயமாயிருக்கிறது, அதைவிடுகிற உபாயமாத்திரஞ்சொல்லுகிறேன், என்னவென்றால், இந்தப்பேய் நாயை அதோயிருக்கிற மரத்தடியில் கொண்டுபோய் நிறுத்தி, கையிலிருக்கும் கயிற்றைவிடாமல் அந்தமரத்தை மூன்று பிரதக்ஷணஞ்செய்து கயிற்றை மரத்தில் நன்றாய்முடிபோட்டுத் திருப்பிப்பாராமல் ஓடிப்போமென்று சொன்னான். பிராமணன் அப்படியேசெய்து



விட்டு பேய் நாயை மரத்தில்கட்டி விட்டபடியால் தைரியங்கொண்டு, உடனே ஓடிவிடாமல் அவ்வஞ்சகனிடத்துவந்து அப்பா! உன்னுடைய சகாயத்தினாலின்றுயிர் பிழைத்தேன், நீ இன்றைக்குப் பிராமணனை இரட்சித்தாய், துர்மரணத்தினால் நான் இறவாதபடி என்னைக் காப்பாற்றினாயே யென் பிராண ரட்சகாவென்று பலவாறாகத் தோத்திரஞ்செய்து அவனிடத்தில் அநுமதிபெற்றுக்கொண்டு, இன்றைக்கு நமக்குப் புனர்ஜனனமாயிற்று, இனிமேற் பசுவாங்கப் போகவேகூடாதெனத் தீர்மானித்துக்கொண்டு தன்வீடு போய்ச் சேர்ந்தான்.

பசுலட்சணம் நன்றாயறிந்த பிராமணன் பரிட்சித்துப் பிரத்தியட்சமாக வாங்கின பசுவாயிருக்க, அந்த வஞ்சகர்கள் கிரகிக்கும் நிமித்தம் பசுவைப் பேய் நாயாக்கி பிராமணனது மனதைமயங்கச்செய்து புத்தியை வெருட்டி மாறுபடுத்தினார்கள். இதனால் மனமானது ஸ்திரமில்லாததென்றும் பொய்யை மெய் யெனவும், மெய்யைப் பொய்யெனவும் பிரமிக்கத் தகுந்ததென்றும் ஏற்படுகிறது.

தர்மபூபதி யென்றொரு அரசன் தனது தர்மத்தினாலேயே மந்திரிமுதலான பரிசனங்களை நன்றாய்ச் சவரட்சணை செய்துவந்தான். இப்படியிருக்கையில் உலோபன் என்னும் பெயரையுடைய ஓர்மகாவஞ்சகன் மந்திரியாகவந்தான். அவன் தர்மபூபதிக்கு அதர்மங்களையே போதித்து அரண்மனையைச்சேர்ந்த வித்துவான்கள் முதலான பேர்களுக்கு ஏராளமாய் முன் அரசனால் கொடுக்கப்பட்ட மாதகட்டளைகளை யெல்லாம் நிறுத்திவிட்டான். இப்படிச் செய்துவிட்டால் அதிகபணம் பொக்கிஷத்தில் சேர்ந்துவிடும், அதைதான் எப்படியாவது தர்மசிந்தனையுள்ள அரசனைவஞ்சித்து அபகரித்துவிடலாமென்று உலோபன் எண்ணினான். இப்படியிருக்க அரண்மனையில் மாதக்கட்டளை யிழந்தவேலைக்காரர்கள் ஒன்றாகக்கூடி யாலோசித்து, இந்த உலோபனை இராஜ சமுகத்திற்கு வரவொட்டாமற் செய்விக்கிறதே யுக்தமென்று தீர்மானித்துக்கொண்டு அவன்வருஞ்சமயம்பார்த்து பலபேருமாய் அவன்மேல்விழுந்து நன்றாய் அடித்துத்துரத்தி விட்டார்கள். இந்தசங்கதியை யறியாத வரசன் உலோபன் ஏன்வரவில்லையெனக் கேட்டான். அவனுக்கு கொடியசுரம் சம்பவித்திருக்கிறது என்று அரண்மனை வேலைக்காரர்கள் பதில் சொன்னார்கள். அதைக்கேட்டவரசன் அவனிடத்துவைத்திருந்த பட்சத்தினால் அரண்மனை வைத்தியர்களை யனுப்பிப்பார்க்கும்படி செய்வித்தான். வைத்தியர்களும்மேற்கண்ட கூட்டத்திற் சேர்ந்தவர்களாதலால், ஓமகாராஜாவே! நாங்கள் எவ்வளவோ உயர்ந்த ஔஷதங்களைக் கொடுத்துப் பார்த்தோம், ஒன்றும் குணஞ் செய்யவில்லை, அவன் பிழைப்பது கஷ்டமாயிருக்கிறதென்று சொன்னார்கள். அரசன்மிகவும் விசனங்கொண்டு நான்மந்திரியைப் போய்ப்பார்த்து வரவேண்டுமென்று சொல்லிப் போகையில் அதையறிந்த சிலவேலைக்காரர்கள் உலோபன் இறந்தானென எதிரேவந்துசொல்லி அவன்பிணத்தை அரசன்பார்க்கக் கூடாதென சிலசாஸ்திரங்களைக் கொண்டுசொல்லி அரசனைப்போக வொட்டாமல் தடுத்து விட்டார்கள்.

பிறகு இந்தசெய்தியை உலோபனறிந்து நாம்மறுபடியும் அரண்மனைபோய்ச் சேர்ந்தாலல்லவா இவர்களுக்கெல்லாம் தகுந்த சிட்சை பண்ணிவைக்கலாம்? இவர்களை நன்றாய் சிட்சிக்காமல் நாம் வேறொருவேலையும் பார்ப்பதில்லையென பிரதிக்கினை செய்துகொண்டு இராஜாவினுடைய தரிசனம் எப்போது கிடைக்கப்போகிறதென்று வெகுகாலங் காத்துக் கொண்டிருந்தான். இப்படியிருக்குந் தருணத்தில் ஒருநாள் அவ்வரசன் சவாரிபுறப்படுகிற செய்திகேட்டு, வழியிலொரு ஆலமரத்திலேறிக்கொண்டு ஒருவருக்குந் தெரியாமல் ஒளித்துக்கொண்டிருந்தான். அரசன் சதுரங்க சேனைகளுடன் வாத்தியங்கள்முழங்க அம்மரத்திற்குச் சமீபமாய் வரும்போது இந்த உலோபன் என்னும் மந்திரிபிரத்தியட்சமாய் அரசனைக்கண்டு, ஓ மகாராஜாவே! நான்தான் உலோபன், என்னைஉங்கள் அரண்மனைக்கு வரவொட்டாமல் எல்லாருங்கூடி என்னைக் கண்டவிடத்தில் அடித்துத்துரத்துகிறார்கள் என்று உரத்த சத்தமாய்ச்சொன்னான். அதுகேட்டு அரசனும் திரும்பிமரத்தின்மேலிருக்கும் உலோபனைப் பிரத்தியட்சமாகப் பார்த்தான். அந்தகாலத்தில் அங்கிருந்த அரண்மனை வேலைக்காரர்களெல்லாம், ஓ! ஓ! ஏதுமோசம் வந்ததே, இனி எப்படியென்றுகூக்குரலிட்டு, சீக்கிரத்தில் விபூதியை மந்திரித்து அரசன்மேல்தெளித்து, பெரியசால்வையால் அரசனை மூடிமறைத்து, ஓ மகாராஜாவே நீங்கள்பயப்படவேண்டாம். நாங்களிருக்கிறோம். முன் இறந்துபோன உலோபன் இந்தமரத்தில் பிசாசாயிருந்து தங்களைக் கூப்பிடுகிறானென்றுசொல்லி பெரிய சத்தம் பண்ணி அதிக சீக்கிரத்தில் அரசனை அரண்மனைக்கழைத்துவந்து விட்டார்கள். பிறகு சில வேலைக்காரர்கள் உலோபனை நன்றாயடித்து அவ்வூருக்கப்பால் துரத்திவிட்டார்கள். இதையெல்லாங் கண்டவரசன் பிசாசால் பயந்தவனாகி கண்டபடி பிதற்றத் தலைப்பட்டான். அதற்குவேண்டிய உபசாரங்களைச்செய்து ஆஸ்தானமந்திரக்காரர்களும் தந்திரக்காரர்களும் அரசனைக் குண

ப்படுத்தினார்கள். இனி ஒருவேளை உலோபன் அரண்மனைக்குவந்தாலும் அரசன் அவனை உண்மையான மந்திரிதானென நம்பாமல் பிசாசுவந்திருக்கிறதென பயந்தோடும்படியாய் அரண்மனைவேலைக்காரர்கள் செய்துவிட்டார்கள்.

இப்படி இராஜன் தனது தோஷாகிதமான கண்களால் உலோபனை நன்றாய்ப்பார்த்தும் அவன் வசனங்களைக்கேட்டும் வேலைக்காரர்கள்செய்த உபாயத்தால்மனந்தடுமாறி புத்திமழுங்கி உலோபனைப் பிசாசு என்றே நிச்சயித்தான். இதனால் மனதிற்கு சுயமாய் எவ்வளவு பலமிருக்கிறதென்று நன்றாய்ப்புலப்படுகிறது. பொய்யை மெய்யென்று நாலுபேர் கூடிச்சொன்னால் மனமானது அப்படியேநம்பும். சுயபலமில்லாமல் சஞ்சலசுபாவமுள்ளதாயிருக்கும் மனதையுடையவர்கள், மதவிஷயமாய் நெடுநாளாக பலபேர்களால்சிறிதுகூடவிசாரணையில்லாமல் அனுஷ்டித்து வரப்பட்ட சிலமூடவழிகளினது நிஷ்பிரயோசனத்தைக்காட்டி அனுபவிகளான சிலவிவேகிகள் உண்மையை உள்ளபடிசொன்னால் நம்புவார்களோ? "எப்பொருளெத்தன்மைத்தாயினுமப்பொருண்மெய்ப்பொருள்காண்பதறிவு" என்றபடி சராசரமாகிய பொருள்களிலெல்லாம் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்துநின்ற உண்மையைக் காண்பதே மெய்யறிவு. இப்படி அனாதிகாலமாய் அஞ்ஞானசம்பந்தத்தால் ஏற்பட்ட உலககற்பனைகளையறிந்து நீக்கி உண்மைப்பொருளை யறியவகையிலாதவர்கள், "பொருளல்லவற்றைப் பொருளென் றுணருமருளானா மாணாப்பிறப்பு" என்றபடி மெய்ப்பொருள்க ளல்லாதவைகளை மெய்ப்பொருள்களென் றறிகின்ற விபரீதஞானத்தினால் அநேகபிறவிகளையெடுத்து மாளாத்துக்கத்திலிருந்து மீளவகையறியாதுழலுகின்றனர்கள். உலகத்தார் யாதுகூறினும் அதனுண்மையென்னவென்று தீரவிசாரிக்கவேண்டும். விசாரியாது உலகஞ்சொல்லும் வார்த்தையையப்படியே நம்பினால் மனிதனுக்கு விர்த்திகிடையாது. உலகம் பொய்சொல்லுமோவென வெண்ணி விஷயத்தைவிசாரியாதிருக்கக்கூடாது.. பொய்சொல்லினும் மெய்சொல்லினும் மனிதன் தன் அனுபவத்தில் உலககூற்றினுண்மையை யறியமுயலவேண்டும். இவ்விதம்முயன்றறியும்போது உலகத்தின்பொய்யும் மெய்யும் விளங்கும். பொய்யாகின் அதற்குக்காரணமும் மெய்யாகின் அதன்பிரயோசனமும் விசாரிக்கும்போதுதான் ஏற்படும். நம்மவர்களில் சிலர் யாதாமொருவிஷயத்தின் உண்மையை விசாரிப்பதே கிடையாது. முன்னாளிலேயே சொல்லப்பட்ட விஷயந்தானே நாமேன்விசாரிக்க வேண்டுமென நினைத்து எதையும் சுலபமாய் நம்பிவிடுகிறார்கள். சுயமாய் ஒவ்வொருவரும் எதையும் விசாரிக்கவேண்டும். விசாரம் என்பது தொடங்கும்வரையில் மனிதனுக்கு மதவிஷயத்தின் உண்மை யகப்படாது. யார் எதுசொல்லினும் அந்தந்தசமயங்களில் அது உண்மைபோலத் தானிருக்கும். விசாரணையில்லாத வைஷ்ணவன், வித்தை பலத்தாற்செய்யும் சைவருடைய பிரசங்கம் கேட்கும்போது சைவமதமே உண்மைபோலுமென் றெண்ணுவான். இன்னும் அதிக சாமார்த்தியமாயும் வாக்குச்சாதுரியமாயுமுள்ள ஒரு நாஸ்திகனுடைய பிரசங்கத்தை மேற்சொன்ன வைஷ்ணவனே கேட்டால் சைவத்தைக்காட்டிலும் நாஸ்திகமதமே சிலாக்கியமென எண்ணுவான். சொந்தவிசாரணையில்லாததால் இன்னும்பலமாய் வேறெந்த மதஸ்தர் என்ன சொன்னபோதிலும் அவ்வைஷ்ணவன் நம்புவான். இவ்விதமாய் நாளைக்கழித்தால் மனிதர்கள் எக்காலத்து சுகப்படுவது. ஆகையால் ஒவ்வொருவரும் தங்கள் சக்திக்கிசைந்தவாறு மதவிஷயமாய் விசாரிக்கவேண்டும். அதிலும் ஒருவன் எந்தமதத்தில் பிறந்தானோ அம்மதத்தினுண்மையை முன்னதாக விசாரிக்கவேண்டும். உண்மையிலுழைந்து விசாரிப்பவனுக்கு தன்மதமொன்றை விசாரித்து உண்மை தெளிவதற்கே காலம்போதாது. ஒருவேளை அதிதீவிர பக்குவமுடையனாயிருப்பவனுக்கு அவன்மதத்தின் உண்மை சீக்கிரத்தில் விளங்கிவிட்டால் அவனுக்குப் பிறர்மதம் விசாரித்தல் அனுவசியமாகவேமுடியும். அப்படிவிசாரிப்பினும் தன்மதவுண்மையி னுண்மைவிளங்கினவனுக்கு பிறர்மதமும் தம்மதத்தையே கூறுகின்றது, வித்தியாசமேயில்லையென அறிவான். உண்மையை விசாரித் தறிந்த சுகானுபவ ஞானிகளுக்குத் தோன்றும்மதம் ஒன்றே. மதவிசாரணையை உண்மையில் செய்யாதவர்க்கு உலகத்தில் பலமதங்கள் உள்ளதுபோலத் தோன்றும். ஆரியநேயர்களே! முன்செய்த புண்ணியத்தால் தங்களில் யாராவது ஒருகாலத்தில்முற்றுந்துறந்த அனுபவிகளான ஞானிகளைத் தரிசித்திருக்கலாம். அவர்களது ஆசாரங்களையும் பேச்சுகளையும் கவனித்துமிருக்கலாம். அப்படி கவனித்துப்பார்த்ததில் அந்தஞானிகளை நீங்கள் வைஷ்ணவர்களென்றாவது, சைவர்களென்றாவது அல்லது நாஸ்திகர்களென்றாவது அல்லது இன்னும் வேறெந்தமதத்தைச் சேர்ந்தவர்களென்றாவது அறிந்ததுண்டா? அல்லது அவர்களை பிராமணர்களென்றாவது வைசியர்களென்றாவது அல்லது வேறெந்தச்சாதியைச் சேர்ந்தவர்களென்றாவதுநீங்கள் அறிந்ததுண்டா? ஆரியநேயர்களே! சற்றுக்கவனித்துயோசியுங்கள். எல்லாவிஷயங்களையும் விவரமாய் எழுதுதல்கஷ்டம். அப்படி அதிகவிவரமாய் எழுதினாலும் வீண்தர்க்கத்திற்கிடமாம். பொறுமையுடன் தினந்தோறும் சிறிது நேரம், தனியே உட்கார்ந்து உலகம் எத்தன்மைத்து? பகவானது அருள் எப்படி விளங்குகிறது? என ஆராயப்புகுதலவேண்டும். மதவிஷயமாய் நமக்கென்னதெரியப்போகிறது, குரு ஒருவருமில்லையே எனச்சந்தேகிக்கவேண்டாம். உலகவியாபாரத்தை சிறிதுநேரம் தள்ளிவைத்து உண்மையில் ஆசையுடன் உட்கார்ந்து யோசிக்க வாரம்பித்தால், எள்ளிலெண்ணைபோல் எங்கும்பரிபூரணமாய் நிறைந்தோங்கும் அருளேமேனியாயுடைய பெருங்கருணைவள்ளல் சும்மாயிருப்பானோ? உண்மைவேண்டி உண்மையில் தினந்தோறும் தனியே உட்கார்ந்து யோசிக்கப்பழகி, அதுவே தவமாகி ஒழுகினால், அநேகபக்தர்களுக்கு உபதேசித்தருளிய முக்காலமறிந்த முக்கண்ணன் குருமூர்த்தமாய் வாரானோ? பகவானது சொருபத்தையும் அவனது விசித்திரசிருஷ்டிமகிமையும் அறிவதே நமக்குதொழில், அதுவே நமக்குப் பொருள், அதுவேநமக்கு இன்பம், வேறெதையும் நாம் நாடிடோமென உண்மையிலுட்கார்ந்து தவஞ்செய்யும் பக்தனுக்கு பரந்தாமன் உண்மைபகராது போவனோ?



## சாதனசதுஷ்டயம்.

நற்கதியடைய நல்லாசான் உபதேசம்வேண்டும். எவ்வளவு விஷயங்களை நாமே யுக்தியினாலறிந்தாலும் மதவிஷயத்தில் முடிவான நிச்சயம் நிலைபெறுவதற்கு குருவின் உபதேசமில்லாமல் முடியாது. "குருவிலான் பெற்றஞானங் குமரியைக் குமரிகூடி, மருவிய வின்பமொக்கு மண்ணிடை நம்போல்வந்த, குருவினாற் பெற்றஞானங் குமரியைக் குமரன்கூடி, மருவிய வின்பமொக்கு மென்பர்நன் மதியுளாரே." என்று பெரியோர் கூறியுள்ளார். ஆகவே அவர்வர் பரிபக்குவத்திற் கியைந்தவாறு ஒவ்வொருவரும் குருவையடைந்து உபதேசம் பெற்றே நற்கதி யடையவேண்டும். "சீடன்றன் பவநோய்க்குத் தேசிகன்வாய்மொழி மருந்தாம்" என்று கூறியவாறு சிஷ்யன் தன்னுடைய பிறவிநோயைத் தீர்த்துக்கொள்ள சற்குருவினிடத்துச் செல்லவேண்டும்.

சிஷ்யன் இலக்ஷணமெப்படி யிருக்கவேண்டும்? "நானார் கொல்லோ வென்றனக்கு நாதனார் கொல்லோ வெனக்கிங், கானப் பிறப்பு மிறப்பு மிவணடைந்த தென்கொலோ வென்று, தானே தனக்கிவ் விசாரந் தலைப்பட் டிடலுந் தேசிகனைத், தேனா ரளிபோற் றேயமெலாந் தேடு மவனே சற்சீடன்." என்றவாறு எவனொருவன் தனக்குத்தானே நான்யார்? நான் எங்கிருந்துவந்தேன்? நான்எங்குபோவேன்? எனக்கு ஒரு தலைவனுண்டா? அவன் எவ்வண்ணம்? என்று தனக்குள்ளே விசாரந்தோன்றி தன்னுடைய சந்தேகங்களைப் பரிகரிக்கத்தக்க குருவைத்தேடிச் செல்லுகிறானோ அவனே குணமுடைய நல்லசிஷ்யனாவன்.

ஓர் குருவையடைந்து ஞானோபதேசம் பெற்று வேதாந்தசிரவணஞ்செய்ய சிஷ்யர்கள் தக்க அதிகாரிகளாக விருக்கவேண்டும். "பக்குவ மிலார்க்கருளல் பாவிக் கறமோதல், மட்கலத்தை பொன்னாக்க வாஞ்சைகொளல், சொர்க்கமிலாக் கன்னிக்குக் காமனால் கட்டுரைத்தல், கண்ணிலார்க்குப் பொன்னாரம் பூட்டுதல் போலாம்." என்று ஆன்றோர் கூறியுள்ளார். ஆகவே சிஷ்யன் நல்லபக்குவத்தை யடைந்திருக்கவேண்டும். அந்தப்பக்குவம் யாதெனின், நித்தியாநித்திய வஸ்து விவேகம், இகமுத்திரார்த்த பலபோக விராகம், சமாதிஷட்கசம்பத்தி, முமுக்ஷுத்துவம் என்னும் நான்கு சாதனங்களைப் பெற்றிருத்தலே. சாதனமில்லாதவர்கள் ஒன்றையும் சாதிக்கமுடியாது.

### நித்தியாநித்தியவஸ்துவிவேகம்.

உலகத்திலுள்ள வஸ்துக்களைநோக்கி நித்தியமாய் என்றைக்கும் உள்ளதெது, அநித்தியமாய் அழிந்துபோவதெதுவென்று விசாரித்து, அநித்தியமாய்க் கழிந்தவஸ்துக்களில் புத்தியைவைக்காமல், நித்தியமாய்த்தேர்ந்த வஸ்துவில் மனம் பற்றியிருத்தலே நித்தியாநித்தியவஸ்து விவேகம். இவ்வுலகத்தில் மனிதர் இறக்கின்றார்கள். மிருகங்கள் சாகின்றன. மரங்களழிகின்றன. மேடாயிருந்த பூமி பள்ளமாகிறது. பள்ளமாயிருந்தது மேடாகிறது. குன்று மலையாகிறது. மலைகரைந்து மண்ணாகிறது. உற்றுநோக்கில் ஒவ்வொன்றும் மாறுகிறது. உலகமுழுமையும் சதாமாறுதலை யடைகிறது. மாறுதலில்லாமல் என்றைக்கும் ஒருபடித்தாயுள்ள வஸ்து ஒன்று உண்டு. மாறுதலில்லாத வஸ்து வொன்றில்லாமல் மாறுதலையுடைய வஸ்து இராது. எதனிடத்து உலகந் தோன்றி யிருந்து அழிகின்றனவோ அதுதான் மாறாதவஸ்து. அதுதான் ஆத்மா, அதுதான் கடவுள். அதுதான் பிரம்மம். பிரம்மந்தான் சத்தியமாய் என்றைக்குமுள்ளது. சாவகாசமாய் உட்கார்ந்து விசாரணை செய்யுங்காலத்து அசத்தாய்ப்போன உலகம் சத்துப்பொருள்போல மறுபடியுந் தோன்றிக்கொண் டிருப்பதென்னை? தாகமெடுத்து தண்ணீரைத்தேடி யோடுகையில் கானல்நீரைக்கண்டு தாகந்தணிக்க எத்தனங்கொண்டவொருவன், அதுகானல்நீர் சத்தியமானநீர் அல்ல

வென்றுணர்ந்தபின்னுங் கானல்நீர் தோற்றிக்கொண்டு தானிருக்கும். அப்படித் தோற்றினபோதிலும், அம்மனிதன் அக்கானல்நீரிடத்து சத்தியபுத்தியை வைக்கமாட்டான். அதுபோல் சத்தியம்போல் தோற்றிக்கொண்டிருக்கும் உலகின் உண்மையை விசாரிக்குமிடத்து, அது நாமரூபவிகாரமாயும் அநித்தியமாயும் முடியும். அப்படி அறிந்தபோதிலும் மறுபடியும் உலகம் கானல்ஜலம்போலத் தோன்றிக்கொண்டிருக்கும். ஒருதரம் சாஸ்திரங்களைக்கொண்டும் யுக்திகளைக்கொண்டும் விசாரித்ததில் உலகவஸ்துக்கள் அசத்தியமென வறிந்தபடியால் உலகம் தோற்றுவதினால் மறுபடியும் அதில் சத்தியபுத்தியைவைக்காமல், நித்தியமாய், விகாரமற்றதாய், சுயம்புவாயுள்ள ஆத்மாவிடத்துசத்தியநித்திய புத்தியை வைப்பதே நித்தியாநித்தியவஸ்து விவேகம். இந்தவிவேகம் மனிதர்களுக்குண்டாவது கஷ்டமாயினும் இது உண்டாகாவிடில் மேலுள்ள மூன்றுசாதனங்கள் கைகூடாவாம். எவ்வளவு படித்தும் பயனற்றதாம். அநித்தியமான உலகத்தை நித்தியமெனநம்பி அதிலுள்ள மண், பெண், பொன்முதலானவைகளை யிச்சித்து எவ்வளவு கர்மானுஷ்டானங்கள் செய்துவரினும் நித்தியமான பேரின்பத்தையடைய முடியாது.

## இகமுத்திரார்த்த பலபோகவிராகம்.

இப்பிறப்பிலும் மறுபிறப்பிலும் அடைவதற்குண்டான விஷயபோகமனைத்தும் கணத்திலழியுமென்றும், அவைகள் துன்பத்தையே கொடுக்குமென்றுங் கண்டு, மனம் பற்றறவிடுதலே இகமுத்திரார்த்த பலபோகவிராகம்.

உலகத்தில் சுகமென்பது நித்தியமாயில்லையென்று எளிதில் அறியலாம். ஒருவனுக்குச் சுகமாயிருந்தவொன்று மற்றொருவனுக்கு துன்பத்தைக் கொடுக்கிறது. ஒருவனுக்குத் துன்பத்தைக்கொடுத்தவொன்று மற்றொருவனுக்கு இன்பத்தைக்கொடுக்கிறது. ஒருவனுக்கு நேற்று இன்பமாயிருந்தது அவனுக்கே இன்றைக்குத் துன்பத்தைக்கொடுக்கிறது. மற்றொருவனுக்கு முன் துன்பத்தைக்கொடுத்தது எதுவோ அதுவே அவனுக்குப்பிறகு இன்பத்தைக்கொடுக்கிறது. இவைகள் ஒவ்வொருவருடைய தினஅனுபவம். நித்தியாநித்தியவஸ்து விவேகத்தால் உலகத்திலுள்ள வஸ்துக்களெல்லாம் நாமரூபாத்மகமானவைகள் சத்தியமானவைகளல்லவென்று அறிந்தபின்னர், அசத்தியமாயும் அநித்தியமாயுமுள்ள உலகத்தில் நித்தியமான சுகமெப்படி கிடைக்கும்? இவ்வுலகத்திலும் சொர்க்கத்திலுமுள்ள போகங்களை மலமூத்திராதிகளைப்போலவும், வமனஅசனத்தைப் போலவும் நிந்திக்கத்தக்கவைகளென்று மனதாரவெண்ணி வைராக்கியத்தை யடைவதே இகமுத்திரார்த்த பலபோகவிராகம். ஆனால் வைராக்கியங்கள் அநேகவிதமுண்டு. சாஸ்திரங்களைக் கேட்கும்போது மாத்திரம் பாபம்செய்யவேகூடாது, புண்ணியமே செய்யவேண்டும். எப்போதும் பகவானைத் துதிக்கவேண்டும் என்று நினைப்பது புராணவைராக்கியம். பிரேதத்தைக் காட்டுக்குக் கொண்டுபோவதைக் கண்டகாலத்தில் மாத்திரம் நிலையில்லாதவாழ்வு. இதிலென்னசுகம், எல்லாரும் இறக்கத்தானேவேண்டும். பிரபஞ்சம் இந்திரசாலத்திற்கிணையானதென்று நினைப்பது ஸ்மசானவைராக்கியம். கர்ப்பவேதனை பொறுக்கமாட்டாமல் இனி புருஷன்முகத்தைப் பார்க்கவேகூடாதென்று உறுதியாய் நிச்சயஞ்செய்யும் ஸ்திரீயைப்போல், குடும்பத்திலோர்சங்கடம் வருங்காலத்தில் மாத்திரம் இகலோகத்தில் துன்பமேயன்றி இன்பமணுவளவுமில்லையெனத்தேர்ந்து, இவ்வற்பவாழ்வைநீக்கிப் பேரின்பத்தை யடையவேண்டுமென்று நிச்சயிப்பது பிரஸூத வைராக்கியம். இவைபோல்வன வைராக்கியங்கள் அநேகமுண்டு. இவைகளெல்லாம் சிறிதுநாழிகைதானிருக்கும். அந்தசமயங்கள் சென்றால் வைராக்கியம்நீங்கி பழயபடி ஆசைமேமுன்வந்து நிற்கும். இம்மாதிரி வைராக்கியங்களை யடைவது இகமுத்திரார்த்தப் பலபோகவிராகமாகாது. எந்தவேளையிலும் உலகத்தை அநித்தியமெனக்கருதி அதிலுள்ள அற்பசுகத்தைக்கண்டு பிரமித்து ஓடாமல் பகவானே நித்தியமான சுகசொரூபியென்று அவரிடத்தில் மனம் பற்றியிருத்தலே இகமுத்திரார்த்தப் பலபோகவிராகம்.

## சமாதிஷட்கசம்பத்தி.

இது ஆறுஅங்கங்களையுடையது. அவைகள் சமம், தமம், உபரதி, திதிக்ஷை, சிரத்தை, சமாதானம் என்பவைகளே. மேற்கூறிய இரண்டுசாதனங்களைக் காட்டிலும் சமாதிஷட்க சம்பத்திதான் உயர்ந்தது.

### சமம் - தமம்.

அகமாயுள்ளமனதை நிக்கிரகஞ்செய்தல் சமம். தமமென்பது பாஹ்யேந்திரியங்களை நிக்கிரகஞ்செய்தல். மனதையும் இந்திரியங்களையும் வெளிசென்று கண்டவிஷயங்களிற் புகுந்து வீணாய் அலையவிடாமல், அவைகளை அகமுகமாய்த் திருப்பி ஆத்மாவைப் பற்றும்படியாய்ச் செய்யுஞ் சாதனங்களே சமதமாதிகள். இப்போது நாம் சிலவஸ்துக்களைக் காண்கிறோம். வஸ்துவைக் காண்பது கண்ணென்னும் அவயவமல்ல. கண்ணுக்கும் மூளைக்கும் இடையிலே உள்ள நரம்பின்வழியே ஓடிக்கொண்டிருக்கும் இந்திரியமே வஸ்துவைப்பார்க்கவிக்க உபயோகமானது. கண்ணென்னும் அவயவமானது காணுந்தொழிலுள்ள இந்திரியத்திற்கு ஓர்கருவி. அவ்விந்திரியமிலதேல் ஒருவனுக்கு நூறுகண்களிருப்பினும் ஒருவஸ்துவையும் அவன் காணமுடியாது. ஒரு காக்ஷியைப் பார்க்கவேண்டுமானால் முதலில் கண்ணென்னுங் கருவி, அதற்குப்பின்னுள்ள இந்திரியம், மனசு, ஆக இம்மூன்றும் வேண்டும். மனமானது வேறோர் இந்திரியத்துடன் சேர்ந்து வேறோர் கருவியின் மூலமாகப் பிறிதோர் வேலையிலிழிந்து விட்டால், கண்ணிந்திரியமும் கருவியுஞ்சேர்ந்து ஒன்றையும் பார்க்கமுடியாது. ஆகையால் ஓர் விஷயத்தை உணரவேண்டுமானால், அவ்வுணர்ச்சிக்கு கருவியுடன், இந்திரியம், மனசு இம்மூன்றும் அவசியம். சத்தத்தைக் கேட்பதற்கு செவியென்னுங் கருவியும், செவி இந்திரியமும் மனமும் வேண்டும். இப்படியே பிறவுணர்ச்சிகளுக்குமிம்மூன்றும் அவசியம்.

வஸ்துக்களைக் காணும்போது மனமானது வெளியே செல்லுகிறது. கண்களை மூடிக்கொண்டு நினைக்கும்போது மனம் உள்ளேயே இந்திரியங்களுடன் கலந்து வேலைசெய்கிறது. கருவியுடன் கலந்து விஷயங்களை நுகருங்காலத்தும், கருவிகள் ஒத்தாசையில்லாமல் உள்ளேயே விஷயங்களை நினைக்குங்காலத்தும் இந்திரியங்களுக்கு வேலையுண்டு. இந்திரியங்களின் ஒத்தாசையில்லாமல் ஒரு எண்ணமும் உண்டாகமாட்டாது. ஒரு வஸ்துவின் அடையாளம் அல்லது குறிப்பு இல்லாமல் மனம் ஒன்றையும் நினைக்காது. அவ்வடையாளங்களை மனதிற்குக் கொண்டுவருவது இந்திரியங்கள்தான். சொப்பனங் காணும்போது வெளியுருவமான கண் ஒன்றையும் காணுவதில்லை. அப்போது கண் மூடப்பட்டேயிருக்கிறது. ஆனால் மனிதன் சொப்பனத்தில் அநேக வஸ்துக்களைக் காண்கிறான். மனிதனானவன் கண்ணென்னும் உறுப்பால் ஜாக்கிரத்தில் கண்டவஸ்துக்களின் அடையாளத்தை அல்லது குறிப்பை சொப்பன காலத்தில் இந்திரியங்கள் மனதிற்குக்கொண்டு வருகிறபடியால் மனிதன் அநேகவஸ்துக்களையும் பலதேசங்களையும் பலமனிதர்களையும் காண்கிறான். சொப்பனமில்லாமல் தூங்குங்காலத்தில் மனதில்லாதிருக்கிறபடியால் மனிதன் ஒன்றையும் அறிகிறதில்லை. ஜாக்கிரத்தில் வஸ்துக்களைப் பார்ப்பதற்கு கண்ணென்னுங் கருவியுதவுகிறபடியால் அக்காலத்தில் கண்ணே முக்கியமென அறிகிறோம். சொப்பனகாலத்தில் இந்திரியங்களே முக்கியமென அறிகிறோம். சொப்பனம் நீங்கி உறங்குங்காலத்தே ஒன்றையுங் காணாதபடியால் இந்திரியங்கள் முக்கியமல்ல மனமேமுக்கியமென அறிகிறோம். மனம் வெளியே ஓடி விஷயங்களை நாடுவதற்கும், உள்ளேயே பல எண்ணங்களை நினைப்பதற்கும், இந்திரியங்களே முக்கியகாரணமாயிருப்பதால் அவைகளை முதலில் அடக்கிப் பின்னர் மனதை யடக்கவேண்டும். இந்திரிய நிக்கிரகமே தமம், மனோநிக்கிரகமே சமம்.

(இன்னும்வரும்.)



## இந்தியாவில் பூர்வீகப்பயிர்த்தொழில்.

உலகத்தில் மனிதர்கள் உஜ்ஜீவிக்கும் பொருட்டு ஏற்பட்டிருக்கும் பலவிதத்தொழில்களில் உழுது பயிரிடுந்தொழிலே மேலானதாயும், ஒருவனிடத்திற் சேவகஞ்செய்து உண்ணும் உணவிலும் உழுதுபயிரிட்டுண்ணும் உணவேசிறந்ததாயுமிருக்கின்றது. இதுவிஷயத்தை ஔவை "பூமிதிருத்தியுண்" என்றும், திருவள்ளுவர் "உழுதுண்டுவாழ்வாரேவாழ்வார் மற்றெல்லாம்தொழுதுண்டு பின் செல்பவர்" என்றும் கூறியிருக்கின்றனர். இதன் கருத்தாவது உழுதொழிலைச்செய்து உண்டுவாழ்பவர்களே சுயாதீனர்களாய் வாழ்பவர்களென்றும் மற்றவர்களெல்லாம் பிறரைத்தொழுது அவர்கொடுக்க வாங்கியுண்டு அவர் பின்சென்று அச்சுயாதீனம் இழந்திருப்பவர்களென்பதாம். மேலும் "ஏருமிரண்டுளதாயில்லத்தில் வித்துளதாய் நீரருகேசேர்ந்த நிலமுளதாய், ஊரருகே சென்று வரவெளிதாய்ச் செய்வாருஞ் சொற்கேட்கில் என்றுமுழவேயினிது." எனவும் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படியெல்லாமிருந்தும் முன்காலத்தில் இந்துதேசத்தில் குடிச்சனங்கள் பயிரிட்டுச் சீவனஞ் செய்வதுமிகவும் கஷ்டமாயிருந்தது.

குடிகள் தங்கள் தேகபோஷணைக்காகப் பயிரிடத்தொடங்கினால் முதல்முதல் இதுபள்ளத்தாக்கு, இது மேட்டுப்பாக்கு, இதுசமநிலமென்றும், இதுசெய்கால் இது காம்பென்றும் நிலவளமறிவதுடன் ஏரிப்பாய்ச்சல், ஆற்றுக்கால்பாய்ச்சல்முதலான நீர்வளமறியவேண்டும். காடழித்துக் காம்புதிருத்தவேண்டும். உழவுக்கு வேண்டிய கலப்பைமுதலிய ஆயுதங்களைச் சேகரித்து காலமறிந்து தகுந்த தானியத்தை விதைக்கவேண்டும். பயிர்வளர்ந்தபின் சற்சனரைப் பரிபாலிக்கும்படி துர்ச்சனரைப் பரிகரிப்பதுபோல் அதற்குவிரோதமில்லாமற் களை எடுத்தபின் நீர்பாய்ச்சவேண்டும். பயிர்வளருங்காலத்தில் ஆடு, மாடு, முதலிய மிருகங்கள் அழிக்கவொட்டாமல் சுற்றி வேலியிடவேண்டும். பூச்சிகளாற் சேதப்பட்டுப்போகாமல் அடிக்கடி பார்வையிட்டு "பாராதவுடமை பாழ்" என்பதைக்கருதி நன்றாய் விளைவதற்கு, வேண்டிய முயர்ச்சிகளைச் சோம்பலில்லாமல் அடுத்தடுத்துச் செய்யவேண்டும். கருக்கொண்டு விளை

ந்து மணிமுற்றிக் கற்புடைமகளிர்போலத் தலைவணங்கி மடியுங்காலத்தில் "ஏரினு நன்றாலெருவிடுதல் கட்டபின் னீரினு நன்றதன்காப்பு" என்பதனால், களவு போகாமற் கண்ணை இமைகாப்பதுபோலப் பத்திரமாய்ப் பாதுகாக்கவேண்டும். பருவமறிந்து அறுத்து தானியத்தை யளந்து தொகையாக்கி, அதில், கருமான், தச்சன், தட்டான், கணக்கன், குயவன், வண்ணான், அம்பட்டன், தோட்டி, தலையாரி, வெட்டியான் முதலானவர்கள் செலவுபோகத் துரைத்தனத்தாருக்குச் சேரவேண்டிய மேல்வாரத்தை யாதோ ராட்சேபமுமில்லாமற் சேர்த்துவிடவேண்டும். மற்றகுடிவாரத்தில், பெருமாள்கோயில், சிவன்கோயில், பிள்ளையார்கோயில் மாரி, பிடாரி கோயில்களுக்கும் நம்பியான், குருக்கள், புரோகிதன், ஜோசியன், வைத்தியன், வாத்தியார், ஆண்டி, தாதர்களுக்கும் களவாசத்திற்கும் இவ்வளவு இவ்வளவென்று பகுத்துக்கொடுத்துவிட்டு மிகுந்தகொஞ்சத் தானியத்தைத் தங்கள்வீட்டிற்கு கொண்டுபோய் அதனாற் பெண்சாதி, பிள்ளை, தாய், தந்தை, தமையன் முதலாகிய குடும்பத்தாரெல்லாம் ஜீவனம் பண்ணவேண்டுமென்றால் இது அவர்களுக்கு எத்தனை நாளுக்குத்தான் போதும், பின்னும் வீட்டில்நடக்கும் சுபாசுபங்களையும், வண்மை, தானதர்ம முதலான வைகளையும் அந்தச்சொற்ப பலனைக்கொண்டே நடத்தவேண்டும். அவைகளெப்படித்தான் நடத்தப்படும். பனிபெய்தோ கடல்நிரம்பும், சம்சாரமோ சாகரமாச்சுதே. ஆற்றுக்கால் பாய்ச்சலில்லாத இடங்களிலே மேற்சொல்லிய பாடுகளெல்லாம் பட்டும் மழைபெய்யாமல் வானங்காய்ந்து போகுங்காலத்தில் ஏரியில் தண்ணீரில்லாமையால் அந்தசொற்ப பலனுங்கிடையாது. பட்டபாடெல்லாம் விழலுக் கிறைத்த நீராகும்.

சிலவூர் மிட்டாவும் சிலவூர் பட்டாவும் சிலவூர் சுரோத்திரியமும், சிலவூர் சர்வமானியமாயு மிருக்கின்றன. இவைகளிற் பட்டாவூர்களைப்போல குடிகளுக்கு அசௌக்கியத்தை யுண்டுபண்ணுவதுவேறில்லை. விதைத்து விளைந்தாலும் விளையாமற் சாவியாய்ப் போனாலும் அவர்கள் சர்க்கார் தீர்வையை செலுத்தியே ஆகவேண்டும். வெகுநாளுக்கு முந்நாளில் யாராவது பட்டாதார் திர்வையைச்செலுத்தாவிடில் அவர்களை கால்பெருவிரலுக்கும் கழுத்துக்கும் அண்ணாந்தாள் போட்டு வெயிலில் நிறுத்தி மிகவும் கஷ்டப்படுத்துவார்கள். குடிகள் அந்த உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் கலப்பை, கார், முதலானவைகளையும் வீட்டுத் தட்டுமுட்டுகளையும் விற்றுக்கொடுத்துவிட்டு கொஞ்சநாளில் ஏழைகளாய் விடுவார்கள்.

சிலகிராமங்களில் ஏரிகளிருந்தும் அவைகளுக்கு தண்ணீர்வருவதற் கிடமில்லாம லிருப்பதினாலும், அதிக நீர்கொள்ளாத சிற்றேரிகளா யிருப்பதினாலும் முதற்போகத்திற்கேயன்றி இரண்டாம்போகம் மூன்றாம்போகம் பயிரிடுவதற்கு ஏதுவில்லாம லிருக்கின்றது.

அந்த முதற்போகத்திலும் அறுபதுநாள், எழுபதுநாள், மூன்றுமாதத்தில் விளையும் சொற்ப பயிரிக்குதான் உதவியாகும். ஆறுமாதம், பத்துமாதத்தில் விளையும் பயிருக்கு உபயோகமாகாது. சில இடங்களில் பள்ளமடையிலிருந்து மேட்டுநிலத்திற்கு நீர்பாய்ச்ச வேண்டி ஏரிநீரையே யல்லாமற், குளத்து நீர் கிணற்று நீரையும் கவலைபோட்டும் ஏற்றம் போட்டும் மார்பில் இரத்தம்விழ இடுப்பொடிய கைசலிக்க இறைத்து வருத்தப்படுவார்கள். இதற்குப்பாடு அதிகம்பலன்கொஞ்சம். அன்றியும் குடிகளுக்குள் அவரவர் தங்கள் தங்கள் கழனிகளுக்கு ஏரித்தண்ணீரை மடைவழியே மாற்றிக்கொண்டுபோய்ப் பாச்சுதற்காக, இராத்திரியில் விஷஜெந்துவாகிய பாம்புகடித்தாலும் கேட்பாரில்லாமற் தனியே போய் நித்திரையுமிழந்து வருத்தப்படுகிறது மல்லாமல்; இந்தவிஷயத்தில் ஒருவருக்கொருவர் மாளாத பகை கொண்டு மண்டையை உடைத்துக்கொள்ளுவார்கள். பயிர்த்தொழிலில் இன்னும் அனேகவித நஷ்டங்களுண்டு. உழுதொழிலுக்கு வேண்டிய சாமான்களுக்கும் சர்க்கார்தீர்வைக்கும் பணம் அவசரமாய்வேண்டியிருக்கும். அதற்காகக்கூட்டிலும் குதிரிலும் சேர்த்துவைத்த உசிதமான பழையநெல்முதலியவைகளை காலவிலைக்குத் தக்கபடியன்றி நேர்ந்தவாறுவிற்றுகொடுத்துவிட்டுத் தாங்கள் அநுசிதமான வரகு, சோளம் முதலானவைகளைச் சமைத்துப் புசித்தும், கம்பு, கேழ்வரகுகளைக் காய்ச்சிக் குடித்தும், உடம்புவளர்த்துவர, அவை சரீரத்திற்கு ஏற்றுக்கொள்ளாமல், சுரம், குளிர், தலைநோய், வயிற்றுநோய் முதலானவை களுண்டாகி அவஸ்தைப்படும் பொழுது ஊர்வைத்தியனை யழைத்து சிகிச்சைசெய்யும்படி சொல்ல, அவன்பார்த்து, இது பொல்லாதஅசாத்திய வியாதி இதற்கு தகுதியான பரமௌஷதப் பிரயோகம் பண்ணவேண்டுமென்று சொல்லி பையிலிருந்து வீரம் பூரம் ரசபாஷாணங்களை எடுத்து இது சிந்தாமணி, இது அமிர்த சஞ்சீவியென்று பெயர்களை மாத்திரம் பிரமாண்டமாகச்சொல்லி கைகொண்டமட்டும் இழைத்து மொத்தை மொத்தையாக வழித்து கஷாயங் கொடுத்து சாந்திபண்ணத் தெரியாமல் உபத்திரவத்தை அதிகப்படுத்திவிட அப்படியும் சங்கடப்படுவார்கள். இப்படியாக முன்னாளில் குடி ஜனங்கள் பயிர்த்தொழிலில் ரொம்பவும் கஷ்டப்பட்டார்கள். ஆனால் தற்கா



லத்தில் ஏற்பட்டிருக்கும இந்திய கவர்ன்மெண்டாரால் ஏரிகளில்லா ஊரில் ஏரிகள் அமைத்தும் சிற்றேரிகளாக யிருப்பவைகளை பெரிய ஏரிகளாகச் செய்தும் குடிகளுக்கு அநேக ஒத்தாசைகள் ஏற்பட்டு அவ்வளவு கஷ்டப்படுவதில்லை. இன்னும் கவர்ன்மெண்டார் பயிர்த்தொழிலுக்கு வேண்டிய அநேக நன்மைகளைச் செய்வார்களாக.

(ஓர்குடியானவன்.)

## ஔவையார்சரித்திரம்.

(முன்தொடர்ச்சி.)

முன்னொரு காலத்தில் உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டியன் மதுரையில் அரசாட்சிசெய்து கொண்டிருக்குங் காலத்தில் திருவள்ளுவர், இடைக்காடர், ஔவை முதலியோருடன் மதுரைக்குச்சென்று இறுமாப்பு கொண்டிருந்த சங்கப்புலவர்களை கர்வபங்கஞ் செய்யப்போயினர். அப்போது ஔவை அச்சங்கப் புலவர்களை நோக்கித் தன்னுடைய ஐந்து விரல்களையும் குவித்தும், மூடியும், கொஞ்சம் திறந்தும், ஆள்காட்டி விரலொன்றை மாத்திரம் நீட்டியும், ஐந்து விரல்களையும் அகலத்திறந்தும் இப்படி சில ஞானக்குறிகளைக் காட்டி இவற்றிற்குப் பொருளென்னவென்று வினவினர். அவர்கள் அவர் கருத்தறியாதவர்களாய் சிற்றின்பவிஷயமாக.

இவ்வளவு கண்ணுடையா ளிவ்வளவு சிற்றிடையாள்
இவ்வளவு போன்ற இளமுலையாள்—இவ்வளவா
ணைந்த வடலா ணலமேவு மன்மதன்றன்
ஐந்து கணையால் வாடினாள்.

என ஓர் வெண்பாவைப்பாடவே இதைக்கேட்ட ஔவை அவர்கள் மனம்புழுங்க

ஐயமிடுமி னறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வளவேனு மன்ன மிட்டுண்மின்—தெய்வம்
ஒருவனே என்று முணரவல்லீரேல்
அருவினைகளைந்து மறும்.

என தான் வேறோர் வெண்பாவைச்சொல்லி அக்குறியின் ஞானார்த்தத்தை வெளியிட்டனர்.

ஒருநாள் ஔவையார் எங்கேயோ போயிருந்து தன்னிருப்பிடத்திற்குப் போகவேண்டித் திரும்பிவரும் போது வழியில் அஸ்தமித்துவிட்ட படியால் இன்றைக்கு இங்கே இராத்தங்கிப் போவோமென்று நினைத்து அவ்விடத்தி லிருந்தவர்களைப் பார்த்து ஐயா! படுத்துக் கொள்ள இடங்கிடைக்குமோ வென்று கேட்டார். அதற்கவர்கள் இந்தப்பட்டணத்திற்கு மேலண்டையாக ஒரு திருவாசற்சாவடி யிருக்கின்றது அதிலே படுத்துக் கொள்ளலாம். ஆனால் அதிலே ஒரு பிசாசமிருந்து கொண்டு அதில் வந்தவர்களை யெல்லாம் அறைந்து போடுகிறது. ஆகையால் எவருமதிலேசோ பயப்படுகிறார்களம்மா வென்று சொன்னார்கள். அதைக்கேட்டு ஔவை பேயைப் பேயடிக்கப் போகிறதோ வென்று அந்தச்சாவடியில் படுத்துக்கொண்டார்; அந்தச் சமயம் வெளியேபோயிருந்த அப் பெண்ணாவேசம் வந்து அம்மையார் படுத்திருக்கிறதைக்கண்டு இயல்பாய் மிகவுமாங்காரத்துடனே சாமந்தோறும் "எற்றெற்று" என்று வந்தறைந்து போகிற வழக்கப்படி முதற்ஜாமத்தில் அவரையறையவந்தது. அப்போ தம்மையார் உறக்கம் நீங்கி விழித்துப்பார்த்து

வெண்பா விருகாலிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையா லெழுதானைப்—பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
யெற்றோமற் றெற்றோமற் றெற்று.

என்றொரு வெண்பாவைப் பாடினர். அதனைக்கேட்ட பேய் கல்வியறிவுடையதாதலால் கல்வியறிவில்லாத மூடனை இச்சித்த நமது பூர்வோத்தரத்தை யறிந்து சொன்ன இவள்தேவியே. இவளை நாமொன்றுஞ்செய்ய வாகாது என்று பயந்து அவ்விடம் விட்டோடி இரண்டாஞ் ஜாமத்தில் மீண்டும் "எற்றெற்று" என்றுவந்தது அப்போதம்மையார்

கருங்குளவி சூரைத்து றீச்சங் கனிபோல்
வருந்தினர்க் கொன்றீயாதான் வாழ்க்கை—பெரும்பகலே
யிச்சித்திருந்த பொருள் தாயத்தார் கொள்வரே
யெற்றோமற் றெற்றோமற் றெற்று.

என்று மற்றொரு வெண்பாவைப்பாடினர். அதுகேட்டவுடனே பேய் ஓடிப்போய் மூன்றாஞ்சாமத்தில திரும்பவும் "எற்றெற்று" என்றுவந்தது அப்போது ஔவையார்;

வானமுளதான் மழையுளதான் மண்ணுலகில்
தானமுளதாற் றடமுளதா—லானபொழு
தெய்த்தோ மிளைத்தோமென் றேமாந் திருப்போரை
யெற்றோமற் றெற்றோமற் றெற்று.

என்று மீண்டுமொரு வெண்பாவைப்பாடினர். இப்பாடலைக் கேட்ட அலகை யோடிப்போயிற்று. பின்பு நான்காம் ஜாமத்தில் முந்தியபடியே இரைந்து கொண்டுவர ஔவையார்

எண்ணாயிரத் தாண்டு நீரிற் கிடந்தாலும்
முண்ணீரம் பற்றாக் கிடையேபோல்—பெண்ணாவாய்
பொற்றொடி மாதர்புணர் முலைமேற் சாராரை
யெற்றோமற் றெற்றோமற் றெற்று.

என்று பாடிய வெண்பாவைக்கேட்டு அந்தப்பெண்ணு
வேசம் ஒடுக்கமெய்தி அம்மையாரை வந்துவணங்க
அம்மையா ரதன்பேரி லிறக்கமெய்தி அதனை நோக்கி
உன்வரலா றென்னவென்று வினவினர். அதற்கு அப்
பேய் முன்னர்தான் அவ்வூராள்வோன் புத்திரியா யிருந்
ததும், ஒருநாள் உப்பரிகையின்மேல் பந்தாடிக்கொண்
டிருக்கையில் மாளிகையி னடிவாரத்தில் வழிப்போக்க
னாய்வந்து தங்கிய ஓரழகான இராஜகுமாரனைக்கண்டு
மோகமெய்தி "நீ இவ்வூர்ச்சாவடியில் இன்றிரவில்இன்
னவிடத்தில் வந்திருந்தால் நான் அங்குவந்து சேரு
வேன்" என்று ஓர் ஓலையிலெழுதி அவன் முன்போட
வும், அவன் கல்வி யறிவில்லாதவனாதலால் அவ்வழியி
லிருந்த குட்டரோகிக்குக்காட்ட அத்துஷ்டன் அவ்
இளையவனை பயமுறுத்தி ஊரை விட்டோடச்செய்து
தான்குறித்தவிடத்தில் அவன் போயிருந்ததும் அதனை
யறியாததான் அவனைத்தழுவி அசங்கியப்பட்டு உயிரை
மாய்த்துக் கொண்டதையும் சொல்லிற்று. அதுகேட்ட
ஔவையார் உனக்குவேண்டியவரம் யாதென, அலகை
யானது நான்மீண்டும்மானிடஜென்மம் பெற்று இச்சித்
தபுருஷனை யணைந்து பின்பு எம்பெருமான் திருவடி
சேரும்படி அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரா
ர்த்தித்தது. அப்போதப் பெண்ணுவேசத்தைப் போல
வே அச்சாவடியில் இராசபுத்திரி தனக்காக உயிரிழந்தா
ளென்று கேள்வியுற்றுத் தானும்வந்து உயிர்நீத்தஇராஜ
புத்திரனும் ஆணுவேசமாய்க்கிடந்து நிகழ்ந்தவற்றைக்
கேட்டுவந்து வணங்க, ஔவையா ரன்புகூர்ந்து முத
லிற் பெண்ணுவேசத்தை நோக்கி, நீ உறையூரிற்சென்று
இராஜனுடைய ஆலாத்திப்பெண்களுள் தலைமைபெற்
றிருக்கும்மாகதவடிவிக்குப்பெண்ணாகப்பிறந்துகற்பழி
யாமல் மேன்மை பெற்றிருந்து விரும்பிய புருடனை
யடைந்து சுகமடைவாயாக, என்று சொல்லிப்போக்கிப்
பின்னர் ஆணுவேசத்தைநோக்கி நீ யவ்வூரிலேயேவிறகு
தலையனாகப்பிறந்து அம்மாகத வடிவியின் பெண்ணை
மருவியிருக்கக்கடவை யென்றருள்புரிந்து போயினர்.

ஔவையார் தன்னை வெகுநாளாய் ஆஸ்ரயித்திரு
ந்த ஒரு ஏழ்மைப்பெண்ணின் விவாகத்திற்குச்சேரன்,
சோழன், பாண்டியன் முதலிய சகல அரசர்களையும்
வரவழைக்க வேணுமென்னு மெண்ணத்தோடு அவர்
களுக்கு மணவோலை யனுப்பினள், அதுகண்டு அரசர்
களும் ஔவை கவீஸ்வரி யாகையாலே அவள் வார்த்
தையை தடுக்கவொண்ணா தெனக்கருதி அதிக வினயத்
துடனே சதுரங்க சேனைகளுஞ் சூழக்கலியாணத்திற்கு
வந்தார்கள். விவாகமுகூர்த்த மானவுடனே ஔவை யவ்
வரசர்களை நோக்கித் தன்னையும் ஒருபொருளாக மதித்
து வந்தார்களென அவர்களுக்கு அதிகபிரிய வசனங்
களைச் சொல்லி விருந்துணவுசெய்து போகவேண்டு
மென்று மிகவும் வேண்டினள். அதற்கவர்கள் பரிகாச
மாயும் ஔவை திறத்தையறிய வேண்டியும் நீ உணவு
செய்விப்பது உண்மையாயின் இப்போது நாங்கு தரு
வித்தாற் புசிப்போமென்றார்கள். அது நுங்குண்டாவத
ற்கு அகாலமானபடியால் அவர்கள் மனோ பீஷ்டப்படி
நிறைவேற்றவேண்டி வெட்டி விறகாய்க்கிடந்த சில
பனந்துண்டுகளை நோக்கிப் பின்வரும் பாவைப்பாடினார்.

திங்கட்குடையுடைச் சேரனுஞ்சோழனும்பாண்டியனு
மங்கைக் கறுகிட வந்துநின்றார் மணப் பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றியடிக் கண்கறுத்து நுனி சிவந்து
பங்குக்கு மூன்றுபழந் தரவேண்டும் பனந் துண்டமே.

உடனே கீழே விழுந்திருந்த அப்பனந்துண்டுகள் குரு
த்துவிட்டுப் பச்சோலை சலசலவென்றசைய நுங்குக்
குலைகளைத் தாங்கிக் கொண்டு நின்றன

அதைக்கண்டு அரசர்கள் வெட்கமுஞ் சந்தோஷ
மும் அடைய அங்குவந்திருந்த எல்லோரும் அளவிடற்
கரிய ஆச்சரியத்தை யடைந்தார்கள்.

ஔவையார் நெடுநாளாகச் சோழனுடைய சபஸ்
தான வித்வானாகிய ஒட்டக்கூத்தரைப் பார்க்கினும்
சோழன் மனைவிக்கு ஸ்திரீதனமாகவந்த புகழேந்திப்
புலவரே மிகச்சிறந்தவரென மதித்திருந்தார். அப்படி
யிருக்கச்சோழன் ஒருநாள் தன்சபையில் ஔவையை
நோக்கி, ஔவையே! ஒட்டக்கூத்தன், புகழேந்தி ஆகிய
இவ்விருவர்களில் யார் சிறந்தவர் ?என்று கேட்டான்.
அதற்கு ஔவை தானே புகழேந்தியை உயர்த்திச்சொன்
னல் சோழனுக்கு விரோதமாகத் தோன்று மாகையால்
அதைக்குறிப்பாய் எல்லோருக்கும் தெரியப்பண்ண
வேண்டு மென்றெண்ணி, ஒட்டக்கூத்தனை நோக்கிச்
சந்திரன் என்னும் அர்த்தத்தையுடைய ஒருபதத்தை
ஓர் பாவினீற்றடியில் மூன்றிடங்களில் பிரயோகப்படு
த்தும்படி சொன்னாள். ஒட்டக்கூத்தன் தம்மரசனாகிய
சோழனையே பாட்டுடைத் தலைவனாகக்கருதி,

வெள்ளத் தடங்காச் சினவாளை வேலிக் கமுகின் மீதே
றித், துள்ளி முகிலைக் கிழித்து மழைத் துளியோ டிறங்
குஞ் சோணாடா, கள்ளக் குறும்பர் குலமறுத்த கண்டா
வண்டர் கோபாலா, பிள்ளைமதிகண் டெம்பேதை பெ
ரிய மதியு மிழந்தாளே.

இதன்பொருளாவது வெள்ளத்திலடங்காமல் வா
ளைகள் கோபத்தோடெழும்பி வேலியிலிருக்கின்ற கமுக
மரத்தின்மேற்பாய்ந்து அங்கிருந்துதுள்ளி மேகத்தைக்



கிழித்துக்கொண்டு மழைத்துளியோடு பூமியிலிறங்கத்
தக்க வளப்பத்தையுடைய சோழநாட்டுக்கரசனே! கள்
ளத்தனத்தையுடைய குறுநிலமாக்கள் குலநாசனே தே
வர்களுக்குக் கோபாலனை யொத்தவனே! மூன்றும்பி
றைச் சந்திரனைக்கண்டவுடனே அழகில்மிகுந்த என்னு
டையமகள் தன்சுயபுத்தியை யிழந்தனள், என இருமதி
யை வருவித்துப்பாடினார். இதைக்கேட்டு ஔவை
உன்பாவில் ஒருசந்திரன் குறைந்ததே என்னும் குறிப்
பாக "ஒட்டா ஒருமதிகெட்டாய்" என்று கூறிப் பின்பு
புகழேந்தியை நோக்கி அவ்வண்ணமாகப் பாடச்சொல்
லினர். அவரும் பின்வரும் பாவில் மூன்றுபிறை வரும்
படியாகப் பாடினர்.

பங்கப் பழனத்தழு முழவர்
பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர்
தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா
கொங்கைக் கமரா பதியளித்த
கோவே ராஜகுல திலகா
வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே.

இதன்பொருளாவது கழனிகளில் உழுதுகொண்
டிருக்கின்ற உழவர்கள், குரங்குகள் வேலியிலுள்ள பலா
ப்பழங்களைப் பறித்ததென்று அருகிலிருக்கின்ற சங்
குகளையெடுத்துவீச, அவர்கள் மேலக்குரங்குகள்மீண்டு
மிளநீரைக் கொண்டெறியும்படியான தமிழ்நாட்டுக்கர
சனே! இராஜகுலசிரேஷ்டனே! வெவ்வியகண்போன்ற
சந்திரனுக்கும், கருப்புவில்லையுடைய மன்மதனுக்கும்,
இளைத்து வருந்தி வேல்போன்ற விழியையுடைய என்
மகள் கண்ணீர்வடிக்கின்றனள் என்பதாம். இதனல்
சபையிலிருந்தோர், ஔவைசொல்லாமலே இவ்விரு
வர் திறத்தையும் அறிந்துகொண்டார்கள்.

ஒரு குறவனுக்கு இரண்டுமனைவியர்க ளிருந்தார்
கள். அவர்களுள் புருஷனுக்கு இளையாள்பேரில் மோ
கம், ஓர்நாள் அவன் "ஊருக்குப்போய் வருகிறேன்,
நான் அன்பாகவளர்க்கும் பலாவை நீங்களிருவரும்பத்
திரமாகப் பார்த்துக்கொள்ளுங்களென்று" சொல்லிப்
போயினன். அவன்போனபின் இளையாள் அம்மரத்தை
வெட்டிவிட்டுக் குறவன்வந்தபோது மூத்தாள்பேரிற்
பழிசுமத்தினள். நிரபராதியாகியமூத்தாள் கணவனெ
ன்னசெய்வானே வென்று துக்கித்துக்கொண் டிருக்
கையில் அப்போதங்கு ஔவையார் தற்செயலாய்வந்து
அவள் குறையைக் கேட்டு, நீ பயப்படாதேயென்று
கூறிப் பலாத்தழைக்கும்படி,

கூரிய வாளாற் குறைத்திட்ட கூன்பலா
வோரிதழாய்க் கன்றா யுயர்மரமாய்ச்—சீரியதோர் [யப்
வண்டுபோற் கொட்டையாய் வண்காயாய்த் தின்பழமா
பண்டுபோ னிற்கவென் றும் பார்.

என்றோர் கவிபாடின மாத்திரத்திலேவெட்டுண்ட
மரம் தளிர்த்துத் தழைத்தது. அதுகண்டமூத்தாள் சந்
தோஷித்து ஒருகந்தையிற் தினையரிசி முடிந்துகொடுப்ப,
அக்குறமாது அன்போடுகொடுத்த சிறு மூட்டையை
ஔவையார் யேந்திக்கொண்டு உறையூரைநோக்கிவரும்
போது பொழுதுபோய் இராத்திரிவேளையாக, அதனால்
விரைந்து நெடுந்தூரம் நடந்துவந்தமையால் இளைப்பா
கிச் சோழராஜனுடைய அரண்மனைவாசலிற்போய் உட்
கார்ந்தனர். அவ்வாசல்வழியே தன்னிச்சையாய் வந்த
சோழராஜன் ஔவையாரைக் கண்டதிசயித்து அம்
மணீ! இவ்விரவிலிங்கு எப்படிவந்துற்றீரென்று வின
வினன். அதற்கம்மையார்,

காடனைந்தே னைந்தேன் கடுகிவழி நடந்தேன்
யான்வந்த தூர மெளிதன்று—கூனல்
கருந்தேனுக் கண்ணாந்த காவிரிசூழ் நாடா
விருந்தேனுக் கெங்கே யிடம்.

என்றோர் வெண்பாலால் விடைதந்தனர். அதுகே
ட்ட சோழராஜன் நீர்விடியுமளவு இங்ஙனே யிருமெ
ன்று கூறி அம்மையார்கரத்தில் ஓர் சிறுமூட்டையிருக்
கப்பார்த்து அம்மூட்டையென்ன வென்றுகேட்டனர்
அதற்கவர்,

கூழைப் பலாத்தழைக்கப் பாடக் குறமகளு
மூழக் குழக்குத் தினைதந்தாள்—சோழகேள்
உப்புக்கும் பாடிப் புளிக்குமொரு கவிதை
யொப்பிக்கு மென்ற னுளம்.

என்றோர் கவிபாடி அரசனுக்கு விடைகொடுத்
தனுப்பிவிட்டு, இரவுநீங்கி விடிந்தபின்னெழுந்து மற்
றோருருக்குப் போனார்.

இன்னொருகால் பாண்டியராஜன் தனதுநகரின்கண்
ணுள்ள சங்கப்புலவர்முதலிய வித்துவான்களுடைய
திறத்தை பரிக்ஷிக்கவேண்டி மாற்றுயர்ந்த செம்பொன்
னால்செய்த நான்குபருத்த கொலுசுகளில் தொங்குகின்ற
ஓர் ஊஞ்சற்பலகையையமைத்து அதன்மீது திரளா
கப் பொற்குவையிட்டு "இந்தநான்கு கொலுசுகளும்
அற்றுவிழும்படி இன்னதினத்தில் யாரேனும்வந்து
பாடுவாராயின் அவருக்குத்தகுந்த மரியாதையுடன்
இந்தப்பொற்குவியலைப் பரிசாகக்கொடுப்போம்" எனப்
பறையறைவித்தான். இச்சங்கதிகேள்வியுற்ற வித்வ
சிரோமணிகள் யாரும்முன்னிற்க அஞ்சியிருந்தினர்

அத்தருணத்தில் அவ்வழியாகவந்த ஔவையார் உள்
ளேதுழைந்து பின்வருஞ்செய்யுள்களில் ஒவ்வொன்
றைச்சொல்ல ஒவ்வொருசங்கிலியாக நான்குமறுந்து
விழுந்தன. உடனேயப்பொற்குவியலுக்குக் காத்திரு
ந்த வித்வான்களை ஔவையாரழைத்து அதனைப்பகிர்
ந்துகொள்ளும்படி சொல்லிப்போயினர்.

ஆர்த்தசபை நூற்றொருவ ராயிரத்தொன் றாம்புலவர்
வார்த்தை பதினாயிரத் தொருவர்—பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே தாதாகோ டிக்கொருவ
ருண்டாயி னுண்டென் றறு.

தண்டாம லீவது தாளாண்மை தண்டி
யடுத்தக்கா லீவது வண்மை—யடுத்தடுத்துப்
பின்சென்றா லீவது காற்கூலி பின்சென்று
மீயா னெச்சம்போ லறு.

உள்ள வழக்கிருக்க வூரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி—யெள்ளளவுங்
கைகூலி தான்வாங்குங் காலறுவான் றன்கிளையு
மெச்சமறு மென்றா லறு.

வழக்குடையா னிற்ப வலியானைக் கூடி
வழக்கை யழிவழக்குச் செய்தோன்—வழக்கிழந்தோன்
சுற்றமுந் தானுந் தொடர்ந்தழுத கண்ணீரா
லெச்சமறு மென்றா லறு.

ஔவையார் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்
வழி, கல்வியொழுக்கம், அசதிக்கோவை, நான்மணிக்
கோவை, அருந்தமிழ்மாலை, தரிசனப்பத்து, ஞானக்
குறள்முதலிய நூல்களைச்செய்தருளினர். மேற்சொல்
லிய நீதிகளில் அகரவர்க்க மாதியாகச் சொல்லப்பட்ட
ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்னும்நூல்கள்சொல்
லடையும், பொருள்விளக்கமும் வாக்கியச் சுருக்கமும்
பொருந்தியவைகளா யிருக்கிறபடியால், பிறதேயத் தா
ராலும் கொண்டாடிச் சிறப்படைந்திருக்கின்றன. இப்ப
டிக் கல்வியில் சக்கிரவர்த்தினியாய் விளங்கிய ஔவை
யார் திருவாய் மலர்ந்தருளிய நூல்களும், தனிப்பாடல்
களும் நீதிநிறைந்த அருள்வாக்கியங்களென எவர்களும்
சிரமேற் கொள்ளுகிறார்கள். இந்த ஔவையார், புத்தி
மான்களெல்லாம் பூலோகசரஸ்வதியென்று புகழத்தக்க
உயர் வொப்பில்லாக் கல்வித் திறைத்தை யுடையவர்.
இப்பேர்ப்பட்ட கல்வித்திறமையையுடைய ஔவை
யார் மகிமையை எடுத்துரைக்க யாரால்திறம்!

## மனோகரன்.

(முன்தொடர்ச்சி.)

சுதந்திரா! இப்போதுஎன்னபதில் எழுதுவதென்
றுபிரபுகேட்க, மந்திரி, சுவாமி! ஒரு நியாயமும் சொல்
லாமல் தங்களைச் சத்தியபுரியைவிட்டு இருநாழிகைமலுக்
கப்பால் மகததேசத்தின் எல்லையோரமாகப்போய் வசி
க்கும்படி கட்டளையனுப்பியிருக்கிறது. நியாயம் பிறகு
சொல்லப்படுமாம். நமக்குத்தெரிந்தவரைக்கும் ஊரை
விட்டு ஒட்டுவதற்கு ஒருநியாயமுமில்லை. அரசனது
சைன்னியபலமும், மனத்தூய்மையில்லா மந்திரிகளின்
துர்ப்போதனையுந்தான் இச் செய்கைக்குக் காரணம்.
இவர்கள் என்னவேண்டுமானாலுஞ் செய்யலாம். அப்
படியிருக்க, சத்தியபுரியைவிட்டு வேறுதேசத்தில்போய்
வசிக்கும்போது பிரபு என்னும்பட்டத்தை யிழக்கமா
ட்டீர்களாம். ஆனால் வருஷத்திற்கு இவ்வளவு என்று
தங்களுடைய செலவிற்குக் கொடுக்கப்படுமாம். இந்த
ஏற்பாடு அரசன்செய்தது தங்களுடைய அதிர்ஷ்டமே.
அரசனதுகட்டளை எப்படியிருந்தாலும் அதன்படி நட
ப்பது தங்களுடையகடமை. ஆகையால் தாங்கள்பதில்
எழுதவேண்டியதெப்படியென்றால், அரசனது ஆக்கி
னைக்கு விரோதமாயொன்றுஞ் செய்யவல்லேன். கட்
டளைபிரகாரம் குறித்தகாலத்திற்குள்ளாகசத்தியபுரியை
விட்டு நீங்குவேன். எவ்வூரில்போய் வசிப்பேனோ
அதைப் பிறகுதெரியப்படுத்துவேன். என்று சுருக்கமா
யெழுதி விடவேண்டுமென்று மந்திரிசொல்ல, அதற்
குச் சந்திரசேகரனிசைந்து அவ்வாறே ஓர்கடிதத்தில்
எழுதி இராஜாங்கத்திற்கு அனுப்பி விட்டார்கள்.

பிறகு பிரபுவும் மந்திரியும் அரசன் இவ்வாறு
கட்டளையிடுவதற்கு என்னகாரண மிருக்குமென்று
யோசித்துப்பின்புமகததேசத்தின் எல்லையோரமாயுள்ள
அநேக ஊர்களில் எந்த ஊருக்குப்போவதென்று ஆரா
ய்ந்து அதைக்குறித்து ஓர் தீர்மானத்திற்கும் வராமல்
மறுநாள்யோசிப்போமென்று எண்ணி அவர்கள் பேசி
யிருந்தவிடத்தை விட்டகன்றனர். அரசனது ஆக்கினை
கிடைத்தபின்பு சந்திரசேகரன் மனக்கவலையுற்றான், சந்
தோஷமாய்ப் பேசுவதில்லை. எப்போதும் ஏதோ யோ
சிப்பதானான். இதன்காரணத்தையறிந்த அவன்மனைவி
இரதியும் மனம்நொந்தனள். தாய்தந்தையர்கள் மனக்
கிலேசமடைந்திருப்பதை அறிந்த சந்திரசூடனும் சுந்த
ரியும் இதற்கென்னகாரணமென்று யோசிக்கலானார்கள்.
ஒருநாள்காலை சந்திரசூடனும் அவன்சகோதரிசுந்தரியும்
அவர்கள்வீட்டு மேன்மாடியின் ஓர் அறையில் பேசிக்
கொண்டிருந்தார்கள். "ஏன் அண்ணா! நம்முடைய



அரண்மனையென்ன விப்படி ஒளி குன்றியிருக்கிறதே?
இரண்டுநாளாக நம்முடையதகப்பனார் பட்டணத்து
விசாரணைசெய்வதில்லை. அவரும் மந்திரியுமாக ஏதோ
அதிககவலையுடன் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.
நான் போகும்போதும் வரும்போதும் நமது அப்பா
என்னிடத்தில் சிறித்துக்கொண்டு சந்தோஷமாய்ப்பேசு
வாரே, இப்போது அப்படி பேசுவதில்லை. நம்முடைய
அம்மாவும் சிறிது விசனங் கொண்டிருக்கிறாள், அவள்
முகமும் வாடி யிருக்கிறது. என்னுடையத் தோழிப்
பெண்களாகிய சுகந்தை, சுபாங்கனை இவர்களிருவரும்
அம்மா தனியே உட்கார்ந்து சிறிது கண்ணீர் விட்டுப்
புலம்பினதைக் கண்டார்கள். அவர்கள்அருகிற்சென்று
கேட்டதற்கு அம்மா பதில் ஒன்றுஞ் சொல்லவில்லை
யாம். இவர்களிப்படி யிருக்க மூத்தண்ணா இப்போது
எனக்குப் பாடம் கற்பிப்பதில்லை. தன்அறையைவிட்டு
வெளியே வருவதில்லை. நாமெல்லாரும் உட்கார்ந்து
சாப்பிடும்போது மூத்தண்ணா எவ்வளவு வேடிக்கையா
கப் பேசுவது வழக்கம்? இப்போது அப்படி யில்லாமல்
அவர்தனியே சாப்பிடவருகிறார். அவருக்கும் ஏதோ
மனக்கவலை யுண்டென நன்றாய்த் தெரிகிறது. இப்படி
யாக இவர்களிருப்பதற் கென்ன காரணம் அண்ணா
வென்று சுந்தரிகேட்டாள். "சுந்தரி! நம்முடைய தாய்
தந்தையர்க ளிவ்வாறிருப்பதை நானும் அறிந்தேன்.
இதைக்குறித்து மந்திரியைக் கேட்கலாமென்றெண்ணி
யிருக்கிறேன். மனோகரன் சங்கதி எனக்குத்தெரியும்,
இதுவரைக்கும் அவனை நம்முடைய சகோதரனென்
றெண்ணி யிருந்தோம். அவனும் நம்மை அப்படியே
யறிந்திருந்தான். இப்போது அவனை நம்முடைய சகோ
தரனல்லவென்று நீதெறிந்துகொள்ள வேண்டும் "என்
று சந்திரசூடன் கூறும்போது சுந்தரி, திடுக்கிட்டு
ஆச்சரியங் கொண்டவளாய், "என்ன அண்ணா நீ
சொல்வ தெனக் கொன்றுந் தெரியவில்லை. மனோகரன்
யார்?" என்றனள். மனோகரன் இன்னானென்று இதுவ
ரைக்கும் யாருக்குந்தெரியாது. அவன் இளங்குழந்தை
யா யிருக்கும்போது யாரோ அவனை நமது அரண்மனை
யில் கொண்டுவந்துவிட்டுப் போனார்களாம். அன்றுமு
தல் அவன் நமதுவீட்டில் வளர்ந்துவருகிறானாம். இது
வரைக்கும் அவன் தன்னை இந்தவீட்டு மூத்தபிள்ளையெ
ன்றெண்ணியிருந்தான். இப்போது அவனுடையசங்கதி
அவனுக்குத் தெரிந்துவிட்டபடியால் விசனமுற்றிருக்கி
றானென்று சந்திரசூடன் சொன்னான். "என்ன அண்
ணா! இதைநான் நம்பமாட்டேன், ஏதோ வேடிக்கை
யாக யாராவது கூறினார்களோ? என்று சுந்தரிசொல்ல,
இல்லை சுந்தரி, இதுநிச்சயந்தான். மனோகரனென்ன
குழந்தையா வேடிக்கை செய்வதற்கு? நமது வீட்டிற்கு
வரும் இராமதாசரே அவனுக்குச் சொல்லியிருக்கிறார்.
நம்முடைய வேலைக்காரன் சம்பாதிக்கு எல்லாம் நன்றா
யத் தெரியும், என்று சந்திரசூடன் சொல்லி தான் சம்
பாதியினிடத்து அறிந்த விஷயத்தையும் முன்னொரு
நாள் காட்டில் மனோகரனும் தானும் வேட்டையாடப்
போனகாலத்தில் மாறுவேஷம் பூண்டுவந்த இரண்டு
க்ஷத்திரிய பிரபுக்கள் தங்களைக்கேட்ட கேள்விகளையும்
சுந்தரிக்கு விவரமாய்ச் சொன்னான். "மனோகரன் பிள்
ளையா யிராமற் போனால் நம்முடைய தாய் தந்தையர்கள்
அவனுக்கு நல்ல உடையும் உண்டியுங் கொடுத்து நம்
மைப் போலவே அவனையும் பாதுகாப்பார்களோ? அவ
னுக்குக் குதிரை யென்ன, வண்டி யென்ன, வித்தை
கற்கச் சிலவென்ன, இதெல்லாம் செய்வார்களோ?
நான் அம்மாவைக் கேட்கப் போகிறேன். நீ சொல்வதில்
எனக்கு நம்பிக்கை வரவில்லை. இன்னொரு சங்கதி
அண்ணா! மனோகரன் பார்ப்பதற்கு நம்முடைய க்ஷத்தி
ரிய வமிசத்தில் பிறந்தவனைப் போலவே, அழகுள்ளவ
னாயும் மனோதைரிய முள்ளவனாயு மிருக்கிறான். இவ்
வளவு இலக்ஷணங்களைப் பொருந்தி யிருக்கும் பிள்ளை
யை யார்தான் பிரியத்துணிவார்கள். ஆனால் இராமதா
சர் பொய் சொல்லுகிறவரல்ல. அல்லது வேடிக்கை
செய்கிறவருமல்ல. அவர் கூறியது உண்மையா யிருக்க
லாம். ஆனபோதிலும் நான் அம்மாவைக் கேட்டபின்
தான் நம்புவேன். இப்போது எனக்கு ஒரு சந்தேகம்
வந்து விட்டதண்ணா? என்று சுந்தரி சொல்ல, "என்ன
சந்தேகம்? கேள்" என்று சந்திரசூடன் கூறவும், "நான்
இந்தவீட்டுப் பெண் தானோ? அல்லது என்னையும்
யாராவது கொண்டுவந்து விட்டார்களோ?" என்று சுந்
தரி கேட்டாள். அதற்குச் சந்திரசூடன் "நல்ல கேள்வி.
உன்னைப்பற்றி சந்தேகிக்கவேண்டாம்" எனவும், சுந்தரி,
அது சரிதான். நீ என் சகோதரன் தானோ? என்று மறு
படியும் கேட்டாள். "ஆம் இதிலும் சந்தேகமில்லை.
எல்லாம் சம்பாதி என்னிடத்தச் சொல்லி யிருக்கிறான்.
இதை ருசுப்படுத்துவதற்கு ஒரு வழியுண்டு சுந்தரி.
நம்மிருவருக்குந் தான் ஜாதகம் குறித்து எழுதப் பட்
டிருக்கிறது. மனோகரனுக்கு ஜாதகமில்லை. இதினாலே
யே உன் சந்தேகமெல்லாம் ஒழிய வேண்டும்" என்று
சந்திரசூடன் சொல்லி சுந்தரியின் சந்தேகத்தை ஒருவா
று நீக்கினான். பிறகு சுந்தரி, "என் அண்ணா! நம்மு
டைய தாய் தந்தையர்களுடைய விசனத்திற்குக் கார
ணங்கண்டறிவதெப்படி?" என்று கேட்க, சந்திரசூடன்
"சுந்தரி! அதைத்தான் முக்கியமாய் நாம் அறியவேண்
டும். அவர்களையே நேராகக் கேட்பது அவ்வளவு நன்றா
கத் தோற்றவில்லை. ஒருவேளை அவர்கள் நமக்குச்சரி
யான பதிலும் சொல்லமாட்டார்கள். நான் மந்திரியைக்

கேட்பதாக உத்தேசித் திருந்தேன், அதுவும் சரியாகத் தோன்றவில்லை. மந்திரியும் ஒருவேளை உண்மையை உரையா தொழிவர். ஆதலால் எனக்கு ஒரு யுக்தி தோன்றுகிறது. இங்குவந்து கொண்டிருக்கும் இராமதாசரின் மூலமாக சங்கதியை அறியவேண்டு மென்று கூறினான். இதைக்கேட்ட சுந்தரி "அது நல்லயுக்திதான் அண்ணா. ஆனால் இராமதாசர் இவ்விடம் வந்து சுமார் பத்து நாளாகிறது. அவருக்கு இந்த சங்கதி எப்படித் தெரியும். நிச்சயமாக அவருக்குத் தெரிந்திராது. ஆதலால் நீ இராமதாசரைக் கண்டு நமது அன்னையும் பிதாவு மிருக்கிற மாதிரியைச்சொல்லி, அவரை இவ்விடம் வந்து நமது பிதாவை விசாரிக்கும்படி செய்துவிடு. நமது பிதாவுக்கு அவரிடத்து அதிக மதிப்புண்டு. அவர் விசாரிக்கும்போது சங்கதியைச் சொல்வார். அச்சமயத்தை கைவிடாது நாம் சங்கதியைத் தெரிந்துகொள்ளலாம். ஏன் அண்ணா நான் சொல்வதெப்படி? என்றாள். சந்திரருடன் சுந்தரி சொல்லிய யுக்திக்குமெச்சி அப்படியே இராமதாசரைக் கண்டு பேசிவருகிறேனென்று சென்றான். பிறகு சுந்தரி மேன்மாடியில் ஏதோ ஒரு புத்தகத்தைப் படிக்க வாரம்பித்து விட்டாள்.

சந்திரருடனும் சுந்தரியும் மேன்மாடியில் பேசிக் கொண்டிருந்த அன்று சாயந்திரம் மனோகரன் தன் அறையின் கதவைமூடிக் கொண்டு உள்ளேயுட்கார்ந்து கீழ்வருமாறு யோசிக்கலானான். "என்ன ஆச்சரியமான சங்கதி! நமக்குத் தந்தை யார் தாய் யாரெனத் தெரியவில்லை. நமக்குத்தான் தெரியவில்லையென்றால் இவ்வூரிலுள்ளவர்களுக்கும் தெரியக் காணோம். இதுவும் ஓர் விந்தையே. எல்லாத்தேசத் தாசர்களுக்கும் கடிதம் எழுதி ஊரெங்கும் பறைபடிக்க விட்டார்களாம். அது உண்மையெனத் தெரிகிறது. அக்காலத்து பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்த எனது தாய் உயிருடனிருந்திருப்பின் சும்மாயிருந்திருப்பாளா? தாயிறந்திருப்பினும் தந்தை யொருவன் பிழைத்திருந்தால் தன் பிள்ளையைத் தேடியிரானா? தந்தை தாயிருவருமிறந்திருப்பினும் தன்னுறவினனென்று எடுத்து வளர்க்க ஒரு பந்துவுமில்லாமல் என்சுற்றத்தா ரெல்லாம் ஒருமிக்க ஒழிந்தனரோ? எல்லாரையு மிழந்த என்னை ஆதரவுடன் அருமையாய் வளர்த்துவந்த சந்திரசேகர பிரபுவுக்கு நான் என்னகைம்மாறு செய்யப்போகிறேன். இப்போது பதினெட்டுவயதாகி விட்டது. இனி இவர் வீட்டிலிருப்பது நியாயமா? உலகத்தையறிந்துபிழைக்க வழி தேடவேண்டியசமயம் வந்தபின்னும் இனமாய் ஒருவர்வீட்டில் சாப்பிட்டுவருவது ஆண்மகனுக்கழகோ? ஆகையால் கூடியசீக்கிரத்தில் இவரது உத்திரவு பெற்றுக்கொண்டு வேறுதேசத்திற்குச் செல்லவேண்டும். குழந்தைப்பருவமுதல் இதுகாறும் தாய் தந்தையில்லாத எனக்கு மிக்க வன்புடன் வளர்க்க அன்னையும் பிதாவையு மேற்படுத்திய ஜெகதீசன் கருணைக்கிணையுமுண்டோ? இதுவரைக்கும் சகல இராஜ உபசாரங்களுடன் காப்பாற்றிவந்த எங்கருணைப் பெருமான் இனிக் காவாது விடுவானோ? நான் ஏன் சிந்திக்கவேண்டும். இராமதாசர் சொல்லியது நல்லயுக்தி. "சென்றதைக்கருதவேண்டாம், நாளைச்சேர்வதை நினைக்க வேண்டாம், இன்று நடப்பதை ஈசன் செயலெனக்கண்டு இனிது வாழ்ந்திடும்" என்று அவர்அன்புடன் உபதேசித்ததை நான் மறந்துவிடக்கூடாது, எல்லாம் ஈசன் செயல். அவனன்றி யோரணுவு மசையாது. நமக்கென்ன தொழில். நமக்கேன்கவலை. நமக்கொரு குறையுமில்லை. என்று இவ்வாறு மனோகரன் தன்னைப்பற்றியும் தானின்னது செய்யவேண்டு மென்பதைக் குறித்தும், கடைசியாக இராமதாசர் உபதேசவாக்கியத்தையும் நினைத்துக் கொண்டிருந்து அஸ்தமன வேளையானபடியால் சற்று வெளியேபோய் திரிந்துவருவோ மென்றெண்ணி கதவைத்திறந்து கொண்டு வெளியே வந்தான்.

(இன்னும்வரும்.)

## அன்பு.

### கண்ணப்ப நாயனார் சரித்திரம்.

(முன்தொடர்ச்சி.)

வேட்டையாடுதற்குரிய வலைத்தொழிலையும் சிலைத்தொழிலையும் புறம்பே செய்யும் படிக்கும், அகத்தின்கண்ணே ஆணவம், கன்மம், மாயையென்னும் மும்மலக்கற்களினிடத்தே நல்வினை தீவினையென்னும் இரண்டு பாசங்களினால் கட்டப்பட்ட பந்தத்தை நிவிர்த்தித்துக்கொள்ளும்படி "பாங்குளநாங் தெரிதுமெனத் துணிந்து கோடிப் பழமறைகள் தனித்தனியே பாடிப்பாடி, யிங்குளதென் றங்குளதென் றோடியோடி இளைத்திளைத்துத் தொடர்ந்து தொடர்ந் தெட்டுந்தோறும்," அறியப்படாத இளம்பிறையையும், கொன்றைதும்பைகளையுமணிந்த சடாமகுடத்தையுடைய காளத்திநாதரைக்காணும்படிக்கும் சென்ற திண்ணனார்முன்னே ஊது குழல்கள், பம்பைமுதலிய வாத்தியங்கள் முழங்கவும், காட்டினிடத்துள்ள வலியமிருகங்களைப் பிடிக்கும்படி நீண்ட வாராலாகிய வலைகளை யெடுத்துக் கொண்டும், மிருகங்கள் நிறைந்திருக்கின்ற இடங்களை வேவுகாரர்களால் அறிந்து நான்குபக்கங்களிலுஞ்சென்றார்கள். ஒருயோசனைதூரம் நீண்டவலைகளைக் கட்டி மிருகங்கள் வெளியே செல்லாமற்படி காவலமைத்து



புதர்போன்ற மயிர்த்தலையையுடைய வேடர்கள்சென்றார்கள். அத்திண்ணனார் கானவர்களோடுசென்று காட்டிற்குள் நுழைந்து பம்பை முதலியவாத்தியங்களினால் அக்காட்டுள் மறைந்திருக்கும் மிருகங்களை யெல்லாம் எழுப்பினார்கள். காட்டுப் பன்றியும், மான் கூட்டங்களும், கரடிகளும், கருமான்கூட்டங்களும், காட்டெருமைகளும், யானைகளும், புலிக்கூட்டங்களும், காட்டுப்பசுக்களும் அநேகமாக கோபங்கொண்டு பாய்ந்து செல்ல அவைகளுக்கு முன்சென்ற வேடர்கள் எதிர்த்து அம்பினாலழித்தார்கள். கால்கள் அறுந்து சில விழுவனவும், தலையறுந்து சிலவிழுவனவுமாக வேட்டை யாடுஞ்சமயம் நிலம் அதிரும்படிக்கும், யானை முதலிய மிருகங்கள் அஞ்சும்படிக்கும் காட்டினின்றும் எழும்பிய ஓர் பன்றியானது மழையைப் பெய்கின்ற கரியமேகம்போல இடித்தகுரலோடு கோபாக்கினி கண்களினின்று சிதறிவிழ வலைகளை யறுத்துக் கொண்டு மிகுந்தவிசையோடு ஓடியது. அவ்வாறு போகின்ற அப் பன்றியைக் கொல்ல ஆண்சிங்கத்தை யொத்த திண்ணனார் அதிசவிசையோடு அதன்பின்னே செல்லுஞ்சமயத்து நாணன், காடன் என்னும் இருவரும் அவரைப் பிரியாமற் பின்தொடர்ந்தார்கள். அப்பன்றியானது கொலைத்தொழிலைச் செய்யும் நாய்களுக்குந் தப்பி மலைச்சாரலின் வழியேசென்று ஒருமலையினடியில் அநேகதூரம் ஓடிவந்த இளைப்பினால் வலியிழந்து மரச்செறிவில் நின்றது. அதையறிந்த திண்ணனார் அம்பினாற் கொல்லாமல் தம்முடைய ஒளி வீசுகின்ற உடைவாளையுருவி முனையழுந்தும்படி அதைக்குத்தினார். அவ்வாறுகுத்த அப்பன்றியானது இருதுண்டாய் வீழ்ந்தது. அதைக்கண்ணுற்ற நாணன் அதிக வியப்படைந்து தன் தோழனைப்பார்த்து காடனே! இதன்பின் இன்றைக்கு பல காவதங்கள்வந்து இளைப்படைந்தோம். ஆயினும் நம்முயற்சி வீணடையாமல் நம்மரசனாகிய திண்ணன் கன்னிவேட்டையிலேயே கொன்று விட்டான். இது ஆச்சரியம்! ஆச்சரியம்! என்றுசொல்லி இருவரும் திண்ணனார் உபயதிருவடிகளையும்வணங்கி அரசனே! இன்றைய்தினம் வெகுதூரம் நடந்து வந்தபடியால் நாங்கள் பசியால்வருந்துகின்றோம். ஆகலின் நமக்குக்கிடைத்த இப்பன்றியைத் தீயில் பதப்படுத்தி தேவரீரும் கொஞ்சம் உண்டு, நாங்களும் உண்டு குளிர்ந்த நீரையருந்தி சற்று இளைப்பாறி மறுபடியும் காட்டையடைவோம் என்றார்கள். அதுகேட்ட திண்ணனார் அவர்களைநோக்கி தண்ணீர் எவ்விடத்துளது என்று வினவ அதற்கு நாணன் இதோநிற்கின்றதேக்கமரத்திற்கு அப்பால் ஒரு உயர்ந்த மலையுண்டு. அதற்குப் பக்கத்தில் பொன்முகலி நதி ஓடுகின்றதென்றான். அதையறிந்த திண்ணனார் அப்பன்றியை அவ்விடம் எடுத்துவரும்படி தன் உயிர்த் தோழர்க்கு கட்டளையிட்டு அத்திருமலைக்கருகே யடைந்தவளவில் நாணனைப்பார்த்து அப்பா! இதோதோன்றுகின்ற இம்மலையினிடத்துச் செல்வோம் என்றார். இதைக்கேட்ட நாணன் "பழம் நழுவிப் பாலில்விழுந்தாற்போல" திண்ணனே! நீபோனால் ஆகாயமளவு முயர்ந் திருக்கின்ற இம்மலையினிடத்தே குடுமித்தேவரிருக்கின்றார், அவரைக் கும்பிடலாமென்றான். அதற்குத் திண்ணனார் அப்பா, இம்மலையைக் கிட்டிச்சேருந்தோறும் என்மேலுள்ள பாரம் நழுவிவிழுவது போலத் தோன்றுகிறது. மனத்தினிடத்தே இதையடைய வேண்டு மென்கிற விருப்பமதிகரித்து மேன்மேலும் ஓங்குகின்றது. அதனால் குடுமித்தேவர் அம்மலையில் வீற்றிருப்பது எவ்விடத்து? அவ்விடத்திற்கு நாம்செல்வோமாக என இம்மூவரும் பொன் முகலியினை யடைந்து காடனை ஒருமா நிழலில் அமர்த்தி நீ தீக்கடைக்கோலினால் நெருப்பை யுண்டாக்கி இப்பன்றியைப் பதப்படுத்துவாய், நாங்க ளிருவரும் இம்மலையிடத்து சென்று சுவாமியைத் தரிசித்துவருவோம் என்று நாணனுந்தாமும் எழுந்தருளி வண்டுகள் மொய்க்கும் சோலைகளுள்ள மலர்களை அலைகளால் வாரிக்கொண்டு வருகின்ற பொன் முகலி நதியிலிறங்கி மனத் தெளிவுற்ற திண்ணனார் அதிக சந்தோஷத்தோடு திருக்காளத்தி மலையைப்பார்த்துக் கொண்டு அந்நதியைக்கடந்து சென்று மாட்சிமை தங்கிய அம்மலைச்சாரலை யடைந்தனர். திண்ணனார் முற்பிறப்பிற்செய்த சிவபுண்ணியத்தின் தொகுதிகள் அழியாத பேரின்பத்திற்குக் காரணமான பேரன்பை அவர்க்கு எடுத்துக்காட்ட அதனால் அடங்காத ஆசையானது மேன்மேலும் பொங்கி என்பு நெக்குருகி போரவாவோடு நாணனும் அன்பும் முன்னாக மலையின்மீது ஏறத்திண்ணனாரும் முப்பத்தாறு தத்துவங்களென்று சொல்லப்படும் பெரிய சோபான வழியாலேறி சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஐந்தொழிலுக்குங் காரணமான சிவபிரானைக்கிட்டி அடைவார்போல காளத்தி நாதரது நீட்சிபொருந்திய மலையில் ஏறிப்போய் இளம்பிறைதரித்த சடையினையுடையசிவபிரானைத் தரிசிப்பதற்கு முன்னரே பரமசிவனது கிருபை மிக்க திருவருட் பார்வை தம்மையடைய முன்தொன்றுதொட்டு பிறவிக்குக் காரணமான மும்மலங்களின் தொடர்ச்சி இப்பிறப்பில் அகன்று கடவுளின் திருவருணிழலில்தங்கி ஒப்பில்லாத அன்பே உருவமானார்.

சென்னைத் தமிழ்நேசன்.

(இன்னும்வரும்.)

# NEWS AND NOTES.

சென்ற ஜூலையீ 24உ இராத்திரி ஆனந்து என்னும் தாலூகாவிலுள்ள ஓர் ஹிந்துக்கோவிலினுட் ஒரு கொள்ளைக் கூட்டத்தார் பிரவேசித்து விக்கிரகத்தின் மீதிருந்த ஆபரணாதிகளை திருடிச் சென்றார்களாம், ஆபரணாதிகளின் மதிப்பு சுமார் 2000-ரூபாய் பொறுமாம்.

கல்கத்தாவில் மிஸ்டர் ஜேகப் ஈஸ்லிம் என்பவருக்கு இரட்டைப் பெண்குழந்தைகளிருந்தன. அவர்கள் ஒருநாள் தன்தகப்பன் ஒருகிண்ணியில் லேகியம்போல் வைத்திருந்த அபினியை ஏதோ ஹல்வா யென்றெண்ணி அதை எடுத்துத்தின்று மாண்டுபோயின.

தஞ்சை ஜில்லாவில் சென்றவருஷத்தில் விஷக்கடியினால் கால்நடைகள் அநேகமாய்சேதப்பட்டுபோனபடியால் அவைகள் மேய்க்கூடிய இடங்களிலுள்ள விஷஜந்துக்கள் தங்கும்படியான செடி, புதர், முதலியவைகளை அழிக்கும்படியான ஏற்பாடுசெய்ய வேண்டுமென்று கவர்ன்மெண்டார் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

இந்தியாவின் போஸ்ட் ஆபிசுகளுக் கெல்லாம் பெரிய டைரெக்டர்ஜெனரலாகிய ஸர் ஆர்த்தர் பான்ஷா அவர்கள் சீமையிலிருந்து மறுபடியும் இந்தியாவுக்கு வேலைக்கு வருகிறதாக வில்லாததால் பஞ்சாபின் போஸ்ட் மாஸ்ட்டரான மிஸ்டர் ஸ்வேர்ட் வில்சனவர்கள் ஸ்திரமாக நியமனம் பெற்றுவிட்டனர். இதுகாறும் அவ்வலுவலைப்பார்த்துவந்த மிஸ்டர் கிஷ்க் ரஜாவின் பேரில் சீமைக்குப் போய் விட்டனர்.

தூத்துக்குடிமார்க்கம் கொழும்புக்குப்போக சனிக்கிழமைதோறும் புகைக்கப்பலிலேறத் தவறும் பிரயாணிகள், ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் பாம்பன் கால்வாய் வழியாய்க் கொழும்புக்குப் போகும்படி, பி. ஐ. எஸ். என்ற கம்பெனியார் தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியாரோடு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

துணிகளைச் சலவைபண்ணுகிற வேலைக்கும் இப்பொழுது மின்சாரத்தை பிரயோகித்தால் சகல கறைகளும் எவ்வளவு அழுக்கும் போய்விடுகிறதாம். இவ்வாறு மின்சாரத்தால் சலவைசெய்யும்படி கண்டுபிடிக்கப் பட்டிருக்கும் கருவி, மனிதன் உதவியேயில்லாமல் நாளொன்றுக்கு 200-அல்லது 300-உடுப்புகள் சலவை பண்ணக் கூடுமாம்.

## உதகமண்டலம்.

காலநிலை:— பெய்ந்தும் காய்ந்துங்கொண் டிருக்கிறது டி காலநிலையின் பேதத்தால் பிளேக்கும் இதைவிட்டு தொலையவில்லை, இத்துர்வியாதியானது இங்கு வீஷ்காரர்களை பீடிக்கும் என கருதி துரைத்தனத்தார்கள் இவர்களுக்கென்று வெஸ்ட்மியர் என்னு மிடத்தை (Westmeer) சிகிரிகேசன் கேம்பாக நியமகம் செய்திருக்கிறார்கள். இத்திய நோயானது எப்பொழுது இம்மலைவிட்டு போகுமோ அன்றுதான், இம்மலையோர்களின் மனம் நிலைவரத்திற்கு வரும்.

இங்ஙனம்,

உதகமண்டலநேசன்.

இகபரசுகசாதனி சந்தாதாரர்களுக்கு

பெருத்தலாபம்! பெருத்தலாபம்!!

இச்சமயத்தை கைவிடாதீர்கள்

திருமந்திரம்-௩௲.

இது திருமூலநாயனாரால் அருளிச்செய்யப்பட்டது. இந்நாயனார் மூவாயிரம் வருஷம் இவ்வுலகின்கண் சிவயோகத்திலிருந்து வருஷத்திற்கு ஒருபாட்டாகப்பாடிய மூவாயிரஞ் செய்யுள்களை இந்நூலடங்கப்பெற்றது. வருஷத்திற்கொருபாட்டாகத் திருவாய் மலர்ந்தருளிய செய்யுட்களில் எவ்வளவு விஷயம் அடங்கியிருக்குமென்பதை யாவரும் சுலபமாய் அறியலாம். இம்மூவாயிரம் பாட்டுகளில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கையுமே அடக்கி யிருக்கின்றது உயர்ந்த கிளேஸ்காகிதத்தில் அழகிய காலிகோபயிண்டு செய்தது. விலை 1—8—0.

இப்புத்தகத்தை இகபரசுகசாதனி சந்தாதாரர்களுக்காகவே ஒவ்வொருவரும் ஒருபுத்தகம் முக்கியமாய் வாசிக்கவேண்டிய நூலானபடியால் பாதிவிலையாகிய 12-அணா என்று நியமிக்கப்பட்டது. வேண்டுபவர்கள் 1903ளு அக்டோபர்மீ 31உக்குள் இகபரசுகசாதனி ஆபிசுக்கு எழுதி பெற்றுக்கொள்ளவேண்டியது. மேற்கண்ட தேதிக்குமேல் இவ்விலைக்குக் கொடுக்கப்பட மாட்டாது. ஒவ்வொரு சந்தாதாரருக்கும் ஒரு புத்தகத்திற்குமேல் கொடுக்கப்படமாட்டாது. வி. பி. சார்ஜு அணா-3 ஆகும்.

இப்படிக்கு,

ஸ்ரீ கொ-லோகநாதமுதலியார்.

"இகபரசுகசாதனி ஆபிஸ்" சென்னை.

ஓம்.

பரப்பிரம்மணேநம:

"ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி."

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
16 OCT 1903
MADRAS

# இகபரசுகசாதனி.

வாலியம் I. } 1903ளு செப்டம்பர்மீ {புத்தகம் V.

## மனனமாலை.

இகபரமு முயிர்க்குயிரை யானெனதற் றவருறவை
யெந்நாளுஞ்
சுகபரி பூரணமான நிராலம்ப கோசரத்தைத்
துரியவாழ்வை
யகமகிழ வருந்தேனை முக்கனியைக் கற்கண்டை
யமிர்தைநாடி [ன்
மொகுமொகென விருவிழிநீர் முத்திறைப் பக்காமலர்க
முகிழ்த்துநிற்பாம்.

அறிவுருவாயவென்னை யாணவமனாதிகூடிப்
பிரிவறியாதநின்னைப் பிறித்துத்தான்முழுதுமாகி
நெறியினைமறைத்துப்பொல்லா நீசருக்கடிமையாகி
செறியிருணின்றதென்னே திருப்புலிவனத்துளானே.

ஞானமே வடிவாய்த்தேடுவார் தேடுநாட்டமோநாட்டத்துணிறைந்த, வானமேயெனக்குவந்து வந்தோங்கு மார்க்கமே மருளர்தாமறியா, மோனமே முதலேமுத்தி நல்வித்தேமுடிவிலாவின்பமேசெய்யுந், தானமேதவமே நின்னை நானினைந்தேன் றமியனேன்றனைமறப்பதற்கே.

நாரணன்முதலோரெல்லாம் நாடோறுமடிமைசெய்ய
வாரிணர்முடித்தவேணி யண்ணலுக்காட்செய்யாதே
காரணமின்றியோடுங் கடிகுரான்ஞமலிபோலப்
பாரிடையுழன்றலுத்தேன் பாவியேன்பாவியேனே.

ஒன்றிரண்டுமூர்த்தியா யுறக்கமோடுணர்ச்சியாய்
ஒன்றிரண்டுகாலமாகி வேலைஞாலமாயினாய்
ஒன்றிரண்டுதீயுமாகி யாயனாயமாயனே
ஒன்றிரண்டுகண்ணினானு முன்னையேத்தவல்லனே.

யானுந்தானா யொழிந்தானை யாதுமெவர்க்கு முன்னோனைத், தானுஞ்சிவனும் பிரமனுமாகிப் பனைத்ததனிமுதலைத்,தேனும்பாலுங் கன்னலுமமுதுமாகித் தித்தித்தென், ஊனிலுயிரி லுணர்வினில் நின்றவொன்றை யுணர்ந்தேனே.

நின்றவொன்றையுணர்ந்தேனுக் கதனுள்நேர்மையதுவிதுவென்று, ஒன்றுமொருவர்க்குணரலாகா துணர்ந்துமேலுங்காண்பரிது, சென்றுசென்றுபரம்பரமா யாதுமின்றித் தேய்ந்தற்று, நன்றுதீதென்றறிவரிதாய் நன்றாய்ஞானங்கடந்தே.

நன்றாய்ஞானங்கடந்துபோய் நல்லிந்திரியமெல்லாமீர்த்து, ஒன்றாய்க்கிடந்தவரும் பெரும்பாழுலப்பிலதனையுணர்ந்துணர்ந்து, சென்றாங்கின்பத்துன்பங்கள்செற்றுக்களைந்து பசையற்றால், அன்றே யப்போதே வீடதுவே வீடுவீடாமே.

படிப்பற்றுக்கேள்வியற்றுப் பற்றற்றுச்சிந்தைத்
துடிப்பற்றார்க்கன்றோ சுகங்காண்பராபரமே.

கற்றாலுங் கேட்டாலுங் காயமழியாத சித்தி
பெற்றாலு மின்பமுண்டோ பேசாய் பராபரமே.

பேசாத மோனநிலை பெற்றன்றோ நின்னருளாம்
வாசாம கோசரந்தான் வாய்க்கும் பராபரமே.

வைத்த சுவரலம்பின் மண்போமோ மாயையினோர்க்
கெத்தனை போதித்து மென்னுமெந்தாய் பராபரமே.

அத்துவிதமான வயிக்யவனுபவமே
சுத்தநிலை யந்நிலையார் சொல்வார் பராபரமே.

வாக்கிலியாய்க் கண்ணிலியாய் மத்தராய் போகமற்
றேக்குமறிவோடு சென்மித்தும்—பாக்கொண்டு
பாடார் குருபதத்தைப் பாரார் பலநினைப்பும்
வீடார் சும்மாவருமோ வீடு.

அன்னியமே பாசமென்று மன்னியமே யீசனென்று
முன்னுதலே பாசவொழிவன்றோ—வெந்நிலையு
மற்றநிலை யீதொழிய வாறுசமை யத்தார்
சொற்றநிலை யெல்லாந் தொலை.

ஆகாயந் தன்னையளக்க மரக்காலெடென
வாகாயமம் மரக்காற்குள்ளிருக்க—வாகாயங்
கண்டாயே லந்தக்கருத்தே கருத்தாகிக்
கண்டா லதுவே கதி.

கண்போல வான்மாகதிர் விளக்குபோலாக்கை
விண்போற்சிவமதிபோல்விஞ்ஞானம்விண்போந்த
சூரியன்போல் மெய்ஞ்ஞானஞ் சூழிருள்போலஞ்ஞானந்
தாரகை போற்றத்து வங்கடான்.

காதெவனாலேகேட்குங் கண்ணெவனாலேகாணு
மோதுநாவெவனாலுன்னு முடலெவனாலேயோரு
மோதுமூக்கெவனன்மோக்கு மூச்செவனாலேயோடும்
போதெவனாற்போய்மீளு மவனடிபோற்றுகிற்பாம்.

## பக்தி.

அன்புடன் கடவுளைத் தேடவாரம்பித்து, அவ்வன்பையே சதாகாலம் விர்த்திசெய்துகொண்டு கடைசியில் அவ்வன்பு மயமாயாக்குவதே பக்தியோகம். உலக ஆசைக் குறையக்குறைய பக்தியானது விர்த்தியாகும். உலகவாசை சிறிதிருந்தாலும் பக்தி பூரணமாய் வந்ததென்று நினைக்கக்கூடாது. சுவர்க்காதி போகங்கள் வேண்டுமென்னும் ஆசையுடன் செய்யப்படுவது கர்மயோகம். ஓர்வித பலனையுங்கோராமல் அன்பே சொரூபமாய் விளங்கும் பகவானிடத்து அன்புசெய்ய வாரம்பித்து அவ்வன்பிலே நீடித்திருக்கப்பழகி கடைசியில் அவ்வன்புமயமாய்க் கரையச்செய்வதே பக்தியோகம். பகவானையறிந்து முக்தியடைய பக்தியோகமே சிலாக்கியம். இதுவே எளிது. இதுவே உண்மையான வழி. ஞானயோகத்திற்கும் பக்தியோகத்திற்கும் அநேகர் நினைக்குமவ்வளவு அதிக வித்தியாசமில்லை. இவ்விரண்டு யோகங்களிலும் பகவானையறிந்து முத்தியடைவதே கருத்து. இவைகளிரண்டிலும் பிரவர்த்திக்கிற யோகியானவன் உலகவாசையை முற்றிலும் துறக்கவேண்டியது அவசியமே. பக்தியோகி எல்லாவற்றையும் பகவானது சொரூபந்தான் என்று பார்ப்பதுபோல ஞானயோகியும் சர்வமும் பிரமமயமாய்க் காண்கிறான். இருவர்களுக்கும் இவ்வளவு ஒற்றுமையிருக்க இவ்விரண்டு யோகங்களுக்குமுள்ள வித்தியாசமென்ன? பக்தியோகம் எளிது. ஞானயோகம் கஷ்டம். அதனால் பக்திமார்க்கத்தை அநேகர் ஆரம்பிக்கிறார்கள். ஞானாப்பியாசம் செய்யத் தொடங்குவோர் மிகச்சிலர். பக்திமார்க்கம் எளிதாயிருப்பானேன்? மனம் புத்தி என்பவைகளில் புத்தியைக் காட்டிலும் மனதிற்கு சுபாவமாய் வேலையதிகம். சுபாவமாய் மனமானது எதையும் பற்றுதலென்னும் தொழிலையுடையது. எப்போதும் மனமானது எந்த வஸ்துவையாவது பற்றிக்கொண்டேயிருப்பது நமது தின அநுபவம். இவ்வனுபவத்தை மறுத்தற்கியலாது. உலக வஸ்துவைப்பற்றும் மனதின் சுபாவத்தை யனுசரித்து பகவானைப் பற்றுதலென்னும் பழக்கத்தை உண்டுபண்ணுவதால் பக்தியோகம் எளிதாயிருக்கிறது. எல்லாரும் சுலபமாய் பக்தியை யாரம்பிக்கிறார்கள். இதனாலேயே அநேக கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஜனங்கள் கூட்டங்கூட்டமாய் கோயில்களுக்குச்சென்று பகவானைத் தரிசித்துவருகிறார்கள். ஞானயோகமோ இப்படிப்பட்டதல்ல. சுபாவமாய் மனதைக் காட்டிலும் குறைந்த வியாபாரத்தையுடைய புத்தியின்உதவி ஞானயோகத்தில் அதிகம் வேண்டியிருக்கிறது. புத்தியைக் காட்டிலும் மனமும் அதிக பலமுள்ளது. எவ்வளவு புத்தியால் யோசித்து ஓர் வியாபாரம் கெட்டதென்று அறிந்தாலும் சமயம் நேர்ந்தகாலத்தில் மனமானது புத்தியை யடக்கிவிட்டு மறுபடியும் அவ்வியாபாரத்தில் மனிதனைப் பிரவேசிக்கச்செய்கிறது. இதுவும் நமது தின அநுபவமே. இதனால் புத்தியானது பலவீனமுள்ளதென்று தெரிகிறது. பலவீனமான புத்தியின் உதவியை அதிகமாகக்கொண்டு ஞானயோகம் ஆரம்பிக்கப்படவேண்டுவதால் புத்தி ஸ்திரமாகவில்லாமல் மனதால் ஜெயிக்கப்பட்டு ஆரம்பித்த ஞானயோகத்திலிருந்து அடிக்கடி நழுவிவிடுகிறது. ஞானயோகத்தில் யாதொருவஸ்துவினுடைய பற்றுதலுமுதவாதென்று புத்தி யறிகிறது. அறிந்து என்னபயன்? அறிந்த சிறிது நேரத்திற்கெல்லாம் பற்றுதலை சுபாவமாயுள்ள மனமானது தனக்கிருக்கும் அதிகபலத்தால் புத்தியை வெருட்டியடித்து, பழயபடி உலகவிஷயங்களைப் பற்றிச்செல்லும். எவ்வளவு ஞானவிஷயங்களைக்கேட்டு புத்தி நன்றாய் திருப்தியாய் உண்மையை அறிந்தாலும் அறிந்தவண்ணம் மனிதன் அனுஷ்டிக்கமுடியாமல் தன் பழய ஆசாரத்தை விடாமலிருப்பதற்கு மனதின் பலமல்லவோகாரணம். திருடுவது நியாயமல்லவென்று நன்றாய்அறிந்தும், திருடினால் இகலோகத்திலேயே தண்டனையடைவது நிச்சயமெனவறிந்தும், முன்னொருகாலத்தில் திருடியதற்கு போதுமான தண்டனையை யனுபவித்ததை மறவாதிருந்தும், மனிதர்களில் சிலர் திருடுகிறார்களே இதற்கு என்னகாரணம்? இதையெல்லாம் அறிந்தது புத்தியின் வியாபாரம். திருட ஏவுவது மனதின் வியாபாரம். இதனால் மனம் புத்தியைக்காட்டிலும் அதிக பலமுள்ளதென்றும் சுபாவமாய் பற்றுதலையே தொழிலாகவுடையதென்று நன்றாய் விளங்குகிறது. பலவீனமுள்ள புத்தியின் உதவியை அதிகமாய் வேண்டிய ஞானயோகத்தை ஆரம்பித்து அதிக பலமுள்ள மனதால் அடிக்கடி அந்த யோகம் கெடுவதாலும், சுபாவத்தை யனுசரித்து மனதின்வழியே சென்று, உலகவஸ்துவுக்குப் பதிலாக பகவானைப்பற்றுக்கோடாககாண்பித்து, அப்பற்றை சிறிது அடைந்தபின் புத்தியும் பகவானைப்பற்றிய மனதைத் தொடர்ந்து, கோயில்களிலுள்ள விக்கிரங்களில்மாத்திரமல்ல பகவான் நமது உள்ளும்புறம்பும் உளன் என்றும், அவனில்லாத விடமில்லையென்றும், அவனைத்தவிர அன்னியமொன்றுமில்லையென்றும், புத்தி மனதிற்கு சிறிதுசிறிதாகக் காட்ட, முன் ஒருவாறு பகவானிடத்து பற்றுதலுடன் ஆரம்பித்த மனமானது பகவானது உண்மை சொருபத்திலே பற்றுதலையடைந்து பரபக்தியை யடையச்செய்வது பக்தியோகமானதாலும், ஞானயோகத்தைக் காட்டிலும் பக்தியோக மெளிதாயிருக்கிறது.



பக்தியானது எப்போது எப்படி ஆரம்பிக்கப்படுகிறதென்பதைப்பற்றி யோசிப்போம். மனிதன் பிறந்து பகவானிடத்துப் பக்தி பண்ணவேண்டுமென்கிற எண்ணமுண்டாவதற்கு முன் மனம் போனவழியே சென்று உலக விஷயங்களில் ஆசைகொண்டு தன்னிஷ்டப்படி அனுபவித்து வருகிறான். அப்படி வருங்காளில் ஏதாவது இடுக்கண் அல்லது வருத்தம்நேரிடின் அதனின்று நீங்கி பழயபடி உற்சாகமாய் வசிப்பதற்கு என்னவழியென்று மனிதன் யோசிக்கிறான். அவ்வருத்தத்தை நீக்கும்படி முதலில் சில மனிதர்களிடத்துசென்று கேட்கிறான். அவர்கள் மூலமாய் அவ்வருத்தம் நீங்காதாயின், மறுபடியும் அவ்வருத்தம் தீர்ந்து என்றைக்குச் சுகமாயிருப்பேனோவென்று ஏக்கமுற்றுத் தியங்கிநிற்கையில், ஒருவர்வந்து சொல்லுகிறார். "ஐயா! உம்முடைய வருத்தம் தீருவதற்கு ஒருவழி சொல்லுகிறேன். அது எனக்குக் கைகண்ட பலனைக் கொடுத்திருக்கிறது. நீரும் என்னைப்போல நம்பிச் செய்திரானால் உம்முடைய வருத்தம்நீங்கி நீர் சுகமடைவீர். அது என்னவென்றால், நம்முடைய ஊருக்கு கிழக்கே ஓடும் ஆற்றங்கரையோரமாய் ஓர் மாந்தோப்பிருக்கிறது. அதில் ஒரு அம்மன் கோயிலுள்ளது. அந்த அம்மன் சர்வசக்தியுள்ளது. அதற்கு நீர் பிரார்த்தனைசெய்துகொண்டீரானால் உம்முடைய வருத்தந் தீரும். இது உண்மை. அங்கேபோய்பாரும். பிரதி ஞாயிற்றுக்கிழமையும் எவ்வளவு ஜனங்கள் எவ்வளவுதூரத்திலிருந்து வண்டிவண்டியாகவந்து இறங்குகிறார்கள், பொங்கலிடுகிறவர்கள் எத்தனைபேர், கோழி ஆடு பலிகொடுப்பவர்கள் எத்தனைபேர், கோயில் சுற்றுபவர் அநேகர், கைகுவித்து கும்பிடுவோர்களும் அங்கபிரதக்ஷணம் பண்ணுபவர்களும் அநேகர், போய்ப்பாரும் ஐயா. நீரும் உம்முடைய வருத்தம்தீர்ந்தால் ஒரு ஆட்டுக்கடா பலிகொடுப்பதாகச் சொல்லிக்கொள்ளும். உடனே வருத்தம் நீங்கி சுகமடைவீர்." என்று சொல்ல, அவ்வருத்தமுள்ள மனிதனும் அப்படியாவென்று சந்தோஷத்துடன் கேட்டு பிரார்த்தனைசெய்துகொள்ளுகிறான். சர்வமும் சதா மாறிக்கொண்டேயிருக்கும் உலகில் அம்மனிதனுக்கு வந்தவருத்தம் எத்தனைநாளைக்கிருக்கும். அது காலமாகித் தொலைய மனிதன் அம்மனுக்கு ஆட்டுக்கடா பலிகொடுக்கிறான். வாயாரவாழ்த்துகிறான். இன்னும் மேன்மேலும் உயர்ந்தபதவியைக் கொடுக்க அம்மனை வரங்கள்கேட்கிறான். இப்படியாக வருத்தமெய்தியபோது அதைநீக்க மனிதனால் முடியாதகாலத்தில், அதைத் தீர்ப்பதற்கு மனிதனுக்கும் மேம்பட்ட ஓர் சக்தியிருக்கிறது என்று சொல்லக் கேட்கும்போது, தனக்கெய்திய வருத்தம் பொறுக்கமுடியாமல் யாரால் தீருமோவென்று எந்தவேளையும் ஏக்கமுற்றிருக்கும் மனிதன் தனக்கு மேம்பட்ட ஓர் சக்தியுளதென்பதை ஒத்துக்கொள்ளுகிறான். சிறிதுகாலம் இம்மாதிரி வருத்தம் வந்தகாலத்து தெய்வத்தை நினைப்பதும் மற்ற காலத்தில் மறப்பதுமாகவிருந்து பிறகு, மனது தான் ஒருதரம்பற்றியதை விடுகிறதில்லையாதலால், மனிதன் தனக்கு வருத்தம் நேரிடாதகாலத்திலும் தனக்கு நல்ல பெண்டுபிள்ளைகளும் தன தான்னியங்களும் விர்த்தியாக வேண்டுமென்று தெய்வத்தைத் தொழுகிறான். மனிதன் அவாவியதே ஊழ்வினையாகநின்று சன்மத்தைக் கொடுத்து மனிதன் ஆசைப்பட்டதை கொடுப்பதால், அம்மனிதன் தான்கேட்டவண்ணம் பெண்டுபிள்ளைகளையும் தனதான்னியங்களையும் அடைந்து பின் யோசிக்கிறான். நாம் கேட்டதைக்கொடுக்கும் சர்வ சக்தியுள்ள தெய்வத்திற்கு நாம் பொங்கலிடுவது, பூசைபோடுவது, ஆட்டுக்கடா வெட்டுவது இதெல்லாம் வீண்தானே. அன்னியாயமாய் ஓர் ஜீவனை ஹிம்சிப்பது நன்றல்ல. நமக்குச் சிறிது வருத்தம்வந்தது பொறுக்காமற்றானே, நாம் தெய்வத்திற்குப் பிரார்த்தனை சொல்லிக்கொண்டோம். அப்படியிருக்க நாம் ஒரு ஜீவனை அடியோடு கொன்றுவிடுகிறது என்றால் நியாயமா, அது கூடாது என்று புத்திகூற, சிறிதுநாள் தெய்வம் தெய்வமென்று அவன் நினைத்ததால் சிறிது சுத்தமான மனமானது ஆமாமென்று ஒத்துக்கொள்ளுகிறது. எல்லாவற்றையும் படைத்துக் காக்கும் சர்வ வல்லமையுள்ள பகவானுக்கு அற்பமனிதன் கொடுக்கும் பூஜா திரவியங்களால் பிரயோசனமொன்றுமில்லையெனவும், எனக்கு இன்ன நன்மைசெய்தால், உனக்கு இன்ன பிரார்த்தனை செய்வேனென்பதும், கோரியநன்மை செய்யாவிடின் நான் செய்த பிரார்த்தனை செலுத்தமாட்டேனென்பதும் ஓர் வாணிபம்போன்றதெனவும், இத்தகைய பக்தி மிகவும் தாழ்ந்த அபரபக்தியென்றும் சிறிதுசிறிதாக ஆரம்பபக்தன் அறிகிறான். சிறிதுகாலங் கழிந்தபின் பிராணிகளுக்குப் பகவான்செய்யும் நன்மைக்குப் பிராணிகள் பகவானிடத்து அன்பும் விசுவாசமும் வைப்பதே போதுமான கைம்மாறென்றும் ஆரம்பபக்தன் அறிகிறான். இப்படியாக பக்தியை ஆரம்பித்த மனிதன் தனக்குள்ளேயோசித்து யோசித்து பகவானிடத்து சதா அன்புவைப்பதுடன் சதா அவரையே தியானிக்க வேண்டுமென்றும் பகவானால் தான் நன்கு மதிக்கப்படவேண்டுமென்று, எண்ணுகிறான், அதாவது பகவானது பிரியத்திற்குப் பாத்திரனாகவேண்டுமென்று நினைக்கிறான். உலகத்தில் சாதாரணமான ஒரு மனிதனுடைய பிரியத்தையடையவேண்டுமானால் அம்மனிதனுடைய அபிப்பிராயத்தை நாடி அவன் சொல்லியபடி நாம் நடந்துகொண்

டால் அம்மனிதனுடைய பிரியத்தை நாம் அடைகிறோமென்பது எல்லாரும் அறிந்தவிஷயம். அதுபோலவே பகவானது அருள்வேண்டுமாயின் பகவான் வேதங்களிற் கூறிய ஒழுக்கங்களை அனுஷ்டித்து வரவேண்டுமென பக்தன் அறிகிறான். இப்படியாக பகவான்சொற்படி நடந்து பகவத்கிருபையை அடையவேண்டுமென ஆவலுடன் உலகவியாபாரங்களைச் செய்துவரும்நாளில் உலகவிஷயங்களில் ஆசைகொள்ளுதல் வீணெனவும் அதிலுள்ள சுகதுக்கங்கள் அனித்தியமெனவும் அறிந்து பகவானிடத்து பக்திபண்ணுவதே பலனுடையதெனவும் பகவானே நித்திய சுத்த முக்தப் பொருளெனவும் அப்பக்தன் அறிகிறான். இவ்வாறு அறிந்தவண்ணம் அனுஷ்டிக்க ஆரம்பிக்கும்போதுதான் உத்தமமான பரபக்தி ஆரம்பிக்கிறது. இந்த பரபக்தியை அனுஷ்டானத்தில் கொண்டுவரச்செய்வதுதான் பக்தியோகத்தின் காரியம்.

இன்னும்வரும்.

## அருமையான விஷயங்கள்.

பல ஆற்றுநீர் சமுத்திரத்தில் போய்விழுந்தும் சமுத்திரமானது தன் நிலை மாறாமலிருக்கிறது. அதுபோல எந்த மனிதன் விஷயங்கள் சம்பந்தமாக தன்னிடத்து அநேக ஆசைகள் வந்தடைந்தபோதிலும் தான் மாறாமல் தன்னிலையிலிருக்கிறானோ அவனே ஞானியாவான்.

* * *

உலகவஸ்துக்களை (விஷயங்களை) எப்போதும் சிந்திக்கிற மனிதனுக்கு அவ்வஸ்துக்களில் பற்றுதலுண்டாகிறது. பற்றுதலினால் ஆசை ஜனிக்கிறது. ஆசைப்பட்டதையடைய விரோதம்நேரிடின் கோபம் உண்டாகிறது. கோபத்தால் அறிவுமறைகிறது. அறிவில்லாததால் இன்னது செய்யத்தகுந்தது இன்னது செய்யத்தகாதது என்கிற நினைவு அழிகிறது. அது அழியவே புத்தி நாசமுண்டாகிறது. புத்திகெட்டால் மனிதனுங் கெடுகிறான். ஆகவே மனிதன் கெடுவதற்கு முதற்காரணமெது? விஷயங்களையே சதாசிந்தித்தல். இதையே வஸ்துத்தியானமென்பர் ஆன்றோர். வஸ்து தியானத்தால் கேடு உண்டாகிறபடியால் அதைவிட்டு பகவத்தியானஞ்செய்தால் மனிதனுக்கு வீடுஉண்டாகும்.

* * *

சாதாரண பிராணிகளுக்கு எது இரவோ அது ஞானிக்குப் பகல். பிராணிகளுக்கு எது பகலோ அது ஞானிக்கு இரவு. அதாவது எல்லாப் பிராணிகளுக்குமெந்த ஞானநிஷ்டையானது தெரியாதோ அதாவது இருட்டோ அல்லது இரவோ, அந்த ஞானநிஷ்டையில் ஞானியானவன் விழித்துக்கொண்டிருக்கிறபடியால் ஞானிக்கு அது பகல். எந்த அஞ்ஞான அவஸ்தையில் சகல பிராணிகளும் விழித்துக்கொண்டிருக்கிறார்களோ அந்த அஞ்ஞான அவஸ்தையானது ஞானிக்கு இரவு.

* * *

ஆமையானது உலகத்தாரைக் கண்டபோது தன் அவயவங்களை உள்ளுக்கிழுத்துக்கொள்வதுபோல மனிதனுக்கு சகல விஷயங்களிலிருந்து தன்னிந்திரியங்களையெப்போது இழுத்துக்கொள்ளுகிற சக்திவருகிறதோ அப்போதுதான் அவனுக்கு ஸ்திரமான ஞானமுண்டாகும்.

* * *

மனிதன் எப்படி பழயவஸ்திரங்களை நீக்கி புதிய வஸ்திரங்களைத் தரித்துக்கொள்ளுகிறானோ அப்படியே ஆத்மாவானவன் பழயதேகங்களை விட்டுவிட்டு வேறு புதிய உடல்களை யடைகிறான். புதியவஸ்திரந் தரித்துக்கொள்ளும்போது மனிதன் துக்கிப்பதுண்டா? இல்லை, சந்தோஷமேயடைகிறான். அப்படியே புதியதேகத்தையடைய பழயதேகத்தைவிடும்போது மனிதன் துக்கத்தையடைவானேன்.

* * *

தேகாதிகளைக்காட்டிலும் இந்திரியங்களும், இந்திரியங்களைக்காட்டிலும் மனசும், மனசைக்காட்டிலும் புத்தியும், சிரேஷ்டமானதென்று சான்றோர் சாற்றினர். எவன் புத்தியைக்காட்டிலும் சிரேஷ்டனும் சாக்ஷியாயுமிருக்கிறானோ அவனே ஜீவாத்மா. சர்வக்ஞனாயிருப்பவன் ஈசுவரன். தூலமாய்த் தெரிகிறது தேசம். சூட்சமமாயறியப்படுவது மனசு. தேகம் நமக்குத் தெரிகிறதுபோல மனசு தெரிகிறதில்லை. ஆனால் மனசு உண்டென்பது அனுபவம். இதைப்போல மனதினும் சூக்ஷமமாயுள்ள ஜீவாத்மாவை அனுபவித்தறியவேண்டும். ஜீவாத்மாவை எனக்குக் காட்டவேண்டுமென்று ஒருவர் கேட்கின் அவரை நீர் ஒத்துக்கொண்ட மனதை சற்றே எனக்குக் காட்டவேண்டுமென்றால் அவர் என் செய்வாரோ?

* * *

இன்பதுன்பங்கள் நேரிடும்போது அவைகளில் மனிதன் பந்தப்படாமல் தான் சாக்ஷிபோல் அவைகளைப்பார்க்கப் பழகுவதே யோகம். அதாவது சுகதுக்கங்களில் சமத்வ புத்தியுடனிருக்கப் பழகுவதே யோகம். இந்த சமத்வபுத்தியையடையச் சாதனமாக இராஜயோகம், அடயோகம், லயயோகமெனப் பலயோகங்கள் ஏற்பட்டிருக்கின்றன.



ஓர் மணிச்சரட்டில் நூல் புகுந்திருப்பதுபோல் உலகத்திலுள்ள எல்லாவஸ்துக்களிலும் கடவுள் பிரவேசித்திருக்கிறார். நூலில்லாமல் மணிச்சரடாகாதென்பது திண்ணம். அதுபோல் கடவுளில்லாமல் உலகமில்லை. மணிச்சரட்டிலுள்ள அநேக மணிகளைப்போல அநேக சீவராசிகளும், சடராசிகளும், மதங்களும், பிரிவுகளும், வேறுபாடுகளும் உண்டாயிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் ஆதாரமாய் உட்புகுந்திருப்பது கடவுள்தான். இதையறிந்தவர் பலராயினும் அனுஷ்டிப்பவர் சிலரே.

* * *

ஆணவமும் மாயையும் நமதுள்ளே எக்காலமும் நின்று கேவலமாய் மறைத்தலையும் சகலமாய் நினைத்தலையும் செய்யாநிற்கும். அவ்விரண்டையும் நீத்தலே இரவும்பகலும் நீங்கியவீடென்று பெரியோர்கள் கூறுவார்கள். "இரவுபகலற்றவிடத்து ஏகாந்தயோகம் வரவுந்திருக்கருணை வையாய் பராபரமே" என்று மோர்பக்தர் கூறியுள்ளார். இவ்வாணவத்தையும் மாயையுந் துறந்து இரவு பகலற்ற விடத்து ஏகாந்தயோகத்தை யடைவதுயெங்ஙனமெனில், பரபக்தி, பரஞானம் இவைகளையடையவேண்டும். "சென்றதைக் கருதவேண்டாம், நாளைச் சேர்வதை நினைக்கவேண்டாம். இன்று நடப்பதை ஈசன் செயலெனக் கண்டு இனிதுவாழ்ந்திடு" என்றவாறு சிவன் செயலைநாடி நமது செயல் அறுமாயின் அதுவே பரபக்தியாம். இப்பரபக்தியினால், நமதுசெயலற்றோமென்று கருதும்போதம் அறுமாயின் அதுவே பரஞானயாம். ஆகையால் ஆணவம் மாயை இவைகள் நீங்கவேண்டின் பரபக்தியும் பரஞானமும் வேண்டும்.

* * *

உலகத்திலே உணவைச் சமைப்பதற்கு விறகு தண்ணீர் பானை அடுப்பு முதலிய பல உபகரணங்கள் இருந்தாலும் அதற்கு அவைகள் அக்கினிபோல முக்கிய உபகரணங்கள் ஆகமாட்டாவாம். அதுபோல மோக்ஷத்திற்கு தபசு முதலிய அநேக சாதனங்கள் இருந்தாலும் அதற்கு அவைகள் ஞானம்போல முக்கிய சாதனங்கள் ஆகமாட்டாவாம்.

* * *

சொப்பனமானது நித்திராவஸ்தையுள்ள காலம் வரைக்கும் சத்தியம்போலத்தோன்றி, நித்திரைதெளிந்தவுடன் எப்படிப் பொய்யாய்ப்போகிறதோ அப்படியே சம்சாரமும் தனக்குக் காரணமான அஞ்ஞானமுள்ள காலம்வரைக்கும் நிசம்போலத் தோன்றி, தத்துவஞானம் உதயமானவுடன் பொய்யாய்ப்போம்.

* * *

மகாபூதமாய் அகண்டமாயுள்ள ஆகாசமானது கடமடாதி உபாதிபேதத்தினால் கண்டமான பலவித ஆகாசமாய் எப்படித் தோன்றுகிறதோ, அப்படியே மனசு முதலிய சர்வேந்திரியங்களுக்கும் நியாமகனும் சர்வவியாபகனுமாகிய பரமாத்மாவானவன் மாயையினால் கற்பிக்கப்பட்ட பலவித சரீரவுபாதிகளில் பிரதிபலித்தவனாய், அதனாலே அநேக ஜீவரூபங்களாய்த் தோன்றுகிறான். ஆனால் அந்த ஆகாசமானது அந்தக் கடமடாதியுபாதிகளுக்கு நாசம்வந்தகாலத்தில் ஏகமாய் எப்படித் தோன்றுமோ, அப்படியே அந்த பரமாத்மாவும் அந்த சரீர வுபாதிகளுக்குப் பிரமாத்ம ஐக்கிய ஞானத்தினால் நாசம்வந்தகாலத்தில் அத்துவிதனாய்த் தானேதோன்றுவான்.

* * *

உமி தவிடு முதலியவற்றால் மூடப்பட்டு நெல்லாகத் தோற்றுகிற அரிசியை வேண்டுவோர் அதை உரலிலிட்டு உலக்கையால் குத்தி உமி முதலியவற்றைப் புடைத்துத்தள்ளி எப்படிக் கொள்ளுவார்களோ, அப்படியே பஞ்சகோசத்தால் ஆவரிக்கப்பட்டவனாக விளங்குகிற ஆத்மாவைச் சிரவணாதியுக்திகளால் விசாரித்து அக்கோசங்களுக்கு விலட்சணனாக அறியவேண்டும்.

* * *

இராஜாவானவன் தனது நகரத்திலிருந்தாலும் மந்திரி முதலானவர்கள் செய்யுங் காரியங்களுக்குத் தான் கர்த்தாவாகாமல் சாக்ஷிமாத்திரமாய் எப்படி இருக்கிறானோ அப்படியே ஆத்மாவும் தேகாதிகளோடு சேர்ந்திருந்தாலும் அவைகளுக்கு வேறாய் அவைகள் செய்யும் வியாபாரங்களுக்குத் தான் சாக்ஷிமாத்திரமாயிருக்கிறான்.

* * *

## குலத்தினும் குணமே பிரதானம்.

வெகுநாளைக்குமுன் துரோக நினைவுள்ளவனாயும் தன்னுடைய குலாசாரத்தை கைசோரவிட்டு வேடஜாதியைச்சேர்ந்து அக்குலாசாரத்திற்குரிய வில்லைக் கையில்கொண்டு பட்சிகளைக்கொன்று அவைகளினுடைய மாமிசாதிகளைப் புசித்துக்கொண்டிருப்பவனாயுமுள்ள ஓர் பிராமணனிருந்தான். இப்படியிருக்குங்காலத்தில் அவ்வேடப் பிராமணனுக்கு பொருளாசை மேலிட்டு வாணிபர்களுடன் கூடி அன்னியதேசங்களுக்கு வியாபார சம்பந்தமாக போக்குவரவாயிருக்கும்போது ஒருதடவை வரும்வழியில் காட்டானைகள் சண்டைபோட்டு கர்ச்சித்த ஓசையைக்கேட்டும் அவைகளினுடைய உரு

வத்தைப்பார்த்தும் பயந்து பிராணபயம் மேலிட்டு ஒருவரோடொருவர் கூடாமல் ஓடிப்போய் வழிதப்பி கல்லும் புல்லும் காடு மேடும், முள்ளு முறடுமுள்ள புதரிலேவீழ்ந்து நல்ல வழி அகப்படாமல் மெய்சோர்ந்து, கைகாலோய்ந்து சூரியன் அஸ்தமிக்கும்வேளையில் ஒரு பெரிய ஆலமரத்தைக்கண்டு அதனடியிற் படுத்துக்கொண்டு அதிக பசியுடன் தூக்கம்பிடிக்காமல் ஏக்கம்பிடித்து புரண்டுபுரண்டு புலம்பிக்கொண்டிருந்தான். அவ்வாலமரத்தின்மீது வாசஞ்செய்துகொண்டிருந்த ஓர் உத்தமமான கொக்கானது கானகமெல்லாந் திரிந்து இரையருந்தி மாலைப்பொழுதில் தன்னிருப்பிடமாகிய ஆலமரத்திற்குவந்துசேர்ந்தது. இவ்வுத்தமமான கொக்கானது யாராவது அதிதிகள் வந்திருக்கிறார்களோ வென்று மரத்தைச் சுற்றிப்பார்க்கிறது வழக்கம். அந்தப்பிரகாரம் பார்த்தபோது மரத்தினடியிற் படுத்திருக்கின்ற வேடுவப் பிராமணனைக்கண்டு மெத்தவும் விசாரமாய் யாரோ இவர் தெரியாது பரதேசிபோ லிருக்கிறதென்று பாவித்து கிட்டி நெருங்கி, ஆ ஐயா உத்தமரே இவ்விடத்தில்வந்து படுத்துக்கொண்டிருக்கிறீர் என்ன காரியமாகவந்தீர் நான் அதிதி பூஜை பண்ணும்படியாய் அகப்பட்டீர். நான் கடைத்தேரும் பொருட்டு என்னாற் கிடைக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ளவேணும் இறைவனே எழுந்திருமென்று வேண்டிய உபசாரங்கள்செய்து காட்டிலுள்ள பழம், தேன் முதலியவைகளை அவன் சாப்பிடுகிறமட்டும் கொடுத்து நல்ல ருசியான ஜலமுமளித்து இளைப்பாற்றிவிட்டது. அவ்வேடனும் களை தீர்ந்து கொக்கைப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தான். அப்போது கொக்கானது இவருக்கு களை தீர்ந்துவிட்டதென்று தழை, புஷ்பம் முதலியவைகளால் படுக்கையமைத்து அவரை சயனித்துக் கொள்ளும்படியாகச் சொல்லி தானும் அவன் பக்கத்தில் உட்கார்ந்து, "நீர் யார், இந்த நிர்மானுஷியமான காட்டிற்கு வந்ததிற்கு காரணமென்ன, உமது விருத்தாந்தங்களை சவிஸ்தாரமாய் சொல்லவேண்டுமென்றது. வேடன் நிகழ்ந்ததைச் சொல்ல, கொக்கானது கிருபையுடன் நெகிழ்ந்தமனதுடையதாய் அப்பா வேடவேதியனே நீ திரவிய அபேட்சையினாலல்லவோ இத்தனை பாடுபட்டாய் நல்லது உனக்குச் சுலுவில் திரவியங் கிடைக்கும்படி உபாயஞ்சொல்லுகிறேன் அதென்னவெனில் பூமியின் மாயமயக்கத்தைப் போக்கடித்தவராயும் ஆத்மக் கியானமுள்ளவராயும் அரசாட்சிசெய்பவராயுமுள்ள ஓர் வேந்தர் அடுத்த பட்டணத்திலிருக்கிறார். அவரிடத்தில் நீபோய் என்னிடத்திலிருந்து வந்ததாக சொன்னால் உனக்கு வேண்டிய திரவியம் கொடுப்பார். அதோடு உமது வருமை தொலையும் ஆகையால் காலையிலெழுந்து அவரிடம்போமென்றுசொல்லி தன் படுக்கைக்குப் போய்விட்டது. குலப்பிரஷ்டனான பிராமணன் இரவெல்லாம் அதுவே நினைவாயிருந்து சூரியோதயமானவுடன் எழுந்து முன்னாள் இராத்திரி தனக்கு கொக்குசொன்ன அரசனிடத்திற் சென்று தான் கொக்கினிடத்திநின்று வந்ததாக சொன்னான்.

அந்த அரசன் கொலைதொழிலைச் செய்யும் இந்தப் பார்ப்பான் முகத்தை சற்று நிதானித்துப்பார்த்து இவன் பொல்லாதவன், பொய்யன், வஞ்சமனத்தன், நிர்த்தயாளன், மஹாகர்மி, கொலைபாதகன், குலப்பிரேஷ்டன், இப்படிப்பட்ட தீயகுணங்களையுடைய இக்கறுத்தவன், உசிதமான என்னுடைய இஷ்டனுக்கு எப்படி சிநேகமானானோ? ஆனபோதிலும் நாம் அந்தக் கொக்கிற்கு விரோதமாய் ஒன்றும் செய்யப்படாதென்று மனதின்கண் நினைத்து அப்பிராமணனுக்கு வேண்டிய திரவியங்களை கொடுத்தான். அதை அவ்வேடப் பிராமணன் பெற்றுக்கொண்டு வழியெல்லாம் நடந்து முன்னிருந்த ஆலமரத்தடிக்குவந்து பணமூட்டையை கீழேவைத்து இளைப்பாறியிருக்கும்போது சூரியன் அஸ்தமித்துவிட்டான். அப்போது அழகாகிய இரக்கைகளையுடைய கொக்கானது எங்குந் திரிந்து இரையெடுத்தருந்தி தன்னிருப்பிடம்வந்து மரத்தினடியிலிருக்கிற வேடனைக்கண்டு! ஐயோ இளைப்பாறியிருக்கிறீரோவென்று நல்ல நல்ல பழங்கள், கிழங்குகள் முதலானவைகளெல்லாங் கொடுத்து சாப்பிடச்செய்து தண்ணீரருந்தி மார்க்காயாசமாற்றி படுக்கைவிரித்து அதன்மேல் சயனிக்கச்செய்து தானுங்கிட்டயிருந்து அவன்போய்வந்த சங்கதி என்னவென்றுவினவ, அவன் நிகழ்ந்ததைச் சொன்னான். பிறகு கொக்கானது அவ்வேடனைநோக்கி, ஓ பிரமகுலத்திற்பிறந்தவனே நானொரு புத்திசொல்லுகிறேன். அந்தவழியில் நின்று இகபர சௌக்கியத்தைப் பெறும்படியான இன்பத்தை யடைவாய் அதாவது விடியற்காலத்தில் இவ்விடம் விட்டு புறப்பட்டு இடராகிய காடெல்லாங் கடந்துபோய் இதுவரையிலுங்கூடியிருந்த வேடருறவைவிடுத்து உன்னுடைய பழையநாட்டை யடைந்து மித்திரருடன் கலந்து நயமாய்ப்பேசி, பிராயச்சித்தம் பண்ணிக்கொண்டு நல்ல குடிப்பிறப்புள்ள பிராமணஸ்திரீயையும் மணந்து நல்ல பிராமண ஆசார அநுஷ்டானங்களைக் கைக்கொண்டு, காம, கோப, லோபத்தை கைவிட்டு சாந்தகுணமுடையவனாய் ஸ்திரீயும் புருஷனும் மனதொத்து இல்லற தருமத்தை அனுசரித்தால் நல்ல பதவியைப் பெறுவாய் என்று சொல்லிய வசனங்களை இந்தப் பொய்யனான பிராமணன் மெய்ய



னைப்போல் நடித்துக்கேட்டு இம்மகாபாதகன் ஓர் யோசனைசெய்யலானான். அதாவது நமக்கோ இப்போதுவெகு திரவியம் கிடைத்திருக்கிறது இது இன்னும் நமக்கு நான்குதலைமுறைகளைக்காக்கும். நாம் சகல சம்பிரமத்துடனேயிருக்கலாம். ஆனால் நான் காலையில் இந்தக் காடெல்லாம் கடந்துபோகவேண்டியிருக்கிறபடியால் வழிக்கு ஏதாவது ஆகாரம் வேண்டும். அதற்காக இந்தக் கொக்கை கொன்று கையில் எடுத்துக்கொண்டால் வழியில் இளைப்பாறுவதற்கு உபயோகப்படும் என்று நினைத்து, கொக்கு நித்திரைபண்ணுகிற சமயம்பார்த்து அதனிடத்திற்போய் தயாளமென்பதற்ற கொடிய பாவி அதன் கழுத்தைமுறித்து கையிற்கொண்டு பொழுதுவிடிவதற்குமுன்னே அந்த வனத்தைக்கடந்து அதிக வேகமாய் போய்க்கொண்டிருந்தான். இது இப்படியிருக்க இந்த வேடப் பிராமணன் எந்த அரசனிடத்திலிருந்து திரவியங்களைப் பெற்றுவந்தானோ அந்த வேந்தன் நித்திரைசெய்துக்கொண்டிருக்கும்போது இவ்வேடப்பிராமணன் தன் சிநேகிதனாகிய கொக்கைக்கொன்று செல்கிறானென்று சொப்பனங்கண்டு நித்திரையினின்று எழுந்து ஓவென்றுகதறி கண்ணீர்விட்டான். அரண்மனையிலுள்ளோர் என்றுங்காணாத இவ்வாச்சரியத்தைக்கண்டு திகைக்கின்றார்கள். அரசன் நடந்ததைச் சொல்லி அக்கணமே அச்சண்டாளனாகிய பிராமணனை எங்கிருந்தாலும் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அப்படியே தூதர்கள் அந்த மகாபாவியை கண்டுபிடித்து அவனை கயிற்றினால் வரிந்திறுக்கி, தடிகளாலடித்து கொக்கினுடைய மாமிசம் அவன்துணியில் முடிந்திருக்கப் பார்த்து அதையும் அவிழ்த்துக்கொண்டு அவனையும் அந்த மாமிசத்தையும் அரசனுக்குமுன் கொணர்ந்தார்கள். இராஜன் அந்த மாமிசத்தைப் பார்த்தபொழுது அழுது மூர்ச்சையாய்விழுந்து பின்னுந் தெளிந்தெழுந்து அப்பிராமணனைப்பார்த்து ஓ நன்றிகுன்றிய பாதகா! நேற்றுதினம் என் சிநேகிதன் பெயரைச்சொல்லி வேண்டிய பொன்களையும் அரதனங்களையும் பெற்றுக்கொண்டுபோய் இன்றைக்கு "அன்னமிட்ட வீட்டிலேயே கொள்ளிவைத்தாயே" அடா துரோகி என்றுசொல்லி, பிறகு தன் தூதர்களைநோக்கி இந்தப்படுபாவியை என் முன்னிற் கொண்டுவராமல் அவ்விடத்திலேயே கொன்று தின்றுவிடக்கூடாதோ என்னெதிரில் இவனை ஏன் கொணர்ந்தீர்களென தூதுவர்கள் சுவாமி! இந்த நன்றி கெட்டவனை புசிக்க எங்கள்மனம் இசையாது. இவனுடலை நாயும் தின்னாதென ஆனாலிந்தப் பாவி என் முகத்திற் கெதிர்நிற்கவேண்டாம். இவனைக் கொண்டுபோய் சுடுகாட்டு நாய்களுக்கு இரையாகப் போடுங்களென்றார். அப்படியே தூதுவர்கள் அவனைச் சுடுகாட்டுக்குக்கொண்டுபோய் அவன் கழுத்தில் கயிற்றைமாட்டி நாலுபக்கங்களிலும் பிடித்துக்கொண்டு சுடுகாட்டு நாய்களையும் உசுப்பிவிட்டு இவனைக் காட்டிக் கடிக்கச்செய்தும் ஒரு உயிரைக்காட்டியவுடன் தங்களுயிரை லக்ஷியம்பண்ணாமல் போய்விழுந்து கடித்துத் தின்னும் நாய்களானது இந்தப் பெரும்பாவியைக் கண்ணாலும் பாராமல் தங்கள்பசியையும் ஓராமல் குலைத்துக்கொண்டுபோய்விட்டது. அப்பால் கூட்டுகளில் அடைபட்டிருந்த புலிகளுக்கெதிரில் போட்டார்கள், அவைகளும் புசிக்கவில்லை. இன்னும் அநேகவிதமான இம்சைகள் பண்ணியும் எந்தவிதத்திலும் உயிர் போகாமலிருக்கிற துஷ்டனை அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு, சில தூதுவர்கள் இராஜனிடத்தில்வந்து நடந்த சங்கதியைச் சொன்னார்கள். அரசனானவன் ஆச்சரியப்பட்டு நாயுந் தின்னாத இந்தவுடலை பூமி இத்தனைநாள் எப்படி சுமந்ததோவென்று ஆச்சரியமுற்று ஒன்றுந்தோன்றாமல் தன் இஷ்டதேவதையை நினைக்க, அது பிரசன்னமாய் "உம்முடைய சிநேகனாகிய கொக்கு பிழைக்கும் நீர் விசனப்படவேண்டா" மென்று தேர்த்தி கொக்கினுடைய மாமிசத்தை சுடலைசேர்த்து காஷ்டமடுக்கி தகனம்செய்யும்படி சொல்லிற்று. அரசனும் அப்படியேசெய்ய, ஆகாயத்திலிருந்து காமதேனு பாலைப்பொழிந்தது. அந்தப் பாலானது, கொக்காகிய ஞானவுடல் வெந்த சாம்பலை நனைத்தது, தட்சணமே கொக்கு பழைய வடிவங்கொண்டு கண்ணீர் சொரிந்து கொண்டிருக்கிற இராஜனை விசனப்படாமலிருக்கும்படி அநேக தைரியமொழிகளை மொழிந்தது. அரசன் கொக்கை மார்போடணைத்து உள்ளமகிழ்ந்து, ஐயா! எனக்கு அநேக தருமங்களையும் நீதிகளையும் சொல்ல வல்லவரான நீர் இந்தச் சண்டாளனுடனே எப்படி சிநேகித்தீர். இவனை எவ்வாறு நம்பி என்னிடத்தில் அனுப்பினீர், என்று நிகழ்ந்த சங்கதிகளையெல்லாம் விவரமாய்ச் சொன்னார். அச்சொல்லைக் கேட்ட கொக்கானது பதைபதைத்து எங்கே யந்தப்பிராமணன் என்று கேட்க, அந்தப்பாவி இதோ யிருக்கிறானென்று கொண்டுவரச்சொல்லி அதற்கு முன்விட்டார். கொக்கு பிராமண வேடனைப்பார்த்து "அப்பா என் தலைவிதி யிப்படியிருந்தது அவரவர்களினுடைய வினையின்படியே முடியும்" என்று, அரசனைப் பார்த்து இவனுடைய கட்டுகளை அவிழ்த்துவிட்டு இளைப்பாற்றி முன்கொடுத்த திரவியங்களையும் திருப்பி அவனுக்கு கொடுத்து அனுப்பிவிடும்படியாய் வேந்தனை வேண்டிக்கொண்டது. அப்படியே அரசன்செய்ய பிராமணனும் திரவியங்களைப் பெற்றுக்கொண்டு வேடுவச்சேரி சேர்ந்து முன்போலவே ஆசாரயீனனாய் காலங்கழித்தான். கொக்கும் பழையபடி தன் ஆலமரத்தில் வசித்துக்கொ

ண்டிருந்தது. ஆதலால் மனிதனிலும் தாழ்ந்ததான சாதாரண ஜந்துவாகிய கொக்கினிடத்திலிருந்து நாம் எவ்வளவு பெரியவிஷயம் அறியவேண்டியதா யிருக்கிறது. பட்சிசாதியாயிருந்தும் யென்ன யோக்கியதையுடையதா யிருந்தது. உயர்ந்த பிராமண குலத்திற்பிறந்தும் தன்னுடைய பிறப்பிற்குறிய கர்மங்களையெல்லாம் கைசோரவிட்டு நெறிதப்பி எப்படிகெட்டான். ஆனதால் உயர்ந்த குலத்திற் பிறந்தாலென்ன! தாழ்ந்த குலத்திற் பிறந்தாலென்ன! குலத்தைப்பற்றி நாம் கவனிக்கவேண்டிய அவசியமேயில்லை. நந்தனார் இழிந்தகுலத்திற் பிறந்தும் மோக்ஷ மெக்ஷனமெய்தினர். அவருடைய ஞானத்தினாலன்றோ, ஆகையால் நமக்குவேண்டியது ஞானமே. ஞானத்தையடைய சுலபமான வழி பக்தி. ஆகையால் நாம் எப்போதும் பகவானிடத்தில் பக்திசெய்து அவனுடைய திருவருளால் ஞானத்தை நாமெல்லோரும் அடைவோமாக.

---

## சாதனசதுஷ்டயம்.

### சமாதிஷட்கசம்பத்தி.

(முன்தொடர்ச்சி.)

### உபரதி.

விகிதமான கர்மங்களைப் புத்தி பூர்வகமாய் விடுதலே உபரதியென்று சிலர் சொல்லுவார்கள். அது சரியன்று. விகிதமான கர்மங்களில் கர்திருத்துவாபிமானம் பலாபேக்ஷை இவைகளில்லாமல், சகல பாபகர்மங்களையும்விட்டு புண்ணிய கர்மங்களைப் பகவத்பிரீதியாகச்செய்தலே உபரதி. "பலனைக் கோராமல் கர்மஞ்செய்வது சாத்தியமா? ஓர் பலனையும் உத்தேசிக்காமல் கர்மம் ஏன் செய்யவேண்டும்.? பலனும் வேண்டாம் நான் கர்மமும்செய்யவில்லை." என்று சிலர் கூறுவார்கள். உலகத்தில் ஒருவனும் ஒருக்காலும் ஒருகாரியமும் செய்யாமலிருக்கமாட்டான். அப்படி யிருக்கவேண்டுமென்று பிரதிக்கினை செய்துகொண்டிருந்தாலும், மனிதனுடைய பூர்வ கர்மானுசாரமாக விருத்தி யடைந்த ஸத்வ, ரஜஸ, தமசு என்னும் மூன்று குணங்களும் இவனையுமறியாமலே சில துஷ்டகர்மங்களில் மனிதனை இழுத்துச்செல்லும். சத்கருமங்களைப் பலனைக் கோராமல் செய்ய சாத்தியப்படாத ஒருவனுக்கு ஒருகர்மமுஞ் செய்யாமலிருக்கச்சாத்தியமா? சாத்தியமாகவேஆகாது. கர்மங்களின் பலனில் பற்று அல்லது ஆசைவைத்துச் செய்தால் அப்பலனை யனுபவிக்க ஜன்மங்களெடுக்கவேண்டும். ஜன்மங்களெடுத்தலே துக்கம். மனிதன் கர்மஞ்செய்யாதிருக்க முடியாது. கர்மஞ் செய்யவும்வேண்டும். ஜன்மம் விர்த்தியாகாமலு மிருக்கவேண்டும். இதற்கு என்னயுக்தி? சாஸ்திரங்களிற்கூறிய நற்கருமங்களைப் பலாபேக்ஷையின்றி ஈசுவரார்ப்பணமாகச் செய்தலே நல்ல யுக்தி.

### திதிக்ஷை.

உபரதி யென்னும் சாதனம் கைகூடினவனுக்கு திதிக்ஷை சுலபமாகும். சுகதுக்கங்களைப் பொறுத்தலே திதிக்ஷையாகும். பிராரப்த கர்ம விசேஷத்தினால் எந்தவேளைக்கு எதுவருமோ அதை யனுபவித்தே தீரவேண்டுமென்று கருதி தான் எதை இழந்தாலும் அதற்காக மனவாட்டத்தையடையாமல், தான் எதை அடைந்தாலும் அதைக்குறித்து மனமகிழ்ச்சியடையாமல் சமபுத்தியுடனே யிருத்தலே திதிக்ஷை. உலக சுகதுக்கங்களெல்லாம் தேகத்தாலும் மனதாலும் அனுபவிக்கப்பட்டவைகள். நாம் தேகமுமல்ல மனமுமல்ல வாதலால் உலக சுகதுக்கங்கள் நமக்கல்லவென்று எண்ணி அவைகள் வரும்போது அவைகளில் நாம் பந்தப்படாமல் சாக்ஷிபோல் தனியேயிருந்து பார்க்கவேண்டும். இந்த ஞானம் வருகிற வரைக்கும் சீதோஷ்ண சுகதுக்கங்களைப் பொறுத்தலே திதிக்ஷை.

### சிரத்தை.

வேதவாக்கியத்தில் நம்பிக்கையும் குருவினிடத்து விசுவாசத்தையும் வைப்பதுதான் சிரத்தை. சிரத்தையில்லாமல் ஒரு காரியமும் நிறைவேறாது. உலக விஷயானுபவங்களில் ஒரு மனிதன் எவ்வளவு பிரியம்வைப்பானோ அவ்வளவு பிரியம் குருவினிடத்து வைக்கவேண்டும்.

### சமாதானம்.

வேதாந்த சிரவணார்த்தத்தையே சித்தஞ்சிந்திக்கும்படி இனிய லீலையாக நியமித்துக்கொண்டு, விசுவாசத்துடன் சென்று அடைந்த குரு உபதேசித்த லட்சியத்தின்பிரகாரம் மனதை ஏகாக்கிரசித்தமாய்நிறுத்துவதே சமாதானமாகும். மேற் கூறிய சமம், தமம், உபரதி, திதிக்ஷை, சிரத்தை, சமாதானம் இவையாறும் சமாதிஷட்கசம்பத்தி, இனி வருவது முமுக்ஷுத்வம்.

### முமுக்ஷுத்வம்.

ஜனனமரண சமுசார பந்தத்தினின்று விடுபடுவதெப்படியென்ற விசாரத்திலேயே மனது பலப்பட்டு இதரவிஷயங்களில் மனம் செல்லாமல் பின்னடைகிறதே முமுக்ஷுத்வம். கிரகம் பற்றிக்கொண்டெரிகிறபோது அவ்வீட்டுக்குள் அகப்பட்ட புருஷன் தனது



புத்திரமித்திர களத்திராதிக ளென்னமாய்ப் போனார்களோவென்ற விசாரத்துடன் கூடி, அக்கினியில் தபிக்கப்பட்டவனாய் அந்த புத்திர மித்திர களத்திராதிகளை விட்டுப்பிரிந்து குளிர்ந்த ஜலத்தில் பிரவேசித்ததுபோல, சமுசாரமென்னுந் தாபாக்கினியினால் தகிக்கப்பட்ட புருஷன் இந்த சமுசாரபந்தத்தைப் போக்கின்ற குருநாதன் எங்கேயிருக்கிறாரோ இதற்கு என்ன சாதனம் வேண்டுமோவென்று தாபங் கொண்டு தேடுகிற சித்தவிர்த்திக்குத்தான் முமுக்ஷுத்வம் என்று பெயர். இதுதான் நாலாவது சாதனம். இந்த நான்கு சாதனங்களும் யாரிடத்திலுண்டோ அவர்கள்தான் வேதாந்த சிரவணஞ்செய்யத் தகுந்த அதிகாரிகள். அவர்கள்தான் சற்குருவினிடத்து ஞானோபதேசம் பெற்றுக்கொள்ள அருகர்கள். அவர்கள்தான் உபதேசம் பெற்றால் நற்கதியடைவார்கள்.

---

## மனோகரன்.

(முன்தொடர்ச்சி.)

என்னப்பா! பிரபு எங்கிருக்கிறாரென்று ஒரு பெரியவர் மனோகரனைக் கேட்டார். சற்றுமுன்னமே அவர் கொலு மண்டபத்திலிருந்தார். இப்போது அவரெங்கிருக்கிறாரோ? இதோ சாம்பன் மேன்மாடியிலிருந்து வருகிறான் அவனைக் கேட்போமென்று மனோகரன் பதிலளித்தான். சாம்பன் பெரியவரை நமஸ்கரித்து பிரபு கொலுமண்டபத்தி லிருக்கிறார், அவருடன்கூட ஒருவருமில்லை யெனச் சொல்லக்கேட்டுப் பெரியவர் மேன்மாடிக்குச்சென்றார். கொலுமண்டபத்திற்கு பெரியவர் சென்றவுடன் "வாருங்கள் வாருங்கள் இராமதாசபக்தசிகாமணியே! ஏது இந்தப்பக்கம் இப்போது வருகிறதில்லையென்று சந்திரசேகர பிரபு சொன்னார்." "தேகம் கொஞ்சம் அசௌக்கியமாயிருந்ததால் வெளியேவரவில்லை. இப்போது சௌக்கியந்தான்" என்று இராமதாசர் பதில் கூறினார். இதைக்கேட்டவுடன் பிரபுவானவர் மேலே யொன்றுங் கேட்காமல் ஏதோ யோசிக்கலானார். சந்திரருடன் கேட்டுக்கொண்ட வண்ணம் பிரபுவின் மனக்கவலை யின்னதென்றறிய வந்த இராமதாசரும் பிரபுவை என்ன கேட்பதென்றாலோசிக்கலானார். சிறிதுநேரம் இருவரும் பேசாமல் மௌனமாயிருந்தார்கள். பிறகு தைரியங்கொண்டு இராமதாசர் பேசவாரம்பித்தார். மகாபிரபுவே! தாங்கள் இப்போது யோசிக்கும் மாதிரியாலும், கதிரவன் என்னும் நாயகன் பிரிவால் வாடிய பங்கசத்தைப்போல் தங்கள் முகம்வாடி யிருப்பதாலும், ஏதோ தங்களுக்கு மனக்கவலை யுண்டாயிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. அம்மனக்கவலையின் காரணத்தை நான்தெரிந்து கொள்ளலாமோ வென்று இராமதாசர் கேட்டார். இதைச் செவியுற்ற பிரபு பக்தரின் கேள்விக்கு வியந்து, இராமதாசரே! தங்களிடத்துச் சொல்லக்கூடாத விஷயம் என்ன விருக்கிறதென்று கூறி, மகதவரசன் அனுப்பியகட்டளை முழுவதையும், அதற்குமேல் தான் செய்திருக்கிற யோசனையும் சொன்னார். காரணமின்றி மகதவரசன் அனுப்பிய ஆக்கினையை இராமதாசர் அறிந்து, அதற்கு மனங்கலங்கிய பிரபுவின் யோசனையும் தெரிந்து பின்வருமாறு கூறலுற்றார். மகாப்பிரபுவே! இச்சமயத்தில் யான் கூறுவன சிலவுண்டு. ஊருமின்றி உறவினருமின்றி எல்லாவூரிலுஞ் சென்று யாவரையும் நேசித்துக் காலத்தைக் கழித்துவரும் யான் சொல்வதில் ஐயம் சிறிதுங்கொள்ளாமல் செவிகொடுத்துக் கேட்கவேண்டும். நான் கூறப்புகுவது தங்களுக்கு முன்னரே தெரிந்தவிஷயமேயாயினும் அதைஇச்சமயத்து தங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். தன்கீழ்வாழ்வோராலே செய்யப்பட்ட குற்றத்தைநாடி யாவரிடத்தும் முகங்கோணாமல் நடுவு நிலைமையைப் பொருந்தி, அக்குற்றத்திற்கு சொல்லப்பட்ட தண்டனையை சாஸ்திரநூல்களில் வல்லவரோடு ஆராய்ந்து, அவ்வாராய்ச்சியின் தேர்ச்சியால் பெறப்பட்ட தண்டனையை விதித்தலே அரசனுக்குமுறை. முறையைச் செய்யாத அரசனது கொடுங்கோலின் கீழ்வாழின் யாவர்க்கும் பொருள் நஷ்டமும் துக்கமும் நேரிடும். அரசன் முறைசெய்யாமையினாலே குடிகள் துன்பப்பட்டு அதனைப்பொறுக்கமாட்டாம லழுதகண்ணீரே அவ்வரசனது செல்வமாகிய மரத்தைக்குறைப்பதற்கு நல்வாளாகும். குடிகளால் அஞ்சப்பட்ட செயல்களைச் செய்யும் அரசன் நிச்சயமாய் சீக்கிரத்தில் கெடுவான். நம்மரசன் பொல்லாதவனென்று குடிகளாலே சொல்லப்படுகிற துன்பந்தரும் சொல்லையுடைய வேந்தன் ஆயுளுங்குறைந்து செல்வத்தையுஞ் சடிதியிலிழப்பான். அரசன் முறைதப்பிப் பொருளைச்சம்பாதிப்பானாயின் அவனது நாட்டிலே பசுக்களும் பால்கறவாது, அந்தணரும் வேதமோதல், ஓதுவித்தல், யாகஞ்செய்தல், செய்வித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுவகைத் தொழில்களையும் கைசோரவிடுவர். அறுதொழிலோராகிய அந்தணர் தங்கள்தொழில்களைச் செய்யாது விட்டால், தேவர்களுக்கு யாகம் நடவாமையால் காலத்தில் மழைபெய்யாது.மழையானது பெய்யவேண்டுங் காலத்தில் பெய்யாதொழியுமாயின் உலகத்தில் பசி நிலைபெற்று உயிர்களைவருத்தும். இதைக்காட்டிலும் தேசத்திற்கு வேறென்ன கெடுதிவேண்டும். தகுந்த காரணமின்றி மகதவரசன் தங்களை ஊரைவிட்டுப் போகும்படி உத்திரவளித் திருப்பானாயின் மேற்கூறியவை யெல்லாம் அவனைச்சாரும்.

இது நிற்க, தாங்கள் அரசனது ஆக்கினைக்காக
மனவருத்தமுறுவது அழகல்ல. தங்கள் தைரிய மெங்
கே போயிற்று? தங்கள் குலகுருவின் உபதேசவாக்கி
யங்களை மறந்தீர்களோ? இப்போது வருந்துவதெல்
லாம் தற்கால நிலைமையினின்று இழிந்த மற்றோர் நிலை
மைக்குப் போகும்படி நேர்ந்ததற்காகவோ? அதாவது
இப்பொழுதுள்ள அதிகாரம், செல்வம் இவைகளைப்
பிரிந்து போகிறோமென்றுதானே வருந்தவேண்டும்?
இவ்வதிகாரம் செல்வங்களெல்லாம் ஓரிடத்தில் நிலைபெ
ற்றிருப்பவைக ளல்லவே. நிலை பெறாத தன்மையையு
டையதென்பதை தாங்கள் மறந்ததினாலல்லவோ அவை
களிடத்து தங்களுக்குப் பற்றுண்டாயிற்று. ஓரிடத்
திலிருந்து மற்றோரிடத்திற்கு மாறிக்கொண்டே யிருப்
பதல்லவோ செல்வம். கூத்தாடுகிற சபையினிடத்து
திரளான ஜனக்கூட்டம் சேர்ந்து அக்கூத்தாட்டம்
நிகழும் வரைக்குமிருந்து அவ்வாட்டம் முடிந்தவுடன்
கூட்டமும் கலைந்து போகிற தன்மைபோல் செல்வமா
னது ஒருவனது நல்வினைகாரணமாக அவ்விடத்தில்
பலவிதத்தால்வந்து அந்நல்வினை முடிந்தவுடன் தானும்
போகின்றது. செல்வத்தையடைவதற்கும் அதையிழப்
பதற்கும் அவரவர் செய்தவினையே காரணம். வினையின்
பயனை யனுபவித்தே தீரவேண்டும். தண்ணீரையே
காரணமாகவைத்துக்கொண்டு உற்பவித்த தாமரையா
னது எப்படி தண்ணீரில் பற்றாதிருக்கிறதோ, அவ்வண்
ணமே வினையேகாரணமாக ஜென்மமெடுத்து வினையின்
பயனை யனுபவிக்குங்காலத்து அதில் மனம்பற்றாது
அவ்வனுபவத்தை சாக்ஷிபோல் பார்ப்பதல்லவோ துன்
பத்தையடையாமலிருப்பதற்கு நல்லசாதனம். பிரபுவே
தங்களுக்கிது தெரியாததல்லவே. இழிவான பல ஜென்
மங்களையெடுத்து புண்ணியத்தால் உத்தமமான மனித
ஜென்மத்தை யெடுத்தது நீர்க்குமிழிபோல நிலையில்லா
த செல்வத்தையும் அதிகாரத்தையும் படைத்து அதில்
சிலநாள் சுகித்து அவை பிரிந்தபின் துக்கிப்பதற்குத்
தானோ? உண்டுகளித்து உறங்குவதுதானோ மனிதன்
செய்யுந்தொழில்? மிருகங்களும் இத்தொழிலைச்செய்
கின்றன. பகுத்தறிவைப் பெற்று மிருகங்களைக்காட்டி
லும் உயர்ந்து மனிதனாய்ப் பிறந்ததெதற்கோ? பிரபுவே
தாங்கள் சிறிது யோசிக்கவேண்டும். மனிதன் செய்
யுந்தொழில் வேறேயிருக்க அதையொழித்து காலத்தை
அவலமாக்கல் நன்றோ? இது என்தேசம் அது உன்தே
சமென ஒருவன் பிரித்து எல்லை வரைந்தாலும், தேசமா
னது பிரிந்ததோ? அது முன்போலவே யிருக்கின்றது.
தேசத்தைப் பங்கிட்டு உனதெனதென்று சொந்தம்
பாராட்டுவது அவரவர் மனதில்தானே. மனோசங்கல்
பம் உள்ளவரைக்குந்தானே உனதெனதென்று சொந்
தம் பாராட்டமுடியும். மாறுதலே தொழிலாகவுடைய
மனதின் காரியத்தை நம்பலாகுமோ? மகாப்பிரபுவே!
நான் கூறுவதில் குற்றமுண்டோ? குற்றமிருப்பின் தள்
ளிவிடுங்கள் குணமிருப்பின் எடுத்துக் கொள்ளுங்கள்.
இப்போது தங்களுக்கு ஒருகுறைவுமில்லை. நிலையில்லாச்
சம்பத்தை நீரிழப்பதற்கு மனமிரங்கவேண்டாம். நிலை
யாய் ஒருபடித்தாய் என்றைக்குமுள்ளதை நீரிழக்கமுடி
யாதபடியால் அதைப்பற்றுங்கள். அதை நாடுங்கள் உங்
களுக்கு ஒரு குறைவுமில்லை. நான்சொல்லும் சமாதா
னம் இவ்வளவுதான். முன்காலத்தில் அநேக சக்கர
வர்த்திகள் செல்வம் நிலையாமையை யறிந்து அதில்
மனம்பற்றினால் விளைவது துக்கமெனத்தெளிந்து தங்
கள் இராஜ்ஜியத்தைப் பிரிந்து அழிவற்றப்பொருளைத்
தெரிந்து அதை யெங்குங்கண்டு நித்தியமான பேரின்
பவாழ்வை யடைந்தார்கள்" என்று கூறி இராமதாசர்
அநேக இராஜாக்களுடைய சரித்திரத்தை சந்திரசேகர
னுக்குச் சொல்லி முடித்தார்.

இவையெல்லாங்கேட்டபின் சந்திரசேகரன் அதிக
தைரியங்கொண்டவனாய் முகமலர்ச்சிகொண்டு இராம
தாசரை தன்குருவென மதித்து அவரைநமஸ்கரித்து,
மனதார துதித்து வாயாரப்புகழ்ந்து அவர்வசனங்களால்
தான் அடைந்த சுகத்தைப்பலதரஞ் சொல்லி ஆனந்தப்
பட்டு இராமதாசரே! இச்சமயத்தில் தாங்கள் சொல்லி
ய மொழிகள் எனக்கு நன்மையை விளைத்தது. இனி
நானொன்றுக்கும் அஞ்சமாட்டேன். எதுவரினும் வருக
எதுபோயினும் போகுக. நிலையாய் ஒருபடித்தாய் எங்
கும் நிறைந்து ஏகமாய் ஞானமயமா யிருக்கும் பரம்
பொருளை நாடுவேன் எனக்கூறி இராமதாசரை ஆசிர
மத்திற்குப்போக விடைகொடுத் தனுப்பிவிட்டார்.

இராமதாசருக்கும் சந்திரசேகரனுக்கும் கொலு
மண்டபத்தில் நடந்த சம்பாஷணையை அடுத்த அறையி
லிருந்து கேட்டுக்கொண்டிருந்த சந்திரசூடனும் சுந்தரி
யும் தங்கள் பிதாவின் மனவருத்தத்திற்குக் காரணத்தை
யறிந்துசிறிதுவிசனமுற்றார்கள். இராமதாசருடைய உப
தேசவாக்கியங்களை அவர்கள் முற்றும் உணரவில்லை. சமு
சாரத்தைவிட்டு துறவிகளாயிருப்போர் கூறும் வார்த்தை
யில் சந்திரசூடனுக்கு நம்பிக்கையில்லை. சமுசாரத்தை
நடத்தமுடியாது அதைவிட்டு தனியேவந்து வயிறுவள
ர்க்க ஏதோ சில பழையகதைகளைப் பாடம் பண்ணிக்
கொண்டு துறவிகள் என்று பெயரைவகித்து சிலர் திரி
கிறார்கள், இவர்கள் பேச்சைக் கேட்பதில் பயனில்லை
யென சந்திரசூடன் சுந்தரிக்குச் சொன்னான். க்ஷத்தி
ரியனாயிருப்பவன் தன் குலத்திற்குத்தக்க தருமங்களை
மேற்கொண்டு இராஜ்ஜியத்தை யாளாமல், அதைவிட்டு



எல்லாவற்றையுந் துறந்து, உண்டோ யில்லையோவெ
னும் பரம்பொருளை நாடுவது அழகோவென்று மறு
படியும் சந்திரசூடன் சொன்னான். இப்படியாக இராம
தாசரின் வாக்கியத்தையுணராமல் சந்திரசூடன் பக்தரை
சிறிது இகழ்ந்தும் நிந்தித்தும்பேசி சுந்தரியுடன் மேன்
மாடியைவிட்டு கீழிறங்கி வந்தான்.

(இன்னும்வரும்.)

## வறுமை.

இப்பூவுலகின்கண், எல்லாவற்றிற்கும் காரணமா
யும் தமக்கோர் காரணமின்றியும் ஆதியந்த மில்லாமல்
சுயம்புவாய் யிருக்கிற பராபர வஸ்துவாகிய ஈசுவரன்
மண், கல், மலை முதலிய அநேக ஜடராசிகளையும், மனி
தன், மிருகம், பட்சி முதலான ஜீவராசிகளையும் படை
த்துக் காத்துவருகின்றனர். இப்படியாதொரு பேதமு
மில்லாமல் ஜீவராசிகளையும் ஜடராசிகளையும் சிருஷ்டித்
திருக்க, அவைகள் ஒன்றற்கொன்று வித்தியாசமாயிருப்
பானேன்? உதாரணமாக கல்லை எடுத்துக் கொள்வோம்,
சில கற்கள் சிற்பியினால் செதுக்கப்பட்டு ஆலயங்களில்
வைத்து அதிகபயபக்தியுடன் பூசைசெய்யப்பட்டு வரு
கின்றன. சிலகற்கள் அக்கோயிலினுடைய படிகட்டுகளா
கயிருக்கின்றன. இதற்கென்ன காரணம்? இரண்டும் கற்
கள்தான், இதில் ஒன்று உயர்வாயும் ஒன்று தாழ்வாயு
மிருப்பானேன். நாம் மனிதனை எடுத்துக் கொள்வோம்,
ஒருவன் சர்வ சம்பத்தும் நல்ல கீர்த்தியு முடையவ
னாய் பார்ப்போரெல்லாம் மிக்கமரியாதை பண்ணத்
தகுந்தவனாய் யிருக்கிறான். இன்னொருவன் அவன் வீட்
டிலேயே சேவகனாய் இருந்து அவன் இட்டவேலைகளை
ச்செய்து கஷ்டப்பட்டு காலத்தைக் கழிக்கிறான். இன்
னும் ஒருவன் சௌக்கியமாய் வண்டியில் உட்கார்ந்து
செல்கிறான். மற்றொருவன் அவ்வண்டியை கஷ்டப்
பட்டு இழுத்துக்கொண்டு செல்லுகிறான். இதற்கென்ன
காரணம்? அவனவன் பூர்வஜன்மாந்தரத்தில் செய்த கர்
மத்திற்கு தக்கவாறு பலனை இந்த ஜன்மத்தில் அனுப
விக்கிறான். ஒவ்வொருவனுக்கும் முன்ஜன்மத்தில் செய்த
கர்மத்திற்குத் தக்கபடி மறு ஜன்மத்தில் சுகதுக்கங்க
ளுண்டாயிருக்க யாதொருபேதமும் பாராட்டாமல் சம
மனதுடையவராய் எல்லாவற்றையும் சிருஷ்டித்த சர்
வேஸ்வரனை நோவதென்னை? இவ்வுலகத்தில் (உலகவிஷ
யமாக) நாம் கஷ்டப்படும்போது, அதாவது நோய்,
வறுமை முதலானவைகளால் வருந்தும்போது "ஈசுவ
ரன் நம்மைமாத்திரம் தரித்திரனாகவும் அயல்வீட்டானை
மட்டும் நல்ல சீமானாயும் சிருஷ்டித் திருக்கிறானே! இவ
னிடத்தில் இவ்வளவு பட்சபாதமும் உண்டா! இவன்
நமக்கெல்லாம் தலைவனா யிருப்பவன் எல்லாரையும் ஒரு
விதமாக வல்லவோ பார்க்கவேணும். ஈசுவரன் நமக்கெல்
லாம் தந்தை யென்று சொல்லுகிறார்களே. அப்படி
இருந்தால் அவனுடைய மக்கட்களாகிய நம்மிடத்தி
லெல்லாம் அவன் ஒரேவிதமான அன்பை யல்லவோ
செலுத்தவேண்டும். அப்படிக்கில்லாமல் ஒருவனை மாத்
திரம் உயர்ந்த ஸ்திதியிலும் மற்றொருவனை தாழ்ந்தஸ்
திதியிலும் வைக்கிறானே" என்று அவனை நொந்தால்
அவன் என்னசெய்வான். ஓர் குழந்தைக்கெதிரில் அநே
கவித பழங்களையும் காய்களையும் கும்பலாய்ச்சேர்த்து
உனக்கு எதுவேண்டுமோ எடுத்துக்கொள் ளென்றால்
அக்குழந்தை பழத்தை எடுத்துக்கொள்ளாமல்காய்களை
எடுத்துக் கொண்டால் அதற்கு நாம் என்னசெய்யலாம்.
நமக்கு அந்தக்குழந்தை பழத்தையே எடுத்துக்கொள்
ளவேண்டுமென்ற எண்ணமேயொழிய காயை எடுத்
துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமில்லை. அது
போல ஈசுவரன் அநேக சத்கருமங்களையும் அசத்கரு
மங்களையும் நம்முன்வைத்து உங்களுக்கு எதுவேண்டு
மோ எடுத்துக்கொள்ளுங்க ளென்கிறான். நாம் சத்கரு
மங்களைச்செய்யாது அசத்கருமங்களை செய்வோமானால்
எப்படி காயைத்தின்ற குழந்தை என்ன பலனை அனுப
விக்குமோ அதுபோல நம் தீயகருமங்களுக்கு தக்கவா
று நமக்கு பலன்கிடைக்கிறது. இப்படியிருக்க கடவுளை
நாம் நோவது நமது அறிவீனத்தினாலன்றோ? ஆனால்
கொடிய வறுமையினால் வருந்தும்போது ஒவ்வொரு
வரும் அறிவீனத்தால் ஈசுவரனை நிந்திக்க நேரிடுகிறது.
ஏனெனில் "கொடிது கொடிது வறுமை கொடிது"
என்று ஔவை சொல்லியதிற் கிணங்க வறுமையினும்
கொடியது ஒருவனுக்கு ஒன்றுமில்லை. ஒருவனுக்கு
வறுமை மேலிட்டதென்றால் அவன் இனிமேல் மனித
னல்லவென்று சொல்லலாம். ஏனெனில் ஒருவனுக்கு
வறுமை வந்தால் அவனுக்கு மனிதனுக்கிருக்க வேண்
டிய லட்சணங்கள் குறைகிறது. மனிதனுக்கிருக்கவேண்
டிய இலட்சணங்கள் குறைந்ததென்றால் அப்புறம் மனி
தனென்றபெயர் எங்கே! ஆகையால் வறுமைவந்தடைந்
ததெனில் அப்புறம் அவன் மனிதனல்ல. அதாவது
மனிதன் அடைதற்குரிய போகங்களெல்லாம் அழிகின்
றன. முதலே இவனுக்கு வறுமையினால் வயிற்றிற்கு
ஆகாரமில்லை யெனில் இவன் இதர போகங்களை எங்ங
னம் அனுபவிக்கப் போகிறான். ஏழைஞன் ஒருவனையெடுத்
துக் கொள்வோம். இவனுக்கு உலகத்தில் என்னசுக
மிருக்கிறதென்று பார்ப்போம். முதலில் இவனுக்கு
சாப்பாட்டிற்கு வழியில்லை. இவனை உலகத்தில் யார்
மதிப்பார்கள். மனிதருடன் கூடிப் பேசப்போனால் இவ
னையார் கிட்டசேர்ப்பார்கள் "எல்லாம்நீயே ஈசுவரனும்
நீயேயென்று துதிக்கும்படியான மனையாளும் அவனை

சட்டைபண்ணுவாளா! சதா அவனுடைய நன்மையையே கருதும்படியான தாய்தந்தையர்களும் வசைமொழி மொழிவார். இப்படி பெற்றோரும் பெண்டாட்டியுமே தன்னை விரும்பாமற் போனால் வேறுயார் இவனை மதிப்பர். ஒருவரும் மதியாத இவன் உலகிலிருந்தென்ன பயன். இறந்துபோய் விடுதலே மேலானது. இறக்கவும் மனதுவராமல் ஏற்பதிகழ்ச்சி என்பதை யோராமல் பிச்சை எடுத்தாவது பிழைத்திருப்போ மென்றால், பிச்சைஎடுத்தாவது பிழைத்திருந்து என்ன காரியம் உலகில் செய்யப் போகிறானோ விளங்கவில்லை. இவன் பிச்சைக்குப் போனால்தான் இவனுக்குக் கிடைக்குமா. இவனுக்கு ஏற்கனவே நல்லகால மில்லாமல் தரித்திரம் பிடித்துதானே இந்த ஸ்திதிக்குவந்தான். இவன் பிச்சைக்குப் போனால் இவன் தரித்திரமும் இவன்பின்னே தானே தொடரும். அந்தோ இந்தியாவில் அனேகர் பிச்சை எடுப்பதே தொழிலாகக் கொண்டு ஒழுகுகின்றனர். மேலும் நம்மவர்களில் சிலர் தங்கள் குழந்தை முதலானவைகள் அசௌக்கியமா யிருக்கும்போது "என் அருமையான பிள்ளை பிழைத்து (உயிரோடிருந்தால் போதும்) பிச்சையெடுத்தாவது ஜீவனம் செய்கிறான் என்று சொல்லுகிறதுண்டு.

இத்தகையோர் வறுமையினுடைய கஷ்டத்தை அனுபவித்தவர்களல்லர் போலும். இன்னும் சிலர் கேவலம் பிச்சை எடுக்காமல் தங்கள் உறவினர்களில் யாராவது கொஞ்சம் சிமானாயிருந்தால் அவனிடத்தில் சார்ந்து அடிமைபூண்டு ஒழுகுவது இன்னும் வறுமையினுங் கொடுமை. ஆயினும் இவ்வடிமைக்கும் வறுமையே காரணம். உதாரணமாக பெற்றோரல்லாத ஓர் உறவினனிடத்து அவ்வுறவினனுடைய நல்லெண்ணத்தால், ஓர் வறியவன் சார்ந்து அவன் வீட்டிலேயே புசித்து யாதொரு குறைவில்லாமலும் வாழ்ந்து வருகிறான். இப்படி இவன் வாழ்ந்து வந்தபோதிலும் கொடிய வறுமையால் ஒருவன் என்ன துக்கத்தை அனுபவிப்பனோ அதேதுக்கத்தை இவனும் அனுபவிப்பன். எப்படியெனில், இவன் தனியாய் ஓரிடத்தில் உட்கார்ந்து யோசித்தால் என்ன! நாம் ஒரு ஆண்பிள்ளையா யிருக்கிறோம். ஓர் அயலானுடைய வீட்டில் நம்மால் அவனுக்கு யாதொரு உபகாரமுமின்றி அவன்வீட்டில் நாம் சாப்பிட்டுக்கொண்டு வருவது நமக்கு அழகோ? நாம் என்ன செய்யலாம் இவ்வீட்டைவிட்டு வெளியேபோய் பிழைக்கலாமென்றாலோ என்னவிதமாய் பிழைக்கிறது? அதற்கும் வழியொன்றையும் காணோம், என்று சதாமனக் கவலை கொண்டு உலகவியாபாரம் எதிலும் மனம் செல்லாமல் தன் தலைவிதியைப் பற்றி உன்னி உன்னி சதா கவலை கொண்டு காலத்தை கழிக்கிறான், மேலும் அவ்வீட்டுக் குடையவர்கள் என்ன சொன்ன போதிலும் அவைகளுக்கெல்லாம் எதிர்சொல்லாமல் மிருகங்களைப் போல் வாய்திறவாமல் இருக்கவேண்டியதா யிருக்கிறது. அப்படி இவன் நாம் அதிக மரியாதையுடன் அவர்களிடத்தில் நடக்கிறோம் என்றும் அவர்களிடத்தில் தான் குற்றம் ஒன்றும் செய்யவில்லை என்றும் (அவனவன் செய்கிறது அவனவனுக்கு நியாயம்) இவன் நினைத்து அதிகபயபக்தியுடன் நடந்தாலும் அவனுடைய கெட்ட காலத்திற்கு தக்கபடி இவனிடத்தில் அவர்களுக்கு அதிருப்தியே உண்டாகும். நாம்சரியாய் நடந்தும் நம்மிடத்தில் அவர்களுக்கு அதிருப்தி உண்டாவதேன் என்று யோசித்தால் இவனுடைய தரித்திரமே காரணம். பிச்சை எடுத்தலைக் காட்டிலும் கொடியது ஒருவரிடமிருந்து அவர் சொன்னபடி நடந்து வயிறுவளர்ப்பது. இப்படி வயிறு வளர்க்கும் மனிதனும் மனிதனெனப்படமாட்டான். ஏனெனில் இம்மனிதன் சுயாதீனமாய் ஒன்றும் செய்யமுடியாது. மிருகங்களாவது சுயாதீனமாய் எதையும் செய்யவல்லது. வறுமையால் அவஸ்தைப்படும் மனிதனோ ஒன்றும் சுயாதீனமாய் செய்யமுடியாதவனாய் அம்மிருகத்தினும் கடையனாவன். கடைசியாக இவ்வறுமையால் வரும்இழிவு இவ்வளவென்று வாயால் சொல்லியும் முடியாது எழுதியும் முடியாது. ஆனதுபற்றியே,

துதிக்கின்ற மனைவியுங் குறைசொல வடங்கை தாய்
　　சோகமுற வசை கூறுவார்
துன்பமொடு மனமெலியு மேனி வேற்றுருவமாந்
　　தொலையாத கவலை வளரும்
உதிக்கின்ற புத்தியு மழுங்கிடுங் கல்விபோ
　　முதாரந் தலைதிக பசியாம்
உறவின் முறையாரு மொருவார்த்தை சொல்லார் சொ[ன்னா]
　　வுத்தரமு மொருவர் கேளார்
விதிக்கின்ற வுலகத்தி லெல்லாரு மிகழுவார்
　　மிடிவந்து சேர்ந்த தென்றால்
மேன்மையே தவிர்வேது குலமேது நலமேது
　　வித்தையே தெரைதிவர் காண்.

என்று ஆன்றோர் கூறியுள்ளார்.

(இ-ள்) உலகத்தில் ஒருவனை தரித்திரம் வந்தடைந்தால் அவனைப் போற்றுதற்குரிய மனைவியும் குறை கூறுவாள். பெற்ற தந்தை தாயாரும் அவன் சோகிக்கும்படி வசைமொழி கூறுவர்; துன்பமுண்டாகி மனம் மெலிவடையும்; உடலின் மேனி மாறிப்போம்; நீங்காத கவலை மேன்மேற் பெருகும்; நல்ஞானம் உதிப்பதான புத்தியும் மழுங்கிப்போம்; கற்ற கல்வி மறந்துபோம்; உறவின்முறையாரும் தன்னைக்கண்டவிடத்தில் ஒருவார்த்தையும் பேசார்; அவன் இடுகின்ற கட்டளைகளுக்கு ஒருவரும் காதுகொடுக்கமாட்டார். அவனுக்கு மேன்மை அறிவு குலம் இவையெல்லாம் சிதையும்.

ஆகையால் ஆரியநேயர்களே! இந்த ஜன்மத்தில் செய்கிற புண்ணிய பாவங்களுக்கு தக்கபடி மறுஜன்மத்தில் சுகதுக்கங்கள் கிடைக்கிற படியால் என்னைப் போல் மறுஜன்மத்தில் வறுமையை அனுபவியாதிருக்கும்படி இந்தஜன்மத்தில் சற்கருமங்களை செய்து அடுத்த ஜன்மத்தில் நல்ல உயர்ந்த ஸ்திதிக்கு வரும்படியாக பகவானை தியானம் செய்து நற்கதி யடைவீர்களாக.

(ஓர்வறிஞன்.)

---

## திரிகுணம்.

அகண்டபரிபூரண சச்சிதானந்த சொரூபமாக விளங்குஞ் சைதன்னியத்தில் விஸ்மரணையாக வெழுந்த நெப்தியே நிலத்துள் ஊன்றி விதையு புக்குமாறு போல் திரிபதார்த்தங்களும் வெளியாகா துள்ளடங்கி நிற்கு மவசரத்தை மகதத்துவ மெனவும், அங்ஙனம் வெளியாக்கா துள்ளடக்கிக் காட்டு மவசரநிலையான நெப்தியே வெளியரும்பிய முளைபோல் சகசீவ பரபேதங்காட்டாது பொதுவாக வெளியெழுதலின், அவ்வெழுச்சியை அகங்கார தத்துவமெனவும், அவ்வெழுச்சி வடிவாகநின்ற நெப்தியே அம்முளை மூன்றாக வெடிக்குமாறு போன்று சகசீவபரமாதற்கு மூன்றாக வெளிப்படுதலின் அவ்வவசரத்தை முக்குணங்களென்று கூறப்பட்டுள்ளது. சத்வம், ரஜசு, தமசு என்பவைகளே முக்குணங்கள். இந்த மூன்று குணங்களும் சகசீவ பரங்களுக்குக் காரணமா யிருப்பதால் உலகில் இவைகள் சம்பந்தப் படாதது ஒன்றுமில்லை.

ஸ்திரமான ஞானத்தோடு ஒழுங்காய் ஓர் கிரமத்தை அனுசரித்து சாந்தமாய் ஸ்திரமாயிருப்பதே சாத்விகஸ்திதி.

ஸ்திரமில்லாத ஞானத்தோடு ஒன்றைவிட்டு ஒன்றைத்தாவி அஸ்திரமா யிருப்பதே ராஜஸிகஸ்திதி.

ஒழுங்கற்று கிரமமற்று, விடுவது இன்னதை பிடிப்பது இன்னதை யென்று அறியாமல் மூடமாய் ஒன்றுந் தெரியாமல் அஞ்ஞான மதிகரித்திருப்பதே தாமஸிகஸ்திதி.

மேற்கூறிய மூன்றுகுணங்களும் சமமா யிராமல் ஏற்றக்குறைச்சலாகவே எல்லா வஸ்துகளிடத்தும் பிராணிகளிடத்துமிருக்கின்றன. பிராணிகளிடத்து எந்த குணமானது மற்றிரண்டு குணங்களைக் காட்டிலுமதிகரித் திருக்கிறதோ, அப்பிராணிகள் அதிகரித்த குணத்தன்மையுடையன வென்று அறிகிறோம்.





அறிகிறதத்துவம் ஆத்மாவென்றும், அறியப்படுவது உலகமென்றும் சித்தாந்தம்.

ஆத்மா உலகபந்தத்தை யடைந்திருப்பதற்குக் காரணம் மூன்று குணங்களே. உலக விஷயங்களில் மூழ்கி ஒன்றுந் தெரியாதிருப்பதே தமசின் காரியம். உலகவிஷயங்களை பகுத்தறிந்து இன்னது வேண்டும் இன்னது வேண்டாமென எண்ணி கோரியதை யடைய முயற்சிசெய்தும் அடைந்தால் மகிழ்ச்சியும், அடையாவிட்டால் துக்கமும் அடையச்செய்வது ரஜசின் காரியம்.

உலகவிஷயங்களின் உண்மை சொரூபத்தை யறிந்து அதனால் உண்டாகும் இன்பதுன்பங்கள் ஆத்மாவுக்கில்லை யெனவறிந்து உலக விஷயங்களால் ஆத்மாவுக்கு ஓர் விதமான ஆனி நேரிடாதிருக்கச் செய்வது சத்வகுணத்தின் காரியம்.

வெவ்வேறா யிருக்கிற சகலவஸ்துக் களிலேயும் இடைவிடாமல் தொடர்ந்திருக்கிறதாயும் ஒன்றாயும் விகாரமற்றதாயு மிருக்கிற பரமாத்ம சுவரூபத்தை எதினால் மனிதன் பார்க்கிறானோ, அந்த ஞானத்தை சாத்துவிகமென்று அறியவேண்டும். சகல பூதங்களிலேயும் இருக்கிற ஜீவர்களை சுவரூபத்தினாலே வெவ்வேறென்றும், சுகதுக்காதி பேதங்களினாலே அநேகவிதமானவர்களென்றும் எதினால் மனிதன் பார்க்கிறானோ அந்த ஞானத்தை இராஜஸ மென்று அறியவேண்டும். தேகமே ஆத்மாவென்று உண்மையான வஸ்துவை யறியாதவும் அற்பவிஷயமானவுமான ஞானமெதுவோ அது தாமஸமென்றும் அறியவேண்டும்.

எந்தக்கருமமானது பலாபேக்ஷை யில்லாமலும், அபிமான மில்லாமலும், இராகதுவேஷ மில்லாமலும் செய்யப்படுகிறதோ அந்தக்கர்மம் சாத்துவிகமென்று சொல்லப்படுகிறது. பலாபேக்ஷையுடனும் அகங்காரத்துடனும் செய்யப்படுகிற கர்மம் இராஜஸமென்று சொல்லப்படுகிறது. இனிவரும் சுகதுக்கங்களையும்பொருள் நஷ்டத்தையும், பிறருக்குண்டாகும் துன்பத்தையும், தனக்குள்ள சக்தியையும் அறியாமல் அஞ்ஞானத்தால் எந்தக்கருமம் செய்யப்படுகிறதோ அது தாமஸமென்று சொல்லப்படுகிறது.

பலாபேக்ஷை அபிமான மிவைகளை விட்டவனும் தைரியமும் விடாமுயற்சியும் உள்ளவனும், ஆரம்பித்தகருமம் நிறைவேறினாலும் நிறைவேறா விட்டாலும் சந்தோஷம் வியசன மற்றவனும் இருப்பவனே சாத்துவிகன் என்று கூறப்படுகிறான், பலத்தில் ஆசையும்

அபிமானமும் வைத்து, பிறர் சொத்திலாசை, பரஹிம்சை செய்யும் சுபாவமுடையவனாகி சந்தோஷம் துக்கமிவைகளுள்ளவனாயு மிருக்கிறவன் இராஜஸனென்று கூறப்படுகிறான்.

மனோசஞ்சல முள்ளவனாயும், விவேகம் வணக்கமற்றவனாயும், மோசம் செய்பவனாயும் பிறரை வஞ்சிப்பவனாயும், துக்கமே அதிகமுள்ளவனாயும் காலதாமதம் செய்பவனாயு மிருப்பவன் தாமஸன் என்று கூறப்படுவான்.

தருமத்தில் பிரவர்த்தியும் அதர்மத்திலிருந்து நிவர்த்தியும், காரியாகாரியங்களையும், பந்தமோக்ஷங்களையும் அறிகிறபுத்தியே சாத்துவிகபுத்தி. தர்மத்தையும் அதர்மத்தையும், செய்யத்தகுந்த காரியத்தையும் செய்யத்தகாத காரியத்தையும் சந்தேகமாக அறிகிறபுத்தி இராஜஸம். எந்தபுத்தியானது அஞ்ஞானத்தினால் மூடப்பட்டு அதருமத்தை தருமமென்றும் சகலவஸ்துக்களையும் விபரீதங்களாகவும் நினைக்கிறதோ அது தாமஸம்.

எந்த தைரியத்தினாலே மனதையடக்கி ஒரே நிலையிலிருந்தி மனசு பிராணன் இந்திரியங்கள் இவைகளுடைய செய்கைகளை நிறுத்துகிறானோ அந்த தைரியம் சாத்வீகம். எந்த தைரியத்தினாலே தர்மார்த்தங்களை தவறவிடாமல் அவைகளுடைய பற்றுதலினாலே பலனையபேக்ஷிக்கிறானோ அந்த தைரியம் இராஜஸம்: நித்திரை, பயம், வியசனம், வியாகுலம், மயக்கம் ஆகிய இவைகளை எந்த தைரியத்தினால் விடுகிறதில்லையோ அது தாமஸம்.

எந்த சுகமானது ஆரம்பத்தில் விஷம்போலிருந்து முடிவில் அமிருதம் போலாகுமோ அந்த சுகம் சாத்துவிகம். எந்தசுகம் விஷயங்களும் இந்திரியங்களும் சம்பந்தப் படுவதினால் ஆரம்பத்தில் அமிருதத்திற்குச் சமானமாயும் முடிவில் விஷத்தைப் போலாகிறதோ அது இராஜஸம். எந்த சுகம் ஆரம்பத்திலும் முடிவிலும் மோகம், நித்திரை, சோம்பல், வீண்யோசனை இவைகளினா லுண்டானதா யிருக்கிறதோ அந்தச் சுகம் தாமஸம்.

தாமஸ குணப் பிரதானன் மூடனாயும் அக்ஞானியாயும் யிருப்பான். இராஜஸ குணப்பிரதானன் அஸ்திரமான ஞானத்தையுடைத்தாய், பலனைக்கோரி கர்மங்களைச்செய்து சுயநன்மைக்கே உழைத்து லாபம்வந்தால் சந்தோஷித்து நஷ்டம்வந்தால் துக்கித்து சமுசாரியாயிருப்பான். சத்வகுணப்பிரதானன் ஸ்திரமான ஞானத்துடன் ஒன்றிலும் பற்றில்லாமல் விஷயங்களை நிராகரித்து, எந்தகர்மத்தையும் பொதுஜன நன்மைக்காகவும் பகவானுடைய பிரீத்தியர்த்தமாகவும் செய்து சாந்தனாய் எப்போதும் சந்துஷ்டனாய் உண்மைதெரிந்து உலகத்தை யறிந்து தானாய்யும் வகையறிந்து சகலத்தையும் தன்னிடத்திலும், தன்னை சகலத்திலுங் கண்டு கண்டு ஆனந்தபரிதனாய், தேகத்தோ டிருக்கும்போது ஜீவன் முக்தனாய் தேகத்தைவிட்டால் எங்கும் பரிபூரணனா யிருப்பான்.

---

## அன்பு.

### கண்ணப்ப நாயனார் சரித்திரம்.

(முன்தொடர்ச்சி.)

ஓ ரிரும்பைக் காந்தம் வலித்தாற்போல அன்பின் வழியே நின்ற திண்ணனார் விண்ணுலகமட்டும் உயர்ந்திருக்கின்ற திருக்காளத்தி மலையின்மீது கொழுந்துபோல் விளங்கிய ஒப்பற்ற காளத்தி நாதரைக் கண்டவளவில் தன்னுள்ளே யெழு உம் அன்பின் காரணத்தினால் அதிகவிரைவாகவும், ஆசையோடும் ஓடி அவரைத்தழுவி முத்தமிட்டு, தேகமுழுவதும் புளகாங்கிதங் கொள்ளவும், தாமரை மலர்போன்ற கண்களினின்று ஆனந்த பாஷ்பமானது அருவிபோற் பாயவும் எமக்கு இவர் (குடுமித்தேவர்) இங்கேகிடைத்தார் என்று தீவிரதரமான பத்தியோடுவணங்கி, ஐயனே! கொடியவேடர்களைப்போல யானை, கரடி, புலி, சிங்கம் திரிகின்ற இக்காட்டில் உம்மோடு துணையாயிருப்பவர் ஒருவருமின்றி நீர்தனியே யிருக்கலாமாவென்று வருந்தினார். திண்ணனார் தமது கையிலிருந்த வில்லானதுகீழேவிழுந்ததையுமறியாமல், நந்தேவருக்கு நீரைவார்த்து பச்சிலையையும் பூவையும் பறித்திட்டு அழகுசெய்தவர் யாரோ என்று கேட்க, அருகே நின்றுகொண்டிருந்த நாணன் என்பவன் இச்செய்தி எனக்குத்தெரியும்; அதாவது ஓர்காலத்தில் ஆண்சிங்கத்தையொத்த உன்தந்தையோடு மிருகவேட்டையாடிக் கொண்டுவருங்கால் இம்மலையின் மீது நாங்கள்வந்தோம். ஓர் பார்ப்பான் இத்தேவரைக் குளிர்ந்தநீரால் முழுக்காட்டி, இலைகளையும் பூவையுஞ்சூட்டி சிலபொருள்களை யுண் பித்து முன்னேநின்று சிலமொழிகளைச் சொன்னான். ஆகையின் இற்றைக்கும் அவனே செய்திருக்கக்கூடும் என்றான். இதைக்கேட்ட இடைவிடாத பேரன்பினையுடைய திண்ணனார் திருக்காளத்தி நாதர்க்கு இவைகள் இனிய செய்கையாம் என மதித்து நாணன் கூறிய மொழிகளை உறுதியாக கைப்பற்றிக்கொண்டு அக்காளத்தி நாதரைப்பிரிய மாட்டாதவராய் இவரைக்கண்ட எனக்கு இவரைத் தனியாய் விட்டுப்போகவும் மனம்வரவில்லை, இவர் அதிகமாக பசித்திருக்கின்றார், இவருக்குப் பசிநீங்க இறைச்சியும் கொண்டுவந்து



கொடுப்பாரில்லை, ஆகையின் உம்மைவிட்டுப்போகவுங் கூடாது, உமக்கு இறைச்சியுங் கொண்டுவரவேண்டும் என்றுசொல்லி திருக்காளத்தி நாதரைவிட்டு கொஞ்சதூரம்போவர், திரும்பிவருவர், கையினாற்றழுவி முத்தமிடுவர், மறுபடியும்போய் அதிக ஆசையோடுபார்த்துக் கொண்டு நிற்பர், அப்போது ஈன்ற ஈரம் உலராத கன்றைப்பிரிந்த பசுவைப்போல அலறுவர். ஐயனே! நீர் அமுதுசெய்வதற்காக நல்லமிருதுவான மாமிசத்தை நானே பழுதறத்தெரிந்து எடுத்துக்கொண்டு வருகிறேன் என்று சொல்லுவர். உமக்குச் சுற்றத்தார் ஒருவருமில்லையே, உம்மைவிட்டு எப்படிப்பிரிவேன். ஆனால் நீர் பசியினால்வருந்த நான்நிற்கவும்மாட்டேன் என்று கண்ணீரானது பெருகும்படி, வேட்டையாடி வருவதற்கு நிச்சயித்தவராய் நீண்டவில்லை தன்கையிலேந்தி வேட்டைக்குப் புறப்பட்டார் எமது திண்ணனார். திருக்காளத்தியார் முன்னின்று ஆராமையோடுநீங்கி அம்மலையினின்று இறங்கி நாணன்பின் தொடர்ந்துவர முன்னே தமக்குள்ளிருந்த ஆசையெல்லாம்வேறாகி, அன்பானது தம்மைச்செலுத்த அவர் திருமுகலி யாற்றினைக் கடந்து புதிய வாசனையுள்ள மலர்கள் நிறைந்தசோலையையடைந்தார். காடன் எதிர்ப்பட்டு சுவாமி! தீயை உண்டாக்கி வைத்தேன், இப்பன்றியின் அவயவங்களை யெல்லாம் பார்த்துக்கொள்ளும், மறுபடியும் வேட்டை யாடுவதற்கு காட்டுக்குப்போக நீர் மிகவுந் தாமதஞ்செய்தது யாதென்றுகேட்க, அருகில்நின்றநாணன் காடனைப்பார்த்து சொல்வானாயினான். அதாவது அம்மலையிலுள்ள குடுமித்தேவரை இத்திண்ணன்பார்த்து கையாலணைத்துக்கொண்டு மரப்பொந்தினைப் பற்றிக்கொண்டு விடாத வலிய உடும்புபோல நீங்காதவனாய் இவ்விடத்தும் அக்குடுமித்தேவர் உண்ணும்படிக்கு மாமிசத்தைக்கொண்டு செல்லும்படிக்குவந்தான். நம்முடைய குலத்துக்குத் தலைமையான ஒழுக்கத்தைவிட்டு இத்தேவர்களுக்கு ஆளாயினான் என்றான். அதுகேட்ட காடன் திண்ணனே என்னகாரியஞ்செய்தாய், எவ்விதமயக்கங் கொண்டாய், எங்களுக்குமுன்னான பெருமையினை யுடைய முதல்வன் நீயல்லையா என்று கூற வேடர்பெருமான் அவன்முகத்தைப்பாராமல் வலியபெரியபன்றியை நெருப்பில்வாட்டி வெவ்வேறாகச் சிறந்த இனிய இறைச்சிகளைத்தனது அம்பின் நுனியால் அரிந்து எடுத்துக்கொண்டு அவ்விறைச்சியைவாட்டி கொழுமையாகிய இறைச்சிகள் பக்குவமாகவேக இனியசுவையைத்தான் முன்னே காணும்படிக்கு வாயிலிட்டுப்பார்த்து மிகவும் ருசியாயுள்ள வைகளை யெல்லாம் உதிர்ந்த இலைகளால் இணைத்த தொன்னையைத்தைத்து அவ்விறைச்சிகளையெல்லாம் அதில்வைத்தார். இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த காடன் நாணன் என்பவர்கள் "இதென்ன ஆச்சரியம், இவன்குடுமித் தேவரைக் காணும்பொழுது இருந்தமயக்கத்தைப் பார்க்கினும் இப்பொழுது அதிகமயக்கத்தை யுடையவனாயினான்.

(இன்னும்வரும்.)

சென்னைத் தமிழ்நேசன்.

---

## நானாசீவவாதக் கட்டளை.

இதன்பொருள்:— நானா சீவவாதக் கட்டளை யாவது நான்கர்த்தா நான்போக்தா நான் ஞாதாவென்கிற ஜீவபேதங்களை நான் அகர்த்தா நான் அபோக்தா நான் அசங்கன் நான் சின்மாத்திரன் என்கிற தத்துவஞானத்தால் கெடுத்து ஏகமாயிருக்கின்ற சிவமாகிய பிரம்மத்தைத் தெரிவிக்கின்றமையால் இதற்கு நானா சீவவாதக் கட்டளை என்றுபெயர் கூறப்பட்டது. ஒரு சந்திரன் பல கடஜலத்தில் பல பிரதி பிம்பங்கள் பிரதிபிம்பித்தாலும் சந்திரன் ஒருவன்போலவும் படிக மண்டபத்தில் ஒரு ஞாளிநிற்க பல பிரதிபிம்ப ஞாளிகள் தோன்றினாலும் ஞாளி ஒன்றைப்போலவும் ஆத்மா ஒருவனே.

சுத்தப் பிரமமாகிய சர்வசாக்ஷியினிடத்திலே அக்கினியிற் சூடுபோல அபின்னமாக வொரு சக்தியுண்டு.

சுத்தம்: அசுத்தமில்லாதது சுத்தம்.

அசுத்தமாவது: ஜீவ ஈஸ்வர ஜகத்தாகிய முப்பத்தைந்து தத்துவங்களும் அசுத்தம்.

ஜீவனுக்கு அசுத்தம்.

ஜீவனுக்கு கர்த்துருத்துவாதி ஆகாரமாய் நின்று பாவபுண்ணியங்களைச்செய்து அதின்பலனாகிய நரகசுவர்க்க சுகதுக்கபோகங்களை அனுபவித்து அதின்சேஷமாகிய ஜனன மரண சம்சர்க்கங்களில் தொடக்குற்று தபிக்கின்றதுவே ஜீவனுக்கு அசுத்தம்.

ஈஸ்வரனுக்கு அசுத்தம்.

ஈசுவரனுக்கு சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியங்களும், மச்ச, கூர்மவராக நரசிம்ம வாமன பரசுராம, இராமபலராம, கிருஷ்ண கற்கி முதற் தசாவதாரங்கள் முதலானவை அசுத்தம்.

ஜகத்திற்கு அசுத்தம்.

முதலாவது ஆறுதத்துவமாயுள்ள ஸ்தூல சரீரத்திற்கு அசுத்தம்:— சருமாதி ஆறுதத்துவமாய் ஷட்கோச ஆத்மமாய் சர்ப்பாவிகாரமாய் கரசரணாதி அவயவாகாரமாய் நான்கு முழமட்டமாய் விஷ்டா மூத்திர பாத்திரமாய்த் திருசியமாய்த் தோன்றுகின்றது ஸ்தூலம்.

சரீரம்.

ஜீர்ணித்துப் போகின்றது சரீரம். அதெப்படியெனில் மண்ணினாலுண்டான சுவர் அந்தமண்ணுந் தண்ணீரு மில்லாமல் கெட்டுப்போகிறது போலவும் வரகு முதலானவை அந்து கொத்தி அரிசி கெட்டுப்போயும் வரகுபோல் தோற்றிகெட்டுப்போகிறதுபோலபுரியட்ட சரீரம் பிடிங்கிக்கொண்டுபோயும் ஸ்தூலசரீரம்தோன்றிக் கெட்டுப்போகின்றபடியால் சரீரம் அசுத்தம்.

இருபது தத்துவமாயிருக்கின்ற சூட்சும சரீரத்திற்கு அசுத்தம்:—

இராகத்துவேஷாதி பதின்மூன்று குணங்களினால் கொளுத்தப் படுகின்றதுவே சூட்சுமசரீரத்திற்கு அசுத்தம்.

காரணசரீரத்திற்கு அசுத்தம்.

தூல சூட்சுமமாகிய இரண்டு சரீரங்களையும் அடக்கி யிருக்கின்றதுவும் அறியாமையும் அதிஷ்டானத்தை மறைக்கின்றதும் காரண சரீரத்திற்கு அசுத்தம்.

பிருதுவிக்கு அசுத்தம்.

குப்பை, சேரி, மயானம், மலம், ஜலம், ஜீவசங்கம் முதலானவை பிருதுவிக்கு அசுத்தம்.

அப்புவுக்கு அசுத்தம்.

அலை, திவலை, நுரை, குமிழி, மலினமே அப்புவுக்கு அசுத்தம்.

தேயுவுக்கு அசுத்தம்.

தூமம், பொரி, பாகம், பிரேததகனமே தேயுவுக்கு அசுத்தம்.

வாயுவுக்கு அசுத்தம்.

தூளி, நற்கந்தம் துர்க்கந்தம் மிசிரகந்த முதலானவை வாயுவுக்கு அசுத்தம்.

ஆகாசத்திற்கு அசுத்தம்.

மேகபடலம், இடி, குமரல் முதலானவை ஆகாசத்திற்கு அசுத்தம்.

மாயைக்கு அசுத்தம்.

பிரபஞ்ச காரணமே மாயைக்கு அசுத்தம். இந்த முப்பத்தைந்து தத்துவங்களைப்போல் அசுத்தமில்லாமலிருப்பதுவே சுத்தப் பிரமம்.

சுத்த நித்திய புத்த சத்திய முக்த பரமானந்த அத்துவித சொரூபமே பிரமம்.

சுத்தம்.

அசுத்த மில்லாதது சுத்தம். அசுத்தத்தி னியல்பனைத்தும் முற் கூறப்பட்டது.

நித்தியம்.

நித்தியமாவது பிராகபாவம், அதாவது முன்னின்மை; பிரத்துவம் சாபாவம், அதாவது அழிவுபாட்டின்மை; அன்னியோன்னியாபாவம், அதாவது ஒன்றிலொன்றின்மை; அத்தியந்தாபாவம், அதாவது என்றுமின்மை. ஆகியநான்கு அபாவமும் விடுபட்டது நித்தியம்.

பிராகபாவமாவது: இந்த கடமுண்டாவதற்கு முன் கட மில்லையென்பது.

பிரத்துவம் சாபாவமாவது: இந்தக்கட முடைந்த பிறகு கடமில்லை யென்பது.

அன்னியோன்னிய பாவமாவது: கடத்தில் படமில்லை படத்தில் கடமில்லை யென்பது.

அத்தியந்தா பாவமாவது: திரிகாலத்திலு மில்லை யென்பதுவே அத்தியந்தபாவம். இந்தநான்கு அபாவமும் விடுபட்டதுவே நித்தியம்.

புத்தம்.

புத்தமாவது: அந்தக்கரண வறிவுபோல் தோற்றித் தோற்றி மறைந்து மலினப்படாமல் என்றும் ஒருபடித்தாயுள்ளது புத்தம்.

முக்தம்.

முக்தமாவது: அஞ்ஞானம். அஞ்ஞானதற் காரியங்கள் விடுபட்டதுவே முக்தம்.

அஞ்ஞானம்:— அஞ்ஞானமாவது தேகத்தை தானென்பதுவே. அஞ்ஞானதற்காரியம்:— அஞ்ஞானதற்காரியமாவது பிரபஞ்சம் சத்தியமென்பது. இவைவிடுபட்டதே முக்தம்.

சத்தியம்.

சத்தியமாவது ஜனனங்கடோறும்வாராநின்ற அவஸ்தாத்திரயங்களை அதிர்ந்து கொண்டும் வாரா நின்ற தினம் மாதம் பக்ஷம் வருஷம் காலம் கற்பங்களையறிந்து என்றும் உள்ளது என்பது சத்தியம்.

பரமாநந்தம்.

தானும் சுகமாயிருந்துகொண்டு அந்தர் முகமாய்த் தன்னையடுத்த விருத்திக்குஞ் சுகத்தைக்கொடுத்துக்கொண்டிருப்பது பரமாநந்தம்.

அத்துவிதம்.

அத்துவிதமாவது, சுவஜாதி, விஜாதி சுகதபேதமில்லாமலிருப்பது.

சுவஜாதி.

சுவஜாதியாவது மரத்திற்கு மரம் சுவஜாதி.

விஜாதி.

விஜாதியாவது மரத்திற்குப் பாஷாணம் விஜாதி.

சுகதபேதம்.

சுகதபேதமாவது மரத்திற்குப் பத்திர புஷ்பாதிகள். இவைகளில்லாதிருப்பது அத்துவிதம்.

(இன்னும்வரும்)

☞ அறிவிப்பு:— நவராத்திரி மகோற்சவத்தால் பத்திரிகை இம்மாதம் வெளிவர தவக்கமாயிற்று.

☞ பத்திராதிபர்.

ஓம்.
பரப்பிரம்மணே நமஃ.
"ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி."

# இகபரசுகசாதனி.

வாலியம் I.} 1903வரு அக்டோபர்மீ {புத்தகம் VI.

11 APR. 904 MADRAS.

## மனனமாலை.

சாதிகுலம் பிறப்பிறப்பு பந்தமுத்தி
 யருவுருவத் தன்மை நாம
மேதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும்
 பிறிவறநின் றியக்கஞ் செய்யுஞ்
சோதியைமாத் தூவெளியை மனதவிழ
 நிறைவான துரிய வாழ்வைத்
தீதில்பர மாம்பொருளைத் திருவருளே
 நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

குன்றாத மூவுருவா யருவாய்ஞானக்
 கொழுந்தாகி யறுசமயக் கூத்துமாடி
நின்றாயே மாயையெனுந் திரையைநீக்கி
 நின்னையா ரறியவல்லார் நினைப்போர்நெஞ்ச
மன்றாக வின்பக்கூத் தாடவல்ல
 மணியேயென் கண்ணேமா மருந்தேநால்வர்க்
கன்றாலின்கீழிருந்து மோன ஞான
 மமைத்தசின் முத்திரைக்கடலே யமரரேறே.

---

சிவனறிந் தருளுவன் சீவராசியைச்
சிவன்றனை யறிந்திடாச் சீவராசிகள்
சிவனிலா விடமிலை செடசித்தெங்கணுஞ்
சிவனிலா விடி லுயிர் செகமற்றிலையே.

---

அவனசைந் திடிலொரு வணுவசைந்திடு
மவனசை யாவிடி லணுவசைந்திடா
சிவன்சத்தி யோடுறிற் செகம்விரிந்திடுஞ்
சிவன்றனித் திடில்விரி செகமொடுங்குமால்.

---

வேறுவே றாகியோடும் விரிநதிக் குலங்களெல்லாங்
கூறுமுன் னீரினொன்றாங் கொள்கைய தாகுமாபோல்
வேறுவே றாகிநின்ற விதிவழிச் சமயமெல்லாங்
கூறுமுத் தியினிலொன்றாங் கொள்கைய தாகுமன்றே.

---

யாவனொருவன் றன்னிடத்திலிருக்குஞ் சிவனைவிட்டயலே, மேவியிருக்குஞ்சிவனை நனிபூசிப்பவன் றன்வியன்கையிற், பாலிருக்கும் பாயசத்தைவிட்டுக் கூன்கைபரந்தோடித், தூவுந்துளியைநா துனியாற்றுய்க்கு மவனேசொல்லுங்கால்.

---

ஒருவ ரிருவரோர் மூவரென நின்று
 உருவு கரந்துள்ளுந் தோறுந் தித்திப்பான்
திருவமர் மார்பன் றிருக்கடி தானத்தை
 மருவி யுறைகின்ற மாயப் பிரானே.

---

கொண்ட பெண்டிர் மக்களூற்றார் சுற்றத்தவர்பிறருங்
கண்டதோடு பட்டதல்லாற் காதன்மற்று யாதுமில்லை
எண்டிசையுங் கீழும்மேலும் முற்றவு முண்டபிரான்
தொண்டரோமா யுய்யிலல்லா லில்லைகண்டீர் துணையே.

---

அறிவோடறி யாமையிரண்டு மனுகாதனுகிச் சகமாகிப்
பிறியாவகை நின்றமைபாரீர் பிரியிற்றனிலா தமைபாரீர்.

---

செறிவாகி யிருந்தவர்தாமே சீவன்சிவனென்ன விரண்டாய்ப்
பிறியாவகை நின்றமைபாரீர் பிறிவிப்பகையற் றமைபாரீர்.

---

அருவாகி யகண்டமுமாகி யானந்தமுமாகிய பிரமங்
குருவாயருள் செய்தமைபாரீர் கோதின்றி நிறைந்தமைபாரீர்.

---

அல்லற்று வரும்பகலற்று வயலற்றறிவே வடிவாகிச்
சொல்லற்றுள நின்றமைபாரீர் சுகமே வடிவானமைபாரீர்.

---

பாவிபடுங் கண்கலக்கம் பார்த்துமிரங் காதிருந்தா
லாவிக் குறுதுணை யாரையா பராபரமே.

---

உண்டுபோலின்று முலகைத் திரமெனவுட்
கொண்டுகொன் பெற்றபலன் கூறாய் பராபரமே.

---

எத்தனையோகோடி யெடுத்தெடுத்துச் சொன்னாலுஞ்
சித்தமிரங்கிலையென் செய்வேன் பராபரமே.

---

அப்பனென்று மன்னையென்று மாரிய னென்றுமுனையே
செப்புவதுமுன்னிலையின் சீர்காண் பராபரமே.

---

தன்மயமாய் நின்றநிலை தானேதா னாகிநின்று
னின்மயமாயெல் லாநிகழும் பராபரமே.

---

எங்கணுநீ யென்றலிருந்தபடி யெய்தாம
லங்குமிங்குமென் றலையலாமோ பராபரமே.

---

சிந்தையுமென்போலச் செயலற் றடங்கிவிட்டால்
வந்ததெலாநின்செயலா வாழ்வேன் பராபரமே.

## சுதேசபாஷை.

தெய்வபக்தி மதாசாரத்தின் அனுஷ்டானம் இவைகள் தற்காலத்தில் குறைந்திருக்கிறதென்பது எல்லாருக்குந் தெரிந்தவிஷயம். இதற்கு என்னகாரணமென்று சிறிது ஆலோசிப்பாம். மதவிஷயமறிந்து பகவானைத் தெரிந்து பக்திசெய்வதற்கு கல்வி அவசியம்வேண்டும். முன்காலத்தைக் காட்டிலும் தற்காலத்தில் ஏராளமான ஜனங்கள் படித்தபோதிலும் அவர்கள் முக்கியமாய்க் கவனித்துப் படிப்பது ஆங்கிலேயபாஷை. இவ்வாங்கிலேயபாஷையைப் படிக்கும் நமது சிறுவர்கள் இலக்கணம், கணிதம், சரித்திரம், பூகோளம் இவைகளையே கற்கிறார்கள். இன்னும் அதிகம் படிப்பவர்கள் சடதத்துவசாஸ்திரம், ரசாயனசாஸ்திரம், பூதத்துவ சாஸ்திரம், ஜீவதத்துவசாஸ்திரம் முதலான சில சாஸ்திரங்களைக் கற்கிறார்கள். இராஜாங்க பாஷையைப் படிப்பதும், மேற்சொன்ன சாஸ்திரங்களைக் கற்பதும் அவசியமே. இதை மறுத்தற்கு முடியாது. ஆனபோதிலும் மேலேசொன்ன விஷயங்களில் ஈசுவரனை அறிந்து அவனிடத்து அன்புபாராட்டச் செய்யுங் கிரந்தங்கள் நமது சிறுவர்களுக்கில்லை. பி. ஏ., பரிட்சைக்குப் படிக்கும் மாணாக்கர்களுக்கு ஆங்கிலேய தத்துவசாஸ்திரம் (English Philosophy) பாடமிருந்தும் அவைகளில் அநேகம் நாஸ்திகமாயும் சில ஆஸ்திகமாயு மிருக்கின்றன. பி-ஏ. பரிட்சைவரைக்கும் படிக்கும் மாணாக்கர்கள் மிகச்சிலர். அவர்களில் ஆங்கிலேய தத்துவசாஸ்திரத்தைப் படிப்பவர் இன்னும் மிகச் சிலரே. இவர்களிலும் அநேகருக்கு பாலியத்தில் ஈசுவரசம்பந்தமான நூல்களை படித்திலாததால் ஆங்கிலேயதத்துவ சாஸ்திரத்தைப் படிக்குங் காலத்து அதில் நிரீசுவரவாதமாய்ச் சொல்லப்பட்ட பாகமே மிகவும் திருப்திகரமாயிருக்கிறது. "தெய்வமென்று ஒன்றிருக்கவேண்டிய அவசியமில்லை. கண்காட்சியாயிருக்கும் ஐம்பூதச் சேர்க்கையின் பரிமாண விசேஷத்தால் பலவித சிருஷ்டிகள் உண்டாகி அப்பரிமாண நெகிழ்ச்சியின் குறைவால் சிருஷ்டியான வஸ்துக்கள் தாமே அழிகின்றன. இதற்கோர் தெய்வம் கற்பிப்பது அனுவசியமே" என்று அநேகர் வாதஞ்செய்யத் தொடங்குகிறார்கள்.

அக்ஷராப்பியாசந் தொடங்குங் காலமுதல் கடவுள் ஞானத்தையும் அவரிடத்துப் பக்தியையும் உண்டாக்கச்செய்வது நமது சுதேசபாஷை. இப்பாஷையைப் படிக்க வாரம்பிக்கும்போது சிறுபிள்ளைகளுக்கு நம்மவர் சொல்லிவைப்பது பகவானுடைய நாமமே. அக்ஷரங்களைச்சேர்த்துப் படிக்குந்திறமை வந்தவுடன் நமது தமிழ் சிறுவர்களுக்கு உபயோகமாகும்படியான ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், முதலான சிறிய நூல்களில் பகவானை நேசிக்கவேண்டுமென்றும் அதற்காக சன்மார்க்கத்தை யனுசரிக்க வேண்டுமென்றுங் கூறப்பட்டிருக்கின்றன. இன்னும் சிறிது படிப்பு விர்த்தியாக, நன்னெறி, நல்வழி, நீதிவெண்பா, பழமொழி முதலான சிலாக்கியமான நூல்கள் தெய்வபக்தியை விர்த்திசெய்வதுடன் அதற்குவேண்டிய நல்லாசாரங்களை அனுஷ்டிக்கச்செய்யும் வலியுள்ளனவாயிருக்கின்றன. இப்படியே இதர சுதேசபாஷைகளிலு மிருக்கின்றன. அதிக விருப்பத்துடனும் ஊக்கத்துடனும் நமது சிறுவர்கள் படிக்கும் ஆங்கிலேயபாஷையில் இத்தகைய நூல்களில்லை. நமது சுதேசபாஷாக் கிரந்தங்களில் எதை எடுத்துப்பார்த்தாலும் ஆரம்பத்தில் தெய்வவணக்கம் கூறாத நூலில்லை. இதனால் நமது கிரந்தங்களை எடுத்துப் படிக்கும்போது நமது சிறுவர்களுக்கு முதலில் ஈசுவரனுடைய ஞாபகமே உண்டாவதற்குக் காரணமிருக்கிறது. இம்மாதிரி ஆங்கிலேய பாஷையிலில்லை. தெய்வபக்தியும் நல்லனுஷ்டானமும் உண்டாக்கவல்ல நமது சுதேசபாஷை தற்காலத்தில் பரிக்ஷைக்குப் பாடமிருந்தும் நமது சிறுவர்கள் சொந்தபாஷையைக் கவனிப்பதில்லை. ஆங்கிலேயபாஷை நூதனபாஷை யானதால் கஷ்டமாயிருந்தபோதிலும் அதைத்தான் அதிக ஊக்கத்துடன் நமது சிறுவர்கள் படிக்கிறார்கள். சுதேசபாஷையோ பால்லியமுதல் வீட்டில்பேசும் பாஷையாயிருப்பதால் எளிதாயிருந்தும் நம் சிறுவர்கள் அதை படிப்பதேயில்லை. இதற்கு என்னகாரணம்? நூதன பாஷையானதால் ஆங்கிலேயபாஷையைப் படிப்பதற்கு அதிககாலம் வேண்டும். இத்துடன் கணிதம் சரித்திரம் பூகோளம் இவைகளையும் ஆங்கிலேயத்திலேயே கற்கவேண்டியிருப்பதால் நமது சிறுவர்களுக்கு அதிககாலம் செலவாகி விடுகிறது. ஒருநாளைக்கு ஐந்துமணிநேரம் ஆங்கிலேயபாஷைக்கும் ஒருமணிநேரம் சுதேசபாஷைக்கும் பள்ளிக்கூடத்தில் காலம் ஏற்பட்டிருந்தும் ஒரு மணிநேரம் நடத்தப்படும் சுதேசபாஷையை நமது சிறுவர்கள் சொந்தபாஷைதானே என்று அலட்சியஞ்செய்து விடுகிறார்கள். இவ்வாறுபடித்து நமது சிறுவர்களுக்குக் கொஞ்சம்வயது ஏற ஆங்கிலேயபாஷையை நன்றாய்ப் படித்தால்தான் உத்தியோகஞ்செய்து பிழைக்கலாம். சுதேசபாஷையை கற்பதால் இலாபமில்லையென அறிகிறார்கள். வயிறு பிழைப்பதற்கே படிக்கவேண்டியது அவசியமெனவும் எண்ணுகிறார்கள். உதாரணமாக ஆங்கிலேயபாஷையில் மெட்ரிகுலேஷன் பரிக்ஷை தேரியவர்கள் உத்தியோகஞ்செய்து மாதம் ஒன்றுக்கு ரூபாய் 40 அல்லது 50 சம்பாதிப்பதையும் இன்னும் மேன்மேலும் விர்த்தியாகி அதிக சம்பளம்பெற யோக்கியதை யுடையவர்களாயிருப்பதையும் நமது சிறுவர்கள் காண்கிறார்கள். சுதேசபாஷை ஒன்றைமாத்திரம் அநேகவருஷம் படித்து வித்துவான்களாகி நன்றாய்ப் போதிக்கும் சக்தியையும் பெற்றவர்களில் அநேகர் கல்விச்சாலை ஒன்றையே தாங்கள் பிழைக்கும் உத்தியோகஸ்தலமாக வைத்துக்கொண்டு பண்டிட், அல்லது முனிஷி என்னும் பட்டம்பெற்று 10 ரூபாய் சம்பளத்தில் ஆரம்பித்து அதிகநாள் உழைத்து கடைசியாக ரூபாய்-20 அதிக சம்பளம்பெற்று வருவதையும் நமது சிறுவர்கள் காண்கிறார்கள். இந்தக்காரணங்களால் சுதேசபாஷையினிடத்தில் நம்மவர்களுக்கு விருப்பமில்லை.

வயிறு பிழைப்பதற்கல்ல படிப்பது ஞானத்தையடைய படிக்கவேண்டியதென்னுங் கருத்துடையவர்களுண்டாயின் அவர்கள் ஆங்கிலேயபாஷையைப் படிப்பதுபோலவே சுதேசபாஷையையும் படிப்பார்கள். தற்காலச்சிறப்பு, இராஜாங்க விஷயங்கள், பலதேச வர்த்தமானங்கள், லௌகீகவிஷயங்கள் முதலானவைகளை யறிவதற்கு ஆங்கிலேயபாஷை அவசியம் வேண்டும். ஈசுவரஞானம், அதை யடைவதற்கு ஏற்பட்ட ஆசார அனுஷ்டானங்கள் முதலானவைகளை அடைந்து பரலோக சாதனமாயுள்ளவைகளை யறிவதற்குச் சுதேசபாஷை அவசியம் வேண்டும். ஒருமனிதன் லௌகீக வைதீக அல்லது வியவகாரிக, பரமார்த்திக விஷயங்களிரண்டையும் அறியவேண்டும். லௌகீகம் அல்லது வியவகாரிகமென்பது உலகசம்பந்தமானது. இதுகாலத்தையும் தேசத்தையும் அனுசரித்து தேகபோஷணைக்காக உழைக்கச்செய்வது. ஆகையால் காலத்தை யனுசரித்து ஆங்கிலேயபாஷை கற்பதும், பல வியாபாரங்களைச் செய்வதும் லௌகீகமெனச் சொல்லலாம். பரமார்த்திகம் என்பது எக்காலம் எத்தேசம் எப்படியிருந்தபோதிலும் தன்னை யறிந்து தனக்கு மேம்பட்ட கடவுளையறிந்து தன் ஆத்மபோஷணைக்காக உழைக்கச்செய்வது. ஆகையால் எவ்வித்தை கற்றாலும் எத்தொழிலைச்செய்தாலும் பகவானையறிவித்து அவனிடத்துப் பக்தியை விர்த்தி செய்விக்கும்படியான நமது சுதேசபாஷைக் கிரந்தங்களைப்படிப்பதும் நமது ஆசார அனுஷ்டானங்களை விடாதிருப்பதும் பரமார்த்திகமெனச் சொல்லலாம்.

ஆரிய நேயர்களே! இலௌகீக பரமார்த்திக விஷயங்களில் எது மேம்பட்டதோ அதை நீங்களே யறியலாம். மேம்பட்டதை விர்த்திசெய்யும் பாஷை எதுவோ அதை நீங்கள் விர்த்திசெய்யவேண்டும். சுதேசபாஷை விர்த்தியடையுமாயின் தெய்வபக்தி விர்த்தியாகும். ஆசார அனுஷ்டானங்களும் நிலைபெற்று நிற்கும்.

சுதேசபாஷாபிமானி



## அருமையான விஷயங்கள்.

தண்ணீரையே காரணமாக வைத்துக்கொண்டு உற்பவித்த தாமரையானது எப்படி தண்ணீரில் பற்றாதிருக்கின்றதோ, அவ்வண்ணமே வினையே காரணமாக ஜன்மமெடுத்து வினையின்பயனை யனுபவிக்குங்காலத்து அதில்மனம் பற்றாது அவ்வனுபவத்தை சாக்ஷிபோல் பார்ப்பதுதான் துன்பத்தையடையாம லிருப்பதற்கு நல்லசாதனம்.

* * *

சேற்றுநீர்போல அகங்கார மமகாரங்களால் ஆவரிக்கப்பட்டது சீவன். தேற்றாங்கொட்டையின் நுண்ணிய பொடிகள் சேற்றோடுசேர்ந்த நீரைத்தெளிவிக்கிறது. அதுபோல ஞானமும் அகங்கார மமகாரங்களை நீக்கி சீவனை சுத்தாத்துமாவாக்குகிறது. எப்படித் தேற்றாங் கொட்டைப் பொடிகள் தங்கள் உருவந்தோன்றாதபடி சேற்றுநீரிலே கலந்துபோமோ அப்படியே ஞானமும் ஆத்மாவினிடத்திலே லயமாய்ப்போம்.

* * *

சுவச்சமான சுவர்ணத்தினால் செய்யப்பட்ட கடககுண்டலாதி ஆபரணங்கள் அச்சுவர்ணத்தைக்காட்டிலும் எப்படி அன்னியமாக மாட்டாவோ அப்படியே சச்சிதானந்த சொரூபமாய் சர்வவியாபகமாயுள்ள பிரமத்தில் கற்பிக்கப்பட்ட சராசரரூபமாகிய பிரபஞ்சமெல்லாம் அப்பிரமத்தைக்காட்டிலும் அன்னியமாக மாட்டா.

* * *

இருட்டிலுள்ள பதார்த்தத்தைப் பார்ப்பதற்கு தீபத்தின் உதவிவேண்டும். பிரகாசிக்கின்ற தீபத்தைப் பார்ப்பதற்கு மற்றொருதீபம் வேண்டியதில்லை. அதுபோலவே அஞ்ஞானத்தைக் காரணமாகவுடைய உலகத்தையறிய ஞானம்வேண்டும். சதாஞானஸ்வரூபியாய் எல்லாருடைய இருதயகமலத்தில் பிரகாசிக்கின்ற பரமாத்துமாவை அறிகிறதற்கு மற்றோர்ஞானம் வேண்டியதில்லை.

* * *

இதுகிழக்கு இதுமேற்கு என்று தெரியாத திக்குப்பிரமையானது சூரியோதயத்தால் நீங்குவதுபோல், நான்யார்? உலகமெவ்வண்ணம்? ஈசுவரன்யார்? என்னும் பிரமையானது தத்துவஸ்வரூபானுபவத்திலே ஜனித்த ஞானத்தால் நிவர்த்தியாகும்.

* * *

சங்கற்பத்தினால் உண்டாகிற சகலமான விஷய ஆசைகளை முற்றிலும் விட்டு, மனதினாலேயே சகல

மான இந்திரியங்களைச் சகல விஷயங்களினின்றுந் திருப்பி, தைரியத்தினால் சுவாதீனஞ் செய்துக்கொள்ளப்பட்ட புத்தியினாலே மனதை ஆத்மாவிடத்தி லிருக்கும்படி செய்து, மெள்ள மெள்ள மனதை வசியப்படுத்த வேண்டும். இதுதான் எப்போதும் யோகிகள் செய்யுந் தொழில்.

* * *

எந்தப்பிராணிக்கும் ஹிம்சை யுண்டுபண்ணாதவனும் எல்லாருக்கும் மித்திரனும், கருணையுள்ளவனும், அகங்கார மமகாரம் சிறிது மில்லாதவனும், சுகதுக்கங்களைச் சமமா யெண்ணுகிறவனும், பொறுமையுள்ளவனும், எப்போதும் சந்துஷ்டனும், மனதையடக்கும் முயற்சியுள்ளவனும், பகவானிடத்தே மனம் புத்தி இவைகளை அர்ப்பிதம் பண்ணவனும் எந்த மனிதனிருக்கிறானோ அவன்தான் பக்தன். அவனே பகவானுடைய பிரியத்தை யடைகிறான். அவன்தான் பக்திமார்க்கத்தை நன்றாய் அறிந்தவன்.

* * *

எவனிடத்திலிருந்து பிராணிகள் பயமடைகிறதில்லையோ, எவன் பிராணிகளிடத்திலிருந்து பயமடைகிறதில்லையோ அவன்தான் ஆத்ம தத்துவத்தையறிந்த நற்பக்தன்.

* * *

சத்துருவினிடத்தும் சினேகிதனிடத்தும், மானத்திலும் அவமானத்திலும், சீதத்திலும் உஷ்ணத்திலும், சுகத்திலும் துக்கத்திலும் சமமாயிருப்பவனும், வெளிக்கு நடிக்காமல் உண்மையில் ஒன்றிலும் மனம் பற்றாதவனும், ஒருவர் நிந்தித்தாலும், மற்றொருவர் ஸ்தோத்திரஞ்செய்தாலும், அவைகளில் சமமாயிருப்பவனும், எப்போதும் மௌனம் வகித்தவனும், கிடைத்ததில் சந்தோஷமடைந்து கிடையாத விஷயத்தில் ஆசைகொள்ளாதவனும், எப்போதும் ஸ்திரமானபுத்தியுடனிருப்பவனுமானவன் எந்த மனிதனோ அவன்தான் பகவானுக்குப் பிரியனாகிறான். அவனே பக்தன். அவனே சீவன் முக்தன்.

* * *

ஜீவன் முக்தனான யோகியானவன் அவித்தையாகிய சமுத்திரத்தைப் பிரமாபின்னமான ஞானமாகிய தெப்பத்தினால் கடந்து மோக்ஷத்திற்குச் சத்துருக்களாகிய ராகத்துவேஷாதிகளென்னும் இராக்ஷசர்களை முற்றும் நாசஞ்செய்து உத்தமசாந்தியோடு கூடி தன்னிடத்தில் தானே ஆனந்தம் அடைந்து விளங்குகிறான்.

* * *

ஜீவன் முக்தனான யோகியானவன் சகல வுபாதிகளிலும் கூடியிருந்தாலும், ஆகாசம்போல ஒன்றோடும் சம்பந்தப்படாதவனும், சமஸ்தத்தையும் அறிந்திருந்தாலும் மூடன்போல ஒன்றையும் அறியாதவனும், பிராரப்தகர்மத்தினால் பிரயத்தனமின்றி நேரிட்ட போகங்களிலும் விருப்பமில்லாமல் காற்றுப்போல சஞ்சரிப்பான்.

* * *

நெருப்பானது புகையினாலேயும் கண்ணாடி அழுக்கினாலேயும், வயிற்றிலிருக்கிற சிசுவானது கருப்பையினாலேயும் எப்படி மூடப்பட்டிருக்கிறதோ அப்படியே மனிதனுடைய ஞானமானது ஆசையினால் மூடப்பட்டிருக்கிறது. ஆசையை யொழித்தாலல்லாமல் ஆத்மஞானம் கிடைக்காது.

* * *

ஆசையையொழித்து மனதின் ஓட்டத்தையடக்கி ஆத்மஞானத்தையடைய முயற்சிசெய்வதுதான் எல்லா யக்ஞங்களிலும் உயர்ந்த யக்ஞமென்று கூறப்படுகிறது. சில யோகிகள் சப்தம் முதலிய விஷயங்களை இந்திரியங்களாகிய அக்னியில் ஓமஞ்செய்கிறார்கள். அதாவது இந்திரியங்களுக்கு விஷயானுபவங்களைக் கொடாமல் தடுப்பது. இது ஓர்யக்ஞம். சிலயோகிகள் ஞானேந்திரிய கர்மேந்திரியங்களை ஆத்மஞானத்தில் மனதை நிறுத்தலாகிய யோகமென்கிற அக்கினியில் ஓமஞ்செய்கிறார்கள். அதாவது விஷயங்களைத் தேடியோடும் இந்திரியங்களின்வழியே மனதை செல்லவிடாமல், தான் எதனிடத்திலிருந்துண்டாய் எதை ஆசரியித்து சகல வியாபாரங்களையும் செய்கிறதோ அதையறிய மனதை அகமுகமாய்த்திருப்பி ஆத்மாவினிடத்தே லயித்திருக்க செய்வது. இதுதான் எல்லாவற்றிற்கும் மேலானயக்ஞம்.

* * *

மனது ஒருவனுக்கு சுவாதீனமாகும் வரையில் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்ட மதானுஷ்டானம் சித்தித்ததாக நினைக்கப்படாது-எவ்வளவுவிஷயங்களைக் கற்றாலும், கற்றதைப்பேசினாலும் ஒரு பிரயோசனமுமில்லை. "மனமிறக்கக்கல்லார்க்குவாயேன் பராபரமே" என்று தாயுமானாருங் கூறினர். மனதையடக்கும் நிமித்தம் முதலில் உலகவிஷயங்களையெல்லாம் வெறுக்க வேண்டியதாயிருக்கிறது. உலகவிஷயங்களில் வெறுப்பைக்காட்டி மனதையடக்கி ஆத்மஞானத்திலே நிலைத்திருக்கப் பழகியபின் உலகவிஷயங்களின் உண்மைஞானம் வருகிறது. அக்காலத்து உலகவிஷயங்களில் வெறுப்புமிராது விருப்புமிராது, உலக ஆசையே துன்பத்திற்குக் காரணம். ஆரம்பத்தில் உலகத்தினிடத்திருக்கும் விருப்பத்தையொழிக்க வெறுப்பைக் கொள்ளவேண்டும். உலகத்தை வெறுத்தபின்னரே ஆத்மஞானம் வருகிறது. ஆத்மஞானம்வந்து உலகத்தின்



உண்மைவிளங்கியபின் உலகத்தினிடத்துள்ள வெறுப்பும் விட்டுப்போகிறது. விருப்பு வெறுப்பற்றபோது தான் நிலைத்தஞானம் வந்ததற்கு அடையாளம். விருப்பு வெறுப்பு அற்றுப்போகிறவரைக்கும் மனிதனுக்கு சன்மங்கள் வந்துகொண்டேயிருக்கும். இதனால்தான், "வேண்டாம் விருப்பும் வெறுப்பும் - அந்த வில்லங்கத்தாலே விளையுஞ்சனனம், ஆண்டா னுரைத்தபடியே-சற்று மசையாதிருந்து கொள்ளறிவாகி நெஞ்சே." என்று மகா அனுபோகியான தாயுமானர் தயையுடன் கூறியருளினர்.

## அறச்சிறப்பு.

உலகின்கண் ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்ட அனேக ஜீவராசிகளிலும் ஜடராசிகளிலும் மனித ஜன்மமே சிரேஷ்டமும் கிடைத்தற்கு அருமையுமானது. எவ்வளவோ புண்ணியங்களைச் செய்திருந்தா லல்லாமல் பகுத்தறிவுள்ள மனிதஜன்மம் கிடைக்காது. பகுத்தறிவுள்ள மனிதனாய்ப் பிறந்தும் தன்னைப் பகுத்தறியாமல் காலத்தை வீணில் கழிப்பதில் என்ன பயன்! ஓர் ஊருக்குப்போக அநேகவழிகளிருப்பதுபோல பகவானைச் சேருவதற்கு அநேகமார்க்கங்களிருக்கின்றன. மனிதர் அவரவர்கள் மனப்பரிபாக முதிர்ச்சிக்குத்தக்கபடி அவரவர்கள் ஓர் வழியிற்புகுந்து பகவானைச் சேருகிறார்கள். உதாரணமாக ஒருவன் ஓர் கல்லை பகவானாக நினைத்து அதை நிஜமான பக்தியுடன் தொழுது பகவானைக்காண்கிறான். இன்னொருவன் வேதசாஸ்திரங்களைக் கற்று அதன்மூலமாய் பகவானை அறிகிறான். மற்றொருவன் அதிக அன்பையும் பக்தியும் பகவானிடத்தில் செலுத்தி அவன் காண்கிறவஸ்துவெல்லாம் ஈசுவர சுவரூபமாகவே காண்கிறான். இப்படி அவரவர்கள் புத்திக்குத் தக்கவாறு அவரவர்கள் ஓர் வழியைக் கடைப்பிடித்து பகவானை அறிய நிற்கையில் அப்பகவானும் அவரவர்கள் தன்னை எப்படி நினைக்கிறார்களோ அப்படியே தோன்றுகிறான். ஈசுவரனையடைய பல வழிகளுள் அறம் ஒன்று. உலகத்தில் பூர்வஜன்மாந்தரத்தில் செய்த புண்ணியத்தினால் சிலர் அதிக செல்வர்களாய்ப் பிறந்து நல்ல சுகத்தை யனுபவிக்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் அறம் செய்யாது பணத்தைப் பத்திரமாய் பெட்டியில்போட்டு அதற்கு காவலாய் அதன்பக்கத்திலேயே படுத்து வேறொரு விஷயத்தையும் அறியாமல் சதாபணப் பயித்தியம்பிடித்து பகவானை விசாரியாது காலத்தைக் கழிப்பதில் யாதுபயன்? தருமமென்பது இம்மை மறுமைப் பயன்களை எளிதிற்றருவது. அது கஷ்டசாத்தியமாக வரும்பொருள், சத்தியவான்களே அறிவது ஏனையர் அறியலாகாதது. மேலும் ஒருவன் தருமத்தை அனுசரித்தால் அன்புதானே வந்து அடையும். அன்புவந்தடைந்தவிடத்து அருளும் பிறக்கும். அவை தோன்றியவிடத்துத் தவம் பலிக்கும், அதற்குமேல் ஆன்மா ஈசுவரசாமீப்பியத்தை அடையும். அறமானது தெய்வபோகம்-மோக்ஷம் - பூலோகச்செல்வம் என்பனவற்றைத் தருதலால் அதனைத் தினந்தோறும் விருப்பத்துடனே மனமொழி மெய்களாலே ஒருவன் செய்யவேண்டும். அறமானது பொருள், இன்பம், வீடு என்னும் மூன்றனையும் தருவதாயின் ஒருவருக்கு இகபரசாதனமாவது அறமேயன்றி வேறொன்றில்லை. கிடைத்தற்கரிய மனித சரீரத்தைப்பெற்றவிடத்து அதன் உதவியினாலே செய்யத்தகுந்த அறங்களைச்செய்து ஜன்மபந்தத்தை ஒழிக்க வழிதேடாமல் உழல்பவன் பெற்ற உடலானது பொற்கலத்தில் பெய்தற்குரிய பாலை மட்கமரில் பெய்ததுபோல் பயனற்றதாகும் என்பர் பெரியோர். மின்னல்போல் நிலையற்றதான சரீரத்தைக்கொண்டு நல்லறஞ்செய்து அழியாத தேவ சரீரத்தையும் இன்பத்தையும் அடைதலாக இருப்ப அதைச்செய்யாது கைவிட்டு வீணே உண்டு உயிர்வாழும் மாந்தர்களினால் என்ன பயன்? கோடைகாற்றடிக்கையில் முற்றினபழங்கள் உதிராதிருக்கவும் முற்றாதகாய்கள் உதிர்வதுபோல, விருத்தர் பிழைத்திருக்கவும் வாலிபர் இறத்தலுமுண்டு. ஆகையால் இப்பொழுது இளம்பிராயந்தானே, ஈதலாகிய தருமத்தைச் செய்யாமல், ஆராய்ந்து செய்யலாமென்றிராமல் கையில் பொருளுண்டான விடத்தே ஒளிக்காமல் சீக்கிரமாக தருமத்தைச்செய்யவேண்டும். மேலும் நாம் இன்னாளில் இறப்போம் என்பது தெரியாவிடினும் எப்படியும் ஒருநாளில் இறப்பது திண்ணமாதலால்கூடிய மட்டில் நல்ல தருமங்களைச் செய்யவேண்டும். நமது அரிய உயிர்போன்ற மனைவிமக்களுக்கு ஆகுமென்று பொருள் தேடிவைத்தும் அவர்கள் நமக்கு முன்னே இறந்துபோவதையுங் காண்கிறோம். இதைக்கண்டும் தருமஞ்செய்வதற்குச் சாதனமான உடலைப்பெற்றும் தருமத்தைச் செய்யாமல் சிலர் வாணாளை வீணாளாகக் கழிக்கின்றனரே, இவருடைய பேதைமை இரங்கத்தக்கதாக இருக்கின்றது. அன்றியும் சிலர் இல்வாழ்க்கையில் குறைக்காரியங்களை முடித்தபின்னர் துறவறத்தை குறித்துச் செய்வனவற்றைச் செய்துக்கொள்ளலாம் என்று நினைக்கும் பேதைமையானது சமுத்திரஸ்நானம் பண்ணப்போனவர்கள் சமுத்திரகோஷ மடங்கினபிற்பாடு ஸ்நானம் பண்ணலாமென்று காத்திருந்தவர்களுடைய பேதைமைக்கு நிகராகும். ஒருவன் இறக்குங்காலத்து அவன் உயிர்க்கு அழியாததுணை அறமேயாதலால் அதனை இறக்குங்காலத்தில் செய்வோம்

என நினையாமல் தினந்தோறும் செய்துவரவேண்டும். அறமானது மனிதருயிருக்கு மோக்ஷம் சுவர்க்கம் முதலானவற்றைத் தருதலால் அவ்வுயிர்கட்கு அதனைக்காட்டிலும் மேலான ஆக்கந்தருவது வேறு என்ன யிருக்கின்றது? ஒன்று மில்லை. கடைசியாக அறமாகிய கற்பகவிருக்ஷம் பொருளும் போகமுமாகிய பூக்களைப் பூத்தலால் எவ்விதத்தில் வருந்தினீராயினும் அறத்தை மறவாமற் செய்மின்.

## ஜாதிதருமம்.

பரிசுத்தமாகிய பிராமணாள் வருணாசிரமமென்று சொல்லப்பட்ட நான்கு ஜாதிக்கும் முதற்குலத்தோர். அப்பிராமணாள் செய்யவேண்டிய கிரமங்கள் யாவை என்றால், வேதியரென்போர் குற்றஞ் செய்யாமலும், கோபம்வையாமலும், சத்தியந்தப்பாமலும், ஆசையில்லாமலும், தருமம் மறவாமலும் பூத தயையுடன் பதிவிரதையாகிய பெண்ணைக் கலியாணஞ்செய்து சுசி ஆசாரத்துடன் நித்திய சபதபகரும காயத்திரிமுதலிய காரியங்களில் வழுவில்லாமல் வழியாய் நடத்துவது பிராமண விதி. இன்னமும் வேதமோதல், யாகஞ் செய்தல், வேதமோதிவித்தல், யாகம் பண்ணுவித்தல், தபசு செய்தல், தெய்வத்தைப் போற்றல், அவுபாசனம் புரிதல், அக்கினிசாக்ஷியாய் கலியாணஞ்செய்தல், அரசருக்கு விவாகம் நடத்திவைத்தல், அரசர்முதலிய எவர்கள் கொடுத்தாலும் தானம் ஏற்றல், தான மீதல், அதிதிக்கு அன்னம் படைத்தல் இத்தியாதி குணங்களும் உடையவன் பிராமணன். இவர்கட்கு நீரின் முன் ஜபமும் நெருப்பின் முன் தவமும் முக்கியமானது.

க்ஷத்திரியனானவன் அவயவங்குறையாதவனாய் அழகுடையவனாய் குலகோத்திர மேன்மை பெற்றவனாய் பிராமணனைக்கொண்டு எக்கியம் செய்துவைத்து வில் வித்தை, யானை, ரதம், குதிரை, தேர், கத்தி கேடயம் இவை முதலியவை பழகி நால்வகைச்சேனைகளைக் காப்பாற்றி சத்துருவின்பேரில் சண்டைக்குப்போய் ஜயம் பெற்று மன்னுயிரைத் தன்னுயிர்போல்மதித்து பொதுவாயிருந்து திரவியஞ்சேர்த்து பரதேசி முதலிய யாசகர்களுக்குக்கொடுத்து பக்ஷபாதமில்லாமல் பரராஜ பயங்கரனாயிருந்து அரசாள்வது முக்கியதருமம்.

தருமந்தப்பாமல் திரவியஞ் சம்பாதித்து உழவு வாணிபஞ்செய்து பசுவினங்காத்து நாணயமில்லாரிடத்து கொடுக்கல் வாங்கல் செய்யாதிருந்து பொய்பேசாமல் பரதாரம் விரும்பாமல் சத்தியவழியில் நின்று புண்ணியம்தேடி பிராமணப் பூசைபுரிந்து அன்னதானமிட்டு தெய்வாராதனை நோன்பு சுப சோபனாதிகளில் பொருள் செலவழித்து பூரணமாக முடித்துக் கோபத்தையடக்கி பொருமையுடனிருந்து வாழ்வது வைசிய தருமமாம்.

மேற்கூறிய பிராமண க்ஷத்திரிய வைசிய ரென்னும் மூன்றுசாதிக்கும் உபகாரம்பண்ணி உழுது பயிரிட்டு தன்னாசிரியன், தரித்திரன், பிதுர்க்கள், பால்யர் சகலமான பேருக்கும் உதவிசெய்து தேவதா பக்தி, ஆசாரிய பக்தி, பெரியாரைப் பணிதல், பசுக்காத்தல் இவைமுதலிய வேலைகளில் ஆளாகியிருப்பது சூத்திர தருமம்.

## நான்காசிரமம்.

பிர்மசரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்று நான்காசிரமம். இதில் பிர்மசாரிநடக்கவேண்டிய முறைமைகளாவது குருவணக்கம், வேதாகமப் பயிற்சி, செபம், தவம், தர்ப்பை சமித்து புஷ்பம் முதலானவை கொண்டு ஆசாரியருக்கு உபயோகப்படுத்தல், சந்தன சுகந்த பரிமள தயிலம் விலக்கல், ஜீவகாருண்யமா யிருத்தல் இவை முதலியவைக ளெல்லாம் முதலாச்சிரமமாகிய பிரமசாரியின் செய்கை.

இல்லறம் இரண்டாவது ஆசிரமம்:- நாணம், மடம், அச்சம், பயிற்பு என்னும் நான்கு குணங்களையுடைய கற்புடைமை வாய்ந்த நற்குண நற்செய்கை தோய்ந்த பதிவிரதையை விவாகம் செய்துகொண்டு அவளை விட்டு வேறுவழியிற் புகாமல் அவளுடன் கூடிவாழ்ந்து தாய்தந்தையரைப் பூசித்து, கிழவர்கள் பாலர்கள் நோயினர் இவர்களை ஆதரித்து அதிதி பிதுர்தேவதை முதலிய பேருக்கு விருந்தமு தூட்டி ஜீவயிம்சை செய்யாமல் பிறருடைய பாரியைபேரில் ஆசைப்படாமல் பரதேசிகளுக்கு பிச்சையிட்டு சுற்றத்தாரை நிந்தனைசொல்லாது பாதுகாத்து தேவதா பூஜை புரிந்து நோன்புகளை அனுஷ்டித்து தர்ப்பணாதிகள் செய்து தேவாபத்திபந்து ஜன நேசம் சுபசோபன சந்தோஷங்களுடன் இருக்கவேண்டியவன் கிருகஸ்தன்.

வானப்பிரஸ்தம் மூன்றாவது ஆசிரமம்:— வானப்பிரஸ்தன் அக்கினியுடனேயும் பெண்சாதியுடனேயும் காட்டிற்குப்போய் புனிதமாக ஆசிரமங்கட்டிக்கொண்டு போசனத்தையொழித்து காய், இலை, சருகு, கனி, முதலியவற்றைப் புசித்து வீண்காலம் போக்காமல் பிரமநிஷ்டை கூடி காற்றுக்கும் பனிக்கும் மழைக்குஞ் பயப்படாமலிருந்து தபசுபண்ணுகிறது மன்றி தன்னை இழுத்துச் செல்லும் ஐம்புலன்களையும் அடக்கி தன்வசப்படுத்தி கர்மபூமியின் வாசனா விஷயத்தைக் கனவிலுங் கருதாமலிருப்பது மூன்றாவது ஆசிரமத்தின் முறை.



நான்காவது சந்நியாசம்:— அதாவது சகலமும் நாசம். பாசபந்தமறுத்தல், ஓரிடத்திலிருக்காமல் உலகமெல்லாஞ் சஞ்சரித்தல், கிடைத்தபோது உண்ணுதல், படுக்கை உடுக்கை உண்டல், முதலியவைகளை பக்குவருசிபாராமல் அனுபவித்தல், ஒருவருடன் பேசாமல் மௌனமா யிருத்தல், நல்லதென்றும் தீயதென்றும் நாடாதிருத்தல், சிகை பூணூல் இவைகளைச்சார்ந்த கருமக்கிரியைகளை நீக்கல்,காவிகாம்பரம் போர்த்தல்,தண்டுக்கமண்டல மேற்றல், வேதசாஸ்திர புராண முதலிய நூலெல்லாம் ஐயம் திரிபற அறிதல், சகலமும் பிர்மார்ப்பணம் செய்தல், நான் எனது என்னும் செருக்கு அழிதல், பொருமையாதல், விருப்பு வெறுப்பு விட்டுவிடுதல் முதலிய இத்தியாதி நடவடிக்கைகளை யுடையவர்களை யதிகளென்றும் சொல்லலாம்.

## மோக்ஷநிலை.

ஒருவன் இல்லறநீங்கித் துறவறந்தாங்கி நாட்டைவிட்டுக் காட்டிற்போய்த் தவமிழைப்பதே கடைப்பிடியான தருமம். இத்தருமம் வகித்தவன் பொருள்-பெண்டு-பிள்ளை-மண்-மனை இவைகளை நினையாமல் நல்வினை தீவினைகளில் மயங்காமல், நடுக்கமில்லாமல் மழை வெய்யில்களுக்குத் தியங்காமல், கல், கறடு, புல், பூடு, இவைகளுக்கு இடையாமல், பஞ்சேந்திரியவாதைகளை நிக்கிரகித்து, அறுவகைப் பகையையு மொழித்துதானென்கிற ஆணவமலத்தை யறுத்து, உடலபிமானம் விட்டு, மரவுரி உடுத்தி, பெரிய மகானுபாவரை விரும்பி யோகத்திலோங்கி, விதிவிலக்கை யனுசரித்து வெறுப்பும் விருப்புமில்லாம லிருப்பவன். பிறவாதவன் இறவாதவன். இதற்கு மேற்பட்ட தருமமில்லை. மற்றவைகளெல்லாம் இத்துறவுக்குச் சரியானதல்ல. எல்லாம் பந்த சம்பந்தங்களாம். அப்பந்த சம்பந்தத்தி னியல்பென்ன வெனில்? பணம் பணமென்று நினைத்துக்கொண்டு எத்தனைபாவங்களானாலுஞ் செய்து பொருளைச் சம்பாதிப்பதும், அந்தப்பொருளை போஷிப்பதும் அப்பொருள் கெட்டுப்போவதுமாம். இத்தியாதி விதங்களிலெல்லாந் துன்பமே. எப்போது பணத்தாசைவிடுமோ அப்போதே விசனம்விடும், இப்பொருளாசையினும் பிள்ளையாசை பெரிது. பிள்ளையில்லாமற் போனாலோ மெத்தவும் பிராந்தி. பிள்ளை கிடைத்தாலோ அதனால் வேண்டியதுக்கம். முடிவில் யோசிக்குமிடத்தில் இவனார்? பிள்ளையார்? இது சிருஷ்டியினுடைய சுபாவம். பிள்ளை வேண்டுவோர்க்குப் பிறக்காமையும் வேண்டாதார்க்கு வெகுவாயுண்டாதலு மாகின்றன. பெண்சாதி பிள்ளை யென்பவர்களில் முற்பிறப்பில் யாருக்கார் சொந்தபந்தம்? இப்பிறவியாகிய சந்தையில் கூடிய கூட்டம். சுக்கிலம்-சுரோணிதம் - எலும்பு-தோல்-நரம்பு-மாம்சம்-நிணம்-ரோமம் இவைகள் சேர்ந்தால் ஒருதேகம். காற்று நின்றுலாவி யசைக்குங்காயம், வாயு நீங்கினால் வல்லுடற்றூங்கும். ஒரு மரத்தில் தளிர்த்தது கொழுந்து, அப்பால் இலை, பின்பு பழுப்பு, அதன்மேல் உதிர்த்த உலர்ந்தசருகு; இந்த ஆக்கையுங் குழந்தை - பாலன் - பையன்-குமரன் - நாயகன் - வயோதிகன் என்னும் பருவங்களை வகித்துக்கொண்டு வளர்ந்து வாழ்நாள் நீங்கினால் மாளத்தக்கதே. ஆனதால் கானல் நீர்போன்றது காயம். இஃது நல்வினை தீவினைகட் கீடாயெடுப்பது. அவ்வினைகளொழிந்தால் தோன்றிமறையு மின்னலைப் போலாகும்.

இப்படிப்பட்ட பொய்யுடலை மெய்யென்றுநம்பிய ஒருவனுக்கு மோக்ஷம் எங்ஙனம் கிடைக்கும்? சத்தைவிட்டு அசத்தைதொட்டு மயங்கி நலம் குலைந்துபோவான், பின்னை யெப்போதுதான் கடைத்தேருவானென்றால் பிரபஞ்ச மாயாமயக்க மித்தையென்று உணர்ந்து ஈஸ்வரபக்தி பிறந்து ஞானம்பிரந்தநாள் எதுவோ அன்றைக்கு நற்கரும அதிகாரியாவான். சரீரம் தோன்றும்போதே பிணி, நரை, திரை, தளர்ச்சி இவைகள் பிறந்தன. பிறந்ததுமுதல் இறந்ததுவரையில் என்ன சுகம்? அவ்வாறும் எண்ணிப்பார்த்தால் எளிதிற் தெரியும். கண்டதெல்லாந் துன்பமே இப்படியெல்லா மிங்கு கஷ்டப்பட்டு இறந்தும் எமபாசபந்தத்தில் அகப்பட்டுக்கொண்டு படுகிறதும் துன்பமே. ஆகையால் நல்ல கல்வி கேள்விகளை கேட்டு பெரியாரைப்பேணி ஆசாபாசத்தை ஒருவிதமாயகற்றி ஆத்மக்கியானம் பிறந்து பிரபஞ்சமாயை தெளிந்து மனத்துணிவுவந்தவனெவனோ அவன் பிறவிசாகரத்தை நீந்திக் கரையேறுவன்.

வேதாந்த இன்பங்கண்டு பேரின்ப மோனாநந்தம் கொண்டவர்கள் இந்தத் துறவை மில்லறமென்னும் தருமத்திருந்து முத்திபெறலாகும். அஃ தெவ்வாறெனின் மூவாசைமுதலிய பாசங்களிற் புளியம்பழத்தோடு போற்பற்றற்றிருந்து அகம் புறமொத்து உற்றுப்பார்த்தப்பேர்களுக்கு இல்லறத்து நடைபாவனை காட்டி உள்ளம் பக்குவப்பட்டுத் துறவுபூண்டிருந்து பலனைப் பெறுகின்றபேருமுண்டு. ஆனால் பெண்பிள்ளை பண்டு பதாத்தத்திலிருந்து பெருந்துற வடைவது மெத்தவும் அருமை. அப்படிக்கானால் அது சத்துவப் பெருமை. இன்னுஞ் சாங்கிய நூற்பயிற்சியாற் சாங்கியயோகத்திலிருக்கிறபேருக்குஞ் சித்தியான ஞானம்வரும் முத்தியும் பெறுவார்கள். அஷ்டாங்க யோகத்திலிருந்து பரமுத்தியோகம் பாராட்டிய பேருக்கும் பதவிகிடைக்

கும். இரவும்பகலும் கிரியாசார நெறிதப்பாமல் ஈஸ்வரத்தியானம் செய்பவர்களுக்கும் இன்பமுண்டாகும். இம்முத்தியின்விவரம் யாதெனில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், யென்னும் பஞ்சபூதங்களும் வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் என்னும் கருமேந்திரியங்களும் சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் எனத் தன்மாத்திரைகளும் சுரோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் என்னுமைம்புலன்களும் மனம், புத்தி, அகங்காரம், சித்தம், என்னும் நான்கு அந்தக்கரணங்களும் பிரகிருதி முதலாகிய தத்துவங்களும் தானல்லாமல் காண்பதுவே மோட்சமாம்.

* * *

## ஆசார அனுஷ்டானம்.

கங்காநதி தீரவாசியாகிய ஓர் பிராமணன் அவ்வூர் பிரஜைகளெல்லாம் ஆசாரயீனர்களென்றும் தான்மாத்திரம் ஆசார அனுஷ்டானங்களில் சிறந்தவனென்றும் நினைத்து கர்வங்கொண்டு அந்நதி ஓரத்தில் ஓர் ஆசிரமம் கட்டிக்கொண்டு ஊர் ஜனங்களுடன் சேராமல் தனியே வசித்துக்கொண்டுவந்தான். இப்படி யிருக்கையில் ஒருநாள் ஓர் வண்ணான் அந்த பிராமணன் ஸ்நானம் பண்ணுகிற துறை என்றறியாமல் அதில் தன்னுடைய துணிகளை பளீர் பளீரென்று தோய்த்துகொண்டிருந்தான். பிராமணன் அதைப்பார்த்து. "அடாபயலே! என்னுடைய துறையென் றுணராமல் அதில் உன்னுடைய துணிகளை துவைக்கிறையா; அப்பால்போ" என்றான். வண்ணான் துணிதோய்ப்பதிலேயே திருஷ்டியாயிருந்தபடியாலும் அங்கிருந்த சிற்சில முட்செடிகள் பிராமணனை மறைத்துக் கொண்டிருந்தபடியாலும் பிராமணன் சொன்னது வண்ணானுக்கு கேட்கவில்லை. அதனால் வண்ணான் தோய்க்கிறதை நிறுத்தாமலேயிருந்தான் அந்தணர் கோபங்கொண்டு வண்ணானிடத்தில் ஓடிவந்து "அட சண்டாளப்பயலே! நான்சொன்னதை மறந்து உன்பாட்டில்தோய்த்துக் கொண்டிருக்கிறயா" என்று அவன் கன்னத்தில் பளீரென்றறைந்து தான்வண்ணானை தீண்டினபடியால் ஜலத்தில் ஸ்நானம்செய்தார். அப்போது வண்ணானும் முழுகினான். பிராமணன் வண்ணானை நோக்கி நான்தான் சண்டாளனாகிய உன்னைத் தீண்டினதால் முழுகினேன், நீ எதற்காக முழுகினாய் என்றார். வண்ணான் நானும் ஒருசண்டாளனைத்தீண்டினேன் அதனால் முழுகினேனென்றான். பிராமணன் அச்சண்டாளன் யாரென வண்ணான் சாந்தமூர்த்தியாகிய தங்களுடைய மனதில் கோபமாகிய சண்டாளன் வந்து உட்கார்ந்தான், அவன் என்னைத் தீண்டியபடியால் நானும் முழுகினேனென்றான். பிராமணன் வெட்கித் தலைகுனிந்தான். இதனால் ஒருவன் எவ்வளவு ஆசார அனுஷ்டானமுடையவனாயிருந்தாலும் அதெல்லாம் தேகசுத்தியர்த்தத்திற்காகவே செய்யப்படும் காரியங்கள். ஆசாரமெல்லாம் ஆத்மசுத்தியர்த்தமாகாது. ஒருவன் ஒருநாளைக்கு எத்தனை தரம் முழுகி முழுகி புதிய வஸ்திரங்களை உடுத்தாலும் அவனுடைய சரீரம் சுத்தியாயிருக்குமேயொழிய சரீரத்திற்கு மேம்பட்ட ஆத்மாவுக்கு யாதொரு சுத்தமுமாகாது. மீன் முதலை முதலியவைகள் ஜலத்திலேயே அநேக காலம் வசித்துக்கொண்டிருக்கின்றன. அதனால் அவைகளுக்கு ஏதாவது நல்லபதவிகிடைக்குமா? ஆகையால் ஒருவன் ஒருநாளைக்கு அநேகதடவை முழுகுவதினாலும் பிறரைக்கண்டால் எங்கே அவர்கள் தன்மேல் தீண்டிவிடுகிறார்களோ வென்றும் நடிப்பதில் யாதொரு பிரயோசனமு மில்லை.

இதனால் ஆசார அனுஷ்டானங்களை அனுஷ்டிக்கக்கூடாதென்பது கருத்தல்ல. இந்த ஆசார அனுஷ்டானங்களெல்லாம் தேகத்தைச் சேர்ந்ததும் இகலோக சாதனமாயுள்ளவைகளே யல்லாமல் பரலோகசாதனத்திற்குரியதன்று. இகம் பரம் இவ்விரண்டிலும் பரமே சிறந்ததாகையால் எப்போதும்மேன்மையானதையே அடையதேடவேண்டிய படியால் அகங்கார மமகாரங்களை விடுத்து எது மேன்மையோ அதையடைய முயற்சிசெய்யுங்கள். எவனொருவன் அகங்கார மமகாரங்களைவிட்டு உண்மையில் பகவானை அறியவேண்டுமென நினைக்கிறானோ அவனுக்கு ஜாதி மதம்முதலானவைகள் பகவானையடைய இடையூறாக நிற்கமாட்டா. நந்தனார் இழிந்த ஜாதியைச் சேர்ந்தவராயிருந்தும் அவருக்கு பகவான் எங்ஙனம் மோட்சமளித்தனர். அவர் பகவானிடத்தில் செலுத்தின அன்பினாலல்லவோ? இதனால் என்ன ஏற்படுகிறதென்றால் ஒவ்வொருவரும் அவனவன் ஜாதி கர்மானுஷ்டானங்களைச் செய்யவேண்டியது அவசியமே. ஆனால் ஒவ்வொருவனும் தனக்குக்கு ஏற்பட்ட கர்மங்களைச்செய்வதுடன் பகவானைப் பற்றியும் சிறிது விசாரிக்கவேண்டும். விசாரணையின்றி காரியம் சாதகமாகாது.

உலக ஆசையை சிறிது வெறுத்து பகவானையடைய முயலுவோர் ஜாதி குலம் முதலானவைகளைக் கவனியார்கள். உதாரணமாக நமது முன்னோராகிய தபசிகளும் ரிஷிகளும் யோகிகளும் இன்னஜாதி, இன்ன குலம் என்று நமக்கு உறுதியாய் சொல்லமுடியாது. மகான்களாகிய பெரியோர்களுக்கு ஜாதி குலம் கிடையாது. அவர்களுக்கு எல்லாம்பகவானே, எல்லாம் பகவத் சுவரூபமாகவே காணப்படும்.

---



(Copy Right.)

## மனோகரன்.

(முன்தொடர்ச்சி.)

மகதவரசன் அனுப்பிய கடிதம்வந்து பத்துநாளாகின்றன. சந்திரசேகரன் தன்னூரைவிட்டுப்போவதற்கு இன்னும் ஐந்துநாள்தா னிருக்கின்றன. இந்த சமாச்சாரம் சத்தியபுரிமுழுவதும் பரவியது. அவ்வூர் ஜனங்களெல்லாம் பிரபுவுக்கு மனமிரங்கி காரணமின்றித் துன்பத்தையுண்டுபண்ணும் அரசனை நிந்தித்தனர். உத்திரவு வந்து பத்துநாளாகியும் இன்னஊருக்குப்போவதென்று சந்திரசேகரன் நிச்சயம்செய்யவில்லை. ஒருநாள் காலை மந்திரியும் பிரபுவும் கொலுமண்டபத்திலிருந்து எந்த ஊருக்குப் போவதென்று யோசனைசெய்து அன்றைய தினம் ஒருமுடிவுக்கும் வராமல் அடுத்தநாள் யோசிப்போமென்று விடுத்து மந்திரி தன்வீட்டுக்குச்செல்ல மேன்மாடியைவிட்டு கீழிறங்கும்போது, மந்திரியார் வீட்டுக்குப் போகிறாப்போ லிருக்கிறதென்று ஒருவர் எதிரே வந்து சொன்னதைக் கேட்டவுடன் மந்திரி ஓகோ! எப்போதுவந்தீர்கள் சுலோசனரே! சௌக்கியந்தானே? என்று கேட்டார். நான்வந்து இரண்டுநாளாச்சுது, சௌக்கியந்தான். உங்கள்பிரபுஎங்கிருக்கிறார்? என்று சுலோசனன் கேட்க, மேன்மாடியில் கொலுமண்டபத்திலிருக்கிறாரென்று மந்திரி பதில்கூறவும் சுலோசனன், என்ன விசேஷம்? அரசன் என்னமோ கட்டளையனுப்பிவைத்தானாமே நிஜந்தானோ? என்று சுலோசனன் கேட்டான். இதற்கு மறுமொழி விபரமாக மந்திரி சொன்னதைக்கேட்டு சுலோசனன் தான் வெளியில் கேட்ட சமாச்சாரம் பொய்யல்லவென்று நினைத்து மந்திரியைப் பிறகுப்பார்ப்பதாய்ச்சொல்லி மேன்மாடியிலிருந்த பிரபுவைக் காணச்சென்றான். சுலோசனன் வருவதைக்கண்ட சந்திரசேகரன் "வாருங்கள், வாருங்கள், சுலோசனரே!" என்று சொல்லி அவரை ஓர் ஆசனத்திலுட்காரச்செய்து தானும் அவருக்கெதிராக மற்றோர் ஆசனத்திலுட்கார்ந்துகொண்டு யாத்திரை சுகமாகயிருந்ததா? சத்தியபுரிக்கு எப்போதுவந்தீர்கள்? என்று கேட்டான்.

"சுலோசனன்"—யாத்திரை ஒருவாறு சுகமாகத்தான் முடிந்தது. நான் இவ்விடம்வந்து நாலுநாளாச்சுது.

"சந்திரசேகரன்"—அதென்ன? யாத்திரை ஒருவாறு சுகமாக யிருந்ததென்றீர்களே?

"சுலோசனன்"—நான் எத்தனை சினேகிதர்களோடும் வேலைக்காரர்களோடும் சென்றிருந்தபோதிலும், எனக்குள்ள பந்துக்கள் ஒருவருமில்லாது தனியே போனது அவ்வளவு திருப்தியாக விருக்கவில்லை.

"சந்திரசேகரன்"—ஆமாம்; அது உண்மையே.

"சுலோசனன்"—நான் தங்களைப்பற்றி ஒரு சமாச்சாரம் கேள்விப்பட்டேன். அதற்காக நான் சிறிது விசனப்படுகிறேன்.

"சந்திரசேகரன்"—ஆமாம் அரசனது கட்டளைப்படி நடக்கவேண்டியதுதானே. விசனப்பட்டு என்ன செய்யலாம்.

"சுலோசனன்"—என்ன கட்டளை; காரணமின்றி ஓர் காரியமா?

"சந்திரசேகரன்"—காரணமின்றிக் காரியங் கண்டதில்லை. ஆகையால் இதற்கும் ஒரு காரணமிருக்கலாம் நமக்குத் தெரியவில்லை.

"சுலோசனன்"—காரணத்தை உங்களுக்குச் சொல்லாமல் ஓர் கட்டளை யிடுவது நியாயமா?

"சந்திரசேகரன்"—காரணம் பின்னால் சொல்லப்படுமென்று எழுதியிருக்கிறது.

"சுலோசனன்"—என்னமோ யிதெல்லாம் எனக்கு ஒன்றும் சரியாகவில்லை அரசனுக்கு அழகல்ல.

"சந்திரசேகரன்"—இதற்காக நான் முதலில் சிறிது மனவருத்தங் கொண்டேன். இப்போது எனக்கு அதைக்குறித்து கவலையில்லை. எல்லாம் ஜெகதீசன் செயலானபடியால் இது என்னுடைய நன்மைக்காகவே நடக்கக்கூடும்.

"சுலோசனன்"—உங்கள் தைரியத்தை நான்மெச்சுகிறேன், எந்த ஊருக்குப் போவதாய் தீர்மானித் திருக்கிறீர்கள்?

"சந்திரசேகரன்"—அதுதான் இன்னும் ஏற்படவில்லை.

"சுலோசனன்"—மகததேசத்தின் எல்லையோரமாக என்னுடைய சிறிய ஊர் ஆனந்தபுரியிருக்கிறது. அவ்விடத்திற்கு வேண்டுமானால் நீங்கள் போகலாம். உங்களுக்கு வேண்டிய ஏற்பாடு செய்து வைக்கிறேன்.

இதைச் சொல்லும்போது கேட்டுக்கொண்டிருந்த பிரபுவின் குமாரன் சந்திர சூடன் "ஆனந்த புரியில் திருடர்கள் உபத்திரவம் அதிகமென்று சொல்லுகிறார்களே" என்றான்.

"சுலோசனன்"—அவ்வூரில் கோட்டையைப்போல என்னுடைய அரண்மனை யிருக்கிறது. அநேக காவலாளர் உண்டு. நீங்கள் திருடர்களுக்காக அஞ்ச வேண்டிய தில்லை. சந்திர சூடன் பால்லியமானதால் சிறிது அஞ்சுகிறான்.

"சந்திரசேகரன்"—சுலோசனரே! மிகவும் சந்தோஷம். நான் இரண்டு நாளையில் பிரயாணப்படுகிறேன். நீங்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்துவிடுங்கள்.

இவ்வண்ணம் சந்திரசேகரன் கூறியதைக்கேட்ட சுலோசனன் தான் எண்ணின காரியம் முடிந்ததென்று சிறிது சந்தோஷங்கொண்டு ஆனந்தபுரியைக் குறித்து விவரமாக இன்னும் அநேக சமாச்சாரங்களைச் சொல்லி சந்திரசூடனையும் சம்மதிக்க செய்தபின் சிறிது நேரம் சும்மாயிருந்தான். பின்பு சந்திரசூடன் தன் வேலையாக கொலுமண்டபத்தை விட்டகன்றபின் இது நல்ல தருணமென்றெண்ணி சுலோசனன் மறுபடியும் பேசவாரம்பித்தான்.

"சுலோசனன்"—சந்திரசேகரரே! ஒரு சங்கதி. இப்போது தங்கள் குமாரத்தி சுந்தரிக்கு விவாகம் நடக்க காலமாய் விட்டதன்றோ?

"சந்திரசேகரன்"—ஆமாம்.

"சுலோசனன்"—அதற்காக என்ன யோசனை செய்தீர்கள்?

"சந்திரசேகரன்"—அதைக்குறித்து யோசிக்குந் தருணத்தில் தான் அரசன் கட்டளை வந்தது. பிறகு அதைப்பற்றி யோசிக்க சாவகாசமில்லை.

"சுலோசனன்"—யாருக்கு விவாகஞ் செய்து கொடுப்பதாக உங்களுடைய எண்ணம்?

"சந்திரசேகரன்"—தகுந்த கணவன் இன்னும் அகப்படவில்லை. இன்னும் ஒரு எண்ணமும் கொள்ளவில்லை.

"சுலோசனன்"—சந்திர சேகரரே! நான் தங்களுக்கு மருமகப்பிள்ளையாக அருகனன்றோ?

"சந்திரசேகரன்"—ஆகா நல்லகேள்வி! தங்களுக்கென்ன பெரிய இராஜாக்களுடைய பெண் கிடைக்குமே. என் பெண்ணை விவாகஞ் செய்துகொள்ளுவீரா, என்ன பரிகாசஞ் செய்கிறீர்களோ?

"சுலோசனன்"—பரிகாசம் ஒன்றுமில்லை. தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

"சந்திரசேகரன்"—(சிறிது யோசித்து) நான் ஆனந்தபுரிக்குப் போனபின்பு உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

"சுலோசனன்"—மறந்து விடாதேயுங்கள். நான் இதுவரைக்கும் விவாகஞ் செய்துகொள்ளாமலிருந்ததற்குக் காரணம் சுந்தரிக்கு வயதாக வேண்டுமென்று தான். தங்களுடைய சம்பந்தம் எனக்கு நேரிட்டால் போதுமானது. எனக்கிருக்கும் தனம், தான்னியம், பூமி இவைகள் உங்களுக்குத் தெரியுமல்லவோ?

"சந்திரசேகரன்"—ஆகாதெரியும்; அதற்கென்ன குறைவு. நீங்கள் நல்ல வமிசத்தைச் சேர்ந்தவர்களே. உங்கள் தமையனார் நரேந்திரன் எனக்கு நன்றாய்த்தெரியும். அவரிருந்தபோது ஜயபுரி, ஆனந்தபுரி, இரத்தினபுரி முதலான அநேக பட்டணங்களை ஆண்டுகொண்டு வந்தார். அன்னியாயமாய்க் கொலைபாதகர்கள் அவரைக் கொன்று விட்டதால் தங்களுக்குச் சிறிது கஷ்டம் நேர்ந்தது, அப்போது மகதவரசன் தங்களுக்கு எல்லாப் பட்டணங்களையும் கொடுக்காமல் சிறிய ஊர்களாகிய ஆனந்தபுரி, இரத்தினபுரி, இவைகளைமாத்திரம் கொடுத்தான். இத்துடன் நரேந்திரன் மனைவி யணிந்திருந்த நகைகளெல்லாம் விலை யுயர்ந்தவை. அவைகளையும் பொக்கிஷப் பணத்தையும் தங்கள் வசம் ஒப்புவிக்கப் பட்டனவென்பதும் எனக்குத்தெரியும். எல்லாம் எனக்கு நன்றாய்த் தெரியும். உங்களுக்குப் பெண்ணைக் கொடுப்பதற்கு நான் ஒன்றும் யோசிக்கவேண்டிய தில்லை.

"சுலோசனன்"—மிகவும் சந்தோஷம் சந்திரசேகரரே! இன்றைக்கு நான் இவ்விடத்திலிருந்து ஆட்களையனுப்பி ஆனந்தபுரியில், தங்களுக்காக எல்லா ஏற்பாடும் செய்வித்து தங்கள் வரவை எதிர்ப்பார்த்திருக்கும்படி வேலைக்காரர்களுக்கு கட்டளை யனுப்புகிறேன். நீங்கள் குடும்பத்துடனேதானே போகிறீர்கள்?



"சந்திரசேகரன்"—ஆமாம், எல்லாரையுந்தான் அழைத்துக்கொண்டு போகவேண்டும்.

"சுலோசனன்"—சிறியசேனை ஏதாவது கூட்டிக்கொண்டு போகிறீர்களோ?

"சந்திரசேகரன்"—போர் வீரர் பத்துபேரைக் கூட்டிக்கொண்டு போகலாமென்று அரசனது உத்திரவு. அதன் பிரகாரம் பத்து போர்வீரர்கள் வருகிறார்கள். சம்பாதி, சாம்பன் மற்றுமுள்ள வேலைக்காரர்கள் வருகிறார்கள்.

"சுலோசனன்"—மனோகரன் சங்கதியென்ன?

"சந்திரசேகரன்"—அவன் ஏதோ மனக்கவலைகொண்டிருக்கிறான். அவன் சங்கதி அவனுக்குத் தெரிந்துவிட்டதுபோலிருக்கிறது, அவனையுங் கூட்டிக்கொண்டு போகிறேன். அவனை எங்கேபோகச் சொல்லுவேன்.

"சுலோசனன்"—நீங்கள் போகச் சொல்லலாமா? அவனுக்கு நல்ல வயது வந்துவிட்டபடியினால் அவனே யோசிக்கவேண்டியது. எத்தனை நாளைக்குத் தங்கள் வீட்டிலேயே யிருப்பது. அவன் தங்கள் பந்துவா யிருந்தால் ஒரு யோசனையும் வேண்டாம். அவன் இன்னஜாதியென்றும் இன்ன ஊரானென்றும் ஏற்படவில்லை. அன்னிய புருஷனை அரண்மனையில் வளர்ப்பது ஒரு காலத்தில் அனர்த்தமாய் முடியும். சிறியபேதை சுந்தரி யிருக்கிறாள். புத்திசாலியாயிருந்தாலும் பெண்தானே? ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். உங்களுக்குத் தெரியாத யோசனையா? நான் போய்வருகிறேன். நீங்கள் ஆனந்தபுரிக்குப்புறப்பட பிரயத்தினஞ்செய்யலாம். நான் உங்களைப் பிறகுவந்து பார்க்கிறேன்.

(இன்னும் வரும்.)

---

## நானுசிவவாதக் கட்டளை.

(முன்தொடர்ச்சி.)

### பிரமம்.

பிரமமாவது பெரிதுக்கும் பெரிதாயிருக்கின்றதுவே பிரமம். பெரிதுக்கும் பெரிதாவது, ஜீவன் காரணசரீரத்திலிருக்கின்றமையால் காரணசரீரம்பெரிது. காரணசரீரம் சூட்சுமசரீரத்திலிருக்கின்றமையால் சூட்சுமசரீரம்பெரிது. சூட்சுமசரீரம் ஸ்தூலசரீரத்திலிருக்கின்றமையால் ஸ்தூலசரீரம் பெரிது. ஸ்தூலசரீரம் ஓர் வீட்டிலிருக்கின்றமையால் வீடு பெரிது. வீடு ஓர் கிராமத்திலிருக்கின்றமையால் கிராமம் பெரிது. கிராமம் ஓர் தேசத்திலிருக்கின்றமையால் தேசம் பெரிது. தேசம் பிருதுவியிலிருக்கின்றமையால் பிருதுவி பெரிது. பிருதுவி அப்புவிலிருக்கின்றமையால் அப்பு பெரிது. அப்பு தேயுவிலிருக்கின்றமையால் தேயு பெரிது. தேயு வாயுவிலிருக்கின்றமையால் வாயு பெரிது. வாயு ஆகாசத்திலிருக்கின்றமையால் ஆகாசம் பெரிது. ஆகாயம் விக்ஷேபசக்தியிலிருக்கின்றமையால் விக்ஷேபசக்தி பெரிது. விக்ஷேபசக்தி மாயையிலிருக்கின்றமையால் மாயை பெரிது. மாயையும் ஆகாசத்தைக்குறித்து ஒருசரீரம் ஏகதேசமாயிருக்கின்றதுபோல பிரமத்தினிடத்தில் மாயையும் ஏகதேசமாயிருக்கின்றமையால் பெரிதுக்கெல்லாம் பெரிதாயிருக்கின்றதுவேபிரமம்.

சர்வசாக்ஷி:— சர்வசாக்ஷியாவது, சர்வமாவது துவம்பதவாச்சியார்த்தங்களாகிய ஒன்பதும் தத்பதவாச்சியார்த்தங்களாகிய ஒன்பதும், அசிபதவாச்சியார்த்தங்களாகிய ஒன்பதும் ஆக மூவொன்பது இருபத்தேழினுடைய அன்வய வியதிரேகங்களை அறிந்துகொண்டிருப்பது சர்வசாக்ஷி.

துவம்பதவாச்சியார்த்தம்:— துவம்பதவாச்சியார்த்தமாவது ஸ்தூலசூட்சும காரணமாகிய சரீரத்திரயம் ஜாக்கிர சுவப்பன சுழுத்தியாகிய அவஸ்தாத்திரயம் விஸ்வதைஜத பிராக்ஞனாகிய அபிமானத்திரயம் ஆகிய இவைகள் அவஸ்தாத்திரயமாகிய ஜாக்கிர ஸ்வப்பன சுழுத்தி என்பவைகளுக்குப் பொருள். ஜாக்கிரம் அஸ்திரமில்லாமல் ஸ்திரமாய் பூர்வாபூர்வ நிச்சயத்துடனேயும் முன்பின் ஆலோசனையுடனேயும் பதினான்கு இந்திரியத்துடனேயும் கூடியிருக்கின்றமையால் ஜாக்கிரம். சுவப்பனமாவது ஜாக்கிரத்தினுடைய வாசனாத்திரயமாய் அந்தக்கரண விஷயாகாரமாய் பரிணமித்து ஸ்திரமில்லாமல் அஸ்திரமாய் பூர்வாபூர்வ நிச்சயமின்றி எதுவரையிலும் வியவகாரம் பண்ணுகிறதோ அதுவே சுவப்பனம். சுழுத்தி:— சுழுத்தியாவது ஸ்திரம் அஸ்திரமாகிய இரண்டுமில்லாதிருப்பதும் ஈருரையும்சூனியமாயிருப்பதுவும் சுழுத்தி.

அபிமானத்திரயமாகிய விஸ்வதைசத பிராக்ஞன் என்பவைகளுக்குப் பொருள்:— விஸ்வனாவது தேகாதிப் பிரபஞ்சனை அபிமானிக்கின்றமையால் விஸ்வன். தைசதன்:— தைசதனாவது அந்த அவஸ்தைக்கு அபிமானியாயும் தேசோமயனாயு மிருக்கின்றமையால் தைச

தன். பிராக்ஞனுவது மிக்கவறிவுள்ளவன். தற்பதவாச்சியார்த்தமாவது விராட் இரண்யகர்ப்பம் அவ்வியாகிருதம் என்பவைகளுக்குப் பொருள். விராட்டென்பது விரிந்திருக்கின்றது. இரண்யகர்ப்பம் பொன்போல பிரகாசிக்கின்றது. அவ்வியாகிருதமென்பது வித்தினிடத்தில் விருக்ஷமடங்கியிருப்பதுபோல அடங்கியிருப்பது. தத்பதவாச்சியார்த்தத்தில் அபிமானத்திரயமாகிய வைஸ்வானரன், சூத்திராத்துமா, அந்தரியாமி என்பவைகளுக்குப் பொருள்.

வைஸ்வானரன்:—வைஸ்வானரன் என்பது நரசம்பந்தமுள்ளவன்

சூத்திராத்துமா:— சூத்ராத்துமாவென்பது சகல சரீரங்களிலும் நூலில்மணிகோத்ததுபோலிருக்கிறவன்.

அந்தரியாமி:— அந்தரியாமியாவது அவரவர்கள் நல்வினை தீவினை மிசிரவினைக்கீடாக அவரவர்கள் இருதயத்தின்கண் மறைந்திருந்து அசைவிக்கின்றமையால் அந்தர்யாமி.

அசிபதவாச்சியார்த்தம்:— அசிபதவாச்சியார்த்தமாவது சத்ரூபசத்தி, சித்ரூபசத்தி, ஆனந்தரூபசத்தி, சரீரத்திரயம், சர்வவியாபகம், சர்வப்பிரகாசம், சர்வானந்தம், அவஸ்தாத்திரயம், பரிபூர்ணன், தேஜோமயன், பரமானந்தன், அபிமானத்திரயம் மும்மூன்றென்பதும் அசிபதவாச்சியார்த்தம்; மூவொன்ப திருபத்தேழினுடைய அன்வயவியதிரேகங்களை அறிந்துகொண்டிருப்பதே சர்வசாக்ஷி. அன்வயம், உற்பத்தி, வியதிரேகம், லயம், சர்வசாக்ஷியினிடத்தில் அக்கினியிற் சூடுபோல அபின்னமாக ஒருசத்தியுண்டு. அக்கினியினது உஷ்ணசக்தி அக்கினி தானல்லாமலும் அக்கினிக்கு அன்னியமல்லாமலும் அக்கினியினது உஷ்ணசத்தி மணிமந்திர ஔஷதங்களால் பிரித்து வேறுகாணக் கூடாததுபோல் பிரமத்தினிடத்தில் ஏகமாயிருக்கின்ற ஒருசத்தியுண்டு. இந்தச்சத்தி அதீதப்பிரமத்தினிடத்தில் அடங்கியிருக்கும்போது அதீதப்பிரமம். மனம்வாக்குக் காயங்களால் அறியப்படாதது அதீதப்பிரமம். அதற்குச் சுத்தப்பிரமம் என்றுபெயர். இந்தச்சத்தி விசிரும்பித்து சுத்தப்பிரமத்தை வியாபிக்கும்போது அக்கினியினிடத்தில் உண்டானதூமம் அக்கினியை மூடிக்கொண்டதுபோல அப்பிரமம் பரைவியாபகத்துக்குள்ளிருந்தபடியால், அதற்குப் பிரமம் என்றுபெயர். (பரை=மேலான) புருஷசன்னிதானத்தில் ஸ்திரீக்கு இன்பஞ்செனித்தாற்போல அதிரூப யௌவன கற்புடைய நாயகியினது நாயகன் தூரதேசத்திற்குப்போய் இருந்தவன் அவள் எண்ணத்திற் குறியாதிருக்க முன்வந்தமாத்திரத்தில் அந்தநாயகனது சந்நிதானத்தில் அந்நாயகிக்கு முகமலர்ச்சி, இன்பம், சரீரம்பூரித்தல், மயிர்க்குச்சு முதலானவையாகிய பிரமசன்னிதானத்தில் இலக்ஷணசூனியமாயிருக்கின்ற அந்தச்சத்தியினிடத்திலே அவிகிருதசத்வ, ரஜஸ், தமோகுணங்க ளுண்டாயின. எங்குமாயுள்ள பிரமசன்னிதானத்தில் (லக்ஷணசூனியம்=வடிவமில்லாதிருக்கின்றது.) அவிகிருத=வேறுபடாத அதந் சுத்தசத்துவத்திற்கு ஆனந்தரூப சத்தியென்று பெயர். சுத்தரஜஸுக்கு சித்ரூபசத்தியென்று பெயர். ஆனந்தமே வடிவமாயிருக்கின்றமையால் ஆனந்தரூப சத்தியென்றபெயர். சுத்தரஜஸுக்கு பிரகாசமே வடிவமாயிருக்கின்றமையால் சித்ரூபசத்தியென்று பெயர். சுத்ததமசுக்கு திரிகாலத்திலும் ஒருபடித்தா யிருக்கின்றமையால் சத்ரூபசத்தியென்றுபெயர். அப்பரப்பிரமம் காரணமான ஆனந்தரூப சத்தியுடனேகூடி அதாவது இரண்டுசத்திக்குக் காரணமாயிருக்கின்ற ஆனந்தரூபசத்தியையடையும்போது அவருக்குப் பரமானந்தனென்னும் பெயர்போய்த் தேஜோமயனென்னும் பெயராம்.

சர்வப்பிரகாசம்:—சர்வப்பிரகாசமாவது சகலப்பிரகாசத்திற்கும் தான் காரணமாயும் தனக்கு ஒரு பிரகாசமும் காரணமல்லாததுவே சர்வப்பிரகாசம். அத்தேசோமயன் சத்ரூபசத்தியுடனேகூடி சர்வவியாபகமென்னும் சாக்கிராவஸ்தையை யடையும்போது அவருக்குத் தேசோமயனென்னும் பெயர்போய்ப் பரிபூரணனென்னும் பெயராம். தேஜோமயம்பிரகாசமே வடிவம். சத்ரூபசத்தி பிருதுவிதத்துவமுதல் பிரகிருதிதத்துவமீறாக எல்லா தத்துவத்திலும் வியாபித்து என்றுமுள்ளது. ஜாக்கிரவஸ்தை சமட்டி ஜீவரது ஜாக்கிராவஸ்தை பூர்ணம். பூர்ணமானது நந்திரமன்னியில் நிரந்தரமாயிருப்பதுவே பூர்ணம். இந்த அகண்ட பரிபூரண சச்சிதானந்த பிரமத்தினிடத்திலே அகண்டம் கண்டிக்கப்படாதது, அதாவது ஒன்றினாலும் கண்டிக்கப்படாததுவே யகண்டம். அஃதெவ்விதமென்றால் சார்வாகன் பௌத்தன் முதலிய மதங்கள் கன்மகாண்டத்தால் கண்டிக்கப்படும் கன்மகாண்டம் பக்திகாண்டத்தால் கண்டிக்கப்படும், பக்திகாண்டம் ஞானகாண்டத்தால் கண்டிக்கப்படும்,ஞானகாண்டத்தைக் கண்டிப்பதற்கு உபநிடதத்திற்கு மேற்பட்ட பிரமாண மில்லாததினால் ஞானகாண்டத்தினால் பிரதிபாதிக்காகின்றபிரமமே அகண்டம். பூர்ணமாவது தேசகாலவஸ்து பரிச்சேதமாயிருக்கின்றதுவே பூர்ணம். அஃதெவ்விதமெனில், தேசமாவது சேரதேசத்தில் பாண்டியதேசமில்லாதிருத்தல் போலும், பாண்டியதேசத்தில் சோளதேசமில்லாதிருத்



தல் போலும், பாண்டியதேசத்தில் சோளதேச மில்லாதிருத்தல் போலும், சோளதேசத்தில் சேரதேச மில்லாததுபோலு மில்லாமல் எல்லாதேசத்திலும்; காலமாவது சிருஷ்டி காலத்தில் பிரளயகால மில்லாதது போலும், பிரளயகாலத்தில் சிருஷ்டிகால மில்லாதது போலு மில்லாமல் சிருஷ்டிக்கு முன்னும், சிருஷ்டி காலத்திலும், பிரளயகாலத்திற்குப் பின்னும் திரிகாலத்திலும்; வஸ்துவாவது கடத்தில் படமில்லாதது போலும், படத்தில்கடமில்லாமலு மில்லாமல் எல்லாவஸ்துவிலும் எல்லாதேசத்திலும் எல்லாக்காலத்திலும் நந்திர மன்னியில் நிரந்தரமா யிருப்பதுவே பூர்ணம். சத்தென்பது பழுதையினிடத்தில் சர்ப்பபிதி தோற்றுமுன்னும் தோற்றியகாலத்தும் பிதிநீங்கிய காலத்தும் ஒருபடித்தாயுள்ள பழுதையைப்போல சிருஷ்டிக்கு முன்னும் சிருஷ்டிகாலத்திலும், பிரளயத்திற்குப் பின்னும் பிரளயகாலத்திலும், திரிகாலத்திலும், ஒருபடித்தா யிருக்கின்றதுவே சத்து. சித்தென்பது சூரியன், தீபாதி சாதனங்களை அபேக்ஷியாது தன்னைக் கிட்டிய உழவு, தொழுவு, வரவு, வாணிபம், வித்தை, சில்பம், இந்த அறுவகைத்தொழிலையும் தானுஞ் செய்யாது தனதேவலாலுஞ் செய்விக்காது தனது சன்னிதானத்தில் நடக்கின்றதுபோல, தானுந் சுயம்பிரகாசமா யிருந்துகொண்டு சூர்யாதி அஷ்டப்பிரகாசங்களையும் அபேக்ஷியாது அவஸ்தாத்திரயப் பிரபஞ்சத்தை விளக்கிவைக்கின்றமையால் சித்து. மின்னல் முதலிய அஷ்டப் பிரகாசங்களுக்கும் பிரகாசத்தைக்கொடுத்து தான் ஒரு பிரகாசத்தையும் அவலம்பியாது சுவயமே பிரகாசிக்கின்றது சித்து. அஷ்டப்பிரகாசமாவது மின்னல், நக்ஷத்திரம், சந்திரன், சூரியன், அக்கினியாகிய பிரகாசங்கள் ஐந்தும் சட்சு, மனஸ், ஜீவன் ஆகிய அந்தர்ப்பிரகாசங்கள் மூன்றும் அஷ்டப் பிரகாசங்களாம். ஆனந்தம்:—தேவாமிர்த மானது தானுஞ் சுகசொரூபியாயிருந்து தன்னைப்போஷித்து அனுபவித்த பேர்களுக்கும் நரை திரை மூப்பு பிணிகளையும் நீக்கிக் கற்பாயுள் பரியந்தம் சுகத்தைச் செய்விக்கின்றதுபோல தானுஞ் சுகசொரூபியாயும் நிரதிசயானந்தமாயு மிருந்துகொண்டு தன்னை அடுத்த விருத்திக்குச் சுகத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பதுவே ஆனந்தம்.

சிருக்குச் சந்தன வனிதாதி பஞ்சவிஷய போகங்களைக் கைவிட்டாலும் தன்னைக் கைவிடப்படாத அதிகப் பிரியமுள்ள வஸ்துவே ஆனந்தம். சிருக்கு சுகந்த புஷ்பங்களாகிய மாலைகள் சந்தனம் களபகஸ்தூரியோடு கூடிய சந்தனம் வனிதாதி ஸ்திரீ புத்ர தனதான்னிய நசவர்க்க கீதநாட்டிய முதலிய பஞ்சவிஷய போகங்களைக் கைவிட்டாலும் தன்னைக் கைவிடப்படாத அதிப்பிரிய வஸ்துவே ஆனந்தம். பிரமம் சுத்தியிலிரசதந் தோன்றினாற்போல மூலப்பிரகிருதியென்றொரு சத்தி உண்டாயிற்று. திரிகாலத்திலு முள்ளதாயிருக்கின்ற பிரமத்தினிடத்தில் திரிகாலத்திலு மில்லாததா யிருக்கின்ற மூலப்பிரகிருதியென்று மொருசத்தி யுண்டாயிற்று. மூலப்பிரகிருதியாவது பிரபஞ்சத்திற்குக்காரணமாயும் உற்பத்தி ஸ்தானமாயும் ஒன்பதுவித லக்ஷணங்களினாலும் நிர்ணயிக்கப்படாத அனிர்வசனீயமா யிருக்கின்றதுவே மூலப்பிரகிருதி. ஒன்பதுவித லக்ஷணமாவது:—முதலாவது இச்சத்தியை சத்தென்று சொல்லுவோமானல் ஒன்றினாலும் வாதிக்கப்படாமல் திரிகாலத்திலும் ஏகமாயிருக்கவேண்டும். அப்படிக் கில்லாமல் தத்துவஞானத்தால் கெட்டுப்போகின்றபடியால் இச்சத்தியை சத்தென்று சொல்லக்கூடாது. இந்தச் சத்தியை அசத்தென்று சொல்லுவோ மானல் ஆகாயத்தாமரை, முயற்கொம்பு, மலடிமகன் முதலானதுகள் போல திரிகாலத்திலு மில்லாததாக வேண்டும். அப்படிக்கில்லாமல் ஜீவ ஈஸ்வரஜகத்தாகித்தோற்றிக்கொண்டிருக்கிறபடியால் இச்சத்தியை அசத்தென்றுஞ் சொல்லக்கூடாது. மூன்றாவது, இச்சத்தியை சதசத்தென்று சொல்லுவோமானல் இருட்டாதித்தன் என்பதுபோல ஒரு வஸ்துவிற்கு இரண்டுலக்ஷணஞ் சொல்லக்கூடாதாகையால் இச்சத்தியை சதசத்தென்று சொல்லக்கூடாது. நான்காவது இச்சத்தியை சாவயவமென்று சொல்லுவோமானல் இனி ஒரு சிருட்டிக்கு வித்தாக மாட்டாது, இனி ஒரு சிருட்டிக்கு வித்தாயிருக்கின்றபடியால் இச்சத்தியை சாவயவமென்றுஞ் சொல்லக்கூடாது. சாவயவம்=அவயவத்தோடு கூடியது. ஐந்தாவது, இச்சத்தியை நிரவயவம் என்று சொல்லுவோமானல் ஆகாசம்போல் சூனியமாயிருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் நாமரூபப் பிரபஞ்சமாகத் தோற்றிக்கொண்டிருக்கிறபடியால் இச்சத்தியை நிர் அவயவமென்றுஞ் சொல்லக்கூடாது. ஆறாவது இச்சத்தியை சாவயவ நிர் அவயவமென்று சொல்லுவோ மானல் வேளாளதீக்ஷிதன் என்பதுபோல ஒரு வஸ்துவிற்கு இரண்டுலக்ஷணஞ் சொல்லக்கூடாது. இச்சத்தியை சாவயவ நிர் அவயவமென்றுஞ்சொல்லக்கூடாது. ஏழாவது, இச்சத்தியை அபின்னமென்று சொல்லுவோமானல் பிரமத்தினிடத்தில் ஏகமாயிருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் தேகாதிப் பிரபஞ்சமாய்த் தோற்றிக்கொண்டிருக்கிறபடியால் இச்சத்தியை அபின்னமென்றுஞ் சொல்லக்கூடாது. எட்டாவது, இச்சத்தியை பின்னமென்று சொல்லுவோமானல் வேதாந்தசாஸ்திரத்தில் இரண்டு சத்து. இச்சத்தியை பின்னமென்றுஞ் சொல்லக்கூடாது. ஒன்பதாவது, இந்தச்சத்தியை பின்னுபின்னமென்றுசொல்லுவோமானல் புருஷஸ்திரீ யென்

பதுபோல ஒரு வஸ்துவிற்கு இரண்டுலக்ஷணஞ் சொல்லக்கூடாதாகையால் இச்சத்தியை பின்னுபின்னமென்றுஞ் சொல்லக்கூடாது. இப்படி ஒன்பதுவித லக்ஷணங்களாலும் நிர்ணயிக்கப் படாததினுல் அநிர்வசனியமென்று சொல்லப்பட்டது. அந்த மூலப்பிரகிருதியும் விகிருதசத்துவ ரஜசு தமசு என்னும் முக்குணங்களும் வெள்ளைநூல் சிவப்புநூல் முறுக்கிய மூன்று கயிறுபோல கூடியிருக்கும். அந்தப் பிரகிருதியின் சத்துவகுணத்திற்கு மாயையென்றும் சர்வக்ஞ உபாதிஎன்றும் ஈஸ்வரகாரண சரீரமென்றும் பெயர். அந்தப் பிரகிருதியின் சத்துவகுணத்திற்கு மாயையென்றும் பெயர். சர்வக்ஞ உபாதியென்றும், ஈஸ்வரகாரண சரீரமென்றும் பெயர். படிகக் கல்போலொத்த சத்துவகுணம் மாயை பிரபஞ்சத்திற்குக் காரணமாயும் மித்தையே சொரூபமாயுமிருப்பது. சர்வக்ஞ உபாதி,சர்வக்ஞத்துவாதி கல்யாணகுணங்களுக்கு உபாதியாயிருப்பது. ஈஸ்வரகாரண சரீரம்:— ஈஸ்வரகாரண சரீரமாவது ஈஸ்வரன் பிரதிபிம்பிக்கிறதற்குக் காரணமா யிருக்கின்றமையால் ஈஸ்வரகாரண சரீரமென்று பெயர். அந்த மாயையினிடத்தில் நிர்மல ஜலப் பிரதிபிம்பம்போலப் பிரமம் சலக்ஷணமாகப் பிரதிபிம்பிக்கும். தெளிந்த ஜலத்தில் பிரதிபிம்பிக்காநின்ற சூரியப் பிரதிபிம்பம்போல் பிரமம் தன்னுடைய சுயலக்ஷணமாகிய சச்சிதானந்த லக்ஷணம்மறைபடாது ஸ்பஷ்டமாய்ப் பிரதிபிம்பிக்கும், அந்தச் சைதன்னியப் பிரதிபிம்பத்திற்குச் சர்வக்ஞனுகிய ஈஸ்வரனென்று பெயர். சர்வக்ஞத்துவாதி கல்யாணகுணங்களையுடைய ஈஸ்வரனென்று பெயர். சர்வக்ஞத்துவாதி குணங்களாவன:-சர்வக்ஞத்துவம் சர்வேஸ்வரத்துவம் சர்வாந்தரியாமித்துவம், சர்வ நியந்தரத்துவம் சர்வகாரணத்துவம் சர்வ சக்தித்துவம் ஆக ஆறு சர்வக்ஞத்துவம். சர்வக்ஞத்துவமாவது:–– சிருட்டிதொடங்கி விடையுமளவும் சர்வஜீவர்களது கர்மங்களை ஏககாலத்தில் ஒருங்குணர்ந்திருத்தலே சர்வக்ஞத்துவம். சர்வேஸ்வரத்துவம் சராசராத்துமமாகிய சகலப் பிரபஞ்சங்களைத் தான் உண்டுபண்ணியும் தன்னுல் உண்டுபண்ணப்பட்ட பிரபஞ்சங்களை மற்றொருவரால் மாற்றக்கூடாமையும் தன்னை உண்டுபண்ண ஒருவருமில்லாததுவே சர்வேஸ்வரத்துவம். சர்வாந்தரியாமித்துவமாவது:- பாவையை ஆட்டுகின்ற சூத்திரதாரிபோல் சகல ஜீவர்களது இருதயத்திலிருந்து அவரவர்கள் கன்மப்படி விதி நிஷேதவழியில் ஆட்டிவைப்பதுவே சர்வாந்தரியாமித்துவம். சர்வநியந்தரத்துவமாவது:- தன்னுல் உண்டுபண்ணப்பட்ட பிரபஞ்சங்களைத்தான் நியமித்த நியமப்படி நடத்திவைப்பதுவே சர்வ நியந்தரத்துவம். சர்வ காரணத்துவமாவது சகல காரணத்திற்குந்தான் காரணமாயும் தனக்கு யாதொருகாரணமு மில்லாதிருப்பதுவே சர்வகாரணத்துவம். சகல சத்தித்துவமாவது சகல சத்திகளும் தனது சத்தியாயிருக்கின்றதுவே சர்வ சத்தித்துவம். இந்தச் சத்துவகுண மாயையினிடத்தில் சத்துவத்தில சத்துவம் சத்துவத்தில் ரஜசு சத்துவத்தில் தமசுஎன்னும் மூன்றுகுணங்களுண்டாயின. சத்துவத்தில் சத்துவம் பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த ஈஸ்வரனுக்கு சகத்தை ரக்ஷிக்கையினுலேவிஷ்ணுவென்று சொல்லப்படும். சத்துவத்தில் ராஜஸம் தாமசம் இவ்விரண்டுமடங்கி சாத்துவிகம் மேலிடும்போது அதில் பிரதிபிம்பித்த ஈஸ்வரனுக்கு ஜகத்தை ரக்ஷிக்கையினுலே விஷ்ணுவென்றுசொல்லப்படும். இந்த ஸ்திதி ஹிதஸ்திதி அஹிதஸ்திதி என்று இரண்டு வகைப்படும். ஹிதஸ்திதியாவது விதியாயுள்ள சுகவஸ்துக்களை சுகமாய் ஊட்டிவைப்பது. அஹிதஸ்திதியாவது விலக்காயுள்ள துக்கவஸ்துக்களை சுகமாய் ஊட்டிவைப்பது. இப்படி ஹிதஸ்திதியாக ரக்ஷிக்கிறவருக்கு விஷ்ணுவென்றுபெயர். சத்துவத்தில் ரஜசு பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த ஈஸ்வரனுக்கு சகத்தை சிருட்டிக்கையினுலே பிரமாவென்று பெயர். சத்துவத்தில் சாத்துவிகம் தாமசம் இவ்விரண்டுமடங்கி ராஜசம் மேலிடும்போது அதில் பிரதிபிம்பித்த ஈஸ்வரன் ஜகத்தை சிருட்டிக்கையினுலே பிரமாவென்று பெயராம். மூவகைஜாதியாவது, உத்தமம், மத்திமம், அதமம்என மூன்று. நால்வகையோனியாவது சராயுஜம், அண்டஜம், சுவேதஜம், உத்பிஜம் என நான்கு. இவற்றில் சராயுஜமாவது பையிலிருந்து கட்டப்பட்டு ஜனிக்கின்றமனிதர் ஆடு மாடு மிருகங்கள் முதலியவைகளாம். அண்டஜமாவது முட்டையிலிருந்து ஜனிக்கப்பட்ட மயில் குயில் கோழி ஆமை சர்ப்பம் முதலியவைகளாம். உத்பிஜமாவது விதையிலிருந்து முளைக்கப்பட்ட மரம்செடி கொடி முதலியவைகளாம். சுவேதஜமாவது புழுக்கம் வேர்வைகளினின்று உண்டாகும் கொசு,புழு, ஈமுதலியவைகள் சுவேதஜமென்று சொல்லப்படும். எழுவகைத் தோற்றங்களாவன: ஊர்வன, நடப்பன, பறப்பன, நீர்வாழ்வன, மரம், கோடி, செடி என ஏழாம். எண்பத்துநான்குலக்ஷம் சிவராசி பேதங்களாவன:–– தேவர் பதினுன்குலக்ஷம்,மனிதர் ஒன்பதுலக்ஷம்,புள்பத்துலக்ஷம், மிருகம் பத்துலட்சம், ஊர்வன பதினொருலட்சம், நீர்வாழ்வன பத்துலட்சம், தாவரமாகிய மரஞ்செடி கொடி இருபதுலட்சம் என (அச) எண்பத்துநாலு லட்சங்களாம். சத்துவத்தில் தமசு பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த ஈஸ்வரன் ஜகத்தை சம்ஹாரம் செய்கின்றபடியினுலே ருத்திரன் என்று சொல்லப்படும்.

(இன்னும்வரும்.)



## அன்பு.

(முன்தொடர்ச்சி.)

அடைதற்கருமையான இறைச்சிகளைத் தீயில் வாட்டி வாயில் மென்றுவிழுங்காது வேறிடத்து உமிழ்கின்றுன். மிக்க பசியுடையவனு யிருந்தாலும் அதைக் குறித்து எம்மோ டொன்றும் சொல்லா திருக்கின்றுன். நமக்கும் அவ்விறைச்சி யுணவைப்பகுந்து கொடுக்குந் தன்மையையும் அறியாதிருக்கின்றுன். மிகுந்த இறைச்சியைப் புறத்தில் எறிகின்றுன். இந்தத் திண்ணன் தெய்வமருளடைந்தான். இதை நீக்கும் உபாயம் நாமறியோம். ஆகையின் தேவராட்டியை நாகனேடு அழைத்துக்கொண்டுவந்து இம்மருளைத் தீர்க்கவேண்டும். அவ் வேட்டைக் காட்டில் இருக்கும் ஏவலாளர்களையும் அழைத்துக்கொண்டு தந் தேசமாகிய உடுப்பூருக்குச் செல்வோமென்று ஒருவரோடொருவர் தம்முள்பேசிக் கொண்டுபோய் விட்டார்கள். தம்முயிர்த் தோழராகிய காடன், நாணன் என்னும் இரு வேடர்களும் தம்மை விட்டு நீங்கிய செய்கையைத் திண்ணனுர் அறியாதவராய் தொன்னையினிடத்து இறைச்சியாகிய திருவமுதை வைத்துக்கொண்டு, திருமஞ்சன மாட்டும்படி நினைந்து மிக்க சிறப்பினைவாய்ந்த பொன்முகலி யாற்றின் நல்ல நீரை பரிசுத்தமாகிய திருவாயில் திருமஞ்சனமாக அமைத்துக் கொண்டு, சாத்தும் பொருட்டுப் பறித்த திருப்பள்ளித் தாமத்தை (புஷ்பத்தை) குடுமியின்மேல் நெருங்கும்படி செருகிக்கொண்டார். ஒரு திருக்கரத்தில் விஷத்தைக் கக்காநின்ற கொலைத்தொழிலைச் செய்யும் அம்பினேடு வில்லைப் பிடித்துக்கொண்டு மற்றொருகரத்தில் தொன்னையின்கண் வைத்திருக்கும் பரிசுத்தமான மெல்லிய இறைச்சியாகிய நல்ல திருவமுதை யேந்திக் கொண்டு இனியவராகிய எமது முதல்வர் மிக்கபசியால் வருந்துவர் என இரக்கமுற்று திகைப்படைந்து வாயுவேகம், மனோவேகம் என விரைவாயோடிக் காளத்திநாதரது திருமலையைத் திண்ணனுர் அடைந்து, அத்திருமலையில் உதித்தெழுந்த குடுமித்தேவரைத் தரிசித்து, அவர் திருமுடியின் மீது முன் சாத்தப்பட்ட மலரைத் தன் திருவடியிலுள்ள அழகிய செருப்பினுற் போக்கி, தன் திருவாயில் கொண்டுபோன திருமஞ்சன நீரைத் தன்னுள்ளத் ததித்த அன்பை யுமிழ்கின்றவரைப்போல காளத்தியார் திருமுடிமேல் அபிஷேகமாகப்பெய்து, தன் திருமுடியின்மேல் செருகிவைத்திருந்த பூங்கொத்தை அக்காளத்தி நாதரது திருமுடியின்மீது தொழுது சாத்தி, தொன்னையில் வைத்திருந்த இறைச்சியாகிய திருவமுதைச் சுவாமியின் திருமுன்னே வைத்து சுவாமி! கொழுமையாகிய இறைச்சிகளையெல்லாம் அம்பினுல் ஆராய்ந்தெடுத்து அதிற்கோத்து தீயில் மிக்க பதத்தோடு காய்ச்சி, அவைகளைப் பல்லினுலே மென்று இதற்கு முன் எனக்கிருந்த பழக்கவாசனையினுலே சுவைபார்த்து வைக்கப்பட்ட இம்மாமிசமானது மிகவும் நன்றுயிருந்தது. ஆகையினுல் நாயனுரே! நீரே திருவமுது செய்தருள வேண்டுமென்னும் இவ்வாறுன இதமொழிகளைக் கூறி காளத்திநாதரைத் திருவமுது செய்வித்தார். சூரியனும் அஸ்தமித்தான். அன்றிரவெல்லாம் தன் கையில் வில்லை யேந்திக்கொண்டு காட்டுமிருகங்களினுல் குடுமித்தேவருக்கு தீங்கு நேரிடுமென்றெண்ணி மலையையும் வனத்தையு மடைந்து செயற்கரிய தவத்தைச்செய்தும் அறியக்கூடாத சிவபிரானை அடங்காத அன்பு காரணமாகத் தரிசித்துக்கொண்டு அவர் பக்கலில் மலவிருள் நீங்கும்படி நின்றுகொண்டிருந்தான். பிறகு இருள்விடிய அந்நேரத்தை யுணர்ந்த பறவைகளின் சத்தத்தைக்கேட்டு கரிய கடலைப்போலத் தூங்காது நின்றுகொண்டிருந்த திண்ணனுர் சிவபெருமானுக்கு திருவமுது சம்பாதிக்க நினைத்து பன்றிகள், கருமான் கூட்டங்கள், புள்ளிமான்கள், மற்றும் வேறு வேறு மிருகங்களையும் தான் வேட்டையாடுஞ் சாமர்த்தியத்தினுலே அவைகளைக் கொல்லுங்கால மறிந்து ஒருவர் முகம் ஒருவருக்கு மிகவுந் தெரியாதபோது வில்லையெடுத்துக்கொண்டு காளத்தியாரை வணங்கி வேட்டையாடப்போனுர். இது சமயம் நீலகண்டத்தையுடைய காளத்திநாதரைத் தினந்தோறும் வழிபாடு செய்து வரும் தவசிரேஷ்டராகிய சிவகோசரியார் என்னும் அந்தணர் சைவாகமங்களில் விதித்த வண்ணம் பூசைக்குத் தகுந்த புஷ்பங்களும் திருமஞ்சனமும் முதலிய உபகரணங்களை எடுத்துக்கொண்டு திருக்காளத்தி மலையின்மீதுள்ள சிவபிரானுக்கு எதிரேவந்தபோது அவர் முன்னே இருந்த இறைச்சியையும் எலும்பையும் கண்டு மிக்க பரிதாபத்தோடு இப்படிப்பட்ட அநுசிதமாகிய கெட்ட செய்கையை மனதில் கொஞ்சமேனும் அச்சமில்லாத வேடர்களே செய்திருப்பார். தேவர்களுக்கு தேவராயிருக்கின்ற மகா தேவா! உமது திருமுன்பு இவ்வாறு செய்து போகலாமா, இவ்வாறு செய்யும்படி திருவுள்ளஞ் செய்யலாமா எனத் திருமேனி பதறி கண்ணீர்விட்டழுது நிலத்தில் விழுந்தெழுந்து திருவலகினுலே இவ்வநுசிதங்களையும், திண்ணனுர் காலடியையும், நாயடியையும் போக்கி மறுபடியும் பொன் முகலியாற்றில் நீராடி விரைவாகவந்து பிராயச்சித்தம் செய்து பரிசுத்தமாகிய பூசையினைத் தொடங்கி திருமஞ்சனமாட்டி சந்தனஞ் சாத்தல், புஷ்பஞ்சாத்தல், தூபங் கொடுத்தல், தீபங்கொடுத்தல், நிவேதித்தல் என்னும்

ஐந்துபசாரங்களைச்செய்து வேதமந்திரங்களால் தோத்திரஞ் செய்து காளத்தி நாதரிடத்து விடைபெற்றுக் கொண்டு சிவகோசரியார் தபோவனத்தை யடைந்தார்.

(இன்னும்வரும்)

## NEWS AND NOTES.

திருநெல்வேலிஜில்லாவில் குற்றாலம் என்ற க்ஷேத்திரமுளது. அவ்விடம் வெகு குளிர்ச்சியானபடியால் நமது இராஜதானியிலுள்ள இங்கிலீஷ்காரர் கோடைகாலத்தைக்கழிக்க அவ்விடஞ் செல்கிறார்கள். அந்த க்ஷேத்திரத்துக் கோவிலுக்குப் பக்கத்தில் மலைமேலிருந்து அருவி ஓடிவருகிறபடியாலும் அந்நீரில் ஸ்நானமாடுமிடத்து செய்த பாவங்கள் தீருமென்று ஹிந்துக்களுள் பலர் நம்பி அவ்விடம்போய் வருகின்றனர். இப்போது காட்டிலாகா அதிகாரிகள் நீர்விழுமிடங்களையும் அதன் சுற்றுப்பக்கங்களையும் ரிசர்வ் காடுகளாகச் சேர்த்துக் கொண்டனராம். அக்கோயில் தர்மகர்த்தர்கள் அவ்வதிகாரிகள்மேல் தாவா செய்திருப்பதாகவும் தெரியவருகிறது.

* * *

ஓர் பட்டணத்தில் விசேஷ பூஸ்திதிவந்தனை ஒருவன் சூதாட்டத்தில் தனக்கிருந்த திரவியங்களையெல்லாம் போக்கடித்துக்கொண்டு பிறகு தன் பெண் ஜாதியை பந்தயம்வைக்க இசைந்தானும். இதன்பேரில் மற்றொருவன் அனேகபவுன் அப் பெண்மணிக்குப் பந்தயம்வைத்து கடைசியாக ஜெயித்துவிட்டான். பிறகு பெண்டிழந்த படுபாவி தன் தலையை பிளந்து கொண்டானும். காரியம் முடிந்தபிறகு இவன்தலையை பிளந்து கொண்டாலென்ன? இவன்தலையில் இடிவிழுந்தாலுமென்ன? இவனுக்கு சூதாட்டத்தில் ருசி தன் பெண்ஜாதியென்றும் சிந்திக்காமலே பந்தயம்வைக்கத் துணிவுகொண்டானல்லவா!

* * *

அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியா சர்வகலாசாலையில் கலைபயிலும் மாணவரில் சிலர் தங்கள் கல்விச் செலவுக்காக ரஜாக்காலங்களில் கடற்கரையோரமாயுள்ள ஓட்டல்களில் ஏவலாட்களாயும் எலெக்டிரிக் டிராம்வேக்களில் கண்டக்டர்களாயும் வேலைசெய்து சம்பாதிக்கின்றனராம். கல்வியின்மீதுள்ள நாட்டத்திற்கு நாணமொன்று மில்லையல்லவா;

சிம்லாவில் ஜலசௌகரியத்தை யுத்தேசித்து சட்லேஜ் என்னும் நதியில் ஜலம் உபயோகப் படுத்திக் கொள்ளலாமென்று பஞ்சாப் கவர்ன்மெண்டார் ஆலோசனைக்கு தெரிவித்துக்கொண் டிருக்கிறார்கள்.

சென்னை காலநிலை:— இரண்டுநாளாய் சூரியபகவானுடைய தரிசனம்காண்கிறது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. வருணபகவானுடைய கருணை அதிகமாயிருக்கிறது. வருணபகவானுக்குப் பயந்து வழக்கமாய் போக வேண்டிய இரங்கூன் ஸ்டீமர் நேற்றியதினம் (5-11-03.) சென்னையிலிருந்து இரங்கூனுக்குப்போகவில்லை.

* * *

கராச்சியில் இப்போது பிளேக்குநோய் ஓய்ந்திருப்பதால் அந்த ஊரிலிருந்து ஜனங்கள் மாகாணத்திற்கு வரலாமென்று கவர்ன்மெண்டார் உத்திரவு கொடுத்திருக்கிறார்கள்.


இகபரசுகசாதனி சந்தாதாரர்களுக்கு

பெருத்தலாபம்! பெருத்தலாபம்!!

இச்சமயத்தை கைவிடாதிர்கள்

வள்ளலார்சாஸ்திரம்.

இது மேன்மைபெற்ற நூல்களிலொன்று. வேதாந்த சித்தாந்த சமரசமாகிய இந்நூலை, இருபதுசாஸ்திரங்களாக சிவஞானவள்ளலார் எல்லோருக்கும் எளிதில் பொருள்விளங்குமாறு இனிய செய்யுள்களாக திருவாய் மலர்ந்தருளினர். நமது மதத்தின் இரகசியம், உண்மை, பெருமை இவைகளை அறியவேண்டின் இப்புத்தகத்திலுள்ள சத்தியஞானபோதம், பதி பசு பாசவிளக்கம், ஞானவிளக்கம், அத்துவிதக்கலிவெண்பா, அதிரகசியம், கர்னாமிர்தம், சுருதிசாரவிளக்கம் என்னும் அதிகாரங்களைப் படிப்பாராயின் நன்குவிளங்கும். இந்நூலின் கடைசியில் இந்துமதாபிமானிகளுக்கு அடிக்கடி எழும் சங்கைகளை அறுபத்துநான்காகவகுத்து அவைகளுக்குத் தக்க சமாதானம் மேற்கோளுடன் எழுதியிருக்கிறது. இவ்வருமையான புத்தகத்தின்விலை 1—8—0.

இப்புத்தகத்தை இகபரசுகசாதனி சந்தாதாரர்களுக்காகவே ஒவ்வொருவரும் ஒருபுத்தகம் முக்கியமாய் வாசிக்கவேண்டிய நூலானபடியால் பாதிவிலையாகிய 12-அணா என்று நியமிக்கப்பட்டது. வேண்டுவோர்கள் 1903ஆம் டிசம்பர்மீ 31உக்குள் இகபரசுகசாதனி ஆபீசுக்கு எழுதி பெற்றுக்கொள்ளவேண்டியது. மேற்கண்ட தேதிக்குமேல் இவ்விலைக்குக் கொடுக்கப்படமாட்டாது. வி. பி. சார்ஜ் அணா-3 ஆகும்.

இப்படிக்கு,

☞ கொ-லோகநாதமுதலியார்.

"இகபரசுகசாதனி ஆபீஸ்" சென்னை.



ஓம்.

பரப்பிரம்மணேநம:

"ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி."

# இகபரசுகசாதனி.

வாலியம் I. } 1903ஆம் நவம்பர்மீ {புத்தகம் VII.


[stamp] REGISTERED 11 APR 1904 MADRAS.

## மனனமாலை.

இந்திரசா லங்கனவு கானனீ ரெனவுலக
 மெமக்குத் தோன்றச்
சந்ததமுஞ் சிற்பரத்தா லழியாத தற்பரத்தைச்
 சார்ந்து வாழ்க
புந்திமகி ழுறநாளுந் தடையறவா னந்தவெள்ளம்
 பொலிக வென்றே
வந்தருளுங் குருமௌனி மலர்த்தாளை யனுதினமும்
 வழுத்தல் செய்வாம்.

சும்மா விருக்கச் சுகஞ்சுகமென்று சுருதி யெல்லா
மம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டு மறிவின்றியே
பெம்மான் மவுனி மொழியுந் தப்பியென் பேதமையால்
வெம்மாயக்காட்டி லலைந்தே னந்தோவென் விதிவசமே.

நினையு நினைவு நினையன்றி யில்லை நினைத்திடுங்கால், வினையென் றொருமுத னின்னையல்லாது விளைவதுண்டோ, தனையுந் தெளிந் துன்னைச் சார்ந்தோர்க ளுள்ளச் செந்தாமரையா, மனையும் பொன்மன்றமு நின்றாடுஞ் சோதிமணி விளக்கே.

நீர்மையால் நெஞ்சம் வஞ்சித்துப் புகுந்தென்னை
ஈர்மைசெய் தென்னுயிரா யென்னுயி ருண்டான்
சீர்மல்கு சோலைத் தென்காட்கரை யென்னப்பன்
கார்முகில் வண்ணன் றன்கள்வ மறிகிலேன்.

அறிகிலேன் றன்னு ளனைத்துலகும் நிற்க
நெறிமையால் தானு மவற்றுணிற்கும் பிரான்
வெறிகமழ் சோலைத் தென்காட்கரை யென்னப்பன்
சிறிய வென்னு ருயிருண்ட திருவருளே.

திருவருள் செய்பவன் போலவென் னுள்புகுந்
துருவமு மாருயிரு முடனே யுண்டான்
திருவளர் சோலைத் தென்காட்கரை யென்னப்பன்
கருவளர்மேனியென் கண்ணன் கள்வங்கமே.

தானேயாகி நிறைந் தெல்லாவுலகு முயிருந் தானேயாய்த், தானேயா னென்பானாகித் தன்னைத்தானே துதித்தெனக்குத், தேனேபாலே கன்னலே யமுதே திருமா லிருஞ்சோலைக், கோனேயாகி நின்றொழிந்தா னென்னை முற்றுமுயி ருண்டே.

மாயஞ்செய்யே லென்னையுன் றிருமார்பத்து மாலை நங்கை, வாசஞ்செய் பூங்குழலாள் திருவாணை நின்னாணை கண்டாய், நேசஞ்செய் துன்னோடென்னை யுயிர்வேறின் றியொன்றாகவே, கூசஞ்செய் யாதுகொண் டாயென்னைக் கூவிக்கொள்ளாய் வந்தந்தோ.

சரிதையி லேயீசன் சடவடிவாய் நின்றான்
கிரியையிலே மந்திரத்திற் கிட்டி - யருகிருந்தா
னானமிலா யோகத்தி லுள்ளொளியா யேகின்றான்
ஞானமதி னுயி ரான்.

சமயமே பரமென்னுஞ் சமத்த ராய்ச்
சமயசாத் திரங்காட்டுஞ் சழக்கர் காள்
சமயமென்னுஞ் சத்தார்த்த முணர் கிலீர்
சமயமென்பது தன்னை யறிதலே.

பூசை யென்பது பூவொடு பாணியோ
வாசை கோப மகந்தை யகற்றியே
நீச வைம்பொறி நெஞ்சு ணிறுத்தியே
யீச னைத்தம் மிதயத்துட் காண்டலே.

ஒன்றென்று சொல்வதற்கு முறையில்லை நாவில்லை
யன்றிதா மென்பதற்கு மறிவில்லை செயலில்லை
சென்றொ டுங்குமாறில்லை சேரா நிற்பதுமில்லை
நன்றுமிலை தீதுமிலை நானுமிலை நீயுமிலை.

தாயிருந்தும் பிள்ளை தளர்ந்தாற் போலெவ்விடத்து
நீயிருந்து நான்றளர்ந்து நின்றேன் பராபரமே.

காச்சச் சுடர்விடும்பொற் கட்டிபோ னின்மலமாய்ப்
பேச்சற் றவரே பிறவார் பராபரமே.

பற்றொழிந்து சிந்தைப் பதைப்பொழிந்து தானேதா
னற்றிருப்ப தென்றைக் கமைப்பாய் பராபரமே.

உன்னு வெளியா யுறங்காத பேருணர்வா
யென்னுவிக் குள்ளே யிருந்தாய் பராபரமே.

தீதெனவு நன்றெனவுந் தேர்ந்து நான்றேர்ந்தபடி
யேதுமடக்க வொட்டா தென்னே பராபரமே.

நித்திரையும் பாழ்த்த நினைவு மற்றுநிற்பதுவோ
சுத்தவருணிலை நீ சொல்லாய் பராபரமே.

தூங்கிவிழித் தென்னபலன் றூங்காமற் றூங்கிநிற்கும்
பாங்குகண்டாலன்றோபலன்காண்பேன்பைங்கிளியே.

## "ஸர்வம் பிரம்மமயம் ஜகத்"

இவ்வுலகமெல்லாம் பிரம்ம சுவரூபமாகவேயிருக்கிறது. இதையுள்ளபடி உணர்ந்தவர்கள் சர்வப்பிராணிகளையும் பகவத் சுவரூபமாய் நினைத்து ஸதா ஈசுவரனையே தியானஞ்செய்வார்கள். எங்கும் நிறைந்து ஏகமாயிருக்கும் பிரமத்தைச் சிலர் விஷ்ணுவாகவும் சிலர் சிவனாகவும் சிலர் இதரதேவதைகளாகவும் பாவித்து ஸ்தோத்திரஞ் செய்கிறார்கள். கீதையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணன், "நானே சங்கரன், நானே பிரம்மா, நானே விஷ்ணு, நானே சூரியன், நானே வருணன், நானே இராமன், நானே நாரதர், நானே கபிலர், நானே சிம்மம், நானே ஐராவதம், நானே உயர்ந்த இந்திரன் குதிரை, நானே கருடன், நானே ஆதிசேஷன், நானே மகம்மேரு பர்வதம், நானே கங்காநதி, நானே பூஜ்ஜியமான அரசமரம், நானே வாயு, இலட்சுமியும், கீர்த்தியும், வாக்கும், ஸ்மிருதியும் நானே, ஓம் என்னும் பிரணவமும் நானே, ஸாமவேதமும் நானே, காயத்திரியும் நானே, சகலப்பிராணிகளையும் சம்ஹாரஞ்செய்யும் யமனும் நானே, சிருஷ்டிக்கப்படும் பதார்த்தங்களின் ஆதிமத்தியாந்தமும் நானே." என்று கூறியிருக்கிறார். திரிமூர்த்திகள் முதல் பிருதிவி வரைக்குமுள்ள சித்துராசிகளிலும் சடராசிகளிலும் முக்கியமான ஒவ்வொன்றையெடுத்து அதை நான்தான் நான்தான் என்று பகவான் கூறினதால், அண்டபிண்டங்களிலுள்ள சகலமும் பகவானேயென்று ஏற்படவில்லையா? நான் பிரம்மா, நான் விஷ்ணு, நான் சங்கரன் என்று கூறிய அவர்யார்? திரிமூர்த்திகளைக் காட்டிலும் அவர் மேம்பட்டவராயல்லவோ யிருக்கவேண்டும். திரிமூர்த்திகளைக் காட்டிலும் மேற்பட்டது பிரம்மமன்றோ? ஆதலால் எல்லாவற்றையும் நான் நான் என்று கூறிய ஸ்ரீகிருஷ்ணபகவான் பிரம்மமன்றோ? இதனால் எல்லாவற்றிலும் நிறைந்திருப்பது பிரம்மம் என்று ஏற்படவில்லையா? இந்தக்காரணத்தால் எந்தமூர்த்தியை யானாலும் அல்லது எந்த தேவதையையானாலும் பூஜித்தால் பரப்பிரமத்தைப் பூஜித்ததாகுமன்றோ? அப்படியே எந்தமூர்த்தியை அல்லது எந்ததேவதையை நிந்தித்தாலும் எங்கும் பரிபூரணமான பரப்பிரம்மத்தை நிந்தித்ததாகுமல்லவா? ஆரிய அன்பர்களே! நமது இந்துமதவேதத்திலும், உபநிஷத்திலும், மகரிஷிகளின் வாக்கியங்களிலும், புராணங்களிலும் நம்பிக்கையுள்ளவர்கள் கீதையில் கூறியிருக்கும் பகவான்வாக்கியத்தையும் நம்பவேண்டியது அவசியமன்றோ? கீதையில் மேற்கூறியபகவான் வாக்கியத்தை நம்புவது உண்மையாயிருந்தால் ஏன் ஒருவர் பிறர்மதத்தையும் தேவதையையும் நிந்திக்கவேண்டும்? ஏன் ஒரு வைஷ்ணவர் சைவரை தூஷிக்கவேண்டும்? ஏன் சைவர்கள் அன்னியமதஸ்தர்களைப் பழிக்கவேண்டும்? ஏன் ஒருமனிதன் மற்றொருமனிதனை பகைக்கவேண்டும்? ஏன் ஜீவஹிம்சை செய்யவேண்டும்? ஏன் பட்சபாதமிருக்கவேண்டும்? ஏன் மோசம் திருடு இவைகள் நடந்தேறவேண்டும்? ஏன் ஒருவரிடத்துப் பிரியமும் மற்றொருவரிடத்து வெறுப்பும் காண்பிக்கவேண்டும்? கீதையைப்படித்து உண்மைதெளிந்தது வாஸ்தவமானால் பிரம்மமயமாயிருக்கும் உலகிலுள்ள எல்லாஜீவர்களை சமமாய்ப்பார்க்க வேண்டாமோ? கீதையைப்படிப்பதால் என்னபயன்? படித்தவண்ணம் அனுஷ்டிக்காவிடில் படித்ததின் பிரயோசனம் என்னே! கீதையைப் படித்து அதன்படிநடக்க வல்ல மனிதன் மதத்துவேஷனை, தெய்வநிந்தனை இவைகளைவிடுத்து சர்வ ஜீவராசிகளையும் சமமாய்ப்பார்த்து, தெய்வம் ஒன்றேயெனநம்பித் துதித்து, உலகில் எவ்வளவு வித்தியாசங்கள் தோன்றினும் அவைகளெல்லாம் அவ்வொரு பகவானுடைய சொரூபமே பலவிதமாய்க் காணப்படுகின்றது என நன்குமதித்து எல்லாவற்றையுங் கடவுளாகவே பாவித்து உள்ளன்புடன் பக்திசெய்து, ஸதா சந்துஷ்டனாய் நித்யமுக்தனாயிருப்பான். இது திண்ணம்.

முன்னொருகாலத்தில் கபீர்தாஸ் என்னும் மகாபக்தர்தாம் உண்பதற்காக ரொட்டியுடன் வெண்ணெயும் சர்க்கரையும் வைத்திருந்தார். அவர் உண்பதற்கு உட்காருந்தருணத்தில் ஒரு நாய் அங்கு ஓடிவந்து ரொட்டித்துண்டை வாயில் கவ்விக்கொண்டோடிற்று. அதைக்கண்ட கபீர்தாஸ் கையில் வெண்ணெயும் சர்க்கரையும் எடுத்துக்கொண்டு நாயின் பின் வேகமாய் ஓடி, "பகவானே! ரொட்டிமட்டும் சாப்பிட்டால் ருசியாயிராது. வெண்ணெயும் சர்க்கரையும் சேர்த்து சாப்பிடவேண்டும். ஆதலின் சுவாமி இதோ வெண்ணெயும் சர்க்கரையுமிருக்கிறது ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று நாயைக் கெஞ்சினார். மகா ஞானியாகிய கபீர்தாஸருக்கு சுணங்கனே ஈசுவரனாகத்தோற்றியது. அம்மாதிரி பக்தியை பகவானிடத்து நாம் கொண்டாலன்றோ கீதையிற் சொல்லியதை நம்பி நடப்பதற் கடையாளம். இம்மாதிரி பக்தியைத்தான் பரபக்தியென்று சொல்லப்படும். ஓர் வித்தியாசமின்றி சகலத்தையும் ஈசுவரனாகப்பார்த்து மகிழ்வதுவே பரபக்தியாம். மற்றவை அபரபக்தியாம். அபரபக்தியானது தாழ்ந்தது. பிள்ளைவேண்டும், பணம் வேண்டுமெனக் கேட்பதும், கேட்டவை கிடைத்தால் பகவானுக்குப் பிரார்த்தனை செலுத்துகிறதும், கிடைக்காவிட்டால் தெய்வத்தை நோவதும் அபரபக்தியேயாம். இதைக் கருத்தில்வைத்துக்கொண்டுதான், "வாராவுண்டபேர் வாழ்த்துவதும் நொந்தபேர் வைவதுமெங்க ளுலகவாய்ப்பாடு" என்று நமது தாயுமானவர் கூறினார்.



## அருமையான விஷயங்கள்.

ஒரு கிரகம் அல்லது வீடு கட்டவேண்டுமானால் முதலில் வீடுவேண்டு மென்னும் ஆசை மனிதனுக்கிருக்கவேண்டும். நல்லவீடாய்க் கட்டுவதற்குத் தகுந்த புத்தியும் யுக்தியும் வேண்டும். பிறகு அதைக்கட்டி முடிக்கப் போதுமானவேலைசெய்தல் அவசியம். அதன் பின்பு அவ்வீட்டிற் சென்றிருந்து அனுபவிக்கவேண்டும். உலகத்தில் சாதாரணமாய் மண், கல், சுண்ணாம்பு முதலானவைகளைக்கொண்டு கட்டப்படும் வீட்டையடைய ஆசை அல்லது பிரியம், புத்தி அல்லது அறிவு, வேலை அல்லது கர்மம் இம்மூன்றும் வேண்டுமானால், சுகமயமான பேரின்பவீட்டை அல்லது மோக்ஷ சாம்பிராச்சியத்தை யடைய பக்தி, ஞானம், கர்மம் ஆகிய மூன்றும் அவசியம் வேண்டியது. இப்படியிருக்க சிலர் கர்மமார்க்கமே முக்கியமென்றும், சிலர் ஞானந்தான் சிரேஷ்டமெனவும், சிலர் பக்தியிருந்தாற் போதுமானதென்றும் கூறுவது நியாயமன்று. ஒருவனுக்கு சரியானபக்தி இருந்தால் அவன் கர்மம் ஞானமாகிய இரண்டும் தனக்கு அவசியம் வேண்டியதென்றே அறிவான். ஞானமில்லாதபக்தி மூடபக்தியல்லவோ? ஒருவனுக்கு உண்மையில் ஞானமிருந்தால் அவன் பகவானிடத்து பக்திசெய்யாமற் போவனோ? நிசமான கர்மகாண்டிக்கு பகவானையறிய ஞானமும் அவரிடத்துப் பக்தியுமில்லாமல் அவன் செய்யுங் கர்மத்தால் பயனென்னவோ?

* * *

"இருந்தால் அதிகப் பணக்காரனாயிருக்கவேண்டும் இல்லாவிட்டால் ஒன்று மில்லாமல் தரித்திரனாயிருக்கவேண்டும். வினைத்தையனுபவிக்க அதிகப்பணமில்லாமலும் ஒருவரையடுத்துபிச்சைவாங்க தரித்திரனுமிராமல் நடுத்தரமாயிருப்பது மிகவும் கஷ்டம் என்று அநேகர் கூறுகிறார்கள். அது சரியன்று. அதிகப்பணமிருந்தாலும் கஷ்டம், தரித்திரனாயிருந்தாலும் கஷ்டமே. நடுநிலையிலிருப்பதுதான் சிரேஷ்டம். எப்படியெனில் அதிகப்பணமிருந்தால் அகங்காரம் மமகாரம் இவைகளதிகமுண்டாகி மனம்போனவழிசென்று துர்நடத்தைகள் ஏற்பட்டு சிலர் கெடுகிறார்கள். சிலர் கெட்டவழிகளில் பிரவேசிக்காவிட்டாலும் அப்பணத்தைக் காப்பாற்றுவதிலும் அதை விர்த்திசெய்வதிலுமே அதிககாலஞ்சென்று பணப்பயித்தியமே பிடித்து தன்னையுந் தனக்கு ஆதாரத்தலைவனையுமாராய்ந்தறிய வகையிலாது அவர்கள் வாழ்நாளை வீணாளாக்குகிறார்கள். தரித்திரனாயிருந்தால் எப்போதும் வயிற்றுக்கு அன்னந் தேடுவதிலேயே காலஞ்சென்று ஏக்கமதிகரித்து பகவானையறியவும் அறிந்து பக்திசெய்யவும் முடியாமல் காலத்தைப் போக்க வேண்டியதாயிருக்கிறது. செல்வமும் தரித்திரமும் இல்லாமல் நடுநிலைமையி லிருந்தால் மேற்கூறிய குற்றங்களில்லாமல் ஒருவன் சம்சார சம்ரக்ஷணார்த்தம் அதிககாலம் செலவழிக்காமல் அதற்காக அதிககஷ்டமும் படாமல் உலகத்தில் அதிக போராட்டமு மில்லாமல் மதவிஷயத்தை யாராயப்புகுந்து தெய்வபக்தி, ஞானம் இவைகளுண்டாகி சன்மார்க்கத்தை யனுசரிக்க முடியும். எதிலும் நடுநிலைமையே உத்தமம். இதனுண்மையை உலகத்தில் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கலாம். தானம், தயை, கடவுளிடத்துப்பக்தி, பூஜை, விரதம், தவம், மதவாராய்ச்சி இவைகளெல்லாம் பெரும்பாலும் நடுநிலையிலுள்ளவரிடத்தே காணப்படுகின்றனவேயல்லாமல் தரித்திரரிடத்திலும் அதிக தனவானிடத்திலும் காணப்படுவதில்லை.

* * *

நம்மாலாகாதது ஒன்று உண்டோவென சிலர் உலகவியாபாரங்களைச் செய்யப்புகுந்து பணத்தைச் செலவழித்து தேககஷ்டமும்பெற்று கோரியகாரியம் முடியாமற்போனால் துக்கித்து மனம்வருந்தி பிறகு கடவுளின்செயல் இவ்வாறிருந்தால் நாமென்ன செய்வோமென ஒருவாறு தேறுதலையடைகிறார்கள். கோரியகாரியம் தாங்கள்நினைத்தவண்ணம் முடிந்துவிட்டால் அதிக சந்தோஷமடைந்து தங்களாலாகாதது ஒன்றுமேயில்லையென்னும் சித்தாந்தத்தைத் திடப்படுத்திக்கொள்ளுகிறார்களேயொழிய கடவுளருளால் நடந்தேறியதென நினைப்பதில்லை. காரியம் முடியாவிட்டால் அது கடவுளின் செயலென்றும் காரியம்முடிந்தால் நமது செயலென்றும் எண்ணலாமோ? காரியமாதலும் ஆகாது போதலும் இரண்டும் நம்முடையதா யிருக்கவேண்டும் அல்லது இரண்டும் கடவுளுடையதா யிருக்கவேண்டும். காரியஜெயம் நமதென்று அபிமானித்தால் நமக்குமேன் மேலும் அகங்காரம் விர்த்தியாகிறது. இது மிகவும் கெட்டது. காரியநஷ்டம் நமதென்று அபிமானித்தால் நமக்கு அதிகதுக்கம் உண்டாகிறது. ஆகையால் நாம் ஒரு காரியத்தைச்செய்ய வாரம்பிக்குமுன்னமே கடவுள் சித்தம்போல் நடக்கட்டுமென எண்ணிச் செய்தோமானால் காரியம் முடிந்தால் பகவானது அருளால்முடிந்ததெனவும் முடியாவிட்டால் பகவானது சித்த மிவ்வாறிருந்ததென்வும் எண்ணினால் நமக்கு அகங்காரமு

மில்லை துக்கமுமில்லை. இதுவே கர்மயோகத்தின் இரகசியமும் பக்தியோகத்தின்லாபமும் ஞானயோகத்தின் பெருமையும்.

* * *

அபிமானமே துக்கத்திற்குக் காரணம். அபிமானமே பிறப்பிறப்புக்குக் காரணம். இவ்வபிமானம் விட்டால் துக்கமில்லை ஜனனமரணமில்லை. இதுவேமோக்ஷமாம். அபிமானம் எதனுல் நீங்கும்? நாம் எதனிடத்து அபிமானம் வைக்கிறேமோ அவ்வஸ்துவின் உண்மை சொரூபத்தை விசாரணைசெய்வதால் நீங்கும்.

* * *

"சூக்ஷமத்திலிருப்பது மோக்ஷம்." இது உண்மையே. மோக்ஷத்தையடைவது கஷ்டமன்று, அது பெருங்காரியமன்று. அதற்குத் தனம் வேண்டியதில்லை மனிதர் ஒத்தாசை வேண்டியதில்லை. அது நம்மாலாகத் தகுந்த ஓர் சுலபமான காரியம். அதென்னவெனில்? எந்தவஸ்துவிலும் நாம் அபிமானம் வைக்காமலிருந்து விடுதல்தான்.யோசித்துப்பாருங்கள். நான் என்பது ஓர் அபிமானம் என்தேகம் என்பது மற்றோர் பலமான அபிமானம். என்வீடு, என் பெண்டாட்டி, என் பிள்ளை என்பது பல சன்மங்களைக் கொடுக்கிற அதிகபலமான அபிமானங்கள்,

* * *

கடவுள் உண்டா இல்லையாவென ஆசங்கிக்கவேண்டாம். களவுனைத் தேடுமுன் நம்மைத்தேடுவோம். எடுத்ததற்கெல்லாம் நாம் நாம் என்று சொல்லிக்கொண்டு நாம் யார் என்றால் மிரள மிரள விழித்துக்கொண்டிருக்கிறவர்கள் அகண்டமாய் எங்குமுளாவி ஏகமயமாயிருக்கும் அற்புதக்கடவுளை அறிவது கஷ்டமானதால் முதலில் நாம் யார் என்று தெரிந்து பிறகு கடவுள் உண்டா இல்லையாவென ஆராய்வோம். ஓர் பெரிய நெல்லம்பாரத்தை அளக்கப்புகுந்த மனிதன்தான் எடுத்து அளக்கப்புகுந்த பாத்திரத்தின் அளவு இவ்வளவென்று தெரிந்துகொள்ளா திருந்தால் அவன் அம்பாரத்தின் அளவு இவ்வளவென்று எப்படிகணக்கிடுவான்? அதுபோல் கடவுளை யாராயப்புகுமுன் ஆராயப்புகுந்த சீவனது அளவு இவ்வாவென்று தெரிந்துகொள்ளுதல் அவசியம்.

* * *

உலகத்தில் சுகமடைய வேண்டுமென்று எண்ணிபல் வழிகளில் பிரயத்தினஞ்செய்து கோரிய சுகத்தையடைந்தபின்னும் அதில் திருப்திகொள்ளாமல் மேன் மேலும் சுகத்தை விரும்பியோடி யுழலுவதே மாயை. தினந்தோறும் ஜனங்கள் இறப்பதைக்கண்டும் அநேகர் நாம் இறக்கப்போகிறதில்லையென்று நினைத்து அநேக வருஷங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறார்கள். இதுதான் மாயையின்காரியம். உலகத்தில் எத்தனை தரம் துன்பத்தி லடிபட்டாலும் இவ்வுலகத்திலேயேயிருந்து வாழவேண்டுமென்று மனிதர்கள் எண்ணுகிறார்கள். இதுவும் மாயையின் மயக்கு. மனிதர்கள் தங்களிடத்திருக்கும் குற்றத்தைக் குணமாகக்கண்டு பிறர் குணத்தை குற்றமாகப்பார்க்கிறார்கள். இதுவும் மாயையின் பிரபாவமே. பிள்ளை எவ்வளவு துஷ்டனாயும் மந்தனுமிருந்தாலும் தகப்பன் தன் பிள்ளையே சர்வகுண சம்பன்னன் மகா புத்திசாலியென்று மூட அபிமானத்தால் பெருமையாகப் பேசுகிறான். இதுவும் மாயையே. தனக்கென்றால் ஒரு நியாயம் பிறர்க்கென்றால் வேறொரு நியாயமென்று சொல்லுவதும் மாயையே.

* * *

கடவுள் உண்டாவெனின் சிலர் இல்லையென்று நாஸ்திகவாதஞ் செய்வார்கள். உலகம் உண்டாவெனின் பலர் உண்டென்றும் சிலர் இல்லையென்றும் வாதிக்கத் தொடங்குவார்கள். பிரம்மம் உண்டாவெனின் அதைக் கண்டதுயார்? என்று சிலர் கேட்பார்கள். ஆனால் ஒவ்வொருமனிதனும் தானுண்டா வென்பதைப்பற்றி சந்தேகிப்பதில்லை. ஆதலால் எது நிச்சயமென்று ஒவ்வொருவரும் நம்புகிறார்களோ அதை முதலில் விசாரிக்க வேண்டுமென்று ஜகத்குருவாகிய ஆதிசங்கராசாரியார் ஆத்மவிசாரணை செய்யுமாறு போதித்திருக்கிறார். உலகத்தில் புத்திமானு யிருப்பவன்தான் யார் என்று ஆத்மவிசாரணைசெய்ய வாரம்பிக்கவேண்டும். ஆத்மா இன்னதென்றும் அனாத்மா இன்னதென்றும் நன்றாய் அறிய வேண்டும். நான் என்பது தேகத்தைக் குறிக்கவில்லை ஆத்மாவையே குறிக்கிறதென்று ஒவ்வொருவரும் உணர்ந்து அனாத்மாவாகிய தேகத்தில் அபிமானங்கொள்ளாமல் ஆத்மாவை நாடவேண்டும். ஒருவன் தன்னை விசாரியாமல் அயலிலுள்ளதை விசாரிக்கப்புகுதல் அனுவசியம். தன்னையறிந்தால் எல்லாவற்றையும் அறிந்ததாகும். தானென்பதல்லாத பொருளிடங் காணவில்லை, ஆயினும் தனக் கிடமெங்கேயென்று கேட்டால் ஆகாயம்போலத் தனக்குத்தானேயன்றி வேறிடம் எங்கனுமில்லை.

---



## சுகுணவீர சர்மா நாடகம்.

### கதாபுருஷர்கள்.

1. குணோத்தமர் — கலிங்கதேசமன்னர்
2. சுந்தரர் — கலிங்கசேனாதிபதி
3. கதாயுதன் } இதர 2 சேனைத்தலைவர்கள்
4. வில்வலன் }
5. நயமொழி — சமரதி
6. வீரசர்மா — கொற்கையரசர்
7. விஜயமார்த்தாண்டபூபதி — திருவனந்தபுரத்தரசர்
8. சுகுணம் — வீரசர்மாவின்மனைவி
9. கேசினி — சுகுணத்தின்உற்றதோழி
10. மாதுபுவனி — சுகுணத்தின்நற்றாய்

வேறு 2 தாதிமார்

குருதாசயோகி

நடாதிபர்

விகடன்

கொற்கைநகரவாசிகள், யுத்தவீரர்கள், வாயில்காவலர், சேவகர்முதலியோர்.

களம் அல்லது இடம். கொற்கை நகருக்கருகிலுள்ள படைவீட்டிலும், கொற்கைநகரிலும், அனந்தபுரத்திலும் பொருநையாற்றங்கரையிலும்.

### முகவுரை.

நடாதிபர். பாடப்பணிதேறும்பண்பின் மனத்தகத்தினேடத்தனிமுதலாய் நின்றிலங்கும்-கூடன்மற்றெத்தலத்துமோங்கு மெழிற்பரமனாருண்ட சித்திக்கணநாதன் சீர்.

விகடன். (நுழைந்து) ஐயா, யாதுகாரணம் பற்றிக்கடவுள் வணக்கஞ்செய்தீர் இங்கேதாவது நடைபெறுமோ இப்போது?

நடாதிபர். பொதுவாக விநாயகருடையபிரபாவங்களைச் சொல்லியதே ஒழிய வேறில்லை.

விகடன். தெய்வவணக்கஞ்செய்த அடுத்த நிமிஷமே பொய்தானு பேசுகிறது. நும் சூணிலைகள்நீர் செய்யப்புகும் காரியத்தை வெளியிடுகின்றனவே. யாரையோ விரும்பி அவர்வரவை எதிர்பார்க்கிறவர் போன்றும் உம்முகக்குறிகள் வெளியாக்குகின்றன.

நடாதிபர். அஃதிருக்கட்டும் நீயார் மெத்தத் துணிகரமாய் அரங்கின் கண்ணேறி அதிகம் வாதாடுகிறாய்.



விகடன். என்ன ஐயா! யான் கேட்டதற்கு சமாதானம் ஒன்றும் இல்லாமல் நீர்கேட்பதற்கு விடைகூறுவனோ?

நடாதிபர். நீயாரென எனக்குச் சொல்லாயோ? (சற்று கோபத்தோடு.)

விகடன். இவர் தொனியினுல் நம்மை வாயிலோனை அழைத்து வெளியில்துரத்திவிடுவார் எனத் தோற்றுகிறது. நான் நினைத்துவந்தகாரியம் நிறைவேறுவதற்குத் தக்க அமையம் இப்போது இயைந்தது. என்னை இவரிடத்தே அறிவித்துக் கொள்வேன், யாரெனவா என்னை வினுயினீர்?என்னைக்காணில் உமக்கு எப்படித் தோற்றுகிறது?

நடாதிபர். நின் உடையினுல் என்னிளமையில் யான் கண்டுள்ள தையற் பரதேசிபோலும், வாக்கினுல் மெத்த வாயடிக்கையன்போலும் தோற்றுகிறாய்.

விகடன். நீர் அறைந்தது முற்றும் சரியே, யான் என் பெரும் பிதா மகர்தொட்டு வம்ச பரம்பரையாய்வந்த விகடர்களின் சந்ததியான்; என ஆற்றலை யானே கூறப்புகின்'நீர்பெய்து நிவளர்த்தற்றாம்' ஆதலின் என் நாமம் அகடசகட விகடப் பிரதாப மகாதீர ராஜேந்திர விகடன் என்பதைமாத்திரம் கூறி முடிக்கிறேன்.

நடாதிபர். மெத்தசந்தோஷம். நான் கணநாதனை ஸ்மரித்தகாரணம் இஃதே. அது யாதோரிடையூறின்றி நிறைவேறியது, இங்கிருந்து நடர்களின் கருமங்களை நோக்கி சபையோரையுவகைபெறச்செய் (போகிறார்.)

1. அங்கம்.

களம் 1. கொற்கை நகரவீதி.

காலம்-வைகறை.

2 நகரவாசிகள்.

தீர்க்கலோசனன். கடவுள் நின்னைக் காப்பாராக! ஏது இத்துணை அதிகாலையில் நீரும் படுக்கைவிட்டெழுந் துலாவுதல்!

உற்றதுரைப்போன். இரவில்நடந்த மேககோஷங்களையும் மின்னலின் வன்மையையும் அறியீரோ! அம் மின்னலால் அதிகதீமை இந்த நகருக்கு நேரிட்டிருக்கு என்று எண்ணி வீதிவலம் வந்தபோது மேல் அகரத்தில் அந்தண

161190

TL
Rm 211, N032
N031

ரில்லம் பல அழிந்து கிடந்தன. மற்றவையைப்பற்றி இன்னும் ஒன்றுந்தெரியவில்லை.

தீர்க்கலோ. ஆம், இரவில் எழு முகில்களும் தளையவிழ்ந்து கொட்டியதுபோ லன்றோ தோற்றியது. அன்றியும் யானும் வேறு சில தீய சகுனங்களைக் கண்டேன். அவை என் மனத்தினின்றும் அகலாமல் துன்புறுத்துகின்றன.

உற்றதுரை. அவையாவை? பகர்க.

தீர்க்கலோ. யாமத்தில் மழையின் வன்மைச் சற்றுக் குறைந்து சிறு தூற்றலாய் நீர்த்துளிகள் விழுந்துகொண்டிருந்தபோது எனக்குத் தூக்கம் வராததனால் என் மேன்மாடத்தில் ஏறி நின்று உலாவினேன். அப்போது கோபுரமாடங்களில் கூகைகள் கர்ணகடோரமாகக் கூவின. இதனால்யாது நேருமோ என்று ஐயமுற்று நின்றபோது நகரத்தின் மதிற்சுவர்களில்நான்குவாயிலுக் கருகிலும் குலைந்த ஆடையோடும் விரிந்த கூந்தலோடும் ஒரு பெண் நின்று அழுத குரல் என்செவியைத் துளைத்தன. இக்குறிகளை நோக்குமிடத்து யாதோ நகருக்குத் தீங்குநேருமென்று எண்ணவேண்டியிருக்கிறது.

விகடன். இவை ஒருவித சடங்கள். அறிவுதங்கிய ஊரிலேயே குடியிருந்து அறியாதவர்கள், “கோட்டான் கத்தினதாம் மதிலுறப்பிற் பெண்கரைந்தாளாம்” மனத்தோற்றத்தால் மருண்டலையும் பேய்கள். மேல்கூறுவதைக்கேட்போம்.

உற்றதுரை. ஆம். நீ சொல்வது நம்பத்தக்கதா யிருக்கிறது. கலிங்கநாட்டு மன்னர் இரவில் பத்துமணிக்கு மேல் ஊருக் கருகில் வந்து கூடாரம் அடித்திருக்கிறதாகக் கேள்வியுற்றேன். நம் அரசராகிய வீரசர்மரோ செம்பியன் ஏவல் தலைக்கொண்டு கேரளமன்னர் பாற்சென்றிருக்கிறார். நம் நகரத்துக்கு என்ன தீங்குறுமோ.

தீர்க்கலோ. என்ன முடிவாகிறதோ பார்ப்போம். நாம் எல்லோரும் காலமாகிய கடலில் அலையுந் துரும்புகள். சுழிக்குந்தனையும் உள்ளாழ்ந்து பின் மிதக்கவேண்டியவர்கள் தானே.

உற்றதுரை. ஆம். கலிவலியைத் தடுக்கவல்லவர்யாவர். வசிஷ்டரென்ற பிரம இருஷிச் சிரேஷ்டரும் கலிவலிக்குள்ளானா ரென்னில் மற்றென்ன?

தீர்க்கலோ. என்ன? வசிட்டர் கலிவலிக்குள்ளானாரா! அக்கதையைச் சொல்லுங் கேட்போம்.

உற்றதுரை. மனிதராய்ப் பிறந்தோரெல்லாருக்கும் நவக்கிரக திசைகளும் உண்டு. அக்கிரகங்களில் சனி ஒருவனாதலால் அவன் எவனையும் பீடிக்காது விடான். ஆகையால் ஒருநாள் சனி வசிஷ்டரிடம்வந்து “குருதிசையோ அந்தியமாகப்போகிறது என்னுடைய காலம் சமீபித்து விட்டது” என்று சொல்ல.

தீர்க்கலோ. கலிநேரில்வந்துகேட்கும் வழக்கமுளதோ?

உற்றதுரை. சாமானியரிடத்தில் நேரில் பேசான். அவர் மகானே இல்லையோ! அஃதிருக்கட்டும் மேலேகேள்-இருவரும் நெடுநேரம் வாதாடிகலியின் உறுதியானபிடியை அறிந்து, வசிஷ்டர் அரையாமப்பொழுதுதனைப்பிடித்து விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவே, அவனும் இவர்மன்றாடலுக்குச் சம்மதித்து, ஒருநாள் குறித்துச்சென்றான். பிறகு வசிஷ்டர் ஒருயோசனைசெய்து ஒருமலை உச்சியிலுள்ள முழையில் நுழைந்துகொண்டு தானிருக்குமிடந் தெரியாதபடி நன்றாய் மூடிக்கொண்டார்.

தீர்க்கலோ. பின் என்ன நேர்ந்தது?

உற்றதுரை. அம்மலைக்கு மூன்றேமுக்கால் நாழிவழி தூரத்திலுள்ள ஓரரசன் மனையாள், மஞ்சனச்சாலையில் தன் ஆபரணங்களைக் களைந்துவைத்துவிட்டு நீராடுகையில், சனி தன் வாகனத்தை விளித்து, அவள் அணிந்திருந்த பொன்மாலையை முழைக்கருகில் போடும்படி ஆக்கியாபித்துத் தான் அவள் மனதில் புகுந்துகொண்டான். இராணி நீராடிக் கரையேறிப் பார்க்கையில் மாலை காணாதுவருந்தி, மாலை திருடிய கள்வனைக் கொணர்ந்தா லல்லது உண்ணேன் என சபதமிட்டாள்.

தீர்க்கலோ. சரி இனி வசிட்டருக்குப் பிடித்தது சனி.



உற்றதுரை. உடனே சேவகர்கள் பலதிக்கிலும் தேடத் தலைப்பட்டார்கள். சனியின்வலியினால்மலைமுழைக்குச் செல்லும் சிறுவழியொன்று தோன்ற அவ்வழியே சிலர் சென்றார்கள், ஐந்துமைல்தூரஞ் சென்றபின் ஒருமலையுச்சியில் அந்த நகை கிடப்பதைக்கண்டு, மோசம் ஏதோ நடந்திருக்கிறதென்று எண்ணி, நாலுதிக்கிலும் அங்கேதேட வசிஷ்டருள்ள இடத்தைக்கண்டு, அத்தாடிவாலாவே அத்தொழில் செய்தவனென்று நிச்சயித்து,

தீர்க்கலோ. ஐயோ! இனி இத்தீயர் வசிஷ்டரை என்னசெய்வார்களோ!

உற்றதுரை. சடையைப்பற்றி வெளிக் கொணர்ந்து, உதைத்தும் குத்தியும் அடித்தும் மற்றும் பற்பல துன்பங்களும் இழைத்தவண்ணமாகவே, அரசன் அவைக்களத்துக்குத் தள்ளி வந்தார்கள்.

விகடன். வசிஷ்டர்தான் தவச்சிரேட்ட ராயிற்றே. அவர் முழையிற் புகக் காரணமென்ன. தேகாபிமானமோ என்னில் அப்படியல்ல கதைக்குக் காலுண்டோ?

தீர்க்கலோ. என்ன முடிவாயிற்று விரைவிற் கூறும்.

உற்றதுரை. முடிவென்ன. அரசன் அவைக்களத்துக்கேகவும் கலிதோஷம் நீங்கினதும் உபசரிக்கப்பட்டதுமே.

தீர்க்கலோ. ஆம் ஐய! விதிவலிகடக்க முடியாதது தான் இதனாலன்றோ.

“ஊழிற்பெருவலியா வுளமற்றொன்று
சூழினுந்தான் முந்துறும்.” என்றார் செந்நாப்போதார். காலைக்கடன் கழிக்க இனி நேரமாயிற்று போவோம். எல்லாமீசன்செயல் சிந்தித்துப் பயனில்லை. (போகிறார்கள்)

விகடன். சிருட்டியிலுள்ள இன்பசுகங்களையெல்லாம் அநுபவிக்கும் பேறு இல்லாதவர்களாய் விசனக்குறிகளைக் கவனித்து துயரமீக் கொள்ளும் தோன்றல்கள் இவர்கள். (போகிறான்)

(இன்னும்வரும்.)

## சம்சாரபந்தம்.

வெகுநாளைக்குமுன் தருமபுரியென்னும் ஓர் பட்டணத்தில் இராமசுவாமி யென்றொரு பிராமணனிருந்தான். அவன் சர்க்கரையினால் செய்த பக்ஷணங்களை விற்றுப் பணம் சம்பாதித்தான். அந்நகரத்திலுள்ளசிறுபிள்ளைகளெல்லாம் அவனுடைய கடையில் தின்பண்டம் வாங்குவது வழக்கம். இதனால் மிகுந்ததிரவியம் ஸம்பாதித்து குடும்பத்தைரட்சித்து மீந்த தொகையை யாருக்குந் தெரியாமல் பூமியில் புதைத்துவைத்தான். இராமசுவாமியின்காரியம் ஒருவருக்கும் தெரியாது. சிலரைப்போல் அவன் ஓட்டைவாயனன்று, தன்மனைவியினிடம் கூட தனக்கு இவ்வளவு சொத்து இருக்கிறதென்பதைச் சொல்லமாட்டான். இவனுக்கு இரண்டு குமாரர்கள் உண்டு. ஒருவனுக்கு 10-வயது இன்னொருவனுக்கு வயது-8. இவ்வாறு சிரமமின்றிவாழ்ந்து வருகையில், “தரித்திரனுக்கு திரவியம் அகப்பட்டது” போல் இராமசுவாமியின் கடைக்கு ஓர் சாதுவந்தார். அப்போது உஷ்ணகாலமாதலின் இராமசுவாமி அந்த சாதுவை உபசரித்து கடைக்குள்ளே ஓர் ஆசனம்போட்டு அதில் உட்கார்ந்து கொஞ்சநேரம் இளைப்பாரும்படி வேண்டினான். அவ்வாரே சாது உட்கார்ந்தபிறகு இராமசுவாமி வெகு பயபக்தியுடன் அவரைநோக்கி “சுவாமி தங்களுக்கு வேண்டியதென்ன” ? வென, சாது ஒருபாத்திரத்தில் ஜலம் கொண்டுவாவென்றார். அவ்வாரே இராமசுவாமி கொண்டுவந்து கொடுக்க சாது அதை யுட்கொண்டு களைதீர்ந்து அவ்விடத்தைவிட்டு அகன்றுபோனார். மறுநாள் காலையில், இராமசுவாமியின் கடைக்கு அச் சன்னியாசி மறுபடியும் விஜயம்செய்து அவனைநோக்கி தம்முடைய கிழிந்த உடுப்புகளைத்தைத்துத் தரும்படிகேட்டார். அவன் அவ்வாறே மூன்று மணிநேரம் உட்கார்ந்து ஒவ்வொரு பொத்தலாய்த்தைத்து உடுப்பை உருப்படியாக்கினான். அன்றிரவு அப்பெரியவர் கொசுக்களின் உபத்திரவமின்றி பிரம்மாநந்தமாக நித்திரைசெய்தார். பக்ஷணக் கடைக்காரன்மேல் அவருக்கு பக்ஷம் உண்டாயிற்று. ஆதலின் அடுத்த நாளையில் அவனுக்கு சொர்க்காதிபோகங்களை அளிக்க வேண்டி அவனிடம் வந்தார்.

பிராமணன் ஞானியை நோக்கி “மகாராஜாவே' சொர்க்காதிபோகங்களை அடைவதைவிட மேலான சுகமொன்று மில்லை. ஆயினும் அதிபால்யர்களாயிருக்கும் என் பிள்ளைகளுக்கு கல்யாணமானவுடன் நான் தங்களுடன் புறப்பட்டு வருகிறேன். ஆதலின் 8 - வருஷம் கழித்து இங்கேவாருங்கள்” என்றான். அவ்வாறே ஆக

ட்டுமென்று சாது போய்விட்டார். சரியாக எட்டுவருஷம் ஆனவுடன் சாது மறுபடியும் வந்தார். அப்போது அவனுடைய கடை எடுபட்டு வீடு இடிந்துகிடந்தது. அதைப்பார்த்து சாது "என்னடா இராமசுவாமி இப்பொழுதாவது சொர்க்கத்திற்கு வருகிறயா" என்றார், அதற்கு அவன் "சுவாமி, என் பிள்ளைகள் சர்வமூடர்கள், அவர்களுக்கு ஏதாவது ஒருவியாபாரத்தையேற்படுத்தி கடனில்லாமல் நாலுகாசுகையிலேறும்படி பிரயத்தினம் செய்து பிறகு வருகிறேன். தயைசெய்து இன்னும் 8-வருஷம் கழித்துவாருங்கள்" என்றான்.

சாது இராமசுவாமியின் வார்த்தைகளைக்கேட்டு அவ்வாறே ஆகட்டுமென்று பொறுமையுடன் போய் விட்டார். பிறகு 8-வருஷம் கழித்து மறுபடியும் வந்து பார்க்கையில் ஆசாமியைக்காணமல் அவன் வீட்டுக்குள்ளேசென்று இரண்டாவது பிள்ளையிடம் அவனுடைய அப்பனைப்பற்றி விசாரித்தார். அதற்கு அவன், தன் பிதா இரண்டுவருஷங்களுககு முன் எமலோகம்போய் விட்டாரென்றான். உடனே சாது தம்முடைய ஞான திருஷ்டியினால்பார்த்து இராமசுவாமி ஓர் காளைமாடாகப் பிறந்து மூத்தகுமாரனிடம் அடங்கி ஏருழுகிறான் என்று அறிந்து, அங்கேசென்று ஒருவருமில்லாத சமயத்தில் அந்தக் காளைமாட்டின்மேல் கமண்டலதீர்த்தத்தைத்தெளித்தார். அதற்குபூர்வஞானம் உண்டாயிற்று. அப்பொழுது சாது 'அடே' இராமசுவாமி இப்போதாவது என்னுடன் தேவலோகத்திற்கு வருகிறயா வென அவன் குருமகராஜ், தாங்கள் அடியேன்மீது வைத்துள்ள அன்புக்காக நான் நன்றிபாராட்டுகிறேன். என் பிள்ளைகள் துர்நடத்தையால் ஆஸ்திகளை துர்விநியோகம்செய்து இந்த ஒரு ஏகர் தவிர மற்ற ஸ்திதிகளை நிர்மூல மாக்கினார்கள். ஆதலின் நான் சிரமப்பட்டு இந்நிலத்தையுழுது அவர்களுக்குப் பலனைக்கொடுத்து எப்படியாவது நாலுகாசு உண்டாக்கி குடும்பத்தை முன்னுக்குக் கொண்டுவந்தபிறகு தங்களுடன் வானுலகுக்கு வந்துவிடுகிறேன் என்றான். ஞானி இராமசுவாமியின் அறிவீனத்தைக்கண்டு அவனுக்கு இனி என்ன உபதேசித்தாலும் பிரயோஜனப்படாதென்று இன்னும் இரண்டுவருஷம் கழித்துவருவதாய்ப் புகன்று போய்விட்டார். அவ்வாறே இரண்டுவருஷம் கழித்துவருகையில் இராமசுவாமியின் கடை நிலம் வீடு முதலியவைகளைக் காணமல் அருகில் ஓர் குடிசையைக்கண்டு அதன் சமீபமாகச்சென்றார். அங்கேயிருந்த ஓர் வேட்டைநாய் இவரைவிரட்டிக் கடிக்கவந்தது. உடனே இவர்போட்ட கூச்சலைக்கேட்டு சகோதரர்களிருவரும் வெளியேவந்து நாயைப்பிடித்து கட்டினார்கள். அப்போது தயாளுவாகிய அம்மகான் அவர்களின் குடும்பக்ஷேமங்களை விசாரித்து காளைமாடு எங்கே என்றார். அவர்கள் ஐயா, காளைமாடு இறந்துபோய் இரண்டுவருஷமாகிறது. அது கொஞ்சமாய் தீனி தின்று அந்திநேரம்வரை உழைக்கும், மகாசாது, அதைப்போல் இனி காளைமாடு கிடைப்பது அரிது, அது இறந்ததுமுதல் எங்களுக்கு வியவசாயம் தொலைந்து குடும்பத்தில் கடன்பெருகி அவஸ்தைப்படுகிறோம் என்றார்கள். உடனே மகான்ஞான திருஷ்டியினால் நோக்கி காளைமாடாய்ப் பிறந்து இறந்துபோன இராமசுவாமி நாயாய்ப்பிறந்து வீட்டைக் காத்துக்கொண் டிருக்கிறானென்றும் அதனாலே தான் தன்னை விரட்டிக்கடிக்க வந்தானென்றும் கண்டுகொண்டார். ஆதலின் இரகசியமாக அந்தநாயின்மேல் கமண்டலதீர்த்தத்தைத் தெளித்தார். அதற்கு உடனே பூர்வஞானம் உண்டாயிற்று. அப்போது மகான் அடே, இராமசுவாமி இப்போதாவது என்னுடன் சொர்க்கலோகத்துக்கு வருகிறையா, வென்றார். அதற்கு அவன் 'சுவாமி, என் துக்கத்தை நான் என்னவென்று சொல்லுவேன்? மூடர்களாகிய என் பிள்ளைகள் வீடு, நிலம் கடைமுதலிய எல்லாவற்றையும்தொலைத்து இப்போது கடனாளிகளா யிருக்கின்றனர். இங்கு திருடர்பயம் அதிகம்.

"பிச்சைக்காரன் வீட்டில் சனீசுவரன் நுழைந்தது" போல் யாரேனும் திருடர்கள் உள்ளேநுழைந்து தட்டுமுட்டு சாமான்களைக்கொண்டு போகாதபடி நான் காவலாயிருக்கிறேன். ஆதலின் என்பேரில் கிருபைவைத்து இன்னும் இரண்டுவருஷம் கழித்துவாருங்கள். அப்போது தடையின்றி தங்களுடன் சொர்க்கத்திற்கு வருகிறேன் என்றான். சன்னியாசி இராமசுவாமிக்குள்ள சம்சார பந்தத்தைக்கண்டு அவ்வாறே வருவதாய் சொல்லிப்போய்விட்டார். அதன்பிறகு இரண்டுவருஷம் கழித்து சாது அவ்விடம்வந்து பார்க்கையில் வீடெல்லாம் அழிந்து தரையோடு தரையாய்ப்போய் கொஞ்சதூரத்தில் இரண்டு குடிசைகளிருந்தன. அங்கிருந்து இரண்டு சகோதரர்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டு வெளியேவந்தனர். உடனே ஞானதிருஷ்டியால் நோக்கி காளைமாடாய்ப் பிறந்து இறந்த இராமசுவாமி நாயாய் ஜனித்து இறந்து இப்போது நாகப்பாம்பாகிதான் ஆகியிற் புதைத்துவைத்த தனத்தைக் காத்துக்கொண்டிருக்கிறானென்றும் சண்டையிட்டு வெளியேவந்த இருவர்களும் அவனுடைய பிள்ளைகளென்றும் அறிந்துகொண்டார். அவ்விரண்டு சகோதரர்களும் அவரைக் கண்டு இந்த சன்னியாசி நம்முடைய வீட்டில் அடிவைத்ததுமுதல் நமக்கு தரித்திரமுண்டாகத் தலைப்பட்டது. ஆதலின் இவனை விரட்டவேண்டுமென்று

(இக்கதையின் தொடர்ச்சியை 109-வது பக்கத்தில் காண்க.)



## மனோகரன்.

(முன்தொடர்ச்சி.)

இவ்வாறு சொல்லிவிட்டு சுலோசனர் சந்திரசேகர பிரபுவின் உத்திரவுபெற்றுக்கொண்டு சென்றார். சுலோசனர் என்பவர் பிரபுவமிசத்தைச் சேர்ந்தவராயினும் மிக்க இழிவான குணமுடையவர். பார்ப்பதற்கு கம்பீரமான தேகப்பருமனுடையவராய் நல்லுடையாபரணங்களை யணிந்தவராயினும் தீயமனத்தினர். நல்வார்த்தைகளைப் பேசி உதவி புரிகிறவர்போல் தோற்றினும் தன் காரியத்திலேயே கண்ணுள்ள கபடநெஞ்சினர். எவ்வளவு இரகசியமான விஷயங்களையும் பிறரிடத்துவேடிக்கையாகப் பேசி அறியும் சமர்த்தர். எவ்வளவு அற்பமான தாயினும் தன் விஷயத்தை பிறருக்கு எளிதில் காட்டாத கெட்டித்தன முள்ளவர். இத்துடன் இவர் நாற்பது வயதாகியும் கல்யாண மில்லாமலே காமவலையிற்சிக்கி கணக்கிலா மாதர்களின் கற்பை யழித்தவர். சேலைகட்டிய எவ்வுருவையுங் கண்டு ஆவென்றுவாயைத்திறந்து கன்னம் கோவெடுக்கப் பார்த்து மனமுருகுமியல்பினர். இவர் பிரபுவமிசத்தில் பிறந்து சில ஊர்களுக்கு சொந்தக்காரராகி மிக்க தனத்தை யுடையவராதல்பற்றி நற்குணமுள்ள பிரபுக்களுடைய சினேகமுண்டு. அதனாலிவர் அடைந்த பலனொன்றுமில்லை. நற்சிந்தையராகி தர்மவழியி லொழுகுவதற்கு அவருக்கு வழியின்றேனும், கொடிய பாபச்செயல்களைப்புரிய சிறிதும் அச்சமில்லாதவர். இவரது பிதா மகததேசத்திலுள்ள சிற்றரசர்களிலெல்லாம் தலைமைப்பெற்று அரசனைப்போலவே அநேக ஊர்களுக்கு அதிபதியாயிருந்தனர். அவரது காலத்திற்குப் பிறகு சுலோசனருடைய தமையன் நரேந்திரபிரபுபட்டம்பெற்று நல்லொழுக்கத்துடன் ஆனந்தபுரியில் சிலநாள் வாழ்ந்து இளம்பிராயத்திலேயே தன் மனைவியுடன் துர்மரணத்தையடைந்தனர். அக்காலத்தில் மகதவரசன் சுலோசனருடைய நடவடிக்கையைக் குறித்துக் கேள்வியுற்று நரேந்திரன் ஆண்ட ஊர்களில் அநேகம் பிடித்துக்கொண்டு சில ஊர்களைமாத்திரம் சுலோசனருக்குக் கொடுத்தான். தமையனாகிய நரேந்திரன் இறந்தபின்பு சுலோசனர் ஆனந்தபுரியில் வசிக்க இஷ்டமில்லாதவராய் சத்தியபுரிக்கு அடுத்த இரத்தினபுரியில் ஓர் சிறிய அரண்மனை கட்டிக்கொண்டு வசிக்கலுற்றார். சத்தியபுரிவசிப்பதற்கு ஆரோக்கியமான ஊரானபடியால் இரத்தினபுரியில்சில காலமும் சத்தியபுரியில் சிலகாலமுமாக வசிக்கத்தலைப்பட்டார். சுலோசனரிடத்து சந்திரசேகர பிரபுவுக்கு மரியாதையுண்டு. சந்திரசேகரர் மிக்க நல்லவராதலால் சுலோசனருடைய துற்குணங்களையும் கெட்ட நடவடிக்கையும் அறியாதவர். சுலோசனர் சத்தியபுரில் வசிக்குங் காலத்தில் அடிக்கடி சந்திரசேகரரிடத்துவந்து பேசுவதுண்டு. இப்படியாக அனேக நாட்களை தன்னிஷ்டப் பிரகாரம் வீணிலே கழித்து விட்டதை நினைந்து தன் முன்னோர்களின் பெயரையும் ஊரையுங் காப்பாற்ற சந்ததி விர்த்தி செய்யும் பொருட்டு ஓர் பெண்ணை விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்று சுலோசனர்எண்ணங்கொண்டார். தனக்குப்பெண்ணைக்கொடுக்க ஏமாந்திருக்கும் பிரபு சந்திர சேகரர்தானென்று சுலோசனர் நன்றாய் அறிந்து அவரதுபெண்மீது நாட்டம்வைத்தனர். "காற்றுள்ளபோது தூற்றிக்கொள்" என்னும் பழமொழிக்கிணங்க இப்போது நல்ல சமயம் நேர்ந்தபடியால் சந்திரசேகரரிடத்து தன் னெண்ணத்தைத் தெரிவித்துப்போயினர்.

மகததேசத்திற்கு அடுத்தாட்போல் அநேகமலைகள் உண்டு. அம்மலைகளின் மத்தியில் கள்ளச்சாதியைச் சேர்ந்த ஜாதன் அஜாதன் என்னு மிரண்டுசகோதரர்கள் கோட்டையைப்போல் ஓர் பெரியவீடு கட்டிக்கொண்டு வசித்து வந்தார்கள். அவர்க ளிட்டவேலையைச் செய்ய 50 கள்ளர்கள் உண்டு. இக்கள்ளச் சாதியார் யாருடைய ஆளுகைக்கும் உட்பட்டவ ரல்லர். அம்மலைகள் அதிக உன்னதமானதாலும் அவைகளின்மீது ஏறுவதற்குச் சரியானபாதைக ளில்லாமல் நெருங்கிய முட்செடிகள் அடர்ந்ததாலும், ஒருவரும் அம்மலைகளுக்குப் போவதில்லை. இத்துடன் அம்மலைகளைச்சுற்றி நெருங்கிய காடிருந்தபடியால் அக்காட்டிலுள்ள துஷ்டமிருகங்களுக்குப் பயந்து அநேகர் வருவதில்லை. காடுகளால் சூழப்பட்டு மனுஷிய சஞ்சாரமில்லாத மலைகளின் மத்தியில் வசிக்கும் கள்ளச்சாதியார் யாவருக்கும் தெரியாதபடி இரகசியமாய் அம்மலைக்குள்ளே போகவும் நினைத்த மாத்திரத்தில் வெளியேவரவும் ஓர் வழிகண்டு பிடித்திருந்தார்கள். அவ்வழியாக இராக்காலத்தில் வெளியே வந்து ஊர்களில் பிரவேசித்து கொள்ளையடித்து சம்பாதித்த பொருள்களை யெல்லாம் தங்கள் சிருங்கமலைக் கோட்டைக்குள் பத்திரப்படுத்துவது அக்கள்ளச் சாதியாருடைய வழக்கம். அக்கோட்டையில் ஆகாரத்திற்காக ஒருவருஷத்திற்கு வேண்டிய சாமான்கள் எப்போதும் சித்தமாயிருக்கும். இரவில் அவர்கள் வெளியே ஊர்களில் வந்தால் சூரியன் உதயமாகுமுன்னமே தங்கள் சிருங்கமலைக் கோட்டைக்குப்போய்ச் சேர்வார்கள். ஒருவேளை பொழுதுவிடிந்து விட்டால் அவர்கள் தங்கள் மலைக்குப்போகாமல் ஊர்களிலேயே சஞ்சரித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களில்முக்கியர்களானஜாதன்

அஜாதன் என்னும் சகோதரர்கள். பகற்காலத்தில் ஊர்களில் தங்கும்படி நேர்ந்தால் அவர்கள் பெரிய பிரபுக்களைப்போல் நல்ல ஆடையைத்தரித்து ஆபரணங்களையணிந்து வெளிதேசத்திலிருந்து யாத்திரை வந்தவர்களைப்போல் நடித்துத்திரிவார்கள். அந்தகாலங்களில் சிலபிரபுக்கள் வீட்டில்போய் தங்குவதுமுண்டு. அக்காலத்தில் இவர்களைக் கள்ளர்களென்று யாரும் கண்டுபிடிக்க முடியாது. சிருங்கமலைக் கடுத்தாப்போலிருக்கும் தேசங்களில் அநேகர் எவ்வளவோ பணங்களைக் கொள்ளை கொடுத்தும் கொள்ளையாடிய திருடர்கள்இன்னாரென்று கண்டுபிடிக்க அவர்களுக்கு வலியில்லை. ஆனால் அவ்வூர்களில் கொள்ளையடிக்கத் திருடர்களுண்டு என்பதுமாத்திரம் வதந்தி. ஜாதன் அஜாதன் என்னும் சகோதரர்களுக்குத்தெரியாத அரசர்களும் பிரபுக்களும் கிடையாது. அவர்கள் போகாததேசங் கிடையாது. ஜாதன் என்பவனுக்கு சுமார் - முப்பத்தைந்து வயதிருக்கும். அஜாதனென்பவனுக்கு - முப்பதிருக்கும். கள்ளச்சாதியரைச் சேர்ந்தவராயினும் பார்ப்பதற்கு போர்வீரர்களைப்போ லிருப்பார்கள். அவர்கள் வில்வித்தை, வாள்வித்தை, குத்துசண்டை முதலிய வித்தைகளிலெல்லாம் தேர்ந்தவர்கள். அவர்கள் தடியெடுத்து சுற்றவாரம்பித்தால் ஒருவரும் கிட்ட நாடமுடியாது. வாளாயுதத்தை கையில் எடுத்துவிட்டால் வாழைக்காயைத் துண்டம்போடுவதுபோல் எதிரிகள் தலைகளைத் துண்டித்து விடுவார்கள். இராக்காலங்களில் ஊர்களில் பிரவேசிக்கும்போது சகல ஆயுதங்களையும் தயார் செய்துகொண்டு தான் புறப்படுவார்கள். இச்சகோதரர்களிருவரும் எப்போதும் வைத்திருப்பது சோடாதடிமாத்திரந்தான், மற்ற ஆயுதங்கள் தேவையாயிருந்தால் ஓர்விதமானசப்தம் செய்தவுடனே அநேக கத்திகள் வாளாயுதங்கள் முதலானவை அவர்களெதிர் வந்து நிற்கும்.

இப்படியிருக்கையில் ஒருநாள் சாயந்திரம் கள்ளச்சகோதரர்களுடைய தலைமை வேலைக்காரனான நீலன் என்பவன் ஆனந்தபுரியில் போய்க்கொண்டிருந்தான். அவ்வூர் சிற்றரசன் அரண்மனையில் அநேக வேலைக்காரர்கள் கிலமாயிருந்த கட்டடங்களைப் பழுதுபார்த்துக் கொண்டிருந்தார்கள். சிலர் கூடி அரண்மனைக்கு வெளியே பந்தல் போட்டுக்கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் அரண்மனைக்கு எதிரே மணற்குவியலைச் சேர்த்தார்கள். வேறு சிலர் அநேக பூஞ்செடிகளை வரிசையாகவைத்து அரணமனையை அழகுபடுத்தினர். வேறு சிலர் அரண்மனைக்கு வெளியில் அநேக தீபக்கம்பங்களை நாட்டினர். இத்துடன் அநேக சேவகர்கள் அரண்மனையைச்சுற்றிக் காவல்காத்துக் கொண்டிருந்தனர். இவைகளையெல்லாம் பார்த்த நீலன், இதென்ன? இந்த அரண்மனை முன்னிருந்தவாறென்ன? இப்போதிருக்கும் மாதிரியென்ன? ஏதோ விசேஷமிருக்கிறதென்று நினைத்து அவ்விடத்துள்ள சில வேலைக்காரர்களைக் கேட்டு சங்கதியை விசாரித்தறிந்தான். சூரியன் அஸ்தமித்து நன்றாய் இருட்டினவுடன் காட்டிற்பிரவேசித்து கையிலிருந்ததடியால் பூமியைத் தட்டிக்கொண்டு சிருங்கமலையை நெருங்கி, சுரங்கவழியாய் நுழைந்து கோட்டைக்குள் நீலன் சென்றபோது ஜாதன் தன் தம்பியுடன் தாம்பூலம் போட்டுக்கொண்டு ஏதோ பேசிக்கொண்டிருந்தான். "ஐயா! இன்றைக்கோர் சங்கதி. ஆனந்தபுரி யரண்மனையில் விசேஷம். ஆனந்தபுரி சிற்றரசன் நரேந்திரன் இறந்தபின் அவ்வரண்மனையில் ஒருவரும் வசிக்கவில்லையென்பது உங்களுக்குத் தெரியும். என்னகாரணத்தினாலோ சத்தியபுரி சந்திரசேகரபிரபு தன் குடும்பத்துடன் ஆனந்தபுரியில்வந்து வசிக்கப்போகிறாராம். அதற்காக நரேந்திரன் தம்பி சுலோசனன் அரண்மனையைச் சுத்தஞ்செய்து அலங்கரிக்கும்படிக்கு உத்திரவு அனுப்பினாராம். வேலை தடபுடலாய் நடக்கிறது. பந்தல் என்ன, தீபக்கம்பங்களென்ன, சேவகர்களென்ன, ஆனந்தபுரி அமளி குமளியா யிருக்கிறது. பெரிய மகாராஜாவின் வரவை யெதிர்ப்பார்த்து குடிகள்செய்யும் ஆடம்பரம்போலிருக்கிறது. சந்திரசேகர பிரபுவுக்கும் மகநவரசனுக்கும் ஏதோவிரோதமாம். அதனால் அரசன் பிரபுவை ஊரைவிட்டு ஓட்டிவிட்டானென்று சிலர் மெள்ளபேசிக்கொள்ளுகிறார்கள்" என்று நீலன் சொல்லிமுடித்தான். இதைக்கேட்ட சகோதரர்களில் ஜாதன், "ஹெநீலா அந்த சந்திரசேகரனுடன் கூட இன்னும்யார் வருகிறார்கள்? " என்று கேட்டான். "சுவாமி! குடும்பத்துடன் வருவதாய்க் கேள்விப்பட்டேன்." என்று நீலன் பதிலளித்தான். "குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இன்னாரென்று உனக்குத் தெரியுமா? " என்று மறுபடியும் ஜாதன் கேட்டான். "தெரியாது அதைநான் விசாரிக்கவில்லை சுவாமி" என்று நீலன் பயந்து மெள்ளசொல்ல, ஜாதன் கோபித்துக்கொண்டு "என்னடா மூடா! ஒருவிஷயத்தைக்குறித்து விசாரிக்கப்புகுந்தால் முழுமையுந் தெரிந்துகொண்டு வராமல் அரைகுறையாய் விசாரித்துக்கொண்டு வருகிறாய். இந்த தப்பிதத்திற்காக உன்னை என்னசெய்யலாம்? இந்தடவை உன்னை மன்னித்தேன்." என்று சொன்னதைக்கேட்ட நீலன் நடு நடுங்கிப்போய் ஒன்றும் பேசாது மௌனமாய் நின்றான். அதே சமயத்தில் காலன் என்னும் மற்றோர்வேலைக்காரன் வெகு அவசரமாய் ஓடிவந்து "பிரபுக்களே! நான் ஆனந்தபுரிக்குப்



போயிருந்தேன். அவ்வூர்க்கு சந்திரசேகர பிரபு குடும்பத்துடன் வருகிறாராம். ஊர் அமக்களமாயிருக்கிறது. அந்த பிரபுவுக்கு பேரழகுவாய்ந்த ஓர் பெண்மணியிருக்கிறாளாம். அவளும் கூடவருகிறாளாம். அவளுக்கு இன்னும் கல்யாணமில்லையாம். ஆனந்தபுரிக்குச் சொந்தக்காரர் சுலோசனர் அப்பெண்ணைக் கல்யாணம் செய்துக்கொள்ள தீர்மானித்திருக்கிறாராம். இந்த சமாச்சாரத்தை அந்த அரண்மனைக் கிழச்சேவகன் சாத்தகி தன் பெண்டாட்டிக்குசொல்லிக்கொண்டிருக்கும்போது நான் கேள்விப்பட்டேன்." என்று காலன் சொல்லும்போது அதிக சந்தோஷத்துடன் கேட்டுக்கொண்டிருந்த சகோதரர்களில் ஜாதன் "ஹெகாலா; நல்ல சமாச்சாரம் கொண்டுவந்தாய். இன்னும் ஏதாவது உண்டோ? " என்று கேட்க, "நமக்கு வேண்டியது வேறொன்றுமில்லை." என்று காலன் பதில்கூற ஜாதன் இவனை மெச்சிப் பேசிப்போக உத்திரவுகொடுத்துவிட்டு, அங்கு மௌனமாயிருந்த நீலனைப்பார்த்து "பார்த்தையா காலன் கொண்டுவந்தசெய்தி என்னமாயிருக்கிறது. நீ தலைமை வேலைக்காரனாயிருந்தும் நமக்கு இன்ன சமயத்தில் இன்னது வேண்டியதென்று அறிந்துக்கொள்ள முடியவில்லை. இனி ஜாக்கிரதை. போய்வா." என்று சொன்னான்.

(இன்னும்வரும்.)

## நானாசீவவாதக் கட்டளை.

(முன்தொடர்ச்சி.)

சம்ஹாரமாவது கால அளவையில் இயமனாகவும் பிரளயாந்தத்தில் ருத்திரனாகவும் சம்ஹரிக்கின்றவருக்கு ருத்திரன் யென்று பெயராம். இவை மூலப் பிரகிருதியின் சத்துவகுண கற்பனையாம். இனி மூலப்பிரகிருதியில் இராஜதகுணம் அநேக ரூபமாய்ப் பிரிந்து அவித்தைகளென்றும் ஜீவகாரண சரீரமென்றும் ஒன்றுக்கொன்று தாதான்மியமாக சொல்லப்படும். மூலப்பிரகிருதியின் காலிக்கல்போலொத்த ரஜோகுணம் நானாரூபமாய் ஒன்றற்கொன்று உயர்வு தாழ்வு உள்ளவைகளாயிருக்கும். அவைகளுக்கு அவித்தைகளென்றும் ஜீவர்கள் பிரதிபிம்பிக்கிறதற்குக் காரணமா யிருக்கின்றமையால் ஜீவகாரண சரீரங்களென்றும் பெயர். அந்த அவித்தைகளிடத்தில் மலின ஜலப் பிரதிபிம்பம்போல பிரமசைதன்னியம் பிரதிபிம்பிக்கும். அறிவு மறைப்பாயிருக்கின்ற அவத்தைகளிடத்தில் கலங்கல்ஜலத்தில் பிரதிபிம்பிக்காநின்ற சூரியப் பிரதிபிம்பம்போல பிரமசைதன்னியம் பிரதிபிம்பிக்கும், அந்தச் சைதன்னியப் பிரதிபிம்பங்களுக்கு கிஞ்சிக்ஞரென்றும், சிதாபாச ஜீவரென்றும் பெயர். கிஞ்சிக்ஞராவது = அற்ப அறிவுள்ளவர். சிதாபாசராவது=சித்துப் போலத் தோன்றி சித்து லக்ஷணமில்லாதிருப்பவர். சிதாபாசர் ஜீவர். ஜீவராவது=ஜாக்கிரமுதல் மோக்ஷபரியந்தம் ஜீவிக்கின்றமையால் ஜீவரென்றும் பெயர். இந்த அவித்தைகளிடத்திலேயும் இராஜதத்தில் சாத்துவீகம், இராஜதத்தில் இராஜதம், இராஜதத்தில் தாமதமென்று மூன்று குணங்களுண்டு. இராஜதத்தில்சாத்துவீகம் பிரதானமாகும்போது இராஜதத்தில் இராஜதந் தாமசமிரண்டுமடங்கி சாத்துவீகம் மேலிடும்போது அதில் பிரதிபிம்பித்த சிதாபாசர் தத்துவஞான நிஷ்டராவர். தத்துவங்களை உணந்த ஞானியாவார்கள். இராஜஸத்துக்கு ராஜஸம் பிரதானமாகும்போது இராஜசத்தில் சாத்துவிகம் தாமசம் இரண்டு மடங்கி இராஜஸம் மேலிடும்போது அதில் பிரதிபிம்பித்த சிதாபாசர் காமக்குரோதாதி பதின்மூன்றுகுணங்களையுடையவராய் கர்மானுஷ்டானபரராவார்கள். பதின்மூன்று குணங்களாவன:—இராகம், துவேஷம், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், ஈரிஷை, டம்பம், ஆசூயை, தர்ப்பம், அகங்காரமெனப்படும்.

அன்னியனுடைய ஸ்திரீயைச் சேரவேண்டுமென்று வருகிற சித்தவிருத்திக்கு இராகமென்று பெயர். தனக்கு அபகாரம் பண்ணினவனுக்கு பதில் அபகாரம் பண்ணவேணுமென்று வருகிற சித்தவிருத்திக்கு துவேஷமென்று பெயர். புத்திர களத்திர தனதான்னிய சம்பத்துக்கள் மேலும் மேலும் உண்டாகவேண்டுமென்று வருகிற சித்தவிருத்திக்குக் காமம் என்று பெயர். தனக்குவேண்டிய காரியங்களில் விக்கினஞ் செய்கின்றவர்களிடத்தில் உண்டாகுங் கோரசித்தவிருத்திக்குக் குரோதம் என்று பெயர். தன்னுடைய பொருள்களில் ஒருவருக்கும் ஒன்றும் கொடாதிருக்கவேணுமென்று வருகிற சித்தவிருத்திக்கு லோபம் என்று பெயர். தன்னுடைய பெண்டீர் பிள்ளை பண்டபதார்த்தங்களில் அத்தியந்தப் பிரீதியுள்ள சித்தவிருத்திக்கு மோகமென்று பெயர். தன்னுடைய பலம் ஐஸ்வரியம் முதலிய பெருக்கத்தால் ஒருவரையும் மதியாது அவமதிக்கின்ற சித்தவிருத்திக்கு மதமென்று பெயர். ஒருவர் சுகத்தையும் பெருமையையும் கண்டு இவ்வளவு அவர்களுக்கு உண்டாகலாமாவென்று சகிக்காமல் நிந்திக்கின்ற சித்தவிருத்திக்கு மாச்சரியமென்று பெயர். தனக்கு வந்த துக்கம்போல பிறருக்கும் வரலாகாதா என்கிற சித்தவிருத்திக்கு ஈரிஷைஎன்றுபெயர். தன்னுடைய சுகத்தையும் பெருமையையும்போல பிறருக்கும் வரலாமாவென்று விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்கு அசூயையென்றுபெயர். தான்

பண்ணிய புண்ணியத்தைச் சகலரும் நன்ரு யிருக்கிற தென்று புகழும் புகழை இச்சிக்கின்ற சித்தவிருத்திக்கு டம்பம் என்று பெயர். புத்திர மித்திர தன தான்னிய சம்பத்து தனக்கு உள்ளதுபோலப் பிறருக்கும் இல்லை என்று இறுமாப்படைகிற சித்தவிருத்திக்கு தற்பம் என்று பெயர். நான் பிடித்தபிடி நிறைவேற்ருமல் விடுவேனுவென்கிற எண்ணமும் எவ்விதமும் நிறைவேற்றுவேன் நானென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு அகங்காரமென்று பெயர்.

சத்குணங்களாவன:— இச்சை, பக்தி, சிரத்தை என மூன்று. இச்சையென்பது மலஜல விசர்க்கஞ்செய்தல், பசிதாகத்திற்கு அன்னபானஞ் செய்தல். பக்தியென்பது குருவினிடத்திலும், ஈஸ்வரனிடத்திலும் தன்னின் மேம்பட்டோ ரிடத்திலும் விசுவாசஞ் செய்தல். சிரத்தையென்பது குருவினிடத்திலும் சுருதியினிடத்திலும் மிகவும் விசுவாசித்தல்.

முற்கூறிய பதின்மூன்று துர்குணத்தையும் விடுத்து இந்த மூன்று சற்குணத்தையு மடையவேண்டியது அவசியம். இத்துடன் முற்கூறிய பதின்மூன்று குணங்களையும் வைதீக மார்க்கத்தில் கைகொண்டு லௌகிக மார்க்கத்தில் கைவிடவேண்டு மென்பதும் அவசியம். இராஜதத்தில் தாமதம் பிரதானமாகும்போது அதிற் பிரதிபிம்பித்த சிதாபாசன் சோம்பல் நித்திரை மயக்கங்களையுடையவராவார்கள். இராஜதத்தில் சாத்வீகம் இராஜதம் ஆகிய இரண்டுமடங்கி தாமதம் மேலிடும்போது அதில் பிரதிபிம்பித்த சிதாபாசர் இம்மைப் பயனுக்கு உரித்தாயிருக்கின்ற லௌகீகத்திற்கும் மறுமைப்பயனுக்கு உரித்தாயிருக்கின்ற வைதீகத்திற்கும் விக்கினமாயிருக்கின்ற சோம்பல் நித்திரை மயக்கங்களையுடையவராவார்கள். இவை இப்படி மூலப்பிரகிருதியின் ராஜதகுணகற்பனை சொல்லப்பட்டது. மூலப் பிரகிருதியின் தமோகுணத்தில் ஆவரணம் விக்ஷேபம் என்னு மிரண்டு சக்திகளுண்டு. அதாவது மூலப் பிரகிருதியின் நீலக்கல்போலொத்த தமோகுணத்தில் ஆவரணம் விக்ஷேபம் என்னு மிரண்டு சக்திகளுண்டு. ஆவரணசத்தியாவது - மறைப்புச்சத்தி. விக்ஷேபசத்தியாவது - நினைப்புச்சத்தி. இவ்விரண்டில் ஆவரணசத்தி அல்லது மறைப்புச் சத்தியானது தத்துவஞானிகளுமீசுவரனுந்தவிர் மற்ற யாவர்களுக்கு சரீரத்திரயம் சிதாபாசன் சாக்ஷிசைதன்னியம் என்பவைகளில் ஒன்றற்கொன்று பேதந் தெரியவொட்டாமல் மறைத்து நிற்கும். சரீரத்திரயமாவது ஸ்தூல சூட்சுமகாரணம் என மூன்றும். சிதாபாசனுவது ஜீவன். சாக்ஷி சைதன்னியமாவது பிரமம். ஆவரணசத்தியினுல் மறைக்கப்பட்ட ஜீவன் இருபத்துஒன்பது தத்துவங்களையும் நானென்று தருமைப்பாடாக அபிமானிப்பான். இருபத்து ஒன்பது தத்துவங்களாவன:- ஸ்தூலசரீர தத்துவம் ஆறு, சூட்சுமசரீரதத்துவம் இருபது, காரண சரீரதத்துவம் ஒன்று, சிதாபாசன் ஒன்று, சாக்ஷிசைதன்னியம் ஒன்று என இருபத்தொன்பதேயாம். இந்த மறைப்புச் சத்தியால் மறைக்கப்பட்ட ஜீவன் அமாவாசை யிருளில் மேகஞ் சூழ்ந்தது போல மறைக்கப்பட்டிருப்பன். அந்த துர் அபிமானத்திற்கு அகங்காரகிரந்தி என்றும் சம்சாரபந்தமென்றும் சொல்லப்படும். சற்குரு கடாக்ஷத்தினுல் அனேக ஜன்ம நிஷ்காமிய புஞ்ச பரிபாகத்தினுல் ஈசுவர உபாசனையினுல் ஏகாக்கிர சித்தமும்பெற்று சற்குருவை கிட்டி அவரது கிருபையைப் பெற்று சற்சாஸ்திர துவாரத்தினுல் சிரவண மனன நிதித்தியாசனங்களைச் செய்து அந்த ஆவரணம் நீங்கி இருபத்தொன்பது தத்துவங்களுள் ஒன்றற்கொன்று பேதந் தெரிகின்றதுவே முக்தி. இவையே ஆவரண சத்தியின் காரியமாம், இவையே மறைப்புச் சத்தியின் வல்லபமாம். விக்ஷேபசத்தியினிடத்தில் சத்ததன் மாத்திரையான ஆகாசமும், ஆகாசத்தில் பரிசதன்மாத்திரையான வாயுவும், வாயுவில் ரூபதன்மாத்திரையான தேயுவும், தேயுவில் ரசதன்மாத்திரையான அப்புவும் அப்புவில் கந்த தன்மாத்திரையான பிருதுவியும் தோன்றிற்று. விக்ஷேப சக்தியாகிய நினைப்புச் சத்தியினிடத்தில் சப்தமே சுவபாவமா யிரானின்ற ஆகாசம் தோன்றிற்று. ஆகாசத்தில் பத்திலொன்ருக ரூபமே சுவபாவமா யிரானின்ற அப்பு தோன்றிற்று. அப்புவில் பத்திலொன்ருக கந்தமே சுவபாவமா யிரானின்ற பிருதுவி தோன்றிற்று. இந்த சூக்ஷ்ம பஞ்சபூதத்திற்கு காரணமாயிருக்கின்ற விக்ஷேப சக்தியினிடத்திலே தமசில்சத்துவம் தமசில் ரஜசு தமசில் தமசுஎன்னும் முக்குணங்களும் அப்படியிருந்தபடியினுலே அதன்காரியமான அந்தப்பஞ்சபூதங்களும் அம்முக்குணங்களுடனே தோன்றின. அந்த சூட்சும பஞ்சபூதங்கள் உற்பத்தியாகிறதற்குக் காரணமாயிருக்கின்ற நினைப்புச் சத்தியினிடத்திலே தமசில் சத்துவம் தமசில் ரஜசு தமசில் தமசு என்னு முக்குணங்களும் அற்பமாய் அதில் அடங்கி யிருந்தபடியால் அதன்காரியமான அந்தப் பஞ்சபூதங்களும் அம்முக்குணங்களுடனேதோன்றின. அந்தப் பஞ்சபூதங்களுக்கு தன்மாத்திரைகளென்றும் பஞ்சிகரணப்படாமல் அபஞ்சீகிருதமாயிருக்கின்றபடியால் சூட்சுமபூதங்களென்றும் முக்குணபூதங்களென்றும், இப்பஞ்ச பூதங்களிடத்தில் சூட்சுமசரீரங்களும் ஸ்தூல பூதங்களுந் தோன்றின. அதெங்ஙனமெனில் ஆகாசம் முதலான பஞ்சபூதங்களின் சத்துவாம்சத்தின் ஒவ்வொரு மாத்திரைக ளொன்ருகச் சேர்ந்து அந்தக்கரண முண்டாயிற்று.

(இன்னும்வரும்.)



உதைப்போம். நீ ஒருதுடைகாலி, நீ வந்தநாள்முதல் எங்கள் செல்வமெல்லாம் தொலைந்துபோயிற்று” என்ருர்கள். அவர்களைநோக்கி சன்னியாசி பொருமையுடன் “பிள்ளைகாள்! உங்களுக்கு பணம்தானே வேண்டும். இதோ இருக்கும் புதரில் ஓர் தவலை நிறைய திரவியம் இருக்கிறது. அதை எடுத்துக்கொண்டு நீங்களிருவரும் சமபாகமாய்ப் பங்கிட்டுக் கொள்ளுங்களென்ருர் அவ்வாறே அவ்விருவர்களும் அங்கேசென்று புதரைச் சோதிக்கையில் நாகப்பாம்பு சீறி விழுந்தது. உடனே உளறியடித்துக்கொண்டு இப்பால் ஓடிவந்து அந்தசாதுவைப்பார்த்து “அடே மோசக்காரா, திரவியமென்று ஆசைகாட்டி பாம்பிருக்குமிடத்துக்குப் போகச்சொன்னுயா, இதோ நாங்கள் உன்னைத் தடியாலடிக்கிறோம்” என்ருர்கள். உடனே மகான் அவர்களைநோக்கி “அடே மூடர்களே, நீங்கள் அந்தப் பாம்பைக்கொன்று புதரைப் பரிசோதியுங்கள் என்ருர். சகோதரர்கள் ஓர் மண்வெட்டியால் அப்பாம்பை வெட்டியெறிந்து திரவியத்தையெடுத்து சமபாகமாய்ப் பங்கிட்டுக்கொண்டு சுகமாய்க் காலங்கழித்தார்கள். பாம்பு ஜன்மத்தைவிட்டொழித்த இராமசுவாமிக்கு மகானுடையகிருபையால் ஓர் விமானம்வந்தது. உடனே அவன் அதிலேறிக்கொண்டு சொர்க்கலோகம்போனுன். இந்தக்கதையைப்படிக்கும் புத்திமான்கள் இதன்சாரத்தை அறியக்கடவர்.

## ஏற்பஇகழ்ச்சி.

### காப்பு.

நிலனுகி நீராகித் தீக்காற்ருகி
நிர்க்குணமாய் நிர்மலமாய் நீடுவாழ்வாய்
வலனுகி வானிரவி மதியமாகி
வளர்ந்தசெஞ் சடைமுதல்வன் புதல்வனுகிப்
பலநாளு மடியவர்கட் கமுதமாகிப்
பாதபமாய்க் கரந்துநின்று வள்ளிவேட்ட
நலமான நாளினவர் நினைந்தவேளை
நால்வாயாய் வந்தபதம் சிரமேல்வைப்பாம்.

“ஏற்பஇகழ்ச்சி” யென்னும் வாசகத்திற்கு யாசித்தல் இகழ்வானது எனப் பொருளாம். ஏற்பது எக்காரணம்பற்றி இழிவு என, அறியவேண்டின் உலகத்தின் பொது இயற்கையையும் இரவின் கொடுமையையும் ஆராயின் நன்கு விளங்கும்.

முன்னர் இரக்கவேண்டி வருவதற்கு காரணம் யாதென நோக்குவோம். இல்லாமையே முதற்காரணமாகும் அவ்வில்லாமைக்கோ காரணம் பல. அவற்றுள் மடித்தன்மை, சிக்கனமின்மை ஆசைப்பெருக்கம் முதலியவை முக்கியமானவை.

‘இலமென்றசை யிருப்பாரைக்காணி
னிலமென்னு நல்லாள் நகும்.’

தன்னிடத்தில் ஒன்றுமில்லையென்றெண்ணிச் சும்மாவிருக்கும் மடியரைக்கண்டால் உழைத்து வேலை செய்கிறவர்களுக்கெல்லாம் தக்கபலனையளித்து அவர்களைச் சுகமடையச்செய்யும் நிலமகளாகிய நல்லாள் சிரிப்பாள் என்பதாம். ஆகலின் சோம்பலே தரித்திரத்திற்கு வித்தென வுணர்ந்து ஏதேனுந் தொழின்முயற்சியை மேற்கொண்டு வாழமுயலாவிடின் சோம்பர்கள் தேம்பித்திரியவேண்டி வருமென்பதற் கையமில்லை.

இஃதைத் தெற்றெனவுணர்ந்து தொழின்முயற்சியை மேற்கொண்டு பொருளீட்டும் பலர் பின் நிரப்பால் வருந்துவ தென்னேவெனின் தாமீட்டியபொருளை செவ்வனே செலவிட அறியாமையே.

ஆனமுதலி லதிகஞ்செலவானுல்
மானமழிந்து மதிகெட்டுப்—போனதிசை
யெல்லார்க்குங்கள்ளனு யேழ்பிறப்புந்தீயனுய்
நல்லார்க்கும் பொல்லனு நாடு.

என்றபடி வரவுக்குத்தக்கசெலவு செய்யவேண்டுமென்பதையுணராது பலர் அதிகம் செலவிடுகிறுர்கள். அதற்கு நிமித்தம் தங்களைப்பற்றி அவர் உட்கொண்டுள்ள உயர்ந்த் எண்ணமே. தம்மைச் சூழ்ந்துள்ள பலரின் தற்கால பழிப்பையஞ்சி இடம்பமாய்ச் செலவிட்டு கைகள்வறண்டு மிக்க வினைப்பட்டு வருந்துகிறுர்கள். அந்தோ! இவர்கள் மதியென்னே. தம் முன்னேர் மிக்க தனிகரா யிருந்தாரென்றும் தாங்கள் அப்பெரியாரின் சந்ததியென்றும் பிறர் புகழக்கேட்ட சிலர் தம் அற்றைய நிலைமையைமறந்து தமதல்லாத முன்னேர் நிலையிலிருப்பதாக மருண்டு மதிமாறிச் செலவிட்டு வருந்துவதை நாம் காண்கிறேம். இவர்கள் நிலையும் பரிதபிக்கத்தக்கதே. ஆகலின் எக்காலத்தும் தங்கள் நிலையை உள்ளபடியுணர்ந்து செலவிடுவோர் மிடியென்னும் பாவியின் கொடியவயிற்றினின்றும் தப்புவாரென்பது திண்ணம்.

மேலும் இன்மைக்கு ஆசைப்பெருக்கம் ஒருகாரணமாகக் கூறப்பட்டது. ஒருவன் தன் னவாவை யடக்காவிடில் “பிடிபடுக்கப்பட்டகளிறு” போன்று, தன் மனத்தின்வழி யொழுகித்தான் அதையடக்கி யாளமுடியாதவனுய் தனக்கு சுகமும் கிடைக்காமல் அல்லலுறுவான். உள்ளது போதுமென்ற தெளிவே ஒருவனுக்கு நிறைந்த செல்வமென்பது “பணக்கார மூடர்” என்ற கதையால் தெள்ளிதிற் புலப்படும். ஆதலின் மேற்கூறப்பட்ட உழைப்பு சிக்கனம் கிடைத்தமட்டில் திருப்தி

ஆகிய நற்குணங்களைக் கொண்டொழுகின் ஒருவன்மிடியால் வருந்தானென்பதற் கையமில்லை எனினும்

"ஊழிற்பெருவலியா வுளமற்றொன்று
சூழினூஉம் தான்முந்துறும்"

என்றபடி மிக முயற்சிசெய்து பொருளீட்டினும் ஈட்டினபொருளை சிக்கனச் செலவிடினும் அவைகட்குமாறாக நம் யத்தனங்களையெல்லாம் பாழ்படச்செய்யும் விதிவலியை யார் கடக்கற்பாலர். இவ்வகை விதிவலியால் கொணரப்படும் இலம்பாட்டின் கொடுமையைச் சற்றே பகர்வாம். இவ்விலம்பாடு வலம்பாட்டையொழித்து இழித்தக வியற்றத்தூண்டி புறை வாய்வை அடக்கும் அன்பு முதலிய நற்குணங்களை ஒருவனின்றும் அகற்றுகின்றது. இல்லானுக்கு அன்பு இடம்பொருளேவலாதிய விருந்தும் பயன்படாவாம். இவ்வுலகு இன்பங்களை அநுபவியாதபடி தடுப்பதுடன் மறுமையிலும் அவனை நற்கதிக்குய்க்கும் நெறியையடைக்கும் தாழ் ஆகிறது. இதனாலேயே "கொடிது கொடிது வறுமைகொடிதென்றார்" ஔவையாரும். இத்தகைய வறுமையுற்றப் போழ்தும் தைரிய இலக்குமியைக் கைவிடாதுபோற்றி ஏற்பது இன்றெனா விரதமேற்கொண்டு "தொழுதூண்சுவையின் உழுதூணினிது" எனினும் இரவூண்சுவையின் றொழுதூ ணினிதெனக்கொண்டு ஒருவரைச்சார்ந்து வழிபட்டொழுகி ஊண்மிசைத்தலே உத்தமமாம்.

நிற்க உலகின் பொதுவியற்கை யின்னதென்றோர்வோம். மன்பதையிற் பெரும்பாலர் திக்குணத்தரேயன்றித் திங்குணத்தரல்லர். 'நம்மாலே யாவரிநல்கூர்ந்தார் என்றொன்றுந் தம்மாலாமாக் கமிலரென்று' எண்ணிச் செருக்கிப் பிறர்க்கீய மனவொவ்வாமலும், ஈயாமலும், 'நிழலிட்டு மலர் காய் கனிகளீந்தருளும் மாமரத்தைக்கட்டும்மடை முள்ளை யொத்து, ஈதலைமறுத்தும் வாளுளை விணாக்கி யருநரகுய்க்கும் நெறியைப் பின்பற்றித் திரிந்துள்ளார் பலர். மேலும்.

'வருவாயுட்கால் வழங்கிவாழ்தலினிதே'
'விருந்துபுறந்தரான் இல்வாழ்க்கையென்பதிருள்'

'அதிதியெவன்பால்வந்து முகம்வாடுமோவவன்றன்
பதிதருபுண்ணியங்கொண்டு பாவத்தையவர்க்கீவான்
மதிகொடியசண்டாள மனைக்கண்ணுங்கதிரெறிப்பான்
புதியரெவர்வந்துறினும் பூசிப்பார்பெரியோரே.'

'மண்ணூர்சட்டிகரத்தேந்தி மரநாய்கெனவுங்காலினராய், அண்ணுந்தோடியிரப்பாரை யறிந்தோமறிந்தோமம்மம்மா, பண்ணூர்மொழியார்பாலடிசில் பைம்பொற்கலத்திற்பரிந்தூட்ட, உண்ணூநின்றேயொருவர்க் கழுதவாமரந்தரிவர்தாமே.'

பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லை பிறந்துமண்மே, லிறக்கும்பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவே, குறிக்குமிச்செல்வம் சிவன்றந்ததென்று கொடுக்கறியா, திறக்குங்குலாமருக் கென்செய்குவேன் கச்சியேகம்பனே.'

முதலிய பல நீதிமொழிகளைக் கற்று. கற்றவழி நிற்பதை முற்றும் மறந்ததும் போதாதென்று, 'படிப்பதிராமாயண மிடிப்பதுவிண்டுகோயிலே' என்றபடி அரும்பொன்னும்மணியு மடுக்காய்க்குவித்துத் தாமுமநுபவியாது, பிறர்க்கு மீயாத பூதங்கள் பலவுள. அத்தகைய பூதம் தனதென்றிருக்கும்பொருளை யாதுமெனதென்றிருப்பன்; என்றோவெனின் அப்பூதமும் அப்பொருளை வழங்காபயன் றுவ்வா யாதுமத்தகையனே. ஆதலின் 'இல்லார் குறையிரந்து நிற்பபோற்றாமும் தலைவணங்கித் தாழப்பெறினே, பொருளுடையார் அஃதுடையார் எனப்படுவர். அதன்றி அண்டியிரப்பார்க்கீயாதார் செல்வம், வம்புக்காம், பாழ்க்காம் பரத்தையர்க்காம் என்றது சொல்லாதுணரற்பாலது.

மேற்கூறிய தகையர் மெத்தவுளரேனும், பனை, தெங்கு, கமுகு, கதலி, யாதிகளை ஒத்த ஈகையாளரும் பல்லோர் உளர். இந்நல்லார் புகழ்ப்பாடதிகம் வேண்டிற்றிலர். இந்நல்லவர்க்கன்றி யல்லவர்க்காக உலகிலே பெறுகையில்லை.

இனி இரவின்கொடுமையை யியம்புவோம்,

"புறத்துத்தன்னின் மைநலியகத்துத்தன்
நன்ஞானநீக்கி நிறீஇயொருவனை
யியாயெனக்கென் றிரப்பானேலந்நிலையே
மாயாதோ மாற்றிவிடின்".

வெளியில் தன்னின்மை, ஒருவனையிரக்கத் தூண்டி வருத்தவும், 'இன்னுமைவேண்டி னிரவெழுக'

'நல்லாறெனினுங் கொளல்தீதுமேலுலக
மில்லெனினு மீதலேநன்று'

'பல்லெலாந் தெரியக்காட்டிப் பருவரல் முகத்திற்கோட்டி, சொல்லெலாம்சொல்லினூட்டித் துணைக்கரம் விரித்துநீட்டி, மல்லெலாமகலவோட்டி மானமென்பதனைவீட்டி, யில்லெலாமிரந்தலந்தோ விதிவிழிவெந்ஞான்றும்'.

என்னும் நீதிகளைப் படித்ததனாலுண்டாய தன்னல்ல ஞானமெல்லாம்,விரிகதிர் வரக்கண்ட பனியன்னவவ்வின்மைக்கு முன்னரகன்றோடவும், ஓர் செல்வனைச்



சார்ந்து நின்று, வேதம் பயின்றவாயால் 'ஈமின்' என்னும் புன்சொல்லைச் சொல்லும்போது, மனமழுங்கி ஏத்துணை யல்லலவனுறுவான். அக்கால் அச்செல்வன் சற்றும் இரப்போன் மனநிலையைப் பகுத்தறியாது இல்லையென மறுக்கின் அவ்யாசகன் மதிநீங்கி மூர்ச்சித்துக் கீழ்வீழ்ந் துயிர்துறந்து மடியானோ? இதனாலன்றோ "செல்வர்பாற் சென்றீ, யெனக்கென்னு மிம்மாற்றந் தனக்குரியமானந் துடைத்து தருமத்தை வேர்பறித்து மானந்துடைப்ப தோர்வாள்" எனக் கூறியுள்ளார். மேலும் இழிதக்கவையைச்செய்து ஒருவன் பசியாரவுண்டிருத்தலின் பழிக்கத்தக்கவையை செய்யாது பசித்திருத்தல் நலமாகும். ஏனெனில் எந்தஜீவனை யுடலில் நிறுத்த எண்ணி, இழிதொழில்களைச்செய்து உணவுதேடுகிறானோ, அந்த சிவனுக்கு ஏமமில்லாமையால் அஃது தன்னிச்சையில் நீங்குகிறது. அன்றியும் ஒருவன் 'அழித்துப்பிறக்கும் பிறப்பும்' விழித்திமைக்கும் மாத்திரையாக விருக்கிறது.

ஆயினும்,

'இரக்கவிரத்தக் கார்க்காணிற்கரப்பின்
அவர்பழி தம்பழியன்று'
'இன்பமொருவற் கிரத்தலிறந்தவை
துன்பமுறுவரின்' என்று கூறியுள்ளபடி,

புல்லா அகம்புகுமி னுண்ணுமினென்பவர் மாட்டும், கரவாதுவந்தியுங் கண்ணன்னார் கண்ணும், இரக்கின் என்னையென்று வினவின், இரவினை யுள்ளுங்காலுள்ள முருகுமால் அவ்விரவினையும் இரவென்னுங் காரணத்தான் மேலோர் இழித்து விலக்குவர்.

சுருக்கிப்புகலின், உலகில் யாசகர் குறையறிந்தீவோர்மிகச் சிலரே யாதலானும்,அத்தகைய வள்ளல்களிடத்தும்சென் றிரத்தலிழிவாதலானும், அவ்விரவை நினைக்குந்தோறும் மனமுருகுமாதலானும், இருப்பவர் கரப்பின் ஏற்பவர்செயலற்று மடிவராதலானும் ஏற்பது மெத்த இகழ்ச்சியாம்.

## கடவுளைக்காட்டு.

கடவுளைக்காட்டு என்று சிலநாஸ்திகர்கள் நம்மைக் கேட்பதுண்டு. இப்போதும் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் 4-வது 5-வது வகுப்புகளிற் படிக்கும் அற்பபடிப்பாளிகளாகிய பிள்ளைகள் "ஸ்வாமியில்லை. எல்லாம் சுபாவம். ஸ்வாமியிருந்தால் அவரை இங்கேவரச்சொல்லுபார்ப்போம்" என்று கூறுகிறார்கள். இத்தகையோரை ஆகாசத்திலுள்ள நக்ஷத்திரங்களைப் பார்த்திருக்கிறீர்களாவென்றால், ஆம் பார்த்திருக்கிறோம் என்பார்கள். அடடா அவைகள் நக்ஷத்திரங்களினின்றும்வீசும் பிரகாசமன்றோ? ஒளியைப் பார்த்துவிட்டு நக்ஷத்திரத்தைப் பார்த்ததாக சொல்லுகிறீர்களே யெனில் பதில் சொல்லத் தெரியாமல் விழிப்பார்கள். வெளிச்சத்தைக் கண்டு நக்ஷத்திரமுண்டென ஊகிப்பதுபோல் சிருஷ்டியைக்கண்டு கடவுளுண்டென ஊகிக்கவேண்டும். கடவுளைக்காட்டினால் பார்ப்பவனுக்குக் கண்ணில்லாமற் போனால் அவரை எப்படி தரிசிக்கக்கூடும்? பிறவிக்குருடன் ஆகாசத்தில் சூரியனில்லையென்று சொல்லுவான். அவன் சூரியனைக்காட்டினாலன்றி அது இருக்கிறதாக ஒப்புக்கொள்ளமாட்டேனென்றால் நாமென்ன செய்கிறது. அப்படிப்பட்ட குருடனை சற்றுநேரம் வெயிலில் நிறுத்திவைத்தால் "ஐயையோ! வெயில் சுடுகிறதே" யென்பான். இந்த வெயில்தானப்பா சூரியனுடைய ஒளி, இனியாவது சூரியனிருப்பதாக எண்ணிக்கொள் என்று கூறலாம். அதுபோல் கடவுளின்கிருபையையும் தண்டனையையும் அடைந்த புண்ணியபுருஷர்களையும் பாவிகளையும் காட்டிக் கடவுளுண்டென்பதை யொப்புக்கொள்ளும்படி கூறவேண்டும். "நரி கண்ணை மூடினால் உலகம் அஸ்தமிக்குமா" என்று நாம் சிலவேளை சொல்வதுண்டு. அதுபோல் நாஸ்திகர்கள் கடவுளில்லை யென்பதால் கடவுள் இல்லாமற் போய்விடமாட்டார். கண்ணுக்குத் தென்படாத விண் மீன்களைத்தூரதிருஷ்டிக் கண்ணாடியால் காண்பதுபோல் சாஸ்திரங்களி னுதவியால் கடவுளினிருப்பை யறியவேண்டும். எதிரிலுள்ளபொருள் தெரியாதது கண்ணின் தோஷமேயன்றி பொருளின் குறையன்று. பஞ்சேந்திரியங்களில்லாவிட்டால் நாம் இப்பூமியிலுள்ள வஸ்துக்களை யனுபவிக்க முடியாது. ஏதேனும் ஓரிந்திரியத்தின் சக்தி குறைந்தால் அதனால் அடையக்கூடிய சுகம் கெட்டுப்போகிறது. ஜலதோஷம் அல்லது ஜலுப்புப்பிடித்தவன் புஷ்பத்தினுடைய வாசனையறியான். அதனால் புஷ்பத்துக்கு வாசனையில்லையென்று சாதிக்கலாமா? செவிடனாயிருப்பவன் சங்கீதத்தின்தொனியைக்கேட்கமுடியாது, அதனால் சங்கீதத்தில் இன்பமில்லை யென்னலாமா? சிலருக்கு நாக்கில் ஓர்வித தடிப்பு உண்டாகும். எந்தப் பதார்த்தத்தைத் தின்றாலும் ருசிதெரியாது. அதுபோல் ஞானக்கண்ணில்லாத மூடனுக்கு ஸ்வாமியின் மகிமை புலப்படாது. சர்வவல்லமையுள்ள ஸ்வாமியின் மகிமையை அறியாதமூடர்களும் இவ்வுலகத்தில் நாஸ்திகர்களெனப் பெயர்பூண்டு வசிப்பார்களானால் பெரியோர்களினருமை, ஞானத்தை விர்த்திசெய்யும் புஸ்தகம், பத்திரிகை ஆகிய இவற்றின் பெருமை ஆகிய இவைகளை யறியாதோர் பலரிருப்பது ஆச்சரியமன்று. மேலும் கடவுளுண்டென்பதை நிரூபிக்க அநேக கார

ணங்க ளிருக்கின்றன. அறுகம்புல் நுனியில் தங்கிய பனித்துளி யளவாகியசுக்கிலமானது, காசராஜுதி அவய வங்களாக உருப்பட்டு உயிர்பெற்று எண்சாணுடம்பில் ஒருசாணளவாகிய தாய்வயிற்றில் இரப்பை ஜலப்பை மலப்பை முதலியவைகளுக்குரிய பல விடங்களுந்தவிர மிகவும் சிறிதாகிய கருப்பாசயப் பையினிடத்திற் கட்டுண்டிருந்து, அதனுல் உறுத்தப்பட்டு, உதராக்கினியில் வெந்து, பிரசூதவாயு முரித்துத்தள்ள அதோமுகமாய்த் திரும்பி நெருக்குண்டு சிசு உற்பவிக்கின்ற அதிசயத்தை என்னென்றுசொல்லுகின்றது. இப்படிச்செய்கின்றதார்? மனிதர்முகம் ஒன்றுபோல மற்றென்றிருக்கலாகாதா? அதது வெவ்வேறு சாயலாயிருக்கின்றதே, அன்றியும் அனைவரும் ஒருவர்க்கொருவர் உருவம், குணம்,ஓசை, செய்கை முதலியவைகளாலும் பலவேறு வகைப்பட் டிருக்கின்றார்களே, இதென்ன ஆச்சரியம்?

(இன்னும்வரும்.)

## NEWS AND NOTES.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.



சிவபக்தசிகாமணிகளுக்கு

# முக்கிய அறிவிப்பு.

## ஸ்ரீ அருணசலபுராணம்

மூலமும்-உரையும்.

இதைப்போன்ற சுத்தப்பதிப்பாகப்பார்த்து வாங்கவும்.

இவ் வருணசலபுராணத்தை இதுகாறும் கிரந்த கர்த்தாவாகிய சைவ-எல்லப்பநாவலர்வாக்கை மாற்றியும் சொன்னயம் பொருணயம் வேறுபட்டுச் சிதைந்துக் கிடப்பதைக் கவனிக்காமலும் அநேகர் அச்சிட்டு விற்றுவந்தனர்கள். இப்புராணத்தைச் சுத்தப்பிரதியாக அச்சிற்பதிப்பிக்கும்படி திருவண்ணமலை தேவஸ்தான தருமகர்த்தராகிய இராய்பஹதூர் ஆற்காடு - தனக்கோட்டி முதலியாரவர்கள் விரும்பியவண்ணம், சில வித்வான்களைக்கொண்டு நன்காராய்ச்சி செய்வித்து ஒவ்வொரு சருக்கத்தின் முதலில் அச்சருக்கத்தின் கருத்தைக் கத்தியரூபமாகச் சுருக்கியெழுதியும், திருவண்ணமலைத் தலத்தின் தேவாரம் திருப்புகழ் முதலிய தோத்திரங்களைத் திரட்டியும் ஒவ்வொரு சருக்கந்தோறும் கண்டோர் மனங்களிக்கும்படி விசித்திரமான ஐதிகப்படங்களும் அமைத்துச் சுத்தப்பிரதியாக சென்னைமுதலிய விடங்களிலுள்ள புஸ்தகவியாபாரிகள், அச்சுக்கூடத்தலைவர்கள் முதலானவர்களுடைய பொருளுதவியைக்கொண்டு தளமானகாயிதத்தில் அச்சிட்டு சென்னை மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்தலைவராகிய கொ - லோகநாத முதலியாரால் கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்செய்து வெளியிடப்பட்டிருக்கின்றன.

இப்புராண விற்பனையினுல்வரும் இலாபத்தைக் கொண்டு இவ்வருடமுதல் சென்னைமுதலிய விடங்களிலுள்ள புத்தகவியாபாரிகளும், அச்சுக்கூடத் தலைவர்களும் சென்னையில் ஒருசபைசேர்ந்து, கினைத்தமாத்திரத்தில் முத்திதருவதாகிய திருவண்ணமலையில் ஸ்ரீசாஸ்வதி பூஜாமடம் என்று திருமடம் ஒன்று கட்ட வுத்தேசித் திருக்கின்றனர். ஆதலால், இந்த அருணசலபுராணத்தை விலைக்கு வாங்குவோர் ஷை ஸ்தலத்தில் கட்டப்படும் ஷை திருமடத்தின் தருமகைங்கரியத்துக்கு உதவிசெய்தவர்க ளாவதோடு, அதனுல்வரும் பெருஞ் சிவபுண்ணிய பலனையும் பெறுவரென்பது உண்மை! உண்மை!! சுபம்.

இகபரசுகசாதனி பத்திராதிபரும்,
மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்தலைவருமாகிய ]
கொ. லோகநாதமுதலியார்.
நெ-29, வைத்தியநாதமுதலிவீதி, சேன்னை.

ஓம்.
பரப்பிரம்மணேநம:.
"ஏகம் சத்விப்ரா பஹுதா வதந்தி."

# இகபரசுகசாதனி.

11 APR 1904
MADRAS.

வாலியம் I. } 1903வரு டிசம்பர்மீ { புத்தகம் VIII

## மனனமாலை.

பொருளாகக்கண்டபொருளெவைக்குமுதற்
பொருளாகிப் போதமாகித்
தெருளாகிக்கருதுமன்பர் மிடிதீரப்
பருகவந்த செழுந்தேனுகி
யருளாஞேர்க்ககம்புறமென் றுன்னுத
பூரணவா னந்தமாகி
யிருடீரவிளங்குபொரு ளியாதந்தப்
பொருளினையா மிறைஞ்சிநிற்பாம்.

தானுனதன்மயமே யல்லாலொன்றைத்
தலையெடுக்கவொட்டாது தலைப்பட்டாங்கே
போனுலுங்கர்ப்பூர தீபம்போலப்
போயொளிப்பதல்லாது புலம்வேறின்று
ஞானுகாரத்திஞேடு ஞேயமற்ற
ஞாதுருவுநழுவாம னழுவிநிற்கு
மானுலுமிதன்பெருமை யெவர்க்கார்சொல்வா
ரதுவானலதுவாவ ரதுவேசொல்லும்.

கண்ணுணின்ற வொளியைக்கருத்தினை
விண்ணுணின்று விளங்கியமெய்யினை
யெண்ணியெண்ணி யிரவும்பகலுமே
நண்ணுகின்றவர் நான்றெழுந்தெய்வமே.

பறையரென்பதும் பண்டிதரென்பது
மறையுமிந்த மலினவுடலையே
பறையர்தம்முளும் பண்டிதர்தம்முளு
மறிவனேகமென் றுாறிந்தோர்களே.

அஞ்சுபுலன்வழியோடி யலைகின்றமனமேவா
நஞ்சமுதமாயுண்ட நாதன்பாற்போவோம்வா
தஞ்சமினிவேறில்லை சங்கரன்றாட்டஞ்சமன்றி
யுஞ்சிடவோர்நெறியில்லை யோகியர்பாற்போவோம்வா.

பெரியவர்தந் தரிசனத்தாற் பெறுதபொருளொன்றுண்டோ, வரியவவர்மொழித்தடியா லடிக்கின்றேன் வாமனமே, யொருபொழுதோர் நொடியளவு நிற்பாயேலுயர்முத்திக், கரைகாண்பேன்மெய்ஞ்ஞானக் கடவுளையுங்காண்பேனே.

உயிர்க்குயிராயீச னுழியாமனிற்க
வுயிர்க்குயிராக்கண் டிங்குணரா—துயிர்க்குயிரா
வேறுக்கிப்பூசிக்கும் விரகிலிக்குமுண்டாங்கொல்
வேறுகாமெய்ஞ்ஞான வீடு.

எல்லாமறிவாகக் காண்டலெழிற்பூசை
யொல்காவவனுதலுட்பூசை—நில்லா
வுலகத்தைமாய வுடலைத்துடித்த
லிலகுமரன்றேத் திரமாயெண்.

கற்புடைமகளிரெல்லாங் கணவனேதெய்வமென்பர்
சிற்பொலிசமயவேடர் சிலையையேதெய்வமென்பர்
தற்கொலிமாந்தரெல்லாந் தாருவேதெய்வமென்ப
ரற்புறுபெரியோரெல்லா மறிவையேதெய்வமென்பர்.

என்போலெளியவரு மெங்கெங்கும்பார்த்தாலு
முன்போல்வலியவரு முண்டோபராபரமே.

பாலரொடுபேயர்பித்தர் பான்மையெனநிற்பதுவே
சீலமிகுஞானியர்தஞ் செய்கைபராபரமே.

வல்லமையேகாட்டுகின்ற மாமாயைநானெருவ
னில்லையெனினெங்கே யிருக்கும்பராபரமே.

சூதாடுவார்போற்றுவண்டு துவண்டுமனம்
வாதாடினென்னபலன் வாய்க்கும்பராபரமே.

ஆயிரஞ்சொன்னுலு மறியாதவஞ்சநெஞ்சப்
பேயரோடுகூடிப் பிழைகாண்பராபரமே.

சொல்லும்பொருளுந் தொடராவருணிறைவிற்
செல்லும்படிக்கருணை செய்தாய்பராபரமே.

சாவதுவும்பிறப்பதுவுந் தனுவன்றேவஃதறிதி
சாவதுவும்பிறப்பதுவுந் தாமென்றேயுரைதருவார்
போவதுவும்வருவதுவும் புரியட்டசரீரமே
போவதிலைவருவதிலை போதமயப்பொருளுமே.

## வேதாந்தம்.

வேதத்தினுடைய உண்மையானமுடிவைத் தெரிவிப்பது வேதாந்தம். அதையனுசரிப்பவர்கள் வேதாந்திகள். அவர்களுக்கு வேதமும் உபநிஷத்துக்களும் ஆதாரம். குருவுக்கும்சிஷ்யனுக்கும் நடந்த சம்பாஷணைகளையும் மகாரிஷிகள் தங்கள் சுய அனுபவத்தில் கண்டுபிடித்த உண்மைப்பொருளையும் உடைத்தாயிருப்பது உபநிஷதங்கள். உபநிஷதங்கள் அனேகமிருக்கின்றன. அவைகளில் ஈசா, கேனு, காத, பிரச்ன, மண்டூக, மாண்டுக்கிய, ஆயித்திரேய, தெயித்ரேய, சாந்தோக்கிய, பிரகதாரண்ணியக, சுவேத சுவாதர உபநிஷத்துக்களே முக்கியமானவைகள். இவைகள்தவிர பகவத்கீதையும், பிரம்மசூத்திரமும் பின்னால் உண்டான வேதாந்தநூல்கள், இவைகளுக்குப்பின் உண்டானவை யோகவாசிஷ்டமும் பஞ்சதசியுமே. வேதாந்தத்தினுடைய முக்கியமான கருத்தென்ன? ஏகமேவாத்வைதம் பிரம்மம் (உள்ளது ஒன்றே அதுதான் பிரம்மம்) உள்ளது ஒன்றேயானால். நானாவிதமான பேதங்களடங்கிய இவ்வுலக மெவ்வாறு தோன்றியது என்பது ஒரு பெருங்கேள்வி. நம்மிடத்திலிருக்கும் அனாதி அவித்தையே இவ்வுலகந் தோன்றுவதற்குக் காரணமென்று வேதாந்தம் சமாதானங் கூறுகிறது. இந்த அவித்தையினால் மனிதன்தான் சச்சிதானந்த சொரூபன் என்பதைமறந்து, தான்வேறு, பிரம்மம்வேறு, ஈசுவரன்வேறு, உலகம்வேறு, ஜீவர்கள் தனித்தனியே வெவ்வேறு என்னும் பேதஞானத்தையடைந்து தானல்லாததைத் தனதென்று பிரமித்து சமுசாரத்திலாழ்ந்து அவஸ்தைப்படுகிறான். வேதாந்திகள், எப்போது அவித்தை உண்டாயிற்று. என்ற கேள்வியைக் கேட்பதில்லை. அந்தகேள்விக்கு சமாதானத்தைக் கோருவதுமில்லை. ஒரு வீடு தீபற்றியெரியும்போது அத்தீயைத்தணிக்க எத்தனஞ் செய்யவேண்டியது மனிதனுடையவேலை அதைச்செய்யாமல் தீ எப்படி பிடித்தது? அதற்கு என்னகாரணமிருக்கும்? என்று யோசித்துக்கொண்டிருந்தால் வீடுமுழுமையும் எரிந்து சாம்பலாய்ப் போகவேண்டியதே. ஆதலால் உலகசமுசாரத்திலிருக்கும் துக்கத்திற்குக் காரணம் அவித்தையென்றும் அதை யொழிப்பதற்கு ஞானமே முக்கியமென்றும் அனுபவத்தில் கண்டபின், அவித்தையையொழித்து ஞானத்தையடைய ஒவ்வொருவரும் பிரயத்தினம் செய்யவேண்டியதே யல்லாமல், அவித்தை எப்போது உண்டாயிற்று? என்வந்தது? என்ற கேள்விகளைக்கேட்பதில் பிரயோசனமில்லையென்று வேதாந்திகள் கூறுவார்கள். அக்கேள்விகளுக்குச் சமாதானம்ஒருவாறு பெற்றாலும் பயனில்லையென்றும், ஞானத்தையடைய கூறியிருக்கும் வழிகளை யனுசரித்து ஞானத்தையடைந்தால் அவித்தை உண்டானதெப்போதென்றும் ஏன் உண்டாயிற்றென்றும் நன்றாய் விளங்குமென்றும் வேதாந்திகள் சொல்லுகிறார்கள். வேதாந்தமானது உள்ளது இரண்டல்லவென்று ஸ்தாபிக்கவந்ததேயன்றி வேறல்ல. காண்பான் காட்சி இவைகள் இரண்டும் சத்தியமல்ல, காண்பானே சத்தியமாயுள்ளவன். காட்சிகளெல்லாம் காண்பானிடத்து கற்பிதம் என்று வேதாந்தம் கூறுகிறது. வேதாந்தத்தினுடைய கருத்தை பெரியோர்கள் மூன்றுவிதமாக அறிந்திருக்கிறார்கள். துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்துவைதம் என அவைகள் மூன்று.

### துவைதம்.

விஷ்ணுதான் சர்வேசுவரன், சகல கல்யாணகுணநிதி சர்வவல்லமையுடையவன். ஜடப்பிரகிருதியினின்று ஜகத்தை விஷ்ணு சிருஷ்டித்தபடியால் விஷ்ணு நிமித்தகாரணம். ஜடப்பிரகிருதி உபாதானகாரணம். விஷ்ணு, ஜீவன், பிரகிருதி இம்மூன்றும் நித்தியமானவை, அழிவற்றவை. இவைகள் தனித்தனியே சத்தியமாய் ஒன்றுக்கொன்று வேறாயுள்ளவை. ஆனால் பிரகிருதியும் ஜீவனும் விஷ்ணுவின் அதிகாரத்திற் குட்பட்டவை. பிரகிருதியின் சத்துவ, ரஜஸ்தமோகுணங்களால் ஜீவன் பாதிக்கப்பட்டு அநேக கர்மங்களைச் செய்கிறான். கர்மத்தினால் ஜீவன் ஜனனமரணத்தை யடைகிறான். ஜீவர்களில் நித்திய சமுசாரிகளென்றும் நித்திய நரகிகள்என்றும், முக்திக்கு யோக்கியர்களென்றும் மூன்று பிரிவுள்ளன. ஜீவர்களுடைய சொரூபத்திலும் மனுஷ்ய பசுபக்ஷியாதி அனந்தபேதங்களுண்டு. முக்திக்கு அருகர்களான ஜீவர்கள்தவிற மற்ற ஜீவர்களுக்கு முக்தியென்பதில்லை. முக்திக்கு யோக்கியர்களான ஜீவர்களில் தங்கள் தங்கள் சொரூபம் எதுவோ அந்த சொரூபத்துடன் முக்தியடைகிறார்கள். முக்தியில் அவரவர்களுடைய உபாசனைக்கு தகுந்தமாதிரி தாரதம்மியமுண்டு. முக்தியடைவதற்கு உபாயம் விஷ்ணுவினிடத்து பக்திசெய்வதுதான் என்று சொல்லுவார்கள் துவைதிகள். இவர்கள்தான் வைஷ்ணவ துவைதிகள். இப்படியே சைவதுவைதிகள் சிலரிருக்கலாம்.

### விசிஷ்டாத்வைதம்.

விசிஷ்டாத்வைதம் என்னும் பதம் விசிஷ்டம் அத்வைதம் என்றிரண்டாகப் பிரிகிறது. விசிஷ்டம் என்ற



பதத்திற்கு விசேஷணங்களுடன் கூடினது என்று அர்த்தம். அத்வைதம் என்றால் இரண்டற்றது. ஆகவே விசிஷ்டாத்வைதமென்றால் விசேஷணங்களுடன் கூடியிருக்கும் ஒன்று, அதாவது சித் அசித் என்னும் விசேஷணங்களுடன் கூடிய பிரம்மம் ஒன்று என்று சித்தாந்தம். சித், அசித், பிரம்மம் ஆகிய மூன்றையும் தத்துவத்திரயங்கள் என்று கூறுவார்கள். இவைகளில் பரப்பிரம்மம் ஸ்வதந்திர தத்துவமாய் சத்தியமாயுள்ளது. சித், அசித் இரண்டும் பரப்பிரம்மத்தை ஆச்ரயித்தவைகள். ஒரு புஷ்பமானது வாசனை நிறம் முதலிய குணங்களுடன் கூடியிருப்பதுபோலும், புஷ்பத்தையும் அக்குணங்களையும் வேறாகப்பிரிக்க முடியாததுபோலும், பரப்பிரம்மமானது சேதனு சேதனங்களுடன் சேர்ந்து ஒரேவஸ்துவா யிருக்கிறது. பரப்பிரம்மமானது சித்து அசித்துக்களைச் சரீரமாக வைத்துக்கொண்டுதான் எல்லாவற்றிலும் சரீரியாயும் அந்தரியாமியாயு மிருக்கிறது. சித் என்பது ஜீவன் அசித் என்பது காலம், மூலப்பிரகிருதி, சத்வம், ரஜஸ்ஸு, தமஸ்ஸு என்னும் முக்குணங்களடங்கியது. கடத்திற்கு மண் உபாதான காரணமா யிருப்பதுபோல பிரம்மாண்ட சிருஷ்டிக்கு மூலப்பிருகிரிதியே உபாதானகாரணம் ஒவ்வொரு மனிதனிடத்திருக்கும் ஜீவாத்மா வெவ்வேறு. ஜீவனுடைய ஞானம் கர்மபந்தத்தா லடங்கியிருக்கிறது. மோக்ஷமடையும் வரையிலும் ஜீவனை கர்மம்விடாது. ஜீவன் தன்னுடைய நிஜமான சொரூபத்திலிருந்து ஆநந்தத்தை யடைவதுதான் கைவல்ய மோக்ஷமென்றும், வைகுண்ட லோகத்தில் பரமாத்மாவுக்குச் சமீபமாய்ச் சென்று ஜகத் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்கள் முதலிய ஜகத் வியாபாரங்கள், லக்ஷ்மி பதித்துவம் இவைகள்தவிர மற்றெல்லா விஷயங்களிலும் பரமாத்மாவுக்குச் சமானமாயிருந்து பிரம்மாநந்தத்தையனுபவிப்பதே பிரம்மானந்த மோக்ஷமாம். ஜீவன் பிரம்மத்தில் லயமாகிறதென்ற வியவகாரங் கிடையாதென்று விசிஷ்டாத்வைதிகள் கூறுவார்கள்.

### அத்துவைதம்.

பிரம்மம் ஒன்றே சத்தியமாயுள்ளது இரண்டாவது வஸ்து வாஸ்தவமாயில்லை ஜெகஜீவபரங்கள் தோற்றமேயன்றி உண்மையானவையல்ல பிரம்மமானது நிர்க்குணமாயும், நிராகாரமாயும், அவிகாரமாயும், சத்துசித்தானந்தமாயும், எங்கும் நிறைந்து அகண்டபரிபூரணமாயும் பற்றில்லாததாயும், ஞானப்பிரகாசமாயு மிருக்கிறது. அந்தப்பிரம்மமே ஜீவனாகவும் ஈசுவரனாகவும், உலகமாகவும் தோற்றுகிறது இந்த தோற்றமானது அநாதிமாயையா லுண்டாயது இம்மாயையினிடத்து விக்ஷேபம்,ஆவரணம்என்று இரண்டுவிதசக்திகளுண்டு சகலவஸ்துக்களையும் தோற்றுவிக்கிறதாகிய சக்திக்கு விக்ஷேபம் என்றுபெயர். அதைமாயையென்றுசொல்வதுண்டு. வஸ்துக்களின் சுரூபத்தைத்தோன்ற வொட்டாமல் மறைக்கும் சக்திக்கு ஆவரணம் என்றுபெயர் அதை அவித்தையென்று சொல்வதுண்டு. பிரம்மமானது மாயை சம்பந்தத்தால் ஈசுவரனென்றும் அவித்தியா சம்பந்தத்தினால் ஜீவனென்றும் கூறப்படுகின்றது மாயாசம்பந்தமுடைய ஈசுவரன்சர்வக்ஞனு இருக்கிறான். அவித்தியாசம்பந்தமுடைய ஜீவன் கிஞ்சிக்ஞன். அவித்தையினால் ஒன்றை மற்றொன்றாக பிரமித்து ஜீவன் சமுசாரபந்தத்தை யடைகிறான் இந்த பந்தத்திலிருந்து விடுபடவேண்டுமானால், வேதோக்தமான கர்மங்களை ஈசுவரார்ப்பணமாகச்செய்து சித்தசுத்தி யடைந்து சற்குருவினுடைய உபதேசபலத்தால் அந்தப் பிரம்மமே நான் என்ற ஞானத்தையடைந்து முக்தியடையவேண்டும். முக்தியானது ஜீவன் முக்தியென்றும் விதேக முக்தியென்றும் இருவகைப்படும். பிராரத்தம் தவிர மற்றெல்லா கர்மங்களும் நசித்து சகல பற்றுக்களையுமொழித்து இருக்கும் ஸ்திதியே ஜீவன்முக்தி தெசை. பிராரத்தமுடிவில் ஸ்தூல சூக்ஷ்ம காரணதேகங்கள் நசித்துப் பிரம்மமாகவே யிருக்கும் நிலைமைக்கு விதேக முக்தியென்று பெயர். இவ்வாறு கூறுவோர் அத்வைதிகள். யோசிக்குமளவில் இவர்கள் கூறுவதுதான் உண்மையில் உண்மை.

## ஆன்மாவேபிரம்மம்.

எங்கும் பரிபூரணமாய் நீக்கமின்றியிருப்பது பிரம்மம். அந்தப் பிரம்மத்தை ஆன்மாவென்றும், பரமான்மாவென்றும், சிவனென்றும் இன்னும் பலபேராகவுஞ் சொல்லுகின்றன வேதமுதலிய கலைகள், அப்படிப்பட்ட சிவனிடத்துள்ள மாயையின் சத்துவகுணத்தில் பிரம்மா, விஷ்ணு, உருத்திரர்கள் பிரதி பிம்பிக்கின்றார்கள். ரசோகுணத்தில் சீவர்கள் பிரதி பிம்பிக்கின்றார்கள். தமோகுணத்திலிருந்து அந்தக்கரண ஞானேந்திரிய கர்மேந்திரிய வாயு பஞ்சபூத பௌதிகங்கள் உண்டாகின்றன. சீவர்கள் ஈசுவரனை யுபாசித்து, உபாசித்த உபாசனைபலத்தால் பிரம்மஞானம் பெற்றுப் பிரம்மமயமாய் அல்லது சிவமாய் விளங்குகின்றார்கள். அஞ்ஞானகாலத்தில் நானென்பதற்குப் பொருள் சீவனும் அஞ்ஞானம் நீங்கிய ஞானதசையில் நானென்பதற்குப் பொ

ருள் பிரம்மம் அல்லது சிவனுயுமாகின்றன. அஞ்ஞான தசையில் அதாவது சீவன் நாகை விளங்குங்காலத்துச் சிவன் நானென்றுவது 'பிரம்மம் நானென்றுவது கூறுதல் கூடாது. ஆனல் ஞான சாதனத்தில் நான் சிவன், நான் பிரமம் என்றே அனுஷ்டானஞ் செய்யவேண்டியது. இதுவே வேதாகமபுராண இதிகாசங்களின் கருத்து. அப்படிப்பட்டப் பிரம்மநிலையில் அல்லது சிவநிலையில் சரீர இந்திரிய அந்தக்கரண ஜீவர்களும் ஞாதுரு ஞான ஞேயங்களும், சாக்கிர சொப்பன சுழுப்திகளுமில்லை. அதுதான் துரியாதீதநிலை. அந்த நிலையிலுள்ள பொருள் பிரம்மமென்றும், சிவனென்றும், ஆன்மாவென்றும் சொல்லப்படுகின்றது. அப்படிப்பட்ட பிரம்மம் அல்லது சிவம் அல்லது ஆத்மாவானது உலகிலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் ஜீவர்களுக்கும் பிரம்மா விஷ்ணு உருத்திராதி களுக்கும் அதிஷ்டானமாய் விளங்குகின்றது.

உலகிலுள்ள எந்தப்பொருள்களுக்கும் மூலமாயுள்ளது எப்படி அணுவோ, அந்த அணுக்களுக்கு மூலமாயுள்ளது எப்படி ஆகாயமோ, வஸ்திரங்களுக்கு மூலமாயுள்ளது எப்படி பஞ்சோ, பஞ்சுக்கு மூலமாயுள்ளது எப்படி அணுவோ அணுக்களுக்கு மூலமாயுள்ளது எப்படி ஆகாயமோ, சொப்பன பிரபஞ்சத்திற்கு மூலமாயுள்ளது எப்படி மனமோ, அப்படியே சீவர்கள், பிரம்மா விஷ்ணு உருத்திரர், உலகம் இவர்களுக்கு மூலமாயுள்ள பொருள் மேற்படி பிரம்மம் அல்லது சிவம் அல்லது ஆன்மாவாம். அந்தப்பிரம்மப் பொருள்தான் தத்துவமசிலட்சியார்த்தத்தில் நிலைத்தது. ஜீவர்களானுலுஞ்சரி, ஈசுவரர்களானுலுஞ்சரி உலகமானுலுஞ்சரி, கடைசிமுடிவில் அந்தப்பொருளில் இலயமாகவேண்டுவதே. அதுதான் மிஞ்சினபொருள்.

இப்படியிருக்க அந்த ஆன்மாவென்னும் பொருளை ஜீவனைப்போல வேதாந்த சாஸ்திரங்களில் பரிச்சயமில்லாதவர் நினைக்கிறார்கள். பிரம்மமென்றும் சிவனென்றும் சொல்லாமல் ஆன்மாவென்னுஞ் சொல்லைமாத்திரமெடுத்துக்கொண்டு, அந்த ஆன்மாவில் ஜகஜீவபரங்கள் கற்பிதமென்று கருதி, ஆன்மாவென்னும் பொருளைத் தானகவைத்து, தன்னைவிட ஜகஜீவபரங்கள் இழிந்தனவென்றும் கூறி தாங்கள் கெட்டது மல்லாமல் பிறரையும் அநேகர் கெடுக்கிறார்கள். இது சரியன்று. "சீவனெனச் சிவனென்ன வேறில்லை, சீவனர் சிவனரையறிகிலர், சீவனர் சிவனரையறிந்தபின், சீவனர் சிவனயிட்டிருப்பரே." என்று திருமந்திரத்திற் கூறியிருப்பதைக் காண்க.

---

## உலகம்.

உலகமொன்றே யுளது, அது அழிவதில்லையென்னும் மாணுக்கனை நோக்கி, உலகம் காரியமேயன்றிக் காரணமல்லவென்றும் காரணமாவது எங்கும்பரிபூரணமான பரவஸ்துவேயென்றும் தாயினிடத்துப் பிள்ளை எப்படிப் பிறந்ததோ, அப்படியே பரவஸ்துவின்கண் உலகு உதித்தது என்றும் ஆசிரியர் கூற, மேலே மாணுக்கனுக்கும் ஆசிரியர்க்கும்நடந்த சம்பாஷணையாவது;—

மாணு. தாயினிடத்துப் பிள்ளை பிறந்ததுபோல் பரவஸ்துவின்கண் உலகுதிக்குமாயின் தாய்வேறுபொருள், பிள்ளைவேறு பொருள், அன்றி இரண்டுங் கண்டப்பொருள்கள். பரவஸ்துவுங் கண்டப்பொருள், உலகமுங் கண்டப் பொருள்களாகின்றன. இதுபரவஸ்து பரிபூரணமென் றுரைத்ததற்கு விரோதமாகின்றதே.

ஆசி. உலகமே பொருளென்றும், அதற்குக்காரணம், பிறிதொரு பொருளில்லையென்றும் கூறும் சித்தாந்தத்தை மறுக்கவேண்டி, இதற்குமேல் பொருளொன் றுண்டென தாய்பிள்ளை யுவமானங் கூறினதேயன்றி, அதுவே சித்தாந்தமன்று. பின்னை பால் தயிராவதுபோல் பரிணுமவாதமாம்.

மா. ஆசிரியரே! முன்றுரைத்த தோஷமில்லாவிடினும் வேறுபெருந் தோஷமுண்டாகின்றது. அதுயாதெனின், பாலே தயிராவதால் பால்கெட்டுத் தயிராகின்றதென்பதாம். இவ்வுவமானப்படிபரங்கெட்டு உலகமாகின்றது. அதனேடொழியவில்லை பால் கெட்டுத் தயிரானல் தயிர் தயிராகவேயிராது; அதுவுங்கெட்டு வேறும், அதுவுங்கெட்டு பிறிதொன்றுமாகி, முடிவில் இன்ன நிலைமைத்தென் றுரைக்க இயலாமற்போம். அங்ஙனமே பரம்கெட்டு உலகமாகி அதுவுங்கெட்டு வேறாகி கடைசியில் இன்ன நிலைமைத் தெனக்கூற முடியாமற்போம்.

ஆசி. அப்பதுண்மைதான், நாம் பரிபூரணதோஷம் வராமற் பொருட்டும், இரண்டு பொருள்களல்ல வென்பதற்கும் பால் தயிர் உவமானங் கூறினதேயன்றி அதுவே சித்தாந்தமன்று. பின்னை மண்கடம்போல் காரண காரியமாம். மண்கெடாமல் கடமாவதுபோல் பரவஸ்து கெடாமல் உலகாகின்றது.

மாணு. இதிலும் தோஷமிருக்கிறது. மண்விகாரப்பட்டன்றே கடமாகின்றது. அங்ஙனமே பரம் விகாரப்பட்டன்றே உலகாகவேண்டும். நிர்விகாரமான பரத்திற்கு விகாரத்துவங் கற்பிப்பது நியாயமன்று.



## பெண்வாமப்பதிகம்.

### காப்பு.

அத்தியுரித் துச்சூடி யாலமர்ந்தா னீசன்மே
லொத்தபெண்வா மப்பதிகம் ஓதுதற்கு—நித்தமுமே
நாகமுகம் பெற்றிடுநன் ஞரியபங் தேற்றிடுநம்
நாகமுக னற்றுணையா ஞன்.

பாற்கடல்கடைபொழுது பரிவினிற்றேன்றிட்ட
பதுமமுறை செல்வியவளை
பண்பினிலுகந்தே பரிந்தேற்றகங்கொளும்
பகர்வரிய பெரியமாலும்
ஏற்றரியபிரமனும் மிருதிசையுமேகியும்
எட்டாத சுடர்வடிவமாய்
இலங்கினநின்வடிவதை யிம்மையின்மனத்தினி
னியைந்தலது காணேனுதென்
றாற்றுநீர்போலொழுகு முன்னருசோதியை
யுலகவியல் பறியாதயான்
ஊமைகாண்கனவுபோ லொன்றுஞ்சொலறியா
துயங்கித் தயங்கினேனே
தாற்றரியநின்புகழ் சதாதுதித் தேற்றிடத்
தண்ணருள் கொடுத்தாளுவாய்
சனகன்முதன்முனிவர்க்கு சகசநிஷ்டையையருட்
சற்குருப் பெண்வாமனே. (1)

சகமதனிலென்னின்வே றித்தனைகுணக்கேடன்
சாமிநீ கண்டதுண்டோ
சர்வபரிபூரண அகண்டதத்துவாகார
சமரச சுகாநுபூதி
அகமதனிலொருநா ளுமையநாளுட்கொண்
டநாதியா மோனநிலையில்
அன்புடனமர்ந்ததுண்டோ வஃதுமன்றிமன
ஆங்கார நீங்கலுண்டோ
மகரமெனநின்றவென் மனநிலையென்சொல்லுவேன்
மாத்தான செயல்களெல்லாம்
வாசாகவேசெய்துவக்குங்கிருபாநிதி
வள்ளலுனை யன்றியுண்டோ
தகவியற்றும்வகையென்ற கைவிலாமனதைத்
தயாபரா பண்ணியருள்வாய்
சனகன்முதன்முனிவர்க்கு சகசநிஷ்டையையருட்
சற்குருப் பெண்வாமனே. (2)

எழுவகைப்பிறவிதனின் மானிடப்பிறவிதான்
ஏற்றமுள பிறவியன்றோ
விப்பிறவியுற்றுநான் றப்பும்வகையறியா
தியங்கித் தவித்தனன்றோ
மழுமுதற்பல்லணிகள் பல்வகைக்குறிகாட்டி
மகிழ்வுட னணிந்தகோவே
மாறுதநின்கருணை யாறுய்வழிந்திடவு
மணமுவந் தெனையாளுவாய்
கழுமலைகாளத்தி கைலையையாற்றிற்
களிப்புட னமர்ந்தகோவே
கனவரசுமுதலான வெண்ணிலாப்பத்தர்கள்
கசிந்துமன முருகிநாவாய்
தழுதழுத்திடவேற்று மொழியுகந்தவர்கட்கு
சாயுச்சிய மீந்ததேவே
சனகன்முதல்முனிவர்க்கு சகசநிட்டையையருட்
சற்குருப்பெண் வாமனே. (3)

கற்றவையனைத்தையுங் கடலிட்டபுளியெனக்
கசடரை துதித்தொழித்தேன்
காகமொடுபேய்நரிகள் கழுகுமுதலிவ்வுடற்
கடித்துண்ணு மென்பதறியேன்
அற்றமறுநின்புக ழடங்கலுமென்னுவா
லரைநிமிட மேனுநவிலேன்
அசடனிவனென்னவே யுலகறைந்திடுவகை
யல்லாத தொழில்கள்புரிவேன்
நற்றவரைநாடியவ ரருள்பெற்றுசற்று
நடந்திலே னவர்சொனெறியே
நானிலந்தன்னி ஞனேன்பிறந்தந்தோ
நகைக்கத் திரிந்துநின்றேன்
தற்பமொடுமனைவிமக வொன்றிச்சியாதவகை
சாற்றித்தயை புரிகுவாய்
சனகன்முதல்முனிவர்க்கு சகசநிஷ்டையையருட்
சற்குருப்பெண் வாமனே. (4)

எத்தனையியம்பிலும் என்மனப்பாறைதான்
எள்ளளவு முருகவிலையே
இம்மனப்பாறையா னிப்படிசுமந்துழறல்
எந்தனீ காணலாமோ
சுத்தநிலையறியாத படிறனெனினும்முன்
சொருபமறி யிச்சைகொண்டோன்
சுற்றுங்கறங்குபோ லோடியுழல்கின்றேன்
சுகமேபரப் பிரமமே
அத்தநின்பொன்னடிக் கடிமைநாகும்வகை
யாண்டுகொண் டருளல்வேண்டும்
அறியுமவையெல்லா மறிந்துணர்ந்தான்றவர்
அறியாத மோனநிலையே

சத்தமணுவளவுஞ் சாற்றவியலாதே
தயங்கிடுஞ் ஞானவொளியே
சனகன்முதன்முனிவர்க்கு சகசநிட்டையையருட்
சற்குருப் பெண்வாமனே. (5)

தொண்டனைவதைத்திட்ட துட்டவேமன்னைத்
துணித்தவனிக ளுறுலைத்தாய்
தூமனம்வேறுபட் டெய்திடுவசந்தனைத்
தொந்தங்களற வாட்டினாய்
கண்டகன்றன்னைநின் கால்விரல்விறற்கொண்டு
கண்டித்திங் கடறணித்தாய்
கனவமரியற்றிட்ட காதகத்திரிபுரரை
கனற்கொண கையாலெரித்தாய்
கண்டங்களுத்திடவு மண்டர்பிழைத்துயவும்
காளத்தை வாரியுண்டாய்
கந்தெறிமதப்பொறையை கரமலர்களாலே
களித்துரித்துப் போர்த்தனை
தண்டனிட்டுன்னடியை யண்டித்துதிக்கநின்
தண்ணருள் கொடுத்தாளுவாய்
சனகன்முதன்முனிவர்க்கு சகசநிஷ்டையையருட்
சற்குருப்பெண் வாமனே. (6)

வேதாந்தசித்தாந்த மமைதியோடொருவர்பால்
விரித்துரைக்கக் கேட்டிலேன்
விரிக்கின்றஞானிக ளுணர்த்திடவிழைந்தால்
விதண்டைவாதங்கள் புரிவேன்
நாதாந்தமோனங் கடந்துனருள்சித்தித்த
நல்லடிய ரென்னுவோர்பால்
நன்மைநாடாதவரி யற்றியிடுதொழிலின்
நயந்துமை யாய்ந்திருப்பேன்
போதாந்தபூரணப் பிரமமேயென்புன்
போதத்தை யென்சொல்லுவேன்
போக்குவரவற்றுனது பொன்னடிசிந்தித்திடப்
போதங் கொடுத்தாளுவாய்
தாதாவொடுலகுக்கோர் தாயாயமர்ந்திட்ட
தாற்றரிய துரியவடிவே
சனகன்முதன்முனிவர்க்கு சகசநிஷ்டையையருட்
சற்குருப்பெண் வாமனே. (7)

பத்தியொடுஞானமும் பாலித்துனருளைப்
பருகுநா ளெந்தநாளோ
பார்க்கின்றசகமெலாம் பாழெனவுமுன்னியுன்
பதமடைத லெந்தநாளோ
சத்துசித்தாநந்த நெறியிலேசென்றுநின்
சத்தறிவ தெந்தநாளோ
சதாநிஷ்டைகொண்டுமென் கன்மங்கணீங்கிச்
சுகம்பெறலெந் நாளோவெனப்
பித்தர்போலலையுமிம் மனநிலையெப்போதினும்
பிறழாம லொருபடித்தாய்
பெய்முகிலதென்னநின் னருளாலமைத்திடுக
பேசிடாப் பெருமௌனமே
தத்துபுனல்மீன்போற் கருதுகமடம்போற்
றங்கியணை பறவையேபோற்
சனகன்முதன்முனிவற்கு சகசநிட்டையையருட்
சற்குருப் பெண்வாமனே. (8)

ஒன்றுநின்மலரடியில் விண்ணப்பம்செய்வனீ
யுவந்ததை யளித்தல்வேண்டும்
ஓங்குமிந்நிலவுலகி லெல்லார்க்குநல்லனென்
றொருபெய ரெடுத்தல்வேண்டும்
மன்றுணின்றாடு நின்மலர்ப்பதமெந்நாளு
மறவாதிருத்தல் வேண்டும்
மகிமையுளமெய்யடியர் தன்மையையுணர்ந்தே
மகிழ்ந்துநான் புகறல்வேண்டும்
துன்றுமெய்ப்பொருளுண்மை தூய்மையொடுணர்ந்தே
துயரற்று நிற்றல்வேண்டும்
தூய்மைநெறியுற் றுனைத்தோன்றப் பிடித்தே
துயரற்று நிற்றல் வேண்டும்
தன்றனிப்பெருமைகொண் டெங்கும்பரந்தொளிரும்
சாட்சியே சாதாக்கியமே
சனகன்முதன்முனிவர்க்கு சகசநிட்டையையருட்
சற்குருப் பெண்வாமனே. (9)

மண்ணாசைபெண்ணாசை மற்றுமுளவாசையை
மாற்றிநீ யருளல்வேண்டும்
மாசறுசுகாநந்த வெள்ளத்தமுழ்ந்திநான்
மலரகித னாதல்வேண்டும்
கண்ணருநிறுவுருவினைக் கண்ணித்தினந்தினங்
கடையனேன் கதியெய்தவே
கடைக்கணருள்பாலித்து னடியினைப்பற்றிக்
கருக்கடல் கடக்கவேண்டும்
விண்ணுதியையூத மாறங்கமேழ்பிறப்
பெங்கும் விளங்கெண்குணனே
வேதமேவேதத்தி னூற்றேயதன்னு
விளக்கமுடியாதபொருளே
தண்ணருட்குறையுளே தாக்கரியமோனமே
தன்னந்தனிப் பெருமையே
சனகன்முதன்முனிவர்க்கு சகசநிட்டையையருட்
சற்குருப்பெண் வாமனே. (10)



## சுகுணவீரசர்மாநாடகம்.

(முன்தொடர்ச்சி.)

களம் 2. படைவீடு, ஒருசார்.

சுந்தரர் வில்வலன், கதாயுதன் போர்ச்சேவகர், சிப்பாய்கள்.

சுந்தரர். கைதியாகப்பிடித்த இராக்கினியை என்னசெய்யலாம்?

வில்வலன். நம்முடைய குணோத்தம மன்னருக்குரிய ளாக்குவோம். அவளும் வீரசர்மரின் மனைவியாதல் பற்றி அரசகுலத்தைச் சேர்ந்தவளாதலால் அரசனிடத்திருக்க இயையலாம்.

கதாயுதன். பிடித்த யானைகளில் "காலொருநாலு கோசங் கைவாலேழ் நிலத்திற்றோய்ந்து, பாலொடுசங்கு போலும் பதத்துகிர்விதத்திற் சூழ்ந்து, வொலொடுகோன் மெய்கைவெண்மருப்பினு லுயிரைக்கொன்றே, ஏலவே மூயர்ந்தொன்பா னீண்டரைந்து முழத்தாகி."

"பெறுமுறைமுன்புயர்ந்துபின்பணிந்தழகிதாய தறுகண்ணதாகிச்சூழி சார்ந்தமத்தகத்ததாகி முறநிகர்கன்னதான மூரிமால்யானை" தன்னை நம் அரசனுக்கு விட்டு மற்றவையை சேனைக்கு உபயோகிப்போம்.

வில்வல. அவ்வகையே தடநாசியும் திடம்பொருந்திய கால்களும் உடையதாய், மாதர் தம்மனத்தை யொத்தமனத்ததாய்வாழைமடல்போன்றசெவியையுடையதாய் என்பத்திரண்டு அங்குலயுயரமானதாய் உள்ள ஒரு பஞ்சகலியாணியைத் தேர்ந்து அரசனுக்கு விடுத்து மற்றையதுரகங்களையும் அப்படியே நம் சேனைக்கு உபயோகப்படுத்திவிடலாம்.

சுந்தரர். சரி அப்படியே செய்வோம். எடுத்த திரவியங்களைக் கொணர்ந்து சரிபாகம் பொதுச்செலவுக்கென விட்டு மிகுந்ததை ஒவ்வொருகாலாளுக்கு ஒரு பொன்காசும் குதிரைவீரனுக்கு அதன் இரட்டியும் கஜாருடன் ஒவ்வொருவனுக்கும் அதனின் மூன்றுமடங்கும் சமரதருக்கு தலைக்கு பன்னிரண்டு பொன்காசும் மகாரதருக்கு அதன் நான் மடங்குமாகப் பகிர்ந்துவாருங்கள்.

விகடன். (நுழைந்து) கலிங்கமன்னர் கொற்கைகாரைப் பிடித்ததாகவும், சேனைத்தலைவர்கள் கொள்ளை சொத்துக்களைப் பங்கிட்டுக் கொள்வதாகவும், யான் போனால் எனக்கும் கிடைக்குமென்றும் நடாதிபர் நவின்றார். நானும்போய்க்கேட்பேன் ஏதோ யானையென்றும் குதிரையென்றும்பொன்னென்றும் கூறினரே. ஐயா எனக்கு ஒரு குதிரை ஆக்ஞாபிக்கவேண்டும்.

சுந்தரர். யார் நீ? எந்தசேனையைச் சார்ந்தோன்?

விகடன். யான் எந்தசேனையையும் சார்ந்தவனல்லன். போர்ச்சேவகனும் அல்லன்.

சுந்தரர். பின் உனக்கு குதிரை எதற்காக?

விகடன். நாக்குதிரையை நடத்திவந்தேன் இதுகாறும் ஒரு குதிரையேறி சவாரி செய்யவேண்டுமென்ற வேட்கை மேலீட்டால் கேட்டேன்.

சுந்தரர். உனக்கு குதிரையேறிச் சவாரிசெய்வது முடியாது. நாக்குதிரைபோலல்ல இது.

விகடன். என்ன ஐயா! இல்லை என்பதற்குத்தானா இவ்வளவு ஆட்டபாட்டம். பணமாவது கொஞ்சம் கொடுக்க உத்தரவு பண்ணக்கூடாதா?

போர்ச்சேவகன். (தலையில் ஓங்கித் தட்டித்தள்ளி) ஏடா! மூடா! கொல்லுலைக்களத்தில் ஈக்கென்னவேலை போ.

விகடன். நாசமுறுவாய், யாதொரு தீங்கு மிழையாத என்னை யடித்தாயே. இந்தப்போர்ச்சேவகர்கள் சுத்த முரட்டுத்தடியர்கள். புத்தியேகிடையாது எப்போதும் அடிக்கிறதும் இரிகிறதும், மனதில்வந்ததைச் செய்கிறதும் தான் இவர்கள் வேலை, இவனுடன் வாதாடலாகாது அமருவோம்.

சுந்தரர். வில்வல! நீர் நம்மன்னர்பாற் சென்று சுகுணத்தைப்பற்றியும் மற்றும் அவருடைய உபயோகத்துக்கென்று விடப்பட்ட யானை குதிரைகளைப்பற்றியும் சொல்வதோடு பொருள் பகிர்ந்தவழியையும் கூறிவருக. (போக.)

வில்வல. அப்படியே. (எல்லாரும்போக)

களம் 3. குணோத்தமர், கூடாரம்.

குணோத்த (வில்வலன்வருவதைநோக்கி)வருகவில்வல.

வில்வல. வந்தனம்மன்ன தங்களிடத்தே—

குணோ. நீர்வந்தகாரியம் எனக்குத்தெரியும். யானை குதிரைகளை நம்பந்தியிற்கட்டும், அப்பெண்மணி எனக்குரிய ளாகாள். அவளை உங்காவலிலேயே கொண்டு பாதுகாத்திரும்.

வில்வல. அப்பெண்மணியின் ரூபலாவண்ணியத்தைப் பற்றி நீங்கள் அறிவீர்களோ, பிரமன் உலகத்திலுள்ள பெண்மணிகளையெல்லாம் சிருட்டித்து

மனமமைதிபெருமல் தன்மனத்தினுல்வரித்து இப்பெண்மணியைச் சிருட்டித்தா ரென்பதற் கையமில்லை.

புண்டரிகமன்ன புனிதவதனமும்
இருட்பொழிந்தன்ன ஐம்பாற்காடும்
வள்ளைக்காதும்வண்ண அஞ்சனந்தோய்
கண்ணுடன் துகிர்நிகர் கவின்பெறுமதரமும்
நாசித்துண்டமும் நகைத்தளவங்களும்
சங்கேய்கந்தரம் சபநிகர்த்தோளும்
தாமரைமுகையோ தோயபுற்புதமோ
யாதெனவுவமைகொள் தீதறுகுயமும்
ஆலிலையன்ன அழகுகொள்வயிறும்
கடமலைஏறச்சமைத்த சோபானம்
திடமுறஈதெனச் செப்பிடுமடிப்பும்
ஆடவராசைப் பெருக்கத்தளவுகொண்டு
படங்கொள்பாம்பெனப் பரந்ததட்டும்
மின்னேகொடியோ முயல்தனின்கோடோ
எஃதிதுவென்னு மஃகுறுமிடையும்
புடைத்துத்தெரித்துக் காட்டும்குதமும்
கதலித்தண்டெனக் கழறிடுகவானும்
அலவனுமென்றவிர் முழந்தாள்களும்
காகளமகரம் பொருகணைக்கால்களும்
பழமெனப்பகர்ந்திடு பண்புள்குதியும்

செம்பஞ்சூட்டிய செவ்வியகால்களும் கூடி, அன்னமும் பிடியும்போன்ற நடையுடையவளாய், மயில்போலும் சாயலாளாய், இரதியும் மனமழுக் கறுப்பப் பேரழகுடையளாய், தன்னெழிலுக்குத்தக்க குணம் பொருந்தியவளாய், உள்ளவனிதையை நிராகரிக்கலாகாது மன்ன. மேலும் அவ்வித அழகு தங்களைப்போன்ற ஆடவராலன்றிச் சிறப்புறுது. ரோஜாப்பு எவ்வளவு அழகியதா யிருந்தாலும், அதைப்பறித்துச் சூடுவாரின்றேல் சிறப்புறுமா? அன்றியும் மகளிர் கூட்டத்துக்கு ஓர் திலகம்போன்றுள்ளாள். குரலினிமையோ வாக்கால் வர்ணித்தியலாதது என்பதை அவள் தன் புருடனைப்பற்றிக் கவலையுற்று தாதிகளிடத்திற் கூறியபோது அறிந்தோம் அவ்வகைச் சிறப்புவாய்ந்த பாவையை தங்கள் மறுக்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன் மன்ன.

குணே. வில்வலா! அவளிடத்தில் காதலுண்டாகும்படி ஒன்றும் எனக்குச் சொல்லவேண்டாம்.

வில்வல. ஒருதரம் தாங்கள் நேரில்வந்து கண்ணுறக்கோருகிறேன்.

குணே. ஐயனனை அது செய்யேன். அத்தகையசுந்தரியைப்பார்த்து மனம் நிறையழியின்.

வில்வல. ஏன் செல்லலாகாது. ஒரு நங்கையைக் கண்டமாத்திரத்தில் மனங் கலங்குமா? என்ன!

குணே. அப்படியே நான் எண்ணுகிறேன். அப்படிக் கலங்கின் நான் மேற்கொண்ட தொழிலெல்லாம் வீணேசிதையும். ஆகையால் யான் அங்குவர முடியாது. நீர்போம்.

வில்வல. அன்புள்ள மன்ன! ஒரு தருணியின் நோக்கு ஒருவன் மனத்தைக்கலக்கி, அவன்மேற்கொண்டதொழிலுக்கு முட்டுப்பாடு செய்யும் என்று சொல்வது அவ்வளவு நம்பத்தக்கதா யில்லை. காமம் மனத்தில் அடக்கியாள முடியாததா! என்ன! அப்படி யடக்கியாள முடியாததாயின் ஒருவன் ஏன் தன் சகோதரியையும் பெண்ணையும் இச்சிக்கலாகாது.

குணே. வில்வலா அஃது அப்படியன்று அம்மாதிரி இச்சையுண்டாகாததற்குக் காரணம் அவர்கள் பயிற்றப்படும் மார்க்கமே. காமம் ஒருநாளும் ஒருவனுக்குள் ளடங்கியதன்று. கிளியோ பட்ராவின் மோகத்திலாழ்ந்த அன்டனிக்காவது நூர் ஜஹான் மோகத்திலாழ்ந்த ஜிஹாங்கியருக்காவது அவ்வனிதைகள் சொற்றட்டி ஏதேனும் செய்ய முடிந்ததா? அஃது பெரிதல்ல. ஐந்தவித்த கௌசிகமுனிவரும் மேனகைவலைக்குட் சிக்கவில்லையா? இன்னும் எத்தனை மாந்தர்காமப்பாழியிலாழ்ந்து, கைப்பொருண் முற்றுமிழந்து, மானங்குலைந்தும் கரையேற முடியாதவராய்த் தவித்திருக்கிறார்கள். ஆகையால் நண்ப! மோசத்துக் குள்ளாகலாகாது.

வில்வல. மன்ன! அஃது என் கொள்கையன்று ஒருவன் தன்மானம், குலமானம், முதலியவற்றைசொற்பமேனும் எண்ணியவனாயின், அவன்மனத்தை ஒரு தையலின் நோக்கம் மாற்றுமென்று எண்ணவேயில்லை. ஆகையால் மன்ன! தாங்கள் பார்ப்பதினுல் யாதொரு இடையூறும் நேராதென்பது திண்ணம்,

விகடன். ஏது யோகிபோல் பேசுகிறார்.

குணே. நல்லதிருக்கட்டும். நீர் கூறியதை என்றும் மறவற்க. அப்பெண்மணிக்கு யாதொரு தீங்கும் நேராமல் காத்திரும் அவளால் நமக்கு அநேக லாபம் நேரலாம். (இருவரும் பிரிந்துபோகிறார்கள்,)

(இன்னும்வரும்.)

வி - சிவசுப்பிரமணிய ஐயர்.



## மனோகரன்.

(முன்தொடர்ச்சி.)

பிறகு இருசகோதரர்களும் யோசிக்க வாரம்பித்தார்கள். "ஊரைவிட்டு துரத்தப்பட்ட பிரபுவினிடத்து என்னபணம் இருக்கும் அண்ணு" என்று அஜாதன் சொல்ல, "ஆனை அடித்தால் அரைபணம் என்று பழமொழி ஓர் பிரபுவின் வீட்டிற்குச்சென்றால் குறைந்தது 1000 ரூபாய்க்கு வழியிராதா. அடபணம்தான் அகப்படாதிருந்தது. அவன் பெண்ணுக்கு என்ன கருப்பா? நாம் எத்தனைக்காலம் பெண்டாட்டி யில்லாமலிருக்கிறது. பெண்தான் அகப்படட்டுமே. போதாதா." என்று ஜாதன் கூறினான். "நமது வேலைக்காரர்கள் இப்போது சொல்லியது உண்மையாகத்தா னிருக்கவேண்டும். இல்லாதபோனால் சுலோசனன் அரண்மனையை கொடுக்கமாட்டான். இவ்வளவு ஆடம்பரமும் செய்யமாட்டான், அவன் அந்தப்பெண்ணின்மீது கண்வைத்திருக்கவேண்டும். ஏன் அண்ணு! சுலோசனன் நாடிய பெண் ரொம்ப அழகாய்த்தா னிருக்கவேண்டும்." என்று அஜாதன் சொன்னான். "தம்பி! எப்போதும் க்ஷத்திரியப் பெண்களெல்லாம் அழகாய்த்தானிருப்பார்கள். அதிலும் சுலோசனன் பொறுக்கியெடுத்த பெண் மிகவும் அழகாய்த்தானிருக்கும். சுலோசனன் ஸ்திரிலோலன். உனக்குத் தெரியுமே?" என்று ஜாதன்கேட்க, "ஆமாம் எனக்குத் தெரியும். ஓர் நாள் இராத்திரி இருட்டிலே காட்டு அம்மன்கோவிலில் சுலோசனரும் ஓர் ஸ்திரியும் இருக்க நாம் கண்டோமே" என்று அஜாதன் சொல்ல, "அவசரத்திற்கு அகப்பட்டதை விடாதேயென்று எண்ணினாலும் சுலோசனன் கல்யாணம்பண்ணிக்கொள்ள நல்ல பெண்ணைத்தான் தேடுவன். அதிலும் அவன் க்ஷத்திரிய பிரபு, மிகவும் அழகுவாய்ந்த பெண்ணாய்த்தா னிருக்கவேண்டும். மெள்ள நாம் அடித்துக்கொண்டு வந்துவிட்டால், தம்பி! அப்புறம் நமக்கென்னகுறை? எவ்வளவு பணமிருந்தபோதிலும் நமக்கென்ன பிரயோசனம். இந்த நிலவு வீணாய்ப்போகிறதே. இப்போது நமக்கென்று ஒருபெண் இரத்தினம் இருந்தால் என்னமாயிருக்கும். நம்முடைய சிறிய பூந்தோட்டத்தில் எவ்வளவு புஷ்பம் தினத்திற்கு பூக்கிறது. அவைகளை எப்படி நாம் உபயோகப்படுத்துகிறது? என்று ஜாதன் சிறிது காமவசத்தனாய் பேசினான். "அதெல்லாம் சரிதான் அண்ணு நா மிதுவரைக்கும் எங்கும் பெண்ணை அபகரித்ததில்லை. கள்ளர்கள் பெண்களைத் திருடினார்கள் என்று கேட்டதுமில்லை. நாம் எண்ணியது எப்படி கைகூடும்," என்று அஜாதன்கேட்க, "அதற்கெல்லாம் வழியிருக்கிறது. நம்முடைய கோட்டைக்கு மனிதர்கள் வரமுடியாது. நம்முடைய கோட்டை ஒன்று இவ்விடத்தி லிருக்கிறதென்றே ஒருவருக்கும் தெரியாது. ஆகையால் பெண்ணை இவ்விடத்திற்கு கொண்டுவந்து விட்டால் பிறகு அப்பெண் என்றைக்கும் நம்முடையதே; என்று ஜாதன் பதில் கூறினான். "இவ்விடம் கொண்டுவந்தபின்பு நம்முடையதுதான். இவ்விடம் கொண்டுவருவதெப்படி? அதற்கு யுக்திசொல்லு அண்ணே?" என்று மறுபடியும் அஜாதன் கேட்க "சமயம்பார்த்து தைரியமாய் பிரவேசிக்கவேண்டும். ஏன் தம்பி ஆனந்தபுரி அரண்மனையில் இலட்சுமி என்னும் வேலைக்காரி இருக்கிறாளல்லவா. அவளை கொஞ்சம் சரிப்படுத்திக் கொள்ளவேண்டும். அவள்மூலமாய்த்தான் சமயத்தை அறிந்து நாம்தைரியமாய் பிரவேசித்து காரியத்தை முடிக்கவேண்டும்." ஜாதன் யுக்திசொல்லி முடித்தான். நல்ல ஆசாமியைப் கண்டு பிடித்தாயே! லட்சுமியா நமக்கு உதவிசெய்வாள். ஒருசமயம் அவளுக்கும் எனக்கும் மெத்தவாக்குவாதம் உண்டாயிற்று. ஏதோ சிறிகி அழகாயிருக்கிறாளென்று கொஞ்சம் நான் நெருங்கினேன். அவளுக்கு நான் பணக்காரனென்சொல்லி நம்பவைத்தும் அவள் எனக்கு இசையவில்லை. வேலைக்காரியாயிருந்தாலும் மிக்க கூர்மை புத்தியுள்ளவள். அவள் நமக்கு வழிபடுவள் என்று எனக்குத் தோன்றவில்லை யண்ணு?" என்று அஜாதன் சொல்லினான். "நீ சொல்லுவது உண்மையே. அவள் தான் அழகாயிருப்பதை அறிந்து அதிகமாய் ஆடம்பரம் பண்ணிக்கொள்ளுவாள். மிகவும் கெர்விகூட. ஆனாலும் "காரியமாகவேண்டுமானல் கழுதையின் காலைப்பிடி" என்றபடி நாம் அவளைத்தான் பிடிக்கவேண்டும். நமக்கென்று ஒருபெண்டாட்டி யில்லாமையினாலல்லவா இப்படி வேலைக்காரிகளையும் நம்மினத்தைச் சேர்ந்த தாழ்ந்த ஸ்திரிகளிடத்தும் இடர்ப்படவேண்டியிருக்கிறது. எப்படியானாலும் சந்திரசேகரன் பெண்ணைக் கொண்டுவந்து விடவேண்டும் தம்பி." என்று ஜாதன்சொல்ல, "அதெல்லாம்சரிதான் அண்ணுகொண்டுவருவதுதான் எப்படியென்றுதெரியவில்லை." என்று அஜாதன் பெருஞ் சந்தேகத்துடன் கூறினான். "நீ என்னமோ சந்தேகப்படுகிறாய். எப்படியாவது நான் கொண்டுவந்து விடுவேன். எனக்குத் தைரியமுண்டு. சந்திரசேகரபிரபு ஆனந்தபுரிக்கு வந்தவுடன் நாமொருதினம் அவனைப்போய்ப் பார்த்துவருவோம். அந்த சமயத்தில் கூடுமானல் அவன்பெண்ணையும் காண்போம். பிறகு நமக்கு நல்லயுக்தி தோன்றும்" என்று ஜாதன் சொல்லி முடிக்க, இருவருமாக எழுந்து படுக்கச் சென்றார்கள்.

சத்தியபுரியில் சந்திரசேகரபிரபு சுலோசனரிடத்துப்பேசிய பின்பு அதிக தைரியங்கொண்டவராய் ஆனந்தபுரிக்குப் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டார். சுலோசனர் தன்னிடத்துச் சொல்லியவையெல்லாம் சந்திரசேகரன் தன் மனைவியிடத்துத் தெரிவிக்க இரதியும் சிறிது சந்தோஷங்கொண்டு பிறகு சிறிது விசனத்தையு மடைந்தாள். எங்கு போவதெனத் தெரியாமல் மயங்கிக்கொண்டிருந்த சமயத்தில் சுலோசனர் தன் ஊரில் வசிப்பதற்கு இடங்கொடுத்ததற்கு சந்தோஷமும் பிறகு தன் அன்பான குழந்தை சுந்தரியை 40-வயது சென்ற சுலோசனர் கல்லியாணம் செய்துக்கொள்ள கேட்டதற்கு விசனமுங்கொண்டாள். "பிரியநாயகி! நமது சுந்தரியை சுலோசனருக்குக் கொடுத்தாலென்ன? அநேகஊர்களிருக்கிறது அதிகபணமும் நகைகளுமிருக்கிறது இதைக்காட்டிலும் நல்லஇடம் நமக்கு எங்கே அகப்படப்போகிறது என்றுசந்திர சேகரன் சொன்னான் "உங்களுக்குப் பிரியமிருந்தால் செய்யலாம் சுந்தரியின் அதிர்ஷ்டப்பிரகாரந்தானே எதுவும் நடக்கும்"என்று இரதிபதில் கூறினள்,

சந்திர. ஏன் உனக்குப் பிரியமில்லைபோலிருக்கு.

இரதி. உங்கள்பிரியத்தை அனுசரித்த எனக்கு வேறு பிரியமுண்டோ? உங்களுக்குத் தெரியாதவிஷயம் எனக்கு ஏதாவது தெரியுமோ?

சந்திர. என்பிரியம்போல் நீ நடப்பாயென்று எனக்குத் தெரியும், ஆனால் இந்தவிவாகத்தைக் குறித்து உன்னுடையசொந்த அபிப்பிராயம் என்ன?

இரதி. என்பிராணநாதா! என்னுடைய சொந்தஇஷ்டத்தைக் கேட்டதால் சொல்லுகிறேன். தனதான்னிய சம்பத்துக்களில் ஒன்றுங் குறைவில்லை. ஆனால்சுலோசனருக்கு அதிகவயதாகிவிட்டது. இந்த நாளைக்கெல்லாம் அவர் பேரன்பேத்தி எடுத்திருக்க வேண்டும். நமது இளங்குழந்தையை அவருக்கு கொடுப்பதா வென்று தோன்றுகிறது,

சந்தி. இது எனக்குத் தெரியாததல்ல.

இரதி. அதைநான் முன்னமே சொல்லியிருக்கிறேனே.

சந்தி. அவருக்கென்ன சுமார் முப்பது முப்பத்தைந்து வயதிருக்கும். அன்புடன் உபசரிப்போர் இல்லாததினால் அவர்மனம் அதிகம் சலிப்புற்றிருக்கிறது அதிக மனக்கிலேசத்தால் அவர்தேகம் சிறிதுவாட்டம் அடைந்து அதிகவயது சென்றவர்போல் காட்டுகிறது உண்மையில் அவர் வயது சென்றவரல்லர் இதைத்தவிர வேறுகாரணம் உண்டோ.

இரதி. வேறுகாரணம் என்ன அதிகமாயிருக்கிறது.

சந்தி. என்ன அதிகமாயிருக்கிறதென்றால், ஏதோ கொஞ்சம் இருக்கிறாப் போலிருக்கிறது.

இரதி. என்மீது சிறிதும் கோபங்கொள்ளாமல் கேட்கவேண்டும். அன்று பூத்த புஷ்பத்தை செடியிலிருந்து நேரே எடுத்துமுகர்ந்தால் எவ்வளவு வாசனையாயும் பார்ப்பதற்கு என்ன அழகாயுமிருக்கிறது அதில்லாமல் வேறொருவர் கொய்து சிலநாழிகை அவரால் முகரப்பட்டு புஷ்பம் சிறிதுவாடி கசங்கியபின்பு நம்முடைய கையில் வந்தால் அந்த புஷ்பம் எப்படியிருக்கிறது? வாசனைகுறைந்து அழகு இறந்து அனுபவிப்பதற்கு அறுவறுப்பா யிருக்கிறதல்லவா; என் பிரியநாதனே; இதுநின அனுபவந்தானே.

சந்தி. இல்லறத்திற் குரிய இரதியே! நீ எதற்காக இதைச்சொன்னாய்?

இரதி. அதிகவயதான காரணத்தைத்தவிர வேறுகாரண முண்டோவெனக் கேட்டீர்களே.

சந்தி. ஆமாம்! நான் சுலோசனரைக் குறித்துக்கேட்டேன் நீ என்னமோபுஷ்பக்கதையைச்சொல்லுகிறாயே!

இரதி. ஓர் புருஷன் சரிதையைக் குறித்து என்பர்த்தாவினிடத்துச் சொல்லும்போது நான் வேறெவ்விதமாகச் சொல்லுகிறது?

சந்தி. உன்னிடத்தில் பேசுகிறவன் அலங்கார சாஸ்திரம் படித்தவனாயிருக்கவேண்டும், இப்போது புஷ்ப உபமானத்தால் நீ சொல்லியதும் சுலோசனருக்கு அதிக வயதாகி விட்டதைத் தான் காட்டுகிறது இதுதானோ வேறுகாரணம்.

இரதி. வேறுகாரணந்தான். வயதாகிவிட்டாலும் அவர் பிரம்மசாரியாகவே நல்லொழுக்கத்திலிருந்திருந்தால் நமக்கோர் திருப்தியுண்டு அதில்லாமல் அவர் ஏதோ சில ஆட்டங்கள் ஆடினவரென்று கேள்விப்படுகிறேன்.

சந்தி. என்ன ஆட்டம் ஆடினார் இராமநாடகமா? அரிச்சந்திரவிலாசமா?

இரதி. நான் சொல்லுவதைத் தெரிந்துக்கொண்டதாக காட்டப் படாதென்று கங்கணங் கட்டிக்கொண்டிருந்தால் நான் என்ன செய்கிறது?

(இன்னும்வரும்.)



## நானாசிவவாதக் கட்டளை.

(முன்தொடர்ச்சி.)

இந்த அந்தக்கரணத்தில் ஆகாசத்தினம்சம் கூடினதற்கடையாளம். இந்த அந்தக்கரணமும் ஆகாசத்தைப்போல சகலசந்தத்திற்கு மிடங்கொடுத்து தரிக்கின்றதேயாம். இப்படித்தரிக்கின்ற விருத்திக்கு உள்ளமென்றுபெயர். இந்த அந்தக்கரணத்தில் வாயுவி னம்சம் கூடினதற் கடையாளம். இந்த அந்தக்கரணமும் வாயுவைப்போல அலைகின்றதேயாம் அல்லது இப்படி அலைகின்ற விருத்திக்குமனமென்றுபெயர். இந்தஅந்தக்கரணத்தில் அக்கினியி னம்சம் கூடியதற் கடையாளம். இந்த அந்தக்கரணமும் அக்கினியைப்போல இது விது அல்லது இது இன்னது என்று விளக்குகின்றதேயாம். அதாவது கடபடாதிகளை விளக்குவிக்கின்ற அக்கினியைப்போல இது விதுவென்றுவிளக்குகின்ற தேயுவும், இப்படி விளக்குகின்ற விருத்திக்கு புத்தி என்றுபெயர். இந்த அந்தக்கரணத்தில் அப்புவி னம்சம் கூடினதற் கடையாளம். இந்தஅந்தக்கரணமும் அப்புவைப்போல விஷயங்களைப்பற்றிக் கொள்ளுகின்றதேயாம். அதாவது இந்த அந்தக்கரணமும்தன்னிடத்திலகப்பட்டுக் கொண்டவஸ்துக்களைப் பற்றிக்கொள்ளுகின்ற விருத்திக்குசித்தமென்றுபெயர். இந்த அந்தக்கரணத்தில்பிருதிவியி னம்சம்கூடியதற்கடையாளம். இந்த அந்தக்கரணமும் பிருதிவியைப்போல கடினமாகனின்று நானென்று அபிமானிக்கின்றதேயாம். இந்த அந்தக்கரணமும் பிருதிவியைப்போலக் கடினமாய்ச் சரீரமுழுதும் வியாபித்து நானென்று அபிமானிக்கின்றதேயாம். இப்படி அபிமானிக்கின்றவிருத்திக்கு அகங்காரமென்றுபெயர். அப்பஞ்சபூதங்களினுடைய சத்துவாம்சத்திலே ஒவ்வொருபூதத்தி னெவ்வொருமாத்திரைகள் தனித்தனியே சுரோத்திராதி ஞானேந்திரியங்களாயின, சுரோத்திரம் ஆகாசத்தி னம்சமானபடியினாலே ஆகாசத்தின் குணமான சப்தத்தை மாத்திரமறியும். அதாவது சுரோத்திரேந்திரியமானது ஆகாசத்தினம் சமானபடியினாலே காதுக்குள் வழியினின்று ஆகாசத்தின்குணமான வர்ணரூப சப்தத்தைமாத்திர மறியும். வர்ணரூபம் - வர்ணரூபமாவது லௌகிகம், வைதிகம், என இருவகைப்படும். இவை வைதிகமான சாஸ்திரங்களும் லௌகிகமான பதினென்புராணங்களும் பாஷைகளுமாகும். இவைகளையுமறியும் தொனிரூபம். தொனிரூபமாவது இடிவாத்தியம் முதலானசப்தங்களாம். துவக்குவாயுவி னம்சமானபடியால் வாயுவின் குணமான பரிசத்தைமாத்திரமறியும். துவக்கிந்திரியமானது வாயுவினம்சமானதால் சரீரமுழுதும் வியாபித்து சருமத்தைப்பற்றினின்று வாயுவின் குணமான சீத உஷ்ண மிஸ்ரகடின மிருதுவான பரிசத்தைமாத்திரமறியும். சட்சு இந்திரியமானது அக்கினியினம்சமான படியினாலே அக்கினியின் குணமான ரூபத்தைமாத்திரமறியும். சட்சு இந்திரியமானது அக்கினியினம்சமானபடியினால் கருவிழியினது விழியில் நின்று அக்கினியின்குணமான பஞ்சவர்ணரூபத்தை மாத்திரமறியும். சிங்ஙுவை அல்லது சிஃகுவை இந்திரியமானது அப்புவி னம்சமானபடியினால் அப்புவின் குணமான ரசத்தைமாத்திரமறியும். சிஃகுவை இந்திரியமானது நாவி நுனியினின்று அப்புவின் குணமான மூவகை கந்தத்தைமாத்திர மறியும். ஆக்கிராண இந்திரியமானது பிருதுவியி னம்சமானபடியினாலே மூக்கின் நுனியில் நின்று பிருதிவியின் குணமான மூவகை கந்தத்தை மாத்திரமறியும். இப்படி இவைகள் ஒன்றுடன் ஒன்று கூடாமல் தனித் தனியே உண்டாயிருக்கின்றபடியால் ஒன்று மற்றொன்றின் குணத்தையறியமாட்டாது. அவ்வைந்து பூதங்களின் ஐந்துமாத்திரைகளும் ஒன்றாகக்காட்டியது அந்தக்கரணமாதலால் ஐந் திந்திரியங்களிலுஞ் சேர்ந்து ஐந்து விடயங்களையறியும் அந்த சத்துவகுணத்திலுண்டான அந்தக்கரண மைந்தும் ஞானேந்திரிய மைந்தும் ஆகிய பத்தும் சத்துவாம்சமானபடியால் ஞானசாதனமாயின.

இனித் தத்துவ ஒடுக்கம்.

தத்துவங்க ளெவ்வாறுதோன்றிற்றோ அவ்வாறே ஒடுங்குமென வறிக. முற்கூறிய தத்துவங்களைத்தான் அன்றென்றும் தத்துவாதீதமாகிய பிரமமே தானென்றும் அறிந்தவிடத்தில் ஜீவன் முக்தன் திடப்பிரக்ஞன் தத்துவாதீதன் பிராமணன் முதலியபெயர்களால், விளங்குவன்-ஜீவன் முக்தன் ஜீவித்துக்கொண்டே முத்தியையடைந்தவன் தத்துவாதீதன்=தத்துவத்தைக் கடந்தவன், திடப்பிரக்ஞன்=கலங்காத அறிவினையுடையவன், பிராமணன்=பிரம சொரூபியாயுள்ளவன். இச்சாத்திரத்தில் கூறிய உவமைகளெல்லா முற்றுவமைகளன்று ஏனெனில் ஒப்பற்று சர்வவியாபகமாகி உள் பொருளாகியதற்கே அதன்வழித்தோன்றிய வற்றையே உவமை கூறவேண்டலின் ஏகதேச வுவமையென வறிக.

## புராணங்களில் அவனம்பிக்கை கூடாது.

அமராவதி என்னும் பட்டணத்தில் அவ்வூர் குடிஜனங்களெல்லாம் ஒன்றுசேர்ந்து இராமாயண காலக்ஷேபம் கேட்கவேண்டுமென்று ஓர் புராணிகரை ஏற்படுத்தி பிரதிதினம் இராமாயணம் சொல்லும்படியாய் ஏற்பாடுசெய்தார்கள். இப்படியாக பிரதிதினமும் காலக்ஷேபம் நடந்துகொண்டு வருகையில் ஒருநாள் புராணிகர் "ஸ்ரீராமபிரான் ஒரு அஸ்திரத்தைப் பிரயோகம் செய்ய அது ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரமாகி இராவணனுடைய உடலை சல்லடைக்கண்களாக துளைத்ததென்றார்" உடனே சபையில் ஒருவன் எழுந்து ஐயா! புராணிகரே! போதும் போதும் உம்முடைய புராணத்தை நிறுத்தும் இதுவரைக்கும் நீர் இப்படிதான் புராணம் சொல்லிக்கொண்டு வந்தீரோ? உம்முடைய புராணங்களைக் கேட்டவர்களெல்லாம் நல்லபதவியை அடைந்துவிடுவார்கள். என்ன ஐயா! ராமபிரான் ஒருபாணம் விட்டாரென்றீர் அந்த ஒரு பாணம் ஆயிரம்பாணமாக எங்கேயாவது ஆகுமா. இதையாராவது நம்புவார்களா" என்றான், மிக்க பக்தியோடும் அன்போடும் வாசிக்கும் புராணிகர் பதில் இன்னது சொல்வதென்று தெரியாமல் தாரைதாரையாய் கண்ணீர் சொரிகிறார். இது இப்படியிருக்க அவ்வூரில் அவதூதர் என்றொரு பிராமணரிருந்தார். இவருடைய இயல்பு யாதோ வென்னில் ஊரிலுள்ள குப்பைமேடுகளிலும் இன்னும் அசிங்கமான இடங்களிலும் படுத்து புரளுவர். எங்கேயாவது எச்சில் இலைபோட்டால் அதிலுள்ள அன்னத்தைப் புசிப்பர். யாரோடும் பேசார். இன்றிருந்த ஊர் நாளையிரார். ஆகையால் இவரை அவ்வூரிலுள்ளவர்கள் ஒருவரும் மதிக்கிறதில்லை. இப்பரதேசியானவர் அன்றையதினம் மேற்கூறிய புராணிகர் தயங்கி நிற்கும் சமயத்தில் அவரிடம்சென்று "என்ன சமாச்சாரம்; ஏன் வருத்தப்படுகிறாய்" என்றார். அதற்கு புராணிகர் நிகழ்ந்ததைச்சொல்ல, அதற்குமேல் பரதேசி புராணிகரை பயப்படாதேயென்று சொல்லி தான் ஒரு குச்சையெடுத்து அதை சபையோர்களுக்கெல்லாம் காட்டி அதை அவர்களெல்லாம் ஒரே குச்சுதான் இரண்டல்ல வென்று ஒத்துக்கொண்ட பிறகு அதை ஆகாயத்தில் எறிந்தார். சில நிமிஷத்திற்கெல்லாம் ஆகாயத்திலிருந்து கணக்கற்ற குச்சுகள் அச்சபையோர்களின் கண்களிலெல்லாம் வந்து தைத்துக்கொண்டன. உடனே அவர்கள் கூச்சலிட்டு சுவாமி! உங்கள் பெருமை இதுவரைக்கும் எங்களுக்கு தெரியாமற் போய்விட்டது. இனி நீங்கள் இன்னாரென அறிந்தோம் நாங்கள் புராணத்தில்கொண்ட அவநம்பிக்கைக்காக எங்களை க்ஷமித்து காக்கவேண்டும் என்றார்கள். உடனே அவதூதர் அவர்களுடைய கண்களில் தைத்துக்கொண்டிருந்த குச்சுகளை மறையும்படிசெய்து ஆகாயத்தை நோக்கி கையை நீட்டினார். உடனே தான் முதலில் எறிந்த குச்சு தன் கையில்வந்து விழுந்தது. அதை அவர் அவ்விடத்திலேயே போட்டுவிட்டு தன் வழக்கம்போல் பைத்தியக்காரனைப்போல்போய்விட்டார். சபையோரும் அன்றுமுதல் புராணத்தில்கொண்டிருந்த அவநம்பிக்கையை விட்டொழித்தனர்.

## விதியைவெல்லுதலரிது.

"விதியைவெல்லுதலரிது" என்று வெகுகாலமாய் ஓர் பழமொழி வழங்கிவருகிறது. இதைக் கவனியாது சிலர் விதிபெரிதோ மதிபெரிதோ வென்று சண்டையிடுகிறார்கள். அவர்கள் அடியில்வரும் கதையைப்படிக்கக்கடவர். ஓரூரில் சிறிய கூரைவீட்டில் ஓர் பிராமணனும் அவன் மனைவியும் ஒருநாளிரவில் படுத்துறங்கினார்கள். அவ்வறையில் தீபம் முணுக் முணுக்கென்றெரிந்துகொண்டிருந்தது. நடுராத்திரியில் கூரையினின்றும் ஒருவைக்கோல் துரும்பு கீழேவிழுந்தது. அதைப் பிராமணன் பார்த்தான். உடனே அத்துரும்பு நாகஸர்ப்பமாகி அவன் மனைவியைக்கடித்து அவளுயிரை மாய்த்தது. இவ்வாச்சரியத்தைக்கண்ட பிராமணன் பெண்சாதியைத் தகனம்செய்யும்படி தன் பந்துக்களிடம் சொல்லி அப்பாம்பை பின்தொடர்ந்தான். அது அந்த கிராமத்தைத் தாண்டியவுடன், நரியாகி வயலில் நின்றுகொண்டிருந்த ஓர் பையனைக் கடித்தது. அதைக்கண்டு பிராமணன் இன்னும் அதிகமான ஆச்சரியமடைந்தான். பிறகு அந்நரி சிலதூரம் சென்று நாயாகமாறியது. ரஸ்தாவிற் போய்க்கொண்டிருந்த இரண்டு இடையர்களைக் கடித்துத் துண்டித்தது. இதற்குள்ளாக சூரியன் உதயமானான்.

நாயின் குணத்தைக் காலையிற் கண்டறிவோமென்று பிராமணன் அதன் கண்ணுக்குத் தென்படாமலே பின்றொடர்ந்தான். அது ஸர்வாங்கசுந்தரியாய் எவ்வனபர்வமுள்ள ஓர் பெண்மணியாக மாறித் தன் அழகிய கூந்தலை விரித்துக்கொண்டு ஓர் குளக்கரையண்டையுட்கார்ந்து கொண்டது.

பெண்ணென்றால் பேயுமிரங்கும்" என்றபடி அவ்வழியாய்ப்போன இரண்டு அரசகுமாரர்கள் அவளைக் கண்டு மோகங்கொண்டு சமீபத்தில் வந்தார்கள். உட



னே அவள் அவர்களிடம் பிரியம்காட்டிச் சிறிதுநேரம் பேசிப் பிறகு தனக்குப் பசியுண்டாயிற்றென்றும் ஏதேனும் தின்பண்டம் வேண்டுமென்றும் கூறினாள். அரசகுமாரர்களில் மூத்தவன் அருகிலுள்ள பட்டணத்துக்குச்சென்று திவ்யமான பக்ஷணங்களைவாங்கி மூட்டையாகக் கட்டிக்கொண்டு குளக்கரையண்டை வந்தான்.

"நீலிக்குக்கண் நெற்றியிலே என்றபடி அம்மாது தலைவிரிகோலமாய் வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு கண்ணீர்விட்டழுதாள். மூத்தோன் என்ன சங்கதியென்று கேட்க, அவள், "உம்மைப்பார்த்தாவாக அடையலாமென்றிருந்த என்னை இப்பாதகன்மேல் விழுந்து கற்பழிக்கத் தொடங்கினான். நல்லவேளை நீர் வந்ததால் என் கற்புமீந்தது" என்றாள். தக்ஷணமே அவன் கத்தியை யுருவினான். இளையவன் நிரபராதியாயினும் எதிரிக்கிளைப்பது இராஜதர்மமல்ல வாதலின் தானும் தன்கத்தியையுருவி கையிற்பிடித்தான். இருவர்களும் போர்புரிந்து ஒரு நிமிஷநேரத்தில் ஒருவரையொருவர் வெட்டிக்கொண் டிறந்துபோனார்கள். இதையெல்லாம் அருகில் நின்று பார்த்துக்கொண்டிருந்தபிராமணன் அத்யாச்சரிய மடைந்தான்.

அப்பெண்மணி அவர்களிருவரும் மடிந்துபோனவுடன் ஒருகிழப் பிராமணனாக மாறினாள். இதற்குள்ளாக பிராமணன் அவரைநோக்கி "ஐயா நீர்யார்? உம்முடைய அக்கிரமச் செய்கைகளை யெல்லாம் நான் பார்த்து வருகிறேன். ஏனிப்படி நிரபராதிகளைக் கொல்லுகிறீர்? "என்றான் அதற்கவர் "ஐயா! உம்முடைய காரியத்தைப்பாரும். என்னைக் கேள்வி கேட்காதேயும்", என்றார்.

பிராமணன் விடாதகண்டனாய் ஐயா பெரியவரே, நீர் என்னுடைய கேள்விக்கு விடையளிக்கா விட்டால் நான் உம்முடைய காலிலேயே பிராணனைவிடுவேன் எனக்கு உயிரின்பேரில் அபிமானமில்லை என்றான். கிழவனார் அவனைநோக்கி "நான்தான் எமதூதன் என் எஜமானனுடையகட்டளைப்படி செய்கிறேன்" என, பிராமணன் அப்படியானால் எனக்கெப்போது மரணம் ஸம்பவிக்குமென்றான். அதற்கவர் நீர் உம்முடைய 50-வது வயதில் பாகீரதிநதியில் ஸ்நானம் செய்யும்போது முதலையால் பிடிபட்டு உயிர் நீங்குவீர் என்றார். இதைக் கேட்டு பிராமணன் திகிலடைந்து பாகீரதியென்ற நாமதேயமே தெரியாத ஊருக்குப்போய் அங்கே ஒருபெரிய மனுஷ்யன் பிள்ளைக்குக் கல்விகற்பித்தான். அந்தப்பிள்ளை உபாத்தியாயரிடம் மிகுந்த பிரீதிகொண்டவனாய் ஸதாசார சம்பன்னனாய் விளங்கிவருகையில் புண்ணிய தினமொன்று கிட்டியது. அதற்காக எல்லோரும் கங்காஸ்நானம் செய்யப் புறப்பட்டார்கள். பிராமணன் வரமுடியாதென்றான். உபாத்தியாயர் வராவிட்டால் தான் வருகிறதில்லையென்று பிள்ளையாண்டான் பிடிவாதம் செய்தான். பிள்ளையை விட்டுப்பிரிய மனமில்லாமல் பிரபு அந்தப் பிராமணனை வேண்ட, அவர் தனக்கு அங்கே மரணம் நேரிடுமென்று எமதூதன் சொன்னதைக் கூறினார்.

இதை நம்பவேண்டாம், நாம் ஸ்நானம் செய்யும் துறை சிலாக்கியமானது இரும்பு கம்பிகளால் வேலிபிடித்துள்ளது முதலைநுழைய விடமில்லை. பயப்படாமல் வாரும். என்று பெரிய மனுஷ்யன் பிடிவாதம் செய்ததால் பிராமணன் அவ்வாறே ஒப்புக்கொண்டு கங்கையில் மூழ்கினான். உடனே அவனுடைய சிஷ்யனும் ஜலத்தில் முழுகி முதலையாகமாறி பிராமணனுடைய காலைப்பிடித்துக்கொண்டு ஓ பிராமணா விதியை வெல்லுதலரிது என்று கூறி மறைந்துபோனான். இப்படி வெல்லுதற்கரிய விதியையும் மார்க்கண்டேயர் என்னும் மகானுபாவர் சிவபூசையினால் வென்று எமனை செயித்தாரன்றோ? ஆதலின் நாமெல்லாம் சாக்ஷாத் பசுபதியைவணங்கி எப் பயமின்று முக்தி யடைவோமாக.

## உலகம்.

(முன்தொடர்ச்சி.)

ஆசி. உண்மைதான், பால்கெட்டுத் தயிராவதுபோல் மண்கெட்டுக் கடமாவதில்லை யென்பதற்கும், தயிர் மீண்டும் பாலாகாமற் போவதுபோலன்றிக் கடமீண்டும் மண்ணாகு மென்பதற்கும் இவ் வுவமானமேயன்றி மற்றபடியல்ல. இனி விகாரப்படாத உவமானம் உரைக்கின்றோம். அதாவது கரியனும் பிரதிபிம்பச் சூரியனும்போல சூரியன் விகாரப்படாமல் எப்படி பிரதிபிம்பிக்கிறானோ அப்படியே பரமும் விகாரப்படாமல் பிரதி பிம்பிக்கின்றது.

மாண. இதிலும் சங்கையில்லாமற் போகவில்லை. பிரம்மப்பொருள் பிரதிபிம்பிப்பதற்கு ஆதாரமொன்று வேண்டும். சூரியன் பிரதி பிம்பிப்பதற்கு சலம் எப்படி ஆதாரமோ அப்படியே பரத்திற்கும் ஒரு ஆதாரம்வேண்டும். எது மற்றொரு ஆதாரத்தை வேண்டுகிறதோ அது கண்டப்பொருளா யிருக்க வேண்டும். ஆதலால் இவ்வுவமானத்தால் பரத்திற்கு அபரிபூரணதோஷம் நேரிடுகிறது.

ஆசி. இந்த திருஷ்டாந்தம் பரவஸ்து விகாரப்படுவதில்லை யென்பதற்கு மாத்திரமே. இனி இந்த தோஷமில்லாமல் வேறொன் றுரைக்கின்றோம். அது கயிற்றில் பாம்பும் கிளிஞ்சலில் வெள்ளியும் எப்படித் தோற்றமோ அப்படியே பரத்தினிடத்து சிற்சடமான உலகு தோற்றுகின்றது.

மாணு. இதிலும் ஐயமுளது. கயிறைத்தவிரப் பாம்பு இல்லையெனத் தெளியின் பிறகு பாம்பு தோற்றுவதில்லை. உலகு காரணத்தையன்றி யில்லையென் றுணரினும் மீண்டும் தோற்றுகின்றது.

ஆசி. உலகம் பொருளல்லவென்பதற்கு மாத்திரம் இந்த உவமானமேயன்றி முற்றுமல்ல. இனி அத்தோஷமும் இல்லாதபடி சொல்லுகிறோம். அது கானனீராம். கானலையன்றி நீர் முக்காலத்து மில்லையெனத் துணியினும் மீண்டும் தோற்றிக்கொண்டே யிருப்பதுபோல உலகம் அசத்தெனத் துணியினும் தோற்றிக்கொண்டேதா னிருக்கும்.

மாணு. கானலினிடத்து நீரில்லையென்று தெளிந்த பின்னர் தோற்றினாலும் அந்நீர் அனுபவத்திற்குவருவதில்லை. அதாவது நீரைக்குடிக்க உதவுவதில்லை. உலகோ அவ்வாறன்று; சத்த ஸ்பரிச ரூப ரசகந்தங்கள் அனுபவிக்கப் படுகின்றன. ஆதலின் இத் திருஷ்டாந்தம் பொருந்தாது.

ஆசி. உலகம், அசத்தென் றுணரினும் பெயர்த்தும் தோற்றும் என்பதுவரையிலும் மாத்திரம் கானனீர் திருஷ்டாந்தமாம். மற்றபடி அனுபவமாகின்றதைப்பற்றி வேறு திருஷ்டாந்தங் கூறுவாம். அதாவது சந்நிபாததோஷத்திற் காணும் உலகும், சொப்பன உலகும் பிறவும்போலுமாம். சந்நிபாத தோஷ முதலியவற்றால் காணும் உலகு தோற்றமேனும் அனுபவத்தோடு கூடிய தோற்றமாம்.

## கடவுளைக்காட்டு.

(முன்தொடர்ச்சி.)

விலங்கு - பறவை - ஊர்வன - நீர் வாழ்வன முதலானவைகளிலும், மரஞ் செடி கொடி வகைகளிலும், அவைகளிலுடைய மலர் காய் முதலானவைகளிலும், மண் கல் முதலியவைகளிலும் எத்தனையோ பேதங்களும் குணரூபவிசித்திரங்களும்இருக்கின்றனவே,இவை எவ்வாறு தோன்றின? உய்த்துணருமிடத்தில் காரணக்கடவுளின் செயலென்றே தோன்றுகின்றதல்லவா? தெய்வம் உண்டென்பது ஒருபோதும் பொய்யாகமாட்டாது. கண் அகக்கண், புறக்கண் என இரண்டாகும். அகக்கண்ணென்பது அறிவாகிய கண், புறக்கண்ணென்பது முகத்திலிருக்குங்கண். புறக்கண்ணினாற் கடவுளை நிஜஸ்வரூபமாய் காணமுடியாது. அகக்கண்ணினால் காணலாம். அநேகர் அஞ்ஞானவிருள் சூழ்ந்து அகங்குருடாயிருப்பதனால், அவர்களுக்கு அகக்கண்ணிலும் புலப்படுகிறதில்லை, ஆனபோதிலும் உள்ளமாகிய தகளியில் அன்பாகிய நெய்யைப்பெய்து அருளாகிய திரியையிட்டு அறிவாகிய விளக்கையேற்றினால் அவர்களுக்குப் புலப்படலாம்.

"முகத்துக்கண்கொண்டு பார்க்கின்றமூடர்காள் அகத்துக்கண்கொண்டு பார்ப்பதேயானந்தம்" எனவும் சொல்லப்பட் டிருக்கின்றது.

கடவுள் எங்கேயிருக்கிறார். அவரைநாம் காணுவதெப்படி என்றால் கடலில் முத்துக்க ளிருக்கின்றன. அவைகளைக் காணவேண்டுமானால் ஆழத்தில் மூழ்கி அடிக்கடி தேடவேண்டும். அதுபோல் ஈசுவரன் இவ்வுலகத்திலேயே யிருக்கிறார். நீ சிரமப்பட்டு ஞானத்தை யடைந்தால் அவரைக் காணமுடியும்.

சிலநாளைக்குமுன் ஒருகிழவன் தினந்தோறும் கோயிலுக்குச்சென்று கடவுளைத்தரிசித்து அவருடைய பாதாரவிந்தத்தில் தன்னைச் சேர்த்துக்கொள்ளும்படி கோரினான். ஒவ்வொருநாளும் எல்லோரும் போனபிறகு வெகு நாழிகைபரியந்தம் சுவாமியினுடைய சந்நிதானத்திலேயே யிருந்து தன்னை பாதாரவிந்தத்திற் சேர்த்துக் கொள்ளும்படி கண்ணீர்விட்டழுவான். அவன்தானே மிகுந்த பக்திமானென்றும் தன்னைவிட சுத்தன் யாருமில்லையென்றும் நினைத்திருந்தான். ஒவ்வொருநாளும் இப்படி கோயிலில் வெகுநேரம்வரை இவனிருப்பது குருக்களுக்கு மிகுந்த அவஸ்தையாயிருந்தது. குருக்கள் இந்தக்கிழவன் உண்மையான பக்தனல்லவென்பதை யறிந்து இவனைப் பயமுறுத்தும்படி ஓர் யுக்திசெய்தான். ஒருநாள் இந்தக்கிழவன் சுவாமி என்னை உம்முடைய திருவடியிற்சேர்த்துக்கொள்ளும் என்றுகதற விக்கிரகத்துக்குப் பின்னாலிருந்த குருக்கள் விகாரசப்தமாய் "அடே, இங்கேவா, உன்னை விழுங்கிவிடுகிறேன்" என, சுவாமிபேசுகிறதென்று கிழவன்பயந்து ஓட்டம் பிடித்தான். எங்கே தன்னை விழுங்கிவிடுவாரோ வென்ற பயம் கிழவனுக்கு உண்டாயிற்று. அதுமுதல் கோயிலில்தனியாய் அவனிருப்பதில்லை. இதுபோல் அநேகர் கடவுளுடைய பாதாரவிந்தத்தை விரும்புகிறதுண்டு. இத்தகையோர்க்கெல்லாம் கடவுள் எங்கு தோன்றுவர்.



'நம்பாதவன்வம்பன் நம்பிச்செய்யாதவன் சும்பன்' என்று ஓர் பழமொழியுண்டு. நமது வேதசாஸ்திரபுராண இதிகாசங்களில் நம்பிக்கைக் கொள்ளாதவன் வம்பன். அவனுடைய ஆயுசெல்லாம் வம்பு பேசுவதிலேயே கழிந்துபோம். வேதத்திலுள்ள விஷயங்களை உண்மையென்று நம்பியும் அவ்விதம் செய்யாமலிருப்பவன் சும்பன். அவனைப்போல் மூடன் இவ்வுலகில் அகப்படான். சிலநாளைக்கு முன் ஓரூரில் இரண்டு நேசர்களிருந்தனர். அவர்களில் ஒருவன் பக்திமான். மற்றவன் ஈசுவரனிடம் விசுவாசமற்றவன். இவ்விருவர்களும் ஒரு சமயம் யாத்திரைபோகையில் நடுவழியில் ஓர் காளியம்மன்கோயில் தென்பட்டது. முதல்வன் உடனே அருகிலிருந்த ஓடையில் ஸ்நாநம்செய்து காளியைவணங்கிக் கோயிலைச்சுற்றிப் பிரதக்ஷணம் வந்தான். வழியில் அவனுடைய காலில் ஒரு முள்தைத்துச் சிறிது இரத்தம் வந்தது. அதனால் அவன் நொண்டி நொண்டிக்கொண்டு தன் சிநேகிதனிடம் வந்துசேர்ந்தான். ஈசுவர விசுவாசமற்றவன் மரம்போல் நின்றுக்கொண்டிருக்கையில் தன் காலடியில் ஓர் வெள்ளிக்கட்டி யிருந்ததைக்கண்டு எடுத்துப் பத்திரமாய் வைத்துக்கொண்டான். காலை நொண்டிக்கொண்டு தன்னருகில்வந்த நேசனைக்கண்டு "ஏனப்பா, காளிகொடுத்த வரப்பிரசாதமோ இது. நான்சொன்னதைக் கேளாத தோஷமிது. இதோபார் எனக்கு வெள்ளிக்கட்டி கிடைத்தது. உனக்கு கால் நொண்டியாயிற்று" என்றான். ஈசுவரபக்தன் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தான். பிறகு இருவர்களும் சிறிது தூரம் போனார்கள். அங்கே ஒரு பெரியவர் எதிர்ப்பட்டு பக்தனைநோக்கி "நீ செய்த பூர்வஜன்ம பாபகர்மத்துக்குப் பலன் உன்னை நல்லபாம்பு கடித்திருக்க வேண்டும். நல்லவேளையாய் நீ காளிகாதேவியை வணங்கியதால் உனக்குப் பாம்புக்கடித்து மரணமுண்டாகாமல் முள்தைத்துச் சிறிது இரத்தம் வடிந்தது" என்றார். நாஸ்திகனை நோக்கி அடே, நீ பூர்வஜன்மத்திற்செய்த புண்யபலன் இந்தசமயத்தில் நீ ராஜ்யாதிகாரத்தை அடைந்திருக்கவேண்டும். காளியை அலக்ஷியம் செய்ததால் சுமார் 10 - ரூபாய் பொறுமான இந்த வெள்ளிக் கட்டிதான் உனக்கு கிடைத்ததென்றார் உடனே இருவர்களின் மயக்கமும் தெளிந்து அவர்களுக்கு ஈசுவரனிடம் இடையறாத நம்பிக்கை உண்டாயிற்று. மேற்கூறிய உதாரணங்களை யெல்லாம் உற்று நோக்குங்கால் கடவுள் உண்டென்பதற்கு யாதொரு ஆக்ஷேபணையில்லை.

NEWS AND NOTES.

# புத்தகவிளம்பரம்.

## ஞானப்பிரகாச தீபிகை.

இவ்வரிய வேதாந்த வசன புத்தகத்தை ஸ்ரீ அகிலாண்ட ஸ்வரூபானந்தரால் உலகுய்யும்பொருட்டு உகந்தளிக்கப்பட்டது. பிரம்மாண்ட புவன சரீர கடாதிபிரபஞ்சோதய சிருஷ்டிக்கிரம அத்தியாரோப அபவாத விளக்கப்படத்தின் சாராம்சத்தைத் தெளிவாகக்காட்ட அண்ட பிண்ட பஞ்சீகரண படங்கள் சேர்த்து கிளேஸ் காகிதத்தில் காலிகோபயிண்டு செய்யப்பட்டது. இதன் விலை 1—0—0.

## ஞானவாசிட்டம்.

இது வசனகாவியம். ஸ்ரீ ராமபிரானுக்கு வசிட்ட மாமுனிவர் உபதேசித்த விஷயங்களெல்லாம் அடங்கப்பெற்றது. இக்கிரந்தம் ஒன்றைமாத்திரம் கவனமாய்ப் படித்தால் உலகம், ஜீவன், ஈசுவரன் என்பவைகளையறிந்து உலகத்தை அனித்தியமென்று விடுத்து ஈசுவரனைப்பூசித்து, அவனது அருளால் மோக்ஷசாம்பிராஜ்ஜியத்தை அடைவது சத்தியம். நமது இந்துதேசத்திலுள்ள ஒவ்வொரு இந்துக்கள்வீட்டிலும் குடும்ப இரத்தினமாகப் பாவிக்கவேண்டிய இப்புத்தகத்தை உயர்ந்த காலிகோபயிண்டு செய்திருக்கிறது. விலை 1—S—0.

## பகவத்கீதை.

இப்புத்தகம் தமிழ் வசனநடையில் எல்லோரும் படித்தறியுமாறு, தஞ்சாவூர் மகாராஜா சமஸ்தானத்திற்காகவே, முன்காலத்தில் மகாவித்துவான்கள் ஒன்றுகூடி எழுதப்பட்டது. ஸமஸ்கிருத புத்தகத்திலுள்ள ஒவ்வொரு சுலோகத்தின்கருத்தையும் விடாது விசேஷ அர்த்தங்களுடன் தமிழில் தெளிவாக மொழிபெயர்க்கப்பட்டது. உயர்ந்த திக்குகிளேஸ்காகிதம், காலிகோ பயிண்டு. இதன்விலை 1—4—0.

## ஸ்ரீகுமாரதேவர்சாத்திரம்

இது சுத்தவேதாந்தநூல், இனிய தமிழ்ச்செய்யுள், எல்லோருக்கும் எளிதில் பொருள்விளங்கும். நம்முடைய வாழ்நாளில் ஒருமுறையாவது அவசியம்படிக்கவேண்டிய இதிலுள்ள முக்கியமானவிஷயங்கள் யாதெனில்; விஞ்ஞானசாரம், அத்துவிதவுண்மை, பிரம்மானுபூதிவிளக்கம், ஞானவம்மானை, மகாராஜாதுறவு, சுத்தசாதகம் என்பவைகள். உயர்ந்த கிளேஸ்காகிதம் காலிகோபயிண்டு. சரசமானவிலை 0—10—0. இதற்கு மகாராஜாதுறவென்றும் பெயர்.

## பிரபுலிங்கலீலை.

இது சிவப்பிரகாசசுவாமிகள் அருளிச்செய்தது. 25 - கதிகளையுடையதாய் 1,159 செய்யுட்களடங்கிய வேதாந்தநூல் இதன்விலை. 0 - 8—0.

---

## தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு.

பக்தியே பிரதானமாகக்காட்டி வேதாந்த சித்தாந்தமென்னும் இருசமயங்கட்கும் சமரசமாயும் வாசிப்பவர்கட்கு எளிதாயும், பாடுவோர்க்கு இனிப்பாயும் இருக்கும்பொருட்டு லோகோபகாரமாகக் கருணைகூர்ந்தருளிய தாயுமானசுவாமிகளின் திருப்பாடற்றிரட்டை உயர்ந்ததான கிளேஸ்கடிதத்தில் முதலில் நான்கு திருவுருவப்படங்களுடன் அவர் சரித்திரச்சுருக்கமும், சிறப்புப்பாயிரமும், திருவருள் விலாசப் பரசிவவணக்கம் என்னும் மூன்று பாடல்களுக்கு மகாவித்துவான் அஷ்டாவதானம் புரசை. சபாபதிமுதலியார் அவ. . . விரித்தெழுதப்பட்ட ஓர் அரிய உரையும் காடுங்கரையும் என்னும் பாட்டுக்கும், எடுத்ததேகம் என்னும் பாட்டுக்கும் ஓர் புதிய உரையும் எழுதி, இன்னும் அனேக நூதனமான பாட்டுகளும், கடையில் அருமையான சமாதிப்பதிகம் என்னும் பாடல்களையும் புதிதாய்ச்சேர்த்து அச்சிட்டு அழகான காலிகோபயிண்டுசெய்து தயாராயிருக்கின்றது புத்தகம் ஒன்றுக்கு விலை 1—0—0.

ஷை தின் கிளேஸ்கடிதத்தில் பயிண்டுசெய்த புத்தகம் ஒன்றுக்கு விலை 0—12—0.

---

## கட்டளைக்கொத்து.

உலகத்தில் உண்மையான நித்தியசுகத்தை யடைய வேண்டின் மதாசாரத்தை யநுஷ்டிக்க வேண்டியது அவசியம். மனிதனுக்கு மதத்தைப்போல் சுகங்கொடுக்கத் தகுந்தது வேறொன்றில்லை. தனதான்னியங்களாலும், பெண்டுபிள்ளைகளாலும் வருகிறசுகமானது அற்பமானதாயும் அல்லலுடைய சமுசாரத்தை விர்த்திசெய்கிறதாயு மிருக்கிறது. கடவுள் சொரூபத்தையும், ஆத்மாவின் இலக்ஷணத்தையும், உலகத்தின் தன்மையும் அறிவித்து, பயத்தைநீக்கி, மரணத்தைத் தவிர்த்து நித்தியமான பேரின்பத்தை யடையச்செய்வது மதமானதால் அது மிகவும் சிரேஷ்டமாகும். ஆகையால் மதவிசாரணை செய்து, விசாரித்தறிந்தவண்ணம் அநுஷ்டிக்க எல்லாரும் முயல வேண்டுமென்பது அத்தியாவசியகமான விஷயம். மதவிசாரணை செய்வதெப்படி? முதலில் கிரந்தங்கள் மூலமாக மதக் கோட்பாடுகளையறிந்த பிறகு நல்லாசானைத்தேடி உபதேசம் பெறவேண்டும். எந்தக் கிரந்தங்களைப்படிக்க வாரம்பிப்பது? இந்தக்கேள்விக்கு கீழ்வருமாறு சமாதானம் சொல்லப்படுகிறது.

அஞ்ஞானத்தையே காரணமாகக்கொண்டிருக்கும் சமுசார பந்தத்தையுடைய ஜனங்கள் கடைத்தேறும் வண்ணம் நித்திய முக்தனாகிய பகவான் வேதத்தையுண்டாக்கியருளினார். அந்த வேதமானது பல சாகைகளாகப் பிரிந்து ஜனங்களின் மனோவிர்த்திக்குத் தகுந்த மாதிரியாக விருக்கின்றன. அவ்வேதத்தின் பல சாகைகளின் காரணமாக பல சமயங்கள் ஏற்பட்டு பல சாஸ்திரங்களில் பிரதிபாதிக்கப்படும் ஜக ஜீவபரங்களின் இலக்ஷணங்களைத் தெரிந்துகொள்ளுவதற்கு கூறப்பட்டுள்ள விஷயங்கள் அந்தந்த சமயங்கட் கேற்றவாறு பரிபாஷா கலப்பினால் சுலபத்தி லறிதற் கேலாதபடி யிருக்கின்றமையினைக் கருதி, அந்தந்த சமயங்களில் வல்லவர்களாகிய பெரியோர்கள் தங்களுக்குரிய சாஸ்திரங்களுக்குச் சோபானமாக எளியவசன நடையில் (1) சிவப்பிரகாசக்கட்டளை, (2) திருவாலவாய்க்கட்டளை, (3) வேதாந்த தத்துவக்கட்டளை, (4) ஆராதாரஜீவோற்பத்தி சிந்தாமணி, (5) தத்துவதீபிகை, (6) ஞானக்கட்டளை, (7) தத்துவாமிர்தக் கட்டளை, (8) நாநாசீவவாதக் கட்டளை, (9)உபதேச உண்மைக் கட்டளை, (10) வேதாந்த தசாவத்தைக்கட்டளை, (11) வேதாந்த தசகாரியக்கட்டளை, (12) உபதேச சித்தாந்தக்கட்டளை, (13) சித்தாந்தக்கட்டளை, (14) சித்தாந்த தத்துவலக்ஷணம் ஆகிய விவைகளைச் சிறுநூல்களாக வியற்றி உபகரித்திருக்கின்றனர். இந்நூல்கள் பெரும்பாலும் கட்டளைகள் என்கிற பெயரினாலேயே வழங்கிவருகின்றன. இவைகளுள் சில சுத்தாத்து விதிகளுக்கும் கேவலாத்து விதிகளுக்கும் உரியனவாம். இக்கட்டளைகள் சித்தாந்தத்தில் ஒன்றற்கொன்று மாறுபட்டனவே யாயினும் தங்கள் தங்கள் சமய வுண்மையினை ஆராயப் புகுவோர் மற்ற சமயத்தினர் கொள்கையினையும் அறிந்துகொள்ள வேண்டுவது மிக நலமாகலின் இருவகைப்பட்ட இப்பதினான்கு கட்டளைகளையும் ஒன்று சேர்த்து "கட்டளைக்கொத்து" என்னும் பெயரிட்டு, சுத்தவெண்மையான கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. மதவாராய்ச்சிசெய்ய வாரம்பிக்கும் ஆரியமதாபிமானிகள் இக்கட்டளைக்கொத்தை முதலில் படிக்கவேண்டும். இது எல்லாருக்கும் மிக்க உபயோகமான புத்தகமெனக்கருதி இதன் விலையை சரசமாக எட்டு அணாவாக ஏற்படுத்தியிருக்கிறது.

☞ கொ-லோகநாதமுதலியார்.
"இகபரசுகசாதனி ஆபீஸ்"
நெ - 29, வைத்தியநாதமுதலிவீதி, சென்னை.

ஓம்.
பரப்பிரம்மணே நமஃ.
"ஏகம் சத்விப்ரா பஹுதா வதந்தி."

# இகபரசுகசாதனி.

REGISTERED
11 APR 1904
MADRAS

வாலியம் I. } 1904ளு ஜனவரிமீ { புத்தகம் IX.

## மனனமாலை.

---

குஞ்சரானமாயையோரைத் துதிக்கையாலெடுத்துமேலாம்
ஆதாரமானவந்த வருளினிலிருக்கவைக்கும்
தாதாவாய்விருத்தவெற்பிற் றங்கியேபிரகாசிக்கும்
பாதாளத்தானைபாதம் பணிந்துபோற்றிடுதல்செய்வாம்.

---

விளங்கியிடுமிவ்வுலகெல்லாமித்தைவடிவேயென்பதுவும், விளங்கியெங்குந்தற்சொரூபம் விமலவடிவேயென்பதுவும், விளங்கிலருத்தமொன்றேயாம் வேறாய்க்காணுமம்ஃதகற்றி, விளங்குமொளியாயேகாண்கில் விளங்குமருத்தமொன்றாயே.

---

தனதுசங்கற்பந்தனிலே சகங்களாகிவிளங்கியிடும், தனதுசங்கற்பந்தனிலே சகம்போயொடுங்குமதனாலே, தனதுவடிவே சகங்களெல்லாந் தன்னைவிட வேறிலைதங்கும், தனதுவடிவைவிடப்பணிகடான் வேறாகிவிளங்கிடுமோ.

---

காமத்தாலிந்திரன் கலக்கமெய்தினன்
காமத்தாலிராவணன் கருத்தழிந்தனன்
காமத்தாற்கீசகன் கவலையுற்றனன்
காமத்தாலிறந்தவர் கணக்கிலார்களே.

---

கோபத்தாற்கௌசிகன் றவத்தைக்கொட்டினன்
கோபத்தானகுடனுங் கோலமாற்றினன்
கோபத்தாலிந்திரன் குலிசம்போக்கினன்
கோபத்தாலிறந்தவர் கோடிகோடியே.

---

ஆசையாற்சந்திர னங்கந்தேய்ந்தனன்
ஆசையாற்சவுபரி யறிவைநீங்கினன்
ஆசையானராசுர னுவிபோக்கினன்
ஆசையால்வாலியு மழிந்துபோயினன்.

---

மக்களுமனையுநீத்து மாதராராசைநீத்துச்
சொர்க்கமேலாசைநீத்துச் சுத்தனாய்ப்பற்றொன்றின்றிக்
கற்கவேண்டியதுநீத்துக் கருதிருவினையுநீத்து
நிற்குணசிவர்தானாகி நிற்பதுஞானநிட்டை.

---

ஐம்புலன்வழியோடி மானிடரெலாமழிவார்
ஐம்புலன்வழித்தாவிமே லமரருமழிவார்
ஐம்புலன்வழியடைத்தவன் யோகியேயன்றி
ஐம்புலன்வழியடைத்தவ ருலகினில்யாரே.

---

அறிவிலறிவாயகண்டிதமாயனந்தானந்தமாகிச், செறியும்பரமசிவந்தன்னைத்தன்னுட்கண்டுதியானித்து, கறவையருந்தப் பால்சுரக்குங் காலமேனுங் கடைப்பிடிப்போர், பிறவிக்கடலைக் கடந்தோர்க ளவரேயுலகிற் பெரியோரே.

---

நிறையறிவாயிருந்துமின்மலன்றன்னைத்தேடி, மறைமுதனூலாராய்ந்தும் பின்னருமயங்குந்தன்மை, யிறைவனேயெனக்குநாக்குண்டில்லையோவென்றுகேட்க, வறைவதுநாக்கேயென்ன வகந்தெளியானைப்போலும்.

---

உவசலாடுளமுமின்றி யுருவருவுபயமின்றிக்
கோசரவகோசரங்கள் குறிகுணபேதமின்றிப்
பாசசாலங்கடந்து பராபரைக்கப்பானின்ற
வீசனையறிந்தஞானிக் கினிப்பிறப்பில்லையன்றே.

---

ஈசனிலை யாவியிலை யீசனடி யாரில்லை
மாசகலா மாயா மகற்கு.

---

ஞானமிலைப் பத்தியிலை நல்லார்கண் ணட்புமிலை
மானமிலை மாயா மகற்கு.

---

சீவனத்தாற் சீவனெனல் சீவமிறந்தா லிந்தச்
சீவனே யந்தச் சிவம்.

---

ஊனை யொதுக்கி யுணர்வாக்கி விட்டபினர்
நானே பிரமமென நாடு.

---

சித்திரத்தை யொத்துச சிவோகமெனச் சிந்தித்தா
லத்தனாரு நீயாவை யால்.

---

ஆணல்லன்பெண்ணல்ல னல்லாவலியுமல்லன்
காணலுமாகானனல்ல னில்லையல்லன்
பேணுங்காற்பேணுமுருவாகு மல்லனுமாங்
கோனைபெரிதுணடற்கெம் பெம்மானைக்கூறுதலே.

---

நாதனைஞாலமும்வானமுமேத்து நறுந்துழாய்ப்
போதனைப்பொன்னெடுஞ் சக்கரத்தெந்தைபிரான்றன்
பாதம்பணியவல்லாரைப் பணியுமவர்கண்டீர் [லைப்
ஓதும்பிறப்பிடைதோ றெம்மையாளுடையார்களே.

---

முககக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

---

## கர்மயோகம்.

கர்மம் என்னும்பதத்திற்கு கிரியை அல்லது வேலையென்றுஅர்த்தம். யோகம், என்றால் சுகதுக்கங்களை சமமாகவெண்ணி யனுபவித்தல். ஆகவே கர்மயோகமென்றால் சுகதுக்கங்களையும் இலாபநஷ்டங்களையும் சத்துருமித்திரர்களையும் சமமாகவெண்ணி சர்மத்தைச்செய்தல் என்று அர்த்தமாகிறது, ஒருஜென்மத்தில் மனிதன் அனுபவிக்கும் சுகதுக்கங்களுக்குக் காரணமாய் பூர்வஜென்மத்தில்செய்த தர்மங்களையும் கர்மமென்று சிலர் கூறுவதுண்டு. பூர்வஜென்மாந்திர சம்பந்தமாய் அடுத்த ஜென்மத்தில் அனுபவிக்கும் சுகதுக்கங்களுக்கும் கர்மம்என்று பெயருண்டு. மனிதர்களில் வர்ணாசிரமபேதங்களுண்டாகி இன்னவருணத்தார் இன்னகர்மம் அல்லது ஆசாரத்தை யனுஷ்டிக்கவேண்டுமென்றும், அக்கர்மங்களைப் புரிவதால் இன்னபலன்களை யனுபவிக்கலாமென்றுங் கூறுவது கர்மமே. சர்வத்திற்கும் ஆதாரமான வேதத்தினுடைய கர்மகாண்டத்தில் அநேக கர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளையறிந்த மகரிஷிகள் அனேகஸ்மிருதிகளைச் செய்திருக்கிறார்கள். அந்த ஸ்மிருதிகளில் முக்கியமாய் இக்கலியுகத்தில் நடக்கும் தர்மங்களையும், மனிதன்செய்யவேண்டிய கர்மங்களையும் கூறுவது பாராசரஸ்மிருதிதான். மனிதன் பிறந்ததுமுதல் இறக்கும்வரைக்கும் செய்யவேண்டிய கர்மங்கள் அளவற்றன. கர்மங்களும் வர்ணாசிரமங்களும் தக்கவாறு இருக்கின்றன. மனிதர்களுடைய குணத்திற்கும் அவர்கள்செய்யுந் தொழிலுக்கும் தகுந்தமாதிரியாகவே ஆதியில் பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ஜாதிபேதங்களுண்டாயினவென்று பகவான் ஸ்ரீகிருஷ்ணன் கீதையில் கூறியிருக்கிறார். பிறகு பிரம்மசரியம், கிரகஸ்தாசிரமம், வானப்பிரஸ்தம், ஸந்நியாஸம் என்னும் நான்கு ஆசிரமங்களும், அவ்வாசிரமங்களில் அனுஷ்டிக்கவேண்டியகர்மங்களும் உண்டாயின. ஜாதககர்மம், நாமகரணம், அன்னப்பிராசனம், சௌளம், வித்தியாரம்பம், உபநயனம் வரைக்கும் ஒருவனுக்குத் தாய்தந்தையர்கள்செய்யுங் கர்மங்கள். உபநயனம் முடிந்து பிரம்மசாரியாகி தண்டம், கமண்டலம், தர்ப்பமுடி, மௌஞ்சி, அரைஞாண் இவைகளைத்தரித்து, பிக்ஷான்னம்புசித்தல், வேதாத்தியயனம்செய்தல், குருவின்வீட்டில்வசித்தல், குருவுக்கு சிசுருஷைசெய்தல், உபதேசம்பெறல்.முதலான விரதங்களை யனுஷ்டித்துவரவேண்டும். குருவினிடத்து வித்தைகற்று உபதேசம்பெற்றுக்கொண்டபிறகு, குருதக்ஷிணைகொடுத்து குருவின் அனுமதிபெற்று குலாசாரத்திற்கடுத்த பெண்ணை விவாகஞ்செய்துகொண்டு கிரகஸ்தாசிரமத்தை யடைந்து நித்திய நைமித்திககர்மங்களை சாஸ்திரயுக்தமாய்ச் செய்துவரவேண்டும். இவ்விதமாக சிலவருஷங்கள் கழிந்தபின்குடும்பவியாபாரத்தில் வைராக்கியமடைந்து கிரகஸ்தாசிரமத்தைவிட்டுநீங்கி ஜடையைத்தரித்து மரவுரி மான்தோல் இவைகளையுடுத்து, கிழங்கு பழம் முதலியவைகளைப்புசித்து தானொன்றையும் யாசியாமல் எப்போதும் கொடுப்பவனாகி, தேவ ரிஷி பிதிர்மனுஷியர்களை ஆராதிப்பதாகிய பஞ்சமகாயக்கியங்களைச்செய்துகொண்டு வானப்பிரஸ்தனாகி யிருக்கவேண்டும். அதன்பிறகு சகல பற்றுக்களையுமொழித்து, காஷாயம், தண்டம், கமண்டலம் இவைகளைத்தரித்து ஏகாந்தமாயிருத்தலை யினிதாகக்கொண்டு சன்னியாஸியாகி சுகதுக்கங்களில்வீழாமல் நடுவுநிலைமைபெற்று, அந்தக்கரண புறக்கரணங்களை யடக்குதல், லௌகீகவிஷயங்களில் பற்றில்லாமை, மனக்கலக்கமற்றிருக்கை, பொறுமை, தயை முதலிய உத்தமகுணங்களைவகித்து, பலனை உத்தேசிக்காமல் கர்மஞ்செய்தல், பகவானைத்தியானித்தல், ஞானாராய்ச்சிசெயல், பிக்ஷையெடுத்துண்ணல் முதலான தர்மங்களை மேற்கொண்டொழுகவேண்டும். இவ்விதமாக நான்கு ஆசிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஆசிரமத்திலுள்ள ஒழுக்கங்களை சிறிதேனும் வழுவாமல் நடத்தினால் அதிகசுகிர்தமுண்டு.

அனேக வருஷங்களுக்குமுன் இளம்பிராயமுள்ள ஓர்சன்னியாசி காட்டில்தபசுசெய்துக்கொண்டிருந்தார். இருபதுவருஷகாலம் கஷ்டப்பட்டு தபசுசெய்தபின் ஒருநாள் ஓர் மரத்தின்கீழ் உட்கார்ந்து தபசிலிருக்கும் பொழுது அவர்சிரசில் மரத்தின் இலைகள்விழுந்தன: இதற்கென்னகாரணமென்று கோபத்துடன் மேலேபார்க்கும்போது, இலைகளையுதிர்த்த கொக்கு பறந்துகொண்டிருந்தது. சிறிதுநேரத்திற்கெல்லாம் பறந்துகொண்டிருந்த பக்ஷியானது தொப்பென்று பூமியில்விழுந்து உயிரைவிட்டது. இதைக்கண்ட சன்னியாசி சந்தோஷமடைந்தார். இவ்வளவுசக்தி நமக்குண்டாயிற்றென்று மனமகிழ்ந்து ஒருவிதமான கர்வத்தையுமடைந்தார். சிலநாள்சென்றபின் இந்த பால்யசன்னியாஸி ஒரு கிராமத்தில் வீடுகள்தோறும் பிக்ஷையெடுத்து வருகையில் ஒருவீட்டிற் கெதிரில்நின்று அம்மா பிக்ஷைபோடு, என்றுகேட்டார். அதற்குப்பதிலாக ஐயா கொஞ்சம் பொறுங்கள் என்றசத்தம் உள்ளேயிருந்து புறப்பட்டது. அப்போது சன்னியாசி நினைத்துக்கொள்ளுகிறார். ஐயோ! இந்ததுஷ்டப்பெண் நம்முடைய மகத்துவத்தைத்தெரிந்துகொள்ளவில்லையே நம்மைமகாக்கவைத்தால் இவள் அனியாயமாய்உயிரைத்துறப்பாளே என்று எண்ணிக்கொண்டார். உடனே உள்ளேயிருந்த உத்தமி "ஐயா என்னையும் கொக்கென்று நினைத்தீரோ" என்றாள். சன்னியாசிக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று. சற்றுநாழிகைக்கெல்லாம் அப்பதிவிரதாசிரோன்மணி பிக்ஷையெடுத்துக்கொண்டு வெளியேவந்தாள். அப்போது சன்னியாசி அவளைநமஸ்காரஞ்செய்து அம்மா நான்நினைத்தது உங்களுக்கு எப்படித்தெரிந்ததுஎன்றார். அவள் உன்னுடைய யோகத்தை நான் அறியமாட்டேன். எனக்கு யோகாப்பியாசம் இல்லை. தபசுமறியேன். காட்டில்போயறியேன். நான் சாதாரணமாய் இல்லறத்தைச்சேர்ந்தஸ்திரீ, என்னுடைய பரமதயாளுவான பர்த்தா தேகஅசௌக்கியமாயிருக்கிறார். அவருக்கு சிஸ்ருஷைசெய்து அமுதுபடைத்துக்கொண்டிருந்தேன். அது என்முக்கியகடமை, அதைமுடித்தபின் உனக்கு பிக்ஷைகொண்டுவந்தேன். நான் கலியாணமாகாத கன்னிகையாயிருந்தகாலத்தும் என்கர்மத்தை யனுஷ்டித்தேன். இன்னும் ஆயுள்முழுவதும் நான் செய்யவேண்டிய கர்மத்தைமட்டும் யாதொரு குறைவின்றிச் செய்துவருகிறேன். இந்த யோகத்தைத்தான் நான்செய்துவருகிறேன். இதனால் எனக்கு ஞானமுண்டாயிற்று. ஆகவே பிறர்நினைக்கும்விஷயங்களை அறிய சக்தி எனக்குண்டாயிற்று." என்று கூறினாள். இதைக் கேட்ட சன்னியாசி அம்மா கர்மயோகத்தைப்பற்றி இன்னும் எனக்கு அதிகதெளிவாய்ச் சொல்லவேண்டும். என, அவள் அப்பா மதுராபுரியில் இறைச்சிவிற்கும் ஒரு பஞ்சமன் இருக்கிறான், அவனிடம்சென்று கர்மயோகத்தின்பெருமையைத் தெரிந்துகொள் என்றாள்.

சன்னியாசி "இதென்னஆச்சரியம். பஞ்சமனுக்கு என்னதெரியும். கொடிய பாபச்செய்கைகளைச்செய்யும் அச்சண்டாளனிடம் நானெப்படிப்போவேன்" யென்று நினைத்து, பிறகு பதிவிரதையின்வார்த்தை பொய்யாகாதென்று கருதி, அவ்வாறே மதுராபுரிக்குச்சென்று ஒருபெரிய கசாப்புக்கடைக் கருகாமையில் சென்றுபார்த்தார். அங்கே ஒரு சண்டாளன் மாமிசத்தைக் கத்தியால் துண்டித்து விற்றுக்கொண்டிருந்தான். ஹரிஹரி இந்தக் கொலைக்காரனா நமக்கு கர்மயோகத்தை உபதேசிக்கத்தக்கவன். சற்றேனும் ஜீவகாருண்யமில்லாத இவனிடம் நாம் என்ன கற்றுக்கொள்ளப்போகிறோம் என்று எண்ணினார். இதற்குள்ளாக அச்சண்டாளன் அவரைநோக்கி 'சுவாமி தங்களை எந்தப் பதிவிரதையனுப்பினாளோ? சற்றுப் பொறுங்கள். என்னுடைய வேலையை முடித்துக்கொண்டு வருகிறேன்" என்றான். அப்போது சன்னியாசிக்குண்டான ஆச்சரியத்தை அளவிட்டுச் சொல்லமுடியாது. சண்டாளன், மாமிசங்களையெல்லாம் விற்றபின் சன்னியாசியை யழைத்துக்கொண்டு வீட்டுக்குச்சென்று அவரை வெளியே நிறுத்தி, தான் உள்ளேபோனான். அங்கே அவன் தன்னுடைய தாய்தந்தையர்களின் பாதத்தைக்கழுவி அவர்களுக்கு சமஸ்த உபசாரங்களையும் செய்து ஆகாரங்கொடுத்து பிறகு வெளியேவந்து சன்னியாசியினிடத்துப்பேசி அவர் கேட்டதையெல்லாம் திருப்தியாகச் சண்டாளன் சொன்னான். அவைகளையெல்லாங்கேட்ட சன்னியாசி ஆச்சரியமடைந்து 'ஐயா, இவ்வளவு ஞானத்தை நீர் எப்படி அடைந்தீர். இப்போது மாமிசம்விற்கும் இழிவானதொழிலை யேன்செய்கிறீர் என்றுகேட்டார். சண்டாளன் பதில் கூறுகிறான். ஐயா! உலகத்தில் எந்தகர்மமும் இழிவன்று, என்னுடைய பிறப்பு நிலைமைக்குத் தக்கபடி எனக்கு கர்மமேற்பட்டது. நான் அநேகநாளாய் இத்தொழிலைத்தான் செய்துவருகிறேன். நான் எதையும் பற்றின்றிச்செய்கிறேன். என் தாய்தந்தையர்களைக் காப்பாற்றும் நிமித்தம் இத்தொழிலைச் செய்கிறேன். ஆனால் நான் செய்யுந்தொழிலில் என்மனதை சம்பந்தப்படுத்தாமல் எதையும் நான் சாக்ஷியாகப்பார்த்துக்கொண்டிருப்பதால் எனக்கு ஞானம் உண்டாயிற்று என்றான்.

ஆரியமித்திரர்களே! இக்கதையால் என்ன தெரிகிறது? எந்தஜாதியிற் பிறந்தாலும் அந்த ஜாதிக்கடுத்த கர்மங்களைப் பற்றின்றிச்செய்தால் ஞானம் உண்டாகிறது. எப்படி இராஜயோகம் ஞானத்தைபடையநல்ல சாதனமோ அப்படியே கர்மயோகமும் ஓர் சாதனமே. சாதனமின்றி ஒன்றையும் சாதிப்பவர் உலகில் இல்லை. ஒவ்வொருவனும் எப்போதும்கர்மத்தைச்செய்யவேண்டும் ஆனால் அக்கர்மம் பலனை உத்தேசித்துச் செய்யக்கூடாது. இதுதான் சர்வோத்கிருஷ்டமான கீதையின் கருத்து. நம்முடைய மனம் ஓர் ஏரிபோலிருக்கிறது. நமக்குண்டாகும் சங்கற்பங்கள் அவ்வேரியில் அடித்து அடங்கும் அலைகளைப்போன்றது. ஏரியில் அடிக்கும் அலைகள் பார்வைக்கு அடங்கிவிட்டதாகத் தோன்றுகின்றனவேயல்லாமல் உண்மையில் அப்படியில்லை. அடங்கிய அலைகள் மறுபடியும் கிளம்பிக்கொண்டேயிருக்கும். அதுபோல மனமாகிய ஏரியிலும் சங்கற்பங்களுண்டாகி உடனே மறைந்து மறுபடியும் தோற்றிக்கொண்டேயிருக்கும். அலைகளாகிய சங்கற்பங்கள் மறைந்ததுபோல் தோன்றினாலும் உண்மையில் அவைகள் மறைந்துபோகவில்லை அவைகளின் அடையாளம் அல்லது குறிப்புமனதிற் குடிகொண்டிருக்கின்றன. இந்த அடையாளங்களைத்தான் சம்ஸ்காரங்கள் என்று

பெரியோர் சொல்லுகிறார்கள். நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும், நம்முடைய தேகத்தின் ஒவ்வொரு அசைவும் நம்முடைய எண்ணங்களும் மனதில் படிந்திருக்கும் அடையாளம் அல்லது சம்ஸ்காரத்தின் காரியமே. நாமிப்போதிருக்கும் நிலைமையும் முன்னேற்பட்டபேற்கூறிய சம்ஸ்காரங்களால் நடந்தேறுகிறது. நல்ல ஸம்ஸ்காரங்களை யுடைத்தானவன் நல்லவனாயிருக்கிறான். கெட்ட சம்ஸ்காரங்களையுடையவன் கெட்டவனாயிருக்கிறான். ஸம்ஸ்காரங்களுக்கு வலிவு அதிகம். அதை மாற்ற ஒருவராலும் ஆகாது. ஆகையால்தான் துஷ்டனாயிருப்பவனுக்கு எவ்வளவு நியாயத்தைச் சொன்னாலும் அவன் அதைக்கேளாது துஷ்டனாகவே யிருக்கிறான். உத்தமமான நல்ல சம்ஸ்காரங்களையுடைய நற்குணன் எத்தனை துஷ்டர்கள்சேர்ந்து போதித்தாலும் துஷ்டனாகான். நம்முடைய கையிலகப்பட்ட யந்திரம் நம்முடைய இஷ்டம்போல் சுற்றுகிறது. யந்திரத்திற்கு ஸ்வாதீனமில்லை. அதுபோல் நம்மை நல்லவர்களாகவும் துஷ்டர்களாகவும் செய்வது நாம் முன்செய்த கர்மங்களே யாதலின் நாம் அவைகளுக்கடங்கிய யந்திரம்போலிருக்கிறோம். இம்மாதிரியே நற்செய்கைகளும் நல்லெண்ணமும் அடிக்கடி உண்டானால் நாமும் நல்லவர்களாகிறோம். மேற்கூறிய நற்கருமங்கள் அளவுக்குமிஞ்சி அதிகமானால் நாம் பிரயத்தனப்பட்டாலும் கெடுதல் செய்ய முடியாது.

கர்மமென்பது மனோவாக்குக் காயங்களால் செய்யப்பட்டது. சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என கர்மம் மூன்றுவகையாகும். அனேகஜென்மங்களிற் சேர்க்கப்பட்ட கர்மங்களே சஞ்சிதமாம். சஞ்சிதகர்மங்களில் ஏதேனும் ஒன்று பரிபக்குவமாகி காரியத்திற்கு வந்து இப்போது எடுத்திருக்கும் தேகத்தின் ஆரம்பத்திற்குக் காரணமாயிருப்பதே பிராரத்தம். இப்போதெடுத்திருக்கும் தேகத்தில் மரணபரியந்தம் செய்யப்படும் கர்மத்திற்கு ஆகாமியம் என்றுபெயர். ஆகாமியத்தினால் சஞ்சிதம் உண்டாகி அதினின்று பிராரத்தம் வருகிறது. பயிரிடுவோன் நிலத்தை உழுது நாற்றைநட்டு தண்ணீரிறைத்துக் களைபிடுங்கிப் பயிரைப்பாதுகாத்து தான்னியத்தைக் காலத்திலறுத்து மொத்தமாய் சேகரிக்கிறான். அத்தான்னியத்திலிருந்து தினப்படிக்கு கொஞ்சம் கொஞ்சமாயெடுத்து உண்ணுகிறான். நிலத்தில் தான்னியத்தை யறுக்கும்வரைக்கும் செய்யும் வியவகாரங்களை ஆகாமியத்திற்கு ஒப்பிடலாம். தான்னியத்தைச் சேகரித்து மொத்தமாய்க்கட்டிவைத்தலே சஞ்சிதம். கட்டிவைத்த தான்னியத்திலிருந்து தினந்தோறும் வேண்டியதை யெடுத்துப் புசித்தலே பிராரத்தம். கர்மத்திற்குக் காரணம் மனோசங்கற்பம். ஒருவன் யாதேனுமோர் பலனையடைய மனதிற் சங்கற்பித்துக் கொள்ளுதலே ஆகாமியம். அம்மாதிரி சங்கற்பங்கள் அதிகஞ்சேர்ந்த மொத்தமே சஞ்சிதம். சங்கற்பித்துக்கொண்டவண்ணம் பலனையனுபவிப்பதே பிராரத்தம். ஆகையால் உலகத்தில் ஜனங்கள் அனுபவிக்கும் சுகதுக்கங்களுக்குக் காரணம் அவரவர்கள் பூர்வஞ்செய்த கர்மங்களே. அவரவர்கள் தங்களிஷ்டப்பிரகாரம் அனுபவிக்க ஆசைகொண்டு எண்ணிய மனோசங்கற்பங்களே கர்மமாகி காரியத்திற்கு வந்து அவரவர்கள்கோரியதைக் கொடுக்கின்றன. இந்த கர்மமானது அநாதியாயுள்ளது. ஜீவர்கள் உள்ளவரைக்கும் கர்மம்உள்ளது. ஜீவர்களை நித்தியமாயுள்ளவர்களென்று சொல்லும்பக்ஷத்தில் கர்மத்தையும் அநாதியாய் நித்தியமாயுள்ளது என்று சொல்லவேண்டும். நித்தியமாய் உள்ளது ஒன்றே. மற்றவையெல்லாம் கானல்நீர் கயிற்றரவுபோல் தோற்றமே என்று கூறி, ஜீவர்களை அநித்தியமென்று சொல்லுபவர்களுக்கு கர்மமும் அநித்தியமே. அநாதியாயுள்ளவஸ்துவுக்கு அந்தமும் இல்லையென்று சொல்லுவது சரியே. ஆதியில்லாதவஸ்து ஒன்றே. அதுதான் ஜகத்கர்த்தாவாகியும் அகர்த்தாவாகியும் இருக்கிறது. அதைத்தான் பகவான் என்று சொல்லுகிறோம். பகவானைத்தவிர வேறேயொருவஸ்து நித்தியமாயில்லை. உலகத்தில் பகவான் எல்லாவஸ்துக்களிலும் அந்தரியாமியாய் பிரவேசித்திருப்பதால் அவ்வஸ்துக்களெல்லாம் நித்தியம்போல் தோன்றுகிறது. உண்மையில் வஸ்துக்களுக்கு நித்தியத்துவமில்லை. பகவான் ஒருவனே நித்தியன், ஆதியற்றவன், அந்தமில்லாதவன். மற்றவையெல்லாம் அவனிடத்துத்தோன்றி யடங்குவன. உலகத்திலுண்டாகிய வஸ்துக்களெல்லாம் எப்படி ஒருகாலத்தில் நித்தியமாய் அதாவது அநாதியாய்த் தோன்றுகின்றனவோ, அவ்வண்ணமே, இக்கர்மமும் அநாதிபோல் தோன்றுகின்றது. உண்மையில் கர்மம் அநாதியல்ல. இன்னகாலத்தில் உண்டாயிற்று என்று சொல்லமுடியாததால் அநாதியென்கிறோம். ஓர் மரத்தின் விதை எப்போது உண்டாயிற்றென்று கேட்டால் என்னசொல்லுகிறது. இன்னகாலத்தில் உண்டாயது என்று சொல்லமுடியாததால் விதையை அநாதியென்கிறோம். வாஸ்தவத்தில் விதை அநாதியாயிருந்தால் அதிலிருந்து எப்போதும் மரம் உண்டாகவேண்டும். விதையை சிறிது அக்கினியில் வறுத்திட்டால் அதற்கப்புறம் அவ்விதை முளைக்காததற்குக் காரணமென்னை? அநாதியாய் அதனிடத்திருந்த சக்தியானது அந்தத்தையடைந்ததல்லவா? அதுபோலவே கர்மமும் அநாதிபோலத்தோன்றினும் கர்மங்களைப் பற்றின்றிச் செய்து அதனால் ஞானத்தையடைந்தால் கர்மமும் நசித்



துப்போகிறது. "சொல்லியஞானிக் கினிப்பிறப்பில்லாமை தூயொழியா யோடிகேளாய், நெல்லுமுதலாம் விதைகனெருப்பில்வருத்தான் முளையாதாற்போல, வல்லும்பகலுமறவே சுடருமறிவாம் வடவையெரியில், வல்லவரும்பலவித்தா மவித்தையும் வேவலான்மேன் முளையாவாம்" என்று ஆன்றோர் கூறியுள்ளார். ஜனனத்திற்கு வித்தாகிய அவித்தை அல்லது அஞ்ஞானம் அதாவது கர்மம் ஞானக்கினியினால் வறுக்கப்பட்டால் மறுபடியும் ஜென்மம் உண்டாகாது.

மேற்கூறிய கர்மங்கள் மூன்றனுள் பிராரத்தத்தை மனிதன் அனுபவித்தே யொழிக்கவேண்டும். இரண்டு உருளைச்சக்கரங்களை ஓர்கொம்பின் இரண்டு முனைகளிலும் தனித்தனியே கோர்த்து விரைவாக ஓடும்படி உருட்டிவிட்டு அது ஓடும்போது மத்தியிலிருக்கும் கொம்பை யொடித்துவிட்டால் ஓடிக்கொண்டிருந்த சக்கரங்கள் உடனே நில்லாது. அச்சக்கரங்கள் சிறிதுதூரம் ஓடியபின்தான் நிற்கும். அதுபோல ஒருவன் வர்த்தமான ஜென்மத்தில் ஞானத்தையடைந்தாலும் ஜீவன் முக்தனானாலும் பிராரத்தகர்மத்தின் காரியமாயெடுத்திருக்கும் அந்தஜென்மத்திலடையவேண்டிய சுகதுக்கங்களை யனுபவித்தபின்னரே ஜனனபர்தம் நீங்கும். ஆகாமியகர்மமானது மனிதன் ஜாதிக்கடுத்த சற்கருமங்களை பலனில் ஆசைவைக்காமல் பகவதார்ப்பணமாகச் செய்தலினால் நாசமடைகிறது. சற்கருமங்களைப் பற்றின்றிச்செய்தலால் ஆகாமியம் நசிப்பதுடன் ஞானப்பிராப்தியுமுண்டாகிறது. அஞ்ஞானத்தின் விக்ஷேப அம்சமாகிய பிராரத்தம் அனுபவித்தால் நசிப்பதுபோல, அஞ்ஞானத்தின் ஆவரணஅம்சம் இடைவிடா விசாரணையால் அடைந்த ஞானத்தினால் நிவர்த்தியாகின்றது. ஆவரணம் அதாவது அந்தகாரம்நிவர்த்தியாகவே ஆவரணத்தை யாசிரயித்துள்ள சஞ்சிதகர்மமும் நாசமாகின்றது.

விகிதகர்மங்களென்றும் நிஷித்தகர்மங்களென்றும் இரண்டுவிதமுண்டு. நித்திய, நைமித்திக, காமிய, பிராயச்சித்தகர்மங்கள் நாலுஞ்சேர்ந்தது விகிதகர்மங்கள். சாஸ்திரத்தில் மனிதன் செய்யும்படியாகக் கூறப்பட்டவைகளே விகிதகர்மங்கள். சாஸ்திரத்தில விலக்கப்பட்டகர்மங்களே நிஷித்தகர்மங்கள் நிஷித்தகர்மங்கள் பாபத்தைவிர்த்தியாக்கும். விகிதகர்மங்களினால் புண்ணியமுண்டாகும். நித்தியகர்மமென்பது மனிதன் தினந்தோறும் செய்யவேண்டிய கர்மங்கள். அவைகள் ஸ்நானம், சந்தியாவந்தனம், மூர்த்திகள் ஆராதனம் முதலியவைகளே. விசேஷகாலங்களில் செய்யும் கர்மங்களே நைமித்திகம். உபநயனம், விவாகம், ஸ்ரீமந்தம் முதலான சுபகாரியங்களும் சிராத்தமுதலான அசுபகாரியங்களும் நைமித்திகமெனப்படும். காமிய கர்மமென்பது ஓர் பலனை யடையக்கோறி வேதத்தில்சொல்லிய யாகயக்ஞதானதவங்களைச் செய்தல். பிராயச்சித கர்மமாவது தெரிந்தோ தெரியாமலோ செய்த பாபச்செய்கைகளுக்கும் அறிந்தே, அறியாமலோ செய்யவேண்டிய கர்மங்களைச் செய்யாமல் விட்டதற்குப் பிராயச்சிதமாக சில கர்மங்களைச்செய்து பரிசுத்தமாக்கிக் கொள்ளுதல். மறுபடியும் கர்மங்கள் சகாம, நிஷ்காம கர்மங்களென்று இரண்டுவகையாக பிரிந்திருக்கின்றன. சகாமகர்மமென்பது காமியகர்மம், குடும்பவிர்த்தி, தனதான்னிய விர்த்தி, சுவர்க்கலோக போகப்பிராப்தி இவைகளை யடைவதற்காகச்செய்யுங் கர்மங்களே சகாமகர்மங்கள். ஓர் பலனையும் இச்சியாது எல்லாம் பகவானருளால் நடந்தேறுகிறது. நமக்கு ஒரு அதிகாரமும் இல்லையென்று நினைத்து, சற்கர்மங்களை பகவத் பிரீதியாகச்செய்தலே நிஷ்காமகர்மம். இதுதான் நித்தியமான மோக்ஷசாம்பிராஜ்ஜியத்தைக் கொடுக்கும் உத்தமமான கர்மம். கர்மத்தைச் செய்யும்போது ஞானத்தையும், ஞானத்தில் கர்மத்தையும் பார்ப்பவனே புத்திமான். அவன்தான் யோக்ஷத்திற்சேற்றவன். என்று கீதையில் பகவான் வாக்கியமிருக்கிறது. யாவனொருவன் கர்த்திருத்துவத்தைப் பிரகிருதியில்வைத்து அதாவது இந்திரியவியாபாரங்களெல்லாம் கர்மாதீனமென்று கர்மபலத்தில் சம்பந்தப்படாமல், "நான் சிறிதும் செய்கிறேனில்லை"என்றநினைத்து கர்மங்களைச்செய்துவருகிறானோஅவன் பிருகிருதியோடுகலந்திருந்தானாகிலும் ஜலத்திலுள்ள தாமரையிலையைப்போல்,பந்தத்திற்குக்காரணமானபாவத்தால்கட்டுப்படான். பூலோகசுவர்க்கலோகபலன்களில் மனம் சலிக்காமல் ஆத்மா ஒன்றையேநாடிக் கேவலம் ஆத்மசுகத்திற்காக கர்மம்செய்பவன் ஆத்மானுபவமென்னும் சுகத்தை யடைவான் அப்படி ஆத்மாவை தரிசித்துபேரின்பத்தையடையவெண்ணாமல்பலனில்லை அபேக்ஷையோடு கர்மம்செய்பவன் அக்கர்மத்தால் கட்டுப்பட்டு நித்தியசமுசாரியாவான். ஆதலினால் புருஷன் தான்செய்யுங் கர்மங்களெல்லாம் இந்திரியரூபமாய் விகாரப்பட்டிருக்கும் பிரகிருதியைச் சேர்ந்ததென்று நினைத்து ஆத்மாவை பிணையினின்று விடுவிக்கைக்காக பலாபேக்ஷையின்றிக் கர்மத்தையே செய்யக்கடவனென்றவாயிற்று. ஆத்மாவுக்கு தான்செய்தனென்கிற கர்த்திருத்துவமானது சுபாவந்தாலுண்டானதல்ல, பழய கர்மவடிவாகவந்த சரீரஸம்பந்தத்தால் உண்டானது என்கிற மனதோடு புருஷன் தான்செய்யுங் கர்மங்களையெல்லாம் நவத்துவாரபட்டணமானதேகத்தில்வைத்து தான் அக்கர்மங்களை மனதிற்கொள்ளாமல் சுதந்திரனாய்

சுகமாயிருக்கக்கடவன். கர்மயோகத்தின் முக்கியகருத்து என்னவென்றால் மனிதன் கர்மத்தையும் விடாமல் செய்யவேண்டும். பந்தத்தையும் ஒழிக்கவேண்டும். ஒருகர்மமும் செய்யாமலிருக்க மனிதனுக்கு சாத்தியப்படாதாகையால் சற்கருமங்களைச்செய்துதான் காலத்தைகழிக்கவேண்டும் பந்தத்தை உண்டாக்காமல் செய்வதற்கு யுக்தியாகத்தான் கர்மபலத்தில் ஆசைவைக்காமல்செய்யும்படி பெரியோர்களும், மகரிஷிகளும்சொல்லுகிறார்கள். பலனைகோரினால் உடனே மனதில் மேற்கூறிய ஸம்ஸ்காரம் உண்டாகிவிடுகிறது. சமயம்வந்தபோது அப்பலனையனுபவித்தற்கு ஜென்மங்களை யெடுக்கவேண்டும். மனதில் ஸம்ஸ்காரங்கள் தருதலேகர்மம் உண்டாவதற்கு காரணம். இதுதான் கர்மயோகத்தின் விசேஷம் இதுதான் கர்மயோகத்தின் இரகஸ்யம்.

## வாயு அல்லது காற்று.

சாதாரணவாயுவானது நமது கண்ணுக்குத் தோன்றாத பொருளாயிருந்தும் அது பூமியில் எங்கும் வியாபித்திருக்கிறது. அது இந்தப்பூமியை எல்லாப்பக்கத்திலும் கவிந்துகொண்டு பூமிக்கு நாற்பத்தைந்து மைலுக்குக் குறையாத உயரமட்டும் பரவியிருக்கிறது. சிலர் இருநூறுமைல் உயரம் பரவியிருக்கிறதென்று நினைக்கிறார்கள். இந்தவாயுவை நாம் காணக்கூடாதாயினும் அதற்கும் பதார்த்தங்களுக்குள்ள எடை, சலனம் முதலிய குணங்களெல்லாமுண்டு. அதை நாம் பரிச உணர்ச்சியினால் அறிந்துகொள்ளுகிறோம். அது அசைந்து நமது உடலின்மேல் தாக்கும்போது, மற்றப்பதார்த்தங்களைப்போலவே வாயுவும் ஒரு பதார்த்தமென்றுநாம் தெரிந்துகொள்ளுகிறோம். ஒரு பாத்திரத்தை ஜலத்தில் கவிழ்த்து அமுக்குவோமானால் அந்தப்பாத்திரத்திற்குள் வாயு இருக்கிறபடியால் முழுதும் அதற்குள் ஜலம் செல்லாது. அப்பாத்திரத்தைச் சிறிது சாய்த்தால் அதற்குள் ஜலம் போகப்போக அங்கிருக்கும் வாயு குமிழிகளாக வெளியேவரும். இதனாலும் வாயுவும் ஒரு பதார்த்தமென்று தெரிந்துகொள்ளலாம். மற்ற பதார்த்தங்களுக் கிருப்பதுபோலவே வாயுவுக்கும் எடை அளவு உண்டு. வாயுநிறைந்திருக்கும் ஒரு குப்பியை முதலில் நிறுத்து பின்பு வாயுவாங்கி என்னும் (Air-pump) ஓர் சூத்திரத்தால் அதிலுள்ளவாயுவை நீக்கிவிட்டு நிறுத்தால், வாயுவில்லாத குப்பியின் எடை குறைகிறது. ஒருகன அடியுள்ளவாயுவின் எடை 573½ - கெல்லெடை உள்ளதென்று கண்டறியப்பட்டிருக்கிறது. பதின்மூன்று கனஅடிசரியாக ஒரிராத்தலாகிறது. பூமியின் மேல் பரவியிருக்கும் வாயுவினுடைய பாரமானது ஒவ்வொருசதுர அங்குலத்தின் மீதும் பதினைந்து இராத்தலுக்குக் குறையாத அளவினதாக இருக்கிறது. வாயுவானது சகல பிராணிகளுக்கும், புல், பூண்டு, மரம் முதலிய தாவரப்பொருள்களுக்கும் இன்றியமையாததாக இருக்கின்றது வாயுவில்லாவிடில் ஒரு பிராணியும் ஜீவித்திராது, புல் பூண்டும் முளையா; விளக்கும் நெருப்பும் எரியா; சத்தம் கேட்காது; மழையுண்டாகாது.

வாயுவானது (பிராணதாரமான) ஆக்ஸிஜன், நைட்ரோஜன் என்று சொல்லப்படும் இரண்டுவஸ்துக்களின் மிசிரபதார்த்தமேயல்லாமல் தனிப்பொருளன்று. ஜீவஜெந்துக்களெல்லாம் சுவாசத்தை உள்ளேவாங்கும்போது வாயுவை உள்ளேகொள்ளுகின்றன. அந்த வாயுவிலுள்ள ஆக்ஸிஜன் சுவாசாசயத்தி லமைந்திருக்கும் சிறு இரத்த நரம்புகளிலுள்ள உதிரத்தோடுகலந்து அதைச் சுத்தப்படுத்துகிறது. சுவாசத்தை வெளியே விடும்போது ஜீவப்பிராணிகளுக்கு உதவாத நைட்ரோஜனும் தேகத்திலுண்டாகும் கரித்திராவகமென்னும்ஒரு விஷத்தன்மையுள்ள வாயுவும் வெளிப்படுகின்றன. ஜீவஜெந்துக்களினுடைய தேகங்களிலிருந்து வெளிப்படும் இந்த விஷவாயுவு புல், பூண்டு, மரம் முதலான தாவரங்கள் வளருவதற்கு இன்றியமையாததாக இருக்கின்றது. இவ்விஷவாயு கரியும் ஆக்ஸிஜனும்சேர்ந்த மிசிரவாயுவாக இருக்கிறது. தாவரங்கள் சூரியவெளிச்சத்தினுதவியால் இவ்வாயுவிலுள்ள கரியையும் ஆக்ஸிஜனையும் வேறுவேறாகப்பிரித்து, தங்களுக்குவேண்டிய கரியைக் கிரகித்துக்கொண்டு, ஜீவஜெந்துக்களுக்கு வேண்டிய ஆக்ஸிஜனை வெளிப்படுத்துகின்றன. இவ்விதமாய் ஜீவஜெந்துக்களும் தாவரவஸ்துக்களும் ஒன்றுக்கொன்று உதவிசெய்கிறது மிகவும் ஆச்சரியமல்லவா!

விளக்கெரிவதும் அநேகவிஷயத்தில் ஜீவஜெந்துக்கள் சுவாசம்விடுவது போலத்தான். சுடர் உண்டாவதற்கு ஆக்ஸிஜனேகாரணமாக இருக்கின்றது. விளக்கெரியும்போது கொழுப்பு அல்லது எண்ணெயிலுள்ள வஸ்துக்கள் ஆக்ஸிஜனோடு கலக்கின்றன, ஆதலால் ஆக்ஸிஜனில்லாத வாயுவில் விளக்கெரியாது. ஒருபாத்திரத்திற்குள் விளக்கேற்றிவைத்து, அதில் புதியவாயு நுழையாமல் மூடிவிட்டால் சிறிதுநேரத்திற்குள் விளக்குஅணைந்துபோகும். அப்பாத்திரத்தில் அடைபட்டிருக்கும் வாயுவிலுள்ள ஆக்ஸிஜனெல்லாம் விளக்கெரிவதனால் கழிந்தவுடன், எரிவதற்கு ஏதுவில்லாமல் விளக்கு நின்றுபோகும். மனிதர்கள் சுவாசிக்கத்தகுந்த சுத்தமான வாயு ஓரிடத்தில் இருக்கிறதென்றும் இல்லையென்றும் விளக்கினால் தெரிந்துகொள்ளலாம். ஒரு பாழ்ங்கிணற்றிலாவது பூமிக்குள் மூடப்பட்டுள்ள அறையிலாவது ஒரு விளக்கை ஏற்றிவிட்டுப் பார்க்கையில் அது நன்றாய் எரிந்தால் அவ்விடத்தில் சுத்தமானவாயு இருக்கிறதென்றும், விளக்கு நன்றாய் எரியாவிட்டாலும் அணைந்துவிட்டாலும் சுத்தமானவாயு இல்லையென்றும் தெரிந்துகொள்ளலாம். ஒருபாத்திரத்திலுள்ள வாயுவில் ஏறக்குறைய ஐந்தில் ஒருபங்கு ஆக்ஸிஜனும், மற்ற நாலுபங்கு நைட்ரோஜனும் இருக்கும். இவ்விரண்டுந்தவிர சிறிது கரித்திராவகவாயுவும், சிறிது அசுத்தமான வேறு வாயுக்களும், நீராவியும் அதில் வியாபித்திருக்கும்.



நம்மைச்சுற்றிலும் நாம்வாசஞ்செய்யும் இடங்களிலும் வீடுகளிலும் உள்ள சாதாரணவாயு எவ்வளவு சுத்தமாக இருக்குமோ அவ்வளவும் நமதுதேகம் ஆரோக்கியமாக இருக்கும். சுத்தமானவாயு இல்லாமற்போனால் விளக்கு எப்படி எரியாமல் மங்கியாவது அணைந்தாவது போகிறதோ அப்படியே நாம்சுவாசத்தினால் உட்கொள்ளும்வாயு சுத்தமில்லாமலிருந்தால் நாம் அசௌக்கியமடைவோம்; அதிகசுத்தமாக இருந்தால் ஜீவாஷ்டமும் உண்டாகலாம். ஆதலால் நம்முடைய வீடுகளிலும் அவற்றிற் கருகிலும் அசுத்தவஸ்துக்களில்லாமல் செய்துகொள்ளவேண்டியதுமல்லாமல் நாம்மூச்சுவிட்டு வெளியே போக்குகிற அசுத்தமான வாயு நமக்கருகில் தங்கி அதை மறுபடி நாம் உட்கொள்ளாமலிருக்கும்படி,உடனுக்குடனே புதிய வாயு வந்துகொண்டிருக்கத்தக்க ஏற்பாடுகள் செய்துகொள்ளவேண்டியது அதிக அவசியமாயிருக்கிறது. நாம் தூங்குகையில் இந்த ஏற்பாடு மிகவும் அவசியமாயிருக்கவேண்டும்; ஆகையால் அசுத்தமான வாயு வெளியேபோகவும் சுத்தமானவாயு உள்ளேவரவும், நமது வீட்டு அறைகளிலெல்லாம் தகுந்த பல கணிகள் இருக்கவேண்டும்; கெட்ட வாயுவெளியே போவதற்கு வழியிருந்தாலல்லாமல் சுத்தமான வாயு ஒரு அறைக்குள்ளே நுழையாது. ஆதலால் ஒவ்வொரு அறைக்கும் குறைந்தபக்ஷம் இரண்டு பல கணிகள் ஒன்றற்கொன்று எதிர்முகமா யிருக்கவேண்டும். பூமியின்மீது எங்கும் சாதாரணவாயு பரவி யிராவிடில் சத்தம் உண்டாகமாட்டாது. அசைவின்றி அடைந்திருக்கும் ஒரு குளத்துஜலத்தில் ஒரு சிறுகல்லை எறிந்தவுடனே ஜலமானது அசைக்கப்பட்டு அணியணியாகச்சிறு அலைகள் உண்டாகிப் பரவுகிறதுபோல் நாம் பேசும்போது வாயு அசைந்து அலையலையாய்ப் பரவும். அவ்வலைகள் காதிற்குள் ளமைந்திருக்கும் ஜவ்வைத்தாக்கச் சத்தம் உண்டாகிறது. சாதாரணவாயுவை நீக்கிய ஓர் பாத்திரத்திற்குள் ஒரு மணியை ஆட்டினால் அதனொலி நமக்குக்கேளாது. சத்தமானது சாதாரணவாயுவில்ஒரு செகண்டில் 1,125 - அடியும் ஒருமினிட்டில் 12¾-மைலும், ஒருமணிநேரத்தில் 765-மைலும் செல்லும். வாயுவின் உதவியினாலேதான் காலையில் சூரியோதயத்திற்கு முன்னும் மாலையில் சூரியாஸ்தமனத்திற்குப் பின்னும் சிறிது வெளிச்சமுண்டாகிறது. வாயு வில்லாவிடில் சூரியன் அஸ்தமனமானவுடனே திடீரென்று பேரிருள் கவிந்துகொள்ளும். சாதாரண வாயுபூமியைச் சூழ்ந்திருப்பதனால் சூரியவெப்பத்தினால் சமுத்திரங்களிலும் குளங்களிலும் உள்ள ஜலம் ஆவியாய் மேலே எழும்பி ஆகாயத்தில் நிற்கும். அது மேகமெனப்படும். இம்மேகம் குளிர்ச்சியினால் மறுபடி ஜலரூபமடைந்து அச்சலம் வாயுவைவிட பளுவானபடியால் மழைத்துளிகளாக பூமியில் விழுகின்றது. மழை நீர் ஆறாகப் பெருகிக் கடல்களிலும் தடாகங்களிலும் போய்ப்பாய்கின்றது- சமுத்திரங்களிலும் தடாகங்களிலுமுள்ள ஜலம் முன்சொன்னதுபோல் சூரியவெப்பத்தினால்ஆவியுருவமடைந்து மேகமாகும். ஆதலால் சாதாரணவாயு பூமியைச் சூழ்ந்திருக்காவிடில் மழை உண்டாகாது.

நமது பூமியைச்சுற்றி யிருப்பதுபோலச் சந்திரனைச்சுற்றி வாயுவில்லையென்றுக் கோளசாஸ்திரிகளிற் பெரும்பான்மையோர் ஊகிக்கிறார்கள். அது உண்மையாகும்பக்ஷத்தில், நமது பூமியின்மீதுள்ள ஜீவஜெந்துக்கள் புல் பூண்டு முதலானவைகளைப் போன்றவை சந்திரன்மீதிருக்க மாட்டாவென்பது நிச்சயம். ஜீவஜெந்துக்க ளிருக்கக் கூடுமாயினும் அவை கீதவாத்தியங்களின் முழக்கத்தைக்கேட்பதற் கிடமிருக்கமாட்டாது. மேகங்களுண்டாகிச் சூரியப் பிரகாசத்தை மறைக்க மாட்டா. மழை ஒருபோதும் பெய்யமாட்டாது. ஆனபடியால் சந்திரன்மீது எவ்வித ஜீவ ஜெந்துக்களாவது இருந்தபோதிலும், அவை நமது பூமியின்மீது நாம் காணும் ஜெந்துக்களை எவ்விதத்திலும் ஒத்திராவென்பதற்குச் சந்தேகமில்லை.

## பொதுவானவிஷயங்கள்.

“பக்திசெய்தால் முக்தி எய்தும் என்ற ஆன்றோர் வாக்கியத்திற் கிணங்க சகல ஜனங்களும் ஸம்ஸாரஸாகரத்தைக் கடக்கவேண்டி பக்திமார்க்கத்தைக் கைப்பற்றுவ தவசியம். அவ்வித பக்திக்கு நம்பிக்கையானது முக்கிய அஸ்திவாரமாயுள்ளது. நமது தெய்வம்,மதம், வேதம் முதலியவற்றில் நம்பிக்கை கொள்ளாவிட்டால் நமக்குப் பக்தியுண்டாக மாட்டாது.

"சொன்னதைக் கேளாதவன் சுகம்பெற மாட்டான்" என்ற பழமொழியுண்டு. குருவின் வார்த்தைபடி நடவாமல் எதையும் ஆக்ஷேபிக்கும் குணமுள்ளவன் துக்கத்தையடைகிறான். முன்னொரு சமயம் விபீஷணரின் நட்பையடைந்த ஓர்சரன் தான் கடலில்தாராளமாய் நடக்கும்படி கிருபைசெய்ய வேண்டுமென்று கேட்க விபீஷணர் அவ்வாறே யாகுகவென்று ராமநாமமடங்கிய ஓர் சீட்டை அவனுடைய துணியினோரத்தில் முடிந்து "அடே நீ இந்த முடிச்சை அவிழ்த்துப் பாராமல் நம்பிக்கையுடன்போனால்சமுத்திரம் உனக்கு நடந்துபோகக்கூடிய தன்மையிலிருக்கும். எந்த நிமிஷத்தில் நீ சந்தேகங்கொண்டு இந்தமுடிச்சை அவிழ்க்க எத்தனிக்கிறையோ அந்த நிமிஷத்திலேயே முழுகிவிறந்துபோவாய்" என்றார். அதைக்கேட்டு அந்தவன் மிகுந்த நம்பிக்கையுடன் கடலைத்தாண்டிப்போனான். மறுபடியும்வந்தான். இவ்வாறு சிலநாள் சமுத்திரத்தில் தாராளமாய் நடந்துபோய்க் கொண்டிருக்கையில் ஓர்விகடகெட்ட எண்ணம் அவன்மனதில் உண்டாயிற்று. விபீஷணர் நம்முடைய துணியில் முடிந்திருக்கிறது ஏதோ ஓர்வித பச்சிலைபோல் தோன்றுகிறது. அதைநாம் கண்டுகொண்டால் எல்லோருக்கும் சொல்லி விடுவோமென்ற சந்தேகத்தால் நம்மை விலக்கப் பயமுறுத்தினார்போலும். நல்லது! அது இன்னதென்று பார்ப்போம்! பார்த்தபிறகு அநேகருக்கு அவ்வித பச்சிலையைத் துணியிற்கட்டிக் காசு சம்பாதிக்கலாம் என்று மெள்ள முடிச்சையவிழ்த்தான். உடனே ஆழத்தில் முழுகிச்செத்தான். இதுபோல எத்தனைகாலம் ஈசுவரனிடம் நமக்கு நம்பிக்கையிருக்கிறதோ அத்தனைகாலம் வரையுமே நமக்குச் சகல நன்மைகளு முண்டாகும். அத்தகைய நம்பிக்கை சிறிது குறையுமானால் நமது க்ஷேமங்களும் நசிக்கத்தொடங்கும்.

"தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன் என்பதுபோல், வலியோர்கள் எளியோரை ஏளனம்செய்வது இயல்பாயிற்று. முன்னொருசமயம் நல்ல புத்திசாலியான ஓர் ஸ்திரீயினிடம் அதிபால்யன் ஒருவன்தான்படித்தபடிப்பின் திறத்தைக் காட்டவேண்டி பற்பல விஷயங்களையும்பற்றிப் பேசிக் கடைசியில் ஸ்திரீகளின் துர்நடத்தையை உதகரிக்கும் அநேககதைகள்சொல்லி சேலைகட்டியமாதரை நம்பொணாது நம்பொணாது என்று முடியும் காளப்பாட்டைப்பாடினான். அவன்செய்த பிரசங்கங்களைக்கேட்ட அப்பெண்மணி மிகுந்த கோபம்கொண்டு அவனைநோக்கி "அடாபிள்ளையாண்டான், நீபடித்த பாடங்களையெல்லாம் நான்கேட்டு ஆநந்தமடைந்தேன். நான் ஒரு கதைசொல்லுகிறேன். கேள்" என்று சொல்லத் தொடங்கினாள்.

முன்னொருசமயம் ஓர் மனுஷ்யனும் ஓர் ஸிம்ஹமும் நண்பராயினர். அவர்கள் ஒருநாள் வேடிக்கையாகச் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் அம்மனுஷ்யன் தன்னிடமுள்ள ஓர் படத்தைக்காட்டி, ஹேஸிம்ஹமே, இதோபார் இந்தப்படத்தை, உன்னினமொன்றை என்னினத்தான் கொல்லுகிறான். பார்த்தாயாவென்றான். சிங்கம் மனவருத்தங்கொண்டு அவனைநோக்கி "ஹேபா மனிதர்களுக்குள் சித்திரக்காரர்களிருப்பதுபோல் என்னினத்தாருக்குள்ளும் சித்திரக்காரர்களிருந்தால் நீகாட்டிய ஒருபடத்துக்குப் பிரதியாக 100-படம் நான் உனக்குக் காண்பிப்பேன். அவைகளிலெல்லாம் உன்னினத்தார்களை அளவு சங்கையின்றிக் கொன்றிருக்கும் விஷயம் கண்டிருக்கும் என்றது. இதுபோல் ஆண்பிள்ளைகள் சரித்திரம் எழுதக்கற்றிருப்பதால் பெண்பிள்ளைகளின் தலைமேலே பழியைப்போட்டு அவர்கள் துர்நடத்தைக்காரர்களென்று எழுதியிருக்கிறார்கள். வீணாய்ப் பெண்பிள்ளைகளைத் தூஷிப்பது பாபமன்றோ வென்றனள்.

"அசட்டுக்கு ஐங்கலக்காயம்" என்று ஓர் பழமொழி வழங்குகிறது. இதனால் காமமுண்டாவதற்குரிய பலகாரணங்களில் அசட்டுத்தனம் ஒன்றெனவறிகிறோம். மனதிற்கும் தேகத்திற்கும் தக்க முயற்சியும் பயிற்சியுமில்லாவிட்டால் அவைகள் மதமடைந்து துஷ்கிருத்தியங்களைச் செய்யத் துணிகின்றன. அதிலும் தகுந்த எல்லளமும் தேகபலமும் அயோக்யர்களுடைய ஆதரவு மிருக்குமாயின் காமமென்னும்கொடியவிஷம் உள்ளங்கால்வழியாய் ஏறத்தொடங்கி வெகுசீக்கிரத்தில் உச்சந்தலையில் உட்கார்ந்துவிடுகிறது. இக்காலத்தில்தான் பெற்றோரும் ஆசானும் பிள்ளையின் நடவடிக்கைகளை நன்றாய்க் கவனித்து வரவேண்டும். படிப்பில் ஆசைகொள்ளும் பையன் புதிய புஸ்தகங்கள் வாங்கிப்படிப்பான். அவன் எப்போதும் கல்வியிற்றேர்ந்த கனவான்களுடன் கலந்துறவாடுவான். காமத்திலிச்சைகொண்ட விடப்பையன்கள் இதுவரையுமில்லாத புதிய தினுசு வஸ்திரங்களும் குல்லாய்களும்கையில் வெள்ளிப்பூண்போட்ட தடியும் அரையிற் பட்டுக்கச்சையும் தரித்துப் பின்னோடு ஒரு சோக்கராப்பையனையும், அழைத்துக்கொண்டு பரத்தையர் குடியிருக்கும் தெருக்களில் அன்னநடை போடுவார்கள். இத்தகைய மூடப்பிள்ளைகள் பெற்றோர்களையேமாற்றுவதில் மிகுந்த சதுரர்களாயிருக்கின்றனர்.

"நாரதா கலகப்பிரியா" என்ற வசனத்தை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். அந்தநாரதர்யார்? அவர்



பிரம்மாவின் புத்திரர் ரிஷிகளுக்குள் மிகுந்த யோகசக்தியை யுடையவர். மனிதர்களுக்குள் யோகிகளிருப்பதுபோல் தேவர்களுக்குள்ளும் யோகிகளுண்டு. நாரதர் மகாயோகி. அவர் சகலலோகங்களிலும் சஞ்சரிக்கிறவர். ஒருசமயம் அவர் ஒரு பெருங்காட்டின் வழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில் ஒருரிஷி தவஞ்செய்துகொண்டிருப்பதைக் கண்டார். அவர் வெகுகாலம் தவம்செய்வதால் புற்றுகளால் மூடப்பட்டு சடைவீழ்ந்து கண்தவிர மற்ற உறுப்புகளெல்லாம் எலும்பாகிப் பூமியிற்புதைந்து ஓர் குச்சியைப்போலிருந்தார். அவர் நாரதர் வேகமாய்ப் போவதைக்கண்டு ஐயா, எங்கு போகிறீர் என்றார், நாரதர் நான் கைலாசத்துக்குப்போகிறேன் என, ரிஷி 'ஆனால் வெகுநாளாய்த் தபசுசெய்துகொண்டிருக்கிற எனக்கு ஈசுவரன் எப்போது பிரத்தியக்ஷமாவார், என்று அவரைக்கேட்டுத் தெரிந்துகொண்டுவாரும்' என்றார். இன்னும் சிலதூரம் நாரதர்செல்லுகையில் இன்னொரு ரிஷியைக்கண்டார். அவர் ஆனந்தக் கூத்தாடிக்கொண்டிருந்தார். அவரும் நாரதரை நோக்கி "தாங்கள் எங்கேபோகிறீர்கள்" என்றார். நாரதர் நான் கைலாசத்துக்குப்போகிறேன் என, 'எனக்கு எப்போது மோக்ஷம்கிடைக்கும். அதை யறிந்துகொண்டுவாரும்' என்றார் இவ்விருவர்களின் வினாக்களையும் தெரிந்துகொண்டு நாரதர்போய்த் திரும்பிவந்தார். முதலில் புற்றால் மூடப்பட்டரிஷி அவரைநோக்கி நாரதரே, எனக்கு எப்போது பகவான் பிரத்யக்ஷமாவார்? என்றார். அதற்கு நாரதர் ஆம், நான் பரமசிவனைக் கேட்டேன். அவர் இன்னும் நான்குஜன்மங்கள் கழித்து உனக்குப் பிரத்யக்ஷமாவதாய்க் கூறினாரென, அதற்கு அவ்ரிஷி "நான் என்மேல் புற்று மூடும்வரை இத்தனைநாளாகத் தவஞ்செய்தும் இன்னும் நாலுஜன்மங்கள்கழித்தா எனக்கு ஈசுவரன் பிரத்தியக்ஷமாகப்போகிறார்" என்றார். பிறகு இன்னொரு ரிஷி 'ஐயா, நாரதரே எனக்குஎப்போதுமோக்ஷம்கிடைக்குமெனப் பகவானிடம்கேட்டு வந்தீரா' வென, இதோ நிற்கும் புளியமரத்தில் எத்தனை இலைகள் இருக்கின்றனவோ அத்தனைவருஷம் கழித்து உனக்கு மோக்ஷம் கிடைக்கும்' என்றார் அதைக்கேட்டு அந்தரிஷி பேரானந்தமடைந்து எனக்கு அத்தனை சீக்கிரத்தில் மோக்ஷம் கிடைக்கிறதாவென்று கூத்தாடினார். உடனே ஆகாசவாணி 'உனக்கு இந்த நிமிஷத்திலேயே மோக்ஷம் கிடைத்துவிட்டது' என்றது. அம்மாதிரியே பகவான் அவரை கைலாசத்திற்கு அழைத்துச்சென்றார்.

---

ஒருகாலத்தில் ஒரு சிஷ்யனுடைய மனதில் கர்வம் புகுந்தது. அதாவது குருவினிடம் தனக்கிருக்கும் அன்பே வெகுசிறந்ததென்று அவன் எண்ணினான். இதையறிந்த குரு தன்சிஷ்யனை ஒருநாள் ஒருவனத்துக்கு அழைத்துப்போனார். அங்கே ஓர்பிராமணன் உருவினகத்தியை இடுப்பில்தரித்து உலர்ந்தபுல்லைத் தின்றுகொண்டிருந்தான். அவனைக்கண்ட சிஷ்யன் குருவை நோக்கி "சுவாமி இந்த பிராமணன் ஹிம்சைசெய்யாமலிருப்பதே பெரியதர்மமென்று உணர்ந்தவனாய் பச்சைப்புல்லில் பிராணனிருக்குமென்று அறிந்து, காய்ந்து உலர்ந்தபுல்லை உணவாக உட்கொள்ளுகிறான். பிராணிகளிடம் அவ்வளவு அன்புகொண்ட இவன் எதற்காகக் கத்தியை இடுப்பில் கட்டிக்கொள்ளவேண்டும்? இவனுக்குயார் சத்துரு? எவனைக்கொல்லுவதற்கு இவன் நினைத்திருக்கிறான்? என்று கேட்க, அவர் சிஷ்யனைப் பார்த்து, அக்கேள்விகளை அப்பிராமணனிடமே கேட்டு மறுமொழி தெரிந்துகொள்ளும்படி கூறினார்.

"சுவாமி திருவாக்குக்கு எதிர்வாக்குண்டா" என்று கூறிச்சென்ற சிஷ்யனுக்கும் பிராமணனுக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது.

சிஷ்யன்:—ஐயாபிராமணோத்தமரே தாங்கள் எதற்காகக் கத்தியை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்.?

பிராமணன்:—எனக்கு நாலு சத்துருக்கள் இருக்கிறார்கள். அவர்களைக்கண்டால் வெட்டவேண்டும். அதற்காகத்தான் கத்தியைத் தயாராய்வைத்துக்கொண்டிருக்கிறேன்.

சிஷ்யன்:—முதல்சத்துருயார்?

பிராமணன்:—நாரதர்.

சிஷ்யன்:—நாரதர் தங்களுக்கு என்னகெடுதல் செய்தார்? அவரையேன் கொல்லவேண்டும்?

பிராமணன்:—நாரதன் வெகுதுஷ்டப்பயல். எப்போதும் வீணையைவாசித்துக்கொண்டு எம்பெருமானை ஸ்தோத்திரம்செய்கிறான். என்னுடைய கண்மணியாகிய கண்ணனைக் கொஞ்சமேனும் தூங்கவிடுகிறதில்லை. அவர் சற்றுநேரம் பள்ளிகொண்டால் உடனே நாரதன் வீணையை வாசித்து நாராயணா நாராயணாவென்று கதறி நித்திரையை பங்கம்செய்கிறான். இவன் பகல் இரவின்றி பகவானை ஸ்தோத்திரம்செய்து அவர்பிராணனை வாங்குகிறான், இவனுக்கிருக்கும் துணிவைப்பார்த்தால் எனக்கு வெகுகோபம் உண்டாகிறது. பகவானுடைய தேகசவுக்கியத்தைக்கெடுக்க நினைத்த இந்த நாரதனென்னும் படுபாவியைக்கண்டவுடன் இந்தக் கத்தியால் வெட்டப் போகிறேன்.

சிஷ்யன்:—தங்களுடைய இரண்டாவது சத்துரு யார்?

பிராமணன்:—திரௌபதையென்றொரு துஷ்டையிருக்கிறாள் அவள்தான்.

சிஷ்யன்:—அவள் என்னசெய்தாள்?

பிராமணன்:—அவள்என்குலதெய்வமாகிய ஸ்ரீகிருஷ்ணன் சாப்பிடஉட்காரும்போது அவருடைய கழுத்தைப்பிடித்தாள். எப்படியெனில்? காமியவனத்திலிருந்து பாண்டவர்களிடம் விருந்துண்ணவந்த தூறுவாசர் சாபமிடாமலிருக்கும்படி திரௌபதி கண்ணனைவேண்டிக்கொண்டாள். அப்போதுதான் கண்ணன் போஜனம் செய்ய உட்கார்ந்தார். உடனே இந்த துஷ்டையாகிய திரௌபதியின் கூக்குரலைக்கேட்டு ஓடிப்போய் அவள் தின்றுமிகுந்த சோற்றில் ஓர்பருக்கையைத் தாம்தின்று பருக்கையிருந்த பாத்திரத்தை அக்ஷயபாத்திரமாக்கி அவளிடம்கொடுத்து அவளையும் பாண்டவர்களையும் காப்பாற்றினார். இந்த துஷ்டையின் துணிவைப்பார்த்தால் என்வயிறு பற்றியெரிகிறது. கண்ணன் சாப்பாட்டில் மண்ணைப்போட்டு அவருக்குத் தான்தின்ற சேஷத்தைக் கொடுத்தாளே இவளைவிட கொடும்பாவி யாருண்டு? ஆதலின் அவளையும் வெட்டப்போகிறேன்.

சிஷ்யன்:—சுவாமி மூன்றாவது சத்துருயார்?

பிராமணன்:—மூன்றாவதுசத்துருவா? அவன் பிரகலாதனன். இவன்சிறுபயலாயிருந்தாலும் இவனுடைய போக்கிரித்தனத்திற்கு அளவில்லை. இவன் எம்பெருமானை தூணிலிருக்கச்செய்தான். இவனுடைய இஷ்டப்படியெல்லாம் கூத்தாடச்செய்தான். ஆனதால் என்னிஷ்டதேவதையைக் கஷ்டப்படுத்தின இந்த பிரகலாதனையும் வெட்டப்போகிறேன்.

சிஷ்யன்;—சுவாமி தங்களுடைய நாலாவதுசத்துருயார்?

பிராமணன்:—அந்தபயலைத்தான் இப்போது அதிதீவிரமாய்த் தேடிக்கொண்டிருக்கிறேன். அந்தப்பயல் யார் தெரியுமா? அவன்தான் அருச்சுனன்

சிஷ்யன்:—ஐயா அருச்சுனன் என்னசெய்தான்.

பிராமணன்:—அந்தப்பயல் சாக்ஷாத் எம்பெருமானை தனக்குச்சாரதியாக வைத்துக்கொண்டான். அவனுடைய தைரியத்தை நினைக்கநினைக்க என் அடிவயிறு குபுகுபு என்று பற்றியெரிகிறது. ஆதலின் அவனைக்கண்டால் இந்தக்கத்தியால் ஒரேவெட்டாய் வெட்டிப்போடுவேன். இதைக்கேட்ட சிஷ்யனுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. இந்தப் பிராமணனுக்கு பகவானிடமிருக்கும் பக்திக்கு நம்முடைய பக்தி உறைபோடக் காணாது என்று அன்றுமுதல் கர்வத்தை விட்டுவிட்டான். அதுபோல ஒவ்வொருவரும் தாம் ஈசுவரனிடம்வைத்திருக்கும் பக்தி வெகுஅதிகமென்று நினைத்து ஏமாறாமல் சிறிதென்றெண்ணி அதை யின்னும் அதிகமாக்கவேண்டும். அதாவது பகவத்பக்திசெய்வதில் ஒவ்வொருவரும் போட்டிபோடவேண்டிய தவசியமென ஏற்படுகிறது.

## நீதிமார்க்கங்கள்.

யாசகன் நான்வறியேன் என்று சொல்லுமுன்னரே அவனுக்குப் பொருள்கொடுத்தலும்; தான் உதவிசெய்தபிறகு யாசகன் நான்வறியேன் என்று சொல்லாதபடி அவனுக்குமிகுதியாகப் பொருளுதவி செய்தலும் தான் உதவிசெய்தபிறகு யாசகன் தன்னைப் பிறயாசகர் வந்து வருத்தினால் நான் வறியேனென்று சொல்லாமல் அவர்களுக்கும் வழங்கும்படியாக அமிதமான செல்வத்தை அவனிடங்கொடுத்தலும் ஆகிய இந்த மூன்றுசெயல்கள் முதலைக்காட்டிலும் இரண்டாவதும், இரண்டாவதைக்காட்டிலும் மூன்றாவதும் கீர்த்திமிகும்படியாக விளங்கிநிற்கும் செயல்களாம்.

* * *

இரும்பும்பொன்னும் வேறேயாயினும் ஜடப்பொருள்களாகையால் அவற்றை உலோகவகையான இனத்தாலே இரண்டுக்கும் பொன்என்று பெயரிட்டு வழங்குவது வேறுகருத்து. இம்மை மறுமை, புண்ணியம் பாவம், நன்மை தீமை முதலியவற்றைப் பகுத்தறியவல்லராகையால் கொடுப்போரையும் கொடாதோரையும், மனிதஜாதியாகிய இனம்பற்றி வேறுபாடில்லாமல் மக்கள் என்று வழங்குவது எவ்வாற்றாலும் பொருந்தாது. இரப்போர்க்குக் கொடாமல் ஒளிக்கின்றவர்களுக்கு மாக்கள் மிருகங்கள் என்கிற வேறுபெயரே இடவேண்டும் அவர்கள்மக்களல்லர் என்பது கருத்து.

* * *

செல்வத்தினுடைய சுவபாவம் கர்வத்தை அதிகரித்தல். ஒருவனுக்குச் செல்வம் உண்டானால் அது கர்வத்தை யுண்டாக்கி அவனிடத்தில் குற்றங்களையே அதிகமாகும்படிச்செய்கின்றது. தரித்திரமுண்டானாலோ பாவம்! பிறரிடத்தில் யாசித்துச்செல்ல நேரிடுகின்றது. அதனால் மரணவேதனையைக்காட்டிலும், மிக்க தான துன்பம்நேரிடுகின்றது. தன்னிடம் யாசித்துவந்தவர்கள் மேலே கருணைகொள்ளாமல் அவர்க்கு யாதொன்றும் கொடாமல் ஒளிப்பதானது (ஈகையால்வரும் நன்மையை) அறியாதபேர்களுக்குத் தரித்திரத்தால் உண்டாகுக் துன்பத்தைக்காட்டிலும் அதிகதுன்பத்தை உண்டாக்குகின்றது.

* * *



சமுத்திரமுண்டென்று பார்த்திராதவனும் கேட்டிராதவனும் படித்திராதவனும் சமுத்திரமில்லையென்று சொன்னால் அது பொய்யாமா? வீட்டிலுள்ள ஒருவன் வெளியேபோயிருக்க மாத்திரங்கண்டு, திரும்ப வீட்டினுட்சென்ற சங்கதியையறியாத காரணத்தால், அவன் வீட்டினுளில்லையென்பானாயின், அவன் பொய்யனாவனா? ஒருவன் கயிற்றை யரவாகக்கண்டான்; மற்றொருவன் கயிற்றைக் கயிறாகக்கண்டான். இருவரும் தாம் தாம்கண்டதைக் கண்டவாறு உண்மையைத்தான் சொன்னார்கள். இவரில் ஒருவன் சத்தியவாதியும் ஒருவன் அசத்தியவாதியுமென்று சொல்லக்கூடுமா? அதுபோல் சிலநாஸ்திகர்கள் கடவுளில்லையென்றால் கடவுளில்லாமற் போய்விடுவாரா?

* * *

பின்னம் அபின்னமாதலும் அபின்னம் பின்னமாதலும் ஒருபோதுமின்று. எப்படியெனில், பாலின்கண் தயிரும் நெய்யும் அபின்னம்போற் றோற்றினும் பின்னம் பின்னமே. பாலை அணுபரமாணுக்களாகப் பிரித்துப்பார்க்கும் சக்தி நமக்கிருந்தால் அது வேறுவேறாகவே தோன்றும். உப்புநீரிலும் நல்லநீர், உப்பு இவை வேறுவேறா யிருக்கின்றன. உப்புநீரில் நல்லநீர் வேறாகவும் உப்புவேறாகவும் நமக்குத்தோன்றாவிடினும் அவை வேறுவேறுதான். உப்புநீரில் நூற்றுக்கு இருபத்தேழு பங்கு உப்பும் மற்றப்பங்கு நல்லநீரும் இருக்கின்றன. உப்புநீரைக்காய்ச்சினால் நூற்றுக்கு எழுபத்துமூன்று பங்கு நல்லநீர் ஆவிரூபமாய் மேலேபோக மற்ற இருபத்தேழுபங்கு பூமியிற் றங்கிவிடுகின்றது. உப்பும் நல்லநீரும் பிரிந்துபோகின்றமையால் அவை பின்னமாகக் கூடியிருந்தனவென்றே சொல்லவேண்டும். உப்புநீரைப்பார்த்தால் நீரும் உப்பும் அபின்னமாய் ஒன்றுபட்டிருப்பதாகவே தோற்றினும் உண்மையில் பின்னமாய் இரண்டுபட்டே யிருக்கின்றன. இரண்டுபட்டேயிருக்கின்றமையால் ஒன்றிருந்தவிடத்தில் மற்றொன்றில்லை. அதாவது உப்பு இருந்தவிடத்தில் நீரும் நீர் இருந்தவிடத்தில் உப்பும் இல்லை. இதைப்போலவே பாலாயிருக்குங்காலத்திலும் நெய்யிருக்குமிடத்தில் தயிரும் தயிர் இருக்குமிடத்தில் நெய்யும்இரா. இனி எள்ளில் எண்ணெய்போலென்னின் எள்ளையெடுத்துப் பிழிந்தால் பிண்ணாக்கும்நெய்யுமாகப்பிரிகின்றன. பிண்ணாக்கும்நெய்யுஞ்சேர்ந்தே எள்ளென்னும் பேர்பெறுகிறது. அதுவும் இரண்டுபொருளாய் வேற்றுமைப்பட்டுப்போகின்றமையால் உய்த்துநோக்குழிப் பிண்ணாக்கு இருந்தவிடத்தில் நெய்யும் நெய் இருந்தவிடத்தில் பிண்ணாக்கும் இல்லையாகில் வேறுவேறு பொருளாகின்றன. ஆகையால் பின்னம் அபின்னமாதலும் அபின்னம் பின்னமாதலும் கிடையாது.

## ஞானக்கதைகள்.

ஒருசமயம் ஜனகமகாராஜன் ஓர் பிராமணனிடம் மிகுந்தகோபங்கொண்டு அவனைத் தன்தேசத்தினின்றும்ஓடிப்போகும்படிக்கட்டளையிட்டான். அதற்கு பிராமணன் 'ஐயா,ஜனகராஜனே,உமதுஉத்திரவின்படி நான் ஓடிப்போவதில் தடையில்லை. உம்முடையராஜ்யத்தின் எல்லை உமக்கெதுவரையில்சொந்தம் சொல்லும்பார்ப்போம்' என்றான். ஜனகன்யோசித்தான். ஒன்றும்தோன்றாது பிரமித்துநின்றுசிலநேரத்துக்கெல்லாம்பதில்சொல்லத்தொடங்கினான். "ஐயா,பிராமணரேஎன்முன்னோர்களிடமிருந்த ராஜ்யத்தை நான் இப்போது ஆண்டுவந்தாலும் அது எனக்குச் சொந்தமென்றுநான் எப்படிச் சொல்வேன்? என்முன்னோர்களாண்ட ராஜ்யத்தை அவர்கள் தங்களுக்குச் சொந்தமென்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அதுபொய்யாய்ப்போயிற்று. இவ்விராஜ்யம் அவர்களுக்கு உண்மையாகவே சொந்தமாயிருந்தால் அவர்களிறந்துபோனவுடன் அதுவும் அழிந்துபோயிருக்கவேண்டும். அவ்விதம் அழிந்துபோகவில்லை. எனக்குப்பிற்காலம் இவ்விராஜ்யம் அழியாதென்பது நிச்சயம். ஆதலின் இந்நாடு எனக்குச்சொந்தமன்று. பூமியை எத்தனையோ அரசர்கள் ஆண்டுவந்தனர் எல்லோரும் பூமியைத் தங்களுக்குச் சொந்தமென்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அத்தனைபேர்களுமிறந்தனர். பூமி மட்டும் அழியாமலிருக்கிறது. ஆதலின் பூமி அவர்களுக்குச் சொந்தமல்லவென்பது தெளிவாய் விளங்குகிறது. நான் எனக்குச் சொந்தமென்று சொல்லிக்கொள்ளும் இம்மிதிலைநாட்டை இதிலுள்ளஜனங்களெல்லாம் துண்டுதுண்டாகச்செய்து அவைகளைத் தங்களுக்குச் சொந்தமென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆதலின் மிதிலாநாடு எனக்குச்சொந்தமில்லை. என்பிள்ளைகள் வசிக்குமிடம் எனக்குச் சொந்தமோவென்று பார்த்தால் அதுவும் எனக்குச் சொந்தமல்ல. என்தேகத்தைப் பார்த்தாலோ இப்போது இரத்தத்திலுள்ள பூச்சிபுழுக்கள் தங்களுக்குச் சொந்தமென்று சொல்லிக்கொள்ளுகின்றன. இறந்துபோனால் நாயும்நரியும் தங்களுக்குச் சொந்தமென்று சண்டைபோடுகின்றன. மேலும்நான் யாரென்றாலோ அதுவே சந்தேகத்தில்வந்துவிட்டது. நான் தேகமல்ல, சதையல்ல, இரத்தமல்ல, எலும்பல்ல, மனமல்ல, புத்தியல்ல, இந்திரியமல்ல இவ்விதம் நிலைகெட்டு சொந்தமென்ற பதம்இன்றி அவதிப்படும் நான் உம்மை ஊரைவிட்டோடும்படிக் கட்டளையிட்டது அறிவீனம்.

ஆதலின் பிராமணோத்தமா நீர், உம்முடைய ஆயுட்காலம்முழுவதும் உமக்கிஷ்டமானபடி இங்கரத்திலேயேயிரும்" என்றான்.

---

ஜன்மாந்தரபாபம் ஜன்மாந்தரபுண்ணியம் என்பதை நிரூபிக்க ஒருகதை பகர்வாம். வெகுநாளைக்குமுன் ஓர்கிராமத்தில் விருத்தனும் அந்தகனுமான ஒருஏழைப்பிராமணனிருந்தான். அவன் தினந்தோறும் இரண்டு மூன்று ஊர்களுக்குச்சென்று உபாதானம்வாங்கிவருவது வழக்கம். அவன்வரவை எதிர்பார்த்துக்கொண்டிருப்பவர்கள் ஏறக்குறைய 10-பேர் உண்டு. சம்பத்தில்லாதவனுக்கு சந்தானமிருப்பது சகஜமே. ஒருநாள் வெயில்வேளையில் இந்தக்கிழப்பிராமணன் கையிலுள்ள தடியைக்கொண்டு தட்டித்தடுமாறி உபாதானத்துக்காக போய்க்கொண்டிருந்தான் அக்காலத்தில் ஆகாசமார்க்கமாகப் பார்வதிபரமேசுவரர்கள் வந்துகொண்டிருந்தார்கள். உலகமாதாவான பார்வதி இந்தபிராமணனது கஷ்டத்தைக்கண்டு சுவாமியைநோக்கி இந்தகிராமத்தில் எத்தனையோ தனிகர்களிருக்கிறார்கள். அவர்களில் அநேகருக்கும் புத்திரர்களில்லை. அவர்களெல்லாம் தங்களுடைய ஆஸ்தியைத் தங்களுக்குப் பிற்காலம் அநுபவிக்கத்தருந்தவர்கள் யாருமில்லையே என்னசெய்வோமென்று ஏங்கித்தவிக்கிறார்கள். இந்தப் பிராமணனுடைய குடும்பத்திலேயோ சுமார் 10-பேர்களிருக்கிறார்கள் ஆதலின் இவருக்கன்றோ தாங்கள் சம்பத்தைக் கொடுக்கவேண்டும். பசியில்லாதவனுக்குப் பரமான்னம் கொடுப்பதுபோல பிள்ளையில்லாதவனுக்குப் பெரும்பாக்கியத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். இவனை தரித்திரனாக்கியிருக்கிறீர்களே இதென்னநியாயமென்றாள். அதற்குப் பரமசிவன் அந்தப்பிராமணன் ஜன்மாந்திரத்தில்செய்தபாபத்தால் கண்ணிழந்து முஷ்டியெடுத்து ஜீவிக்கிறான் இவனுக்குநான் இப்போது திரவியங்கொடுத்தாலும் அதை இவன் அநுபவிக்கமுடியாது என்றார். பார்வதி சுவாமியைநோக்கி இப்படிச் சாக்குப்போக்கு சொல்லாதேயுங்கள் கொடுத்துப்பாருங்கள் அவன் அநுபவிக்கிறானா இல்லையா பார்ப்போம் என்றாள். உடனே பகவான் அவ்வந்தகன் செல்லும்வழிக்கப்பால் வலதுபுறத்தில் லக்ஷம்சவரன்கள்நிறைந்த பெரும்பையைப் போட்டார். அந்தவேளையில் குருட்டுக்கிழவன் தனக்குள் ஓர் யோசனைசெய்யலானான். விதியைவெல்ல யாரால்முடியும். கிழவன்சொல்லுகிறான்; நமக்கோ வயதாய்விட்டது. கண்தெரிகிறதால் காலால்வழிநடந்துபோகிறோம். இன்னும் சிலநாளைக்குள்முழுதும் பொட்டையாய் விட்டால் அப்போது நடந்துபோகமுடியுமா இந்தத்தடியைக்கொண்டு நடக்கமுடியுமாவென்று இப்போதே பரிக்ஷித்துப்பார்ப்போமென ஒருமுறை கண்ணைக்கெட்டியாக மூடிக்கொண்டு சற்றுதூரம்சென்றான். அதனால் பகவான்போட்ட சவரன்பை அவனது கண்ணுக்குத் தென்படாமற்போயிற்று. அக்காலத்தில்ஈசுவரன்சொல்லுகிறார். பார்வதி பார்த்தாயா பிராமணனது துர்ப்பாக்கியத்தை இப்போதுதானா இந்தக் குருட்டுப்பரிக்ஷை செய்யவேண்டும். இந்த அசட்டுஎண்ணம் தோன்றியது அவனது ஜன்மாந்திரபாபமல்லவா வென்றார். அதற்கு அம்பிகை கூறுகிறாள். நீங்கள்வழிக்கப்பால்போடாமல் நேராய்ப்போடுங்கள் என்றாள். சுவாமியும் அந்தமாதிரியேசெய்தார். அப்போது குருடன்நினைத்துக்கொள்ளுகிறான் ஆகாஇந்தத்தடி எத்தனை உபயோகமாயிருக்கிறது. இப்போது கண்ணை மூடினவண்ணமாயே இந்தத்தடியைக்கொண்டு தட்டித்தட்டி நடந்து பார்ப்போமென்று கீழே ஒருதட்டுதட்டினான். அது சவரன்பையில்படவே அப்பாடா! பெரியகல்லொன்று வழியிலிருக்கிறது இந்தசனிதானே காலைக்காயப்படுத்துகிறதென்று எண்ணித் தன்காலால் எட்டி ஒருஉதை கொடுத்தான். அந்தப்பை சிதறி அப்பால்விழுந்தது. உடனே பார்வதி பரமசிவன்சொன்னது சரிதானென்று சும்மாவிருந்துவிட்டாள். அதுபோல் சொத்திருந்தும் அநுபவிக்கக் கொடுத்துவையாத தரித்திரர்களனேகர். எவ்வளவு புத்திமதிகளைச் சொன்னாலும் புத்தியிருந்தாத மூடர்கள் அநேகர். இதற்கெல்லாம் காரணம் ஜன்மாந்திரபாபம் என்பதில் தடையில்லை.

---

ஓர்காலத்தில் ஓரரசனுடைய சபையில் சிவன்பெரிதா, விஷ்ணுபெரிதா என்னும் சம்வாதமுண்டாயிற்று. இரண்டுகக்ஷியிலும் அநேகவித்வான்களிருந்ததால் கக்ஷியும் வாதமும்முற்றி வாய்ச்சண்டையிலிருந்து கைச்சண்டையாகும்போலிருந்தது. அப்போது அரசன் அவர்களைக்கையமர்த்தி அவ்வூரில் தவம்செய்துகொண்டிருந்த யோகியை வரவழைத்து 'சுவாமி, தாங்கள் இவர்களுடைய கக்ஷியையுணர்ந்து சிவன்பெரிதா, விஷ்ணுபெரிதா என்பதைச் சொல்லவேண்டும்' என்றான். அதற்குயோகி அப்பா, நான் சிவனையும் காணவில்லை விஷ்ணுவையும் பார்க்கவில்லை. ஆதலின் இன்னார்பெரியவரென்று சொல்லமுடியாதுஎன்றார். மற்றவர்களெல்லாம் வெட்கி அன்றுமுதல் தங்கள்கக்ஷியை விட்டுவிட்டார்கள்.

---

குருஉபதேசித்தபடி தவஞ்செய்த ஓர்சிஷன் பதினாலுவருஷம் யோகாப்பியாசங்கள்செய்து கடைசியாகத் தண்ணீர்மேல் நடக்கும் சக்தியைப்பெற்றான். உடனே குருவினிடம் ஓடிவந்து மகாராஜ் நான் இன்றையதினம் தண்ணீரில் அமிழாமல் நடக்கும் சக்தியை அடைந்துவிட்டேன் என்று வெகு களிப்புடன் சொன்னான். அதற்கு அவர் அடேமுட்டாள் நீ பதினாலுவருஷம்கழித்து கோரமானதபஸ்செய்து இந்த அற்பபலனைத்தானா அடைந்தாய் அதற்காகத்தானா இத்தனை ஆநந்தம் உனக்குண்டாயிற்று. அடே யாதொருதபஸுமில்லாமல் காலணாகொடுத்தால் படகின்மேலேறி தண்ணீரில்செல்லலாம். இந்த அற்பகாரியத்தை 14-வருஷம் சுழித்து நீ அடைந்தது எனக்கு மிகுந்த விசனமாயிருக்கிறதென்றார்.



---

"ஆற்றில்ஓடுகிற தண்ணீரை ஆயாகுடி அப்பாகுடி" யென்று உபசாரம்செய்வதுபோல் சிலர் தங்களுக்குச் சொந்தமல்லாத பொருள்களைப் பந்தயமாக வைக்கிறார்கள். ஒருசமயம் கோமுட்டிகளில் பிரஸித்திபெற்ற ஒருதனவானுக்கும் வைதீகப்பிராமணரொருவருக்கும் வாக்குவாதமுண்டாயிற்று. வைதீகப் பிராமணர் கோமுட்டிகள் தங்கள் கிருத்யங்களை வேதோக்தமாகச்செய்வது கூடாதென்றார். கோமுட்டிபிரபு தம்மினத்தார் வைசியர்களாதலின் வேதாத்தியயனம் செய்யலாமென்றும் வேதோக்தமான கிருத்யங்களை நடத்தலாமென்றும் கக்ஷிபேசினார். இவ்விருவர்களின் வாதங்களைக் கேட்கவேண்டி பெரியசபையொன்று கூட்டப்பட்டது. அதில் கோமுட்டி தாம் தோற்றுப்போனால் வேதோக்தமான கர்மங்களை விட்டுவிடுவதாய்க் கூறினார். வைதீகப்பிராமணர் தாம் தோற்றுப்போனால் இவ்விந்தியாதேசத்தையே கோமுட்டிப்பிரபுவினிடம் கொடுத்துவிடுவதாய்க் கூறினார். கோமுட்டி ஐயா, பிராமணரே! இந்தியாதேசத்தை ஆங்கிலேயர்களன்றோ ஆளுகின்றனர். உமக்குச்சொந்தமென்று எப்படிச் சொல்லலாம் என்றார். அதற்கு வைதீகப்பிராமணர் வேதோக்தமான கர்மங்களை வேதியர்களாகிய பிராமணர்களன்றோ செய்யவேண்டும். அவர்களுக்கு அது சொந்தமாயிருக்க நீர் அதை உமக்குச் சொந்தம்போல் விட்டுவிடுவதாய்ப் பந்தயம்வைக்கிறீரே என்றார். கோமுட்டி பதில்சொல்லத் தெரியாமல் விழித்தார். சபையோர்கள் சம்வாதம் செய்ததுபோதும், ஜெயித்தவரின்னாரென்று தெரிந்துகொண்டோம் என்று கலைந்துபோனார்கள்.

---

"மணிப்பையன் என்றால் கழுத்தில் மணியைக் காணோம்" என்பதுபோல் ஒருசமயம் பகவான் ஸ்ரீபரமஹம்சர் தமது சிஷ்யர்களில் ஒருவனைநோக்கி, ஷர்பத்தை ஒருதொட்டியில்விட்டால் வெளியேயிருந்து ஈக்கள்மொய்க்கவரும், சிலஈக்கள் பாத்திரத்தின் ஓரத்திலிருந்து ஷர்பத்தைக்குடித்துச் சிலநேரம் ஆநந்தமடைந்து ஓடிப்போய் மறுபடியும் வருகின்றன. சில ஈக்கள் ஷர்பத்திலேயே விழுந்து உருண்டு புறண்டு முழுகிப்போகின்றன. அதுபோல், நீ சச்சிதானந்தமாகிய அமிர்தத்தின் கரையோரத்தில் நின்று,அதை அருந்தலாம். அல்லது அதில் முழுகிவிடலாம்" என்றார். அவர் வசனங்களைக்கேட்ட சிஷ்யன் 'குருமகராஜ், நான் ஓரத்தில் இருந்து ஷர்பத்தையுண்ணும் ஈயைப்போலிருக்க விரும்புகிறேனேயன்றி அதில்விழுந்து உருண்டு புறண்டு அமிழ்ந்துபோகும் ஈயைப்போல் இருக்க விரும்பவில்லை' யென்றான். குரு அந்தச்சிஷனைநோக்கி அடே முட்டாள், சச்சிதானந்தமாகிய அமிர்தம் என்றேனே, அமிர்தத்தையுண்டவனுக்கு மரணமேதென்றார்.

---

"சர்வம் பிரம்மமயம் ஜகத்" என்றபடி இவ்வுலகமெல்லாம் பிரம்மமயமாயிருக்கிறது. இதை உள்ளபடி உணர்ந்தவர்கள் சர்வப்பிராணிகளையும் பிரம்மமாய் நினைத்து ஸதாஈசுவரத்தியானம்செய்வார்கள். சாக்ஷாத் பரப்பிரம்மத்தை சிலர் சிவனாகவும் சிலர் விஷ்ணுவாகவும், சிலர் சக்தியாகவும் சிலர் கணபதியாகவும், சிலர் சுப்பிரமண்யனாகவும், இன்னும் சிலர் சூரியனாகவும், மற்றும் சிலர் மகம்மது, கிறிஸ்து, அருகனாகவும் பாவித்து ஸ்தோத்திரம் செய்கிறார்கள். இதில் ஓர் வேடிக்கையுண்டு. எல்லாமதஸ்தர்களும் கடவுளைக் குணாதீதனென்று கூறுகின்றனர். ஈசுவரனுடைய சொரூபத்தை இன்னதெனச்சொல்ல முடியாதென்றும், அவருடையகுணம் இவ்வளவென அளவிட்டுக் கூறமுடியாதென்றும் எல்லாரும் சொல்லுகிறார்கள். ஈசுவரனையறியாமல் அவருடைய குணங்களைத்தெரியாமல் வேதங்களெல்லாம் தேடுகின்றன. கற்பகோடிகாலங்களாக மகாயோகிகளும் தபஸிகளும் அருந்தவமிழைத்தும் சர்வேசுவரனுடைய தரிசனம் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர். ஒருவனால் இன்ன உருவம்தான், இன்ன அளவுதான் இன்னமாதிரிதானென்று ஈசுவரன் கண்டறியப்படும் அவ்வளவு இலகுவானவராயிருந்தால் அவருக்கு ஸ்வாமித்வமேது? நம்முடைய கணக்கில் அகப்படாததெதுவோ, நம்முடைய மதிக்கு எட்டாததெதுவோ, நம்மால் இன்ன ரூபம்தானென்று நிர்ணயிக்கப்படாததெதுவோ அதுவே பரம்பொருள்.

பஞ்சோந்தி (Cameleon) பலநிறமாய்த் தோன்றுவதுபோல் பரப்பிரம்மம் சிலருக்கு சிவனாகவும்,சிலருக்கு விஷ்ணுவாகவும், சிலருக்கு அல்லாவாகவும்,சிலருக்கு இயேசுவாகவும், நாஸ்திகர்களுக்கு சுபாவமாகவும் காணப்படுகிறார். நம்முடைய மதாசாரியர்களெல்லாம் மகாபுத்திசாலிகள். சிறந்ததபஸித்தியையுடையவர்கள். அவர்கள் தத்தம்புத்திக்கு எட்டினவரையில் ஈசுவரனை ஒவ்வொருரூபமாயறிந்து ஆராதித்தனர். அவர்களின்வழியைப் பின்பற்றிச்செல்லும் நாம் அவர்

களுடைய மார்க்கத்தையே அனுசரிக்கவேண்டும். ஆனால் அன்னிய ஆசாரியர்கள் தங்களுடைய புத்தியும் யுக்தியும் இடங்கொடுத்தவரையில் ஈசுவரனை எவ்வெவ்விதமாய்ப் பாவித்தார்களோ அந்தப்பாவனையை இராமலாகாது நிந்திக்கலாகாது. ஒருஜில்லா கலெக்டர் டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட்டாயும், ரெவினியூ ஆபீஸராயும், தேசாந்திரம்போகும் பிரயாணிகளை சம்ரக்ஷிக்கிறவராயும், டிஸ்திரிக்ட்போர்டு பிரஸிடென்டாகவு மிருப்பதுபோல் ஸர்வசக்தியுள்ள ஈசுவரன், சிவன், விஷ்ணு முதலிய பற்பலரூபங்களாக விளங்கி எல்லோரையும் சடாக்ஷிக்கின்றார். அவரை எவ்விதமாய் பூஜித்தாலும் நன்மையுண்டு. எந்தரூபத்தை நிந்தித்தாலும் தீமையுண்டு. சிவனைத்தான் போற்றவேண்டுமென்றும், விஷ்ணுவைத்தான் ஏற்றவேண்டுமென்றும் தேவியைத்தான் ஆராதிக்க வேண்டுமென்றும், சுப்ரமண்யத்தைத்தான் பிரார்த்திக்கவேண்டுமென்றும், ஏசுவை விசுவாசி, அல்லாவை வணங்கு என்றும் கூறுவதெல்லாம் அந்தந்த மதத்திலுள்ள அபிமானத்தின் காரியங்களேயன்றி வேறில்லை. ஆனால் மதவெறிகொண்டு சைவர்கள் விஷ்ணுவை துவேஷிப்பதும் வைஷ்ணவர்கள் சிவனை நிந்திப்பதும், ஒருசமயத்தார் மற்றொருசமயத்தாரின் கடவுளை ஏசுவதும், இகழ்ச்சியாய்ப்பேசுவதும் பாபமே. அப்படி இகழ்வதால் தங்கள் தெய்வத்தின் ரூபத்தையும் குணத்தையும் தாங்கள் அறிந்துவிட்டதாயன்றோ ஏற்படுகின்றது. அதனால் ஈசுவரன் ஸர்வவியாபி குணாதீதன் என்றசங்கதியைப் பொய்யாகத் தோன்றும்படிசெய்து விடுகிறார்கள். ஆதலின் மததூஷணைசெய்வது மிகுந்தபாபமென்பதை ஒவ்வொருவரும் அறிந்துகொள்வதவசியம்.

---

## பொருள்.

---

ஸ்ரீமத் தவளபதுமாசனியாய் விளங்கும் சரஸ்வதி தேவியின் பிரபாவதாரமாயெழுந்தருளிய நம்பெருமூதாட்டியாரது திருவாக்கினின்று மெழுந்த "பொருடனைப் போற்றிவாழ்" என்னு மிவ்வாக்கியத்திற்குச் சாதாரணமாய், பொருளைக்காப்பாற்றி வாழ்வீராக வென்பதே பொருளாக விளங்குகின்றது.

பொருளெனப் பொதுப்படக்கூறியவாற்றான் உள்பொருள், இல்பொருள், மெய்ப்பொருள், பொய்ப்பொருள், நித்தியப்பொருள், அநித்தியப்பொருள், காட்சிப்பொருள், கருத்துப்பொருள், இயற்கைப்பொருள், செயற்கைப்பொருள், இயங்கியற்பொருள், நிலையியற்பொருள், உருவப்பொருள், அருவப்பொருள் எனப் பலவாற்றானும் பகுத்துக் கூறப்படும் பொருள்களனைத்தினையுமோ யெடுத்துரைத்த தெனின், நமதன்னையார், பொருளென வொருமையிற்றா னெடுத்ததனோடு தான் என்னும் தன்மை ஒருமைப்பெயரின் விகாரமாகிய தன்னென்பதைப்புணர்த்தி நின்றாராதலின் அது தான்கொண்டதோர் பொருளை யென்பதையும், அப்பொருள் தன்னுள் தன்னின் மேம்பாடுடையதோர் பொருளைக் கொண்டு நிற்கின்றதென்பதையுங் குறித்து நின்றது.

ஆயினத்தகைப் பொருள் யாதோவெனின், இந்திரன்முதலிய விறையவா பதங்களும், அந்தமி லின்பத் தழிவில் வீடும், நெறியறிந் தெய்துதற்குரிய மாந்தர்க் குறுதியென வுயர்ந்தோரா னெடுக்கப்பட்ட அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் புருடார்த்தங்களில், மறுமை யின்பமொன்றற்கே யுரியதாயும், சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமையதாயும், துறவறமாகிய காரணவகையாற் பெறப்படுவதாயுமமைந்த வீடுபேறொழிய நின்ற முப்பொருள்களுள்,

வடுவிலாவையத்து மன்னியமூன்றனுள், நடுவணதெய்த விருதலையுமெய்தும் "நடுவண தெய்தாதானெய் துமலைப்பெய், தடுவதுபோலுந்துயர்" எனப்போந்த மேதாவியர் வசனப்படி முன்னும்பின்னுமாய் நின்ற வறமு மின்பமுமாகியஇருபொருளினையும் ஒருவனடைதற்கு இன்றியமையாச் சிறப்பினவாய், மத்யகததீபகாலங்காரம்வாய்ந்து நின்ற வொருபொருள்பொருளேயாம்.

அப்பொருள் மேற்கூறியபடி வேறு ஒருபொருளை தன்வயிற்படுத்து தெங்ஙனமெனின்,

"நாடியபொருள்கைக்கூடும் ஞானமும் புகழுமுண்டாம்
வீடியல்வழியதாக்கும் வேரியங்கமலைநோக்கு
நீடியவரக்கர்சேனை நீறுபட்டழியவாகைச்
சூடியசிலையிராமன் றோள்வலிகூறுவோர்க்கே" என்னும்

அபியுக்தர் வசனத்தானும்,

"கேடில்விழுச்செல்வங் கல்வியொருவற்கு
மாடல்ல மற்றையவை". [ஞ்
"செல்வத்துட்செல்வஞ் செவிச்செல்வமச்செல்வ
செல்வத்துளெல்லாந் தலை".

"கல்வியுடைமை பொருளுடைமை யென்றிரண்டு செல்வமும் செல்வமெனப்படும்" எனப்போந்த உத்தரவேதச் செய்யுண் முதலியவற்றானும், மேல்பொருளென்றது, கல்விப்பொருளெனவும், செல்வப்பொருளெனவு மிருவகைப்படுமென்றும், அவ்விரண்டனுள் கல்விப்பொருளே சிறந்ததென்பதூம், ஏனைச் செல்வப்பொருளோவெனின்,

"பழியஞ்சிப் பார்த்தூணுடைத்தாயினில் வாழ்க்கை,
வழியஞ்சலெஞ்ஞான்றுமில்".



"நட்பிடைவஞ்சஞ்செய்து நம்பினார்க்கூண்மாராட்டத்
துட்படக்கவர்ந்துமேற்றோர்க் கிம்மியுமுதலாராயும்
வட்டியின்மிதப்பக்கூறி வாங்கியும்பிறர்போலீட்டப்
பட்டதோவறத்தாழீட்டு நம்பொருள்படுமோவென்று".

என்ற மேதாவியர்வசனப்படி தருமவழியிற் பொருளைச் சம்பாதித்து, அத்தகைப்பொருளை

"இல்வாழ்வானென்பா னியல்புடையமூவர்க்கு
நல்லாற்றினின்றதுணை".
"துறந்தார்க்குந்துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வானென்பான்றுணை".
"தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கலுனென்றாங்
கைம்புலத்தாறோம்பறலை".

என்றபடிபிரமசரியர் முதலிய பதின்மருக்கும் பங்கிட்டுக்கொடுத்துத் தானுமோர்பாக முண்பவனிடத்துளதாஞ்செல்வமும் சிறப்பினதேயாம், இவற்றினுண்மையை

"அறனீனு மின்பமுமீனுந் திறனீனுந்
தீதின்றிவந்தபொருள்"
"ஒண்பொருள்காழ்ப்ப வியற்றியார்க்கெண்பொருள்
ஏனையிரண்டு மொருங்கு". என்னுந் திருக்குறளாற்

றெள்ளிதி னுணர்க.

இத்தகைய பொருளை, போற்றிவாழெனக் கூறியதேன், அவ்வாறு போற்றுவதா லுண்டாம் பயன் என்னையோவெனின், மேற்கூறிய அறத்திற்கு மின்பத்திற்கும் நிமித்தமூலகாரணமாயும், வீடு பேற்றிற்குச் சாதாரண துணைக்காரணமாயும் விளங்குவதேயாம்.

மேல் அறமெனவெடுத்த தெதனையோ வெனின், ஒருவரானு மியற்றப்படாமலும், யாவர்றிற்குந்தானே மூலப்ரமாணமாயும், தனக்கு வேறொரு மூலப்ரமாணமில்லாததாயும், அனாதியே சுயம்புவா யமைந்து கிடப்பனவாயும், சகல பூதாத்மகராய் விளங்கும் சர்வேஸ்வரனாற் றோற்றுவிக்கப்பட்டதாயும் விளங்கும், சுருதிகளானும், மனு, கஸ்யபர், கர்க்கர், வசிட்டர் முதலாயின பதிற் றொன்பதின்மரும் தனித்தனியே புகன்றுள்ளதான ஸ்மிருதிகளானும் எடுத்துக்கூறப்பட்ட தருமமேயாம். இனி அவ் அறத்தின்பொருளானதருமத்தின்வடிவம் யாதோவெனின், வேதவிதியையே லக்ஷணமாகக் கொண்டதே தருமமென்று, மீமாம்ஸகரும், வேதவிதியை ஆராய்ந்தடையத்தக்கவான்மகுணமேதருமமெனத் தார்க்கிகரும், முக்குற்றங்கடிந்த முனிவர்களும் மஹான்களும் நிதம் எதனை அநுஷ்டிக்கின்றனரோ வவ்வநுஷ்டானமே தருமத்தின் வடிவமெனக் கற்பித்திருக்கின்றனர்.

மேலும், அத்தருமமோ, ஆசாரம் ஒழுக்கம் விவகாரம் வழக்கு பிராயச்சித்தம் தண்டம் என மூவகைப்படும். அவற்றுள் ஆசாரமாவது அந்தணர்முதலிய வருணத்தார், தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று, அவ்வவற்றிற்கோதிய வறங்களில் வழுவா தொழுகுதல்;

விவகாரமாவது ஒருபொருளைத் தனித்தனியேஎனதெனதென்றிருப்பார், அதுகாரணமாகத் தம்முண்மாறுபட்டு அப்பொருண்மேற் செல்வது.

அஃது, கடன்கோடல், உபநிதி, கூடி மேம்படல், நல்கியதை நல்காமை, ஒப்பிப்பணி செய்யாமை, கூலிகொடாமை, உடையனல்லான் விற்றல், சொற்கொடாமைமுதலிய பதினெண் பிரிவினையுடையது.

பிராயச்சித்தமாவது, மேற்குறித்த வொழுக்கநெறியினும், வழக்குநெறியினும் வழுவினரை, மீட்டும் அந்நெறியி னிறுத்துதற்பொருட்டு குற்றத்தின் தாரதம்மியங்களையொப்ப வாராய்ந்து, அதற்குத் தகுமாறு தண்டித்தல்.

இவற்றுள், வழக்கும், தண்டமும், உலகநெறியை நிலைபெறச் செய்வதற்காவ தல்லது,ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதிபயக்குந்தன்மை யுடையனவல்லவாதலானும், நூலுணர்ச்சி வேண்டாது, உணர்வு மிகுதியானும், தேயவியற்கையானும் அறியப்படலாந் தன்மை யுடையனவாதலானும் அவ்விரண்டினையு மொழித்து, இம்மைமறுமைச் சிறப்பினதாய ஒழுக்கத்தைப் பற்றிப் பேசப்புகின் விரியுமாதலின் இன்றியமையாச் சிறப்பினதாய சிலவற்றைச்சுருக்கிக் கூறுவாம். ஒழுக்கமாவது, சாதாரண ஒழுக்கமெனவும், விசேஷ ஒழுக்கமெனவு மிருவகைப்படும்.

அவற்றுள் சாதாரண வொழுக்கமாவது, பிராமணன் க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்னும் நால்வகை வருணத்தவரும் பேதமின்றித்தேர்ந்துசெயற்பாலதாகிய பொதுத்தருமமாம், அவை, தானதருமங்களைச்செய்தலும், கற்புடை மனைவியோடிருந்து ஐம்பெரு வேள்விகளைநாடோறுந்தவறாதியற்றுதலுந்தென்புலத்தார்க்குரிய பிதிர்க்கடன்களை யிறுத்தற்காஞ் சற்புத்திரரைப் பெறுதலும், பிறவுயிர்களினிடத்தருளுமன்பு முடையராதலும், மானுடயாகமாகிய செல்விருந்து வருவிருந்தினரை யின்முகத்துட னுபசரித்தலும், தனக்குப் பிறர்செய்த நன்மையை மறவாதிருத்தலும், பகை-நொதுமல், நட்பு, என்னு முத்திறத்தாரிடத்தும் ஒப்பநிற்கும் நடுநிலை யுடையராதலும், மெய் மொழி மனங்கள் தீயவழியில் ஒழுக விடாதடக்கி நிற்றலும், காமமயக்காற் பிறர்மனை விரும்பாமையும், பொறுமை, பொறாமை, பிறர்பொருளை யபகரியாமை, பிறரில்லா

ரிடத்து அவரைப்பற்றி யிகழ்ந்துரையாமை, பாபகர்மங்களுக் கஞ்சிநடத்தல், உலகத்தாரோ டொத்து நடத்தல், யாசிப்பவர்க் கில்லையென்னாது கொடுத்தல், புகழுடையாதல், பொய்சொல்லா திருத்தல், கள்ளுண்ணா திருத்தல் முதலியனவுமாம்.

விசேஷ ஒழுக்கமாவது, நால்வகை வருணத்தவரும்தத்தமக்குவிதிக்கப்பட்டவைகளை யநுஷ்டித்தலும, விலக்கப்பட்ட கருமங்களை யறவே விடுத்தலுமாகியதருமங்களாம். அவருள் பிராமணன் வேதமோதல், ஓதுவித்தல், யாகஞ்செய்தல், செய்வித்தல், ஈதல், ஏற்றலென்னும் அறுவகைத்தொழிலில் சிரத்தையுடையவனாய், நாடோறும் தேவதாபூஜை, அதிதிபூஜை, ஸ்நானம் சந்தியாவந்தனம், ஜபம், ஹோமம், வைஸ்வதேவம் முதலிய ஆறுகருமங்களையும் விடாதுசெய்தல, போஜன ஆபோஜனகிரியைகளில் வழுவாமை முதலியனவாம்.

க்ஷத்திரியன், ஆயுதபாணியாக நின்று துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ்செய்து, சத்துருக்களையடக்கி, குடிகளைப்பாதுகாத்து, தன்னிடத்தில் அன்புள்ளவராகச்செய்து செங்கோன் முறைமைதவறாது பூமி பரிபாலனஞ்செய்து வரலேயன்றி மற்றைய வருணத்தவர்களைத் தத்தங் கருமங்களிற் றவறாதொழுகச்செய்து, நிலைதவறினவர்களை முறைப்படி தண்டித்து, பிரஜைகளிடத்தில் ஆறிலொருகடமை யிறைகொண்டு, ஏழைகளையாதரித்து வரல்முதலியனவும் புரிதலாம்.

வைசியன், வட்டிவாங்கலாகிய லாபகருமம், ரத்தினங்களின் கிரையம், விக்கிரையம் முதலியனசெய்தல், பசு பரிபாலனம், தானம், யாகம், ஓதல், கிருஷி, தேவதாபூஜை, பிராமணபூஜை, முதலியனசெய்தலாம்.

சூத்திரன், பிராமணருக்கும் மூன்றுவருணத்தாருக்கும் பணிவிடைசெய்தல், உப்பு, தேன், எண்ணெய் தயிர், மோர், நெய், பால், முதலிய வியாபாரங்களைச் செய்தல், பசுக்களைரட்சித்தல், கிருஷி, சித்திரமெழுதல் வாத்தியமுழக்கல் முதலியனவாம்.

அப்பொருள் இன்பநுகர்ச்சிக்குக் காரணமாமாறு, இம்மையே பயப்பதாயும் ஒருகாலத்தொருபொருளான் ஐம்புல நுகர்தற் சிறப்புடைத்தாயதும், களவியல்,கற்பியலென்னுங் கைகோளுக்கிடனாய காமவின்பத்தினை நுகர்தற்குவேண்டும் உபகரணங்க ளனைத்திற்கும் பொருளேவேண்டி நிற்றலினென்க.

ஆகவே அம்மையார் திருவாக்கினின் றெழுந்த "பொருடனைப்போற்றிவாழ்" என்பதன் கருத்து,கல்விப்பொருள் செல்வப்பொருளைக் கைக்கொண்டுவாழ்தலே நலனென்றும், அக்கல்வியால் அறிவும், அவ்வறிவால் நல்லொழுக்கமும், அவ்வொழுக்கத்தினால், சகலதர்மங்களும்நீதிநெறிகளுமுண்டாமென்பதும்பெறப்பட்டது.

இவ்வுண்மையையே திருவள்ளுவநாயனார் தமது தமிழ் மறையினும் "அருளில்லார்க் கவவுலகமில்லை பொருளில்லார்க் கிவ்வுலகமில்லா கியாங்கு" என்றதனால், பொருளுடையவர்க்கே இவ்வுலகத் தின்பங் கிடைக்குமென்பது சித்தம். இதுபற்றி யன்றே மானிடராயினோர் பற்பலதுறைகளிற் புக்குப் பொருள் தேடுவாராயினர். வித்தியாப்பியாசம் வேளாண்முயற்சி வியாபாரசாதனம், இராஜசேவை, இவையுள்ளிட்ட பற்பலவாற்றான் அப்பொருளை தேடுவ தியற்கையன்றே. மாணவர்க்கு செம்மை நிலைகோணாது உள்ளன்புடன் வித்தியாப்பியாசம்புரிவித்தலினா லடையும்பொருளனைத்தும் புண்ணியத்தா லீட்டியதேயாம். அன்றியும், "தொழுதூண்சுவையி னுழுதுண்ணினிது" என நம் பெரு மூதாட்டியார் திருவாய்மலர்ந்தருளியவாறு உடற்கண் வியர்வையரும்பப் பணைதிருத்திவித்தூன்றி யெருதழை முதலிய செய் நேத்திப் பக்குவத்தாழ்வின்றி சலசமர்த்தியுற வளர்த்தும் "செல்லான் கிழவனிருப்பினிலம்புலர்ந் தில்லாளி னூடிவிடும்" என்ற திருக்குறளின்படி இடைவிடா தன்றன் றெருக்காலப்பணையைச்சுற்றி நோக்கிப் புழுவெட்டன் முதலிய சீர்கேட்டிற் கிடமின்றிப் பராமரித்து அங்ஙனம்விளைந்த விளைவைக் கொய்து களத்திற்பெய்து "கற்றவைகளைந்து தூற்றிக் கூப்பியூர்க்காணித்தெய்வ, மற்றவர்க்கற்றவாறீந்தளவை கண்டாறிலொன்று, கொற்றவர்கடமைகொள்ளப் பண்டியிற் கொடுபோய் தென்னு, டுற்றவர் சுற்றந்தெய்வம் விருந்தினர்க் கூட்டியுண்பார்" என்றபடி கற்றைகளாகிய வைக்கோலினின்றும் தானியமணிகளைக் களைந்து தூற்றிப் பொலிகளாக்குவித்து ஊர்க்காணித் தெய்வங்களுக்கும், வறுமையுற்றோர்க்கும், அறுதிசெய்த முறைமையினீந்து, பின்னரளவிட்டுத்தொகைப்படுத்தி ஆறிலொருகூற்றை அரையர்க் கிறைப்பொருளாகத் தந்து ஏனைய வைவகைக்கூற்றுக்களைப்" படைப்புக் காலத்துப் பிரமனாற் படைக்கப்பட்ட வொருவகைக் கடவுட் சாதியாராயும், தென்றிசையை வசிக்குமிடனாகக் கொண்டவராயுமுள்ள பிதிருக்கும், குறித்து வந்தவரும் குறியாது வந்தவருமாய் விருவகை யதிதிகட்கும், வறுமையுற்ற வுறவினர்க்கும், தான் வழிபடுமிஷ்டதேவதைக்கும், ஆகிய விந்நால்வகையறங்களும், தானுயிரோடிருந்து செய்யவேண்டுதலின் தனக்குமாகப் பகிர்ந்து, அகவிலை குறையாது விற்றுச்சேர்க்கும்பொருளும் தருமத்தான்வந்த பொருளேயாம்.

(இன்னும்வரும்)

ஓம்.

பரப்பிரம்மணே நம:

"ஏகம் சத்விப்ரா பஹுதா வதந்தி."

# இகபரசுகசாதனி.

வாலியம் I. } 1904ஆ பிப்ரவரிமீ {புத்தகம் X.

## மனனமாலை.

பரையின்றதனியொளியேவடிவாய்ஞானம் பகரிச்சைகிரியைமும் மதமாய்ப்பண்டை, வரையின்ற வுமையின்ற வைங்கைநால்வாய் வளர்முக்க ணிருசெவியோர் வலியகோட்டு, நிரையின்ற நிம்புரிக்கும் பக்களிற்றை நெஞ்சகத்தில் வஞ்சகத்தைத் தவிர்ந்துநாளு, முறையின்றசொல்லினால் விரையின்றமலரா லுரைத்தரிச்சிப்பவர்வினையின் வருத்தமறுப்பவரே.

---

திருந்துபரை வடிவாகி யிச்சாஞானந் திகழ்காரணமாய்க்கிரியைச்செயலதாகிப், பொருந்துபர திரோதானமானையாகிப் போதுமிது சூக்குமமாய்த் தூலபோதம், வருந்துபரமந்திரமாம் பதம்வன்னஞ்சாங்கம்வருபுவனமுபாங்கமுமி ரவைபொறிகள்கலைக, டெரிந்தபர கரணங்களாகிவையந் திருமேனியாமரன்றன் றிருப்பாதமுரைப்பாம்.

---

அருமறையப் பராபரனு லருளுண்டா யதுதானுயிரத்திலொருகூறு யதிலிச்சாஞானம், வருபரமாங் கிரியையவை மலரகிதமாகி வந்ததற்பினங்கவற்றி னிச்சைவடிவாகித், தருபரனுக்குத்தானே தனுகரணபுவனந் தானாகி வையமெலாந் தானாக்கி யழித்து, மருபரம நினைவுவரு முயிர்க்கிறையையளிக்குமா துமைதன் றிருப்பாதப் போதுளத்தின் வைப்பாம்.

---

ஒன்றென்றும் பலவென்று முபயமென்று முருவென்று மருவென்று முறைவதென்றும், நன்றென்றுந் தீதென்று நானேயென்று ஞானமென்று ஞேயமென்று ஞாதாவென்றும், அன்றென்று மாமென்றுஞ் சமயப்பேய்க ளறைகின்றபிணக்குவழி யனைத்துநீத்துக், குன்றவிலாவானந்தக் குரவனின்னைக் கும்பிட்டேனென்பிறவி பின்பிட்டேனே.

---

பொய்யாதபுனன்மூழ்கிச் சாந்தமென்னும் பொடிபூசிக் கருணைமணி புனைந்தெஞ்ஞான்றும், நையாதவுள மெல்லா நையநாவா நவிலாத மாமனுவைநவின்றமேலீ, ரையாறு மாறுறுங் கடந்துநின்ற வானந்தத் தேசிகநின் னடிப்போதுக்கே, கொய்யாதமலர்கொண்டங் கருச்சித்தேத்திக் கும்பிட்டே னென்பிறவி பின்பிட்டேனே.

---

ஆசிலன்னமயகோசந்தாண்டியப்பா லழியாதபிராணமயகோசந்தாண்டி, மாசின்மனோமயகோசந்தாண்டியென்றுமாறு விஞ்ஞானமயகோசந்தாண்டி, ஞானமுறுமானந்தகோசந்தாண்டி ஞானவடிவாய்நின்ற குரவநின்னைக், கோசமெலாமற்றசிவ கோசியாகிக் கும்பிட்டேனென்பிறவி பின்பிட்டேனே.

---

என்னுளிருப்பினு மிறப்பதுநிச்சயம்
பொன்னாட்டிலிந்திர னாயினும்பொன்றுவ
னன்னாட்கழியுமுன் ஞானத்தினாலே
தன்னாலறிவது சற்குருபாதமே.

---

கொலையிலா னுதவுமன்னங் கூறிற்பே ரமுதமாகும்
கொலையுளா னுதவுமன்னங் கூறிற்பேர் விடமதாகும்
புலையர்தம் மனையிலுண்போன் புலையனா மாறுபோலக்
கொலைஞர்தம் மனையிலுண்போன் கொலைஞனே யாவ
[னென்றே.

---

அரிதுமானுடயாக்கையிற்பிறத்தன்மற்றதினு
மரிதுவேதநூல்சைவநூலாலகந்தெளித
லரிதவ்வீசனோநாமெனவறிவுமேலிடுத
லரிதுவாய்ப்பறையடைந்திடாதநிடங்கிடலே.

---

பாவனாதீதந்தன்னி னொடொறும்பதிந்துநிற்பாய்
பாவனாதீதந்தன்னி னெஞ்சகம்பதியாதாயின்
பாவனைதனிலேநெஞ்சைப் பழக்கிடுபழுத்தகாலைப்
பாவனாதீதம்வந்து பதிந்திடும்பான்மையோடே.

---

காயிலையுதிர்ந்தகனி சருகுபுனன்மண்டிய கடும்பசிதனக்கடைத்துங் - காவரையின்முழையிற் கருங்கல்போலசையாது கண்மூடிநெடிதிருந்தும், தீயிநிடைவைகியுந் தோயமதின்மூழ்கியுந் தேகங்களென்பெலும்பாய்த் - தெரியநின்றுஞ்சென்னி மயிர்கள்கூடாக்குருவி தெற்றவெயினூடிருந்தும், வாயுவையடக்கியு மனத்தினையடக்கியு மௌனத்திலேயிருந்து - மதிமண்டலத்திலே கனல்செல்லவமுதுண்டு வனமூடிருந்துமறினு, ராயுமறைமுடிவான வருணடினாடிமை யகிலத்தைநாடன்முறையோ - வண்டபகிரண்டமு மடங்கவொருநிறைவாகி யானந்த மானபரமே.

## சித்தாந்தசாரம்.

### பதியிலக்கணம்.

வேதாகமங்களிலுள்ள தாற்பரியமாவது:- பதிபசு பாசமுதலிய பதார்த்தங்களைப் பகுத்துக்கூறும். அவற்றுட் பதியாவது ஏனையிரண்டற்கு மேலாயிருப்பதொன்று. அப்பதிதான் நிட்களமும் சகளமு மல்லதாய், தத்துவாதீதமாகையால் முக்குணங்களும் ஓரடையாளமு மில்லாததாய், அநாதியிலே படிகம்போல அழுக்கில்லாததாய், ஒருமுதலாய், தோற்றமின்றியிருப்பதாய், அளவில்லாத வுயிர்களுக்கும் அறிவாகிச் சலனமற்றதாய், ஆனந்தவுருவாய், அறிவுருவானாலன்றிக் கிட்டுதற்கரிய பொருளாய், அறிவுருவானாற் சென்றடையப்படும் பேருய், அணுவுக்கணுவாய், மகத்துக்கு மகத்தாய் விளங்குவதா யிருக்கும்.

சூரியனிடத் தொளிபோலவும், அக்கினியினிடத் துட்டினம்போலவும், நீரினிடத்துக் குளிர்ச்சிபோலவும் நின்மலனாகிய முதல்வனிடத்துக் குணமாத்திரமாயுள்ள சத்தியானது இச்சாசத்தியாகவும், கிரியாசத்தியாகவும், ஞானசத்தியாகவும் விளங்கிய அவசரத்து அவ்வச்சத்திகளை முதல்வன் பொருந்தி நாதவிந்து முதலிய தத்துவங்களையும், விஞ்ஞானகலர்க்குத் தனுகரணபுவன போகங்களையும், படைத்து நிறுத்தி, விந்துவிலேநின்றுஞ் சூக்குமை முதலிய நாலுவாக்குகளையும், ஐம்பத்தோ ரக்கரங்களையும் படைத்து, அட்சரங்களை மாறிமாறிப் புணர்த்துப் பதங்களையாக்கி, அவற்றை மாறிமாறிப் புணர்த்து வாக்கியங்களையாக்கி, அவற்றை மாறிமாறிப் புணர்த்துச் சந்தோபேதங்களாக்கி அவற்றால் வேதாகமாதிகளையருளிச்செய்து, அதோமாயையைப்பொருந்தி, பிரளயாகலர்க்கும் சகலர்க்கும் தநுவாதிகளை நிறுத்தி அவற்றை மீண்டும் அவ்வெல்லைகளிலே யொடுக்குவன். அவன் ஒடுக்குவிக்குந் திருமேனியுந் தோற்றுவிக்குந் திருமேனியும் முறையே நிட்களமுஞ் சகளமுமான முறையாம்.

முதல்வன் காட்சிமுதலிய வளவைகளைக் கடந்தவனாதலின், இவ்விடத் திதுவென்று சுட்டிக் காட்டுமதனைக்கடந்த வியல்பாலும், சர்வவியாபகனாகையால் அவனுக்கு முதனடுவிறுதிகள் ஒன்றுமில்லாத தன்மையாலும், ஞானமயனாதலாலும், சமானபிரபஞ்சஞ் சேதனனையன்றி நடவாமையிற் கன்மகாலே சுரவாதிகளைப் போலவுமன்றி, வயிந்தவ சரீரங்கொள்வனெனின் ஆன்மாக்களி லொருவனாதலின் இதுவுமன்றி யவன் ஞானசொருப னாகையாலும், தானிரண்டறக்கலந்து நிற்கையாலுந் தன்னுண்மையைத் தானே மூர்த்திகரித் தெழுந்தருளிவந்து பரஞானத்தால் அறிவிக்கப்படுமவர்க்கன்றி மற்றையவர்க்கு அறியவொண்ணாத ஒப்பற்ற தன்மையுடைய னாதலாலும், நின்மலனாகையாலே பொறுத்தற்கரிய வெறுப்பும் விருப்புமாகிய வெல்லாம் பொருந்துதற்கரிய ஒப்பில்லாத தலைவனாகையாலும், விட்டு நீங்குதற்கரிய ஆன்மாக்களுக்கெல்லாம் பிராணனாய் நிற்கையாலும் நின்மலனான முதல்வன் தன்னுடைய திருவுள்ளத்துக்குப் பொருந்தினதொரு திருமேனியைத்தானே தனதாக நிறுத்துவன்.

உலகாயதன் பிரபஞ்சந் தானே யியல்பாயுண்டாம் முதல்வ னெற்றுக்கெனின் இயல்பு ஒரு படித்தாயிருத்தல்வேண்டும். அப்படியன்றிப் பிரபஞ்சமெல்லாம் அவனவ ளதுவெனக் கன்மத்துக் கீடாகத்தோன்றி நிலைபெற்று மீளத்தோன்றின வெல்லைகளிலே யொடுங்கும். ஆனால் ஒடுங்கின பிரபஞ்சம் பின்னுமுண்டாவ தெற்றுக்கெனின், மலமேதுவாக ஒடுங்கின வெல்லைகளிலே நின்று முண்டாகாநிற்கும். இனி பட்டாசாரியன் அச்சுமாறுதென்பன். அப்படியன்றிப் புழுவேட்டு வாளியானாற் போலவும், மயிற்குட்டி வண்டானாற் போலவும் ஆன்மதேகங்கள் கன்மத்துக்கீடாக மாறிமாறித் தோன்றுவதும் நிற்பதும் அழிவது மாகையாலும், இனி நிரீச்சுர சாங்கியன் புருடன் சந்நிதியிலே மாயைதானே தனுவாதிகளாய்த்தோன்றுமென்பன். அப்படியன்றிச் சலனமில்லாதமாயை சடமாதலால் தானே வடிவாக மாட்டாமையானும், ஆன்மாக்களு மலசகிதராகையால் ஒருடம்பையெடுத்தற்கு அறிவின்மையாலும், இனி அப்பட்டாசாரியன் வினைதானே சரீரத்தைக் கொடுக்குமென்பானுயின் அப்படியன்றி மாயையிடமாக விளங்காநின்ற கன்மமானது ஒருடம்பிலேபொருதிச் சடமாய் நிலைபெறுகையாலும் நின்மலனான முதல்வன்றானே விகாரமற நின்று எல்லாவற்றையு முண்டாக்குவன்.

முதல்வன்றானே உலகமெல்லாவற்றையும் படைத்துக் காத்து ஒடுக்குவன், மீண்டுமொடுங்கின முறைமையிலே சருவமுமுண்டாக்கா நிற்பன். இங்ஙனஞ் செய்கையிலுந் தானொருவிகாரம்பொருந்தான். எங்ஙனமெனின், வானிடத்தியங்கும் ஆதித்தன் சந்நிதியிலே நேர்பட்ட தாமரையொன்று அலராநிற்கும், ஒன்று அலர்தற்குப் பக்குவமாக முகுளித மாகாநிற்கும், ஒன்று உலராநிற்கும். இப்படியிவை ஆதித்தனாற் காரியப்பட்டு வருகையினும் ஆதித்தன் கருத்தில் இவையில்லாதது போலப் பிரபஞ்ச முதல்வனாற் காரியப்பட்டு வருகையினும் முதல்வன் கருத்தில் விகாரமில்லாமை போலவாம். முதல்வன் காருண்ணியத்தினாலே மேற்கொண்ட



விவற்றைக் கிரீடாப்பிரமவாதி மாயாவாதி முதலானவர்கள் பிரமத்தின் விளையாட்டென்று சொல்லுவார்கள். சித்தாந்திகள்ஆன்மாக்களைத் துன்பத்திற்கேதுவான பிறவிக் கடலினின்று மெடுத்து அருளைக்கொடுக்கையே காரணமாகச் சொல்லாநிற்பர்கள். அஃதெங்ஙன மெனின்? சங்காரம் ஆன்மாக்களை இளைப்பாற்று விக்கையாயிருக்கும். படைப்பு அவ்வான்மாக்களைப் பற்றிய மலத்துக்குப் பக்குவமுண்டாக்குகையா யிருக்கும். காப்பு கன்மந்தொலைத்தல் காரணமாகப் போகத்தை ஏறுமாற்குறையாமற் புசிப்பிக்கையாயிருக்கும். மறைப்பு புசிக்குமளவும் அவ் விடயங்களிலே சுவைபிறக்கும்படி நிறுத்துகையா யிருக்கும். அனுக்கிரகம் அனுக்கிரகமேயாம். இதுவன்றி முன்சொல்லப்பட்ட நான்கும் அனுக்கிரகமென்று சொல்வதன்றி விளையாட்டென்று சொல்லவொண்ணாது.

### பசுவிலக்கணம்.

ஆன்மவர்க்கமானது எண்ணவரியதாய், அழியாததாய், ஆணவமலத்தாலே மறைப்புண்டு அந்தமலம் பக்குவமாதற்குப் புண்ணியபாவங்களுக்கீடான வுடம்பை முதல்வன் காருண்ணியத்தினாலே பொருந்தி அஃறிணை உயர்திணைகளாய், அவ்வுடம்பினாலே எண்ணிறந்த போகங்களைப் புசிக்கிறவழியாலே மீண்டும் புண்ணிய பாவங்களை ஆர்ச்சித்து இறத்தல் பிறத்தல்களை யுடையதாய், அனாதியிலே தாமிரகாளிதம்போலப் பொருந்திய மலத்துக்கும் பாகம்வந்த விடத்துத் தீட்சையினாலே தனக்குள்ளே பொருந்தின ஞானத்தாலே அந்த மலத்தினைப் போக்கி முதல்வன் திருவடியைப் பொருந்தும்.

எண்ணிறந்தவைகளாகச் சொல்லப்பட்ட ஆன்மவர்க்க மூன்றுவகை. அவர் விஞ்ஞானகலரென்றும், பிரளயாகலரென்றும், சகலரென்றுஞ் சொல்லப்படுவர். இம்மூவரில் விஞ்ஞானகலர் ஆணவமலத்தாரென்றும், பிரளயாகலர் ஆணவமுங் கர்மமுமென்று மிருமலத்தாரென்றும், சகலர் ஆணவம் கன்மம் மாயையென்று மும்மலத்தா ரென்றுஞ் சொல்லப்படுவர். மாமாயை திரோதாயியென்னு மிரண்டுமலமும் மூவகை யான்மாக்களுக்குமுள. அவை கூட்டியெண்ணுமிடத்து விஞ்ஞானகலர் மும்மலத்தார். பிரளயாகலர் நான்குமலத்தார். சகலர் ஐம்மலத்தாராவர்.

### விஞ்ஞானகலர்.

ஆசாரியனால் தீக்கையில் கலாதத்துவ மளவாகக் கன்மங்களைச் சோதிக்கப் படுகையால், தான் மாயையினுடையவும், வியாபாரங்களைப்பிரித்தறிகிற ஞானத்தினாலும், தானந்தவாதாரயோகத் தியானாதியால் மிகுந்த தவத்தினுடைய சித்தியினால் கன்மானுகுணமாகத் தனுவையெடுத்துக் கன்மங்கள் புசித்துத் தொலைந்த காலத்தில் வைராக்கியத்தாலும், சந்நியாசி யனுட்டானத்தாலும், எல்லாக்கன்மங்களு நசிக்க அதற் காதினமாயிருக்கிற மாயையுமின்றி ஆணவமலமொன்று சேட்டித்து நிற்கையிலுண்டானது விஞ்ஞானகலப்பெயர்.

விஞ்ஞானகலர் பக்குவமலர் அபக்குவமலரென விருவகையார். பக்குவமலராவார் மலபரிபாக மிகுதியால் முதல்வனனுக்கிரகம் பெற்றுச் சாயுச்சியத்தை யடைவர். அபக்குவமலராவார் மலபரிபாக மந்தியத்தில் முதல்வன் அவர்களுடைய ஞானக்கிரியைகளை விளக்கியனுக்கிரகஞ்செய்யப் பட்டிருக்கையினும், சுத்தாத்துவாவுக் கதிகாரிகளாகையால் அதிகாரமலத்தைப் பொருந்தியிருப்பர். இவ்வாறு அபரமுத்தி பெற்றவர்கள் பிரணவர், சுதாக்கியர், சிவர், தீர்த்தர், காரணர், சுசீவர், சூட்சுமர், காலர், தேசசர், அஞ்சு எனக்கூறிய அனுசதாசிவர் பதின்மரு மதோ மாயாபுவனத் துள்ளார்க்குப் பக்குவம்வந்தவிடத்து அனுக்கிரகஞ்செய்து சாதாக்கிய தத்துவத்திற் போகங்களைப்புசித்து அந்த மூர்த்தியைச் சூழச் சேவித்துக்கொண் டிருப்பார்கள். இவர்கட்குப் போகத்தில் வைராக்கியம் பிறக்கின் அப்போது முதல்வன் பிரசன்னராக மேலானபதத்தை யடைவர்.

### பிரளயாகலர்.

பிரளயாகலர் பக்குவமலர் அபக்குவ மலரென விருவகைப்படுவர். பக்குவமலராவார் மலபரிபாக மிகுதியால் சிலர்க் கெல்லாக்கன்மமும் பக்குவமா யுள்ளளவில் முதல்வன் தீவிர தீவிரதரமென்னுஞ் சத்தியைப் பதித்து நிரதிகார தீக்கையால் திருக்கண் சாத்தியவர்கள் பாசத்தினைச்சேதித்து அவர்கள் ஞானக்கிரியைகளைப் பிரகாசிப்பித்து மோட்சத்தை யடைவிப்பன். மற்றபக்குவரைக் கன்மானு குணமாகப் போகத்தைப் புசித்துத் தொலைக்கையின் பொருட்டுப் புரியட்டகத்தைப் புவனசமேதகமாகிய யோனிகடோறும் பிறந்துழன்று திரிந்து மலகன்மங்கள் பரிபாகமானவாறே முதல்வன் சத்தியைப்பதித்தவர்க ளறிவைவிளக்கி மோட்சத்தை யடைவிப்பன்.

புரியட்டகத்துடனே கூடினவர்களுட் சிலரை அனந்ததேவர் அப்பு தத்துவத்தி லமரேசராதியாகிய புவனத்திலிருக்கும் அதிகுய்யாட்டகர்க்கும் வாயுவில் தெய்யாதியாகிய குய்யாத் குய்யாட்டகர்க்கும், ஆகாயத்தில் வத்திரபதாதியாகிய பவித்திராட்டகர்க்கும்அகங்காரத்

தில் சகலாண்டாதியாகிய தானுவட்டகர்க்குமாகப் புவனாதிபர்கள் நாற்பதின்மரையு மிவர்களையடைவே யதிபராக்கி யோசியாநிற்பன்.

### சகலர்.

சகலராவார் தேவர்கள், இருடிகள், மானுடர் முதலாயினோர். இவர்களிலதிபக்குவர், மந்தபக்குவர், அபக்குவரென மூவகையர். அதிபக்குவராகிய தேவர்கள் தானவர்கள் முதலாயினாரை முதல்வன் தீவிரமுதலிய நால்வகைச் சத்தியைப் பதித்துத் திவ்வியமான திருமேனியை யதிட்டித்துக் கொண்டவர்கள் பாசத்தைச் சேதித்தவர்கள ஞானக்கிரியைகளை விளக்கத் திதிகால முடியுமளவும் சுத்தாத்துவாவிற் போகங்களைப் புசித்திருந்து மகாசங்காரத்தில்மோட்சத்தை யடைவார்கள்.

முதல்வன் மந்தமலபாகராயுள்ள வைராயிகர் முதலாயினாரை மந்த, மந்ததரமெனச் சொல்லப்பட்ட சத்தியைப்பதித் தாசிரியனை யதிட்டித்தவர்களுக் கனுகுணமாகத் திட்சையைச் செய்தவர்கள் யாதொருபதத்திலேயிருந்து யோகம்புசிக்க விரும்பினார்களந்தப் பதத்திலே யோசியாநிற்பன். மலபரிபாகம் வாராதவபக்குவரை யவரவர்கள்செய்த கன்மத்திற் கீடாகப் பௌதிக சரீரங்களையெடுப்பித்துப் போகங்களைப் புசிப்பித்துத் தொலைந்தவாறே மலபாகம்பிறந் தாசாரியன் திட்சையைப் பண்ணி மோட்சத்திற் கருகனாக்குவன்.

### பாசவிலக்கணம்.

(சடமுமாய் அனேகமானாற் கடாதிகளைப்போல அநித்தமாதலாற் பலவன்றி) ஒன்றாயிருப்பதாய், (ஒன்றே சர்வான்மாக்களையு மறைக்கில் ஒருவனுக்குப் பாசமோசன முண்டாக எல்லார்க்கும் மோட்சமுண்டாதல் வேண்டும். அது கூடாதாதலின்) தத்தம் பரிபாகமான காலவரை யறைகளிலே திரும்பத்தக்க அளவிறந்த சத்திகளையுடையதாய், (இருள் எல்லாப் பொருளையு மறைக்கையிலுந் தன்னைக்காட்டிநிற்கும். இது சர்வான்மாக்களையு மறைத்து அவர்களையுந் தன்னையுங் காட்டாதாகையால்) இருளு மொளியென்னும்படி இருண்டமயக்கத்தை யுடையதாய், செம்பிற்பொருந்திய களிம்புபோன்ற அழியாத பிரதானமலமாய் ஆன்மாக்களுடைய இச்சாஞானக்கிரியைகள் அடங்கலையு மறையாநிற்கும். திரோதான சத்தியானது ஆன்மாக்களோடு நின்று அந்த வாணவமலம் பக்குவமாம்படி அதுமறைத்தற் கனுகூலஞ் செய்தலால் அந்தச்சத்தி மலமெனப்படும். அங்ஙனமறைத்தற் கனுகூலமான சத்திதானே முதல்வனுடைய திருவடிகளை ஆன்மாக்கள் சேரும்படி பக்குவம் வந்துழிப்பண்ணிப் பெரிதும்பரிந் திரக்கமாய் மருளும்.

இவ் வாணவமலம் ஆன்மாவினுடைய ஞானசத்தியை மறைத்தலாற் சகசமேயாம், ஆகந்துகமலமன்று. சகசமாவது கூடவுதித்தது, ஆகந்துகமாவது வந்துகூடியது. சகசமெனின் அக்கினிக்கு வெம்மையும் புனலுக்குத் தண்மையும்போலும், குணமாதலிற் குணமழியிற் குணியுமழியு மன்றேயெனின், அற்றன்று செம்பிற்குக் களிம்பும் அரிசிக்குத் தவிடும்போலுங் குற்றமே அவற்றின் குணமன்று. களிம்பும் தவிடும்போகச் செம்பிற்கும் அரிசிக்குங் கேடில்லை. அதுபோல சகசமலமான வாணவமலத்தை நீக்கக்கேடின்று. ஆதலாற் சகசம் இருவிதமென்க.

மணவழகனணல்.

(இன்னும்வரும்.)

## தந்தைக்கும் மகனுக்குநடந்த சம்பாஷணை.

சுவாமி? யான் வினவுகின்றவற்றிற்குத் தக்கவிடை பகரல்வேண்டும். அதாவது.

சுவாமீ? இப்பூதங்களானவை தோற்றுமிடமெங்கே ஒடுங்குவதெங்கே! உயிர்கள் தோன்றுவதெவ்வாறு வளருவதெவ்விதம்! வயிற்றினுள் உறுப்புகள் எவ்வாறிருக்கும்! வெளிப்பட்டுவளருவதெப்படி! இறக்கும்பொழுது எவ்வாறு விடப்படும்! இவ்விஷயத்தில் உலகத்துள்ளார் ஒன்றும் உணராதவராயியங்கின்றனர். ஆனதால் இவ் விரகசியத்தின் உட்பொருளைச் சந்தேகமற எனக் கருளல்வேண்டும் என்றார்.

அதற்கவர்கள்: ஒப்பற்ற இவ்வினாவாகிய பெரும் பாரம் எம்மேற் சுமத்தப்பட்டனவே! இவை பூதங்களின்தோற்ற வொடுக்கங்களைப்பற்றிய வாகலின் எவர்க்கும் எவ்வாறிருக்குமென மதிப்பதற் கரியவாயுள்ளன. ஒரு தந்தையானவனுக்கு அவன் மகனாலுணர்த்தப்பட்ட செய்தியொன்றுளது கேட்பாயாகவெனச் சொல்லுகின்றனர்.

முன்னாளில் ஓர் முனிவர் சந்ததியிற்பிறந்த சுமதியென்னும் பெரிய அறவடிவனான வேதியனொருவனிருந்தான். அவன் உபநயனஞ் செய்யப்பட்டு சாந்தனையுடையனாய் சடனைப்போலிருக்க நோக்கிப் பேரறிவினையுடைய அவன் பிதா சொல்லத்தொடங்கினார். ஓ சுமதி! வேதங்களை முதற்றொடங்கி முறையேயோதுக. பலியன்னமெடுத்துப்புசித்து ஆசிரியன் பணிவிடையைப்புரிக. பின்பு இல்லறதருமத்தை யடைந்து சிறந்தவேள்விகளைச்செய்து நல்ல புதல்வரைப்பெறுக. அதன்மேல்வானப்பிரஸ்தனாகுதி, அப்பால்மேற்கொண்ட சமுசாரத்தை யொழித்துச்சந்நியாசியாச்சிரமத்தையடைக. இங்ஙனஞ் செய்தால் எதனை யடைந்தவன் துன்பமடையானோ அப்படிப்பட்ட பிரமத்தினை யடைவாயென, இங்ஙனம் விரித்துரைக்கக் கேட்ட சிறுவன். சடனைப்போல் யாதோர் விடையும் பகராதுநிற்க, பிதா மகனிடத்தில் வைத்த நேயத்தால் அடுத்தடுத்து அன்போடும் நன்போடும் இனியமொழியாக வினவிவந்தனர். அப்போதச்சிறுவன் நகைத்து இங்ஙனங் கூறலாயினான்.



ஐயா! தேவரீரால் இப்போது உபதேசிக்கப்பட்ட விஷயங்களெல்லாம் முன்னமே எண்ணிறந்த காலம் என்னால் அனுட்டிக்கப்பட்ட வாகலின், அவ்வாறே எல்லாநூல்களும் பலவேறுவகைப்பட்ட சிற்பவித்தைகளும் பலவாயிரம் பிறப்பில் பயின்றவாறு என் ஞாபகத்திற்குவந்துள்ளன. இனி அனுத்ததுன்பங்களும் களிப்பும், இறப்பும் பிறப்பும், மைந்தரும் மனைவியும், சுற்றமும், உண்டாதலும் அழிதலும் அனேகமாக ஞாபகத்திற்கு வருகின்றன. அனேகந் தாயரும் தந்தையரும், பார்க்கப்பட்டனன். பல்லாயிரம் சுகதுக்கங்களை யனுபவித்தேன். எத்தனையோ மைந்தர் பிறந்தனர். மூத்திர புரீக்கேணியாகிய மாதர்கருவிற் கிடந்தேன். கொடிய கருமநோயனைத்தினையும் ஆயிரமாயிரமாகவும் அனுபவித்தேன். இளமை, வாலிபம், கௌமாரம், கிழத்தனம் இவற்றுள் அனுபவித்த துன்பங்கள் அனைத்தினையும் இப்போது ஞாபகஞ்செய்துக் கொள்ளுகின்றேன். பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திர சாதிகளிலும் செல்வர் மனையிலும், வறியார் இல்லத்தினும், வீரரிடத்திலும் பிறந்திறந்தேன். புல்பூடுபுழுமரம் பறவை பாம்பு கல் மனிதர் பேய் அசுரர் முனிவர் தேவர் ஆகிய இவ்வெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன். அவ்வாறே உமது மனையிலும் பிறந்துள்ளேன். சேவகன் அடிமையென அனேகர்க்கு அடங்கிக்கிடந்தேன். தலைவனும் பெருஞ்செல்வனுமாக விருந்தேன். வறியனும் உடையானுமாயு மிருந்தேன். கொன்றேன். கொல்லப்பட்டேன். கொடுத்தேன். பலவாகக் கொடுக்கப்பட்டேன். கொல்வித்தேன் கொல்விக்கப்பட்டேன். தாய் தந்தை மனைவி மக்கள் சுற்றமுதலியோர்க்கு வேண்டுவன கொடுத்தேன். களிப்பாற் களித்தேன். துயராற்றுயர்ந்தேன் அந்தோ! ஐயா! இடர்ப்பிழம்பான இப்படிப்பட்ட சமுசார சக்கரத்திலுழலும் நான் வீட்டுக்கு ஏதுவாகிய இவ்வறிவை இப்போது நடந்தேன். ஆதலால், மூன்று வேதத்தினுமுள்ள எல்லாவிடயமும் அறியலாயிற்று. பயனற்ற விக்கருமநெறிக்கவந்திப்போர்வை இனி யொத்ததின்று. ஆதலால், ஞானம்பிறந்தவனுக்கு வேதத்தாலென்னை பயனுளது. குரவனருளாற் பெறப்பட்ட அறிவால் நிறைந்தவுள்ளம்பெற்ற வெனக்கு எந்த ஆசையுமில்லை. ஆன்மசொரூபனாகவே யிருக்கின்றேன். அறுவகையான கருமங்களின் துன்பவின்பத்தன்மைகள் சாத்துவிக இராஜசதாமதகுணங்கள் இல்லாத பரமபதமான பிரமத்தை யடைகின்றேன். காமம், குரோதம், உலோபம், அறியாமை, பகை, ஆங்காரத்தோடுகூடிய களிப்பு, பொய் முதலிய திக்குணக்கயிற்றாற் பின்னப்பட்ட வலை பலவகைப்பட்டசிறுபற்றுக்களாகியபாசத்தோடுகூடியமனிதராகிய மிருகங்களை அகப்படுத்துக்கட்டி விடுகின்றன. அதனாலுண்டாய துன்பங்கள் ஒரு பெரிய சந்ததியாக வளர்கின்றன. ஆதலின், ஐயா! இதனை நான் விட்டொழிகின்றேன். மூன்று வேதத்திலுமுள்ள தருமம் அதருமத்தானே நிரப்பியுள்ளன. இது முருக்கம்பூப்போலுமிருக்கின்றது. (முருக்கம்பூ பார்வையொன்றற்கே செம்மையதன்றி அனுபவிப்பதற்கு மணமும் சுவையுமில்லாதவாறு. கருமநெறியும் அங்ஙனமுள்ள தென்பது கருத்து) என்று அச்சிறுவன் சொல்லக்கேட்டு அவன் றந்தை களிப்பாலும் வியப்பாலும் உரையாடவசமின்றி நாக்குழற மிகுந்த பெருந்தன்மையுடைய தம்மைந்தனை நோக்கிச் சொல்கின்றனர்.

மைந்த! என்னைபேசுகின்றனை? இவ்வளவறிவுனக் கெதனாலுண்டாயிற்று. இதுவரையில் சடனாயிருந்தனையே? முனிவர் தேவர் முதலிய சாபத்தால் விகாரம் பிறந்து அவ்வனுபவ மொழிதலும் அறிவு தோற்றியவாறே உன்வரலாற்றினை முற்றுமறிதற்கு நான் மிகுந்த ஆவலுடையனாயினேன். அவற்றைமுழுவதுங் கூறுதி? என, மைந்தன் கூறுவானாயினான்.

தந்தையே! எனது முற்பிறப்பின் வரலாறு கூறுகின்றேன் கேளுதி? முன்யான் வேதியனாகப் பிறந்து சந்நியாசத்தினை யடைந்து எனதறிவை பிரமத்தினிடத்துச் செலுத்தி, ஞானநூ லாராய்ச்சியின் மேலான அசையா நிலையைப்பெற்றேன். எக்காலத்தும் யோகத்துளழுந்தி யிருத்தலானும், சமாதி பழகுதலானும், நல்லோரிணக்கத்தாலும், நல்லியற்கையாலும், விதிப்படியாராய்ந்து சோதித்தலாலும் பிரமயோகமுடைய வெனக்கு அப்பிரமத்தினிடத்தில் மிக்க வன்புண்டாயிற்று. பின்னர் மாணுக்காது ஐயமொழித்தலின் வல்லனாய்

ஆசிரியத்தன்மை யடைந்தேன். அப்பால் நெடுநாள்கழி
த்து மேலான தன்னந்தனிய னாயினேன். முடிவில் அத்
தகைய நல்லியல்பு அறியாமையாலீர்த்துச் செல்லப்
பட்டு, நினைப்புமறந்து, கெடுநிலை யடைந்தேன். ஆயி
னும் இறந்ததுமுதல் பின்னிட்ட உணர்ச்சி எனக்குமற
ந்ததில்லை. பதினாயிரங் காலமாக நடந்த பிறப்பினுள்ள
வெல்லாம் உணர்ச்சிக்குவந்தன. முற்பிறப்பில் யான்
செய்த பழக்கவலிமையால் இப்பொழுது நான் புலங்
கடந்தவனா யுள்ளேன். ஐயா! இனி நான் என்றும் பிற
வாதவனாகுகைக்கு வேண்டுங்கருமஞ்செய்யு முயற்சிக்
கண் இப்போதிருக்கின்றேன். இப்பொழு தெனக்குண்
டாயிருக்கும் முற்பிறப்பின் ஞாபகமும், அறிவும் மாணா
க்கருக்கு ஞானதானஞ்செய்து அவற்றின் பயனாயுள்
ளது. மூன்றுவேதத்துமுள்ள கருமகாண்டத்தை முற்று
மடைந்தவர்க்கும், இதுபெறலாம் பேறல்ல. நான் முன்
னையவாச்சிரமத்திருந்தே ஞானத்தினசையா வியல்பினை
யடைந்தேன். இப்பொழுது தனிமைபெற்று ஆன்மா
வுக்கு முத்தியுண்டாம் வரையில் முயற்சிக்கின்றேன்.
உம்முடையமனத்துள் ஐயப்பட்ட எல்லாவற்றினையுங்
கேளும். இவ்வளவிலாயினும் உமக்குத் திருப்தியுண்
டாம்படிச்செய்து உமதுகடனைத் தீர்த்துவிடுகின்றேன்
என்றான்.

இதனைக்கேட்ட பிதாவானவன் அம்மொழிகளை
நம்பி மகனைநோக்கிக் கூறுவானாயினன்.

அப்பா! மைந்த! உன்னாற் கேள்வியுற்றவெல்லாம்
இச்சமுசாரப் பெருங்காட்டைப் பற்றியவே என.

இவ்வாறுரைத்த தந்தையைநோக்கி மைந்தன்
கூறுகின்றான்.

ஐயா! இப்பெரும்பாடு எத்தனையோவிசை என்
னாலனுபவிக்கப்பட்டது. இக்குடும்பம் சகடக்காலினை
யொத்தது. அதற்கு எப்பொழுதும் கிழத்தனமில்லை.
நீரேவேண்டிக் கட்டளையிட்டபடியால் கூறுகின்றேன்.

இறக்குந்தருணமுதல் வேறொருவன்வந்து கொன்
றதாகத்தேகத்தில் அழலையெழுந்து வேகத்தினையுடைய
காற்றினால் மூண்டு உடலைப்பற்றி இரகசியவிடங்களை
யெல்லாம் பேதித்து, விறகுள்ளதுணையும்பற்றி யெரி
ந்து, அஃதொழிந்தபின் அடங்குந்தீப்போல அடங்கு
கின்றது. பின்னர் உதானன் என்னுங்காற்று மேலெ
ழுந்து போகின்றது. உண்டசோறுந் தண்ணீரும் கீழ்
நோக்கவொட்டாது தடைசெய்கின்றது. ஆதலால், யார்
அன்னந்தண்ணீர்முதலிய தானங்களை மிகச்செய்திருக்
கின்றார்களோ அவர்கள் அத் தானவலிமையால் அப்

போது திருப்தியடையும்படி நேரிடுகின்றது. அன்ன
தானஞ் செய்யாதிருந்தாலும் விடாப்பற்றோடும் அன்
போடும் யார்பொய்கூறுவதில்லையோ அவரும், நட்பின
ரைப் பிரிவுகாணாதிருந்தவரும், ஆஸ்திகரும், சுகதுக்க
மரணத்தினையடையார். யார் தேவர்களையும், வேதியரை
யும் பூசிப்பதில் அன்புடையராயிருப்பரோ, அழுக்கா
றில்லாதவரோ, ஆற்றலுடையரோ, உதாரகுணமுடை
யரோ, நாணமுடையரோ அப்படிப்பட்டவர்கள் சுக
மான மரணமுடையவர்களாவார்கள். யார் காமத்தா
லாயினும்,பகையாலாயினும், தருமத்தை விட்டுவிட்டா
னோ, பெரியர்விதித்தபடி எத்தொழிலினையுஞ் செய்ய
வல்லவனோ, கொடுமையில்லாதானோ அவன் வருத்த
மின்மையில்லாத மரணத்தையடைவன். சாங்காலம் நே
ரும்போது மனைகொளுத்தினவனுக்கு உடம்பெரிச்ச
லுண்டாம். சோறிடாதானுக்குப்பசிநோயுண்டாம். பொ
ன்னைத் தானஞ் செய்தவனுக்குக் குளிருண்டாகாது. நீ
ரைத் தானஞ்செய்தவன் தாகத்தைவெல்லுவான். யார்
மனத்தினையும் நோகச்செய்யாதவன் கடுநோயானமரண
வாதனையை வெற்றிகொள்வன். ஞானத்தை யுபதேசித்த
வன் மோகத்தை யறுப்பான். கூட்டசாக்ஷியும், பொய்
யுங்கூறுவோனும், கெடுதியானவற்றைப் பிறருக்கு வலி
ந்துபோதிப்போனும், வேதத்தைப் பழுதுகூறுவோனு
மாகிய இவரனைவரும் மரணகாலத்தில் மயக்கத்தோ
டொழிவர். மிகஅச்சஞ்செய்பவராயும், தீநாற்றமுடைய
ராயும், பெருந்தடிகொண்டு கூட்டங்கூட்டமாய் வருபவ
ராயும் இரக்கமற்ற நெஞ்சுடையவராயுமுள்ள யமபடர்
கள் அச்சமயத்துள் வருகின்றனர். அவர்களைப்பார்த்த
வளவிலே அங்கு சாகின்றவனுக்கு உடம்பு நடுங்குகின்
றது. அழுகிறான் உடன்பிறந்தவரையும் தாயையும்,
மைந்தரையும், அழைக்கின்றான். சொற்களோ தெளி
வுற்றிலது. எழுத்துக்கள் புலப்படுகிறதில்லை. விழி
சுழலமிடுகின்றது. பயத்தோடு உயிர்விடுதலினால் முகம்
சோடைப்படைகின்றது. உயிர் மேலெழுதல், கண்பஞ்
சடைதல், துன்பம், நோய், இவற்றால் கிரப்புற்று அவ்
வுடம்பினை விடுகின்றான். காற்றினாற்றரப்பட்ட வடி
வினையுடைய வேறுதேகத்தைப் பெறுகின்றான். அவ்
வுடல் கருமதுக்கங்களை யனுபவிக்கத்தானே தோன்றிய
தேயன்றி தாய்தந்தையராற்பிறந்த தொன்றன்று. அதன்
அளவு, வயது, அவயவங்களினுருப்பு, இவையெல்
லாம் முன்னையதேகத்தில் எவ்வாறோ அவ்வாறாம். பின்
னர் யமபடர் கொடியபாசத்தாற்கட்டித் தடியாலடிக்க,
இவனழுதுகொண்டிருக்கையில் தென்முகமாக இழுத்
துச்செல்கின்றனர். அவ்வழியோ மிகுமுருடாகிய அரி
தாளினாலும், பெருமுட்களாலும், முளிசளாலும், புற்
றுக்களாலும் கற்கள்முதலியவற்றாலும் நடத்தற்கரிய



கடினமாகவேயுள்ளது. அவ்வாறே எரிநெருப்போடுங்
கூடியது. சிலவிடங்கள் அப்பிரக்கற்கள் மிகுதியுமுள்
ளதாய் உச்சிப்போதைய சூரியன்கதிர்களால் மிகக்
கொளுத்தப்பட்டுள்ளது. சிலவிடங்களில் நரிகள் ஊளை
யிட்டிருக்கும், இப்படிப்பட்ட கடுஞ்சுரத்திலே பல
நூறுநரிகள் சூழ்ந்து பறித்துத்தின்னப் பயங்கரரான
காலதூதவரால் ஈர்க்கப்பட்டுப் பாவகருமஞ்செய்த
பிராணி இயமலோகம்புகுவன். குடை, செருப்பு முத
லிய தானஞ்செய்தவரும், மனை யில்லமுதலிய தானஞ்
செய்தவரும், நன்மார்க்கத்திற் சுகமாகச்செல்கின்றனர்.
பிணம்பட்டஆன்மா பாவத்தால் நெருக்கப்பட்டவனா
ய்த் துன்பங்களை யனுபவித்துக்கொண்டே பன்னிரு
நாளில் யமபுரம் புகுவிக்கப்படுகிறான். மனிதனுக்கு
ஒருமாதகாலம் பிதிருக்கு ஒருநாள். தேகம்பற்றியெரி
கையில் பேரெரிவும் தாகமும் பிறக்கின்றன. அவ்வுயிர்
தன்னுடம்பைப் பிடுங்கித்தின்னும். எலும்புகளை முறித்
தும் மிகுகுளிர் பனிநீரிற்றோய்த் தெடுக்கவும் விடாத
துன்பத்தையே அனுபவித்துக்கிடந்தும், தான்செய்து
கொண்டவினைத் திட்பத்தினால் அவன் மற்றொருமெய்
யினை யடைந்தானாயினும் முன்னையபிறப்பின்கண்வாய்
த்த சுற்றத்தினர் அவனுக்குச்செய்த எள்ளுந்தண்ணீரு
மாகிய இவற்றினாலும், பிண்டதானத்தினாலும் யமபுரஞ்
செலுத்தப்படும் உயிர் திருத்தியையடையும். இறந்தா
ரைநோக்கி இங்குசெய்வித்த எண்ணெய்முழுக்காலும்,
வேதியர்சுற்றமிவர்களை யுண்பித்தலாலும் திருத்திபெ
றும். இறந்தோனைக்குறித்து இவ்வுலகத்தில் அவன் சுற்
றத்தினர் தக்கவேதியர்க்குத் தானம்முதலிய செய்தால்
அவ்விறந்தவனுக்கு இனிமையுண்டாம். பிணத்தைக்
கொண்டுபோகும்பொழுது தன்னுடம்பைத் தானறி
யாது. ஆனால் பிண்டத்தினையும் எள்ளுந்தண்ணீரையு
மாத்திரம் அனுபவிக்கின்றது. பன்னிருநாளுங் கழிந்த
பின்பு அவனுக்கு இயமன்றரிசனமாகிறான்.

(இன்னும்வரும்.)

## இணக்கமறிந்திணங்கு.

ஒரு பட்டணத்திலே ஓரரசனிருந்தான். அவனுக்
கோராண்பிள்ளை பிறந்தது. அந்தப்பிள்ளைக்கு "இளமை
யிற்கல்" என்னும் வாக்கியப்படி கல்விவிஷயமாக அ
னேக சாஸ்திரங்களையும், அரசுரிமைக்கு வேண்டிய
யானையேற்றங் குதிரையேற்றம் வில்வித்தை முதலாய
சகல வித்தைகளையுங் கற்பித்தான். பிறகு அப்பிள்ளை
தனக்கு தக்கவயது வந்தபிறகு தான் பலபல தேசாசாரங்
களை அறியவேண்டிய விருப்பமுடையவனாய் தன் பிதா
விடஞ் சென்று தனதெண்ணத்தைத் தெரிவித்தான்.
தகப்பன் பிள்ளையை அனுப்ப சம்மதியில்லாமல் அனே
கவிதத்தால் தடுத்தும் கேளாதிருந்தபடியால் ஒருவாறு
துணிந்து அனேக புத்திமதிகளைச்சொல்லிப்போதுமான
பொருளுங்கொடுத்துப்போய் அதிசீக்கிரத்தில் வந்துசே
ரும்படி உத்திரவு செய்தனுப்பினான். மகன் மிகுந்த
சந்தோஷத்தோடு பிரயாணப்பட்டுப் பற்பல தேசங்கட்
குச் சென்று ஆங்காங்குள்ள அதிசயங்களையும், ஆசா
ரங்களையும் சீர்திருத்த ஒழுங்குகளையுங் கண்டு களித்
துச் சிலவருடம்வரை சஞ்சரித்துக் கொண்டிருந்தான்.
இவ்வாறிருக்கும்போது ஒருநாள் தனது சொந்ததேசத்
தையும் தாய்தகப்பன்மாரையும் பார்க்கவேண்டுமென்
னும் விருப்பங்கொண்டு வீடுவந்துசேர்ந்து தன் தகப்ப
னிடத்தில் தான் போனவிடத்தில் கண்ட வேடிக்கை
விநோதங்களைச் சொல்லிக்கொண்டிருந்தான். அப்போ
து தகப்பன் பிள்ளையை நோக்கி "அப்பா குழந்தாய்?
நீ இவ்வளவுகாலமாக அனேக தேசங்களைச்சுற்றி ஆங்
காங்குள்ள விநோதங்களைக் கண்டுவந்தனை சரியே!
"செயற்கரிய யாவுளநட்பி னதுபோல் வினைக்கரிய யா
வுளகாப்பு" எனத் தெய்வப்புலமைத் திருவாக்கின்படி
நீ எத்தனைபேருடன் சிநேகித்தாய், அவர்கள் எப்பேர்க்
கொற்றவர்கள் அதை எனக்குச்சொல்லவேண்டும் என்று
கேட்டான். இவ்வாறுசேட்ட தகப்பனை நோக்கிச்சொல்
லுகின்றான்.

அப்பா! யான்மூவரைச்சிநேகித்திருக்கிறேன், அம்
மூவரில் ஒருவனை எனதுயிருக்கு மேற்பட்டவனாகவும்,
மற்றொருவனை எனக்குச்சமமாகவும், மூன்றாவனை ஒப்
பாரியாகவும், நினைத்திருக்கிறேன் என்றான். அதற்கரசன்
மைந்தனைநோக்கி அப்பா! எனது தவச்செல்வமே! அவர்
களுடைய குணாதிசயங்களைப் பகுத்தறிந்திருக்கிறாயா?
"இணக்கமறிந்திணங்கு" என்றும், "கூடிப்பிரியேல்"
என்றும், நமது ஔவைப்பிராட்டியாரும், "ஆய்ந்தாய்
ந்துகொள்ளாதான் கேண்மைகடைமுறை, தான்சாந்துய
ரந்தரும்." என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவரும்
சொல்லியிருப்பது தெரியுமல்லவா, சலதோஷங்கண்டு
சங்கடப்படும்பொழுது ஒருசிமிட்டா மூக்குப்பொடி
கொடுத்தவனெல்லாம்சிநேகனாவானா? காலத்தைப் போ
க்குநிமித்தம் வீண்கதைபேசிக்கொண்டும், வீண்டம்பங்
காட்டிக்கொண்டும் வேலையற்றுத்திரியும் வீணர்களோ
டே சிநேகிக்கலாமா? யோசியாது அப்படிப்பட்ட வீண்
கலசக்காரருடன் சிநேகித்தால் 'காகத்திற் கிடங்கொடுத்த
அன்னப் பறவைகள் நாசமடைந்ததுபோலாகுமே! ஆ
கையால் நீ யிவைகளெல்லாம் உன்னுடைய சிநேகித
ரை ஆராய்ந்திருக்கிறாயாவென்று கேட்டான்.

அதற்கவ்விளவல் ஐயா! ஒருவருடைய குணநிசயங்களைக் கண்டறிவது அசாத்தியமல்லவா, எனக்கெப்படியோ அம்மூவரிடத்தும் மனப்பிடிப்புண்டாயிற்று. ஆகையால் அம்மூவரைமாத்திரம் சினேகமாகக்கொண்டேன் என்றான். இவ்வாறுசொன்ன மைந்தனைநோக்கி அப்பாகுமாரகா? அவரவர்களுடையநன்மைதீமைகளைக் கண்டறியாது சினேகஞ் செய்யக்கூடாது. "குணனும் குடிமையும் குற்றமுங்குன்றா இனனும் அறிந்துயாக்க நட்பு" என்றதிருவள்ளுவநாயனார் வாக்கியத்தின்படி பரீக்ஷித்துச் சினேகிக்கவேண்டும். ஆகிலும் யோசியாது செய்துவிட்டாய் பெரிதல்ல, இப்போது நானொருதந்திரஞ்சொல்லுகிறேன் அவ்வாறுபரீக்ஷித்துப்பாரென்று சொல்லுகின்றான்,

குழந்தாய்! உயிர்நீத்த ஒருபசுக்கன்றை ஒருபையிலே போட்டு இறுக்கிக்கட்டி எடுத்துக்கொண்டு இருட்டினபிறகு அம்மூவரில் ஒருவனிடம்போய் அப்பா! நான் நமது காட்டிற்குச்சென்று வேட்டையாடும்போது ஒரு மானின்பேரில் அம்பை எய்தேன் அவ்வம்பு ஓர் செடிமறைவில் குந்தியிருந்த ஒரு மனிதன்மீது பட்டு அகஸ்மாத்தாய் இறந்துபோய்விட்டான். இந்த சங்கதி வெளிப்பட்டு நிஷ்பக்ஷபாதனான என் தகப்பன் கேள்விப்பட்டால் என்னைச் சிரச்சேதஞ் செய்துவிடுவானாகையால் என்னை இவ்வாபத்தினின்று காப்பாற்றவேண்டும் என்றுகேள். மற்ற விருவரையும் இவ்வாறே தனித்தனி கேட்பாயானால் ஒவ்வொருவனுடைய மனோபாவத்தைத் தெரிந்துகொண்டு பிறகு சினேகஞ்செய்யத்தக்கவனை அறிந்துகொள்ளலாம் என்றான்.

அவ்விளங்குமரன் "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" என்ற வாக்கியத்தின்படி அதற்கிசைந்து தனதுயிருக்குமேலாக எண்ணியிருந்த முதற்சினேகனிடத்திற்போய்த் தகப்பன் சொல்லியபடிச் சொன்னான். அதற்கவன் இவ்வரசகுமாரனைநோக்கி அப்பா! நீராஜகுமாரனாயிருந்தும்யோசனைசெய்யாமல் ஒருவனை உயிர்ச்சேதஞ் செய்துவிட்டபடியால் உன்னை சிரச்சேதஞ் செய்வது கிரமந்தான். உன்னைமாற்றிவைக்கநானுடன்படுவேனேயானால்நானும் அப்பாவத்திற் குடன்பட்டவனாகுவேன். நிஷ்காரணமாக இக்கொலைபாதகத்தைத் தேடிக்கொள்ள எனக்கென்னதலைவிதியோ. உன்னோடு சினேகஞ்செய்த தேமோசமாக இருக்கிறதே, ஏதோநீஅரசமைந்தனாயிருக்கிறாயே "கொற்றவனறித லுற்றிடத்துதவி" என்ற திருவாக்கின்படி உன்னைச்சினேகித்தேன். அப்படி யோசியாதுஉன்னோடுசினேகஞ்செய்ததற்குநான்குமுழமுள்ள ஓர் கறுப்புக்கம்பளந் தருகிறேன், அதைநெடுகே முக்காடிட்டுக் கொண்டுபோய்விடு என்றான். இதைக்கேட்டகோவிளங்குமரன் ஓஹோ இவனை நமதுயிரினுமேலாக எண்ணியிருந்தோமே இவன்இவ்வளவு அயோக்கியனென்று தெரியாமற்போயிற்றேயென்று சிந்தாகூலனாய் இரண்டாவனிடம்போய் முதற்சிநேகனிடத்திற் சொன்னபடி இவனிடத்திலுஞ்சொன்னான். அவன்தம்பி நான்தான் என்பதாக அரசகுமாரன் சொன்னவைகளில் ஒன்றேனுங் காதில்வாங்காமலே அடே போ ஈதென்ன சங்கடம். இந்த வம்புகளுக்கெல்லாம் நான் மனுஷியனல்ல, என்னை என்ன வீண்வேலைக்காரனென்று நினைத்தாயோ? ஆகிலும் எனக்கு நீ சினேகனென்கிற பாத்தியதை யொன்றிருக்கிறதல்லவா, அதற்காக வேண்டுமானால் உனக்கு அரசனால் சிரச்சேதஞ் செய்யும்படி உத்திரவாய் உன்னை கொலைக்களத்திற்குக் கொண்டுபோகும்பொழுது அதுவரையில் நானும் உனக்குத் தேறுதல்சொல்லிக்கொண்டு கூடவருகிறேன். மற்றப்படி என்னால் ஒன்றும் நடவாது என்று சொல்லிவிட்டான். இதனைக் கேட்ட இளவல் இவனைவிட முன்னவனே மேல், அவனாவது நான்குமுழக் கம்பளத்தைக் கொடுத்து முக்காடிட்டுக்கொண்டு போகச் சொன்னான். இவனோ கொலைக்களத்திற்கே வழிகாட்டுபவனா யிருக்கிறானே. இவனா நமதுயிருக்குச்சமதையான நேசன். இவ்வுலக விசித்திரம் இப்படியு மிருக்கிறதல்லவா வென்று நினைத்துக்கொண்டு, இவ்விருவருந்தா னிப்படியானார்களே மூன்றாவனுடைய லட்சணத்தையும் பாட்டோடு பாடாகப்போய் பார்த்துவிடுவோமென யோசித்து மூன்றாவது சிநேகனிருக்குமிடம்போய் அவனருகில் உட்கார்ந்தான். இவனை அவன்நோக்கி என்னதம்பி! முகம் என்னமோ ஒருமாதிரியாக வாட்டமடைந் திருக்கிறது; என்னவிசேஷம், இதுகாலமாக நீ ஒருபோதும் ஏக்கமடைந்திருந்ததில்லையே, என்னதான் நடந்தவிசேஷம்; என்னிடஞ்சொல்லலாகாதா, ஏன்யோசிக்கிறாய், ஒற்றுமையான சினேகனிடத்தில் சொல்லக்கூடாத இரகசியங்கூட ஒன்றுண்டா, நீ இவ்வாறிருப்பது எனக்கு மிகவும் வியாகூலமா யிருக்கிறது, விரைவிற் சொல்லென்றான். அதற்கு அரசச்செல்வன் அப்பா! "தோழனோடு மேழைமைப் பேசேல்" என்ற வாக்கியத்தின்படி நான்செய்த அக்கிரமத்தை உன்னுடன்சொல்ல எனக்கு நாவெழவில்லை, அச்சமாயிருக்கின்றது என்றான். அதற்கு அச்சினேகன் அட! சேபோ! என்ன முழுகிப்போய்விட்டது பயப்படாதே, நானிருக்கச்சே உனக்கென்னபயம், அஞ்சாது சொல் என்றான். அரசன்மகன் அண்ணா! நான் என்ன சொல்லப்போகிறேன்; இன்றையதினம் என்னுடையகிரகசாரம் போதாமல் அகஸ்மாத்தமாய் ஒருமனிதனை உயிர்வதை செய்துவிட்டேன். எனது தந்தையின் சுபாவம்



உனக்குத்தெரிந்த விஷயந்தானே, பிள்ளையென்றும் பார்க்கமாட்டாரே, என்னசெய்யப் போகிறேனென்று கண்ணீர்விட்டழுதான். அழவே, அப்பா! இதற்குத்தானா இவ்வளவுபயந்து சாகிறாய். இதற்காக நீ யஞ்சாதே, என்னுயிரிருக்கிறவரையில் உன் தலைமயிரில் ஒன்றாவது அசையாதென்றுநினை. உன்தலைபோகும்படி நேரிடுமானால் என்தலையைக்கொடுத்து உன்னை மீட்கமாட்டேனா; அப்படி அரசனொப்பாவிட்டால் உன்னோடு நானும்மடியமாட்டேனா. ஆபத்திலறியவேண்டும் அருமைநேசனையென்று சொல்லுகிறார்களல்லவா. இவ்வாபத்துக்காலத்தில் உதவாதசன்மம் இருந்தென்ன இறந்தென்ன. இதற்குத்தானா இப்படி நடுக்கமெடுத்துச்சாகிறாய். ஏதோ அந்தப்பையையெடு அதைத்தூரத்திற் கொண்டுபோய் மண்ணை ஆழமாகத்தோண்டி இரண்டாம் பேரறியாமல் புதைத்துவிட்டு வருகிறேன். நீ எதுக்கும் பயப்படவேண்டாம் என்று அவனுக்குத் தைரியஞ்சொல்லி அப்பையை கொல்லையில் தூக்கிக்கொண்டுபோய் ஆழமாகப் பள்ளந்தோண்டிப் புதைத்துப் பழயபடி மேலே மண்ணைத் தள்ளிவிட்டுவந்துவிட்டான். வந்தபிறகு இருவரும் சற்றுநேரம் சந்தோஷ சமாச்சாரங்களைப் பேசிக்கொண்டிருந்து இராஜகுமாரனை தெருக்கோடிவரையும் கொண்டுபோய் வழிவிட்டு வீடுபோய்ச் சேர்ந்தான்.

அரண்மனைக்குப்போகும் அரயன்மகன் எண்ணிக்கொண்டு போவதாவது. அடடா! நாம் இவனை ஒப்பாரியாக நினைத்திருந்தோமல்லவா, இவனைச் சோதிக்கப்போன விடத்தில் "உடுக்கையிழந்தவன் கைபோல வாங்கே, இடுக்கண் களைவதாநட்பு" என்னும்வாக்கியத்திற்கு ஒப்பானானே என்று சந்தோஷித்து "முகநகநட்பது நட்பன்றுநெஞ்சத் தகநகநட்பது நட்பு" என்பதையுணராமல் அந்தச்சண்டாளர்களைச் சினேகஞ் செய்திருந்தேனே "ஊதியமென்பதொருவற்குப்பேதையார், கேண்மை யொரீஇ விடல்" என்னும் வாக்கியத்திற் கிணங்க இனிமேலந்த மகாபாவிகளாகிய சிநேகத் துரோகிகளைக் கனவிலுங் கருதொணாது "கனவினுமின்னாது மன்னோ வினைவேறு, சொல்வேறுபட்டார் தொடர்பு" என்பது வேதவாக்கிய மல்லவா. என்று நினைத்துக்கொண்டுபோய் தன்தந்தையுடன் இங்ஙனம் நடந்தயாவற்றையுஞ்சொல்லி இனிது வாழ்ந்திருந்தான். ஆகையால் நாம் ஒருவருடன் சினேகிக்கவேண்டினால் அவனுடைய யோக்கியதையும், நடவடிக்கைகளையும், சீர்தூக்கிப்பார்த்துச்சினேகிக்கவேண்டும். ஒருக்கால்அவன் பேசுகிற படாடோபத்தினாலும், அவன் செய்யும் இந்திரசாலம் மகேந்திரசாலங்களினாலும் சினேகஞ்செய்துவிடுவோமானால் பிராணசங்கடமும், அவமானமும், பிறரால் பழிப்புவார்த்தை பேசும்படியாயும் உண்டாகுமென்பது கைகண்டபலனாகக் கண்டுங் கேட்டுமிருக்கிறோம். நண்பர்களே! பெருத்தஆலோசனைசெய்து ஒருவரோடு சினேகஞ் செய்யுங்கள்.

## தெய்வபக்தி.

உலகங்களிலுள்ள ஜீவன்களெல்லாவற்றிலும் மானுடன் சிறந்தவனென்பதை பலரும் ஒப்புக்கொள்ளத்தக்கவையல்லவா. ஆயினும் இன்னவேதுவினாலே மானுடன் உலகிலுள்ள எல்லாவற்றிலும்மேலானவனாகிறானென்பதை சாஸ்திரவிசாரணிகள் வெவ்வேறு அபிப்பிராயங்கொள்ளுகிறார்கள். எல்லா உயிர்களினும் மானுட னறிவுவிசேஷத்தினாலே மேலானவனாயிருக்கிறானென்பது சில சாஸ்திரிகளின் கொள்கையாயிருக்கின்றது. அச்சாஸ்திரிகள் அப்படிக்கொள்வது சரியல்லவென்று நாம்சொல்ல வரவில்லை. ஆயின் அதற்குச் சில ஆக்ஷேபனைகளுண்டென்று வேறுசில சாஸ்திரிகள் சொல்கின்றனர். ஆகையால் அவைகளையெடுத்துச் சிறிதுபகர்வாம்.

மனிதனுடைய சாமர்த்தியத்தில் சிறிதும்பெற்றிராத புழுக்கண்முதலிய செந்துக்கள் புசிப்புக்குவேண்டிய உணவுகளைச்சேகரித்து அவைகளை ஓரிடத்தில் சேர்த்துவைக்கும் பேறறிவின் விசேஷங்களை நாம் யோசித்துப்பார்க்கையில் எல்லா அவையவங்களும் பூரணமாயடையப்பெற்றுள்ள அறிவுக்கு ஓர் இருப்பிடமெனப் பிரசித்தப்பட்டிருக்கும் மானுடருடைய அறிவு அச்சிறிய பிராணிகளின் அறிவுக்கு எவ்வளவினது, என்று ஆச்சரியப்படக்கூடியதா யிருக்கின்றது. அவைகளின் ரூபத்தைப்பார்க்க அவைகளிடத்துத் தோன்றும் புத்திநுட்பத்தையும், முன்யோசனையையுங் கண்டு மானுடராகிய நம்மவருக்குச் சிறப்புற்றோங்கிய மதியூகிகளும் நாணமடையவேண்டியதல்லவா! இம்மாதிரியாகவே சிறுகுருவி, சிலந்தி, தேனீ முதலாகிய சிறுசெந்துக்கள் கூடுகட்டும்விசித்திரங்களையுங்கண்டு சிற்பசாஸ்திரமுணர்ந்த மகாபண்டிதர்களும் ஆச்சரியப்படவேண்டியதல்லவா. அத்திமுதல் எறும்பீறாயுள்ள உயிர்கள் செய்துவரும் அளவிறந்த விநோதங்கள் ஒருவித அறிவின்காரியமாயின், மானுடனே ஏனைய ஜீவன்களைக் காட்டினும் மேற்பட்டவனாக விருக்கின்றானென்று சாதிப்பது நியாயத்திற்கு நிற்கமாட்டாது.

அதுநிற்க, தெய்வபக்தி மானுடரிடத் துள்ளபடியாற்றான் அவர்கள் எல்லாவுயிர்களினும் மேன்மைப்

பட்டவராகின்றார் என்று வேறு சிலசாஸ்திரிகள் கூறுகின்றனர். மானுடராய்ப்பிறந்தவர்கள் ஒன்றுக்கொன்று எவ்வளவுஞ் சம்பந்தமில்லாத வெவ்வேறு தூரப்பிரதேசங்களில் வேறுவேறு நடையுடையவர்களாயிருப்பினும், அவர்கள் யாவரிடத்தும் தெய்வபக்தியொன்றையே பொதுவாக விளக்கிக்கொண்டு இருக்கின்றது. எப்படியெனில்,

பசுக்கள் உருவத்திலும் நிறத்திலும் ஒன்றுக்கொன்றொவ்வாதனவாயிருப்பினும் அவைகளெல்லாம் வெண்ணிறமான பாலைத்தருதலால் ஒன்றையொன்றொத்திருக்கின்றன. அதுபோல் இவ்வுலகத்தில் பலதேசங்களிற் பிறந்து வசிக்கும் பலஜாதியார் எல்லா அம்சங்களினும் ஒருவரையொருவர் ஒப்புசொல்லக் கூடாதவராயினும் ஏதோ ஒருவிதமான தெய்வபக்தியைக்கொண்டிருப்பதால் ஒருவரையொருவர் ஒத்திருக்கின்றார்கள். தெய்வபக்திக்குரிய மூர்த்தங்கள் அவ்வவர்களுடைய மனத்தின்கண் வேறுவேறுபட்டாலும் பக்திமாத்திரம் யாவரிடத்தும் ஒன்றாகவே பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. இதனால் தெய்வபக்தி மானுட மனோதத்துவ லட்சணமென்று விளங்குகிறது.

மற்றையஉயிர்வர்க்கங்களினின்றுமானுடரைப்பிரித்து மானுடனென்னுஞ் சொல்லுக்குப் பொருளுரைக்கவந்த சாஸ்திரியார் மானுடனென்றால் தெய்வபக்தியுள்ள ஓர்பிராணி என்று கூறியிருக்கின்றனர். மானுடவர்க்கத்தைச்சேர்ந்த சகலசாதியாரிடத்தும் தெய்வபக்தி பொதுவாய் விளங்கிக்கொண்டிருக்கின்றதென்பதை மாத்திரம் யாவருங்கொள்ளவேண்டியதாயிருக்கின்றது.

ஆகவே, அங்கிங்கெனாதபடியெங்கும்பிரகாசமாய் ஆனந்தபூர்த்தியாகி, அருணிறைந்து, நித்திய, நிர்மல, நிட்கள, நிராமயமாய் மனோவாக்குக்கெட்டாததாயுள்ள தனிமுதற்கடவுளை உலகத்துள்ள பலபல சாதியாரும் தத்தமக்குத் தோன்றியவாறு பலமூர்த்திகளாகப் பாவித்து வழிபட்டுவருகின்றார்கள். ஒவ்வொரு மதஸ்தரும் தாம்தாம் வழிபடும் மூர்த்தங்களின் லட்சணத்திற்குத் தக்கபடி அவ்வவருடைய குணங்களும் செய்கைகளும் மாறுபடுகின்றன. ஒவ்வொருமதஸ்தனும் தான்கொண்டிருக்கும் லட்சணங்களையெல்லாம் ஆரோபித்துத் தியானித்துவருகையில் தான்கொண்ட லட்சணங்கள்யாவும் அவனிடத்து நாளாவட்டத்தில் அமைகின்றன. ஆனதால் நாம் யாரை அதிகவிசுவாசத்துடன் புகழ்ந்து வருகின்றோமோ அப்படிப்பட்டவருடைய குணாதிசயங்கள் அடுத்ததுகாட்டும் பளிங்குபோல நம்மனத்தினிடத்து நாளாவட்டத்தில் பதிந்துவிடும்.

நாம் எண்ணியதெய்வத்தினிடத்து என்னென்ன குணவிசேஷங்கள் அமைந்திருப்பதாகநினைத்து நாமவரைத்தியானித்துக்கொண்டு வருகின்றோமோ அப்படிப்பட்ட குணவிசேஷமெல்லாம் நம்மிடத்துக் கூடியவரையில் அமையவேண்டுமென்னும் எண்ணங்கொண்டவர்களாக இருக்கின்றோம். கடவுளைநாம் சீவகாருணிய சொரூபரென்று நினைத்து அவரைத் தியானித்துவரும்போது நாமும் பிறவுயிர்களிடத்து காருணியமுடையவர்களாயிருக்கவேண்டுமென்கிற எண்ணம்நம்மனத்தில் உதிக்கின்றது. இவ்வாறே மற்றைய குணவிசேஷமும், பற்பலசாதியார் பற்பலவாக வழிபட்டுவரும் தெய்வங்களைப்பற்றியும், இவ்வழிபாட்டினால் அவ்வவர்க்குண்டாகும் குணாகுணங்களைப்பற்றியும் சற்று விசாரிப்பாம்.

ஓர்காலத்தில் சில உத்தரப்பிரதேச வாசிகளாகிய சில சாதியார் வழிபட்டுவந்த மூர்த்தங்கள் மகாகோரமானவை. ஜீவகாருண்யம் அணுவளவேனும் அமைந்திலாத அன்னியருடைய உதிரப்பிரவாகத்தில் மூழ்குவதே தமதுபிறப்பினாலாகிய பெரும்புண்ணியபலனென்றெண்ணி முடிவில் யுத்தத்தில்மரித்த சுத்தவீரர்களே மறுமையில் கடவுளாகின்றார்கள் என்னும் மதவைராக்கியத்தை அந்தச்சாதியார் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு உயிர்களைவதைத்து அவைகளையே வழிபட்டுவந்தபடியால் அத்தகையகுணங்கள் அவர்களிடத்தில் பதிந்தன. வேறு வியாதியாலிறந்தவனுக்கு முத்திகிடையாதென்பது அவர்களுடைய சித்தாந்தம். ஆகவே இப்படிப்பட்டவர்கள் குரோதம், கோபம், கொலை அருளின்மை இரக்கமின்மை தயையின்மை முதலிய துர்க்குணங்களையுடையவர்களாயிருந்தார்கள்.

பூர்வத்தில் சித்திரவேலைகளில் கைதேர்ந்து மகாபண்டிதர்களாகி எங்கும் பிரக்கியாதியடைந்தவர்களாகவிருந்தார்கள். அவர்கள் அச்சாஸ்திரத்தில் அவ்வளவு பாண்டித்தியமடைந்ததற்குக் காரணம் அவர்கள் வழிபட்டுவந்த கடவுளின் உண்மையேயாம். அவர்கள் பற்பல மிருகம், பட்சி முதலானவைகளையொத்த உருவங்களையே கடவுளாகப்பாவித்து அவற்றை மிகவும் அழகுடன் எழுதி அதனையே வழிபட்டுவந்தார்கள். அவர்கள் அவ்வுருவங்களையே கடவுளெனநம்பி பக்தியோடு வழிபட்டுவந்தபடியினாலேதான் சிற்பத்தொழிலில் அவ்வளவு சிறப்படைந்திருந்தார்கள்.

சிலசாதியார் மன்மதனை கடவுளாகவெண்ணி அவனையே வழிபாடுசெய்துகொண்டிருந்தமையால் அவர்கள் காமாந்தகாரத்தில் மூழ்கி நாளுக்குநாள் காமமதிகரித்து ஜீவகாருணியங்குறைந்து நாசமடைகின்றனர்.



இந்துதேசத்தில் காளி, தூர்க்கை, காட்டேரி, மதுரைவீரன் கறுப்பன் இப்படிப்பட்ட அனேகவிதமான மூர்த்தங்களை கடவுளெனமதித்து வழிபட்டுவருகின்றபடியால் அவர்கள் மகா கோபிகளாயும், கொலைகளவு முதலான பழிபாவங்களுக்கு அஞ்சாநெஞ்சுடையவர்களாகவும், மதுமாம்சபட்சணமுடையவர்களாகவும் இருப்பதை நாம் கண்டும் கேட்டும் இருக்கின்றோம். ஆகையால் எந்தெந்த மூர்த்தங்களை நாம் கடவுளாகக்கொண்டு தியானஞ்செய்துகொண்டு வருகின்றோமோ அந்தந்த மூர்த்தங்களின் குணமே நமதுமனதிலும் பதிந்து விடுகின்றது. ஆகையால்,

ஏ! பக்தசிரோமணிகளே! நாம் வழிபாடுசெய்துக்கொண்டுவருங் கடவுளின் மூர்த்தங்கள் நல்ல அழகோடுங் கூடினதாகவும், தம்மை வழிபடுவோருக்கு ஜீவகாருண்யம்முதலிய சத்குணங்களை யுண்டுபண்ணி நல்ல மார்க்கத்தில் சேர்க்கத்தக்கதாயு மிருத்தல்வேண்டும். மேலும், தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்னும் இவ்வெட்டுக்குணங்களும் கடவுளுக்குச் சிறந்தனவென்று பெரியோரால் நிரூபிக்கப்பட்டிருத்தலால் இவ்வெட்டினையுங்கொண்டிருக்கும் யாதொருகடவுளுண்டோ அக்கடவுளை

“அம்பலத்தே யாடுகின்றவாரமுதேயரசே யானந்தமாகடலே யறிவேயென்னன்பே, வும்பர்கட்கேயன்றியிந்த வுலகர்கட்குமருள்வானொளிர்கின்றவொளியே மெய்யுணர்ந்தோர்தம்முறவே, எம்பலத்தேவாகியெனக்கெழுமையுநற்றுணையா யென்றுளத்தேவிளங்குகின்ற வென்னிறையேயினது, செம்பதத்தேமலர்விளங்கக் கண்டுகொண்டேனெனது சிறுமையெலாந்தீர்ந்தேமெய்ச் செல்வமடைந்தேனே.”

“அறம்பழுக்குந் தருவேயென் குருவேயென்றனுயிருக் கொருதுணையே யரசேபூவை, நிறம்பழுக்க வழகொழுகும் வடிவக்குன்றே நெடுங்கடலுக் கணையளித்த நிலையேவெய்ய, மறம்பழுக்கு மிலங்கை யிராவணனைப் பண்டோர் வாளியினாற் பணிகொண்ட மணியேவாய்மைத், திறம்பழுக்குஞ் சீராம வள்ளலேநின் றிருவருளையன்றி மற்றோர்செயலிலேனே.”

என்று நாத்தழுதழுப்ப உடம்புசிலிர்ப்ப மயிர்க்குச்செறிய மனமொழிமெய்களால் மெய்யன்போடு வழிபடுவோமாயின் இம்மையில் நற்சுகமும், மறுமையில் மோக்ஷவின்பமும்அடைவோமென்பதற்கு வேறுசாக்ஷியும் வேண்டுமோ? நமது சமயாசாரியர்களும், ஆழ்வாராதியர்களும் கடவுளை வழிபட்டே ஒவ்வொருவரும் நற்கதியடைந்தார்களென்று சாஸ்திரமூலமாய் கண்டிருக்கின்றோம், ஆகையால் நாமுமவ்வாறே மெய்யன்போடு வழிபடுகடவுளைப்பணிந்து மோக்ஷசாம்பிராச்சியமடையமுயற்சிசெய்யவேண்டும். சுபம் சுபம்.

## விவேகத்தாலடையும்பலன்.

உலகத்திலே விவேகத்தைக்காட்டிலும் மேலான பொருள் ஒன்றுமேயில்லை. பொன் நவரத்தினங்கள் முதலிய விலையேறப்பெற்ற சகலவஸ்துக்களும் விவேகத்திற்குச்சமமாகா. விவேகமொன்றினாலேவிலங்கு, பறவைமுதலிய சகலஜீவராசிகளிலும் மானுடர் மேம்பாடுடையவர்களா விளங்குகின்றாரேயல்லது வேறொன்றினாலுமன்று. விவேகமில்லாவிட்டால் ஒருவன் மானுடதேகமெடுத்தும் இம்மைமறுமைகளிற் பெறவேண்டிய பிரயோசனங்களைஒருசிறிதும்அடையமாட்டான். விவேகத்தை மிகுதியாகக்கொண்டவனுக்குத் தேசங்களில் சொந்தமென்றும் அன்னியமென்றும் அவனுக்கில்லை. யாவும் சுதேசமே. நேயரென்றும் பகைவரென்றும் கருதான். தனது புத்திநுட்பத்தால் அவரவர்கட்குத் தக்கபடி நடந்துகொள்ளுவான். ஆகையால் அவனுக்கு எல்லோரும் சிநேகராகவே யிருப்பார்கள். இப்பேர்ப்பட்ட அறிவையுடையவனையே யாவரும் நட்புக்கொள்ள விரும்புவார்கள். அரசனும் அவனை யபேட்சித்து வேண்டியவற்றைச் சம்மானஞ்செய்வான்.

“அறிவுடையொருவனை அரசனும்விரும்பும்”

என்று பாண்டியராஜனுங் கூறியிருக்கின்றானல்லவா, எம்மாதிரியான ஆபத்துநேரினும் அறிவுடையோன் எவ்விதத்திலாவது தப்பித்துக்கொள்ளுவான். அவனைச்செயிப்பதற்கு ஒருவராலுமாகாது. அறிவினுட்பத்தால் ஒருவியாபாரி ஒருபூதத்தைவென்று பெரிதான பிரயோசனத்தையடைந்தான். எவ்வாறெனின்:—

ஒருபட்டணத்திலே தனபதியென்றொரு வணிகனிருந்தான். அவன் வாலாயமாக இராக்காலங்களில் வெளியூர்களுக்குப்போய் ஆங்காங்குள்ள பண்டங்களைத் தன்பட்டணத்திற்குக் கொண்டுவந்து விற்றுவருவான். இவ்வாறு சரக்குகளை இராக்காலங்களில் ஆயத்துறை மார்க்கமாகக் கொண்டுவந்தால் சுங்கங்கொடுக்கவேண்டுமென்றெண்ணி கள்ளவழியாகக்கொண்டுபோய் விற்றுச்சீவனஞ்செய்துகொண்டுவந்தான்.

இவ்வாறு அனேகநாள் நடந்துவருகையில் ஒருநாளிரவு வெளியூரிலிருந்து சரக்குகளை வாங்கிக்கொண்டு தன்வழக்கமாகிய கள்ளவழியை நோக்கி வருகையில், அம்மார்க்கத்திலுள்ள பெரியதோர் ஆலவிருக்ஷத்திலிருந்து பூதமொன்று கீழேயிறங்கி அவனைத் துரத்திக்கொண்டுவர அவன் அதைக்கண்டுபயந்து அதிவிரைவாகவோடியும் தலைமீதுள்ள பாரத்தாலும், பருத்ததேகமுடையவனாதலாலும் ஓடமாட்டாமல் மிக்க இளைப்படைந்துநின்று, ஒரு சமயோசிதயுக்தியினால் பயத்தைவிட்டு தைரியங்கொண்டு பின்னால் துரத்திக்கொண்டுவரும் பூதத்தை நோக்கிக் கலகலென்னநகைத்து நீயா! துரத்திவருகின்றாய்? ஐயோ! நான் தெரியாது கால்கள் நோக வீணே இவ்வளவுதூரம் ஓடிவந்தேனே? என்று மிகவும் அலட்சியமாகச் சொன்னான். இவ்வாறு சொல்லக்கேட்ட பூதம் திடுக்கிட்டு, இவன் நமக்கிரையாகக்கூடிய சாமானியமனிதன்; அப்படியிருக்க, நம்மிடத்தில் சிறிதும் அச்சமின்றி மிகவுமலட்சியமாகச் சிரித்துப் பேசுகின்றானே, இதை யறிவோமென்றெண்ணி அவனைநோக்கி அப்பா! நீ என்னை யாரெனவெண்ணி இவ்வளவு பரபரப்புடனோடிவந்தாய்! என்று கேட்க, அதற்கவன் சொல்லுகின்றான்,

உன்னை இப்பட்டணத்திலுள்ள ஆயக்காரனென்றெண்ணிப் பயந்தோடிவந்தேன். நீ துரத்திவருகின்றாயென்று தெரிந்தால் இவ்வளவு விரைந்து ஓடிவரமாட்டேனென்று மறுமொழி சொன்னான். அதற்கப்பூதம் ஆச்சரியமும் அச்சமுங்கொண்டு அவனைநோக்கி அவ்வாயக்காரன் என்னிலுமிக்க வல்லவனோ! வென்றது. வர்த்தகன் அடா அப்பா! அவனுடைய வல்லமைக்கும், கொடியசெய்கைகளுக்கும் அளவேது? அப்படிக்கில்லாவிட்டால் ஒருவருக்கும் அஞ்சாதயான் இவ்வளவு திகிலடைந்தோடுவேனோ! என்று கூறினான். அப்படியானால் அவனையெனக்குக் காட்டுவாயா! வென்று பூதம் கேட்க. நீயிப்படிவந்தால் அவனைக்காணுவது கூடாது. என்தலைமீதுள்ள சாமான்களை எனது வீட்டிலேசேர்த்துவிட்டு இந்தப்பையைக் கொண்டுவருவாயானால் உன்னைநான் இப்பையில்போட்டுக்கட்டித் தூக்கிக்கொண்டுபோகிறேன், அப்போது நீயவனுடைய வல்லமையையுங் கொடுமையையுங் காண்பாயென்றான். அதற்கப்பூதம் சம்மதித்து அவன்சொன்னபடி செய்துவந்தது. பின்பு அவ்வாணிபன் அப்பூதத்தை அப்பையிற்போட்டுக்கட்டி தலையில்தூக்கிக்கொண்டு ஆயத்துறைமார்க்கமாகப்போகையில், ஆயக்காரன்கண்டு நீயார்? உன்தலைமீதி லென்னவிருக்கிறது சொல்லென்று தடுத்தான். அதற்கத் தனபதி மறுமொழி யொன்றும் பகாது மௌனஞ்சாதித்துச் சென்றமையால் ஆயக்காரன் சினந்துவந்து தலைமீதிருந்த சுமையைக்கீழேதள்ளி பலதரம் உருட்டிக் காலாலுதைத்துக் கையிலிருந்த சர்க்கரைக்குத்தியென்னும் கூர்மையுள்ள ஆயுதத்தினால் பலவிடங்களிற் குத்திக்குத்திப்பார்த்து இதனுள் என்னசரக்கிருக்கின்றது! சொல்! என்றான். அதற்கவன் ஐயா! இதனுள் வெல்லமிருக்கிறதென்றான். அவ்வாயக்காரன் இவன்சொல்வது பொய்யோ மெய்யோவென்று கண்டறியுநிமித்தம் மறுபடியும் பலவிடங்களிலும் பலமாகக் குத்திக்குத்திப் பார்த்துக்கொண்டிருக்கையில் அவ்வர்த்தகன் அதற்குச்செலுத்தவேண்டிய சுங்கத்தைச் செலுத்திவிட்டு மூட்டையைத் தூக்கிக்கொண்டுபோய் அவிழ்த்து பூதத்தை வெளியேவிட, அது அவனைநோக்கி அப்பா! நீ சொல்லியயாவும் உண்மையே, அவன் என்னைக் கீழேதள்ளி உதைத்துக் குத்தினதினால் என்னுடல் முழுவதும் சல்லடைக்கண்கள்போலாயிற்று. அவனை நினைத்தாலும் எனதுள்ளம் நடுக்கமடைகின்றது. நீ தூக்கிக்கொண்டு வாராதிருப்பையாயின் நான் மாண்டுபோயே யிருப்பேன். நீசெய்தநன்றிக்கு நான் என்ன கைம்மாறு செய்யமாட்டுவேன்.

"காலத்தினாற்செய்தநன்றிசிறிதெனினும்
ஞாலத்தின்மாணப்பெரிது."

"தினைத்துணைநன்றிசெயினும்
பனைத்துணையாக்கொள்வர்பயன்றெரிவார்."

"எந்நன்றிகொன்றார்க்குமுய்வுண்டாமுய்வில்லை
செய்நன்றிகொன்றமகற்கு."

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவருங் கூறியிருக்கின்றாரே! ஆயினும் நீ எனக்குச்செய்த வுதவிக்குப் பிரதியுபகாரம் நான் ஏதாவதுசெய்தே தீரவேண்டுமாகையால், இந்நகரத் தரையன்மகளை நான்போய்ப் பிடித்துக்கொள்ளுகிறேன், எவ்வளவுசாமர்த்தியமுள்ள மந்திரவாதிகள் வந்தோட்டினபோதிலும் நான் போகமாட்டேன். நீவந்து ஆயக்காரன் வந்திருக்கிறேனென்று சொல்வாயானால் அட்சணமே விட்டோடிப்போய்விடுகிறேன். பிறகு நீ அரசனிடத்தில் உனக்குவேண்டிய பொருளைப் பெற்றுக்கொண்டுபோய் சுகமாக வாழ்ந்துகொண்டிருவென்று சொல்லிவிட்டுப்போய் அரசன் மகளைப் பிடித்துக்கொண்டது.

அரசன்கண்டு தேசதேசங்களிலுள்ள மந்திரவாதிகளை வரவழைத்து ஓட்டியும் அதுபோகாமையைக்கண்டு அரசன் மிகக்கவலையுடையவனாய் எந்த மந்திரவாதியாவது என்மகளைத்தொடர்ந்திருக்கும் பூதத்தைத் துரத்திவிடுவானாயின் அவனுக்கு அளவிறந்த பொருளும், தகுந்தசம்மானமுந் தருகிறேனென்று பறையறைவித்தான். இதைக்கேட்ட வர்த்தகன் அரசனிடஞ்சென்று நான் துறத்திவிடுகிறேனென்று உத்திரவுபெற்றுக்கொண்டு இராசபுத்திரியிருக்கும் கன்னிகாமாடத்திற்குச்சென்று ஏதோ மந்திரஞ்சொல்பவனைப்போல், கையிலே திருநீற்றை யெடுத்துக்கொண்டு கண்ணைமூடிக்கொண்டு ஏ! சாமுண்டி, பத்திரகாளி, துர்க்கி, வீரி, மதங்கி, மாதங்கி, பயிரவி, திரிசூலி, காளி, நீலி, என்று உச்சாடனம்பண்ணி, ஆயக்காரமந்திரவாதியென்று தெரியாதா! தெரிந்தும்போகாமலிருக்கின்றாயல்லவா! என்று அட்டகாசஞ்செய்தான். அப்பூதமானது ஆயக்காரனென்னுஞ் சொல் காதிற்பட்டவுடனே அரசன்மகளைவிட்டோடிப் போய்விட்டது. பூதம் போய்விட்டவுடனே அரசன் மகள் பழயபடியிருந்தனள். அதுகண்ட அரயன் அளவிறந்த மகிழ்ச்சியடைந்து முன்சொன்னபடி அனேக திரவியங்களையும், தகுமான சம்மானங்களையுங் கொடுத்தான். வர்த்தகன் இவைகளைப்பெற்றுக்கொண்டு தன் னிருப்பிடம்போய் சுகித்திருந்தான்.

பிறகு அப்பூதம் மற்றொருபட்டணத்திற்குப்போய் அதை யாண்டுவரும் அரசனுடையமகளைப் பிடித்துக்கொண்டது. அவ்வரசன் அனேக மந்திரவாதிகளைக்கொண்டு ஓட்டியும் போகாமல் இந்தவர்த்தகனைக் கண்டுபிடித்து அப்பூதத்தை யோட்டும்படி யுத்திரவுசெய்தான். அவன் உள்ளேபோய் முன்சொன்னமாதிரியாகச்சொன்னான். பூதம் நீயேனிங்குவந்தாயென்று கோபத்தோடுகேட்க, வர்த்தகன்சொல்லுகின்றான்; ஏ பூதமே! உன்னை ஆயக்காரன் தேடிக்கொண்டு வருகின்றான். அதை உனக்கறிவிக்கும்பொருட்டிங்கு வந்தேனென்று சொன்னான். இச்சொல்லைக் கேட்டவுடனே பூதம் அப்பா! நீ நல்லவுபகாரஞ் செய்தனை. நானோடிப்போய் விடுகிறேன் இனிமேல் நான் எங்குபோனபோதிலும் அங்கு நீ வாராதேஎன்று விட்டோடிப்போய் மற்றோர் அரசன்மகளைப்பிடித்துக்கொண்டது. வர்த்தகன் அரசனிடத்தில் மிகுந்ததிரவியங்களைப்பெற்றுக்கொண்டுதன் னிருப்பிடம்போய் சுகமாகவாழ்ந்துகொண்டிருந்தனன்.

இவ்வாறிருக்கும்போது அரசன் தன்மகளைப் பிடித்து வருத்தும் பூதத்தை அனேக மந்திரவாதிகளைக்கொண்டு ஓட்டியும் போகாமையால், அரசன் மனவருத்தமுற்றிருக்கையில், சுற்றுப்புறங்களிலுள்ள வூர்களில் தனஞ்சயனென்னும் வர்த்தகன் பூதம்ஓட்டுவதில் மிக்க வல்லமை யுடையவனென்று பிரசித்தப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்ட அரசன் தன்னை மிகவும் பிடித்தபடியால் மூன்றாமுறை பூதமிருக்கு மிடத்திற்குச்சென்று முன்போலவே ஆயக்காரனென்னும் பெயரை யுரைத்தனன். அப்பூதம் மகாஉக்கிராவேசத்துடன் இவனைக் கொல்லவந்தது. அவன் பூதம்வரும் உக்கிரத்தைக் கண்டு மிகுந்த சந்தோஷத்துடன் கைகொட்டிச்சிரித்து ஓய் பூதமே! உனக்கு நான் ஒரு சந்தோஷசமாசாரஞ் சொல்லவந்தேன் கேள்! என்று இரண்டுதுடையையும் தட்டிக்கொண்டு கொடிய துஷ்டனாகிய ஆயக்காரன் மாண்டுபோயினான். இந்தச் சுபசந்தோஷசமாசாரஞ் சொல்லவந்தேன் என்றான். இதைக்கேட்டபூதம் அதிக சந்தோஷத்தோடு அப்பாடா! நான்பிழைத்தேன் என்னைப்பிடித்தசனி இன்றோடே யொழிந்துவிட்டது. நீ இவ்வரசனிடத்தில் வேண்டியதிரவியம் பெற்றுக்கொண்டு சுகமாக வாழ்ந்துகொண்டிரு! வென்று சொல்லிற்று. அதற்கவ்வர்த்தகன் பூதத்தைநோக்கி யான் உன்னை ஒருவிஷயம் வேண்டிக்கொள்ளுகிறேன், அந்தப்படி நீ செய்யவேண்டுமென்று சொல்லுகிறான்:—

உன்னால் யான் அளவிறந்த திரவியத்தைச் சம்பாதித்துக்கொண்டு சீமானாயிருக்கின்றேன். யாதொரு குறைவுமில்லை. ஆயினும் நீ இந்தப் பிராந்தியங்களிலிருந்தால் எந்த ராஜஸ்திரீயையாவது பிடித்துக்கொள்வாய், அப்போது என்னை யழைப்பார்கள். நான் வருவதாக நேரிடும். அப்போது உனக்கு அதிககோபமுண்டாகும். அதனால்எனக்குமரணமுண்டாகும்ஆகையால், நீ இந்தத் தேசங்களைவிட்டு அனேகமாயிரம் யோசனைக்கப்பால் போய்விடுவாயானால் நீ எனக்கு இதுகாறும் செய்த வுதவியைவிட எனக்குயிர்ப்பிச்சையளித்ததாகவிருக்குமென்று உன்னை வேண்டிக்கொள்ளுகிறேனென்றான். அப்பூதம் அவ்வாறே யாகுகவெனப் பிரமாணமாகச்சொல்லிவிட்டோடிப்போய்விட்டது. பிறகு அவ்வர்த்தகன் தனது விவேகத்தினுட்பத்தால் கொடிதாகிய பூதத்தினின்று தப்பித்துக்கொண்டதோடு அதன் மூலமாகவே பெருஞ்செல்வத்தைச் சம்பாதித்துக் குபேரனைப்போல் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தான். ஆகையால், விவேகத்தினும் மேலானபொருளும், அதனாலாகாத காரியமும் மூவுலகங்களினுமிராது. ஆகையால் விவேகத்தை விருத்திசெய்ய ஒவ்வொருவரும் பெருமுயற்சிசெய்யவேண்டும்.

## நற்குணம்.

சேர்மனிதேசத்தை அரசாக்ஷி செய்துவந்த சக்கிரவர்த்தியானவர் ஒருகாலத்தில் அரண்மனையைவிட்டு பரிவாரத்தோடு வேட்டையாடச் சென்றனர். சென்றவிடத்தில் பலவிதமான மிருகசாதிகளைக்கண்டு சந்தோஷத்தோடு வேட்டையாடிக்கொண்டு போகும்போது எதிரிலே ஓர் மான்வரக்கண்டு அதைத்துரத்திக்கொண்

டு வெகுதூரம போனபடியால் கூடவந்த பரிசெனங்களெல்லாம் அரசன் பின்தொடர்ந்துபோக மாட்டாமல் பின்தங்கிவிட்டனர். அரசனோ நெடுந்தூரம் போனபடியால் பசியினாலும் தாகத்தினாலும் மிகவுங்களைத்து நீருள்ளவிடத்தைத் தேடிப்பார்த்தும் அகப்படாமையால் அரண்மனைக்குப்போகத் திரும்பிவருகையில் வழிதெரியாமல் திகைத்து அங்குமிங்கும் சுற்றிப்பார்த்துக் கொண்டிருக்கையில், ஆடுமேய்த்துக் கொண்டிருந்த ஓர் சிறுவன் காணப்பட்டான். சக்கிரவர்த்தி அச்சிறுவனை நோக்கி வினவுகின்றார்.

அரசன்:—தம்பி! சமீபத்தில் ஏதாவது ஊர்களாவது பட்டணங்களாவது இருக்கின்றதா? அதற்கு மார்க்கமெப்படி?

சிறுவன்:—ஐயா! இதற்கருகாமையிலோர் கிராமமிருக்கின்றது. அதற்குப்போகும்மார்க்கம் இதோபோகிற கால்வழிதான். ஆயினும் நடுவில் கற்களும், முட்களும் புதருகளும் மிகுதியும் இருக்கிறபடியால் வழிநடைக்குச் சுகமாயிராது, தங்களைபோன்றவாள் ஒருக்கால் மார்க்கந்தப்பிப் போகவுங்கூடும் என்றான்.

அரசன்:—பிள்ளாய்! எனக்கோமிகுந்த பசியாயும், தாகமாயும், இளைப்பாயும் இருக்கின்றது. என்னோடு வந்தவர்களெல்லாம் பின்தங்கிவிட்டனர். என்னூருக்குப் போய் விடலாமென்றாலோ வழிதென்படவில்லை. நீ இப்போது சொல்லிய கிராமத்தில் என்னைக்கொண்டு போய் விடுவாயானால் உனக்கேதாவது தக்கபடி சந்தோஷப் படுத்துகிறேன் என்றான்.

சிறுவன்:—ஐயா! என்ஆடுகளை விட்டுவரலாமா? அவ்வாடுகள் இக்காட்டில் வழிதப்பி நுழையுமானால் கோனாய்கொன்று தின்றுவிடும். அல்லது, கள்வராவது களவுசெய்து கொண்டுபோய் விடுவார்கள். இவ்வாறு போய்விடுமானால் பிறகு யானென்செய்வேன் என்றான்.

அரசன்:—இப்போதிங்குள்ள அனேகம் ஆடுகளில் ஒன்றிரண்டு போய்விட்டால் அதில் உனக்கென்ன நஷ்டம். மேலும் இவ்வாடுகள் உன்னுடையதல்லவே: இவ்வளவு பெரியமந்தை ஆடுகளில் இரண்டொன்று காணமற்போய் விடுமானால் உன் எசமானனுக்குத் தெரியப் போகின்றதா! அவ்வாறு போய்விட்டாலும் அவனுக்கு அது நஷ்டமாகுமா! இவ்வாடுகளை மேய்ப்பதற்சாக வருஷமொன்றுக்கு உனக்கென்ன கிடைக்கின்றதோ அதற்கதிகமாக உன்கஷ்டத்திற்குத் தக்கபடி பொருள்தருகிறேன். தடைசொல்லாமல் விரைவில்வா: என்றான்.

சிறுவன்:—ஐயா! தம்மைநோக்குங்கால் ஓர்பெரிய மனிதனைப்போல தோற்றுகின்றது. தாங்களிவ்வாறுரைப்பது தக்கதன்று யான் இவ்விடமிருந்து எவ்வளவும் அசையவேமாட்டேன். நாள்முழுவதும் இவ்வாடுகளை மேய்ப்பதற்காகவே எனக்குக் கூலிகொடுத்து என்னை நம்பி என்னிடம் ஒப்பித்திருக்கின்றார். நான் எத்தனை நாழிகைவரையில் வேலைசெய்வதாக ஒப்புக்கொண்டு கூலி பெறுகிறேனோ அந்தநாழிகைக்குள் அவ்வேலையை விடுத்து என்சொந்தவேலை செய்வேனாயில் எசமானனுக்கு யான் நம்பகத்துரோகியாக மாட்டேனா? என்றான்.

அரசன்:—ஆம். நீசொல்வதுசரிதான். இந்த ஆடுகளைநம்பி எனதிடம் விட்டுவிட்டு அதிவிரைவாக அடுத்த கிராமத்திற்குப்போய் ஒருபாத்திரத்திலே தண்ணீரெடுத்துக்கொண்டு, என்னை அவ்வூருக்கு அழைத்துக் கொண்டு போவதற்காக ஓராளையும் யழைத்துக்கொண்டுவா? என்றான்.

சிறுவன்:—நான் போகமாட்டேன். என தாடுகளுக்கு உமது குரற்சத்தந்தெரியாது. அவை அங்குமிங்கு மோடுமாயின் உம்மால் மடக்கவும்முடியாது. என்றான்.

சக்கிரவர்த்தி:—அடா! அதுவரையில் போதும் நிறுத்து. என்னடா! என்னைநீ அவ்வளவு நம்பமாட்டாயா! என்னைப்பார்த்தால் உன்கண்களுக்குக் கள்ளனைப் போல் காணப்படுகின்றதோ! என்றான்.

சிறுவன்:—ஐயா! கோபஞ்செய்யவேண்டாம். உங்களிடத்தில் எனக்குக் கிஞ்சித்தேனும் நம்பிக்கையில்லை. ஏனென்றால் என் எசமானனுக்கு என்னை நம்பகத்துரோகியாக்க முயலுகின்றமையால் உம்மை நம்பக்கூடவில்லை என்செய்வேன்? ஒருவேளை உமதுபேச்சை நம்பிப்போனபிறகு வேறே யாராவதுவந்து உம்மை வேறுவேலைக்கு ஏவுவார்களாயின் இவ்வாடுகளை விட்டுவிட்டுத்தானே போய்விடுவீர். ஆகையால் உம்மை நான் எவ்வளவும் நம்பவேமாட்டேன் என்றான்.

இவ்வாறு சொல்லிக்கொண்டுவந்த சிறுவன்வார்த்தையைக்கேட்ட அரசன் அச்சிறுவனுடைய மனவைராக்கியத்தையும், புத்திநுட்பத்தையும், எசமானனிடத்து வைத்திருக்கும் விசுவாசத்தையுங்கண்டு வெட்கமடைந்து சற்றுநேரம் ஒன்றும்பேசாமல் மௌனமாகவிருந்து சிறுவனைநோக்கிச் சொல்லுகின்றான்.

அப்பா! தம்பி! நீமகாபுத்திசாலி, யானுன்னை எக்காலத்து மறவேன். நீயிப்போ தெனக்குக்காட்டிய கால்வழியாக என்னால் கூடுமானவரையில் போய்பார்க்கிறேன், நீ இவ்விடத்திலேயே யிருவென்றுசொல்லி நடக்க ஆரம்பித்தார். அப்போதச்சிறுவன் அரசனைநோக்கி ஐயா! சற்றுநில்லும், என்று நிறுத்தித் தன்னிடத்துள்ள பலகாரவகைகளையெடுத்து ஐயா! இவைகளைப்புசித்துச் சற்றிளைப்பாறும், என்றுசொல்லி எடுத்துக்கொடுத்தான். அதைக்கண்ட அரசன் அவ்வுதவியற்ற சின்பண்டங்களைத்தான் தின்பது தனக்கு ஏற்றதல்லவாக விருப்பினும் அச்சிறுபையனுடைய மனத்திருப்திக்காக அவைகளை அதிகசந்தோஷத்தோடு வாங்கிப்புசித்துக் கொண்டிருக்கையில் அவருடைய பரிசனங்கள் தேடிக்கொண்டு அங்கேவந்துசேர்ந்தது. அரசனைக்கண்டு வந்தயாவரும் மிகுந்தபயபக்தியோடு அடிபணிந்து நின்றார்கள். இங்ஙனங்கண்ட சிறுவன் நடுக்கங்கொண்டு வியப்படைந்து இதுகாறும் நம்மோடு வசனித்துக்கொண்டிருந்தவர் நம்மையாளுஞ் சக்கிரவர்த்தியார் ஓ! ஓ! என்செய்தோம் என்று கைகட்டிவாய்புதைத்து மிகுந்த பயத்தோடு நின்றுக்கொண்டிருந்தான். உடனே சக்கிரவர்த்தி தன்னரண்மனைக்குச்சென்று அச்சிறுவனை வரவழைத்து, கல்விபயிற்றுவித்து, போதுமான பொருளுங்கொடுத்து அவன் குடும்பத்தார் யாவரையும் செல்வந்தர்களாக்கி விட்டான்.

பாருங்கள் அச்சிறுவனிடத்திருந்தஇடச்சித்தமும், விசுவாசமும், எசமானனிடத்துவைத்த அன்பும் மாறாதிருந்தபடியினாலல்லவா அவனைச் செல்வந்தனாக்கி மேலானநிலமைக்குக் கொண்டுவந்துவிட்டது. இவ்வாறு அமையப்பெறாதவர்கள் எவ்வகையினும் இச்சிறுவனைப்போலாகாமல் யாவராலும் நிந்திக்கப்பட்டு வறியவர்களாய் உண்ணச்சோற்றுக்கும், உடுக்கக் கந்தைக்கும் வருந்துவார்கள். ஆகையால், நாம் எவ்வளவு செல்வந்தர்களாக விருந்தபோதும் நற்குணமுடையவர்களாகவேயிருத்தல்வேண்டும்.

---

## அன்பு

(முன்தொடர்ச்சி.)

இதன்பிறகு சூரியோதயத்திற்குமுன்னே தம்முன் எதிர்ப்பட்ட பன்றிமுதலிய மிருகங்களைக்கொன்று, அவைகளை அம்பினால் கீறி தள்ளாதவைவற்றைத் தள்ளிவிட்டு கொழுமையாகிய தசைகளையெடுத்துக்கொண்டு, தீயையுண்டாக்கி அதில் அம்மாமிசங்களைப் பதமாகக் காய்ச்சி ருசிபார்த்து தொன்னையில் வைத்துக்கொண்டு கொம்புத்தேனைப் பிழிந்து கலந்து எடுத்துக்கொண்டு, திருப்பள்ளித்தாமத்தையும், திருமஞ்சனத்தையும்முன் போலவே எடுத்துக்கொண்டு திருக்காளத்திமலைமீது விரைவாகப்போய் முன்செய்ததுபோல் பூசைமுடித்து, உபசாரமாகிய மொழிகளைச் சொல்லி காளத்திநாதரைத் திருவமுதுசெய்வித்து மேன்மேல் ஓங்கிவளரும் அன்பின் முதிர்ச்சியினால் திருக்காளத்தியார் பக்கலில் நின்றுகொண்டு இரவில் நித்திரைசெய்யாமலும், பகலில் வேட்டையாடி வந்து பூசைசெய்வதுமாக இருந்தார். இவ்வாறிருக்க சிவகோசரியார் தினந்தோறும் வந்து திண்ணனார் செய்யும் பூசையைக் குறித்து மிக்க மனத்தளர்ச்சியடைந்து தீமையென அதைநீக்கி சைவாகம விதிப்படிப் பூசித்துவந்தார். இதுநிற்க, நம்வேடர்பெருமானை விட்டுப்பிரிந்த நாணனும்காடனும்போய் திண்ணனாரின் தந்தையாகிய நாகனிடத்தில் அவர் செய்கையைத் தெரிவிக்க அதைக்கேட்டு அந்நாகன் ஊணுறக்கத்தை யொழித்து தேவராட்டியை அழைத்துக்கொண்டு தம் புத்திரனிடத்து வந்து முன்னிருந்த எண்ணங்களெல்லாம் பேதித்திருக்கும் முறைமையினால் தங்கள் தெய்வத்தை முன்னிட்டுப் பார்க்கும் குறிகைவராமல் திண்ணனாரை விட்டுப் போயினர். மேற்சொல்லியவண்ணம் திண்ணனார் தாம் அறிந்த அளவிற் பூசித்துவர, சிவகோசரியார் சைவாகமவிதிப்படி அருச்சித்து எனது கடவுளே! இவ்வாறான அநுசிதஞ் செய்தவரை யான் காணேன். தேவரீர் கிருபையினால் அதைத் தவிர்த்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்துச் சென்றார். அன்று இரவு இம்முனிவர் கனவில் மின்னலையொத்த சிவந்த சடா மகுடத்தையுடைய காளத்திநாதர் எழுந்தருளி நீ வெறுத்துக்கொண்டசெய்கையைச் செய்தவனை நீ வேடுவனென்று நினைக்கவேண்டாம். அவனுடைய செய்கையை நாம் உரைக்கின்றோம். நீநன்றாகக் கேட்பாயாக "அத்திண்ணனுடைய உடம்புமுழுதும் நம்மிடத்துதித்த அன்பின் உருவேயென்றும், அவன் அறியும்படியான உணர்வெல்லாம் நம்மையறியும் உணர்வேயல்லாமற் பிறவுணர்வல்லவென்றும், ஆகையின் அவன் நம்மாட்டுச் செய்யுந் தொழில்களெல்லாம் குற்றமாயினும் மகன் தந்தையிடத்துச் செய்யுந் தொழில்போல நமக்கினிமையுடையனவென்றும் அவன் பூசைசெய்வதற்குமுன் நீ சாத்திய மலரை நீக்குவதற்காக என்மேல் வீழ்த்துஞ் செருப்படிவைப்பானது இளம்பருவத்தையுடைய முருகனது அடிவைப்பினும் சிறந்தது வென்றும், அபிடேகமாக அவன் வாயினின்று உமிழும் நீரானது உயர்ந்த புண்ணிய நதிகளாகிய கங்கை முதலிய தீர்த்தங்களினும் மேலானது வென்றும், எனக்குச் சாத்துந் திருப்பள்ளித் தாமமாக அவன் தலையிற் செருகிக்கொண்டுவரும் புஷ்பமானது பிரமாதிதேவர்களால் சாத்தப்படுங் கற்பகத்தரு முதலிய புஷ்பங்களினுஞ் சிறந்தது வென்றும், அவன் எனக்கு நிவேதனமாகத் தீயிற் பதப்படுத்தி வாயில்மென்று ருசிபார்த்த மாமிசமானது வேதவிதிப்படிச்செய்த யாகத்தில் உண்டான அவியுணவினும் மேற்பட்டதென்றும், என்முன்னிருந்து முகமலரும்படி மனம் நெகிழ்ந்து சொல்லுதலாகிய மொழிகளானவை வேதவாக்கியங்கள், தோத்திரங்கள், மந்திரங்கள்முதலிய எல்லாவற்றினும் மேம்பாடுடையனவென்

றும், அவனுடைய பத்திநிலைமையை நாளை அவ்விடத்தே ஒளித்திருந்தால் நீ அறிவாய், அதனால் உனக்கு உண்டாகும் மனவருத்தமானது நீங்கு" மென்றும் அருளிச்செய்து காளத்திநாதர் மறைந்தருளினர். பிறகு சிவகோசரியார் சொப்பனாவத்தை நீங்கி கண்விழித்து காளத்திநாதர் அருளிச்செய்ததை நினைந்து மனதில் மிக்க ஆச்சரியமடைந்து, தான் அநுசிதமாகக்கொண்ட குற்றத்தால் பயமடைந்து, விடியுமளவும் நித்திரைசெய்யாமல் விடிந்தவுடனே முன்போல திருமுகலியாற்றில் நீராடி, திருக்காளத்திமலையிலேறி சிவபிரானைப் பூசித்துப் பின்பாக ஒளித்திருந்தார்.

ஆறாம் நாள் காலை கரியமேகம்போன்ற திண்ணனார் வேட்டையாடி முன்போலவே மாமிசமாகிய திருவமுதும், திருமஞ்சனநீரும், சுவாமியின் திருமுடியின்மீது சாத்துதற்குரிய பூங்கொத்துகளும் தனித்தனி முறைப்படி யமைத்துக்கொண்டு கருணைவள்ளலாகிய காளத்திநாதருக்கு நிவேதனஞ்செய்யாது தாழ்த்தல்செய்தேனென்று சொல்லி வேகமாகச்செல்லுந் திண்ணனாருக்கு முன்னே இரத்தகுறியைக்காட்டும் பல அவசகுனங்கள்தோன்றவே அதனால் சிவபிரானுக்கு யாது துன்பம் நேரிட்டதோவென்று மனமிரங்கி வருங்கால் திருக்காளத்தியார் சிவகோசரியாருக்கு வேட்பிரானுடைய அன்பின்மிகுதியைக் காட்டும்பொருட்டுத் தம்முடைய திருக்கண்களொன்றில் உதிரம்பெருக இருந்தார். அதை அத்திண்ணனார் தூரத்தேகண்டு விரைவாக ஓடிவந்தார் அவ்வாறுவந்த திண்ணனார் காளத்தியாரது வலத்திருக்கண்ணில் உதிரம் பாய்வதைக்கண்டு மயங்கி தம்வாயில் திருமஞ்சனத்திற்காக கொண்டுவந்த நீரானது சிந்திப் போகவும் கையிலிருக்கின்ற மாமிசமும் வில்லும் சிதறி வீழவும் திருப்பள்ளித்தாமம் குடிமையினின்று நழுவி வீழவும் திண்ணனார் பூமியில் பதைபதைத்து வீழ்ந்து எழுந்து திருக்கண்ணினின்றுபெருகும் உதிரத்தைத் துடைக்க, அதனால் அவ்வுதிரம் நிற்காததைக் கண்டு பெருமூச்செறிந்து யார் இதைச் செய்தாரென்று திசைகளெங்கும் பார்த்து வில்லையும், அம்பையும் எடுத்துக்கொண்டு எனக்குப் பகைவராயிருக்கும் வேடர்கள் இதைச் செய்தனரோ? அல்லது விலங்கின்சாதிகளோவென்று நெடுந்தூரம்போய்க் காணாதவராய் திரும்பி காளத்தியப்பரிடம் வந்து மிக்க துயரத்தோடு அவர் திருவடியையுந் திருமேனியையுங் கட்டிக்கொண்டு

"பாவியேன் கண்டவண்ணம் பரமனார்க்கடுத்ததென்னே, ஆவியி னினியவெங்க ளத்தனார்க் கடுத்ததென்னே, மேவினர் பிரியமாட்டா விமலனார்க் கடுத்ததென்னே, ஆவதொன் றறிகிலேனா னென்செய்கேன்."

என்று, கண்ணீர்சோரக் கதறி அழுது என்ன செய்தாற்றீருமோ! எமது காளத்திநாதரிடத்துத் தீங்கினைச்செய்தவர்களை யான் கண்டிலேன். ஆகையின் புண்களைத் தீர்த்தற்கு ஏதுவான மூலிகைகள் தெரிந்துகொண்டு வருவேனென்று பலமூலிகைகளையுங் கொண்டுவந்து பிசைந்து வார்த்தார். இவர் பிழிந்துவார்த்ததினால் புண்ணீர் குறையாமல் பெருகக்கண்டு ஊனுக்கு ஊனே மருந்தெனத் தீர்மானித்துத் தன் வலக்கண்ணை அம்பாற்றோண்டி எடுத்து காளத்திநாதரது திருக்கண்ணில் அப்பினார். அதன்காரணமாக உதிரம் நின்றதைக் கண்டு பூமியினின்று மேலேகிளம்பி தோள்களைத் தட்டிக்கூத்தாடினார். தான்செய்த யுக்தியானது நன்றாக விருந்ததென்று பெருமகிழ்ச்சியினால் பைத்தியம் பிடித்தவர்போல் ஆடினார். இதுசமயம் சிவபிரான் அவர் அன்பின் பெருமையைச் சிவகோசரியாருக்கு இன்னுங் காட்டுநிமித்தம் இடக்கண்ணிலும் இரத்தமானது பெருகச் செய்தார். அதைத் திண்ணனார் பார்த்து யான் அஞ்சேன்! மருந்து கைகண்டேன்! அதாவது எனக்கு இன்னொருகண் உண்டு அதை இடந்து அப்புவேனென்று,

"கண்ணுதல் கண்ணிற்றங்க ணிடந்தப்பிற் காணு நேர்பா, டென்னுவார் தம்பிரான்றன் றிருக்கண்ணி விடக்காலூன்றி, உண்ணிறை விருப்பினோடு மொரு தனிப் பகழிகொண்டு, திண்ணனார் கண்ணிலூன்ற."

தேவதேவர் தரியாது திண்ணனார் கையைப்பிடித்துக்கொண்டு தனது அமுதவாக்கினால் மூன்றுதரமாக "நில்லுகண்ணப்ப, நில்லுகண்ணப்ப, என்னன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப" என்று சொல்லியருளி ஏ! கண்ணப்ப! என்னுடைய வலப்பக்கத்தில் என்றும் நீங்காது நிற்கக்கடவையென்று சொல்லி சாமீபபதவி தந்தருளினார்.

ஆகையால் கண்ணப்பநாயனாரைப்போலவே யாமும் மெய்ம்மொழிமனத்தராய் கடவுளிடத் தன்புபாராட்டுவோமாயின் மோக்ஷபதவிகிடைத்து சுகமடைவோமென்பதற்குச் சந்தேகமுமுண்டோ.

பன்மாலைத்திரளிருக்கத்தமையுணர்ந்தோர்
பாமாலைக்கேநீதான்பக்ஷமென்று
நன்மாலையாவெடுத்துச்சொன்னார்நல்லோர்
நலமறிந்துகல்லாதநானுஞ்சொன்னேன்
சொன்மாலைமாலையாக்கண்ணீர்சோரத்
தொண்டனேனெந்நாளுந்துதித்துநிற்பே
னென்மாலையறிந்திங்கேவாவாவென்றே
யெனைக்கலப்பாய்திருக்கருணையெம்பிரானே.

---

ஓம்.

பரப்பிரம்மணேநம:.

"ஏகம் சத்விப்ரா பஹுதா வதந்தி."

# இகபரசுகசாதனி.

வாலியம் I. } 1904௵ மார்ச்சு, ஏப்ரல்௴ {புத்தகம் XI, XII.

## மனனமாலை.

மாரனெடுத்து வளைக்குமொரு கரும்பையொடித்து மலர்சிதறி, நாரியடுத்த வளிமாலை குலயத்துரந்து நயந்தோடி, வீரமனத்து வினைப்பாகர் குறிப்பினொழுகி விளையாடு, மீரமதிச்செஞ் சடைக்களிநல் யானையிணைத்தாளேத்துவாம்.

---

விந்துமோகினி மானெனவிரிந்து
தத்துவக்காட்டிற் றனித்திடுமுயிரை
ஆணவவேங்கை யொருபாலடர்ப்ப
மாயைக்குடாவடி யொருபான்மயக்கக்
காமியக்கடமா வொருபாற்கறுவ
விருவினைமலைப்பாம் பொருபாலிழுக்க
ஆசையாமண்ணை யொருபாலறையக்
குலமெனுமலி யொருசார்குரைப்பக்
கல்விக்காளியா னொருசார்கவரச்
சமயச்சூறை யொருசார்தாக்க
அவாவெனும்படுதீ யறிவைக்கொளுவ
மாயாவாத வனசரர்வெருட்ட
வின்னணமாவி யிடருறுங்காலை
உயிரிடையொளிபுக் கிருந்தவொருவரத்
தாயினுஞ்சாலத் தயாநிதியிரங்கிக்
கட்கடைவாளாற் காடறமாற்றலு
முட்கினயாவு முயிர்பிழைத்தன்றே.

---

மூலமாயெவைக்கு மறியொணாவுருவாய் மும்மலங்களைந்தவர்க்கெளிதாய், ஆலபோசனஞ்செய் தழிவிலாதவனா யருமறைச் சிரத்தொளிர்பவனாய், பாலலோசனனாய்ப் பசுதொறும்பதியாய்ப் பக்குவச்சனகனாதியர்க்காய், ஆலமர்நீழ லமர்ந்துரைபவனை யகத்தவிசிருத்தி யின்படைவாம்.

---

அண்டமெலாம் வலம்புரிந்தா னறுமுகவன் கரிமுகவ னறிவாலாயந்திட், டெண்டிசைக்குஞ் சிவனிறைவன் சிவனையல்லா துலகுயிரு மில்லையென்றே, மண்டியவன் பாலெழுந்து வலம்புரிந்தான் மகிழ்ந்திறைமாங் கனியளித்தான், கண்டவிரு வகையாலுங் கன்மபல ஞானபலங் காணலாமே.

---

ஈசனாய்ப்பரம தத்துவனாகி யீறிடை முதலிலனாகி, யேசறுமணியா யெவைக்குமாதார மாகியேதனக்கவையிலையாய்ப், பாசமோசகனா யநாதிமுத்தனுமாய்ப் பகருஞானானந்தக் கடலா, யாசையாற்காண்போர்க் கற்புதவடிவா மம்பிகாபதியினைப் பணிவாம்.

---

வாழ்வனைத்துமயக்கமெனத்தேர்ந்தேன்றேர்ந்த
வாறேனாப்பாலோர்வழிபாராமற்
றாழ்வுபெற்றிங்கிருந்தேனீதென்னமாயந்
தடையுற்றான்மேற்கதியுந்தடையதாமே
யூழ்வலியோவல்லதுன்றன்றிருக்கூத்தோவிங்
கொருதமியேன்மேற்குறையோவுணர்த்தாயின்னம்
பாழவதிப்படவெனக்குமுடியாதெல்லாம்
படைத்தளித்துத்துடைக்கவல்லபரிசினனே.

---

எந்நாளுனக்கடிமையானநாளோ
வெந்நாளோகதிவருநாளெளியனேன்றன்
சிந்தைநாளதுவரைக்குமயங்கிற்றல்லாற்
றெளிந்ததுண்டோமௌனியாய்த்தெளியவோர்சொற்
றந்தாண்முதலின்பக்கால்சற்றல்லாற்
றடையறவானந்தவெள்ளந்தானேபொங்கி
வந்தநாளில்லைமெத்தவலைந்தேனுன்னை
மறவாவின்பத்தாலேவாழ்கின்றேனே.

---

அண்டமுமாய்ப் பிண்டமுமா யளவிலாத வாருயிருக் கோருயிரா யமர்ந்தாயானாற், கண்டவரார் கேட்டவரா ருன்னாலுன்னைக் காண்பதல்லா லென்னறிவாற் காணப்போமோ, வண்டுளப மணிமார்பன் புதல்வனோடு மனைவியொடுங் குடியிருந்து வணங்கிப்போற்றும், புண்டரிகபுரத்தினினாதாந்த மோனபோதாந்த நடம்புரியும் புனிதவாழ்வே.

---

எத்தனைபிறப்போ வெத்தனையிறப்போ வெளியனேற்கிதுவரையமைத்த, தத்தனையெல்லா மறிந்தநீயறிவை யறிவிலியறிகிலே னந்தோ, சித்தமும்வாக்குந் தேகமுநினவே சென்மமுமினியெனா லாற்ற, வைத்திடிங்கென்னை நின்னடிக்குடியா மறைமுடியிருந்த வான்பொருளே.

கடலமுதேதேனேயென்கண்ணேகவலைப்
படமுடியாதென்னைமுகம்பாராய்பராபரமே.

தேடுந்திரவியமும்சேர்ந்தமணிப்பெட்டகமும்
கூடவருந்துணையோகூறாய்பராபரமே.

ஆழ்ந்தாயேயிவ்வுலகிலல்லலெல்லாந்தீர்ந்தருளால்
வாழ்ந்தாயேயென்றனைநீவாழிபராபரமே.

தாராவருளையெல்லாந்தந்தனையுநின்னருளில்
வாராயோவென்றனைநீவாழிபராபரமே.

பூராயமாய்மனதைப்போக்கவறியாமலையோ
யாராயலைந்தேனரசேபராபரமே.

மின்னனையபொய்யுடலைமெய்யென் றுநம்பியையோ
நின்னைமறக்கைநெறியோபராபரமே.

ஞாலத்தைமெய்யெனவேநம்பிநானுமென்றன்
காலத்தைப்போக்கியென்னகண்டேன்பராபரமே.

பொய்யுலகவாழ்க்கைப்புலைச்சேரிவாதனைநின்
மெய்யருளின்மூழ்கில்விடுங்காண்பராபரமே.

கொல்லாவிரதமொன்றுகொண்டவரேநல்லோர்மற்
றல்லாதார்யாரோவறியேன்பராபரமே.

தேடினேன்றிக்கனைத்துந்தெண்டனிட்டேன்சிந்தை
வாடினேனென்மயக்கமாற்றாய்பராபரமே. [நைந்து

கல்லெறியப்பாசிகலைந்துநன்னீர்காணுநல்லோர்
சொல்லுணரின்ஞானம்வந்துதோன்றும்பராபரமே.

மூர்த்திதலந்தீர்த்தமுறையாய்த்தொடங்கினர்க்கு
வார்த்தைசொலசற்குருவும்வாய்க்கும்பராபரமே.

---

ஞாலமெலாம்படைத்தவனை படைத்தமுக்கணுயகனே வடிவேற்கைநாதனே, கோலமிலாக்கொடியேனற் குணமொன்றில்லேன் குற்றமேவிழைத்தேனீக்கோதுனோனே, சாலமெலாஞ்செயுமடவார்மையல்நீக்கிச் சன்மார்க்கமடையவருள்தயவாய்ஞானச், சீலமெலாமுடையவருட்குருவாயென்னைச் சிறுகாலையாட்கொண்டதேவதேவே.

---

கோடையிலேயிளைப்பாற்றிக்கொள்ளும்வகைகிடைத்த
குளிர்தருவேதருநிழலேநிழற்கனிந்தகனியே
ஓடையிலேயூருகின்றதீஞ்சுவைத்தண்ணீரே
யுகந்ததண்ணீரிடைமலர்ந்தசுகந்தமணமலரே
மேடையிலேவீசுகின்றமெல்லியபூங்காற்றே
மென்காற்றில்விளைசுகமேசுகத்திலுறும்பயனே
ஆடையிலேஎனைமணந்தமணவாளாபொதுவில்
ஆடுகின்றவரசேஎன்னலங்கலணிந்தருளே.

---

மனமிளைத்துவாடியபோதென்னெதிரேகிடைத்து
வாட்டமெலாந்தவிர்த்தெனக்குவாழ்வளித்தநிதியே
சினமுகத்தார்தமைக்கண்டுதிகைத்தபொழுதவரை
சிரித்தமுகத்தவராக்கியெனைக்களித்தசிவமே
அனமுகத்தானரிமுதலோர்துருவிநிற்கவெனக்கே
அடிமுடிகள்காட்டுவித்தேயடிமைகொண்டபதியே
இனமெனப்பேரன்பர்தொழபொதுநடஞ்செய்யரசே
என்னுடையசொன்மாலையாவுமணிந்தருளே.

---

அகங்காரமெனும்பொல்லாஅடவாதிப்பயலே
அடுக்கடுக்காயெடுக்கின்றாயடுத்துமுடுக்கின்றாய்
செகங்காணத்தலைகாலுந்தெரியாமலலைந்து
திரிகின்றாய்நின்செபந்தான்சிறிதுநடவாது
இகங்காணவடங்குகநீயடங்காயேகணத்தே
யிருந்தவிடந்தெரியாதேயெரிந்திடச்செய்திடுவேன்
சுகங்காணவென்றனைநீயறியாயோநான்றான்
சுத்தசிவசன்மார்க்கம்பெற்றபிள்ளைநானே.

---

மாயையெனும்படுதிருட்டுச்சிறுக்கியிதுகேணீன்
மாயையெலாஞ்சுமைசுமையாவரிந்துகட்டிக்கொண்டு
சாயையெனும்பெண்ணினத்தார்தலைமேலுமுனது [ன்
தலைமேலுஞ்சுமந்துகொண்டோர்சந்துவழிபார்த்தே
பேயெனக்காட்டிடையோடிபிழைத்திடுநீயிலையேல்
பேசுமுன்னேமாய்த்திடுவேன்பின்னுமுன்னும்பாரேன்
ஆயெனைநீயறியாயோவெல்லாஞ்செய்வல்லார்
அருளமுதுண்டருணிலைமேலமர்ந்தபிள்ளைநானே.

---

பெருமாயையென்னுமொருபெண்பிள்ளைநீதான்
பெற்றவுடம்பிதுசாகாச்சுத்தவுடம்பாக்கி
ஒருஞானத்திருவமுதுண்டோங்குகின்றேனினிநின்
னுபகரிப்போரணுத்துணையுமுளத்திடைநான்விரும்பே
அருளாயஜோதியெனக்குபகரிக்கின்றதுநீ [ன்
யறியாயோயென்னளவிலமைகவயலமர்க
தெருளாயவுலகிடையென்சரிதமுணர்ந்திலையோ
சிற்சபையென்னப்பனுக்குச்சிறந்தபிள்ளைநானே.

---

உருவெளியேயுருவெளிக்குள்ளூற்றவெளியுருவே
உருநடுவும்வெளிநடுவுமொன்றானவொன்றே
பெருவெளியேபெருவெளியிற்பெருஞ்சோதிமயமே
பெருஞ்சோதிமயநடுவேபிறங்குதனிப்பொருளே
மருவொழியாமலரகத்தேவயங்குமௌனமணியே
மந்திரமேதந்திரமேமதிப்பரியாமருந்தே
திருவொழியாதோங்குமணிமன்றிநடத்தரசே
சிறுமொழியென்றிகழாதேசேர்த்துமகிழ்ந்தருளே.

---



தூக்கமெனுங்கடைப்பயலேசோம்பேறியிதுகேள்
துணிந்துனதுசுற்றமொடுசொல்லுமரைக்கணத்தே
தாக்குபெருங்காட்டகத்தேயேகுகநீயிருந்தால்
தப்பாதுன்றலைபோகுஞ்சத்தியமீதறிவாய்
ஏக்கமெல்லாந்தவிர்த்துவிட்டேனூக்கமெல்லாம்பெற் [றேன்
இன்பமுறுகின்றேனீயென்னையடையாதே
போக்கில்விரைந்தோடுகநீபொற்சபைசிற்சபைவாழ்
பூரணற்கின்கன்பாம்பேருளென்பவறிந்தே.

---

கோபமெனும்புலைப்பயலேகாமவலைப்பயலே
கொடுமேகக்கடைப்பயலேகுறும்புமதப்பயலே
தாபவுலோபப்பயலேமார்ச்சரியப்பயலே
தயவுடனிங்கிசைக்கின்றேன்றாழ்ந்திருக்காதிர்கான
தீபமெலாங்கடந்திருள்சேர்நிலஞ்சாரப்போவீர்
சிறிதுபொழுதிருந்தாலுந்தின்னைமிங்கேயழிவீர்
சாபமுறாமுன்னமறிந்தோடுமினோவென்னைத்
தானறியீர்தனித்தலைவன்றலைப்பிள்ளைநானே.

---

பருவமிலாக்குறையாலோபகுதிவகையாலோ
பழககமிலாமையினாலேபடிற்றுவினையாலோ
இருவகைமாயையினாலோவாணவத்தினாலோ
வென்னாலோபிறராலோவெதனாலோவறியேன்
சருவலொழிந்தென்மனமாம்பாங்கிபகையானாள்
தனித்தபரையெனும்வளர்த்ததாயுமுகம்பாராள்
திருவமடப்பெண்களெலாம்வலதுகொழிக்கின்றார்
நிபுணரெங்கணடராஜர்நினைவையறிந்திலனே.

---

அஞ்சலென்ற கரதலமுங் கணபணகங் கணமுமரைக்கிசைந்த புலியுடைய மம்புலிச்செஞ் சடையும், கஞ்சமலர்ச் சேவடியுங் கழல்கழலுஞ் சிலம்பும் கருணைபொழி திருமுகமுங் கண்களொரு மூன்றும், நஞ்சையுண்ட மணிமிடறு முந்நூலு மார்பும் நலந்திகழ்வெண்ணீற்றொளியு மறிமானு மழுவும், பஞ்சடிச்சிற் றிடையுமையா ளொப்பனைபா கமுமாய்ப் பால்வண்ண ருளத்திருக்கப் பயமுண்டோ வெமக்கே.

---

யாக்கையெனும் புழுக்குரம்பை யணைந்தணையாப் பொருளை யருளொளியைப் பராபரத்துக் கப்புறமா மறிவை, நீக்கமற மயிர்முனைக்கு மிடமறவெங் கெங்கு நிறைந்துநின்ற முழுமுதலை நினைவிலெழுஞ் சுடரைப், பாக்கியங்கள் செய்தனந்தந் தவக்குறை கண்முடிக்கும் பழவடியார் தமக்குதவும் பசுந்துணர்க்கற்பகத்தை, வாக்குமன விகற்பத்தா லளவுபடா வொன்றை மாசற்ற வெறுவெளியை மனவெளியி லடைப்பாம்.

---

## சித்தாந்தசாரம்.

(முன்தொடர்ச்சி.)

ஆணவமலம் மாயாகாரியமெனின் மாயாகாரியம் ஆகந்துகமாதலின் ஆகாது. மாயையெனின் மாயைதன் காரியத்தினாலே மலத்தினை நீக்கி ஆன்மாவினுடைய ஞானத்தினை விளக்குதலின் அதுவுமன்று. மாயை தன் காரியத்தால் விளக்கினாலும் காரணபேதத்தால் மறையாதோவெனின், காரியத்திலில்லது காரணத்தினுமில்லை. அக்கினிகாரியமான தீபத்தினாலும்விளக்கிக் காரணமான தன்னாலும் விளக்குதலின். ஆயின் மாயை காரணரூபத்தால் விளக்குமோவெனின், அப்படிவிளக்காது. ஆன்மாக்களை விஷயங்களிலே மோகிப்பிக்கும் ஆணவமலம்போல முழுதுமறையாது. ஆகலான் ஆணவம் இருளும், மாயைவிளக்குபோலு மெனக்கொள்க. இனி ஆணவம் ஞானுபாவமெனின், அபாவமொரு திரவியமல்லாதபடியினாலே மறைக்குந்தொழிலைச் செய்யமாட்டாது. கடத்தினுடைய அபாவம் சலக்கிரகணம்பண்ணமாட்டாமைபோல. ஆதலான் ஞானுபாவமுமன்று. ஞானத்தினுடைய பிராகபாவமெனின் பிராகபாவ மனாதியான ஞானத்தான்முடிவு. ஆதலான் முடிவுள்ளதற்குத் தோற்றமுண்டு; உண்டாகவே தோன்றியழியுமாதலான் அதுவுமன்று. அந்யதாஞானமெனின் ஒன்றைக் கருதுதலே யந்யதா ஞானமாதலின் அம் மாருட்டமோ ரேதுவின்றிவாராது. சுத்தி வெள்ளியாகத் தோன்றும்போது கண்ணின் குற்றத்தாலன்றித் தோன்றுத வாறுபோலவாதலின் இதுவுமன்று. இனி ஆன்மாவின் குணமெனின் சித்தான ஆன்மாவின்குணம் ஞானமன்றிச் சடமாயிராது. தீயின்குணம் வெம்மையன்றிச் சீதமாகாவாறுபோலவாதலால் அதுவுமன்று. இந்த மூலமலம் சகலரென்னப்பட்ட வான்மாக்களுக்குக்கருவி கூடியசகலாவத்தையிலே அராகமுதலிய கருவிகளிலே யாவேசித்து மோகம், மதம், அராகம், விஷாதம், சோஷம், வைசித்திரியம், அரிஷமென்னும் ஏழுவிதங்களையுஞ் செய்விக்கும். இவற்றுள் மோகமாவது அதிபாதகமுதலிய பஞ்சபாதகங்களை ஆசிரியரா லுணர்ந்திருப்பினும் அவ் வுணர்ச்சிகள் சிறிதும் விளங்காதபடி யிழப்பித்து அவற்றை நன்றென்று செய்விப்பது. மதமாவது தான் மோகித்துப் புணர்ந்த வரைவின்மகளிரை அருவருக்காமற்பார்த்து இவள் திவ்வியமாதென்றும், இவளின் அரியபேறெனக்கில்லை யென்று மதிப்பிப்பது. விஷாதமாவது ஒருவன் வாஞ்சித்துப் புணர்ந்த மகளிரைப் பிரிந்தபோது மிகவும் வருந்தியழும்படி மனோதுக்கஞ் செய்விப்பது. அராகமாவது ஆசிரியனாலே தருமநூல்களைக்கேளாதா னொருவனுக்குச் சிவத்திரவிய முதலியவற்றை வவ்வுதற்கு வாஞ்சையைச் செய்விப்பது. சோ

ஷமாவது அந்த மனோதுக்கத்தாலே யுடம்புவருந்தும்படி ஆகாரத்திலே கருத்தின்றிச்செய்விப்பது. வைசித்திரியமாவது, நமக்குப்பரமசிவ னொருவிதமான விருவினைப்பயனையுந் தெய்வீகமுதலிய மூவகையாலே தருவனென்று முணர்வையிழப்பித்து இவனென்னைத் தாழ்வித்தான் வாழ்வித்தான், யானிவனைத் தாழ்வித்தேன் வாழ்வித்தேன் என்பிப்பது. அரிஷமாவது, மனைமுதலிய வளங்களைக்கண்டு களித்து எமக்கு இனியென்ன குறையென்பிக்கை. இவ்வாணவம் ஆன்மாக்களை அணுத்தன்மைப்படுத்தி நிற்கையால் ஆணவமெனப் பெயராயிற்று.

முதல்வனுடைய சத்தியாகிய வருளாலே மகாமாயையிலேநின்று நாததத்துவந்தோன்றும், நாதத்திலே விந்துசத்திதோன்றும், விந்துவிலே சதாசிவதேவர் தோன்றுவர், இவரில் மகேச்சுரர்தோன்றுவர், இவர் உருத்திரதேவரைக் கருத்தாவாகவுடைய சுத்தவித்தையை யுண்டாக்குவர். இங்ஙனந்தோன்றிய முறையிலே நாதம், விந்து, சதாசிவர், ஈசுரர், உருத்திரர் என்னு மைவருஞ் சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தையென்னு மைந்து தத்துவங்களினும் நிலைபெறுவார்கள். முன்னஞ்சொன்ன விந்துவிலே சூக்குமைமுதலிய வாக்கு நான்குமுதிக்கும். ஞானசத்தி யதிட்டானத்தினாலே சிவதத்துவமும், கிரியாசத்தி யதிட்டானத்தினாலே சத்திதத்துவமும் இவையிரண்டுஞ் சமமாக வதிட்டித்தபோது சதாசிவதத்துவமும், ஞானங்குறைந்து கிரியை யதிகமாக வதிட்டித்தபோது ஈசுரதத்துவமும், கிரியை குறைந்து ஞானமதிகமாக வதிட்டித்தபோது சுத்தவித்தியா தத்துவமும் தோன்றும். இனி ஞானசத்தி யதிட்டானத்தினாலே குடிலையினின்றும் அபரநாதமும், கிரியாசத்தி யதிட்டானத்தாலே அபரவிந்துவுந் தோன்றும். சிவஞ் சத்தி நாதவிந்துவாகிய நான்கும் முதல்வனுக்கு நிட்களமான திருமேனியென்றும் இலயத்தானமென்றுஞ் சொல்லப்படும். சதாசிவதத்துவம் சகளநிட்களமான திருமேனியென்றும் போகத்தானமென்றுஞ் சொல்லப்படும். இச் சதாசிவ தத்துவத்திலே அட்சரசொரூபமாய்ச் சகளமாயிருக்கிற அபரநாதமும் அபரவிந்துவும் அனுசதாசிவர்களுடன் அடங்கும். ஈசுரமுதலிய நான்கும் சகளமான திருமேனியுமாய் அதிகாரத்தானமுமாய் இருக்கும். முன்சொன்ன விந்துவிலே ஐம்பத்தோரட்சரமும், சத்தகோடி மகாமந்திரங்களும், இருபத்தெட்டுத் திவ்வியாகமங்களும், நாலுவேதமுந் தோன்றும், ஈசுர தத்துவத்திலே அட்டவித்தியேசுரரும், சுத்தவித்தையிலே சத்தகோடிமகா மந்திரங்களும் சத்தரூபமான வெண்பத்தொருபத மந்திரங்களும் ஆகமங்களும் வேதங்களுமடங்கும். இனி முதல்வன் நிட்களமும், நிட்களசகளமும், சகளமுமாக மூவிதமான திருமேனிகொண்டபோது, பராசத்தியாகிய முதல்வியும் மூவகைப்படும். எங்ஙனமெனின்? சிவமு நாதமுமாக நிட்களமானபோது சத்தியும் விந்துவுமாக நிட்களையாயிருக்கும். முதல்வன் சதாசிவமாக நிட்கள சகளமாயிருந்தபோது மனோன்மணியாக நிட்கள சகளையாயிருக்கும். முதல்வன் ஈசன், உருத்திரன், மால், அயனாகச் சகளனானபோது மகேசை, உமை, திரு, வாணியாகச் சகளையாயிருக்கும்.

இனிக்கலைகள் ஐந்தில் நிவர்த்தியாவது தன்னிடத்திலேபொருந்தின ஆன்மாக்களுடைய சங்கற்பத்தை விடுவிக்கையால் நிவிர்த்தியென்று பெயராயிற்று. பிரதிட்டையாவது தன்னைப்பொருந்தின ஆன்மாக்களுக்குச் சங்கற்பவிடுதியை நிலைபெறுவிக்கையாற் பிரதிட்டையாயிற்று. வித்தையாவது அந்தச்சங்கற்பவிடுதியினிலைபெற்றால் ஆன்மாக்கட்கு அனைத்தறிவையும் விளக்குதலால் வித்தியாகலையாயிற்று. சாந்திகலையாவது அந்த ஞானத்தாலே ஆன்மாக்கள் இராகத்துவேஷமின்றியிருந்தபடியாலே விகற்பஞானஞ் சாந்தமானமென்கிற நினைவுங்கழன்று பரமாகாசரூபமாய் நிற்கையால் அதீதகலையாயிற்று. இந்தக்கலைகளும், தத்துவமும், புவனமும், அர்த்தரூபமும் வாக்குநான்கும் அட்சரங்களும், பதங்களும், மந்திரங்களும் வேதங்களும் சத்தரூபமாயிருக்கும். ஆகலின் மகாமாயை சத்தார்த்தரூபமாக விரண்டுவடிவாயிருக்கும் படங்குடிலானாற்போலும்.

அசுத்தமாயையானது தனுகரண புவனபோக மென்னு நாலுவிதமாய் அவை தாமொன்றையொன்றேவ்வாத முறைமையினையுடையதாய், அழியாததாய், ஒரு முதலேயாய், எக்காலமுந்தோன்றுதறாகி கன்மந்தொலையுமளவும் ஆன்மாக்க ளெல்லாவற்றிற்கும் விஷயங்களிலே யறிவைமயக்குவதாய் சடமாய், சலனமற்றதாய், தோன்றிப்பார்த்த தன்னுடைய காரியமான தத்துவம் முப்பத்தொன்றினும் வியர்த்தத்தையுடைத்தாய், சகலமுந்தோன்றின கூற்றிலேநின்று அடைவிலேபொருந்தி, அந்தத்தத்துவங்கள் ஒடுங்கவருகிற சங்காரகாலத்திலே அவ்வுயிர்நிலைகளெல்லாம் அங்குராதிவித்திடத்தடங்குமாறுபோலப் பொருந்துதற்கிடமாய் ஆன்மாக்கள் உள்ளபடிகாணாமல் பொய்யை மெய்யென்று காண்மயக்குமலமாய், முதல்வனனுக்கிரகத்தா னிலைபெறும்.

மாயையெதற்கென்னில்,— அது பிரபஞ்சத்திற்குத் தாரகமாகும். அங்ஙனந் தாரகமாக மாயையென வொன்றுவேண்டுமோ முதல்வனிடத்திலே பிரபஞ்சம் சிலந்தியிடத்திலே நூல்தோன்றி யொடுங்கினாற்போல்வும்,



கடலிற்றிரைதோன்றி யொடுங்கினாற்போலவும், வானிடத்து மின்னுமிடியுந்தோன்றி யொடுங்கினாற்போலவும் தோன்றியொடுங்குமாதலால் முதல்வனல்லது உபாதானமில்லையெனின், அசித்தான பிரபஞ்சம் சித்தாகிய முதல்வனிடத்துத் தோன்றா பொன்னிற்களிம்புதோன்றாமையின். மாயை நிலைபெற்றுள்ளதாயின் முதல்வனெற்றுக்கெனின், மாயை சடமாகையால் தானேதனுவாதிகளாய்ப் பொருந்தமாட்டாது. அந்த முதல்வனும் மாயையைக்கொண்டன்றி ஒன்றையுண்டாக்கமாட்டான். ஆனால் முதல்வன் சத்தியினனென்னில் அந்தமாயையும் அவனைப்போல அநாதியேயாதலிற் புதிதாகவொன்றையுண்டாக்கிக்கொள்ளவேண்டுவதில்லை. முதல்வன் அம்மாயை விரியப்பண்ணி யெவற்றையு முண்டாக்குவன். ஆதலாலே கர்த்தவ்வியத்தை மாயை கொடுத்ததென்று சொல்லப்படாது.

முதல்வனே படைப்பானாயின் இங்ஙனம் படைக்கப்பட்ட பிரபஞ்சத்தினை ஒருபடியாகப்படையாமற் பறவைமுதலியனவாகப் படைக்கவேண்டிய தென்னெனின், ஆன்மாக்கள் முன்செய்த கன்மத்துக்கீடாக வாகும். கன்மமுண்டாயின் முதல்வனெற்றுக்கெனின், அக்கன்மஞ்சடம், முதல்வன் அந்தவுடம்புகளைப் படைத்தது, முன்னரார்ச்சித்த கன்மபலங்களைப் புசிக்கும் ஆன்மாக்கள் பொருட்டாகும். முன்னார்ச்சித்த கன்மபலத்தை ஒருடம்பிலே நின்றனுபவிப்பது ஆன்மாவாயின் ஆன்மாத்தானே புண்ணியபாவங்களின் முறைமைக்கிடான உடம்பைப் பொருந்துமென்னின், சடமான மாயாகாரியத்தின் றிரட்சியும் முதல்வனாய்த் தானே அறிகைக்கோ ரறிவுமில்லாத முறைமையினையுடைய வான்மாவும் பொருந்துதற்குப் பிரமாணமில்லை.

முதல்வன் ஆன்மாக்களுக்குத் துன்பமிகவுண்டாக இவ்வுடல்களைக் கூட்டியது வினைப்பயன்களைப் புசித்தற்காகவோ அங்ஙனமாகுக. கன்மமோ மாயையோ ஆன்மாவினை முற்பட்டுப் பொருந்தியதெனின், ஆன்மாவென்றுண்டு அன்றே ஆணவமலமுமுண்டு. (ஆனால் மாயையும் கன்மமும் பின்புளவானவோவெனில்) ஆணவமலமுண்டாகவே மாயையும் கன்மமும் நெல்லினிடத்துண்டான தவிடுமுமியும் அந்நெல்லிற்கு அநாதிசம்பந்தமானாற்போல அநாதியாம்.

அசுத்தமாயையினிடத்திலே அனந்ததேவராலே கலை, காலம், நியதி, வித்தை, அராகம் உண்டாம். உருத்திரதேவருளாலே கலையிலே மூலப்பிரகிருதிதோன்றி அதினின்றுங் குணங்கடோன்றும். இக்குணத்தின் சமமும் ஏற்றக்குறைச்சலும் சித்தமும் புத்தியுமாம். புத்தியினி லகங்காரமுதிக்கும். இந்த ஆங்காரமானது தைசதவகங்காரமும், வைகாரியகங்காரமும், பூதாதியகங்காரமுமென மூவிதமாம். தைசதவகங்காரத்திலே சாத்துவிகமும், மனமும், ஞானேந்திரியமைந்துந் தோன்றும். வைகாரியகங்காரத்திலே இராசதகுணத்தினைப்பொருந்தின கன்மேந்திரியங்களான வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தமைந்துந்தோன்றும். பூதாதி யகங்காரமானது தாமதகுணமிக்க சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தமென்னுந் தன்மாத்திரைகளுண்டாம். அச் சத்தமுதலிய தன்மாத்திரையில் வான், அனிலம், அனல், புனல், மண், ஆகாயமுதலிய வைம்பூதங்களும் முறையேதோன்றும். பூதத்திலே சத்தமூன்றாய குணங்களைந்தும் ஆகாயமுதலியவற்றில் ஒவ்வொருகுண மென்மேலும் பொருந்தும். அப்பூதங்கட்குத் தெய்வங்கள் சதாசிவமுதலாக வைவர்பொருந்துவர். இனித் தத்துவங்களொடுங்குமுறைமையும்தோன்றினமுறைமையேயாம்.

சன்மமலமானது ஆன்மாக்கள் பொருந்தப்படுமுடம்பிற்கு ஓர்காரணமாய் நானாவிதமான போகங்களையுடையதாய், நாசத்தையும் உற்பத்தியையும் பீசாங்குரநியாயமாக உண்டாக்கிவரும். ஆகையினாலே தொன்றுதொட்டுவருவதாய், பலவிதப்படுவதாம். சிருட்டிகாலத்து உடலெடுக்குமிடத்துச் சூக்குமமாய் ஆன்மாக்கடோறுஞ் செல்வதாய், மனவாக்குக் காயங்களாலுண்டாக்கத்தக்க முறைமையுடையதாய், திதிகாலத்தில் ஆன்மாக்களுக்குச் சீவிதமாகப் புத்தியை அடைந்திருப்பதாய் சுவர்க்கநரகங்களுண்டாதற்குக் காரணமான புண்ணியபாவங்களாய், ஒடுங்குங்காலத்தில் மாயையிலேயொன்றுபட்டுப்பொருந்தும்.

மணவழகன்னல்.

(இன்னும்வரும்.)

## அவமதித்தலினால் வருந்திமை.

உலகத்தில் பிறர் நம்மை நன்கு மதிக்கவேண்டுமென்னும் விருப்பமுடையவர்கள் அவர்கள் முந்திமதிக்கவேண்டிய தாவசியகம். இரகசியத்தை யறியாது அனேகர் பிறரைப் பலபேருடைய முன்பாவது, அல்லது, தனித்தாவது உல்லங்கனஞ்செய்து அதனால் பெருமையடையலாமென்று மதிமயக்கங்கொள்ளுகிறார்கள். பெருமையும் சிறுமையும் தான் பிறருக்குத்தர, அவை முறையே தனக்குவரும்யென்று பொருள்பட, மகாகவியாகி அதிவீரராமபாண்டிய மகாராசன் தன்னால் செய்யப்பட்ட நறுந்தொகை யென்னும் நீதிநூலில்

"பெருமையுஞ் சிறுமையுந் தான்றரவருமே" எனக் கூறியிருக்கின்றார். இதற்குச்சில திருஷ்டாந்திரங்களை யெடுத்துக்காட்டுகின்றேம்:—

புத்திசாதுரியமுள்ள ஒரெளியவன் ஒரு நியாயாதிபதி முன்னிலையில் சாட்சிகூறவந்தனன். அவனுடைய கல்வித்திறத்தையும் புத்திநுட்பத்தையுங் கண்டு அந்த நியாயாதிபதி பொறாமைகொண்டு அவனினும் தன்னை அதிக கல்விமானென்றும் புத்திமானென்றும் அந்த நியாயஸ்தலத்திலுள்ளார் நன்கு மதிக்கவேண்டுமென்றெண்ணி அந்த சாட்சிக்காரனைப்பார்த்து, ஓய்! நீ நடந்த விருத்தாந்தத்தைச் சரியாகச் சொல்லவில்லை. நீ திருடனென்பதை உன்முகம் நன்றாகக் காட்டுகின்றது என்றான். இப்படி வரம்புகடந்துபேசிய நியாயாதிபதியைப் பார்த்து அச் சாக்ஷிக்காரன் ஐயா! என்னுடைய முகங் கண்ணாடியான்றினுற்றான் காண்கின்றீர்? என்றான். இதைக்கேட்டு நியாயாதிபதி பெருத்த அவமானமடைந்தான்.

மற்றொரு கட்சிக்காரன் நியாயஸ்தலத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது அவனுடைய எதிரியின் நியாயவாதி அவனைப்பார்த்து நீயேன் நாய்போல் குலைக்கின்றாய்! என்றான். அதற்கு அக்கட்சிக்காரன் 'ஐயா! திருடனைக்கண்டநாய் குலையாதிருக்குமா? என்றான். இதைக்கேட்ட நியாயாதிபதி அங்குள்ளார் பலரும் நகைக்க அவமான மடைந்தனன்.

ஒரு அரசன் தன் மகனையும் ஒரு விகடகவியையும் அழைத்துக்கொண்டு வேட்டைக்குப்போனான். வழியில் பெருமழை பெய்ததினால் அரசனும் அவன் புதல்வனும் நனைந்து ஈரமாய்ப்போன தமதுடைகளைக் கழற்றி மூட்டையாகக்கட்டி விகடகவிதலைமீது வைத்துச் சுமந்துவரும்படிக் கட்டளையிட்டார்கள். அவன் ராசவிசுவாசத்தோடு அம்மூட்டையைச் சுமந்துகொண்டு போகும்போது அரசனும் அவனுடையகுமாரனும் விகடகவி ஒருகழுதைபாரம் சுமந்துகொண்டு போகிறானென்று பரிகாசமாகப் பேசிக்கொண்டார்கள். இதைக்கேட்ட விகடகவி அவர்களைத் திரும்பிப்பார்த்து ஒருகழுதை பாரந்தானா? இரண்டுகழுதை பாரம் சுமக்கின்றேனே என்றான். இதைக்கேட்ட அவ்விருவரும் ஐயோ நாம் அவனைக் கழுதையாக்கப்போய் அவன் நம்மிருவரையுங் கழுதைகளாக்கிவிட்டானே என்று துக்கித்தார்கள்.

ஒரு அரசன் தன்னுடைய சபாமண்டபத்திலே கொலுவீற்றிருக்கையில் அத்தேசத்திலிருந்து ஒரு சிறந்த வித்துவான் தன்னுடைய பாண்டித்தியத்தை அரசனுக்குத் தெரிவித்துப் பரிசுபெறலாமெனக்கருதி அவ்வரசன்முன்வந்து நின்றான். அவனைக்கண்ட அரசன் தன் முகத்தைப்போல் அந்த வித்துவானுடையமுகமிருப்பதைப் பார்த்து, ஓய்! உன்தாயார் இந்த ஊர்வழியாக எப்போதாவது வந்திருப்பாளா? என்று வினவினான். அதற்கந்த வித்துவான் மகாப்பிரபோ! என் தாயார் இந்தவூர்வழியாய் எப்போதும் வந்ததில்லையென்றும், என் தகப்பனார்மாத்திரம் தேசாந்திர யாத்திரை செய்துகொண்டு வரும்போது இந்த நகரத்திலேயே சில காலம் வசித்திருந்தாரென்றும், எனக்குக் கேள்வி என்றான். இதைக்கேட்ட அரசன் சபையார் முன்னிலையில் மிக்க அவமானமடைந்தனன். ஆனதால்,

கல்வியில்லாவது, செல்வத்திலாவது, அதிகாரத்திலாவது, குலத்திலாவது தான் சிறந்தவனென்று கருதி பிறரை உலலங்கனமாகப் பேசினால் அவன் பெருத்த அவமானமடைவானென்பது சத்தியம்.

"யாகாவாராயினுநாகாக்ககாவாக்காற்
சோகாப்பர்சொல்லிழுக்குப்பட்டு"

என்று நாயனாரும் சொல்லியிருத்தலால் நாம் ஒருவரையும் அவமதித்தலாகாது.

"வைகறைதுயிலெழு"

என்று நமது பெருமூதாட்டியாராகிய ஔவைப்பிராட்டியார் கூறியுள்ள சிறுவாக்கியத்தைச் சற்று கவனிப்பாம்:—

காலையில் அருணோதயத்துக்குமுன் நித்திரைவிட்டெழுந்திருப்பது தேகசுகாதாரத்துக்கேற்றதென்று சாஸ்திரம் முறையிடுகின்றது. ஒருநாளெல்லாம் மனம் பலவாறாக வுழன்று; பின் பிரவில் அயர்ந்து நித்திரை செய்து மனதுக்குவேண்டிய ஆசோதை தந்த பிறகு அதிகாலையி லெழுந்திருப்போரின் மனம் மிகவும் தெளிவை யடைந்திருக்கும். இராத்திரியில் தூங்குவதற்கு முன் இரண்டுமூன்றுமணிநேரம் கஷ்டப்பட்டு வாசித்தாலும் வாராதபாடம் காலையிலெழுந்து வாசித்தால் அரைமணிநேரத்திற்கெல்லாம் மனதில் நன்றாய்ப் படிந்துவிடுவதை ஒவ்வொரு வித்தியார்த்திகளும் அனுபவசித்தமாகக் காணலாம், ஆகையால், மனம் அக்காலத்தில் தெளிவடைந் திருக்கிறதென்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை. வேறுயார் படிப்பில் நாட்டமுடைய வித்தியார்த்திகளான பாலியர்களுக்கு அதிகாலையிலெழுந்திருப்பது எப்படி மகா உசிதமோ, அதுபோலவே நடுவயதுள்ளவர்களும், வயோதிகர்களும் அதிகாலையிலெழுந்திருக்கும் வழக்கத்தை அனுபவத்திற்குக் கொண்டுவருவார்களானால் அது அவர்களுக்குப் பெருத்த நன்மையைப் பயக்கும். அது அவர்களுடைய தேகாரோக்கியத்



தை அபிவிருத்தி செய்யத்தக்கதேயன்றி ஆயுளையும் விருத்திசெய்யக்கூடியது. காலை ஐந்துமணிக்குமேற்பட்டு உறங்குகிற ஒவ்வொருவனையும பிணியாளனென்றே சொல்லவேண்டும். தேவதாராதனை, ஈசுரபக்தி முதலியவற்றிற்கு மனம் மிகவும் தெளிவடைந்து நின்மலமாயிருக்கத்தக்க உஷத்காலமே மகாஉசிதம். இவ்விஷயத்தை அனேகயுகங்களுக்குமுன்னரே நமது பூர்விக இந்துக்கள் நன்றாயறிந்திருக்கின்றனர். திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை முதலிய பிரபந்தங்களை ஈசுர சந்நிதானத்தில் ஓதுவதென்னும் உஷத்கால தேவதாராதனை ஏற்பாடே இதற்குச் சாக்ஷியாகத்தக்கது. பிரதமத்தில் அதிகாலையில் படுக்கையைவிட்டெழுந்திருப்பதைவிட கஷ்டமானவை வேறொன்றுமிரா. அயர்ந்து தூங்கிக்கொண்டிருப்பவனை நாம் எழுப்பும்போது அவனுக்குப் பெருத்தகோபமுண்டாவது இயல்பேயானாலும், இரண்டொருநாட்களுக்கு உஷத்காலத்தி லெழுந்திருக்கப் பழகிக்கொண்டால் பிறகு அதனா லுண்டாகும் சுகத்தை அனுபவத்தாலன்றி பிறருக்கு வாயினாற்சொல்லவொண்ணாததாயிருக்கும்.

முக்கியமாய் நமது இந்துதேசத்தைப்போன்ற உஷ்ணப் பிரதேசங்களில் அதிகாலையில் எழுந்திருந்து நாற்புறமுமுள்ள விருக்ஷவர்க்கங்களின் பசுமையையும், புள்ளினங்களின் இனிய ஓசைகளையும், குளம், ஏரி, நதி, சமுத்திரம் முதலிய இடங்களில் பிரதிபலிக்கும் அருணோதயப் பொலிவையும் காண்பதனாலுண்டாகும் சுகமேசுகம்.

அந்தணர்கள் ஆதியில் இவ் விந்தியாதேசத்திலே வேதாகம புராணாதி இதிகாசங்களை ஓதி மனனஞ்செய்ய வேண்டி யிருந்தபடியால் அதற்காக அவர்களுக்கு ஞாபகசக்தி அதிகரிக்கவேண்டிய அவசியமிருந்தது. அதை யடையும்பொருட்டு அவர்கள் செய்த காரியம் யாது? காலையிலெழுந்திருந்து கங்காஸ்நானஞ் செய்யவேண்டியதாயிற்று. இதுவே அவர்களுடைய ஞாபகசக்தியை அபிவிருத்தியாக்கத் தக்கதோர் பெருங்கருவியா யிருந்தது. அவ்வளவுகாலையில் ஸ்நானஞ்செய்தபோது குளிர்மிகுந்தபடியால் உடனே சுகந்தரத்தைத்தரத்தக்க சிறு காஷ்டங்களாகிய சமித்தைகளைக்கொண்டு ஓமஞ்செய்து ஈஸ்வரத்தியானஞ் செய்துவந்ததோடுகூடக் குளிர்காய்ந்தும் வந்தார்கள். இத்தியாதி ஒழுக்கங்களினாற்றான் ஏனைய சாதியாரைவிட அந்தணர்களுக்கு ஆதியில் புத்திகூர்மையும், ஞாபகசக்தியும், விவேகவிளக்கமும் மிகுந்திருந்தன.

பித்தசம்பந்தமான தேகிகட்கு அதிகாலையில் எழுந்திருக்கும்போது பிரதமத்தில் பித்தநீர் அதிகரித்து ஓர் விதமயக்கமும் தலைவலியும் உண்டாகக்கூடும். அதனால் அவர்கள் மனத்தளர்வடையாமல் அடுத்தடுத்து ஏழெட்டுநாள்வரையில் அதிகாலையில் எழுந்துகொண்டே வருவார்களாகில் வெகுசீக்கிரத்தில் அவ் வியாதி சொல்லாமலே தலைகாட்டா தோடிவிடுமென்று சில பிரபல வைத்தியசாஸ்திரிகள் வற்புறுத்திக் கூறியிருக்கின்றார்கள். ஏழு எட்டு வயதினுக்குட்பட்ட அதிபாலியர்கள் நெடுநேரம்வரையில் நித்திரைசெய்யவேண்டிய அவசியமிருப்பதாலும், அவர்கள் தாமே நித்திரைதெளிந்தெழுந்திருக்கிறவரையில் அவர்களை இடையில் எழுப்புவது யுக்தமல்ல வானபடியினாலும், அவர்களை மாலையில் வெகுசீக்கிரமா யுறங்கச்செய்து அதிகாலையில் தாமாகவே யெழுந்திருக்கும்படிச் செய்வது அதிக உசிதமென்று சில பெரியோர்கள் கூறுகின்றார்கள். ஆகையால்,

உலகிலுள்ள சரித்திரங்களைப் பார்க்குமிடத்து அதிக மனோதயிரியமும், தேகாரோக்கியமும், விவேகவிளக்கமும் பெற்றுச் சுத்தவீரர்களாகவும், சிறந்த வித்வசிரோமணிகளாகவும், மிக்க மதியூகிகளாகவும் இருந்தவர்களுக்குள்ளே அனேகர் தூக்கத்திற் கிடங்கொடாமல் அதிகாலையில் எழுந்திருக்கும் வழக்கத்தைவிடாது அனுஷ்டித்துவந்தார்களென்று அவரவர்களுடையவாழ்நாட் சரித்திரங்களால் தெளிவாய் விளங்குகின்றது. ஆகையால் தேகாரோக்கியம்பெற்றுத் தமக்கும் பிறருக்கும் பெரும்பயனை விளைவிக்கத்தக்க நற்காரியங்களில் பிரவர்த்திக்கத்தக்க மனமுள்ள சத்புருடர்கள் யாவரும் "வைகறைதுயிலெழு" என்று நமதம்மையார்கூறியுள்ள அமுதவாக்கைக் கடைப்பிடித் தொழுகுவார்களாக.

---

## நல்வாழ்வு.

"நீடியஆயுளும் நல்வாழ்வும்பெற விரும்புவோர்க்கு ஓர்மருந்து?" என்று ஒருவன் தெருவில் கூவிக்கொண்டு போனான். இதைக்கேட்ட ஒரு கன்னிகையானவள், தன் தகப்பனாரிடம் ஓடி தெருவில் கூவிக்கொண்டுபோகும் ஔடதத்தை எப்படியாயினும் வாங்கித்தரவேண்டுமென்று வருந்திக்கேட்டனள். தகப்பன் அவன்கூவும் சப்தத்தைக்கேட்டு வியப்புற்று, அவனையழைத்து, நீடிய ஆயுளையும், நல்வாழ்வையுந் தரத்தக்க ஔடதம் உன்னிடத்திலுண்டோ? அதனைக் கொடுப்பாயானால் என் ஆஸ்தியெல்லாம் வேண்டுமானாலுங் கொடுப்பேன் என்றான். அம்மனிதன் புன்னகையோடு ஐயா! நீர் அந்த மருந்துக்காக காசும் பணமுங் கொடுக்கவேண்டியதில்லை. நீ - நா - கா - என்னும் கட்டளைக்குந் நீழ்ப்படிவதே அம்மருந்து என்றான். இம்மருந்து நமதாயுளை

நீடிக்கச்செய்து எப்போதும் பாக்கியசாலிகளா யிருக்கின்றதென்பதுமெய்யே! ஆயினும், இச்சத்தியம் இலகுவில் நமது மனத்தில் உதிக்காது. துக்கமும் துன்பமுமடைந்து, சண்டை சச்சரவுசெய்து, சங்கடப்பட்டு மனவ்ருத்தமடைவோர்க்குச் சொற்பஆயுளும், சஞ்சல வாழ்வுமுண்டென்று சாஸ்திரிகள் சொல்வதைக் கேட்டிருப்பதோடு நமது அனுபோகத்திலுங் கண்டிருக்கின்றோம். இப்படி ஆயிசு குறைவதற்கு நாவடக்காவாதிருத்தலே காரணம். வீட்டுக்குள்ளிருந்து குடும்பகாரியங்களைக் கவனித்துவரும் மாதர்களுக்குள்ளே நேரிடும் வாக்குவாதங்களும், கேடுபாடுகளும், மனச்சஞ்சலமும், பொதுவாய் நாவையடக்காத ஓரே துர்க்குணத்தால்தான் உண்டாகிறதென்று எல்லோரும் எளிதில் அறிந்துகொள்ளலாம்.

"யாகாவாராயினுநாகாக்ககாவாக்காற்
சோகப்பர்சொல்லிழுக்குப்பட்டு"

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாருங் கூறி யிருக்கின்றாரல்லவா.

கப்பல்கள் மகாபெரியவைகளா யிருந்தாலும், பெருங்காற்றுகளால் அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் தான் போகவேண்டுமென்று உத்தேசித்தவிடமெதுவோ அவ்விடத்திற்குநேராக மிகவுஞ்சிறிதான சுக்கானாலே திருப்பிவிடுகிறான். அப்படியே நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவுபெரிய காட்டைக் கொளுத்திவிடுகின்றது. நாவும் நெருப்புத்தான். அது அநீதிநிரைந்தவுலகம். நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகின்றதாயும் இருக்கின்றது. சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும்பிராணிகள், நீர்வாழ்செந்துக்கள் ஆகிய இவைகளின்சுபாவம் மனுஷசுபாவத்தால் அடக்கப்படும். அடக்கப்பட்டதும் உண்டு. நாவையடக்க யாரால்கூடும்? அது அடங்காப்பொல்லாங்குகளைத் தரக்கூடியதும், சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கின்றது. இப்படிப்பட்ட அடங்காநாவை அடக்கி யாளுவோரே அதிசிரேஷ்டர். நீடித்துச் சுகித்திருக்க விரும்புவோர்; தவிர்க்கவேண்டிய சில குணங்களை இதனடியில் வரைகின்றேன்.

தீங்குபேசல்:— வேலையற்று வீட்டில் உட்கார்ந்திருக்கும் மாதர் அடிக்கடி இக்குற்றத்துக்குள் அகப்படுகிறார்கள். நாம் ஒன்றுஞ்செய்யாமல் எப்போதாவது இருக்க முடியவேமாட்டாது. வேலைசெய்வோம், படிப்போம், யோசிப்போம், தூங்குவோம், அல்லது அலப்பிக்கொண்டிருப்போம். அலப்புவதாற்றான் தீங்குவிளைகின்றது. நாம் சிறுவயதிற் கற்றுள்ள

"பழிப்பனபகரேல்"
"சுளிக்கச்சொல்லேல்"
"வாதுமுற்கூறேல்"
"கீழோராயினுந்தாழவுரை"
"மிகைபடச்சொல்லேல்"
"புண்படவேவார்த்தைகளைச்சொல்லவேண்டாம்"

என்னும் நீதிவாக்கியங்களை மறந்து அவைகளுக்கு நேர்விரோதமாக நடக்கிறோம். நாம் பேசுந் தீங்கான சொற்கள் பிறர்காதில் விழவே, அவர்கள் நம்மோடு சண்டைக்குவர நாமுங் கொதித்தெழும்பி

"தீயினாற்சுட்டபுண்ணுள்ளாறுமாறாதே
நாவினாற்சுட்டவடு"

என்பதைக் கிஞ்சித்தேனும் கவனியாமல் கண்டபடி திட்டி. இவ்விதமாய் சமாதானக் குறைச்சலுண்டுபண்ணிப், பகை, குரோதம், வைராக்கியங்கொண்டு சுகத்தைக் கெடுத்து நமது ஆயுளைக்குறைத்துவிடுகிறோம்.

"சொல்லுகசொல்லிற் பயனுடையசொல்லற்க
சொல்லிற்பயனிலாச்சொல்"

பொய்பேசேல்:— இத்துர்க்குணம் நமது தேசத்தவர்க்குள் குடிகொண்டிருக்கிறதென்று அன்னியதேசத்தார் எடுத்துரைப்பதற்கு இடமிருக்கிறது.

"சத்தியம் ஜனவிரோதம்
அசத்தியம் ஜனரஞ்சிதம்"

என்றாற்போல நடக்கிறவர்கள் எத்தனை? அழும் தங்கள் பிள்ளைகளை அமர்த்தும்பொருட்டு அழுகிற பிள்ளைகளைப்பிடிக்க இதோ! கள்ளன் வருகிறானென்றும், அதோ! பூச்சியென்றும், அண்டைவீட்டிலே மிடா விழுங்கி வந்திருக்கிறானென்றும் அபத்தம்பேசிப் பிள்ளைகளைக்கெடுக்குந் தாய்மார்எத்தனை. உள்ளதை உள்ளதென்று சொல்வதற்குப்பதிலாக அயலாரோடு அபத்தம்பேசிப் பிறர்கீர்த்தியைக் கெடுக்கக் கட்டுக்கதைகள் கட்டி

"கண்டோன்றுசொல்லேல்"
"காணாதவார்த்தையைக்கட்டுரைக்கவேண்டாம்"

என்னும் அமிர்தவசனங்களை அசட்டைசெய்து தங்களுக்குத் துக்கத்தை வருவித்துக் கொள்ளுகிறவர்கள் எத்தனைபேர். உணவுக்கு உப்பு எவ்வளவு அவசியமோ எல்லா அக்கிரமங்களுக்கும் பொய் அவ்வளவு அவசியமாகக் காணப்படும். உதாரணமாக, திருடுகிறவர்கள்



தங்கள்தப்பிதத்தை மறைக்கப் பொய்யென்னுஞ் சொக்காய்க்குள் நுழைகிறார்கள். பொய்க்குக்காலில்லை. ஆதலால், அது நிலைபெறாததுகண்டு, துணைக்கால் கொடுக்கப் பொய்யின்மேல் பொய்பேசி அவமானப்பட்டுத் தங்கள் சொற்பஜீவகாலத்தை நிர்ப்பாக்கியத்தில் கழிப்பார்கள். திருட்டு அயோக்கியமாம். கொலைகூடாததாம். பொய் எல்லோருக்குஞ் சகசமாம். தலைபோகிற காரியத்துக்குப் பொய் தாராளமாய்ப் பேசலாம்.

"பொய்பேசுகிறவாய்க்குப்போசனமில்லை"
"நெஞ்சாரப்பொய்தன்னைப்பேசவேண்டாம்"
"இறந்தாலும்பொய்தன்னைச்சொல்லவேண்டாம்"

என்று நாம் படித்த நீதிவாக்கியங்கள் ஏட்டுச் சுரைக்காயோ? ஏட்டுச்சுரைக்காயானால் அவைகளைப் படிக்கிறதிற் பலமென்ன? களவு கொலையிலும் பதின்மடங்காய்ப் பொய்யை அருவருத்தாலன்றி நமக்குச் சமாதானமும் நீடிய ஆயுளும் கிடைக்கப்போகிறதேயில்லை.

கோட்சொல்லல்:— இது மெத்த அவலட்சணமானகுணம். மிகுதியான சண்டை சச்சரவுகள் கோட்சொல்லுகிறவர்களாலேயே உண்டாகிறது.

"கேட்செவிக்குறளைக்காற்றுடநெருப்பு"

என்றாற்போல, இவர்கள் ஒருவீட்டிலிருந்து மற்றொருவீட்டிற்குப்போய் ஒருவர்காரியத்தை மற்றவர்களிடத்திற்சொல்லிப் பகைவரின் பகையை விர்த்தியாக்குவார்கள். இவர்கள் எழுந்தால் பாதிச்சண்டையொழியும். கோட்சொல்லிப் பிழைக்கலாமென்று இவர்களிருந்தபோதிலும், இவர்கள்வஞ்சகம் இரண்டுநாளில் பட்டப்பகல்போலாக வெட்கத்தில் முகம்நாணி துக்கத்தில் மூழ்கி சஞ்சலத்தில் காலங்கழிப்பார்கள். இவர்களுக்குச் சுகமேது, நல்வாழ்வு எங்கிருந்துவரும்,

"ஊரோடுங்குண்டுணியாய்த்திரியவேண்டாம்"

"புறஞ்சொல்லித்திரிவாரோடிணங்கவேண்டாம்"

இச்சகம்பேசேல்:— இச்சகம் பேசுகிறவர்களின் மத்தியில் வாசஞ்செய்வதிலும் கழுகுகளின் மத்தியில் வசிப்பது நலம். ஏனெனில், கழுகுகள் செத்தசரீரத்தைமாத்திரம் தின்னும், இச்சகம் பேசுகிறவர்களோ உயிரோடு சரீரத்தையும் புசித்துவிடுகிறார்கள். இவர்கள் வாயிலிருந்து மதுரமானமொழிகள்வந்தபோதினும் இருதயமோ திறக்கப்பட்ட பிரேதக்குழிக்குச் சமமாய் அருவப்பால் நிறைந்திருக்கும். நயவசனிப்பால் இவர்கள் ஜீவிப்பவர்களானபடியால் இவர்கள் இருதயத்திற்கும் உதட்டுக்குமுள்ள தூரத்தைப் பிறர் இலகுவில் கண்டு இவர்களைப் புறம்பேதள்ள எந்தவேலையுஞ்செய்யத் திராணியற்று நிர்ப்பாக்கியர்களாய் மரிப்பார்கள்.

ஜீவனைவிரும்பி நல்வாழ்வினைக்காண விரும்புவோரே? கடவுளுக்குப்பயந்து உங்களுடைய நாவைமேலே காட்டிய தீயவிஷயங்களிற் செல்லாதிருக்கும்படி கடிவாளத்தால் கட்டி அடக்குங்கள். அவ்வாறு அடக்குவீர்களாயின் கடவுளுக்கு மனதிரக்கமுடையவராய் கருணைசெய்வார். சுபம்.

---

## பொருடனைப்போற்றிவாழ்.

(முன்தொடர்ச்சி.)

மற்றுமிவற்றைவிரிக்கிற் பெருகுமாதலின், பூவிலுள்ள தேனையருந்தும் வண்டுபோல, பிறர்மனம் வருந்தாவகை ஈட்டும் எவ்வகைப்பொருள்களும் தருமத்தின்பால தோயம், அத்தகையபொருள், மணி, பொன், வெள்ளி, நென்முதலியனவாகப்பரந்துள்ளன. இப்பொருள் பின்வரும் கல்விப்பொருளை ஒருவனடைதற்குரிய உபகரணங்கட்கும், பசி நோய்முதலியவற்றாற் பீடிக்கப்படாது, மனக்கவலையற்றுக் கற்றற்கும், அவ்வாறு கற்ற கல்வியைப் பல்லாற்றானும் பயன்படுத்தற்குங் கருவியாயுள்ளது. பொருளற்றவர்

"தரித்திரமிக்கவனைப் பிணியொடுக்கிச் சரீரத்தையுலர்தரவாட்டும், தரித்திரமளவாச்சோம்பலையெழுப்புஞ் சாற்றருமுலோபத்தைமிகுக்குந், தரித்திரந்தலைவன்றலைவியர்க்கிடையே தடுப்பருங்கலாம்பலவிளைக்கும், தரித்திரமவமானம்பொய்பேராசை தருமிதிற்கொடியதொன்றிலையே"

எனவும்,

"தரித்திரங்களிப்டாங்கடலுக் கோர்வடவைசாற்றுமெண்ணங்கள் வாழிடமாந், தரித்திரநன்மைசாலொழுங்கென்னுந் தழைவனந்தனக் கழறழலாந், தரித்திரங்கொடியவெவற்றினுங்கொடிதத் தகையதையொழித்தனன்றாமே." என்றபடி,

பொறுத்தற்கரிய வறுமைத்துன்ப மொன்றேயோ அதுகாரணமாக

"தெறுநிறப்புளோர் வாழ்ந்திடுசெல்வர்பாற் செல்வரேன் மதியார்கண், மறுவுறுத்தவமானமுமியற்றுவர் மானமுள்ளவராயிற், குறுகுமவ் வவமானத்தா லுயி

ர்விடு கொள்கையிற் றலைநிற்பார், நறுமலர்க்குழ லாதலா லவரிடை நண்ண னன்றென வெண்ணல்."

என்றபடி பொருளுடையாரிற் கடைநோக்கிச்செல்லுதற்றுன்பமும், அவரைக்காணாற்றுன்பமும், காணினும் அவர் உபகரியாது மறுக்கையினுண்டாந் துன்பமும், மறுவிடத்தும் அவரீதற்பொருளையேற்றற் றுன்பமும், அவ்வாறேற்றதைக் கைக்கொண்டு உணவாதிகட்கு வேண்டுமவற்றைக் கூட்டுதற்றுன்பமும் ஆகிய பலதுன்பங்களானும் நாடோறும் வருந்துவர்.

"கல்லானே யானாலுங் கைப்பொரு ளுண்டாயி
னெல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வ—ரில்லானை
இல்லாளும் வேண்டாண் மற்றீன்றெடுத்ததாய் வே
செல்லாதவன் வாயிற் சொல்." [ண்டாள்

என்றபடி எல்லாநன்மையுமுடையதாயினும், பொருளில்லானை அவனது தாய்தந்தை மனைவிமைந்தர்முதலாயினோரும் அவமதிப்பர். நன்மையொன்று மிலரேனும் பொருளொன்றுடையராயின் அவரது பகைவரும் நன்குமதிப்பர். வறியவரிடத்தே தாங்கொள்வ தில்லாமையேயன்றி கொடுப்பதுண்டாகையான் அதுநோக்கி உறவினரு மவரைக்கைவிடுவர்.

"முனிவருந் தேவருமுன்னுவ பொன்னென் முடியும்." என்றபடி,

கல்வியும், தருமமும், இன்பமும், கீர்த்தியும், மானுடர்க்குட் பெருமையும், உறவும், எண்ணியவெண்ணியாங்கெய்தலும், பகையுறுத்துச் செயமுறலும் ஆகிய யாவும் பொருளுடையார்க்கே பொருந்தும். அஃதிலார் இவ்வுலகில் நடைப்பிணமாவர். ஆதலின் யாவரும் அதனை இடயறாமுயற்சியோடு வருந்தி யீட்டலேவேண்டும். இதுநிற்க:—

ஏனைய கல்விப்பொருளோவெனில் செல்வப்பொருள்போற் றாயத்தார், கள்வர், வலியர், அரசர் இவர்களாலே கொள்ளப்படாததும், அக்கினி, வெள்ளம் முதலியவற்றா லழியப்படாததும், பிறர்க்கு நல்குந்தோறும் குறைவின்றி வளர்வதும், எவ்விததுன்பங்களையும் பரிகரிக்கத்தக்கதுமாய் விளங்கும். கல்விப்பொருளுடையவர், இம்மையின்கண் சொற்சுவை பொருட்சுவைகளை யனுபவித்தலானும், நற்கீர்த்தியும், நற்பொருளும், நன்மதிப்பும் உறுதற்கேதுவாயும், பின் மறுமைக்கண் முத்திப்பேறடைதற்குக்காரணமாயும் நிற்றலின், ஏனைப்பொருளிற் சிறப்புடைத்தாம். உயர்குலத்தினராய் பெருஞ்செல்வம், பேரழகுமுதலிய பெருமிதமுடையவராயினும் கல்வியில்லாதவர் முருக்கம்பூவினை யொப்பர். எவ்வகைச்சிறப்பினையும் எய்தற்குரியதாய அரையர்கட்கும் அவர்நாட்டின்கணன்றி ஏனையவிடத்துச் சிறப்பின்மையானும், கற்றோர்க்கோ சென்றவிடமெல்லாஞ் சிறப்புண்மையானும் அரசரினுங் கல்விப்பொருளுடையாரே சிறப்புடையர். அக்கல்வியை "இளமையிற்கல்" என்றபடி அதிபாலியத்திலேயே கற்றல்வேண்டும். அவ்வாறு கற்குங்கால்,

"எத்துணைய வாயினுங் கல்வியிட மறிந்
துய்த்துணர் வில்லெனி னின்றாகும்-உய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னா மஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து."

என்ற மேதாவியர் வசனப்படி நல்லாசிரியனையடுத்து, சந்தேகவிபரீதங்களறக் கற்றல்வேண்டும். சந்தேகமாவது இதுவோ, அதுவோவென ஒருபொருட்கண்ணே துணிவுபிறவாதுநிற்றல். விபரீதமாவது ஒன்றை மற்றொன்றாகத்துணிதல். வறுமை, நோய், முதலியவில்லாமையும், பொருள், இளமை முதலியவைகளுண்மையும், கல்விப்பொருளை யடைதற்குச் சிறந்த கருவிகள். இதனினும் மிகச்சிறந்தகருவி நல்லாசிரியனுள்ளத்திலருளுண்டாகும்படி நடத்தல். ஆதலின், கல்விப்பொருளை விரும்புவோர் ஆசிரியன் வழிபாட்டினின்றே கற்றல்வேண்டும். அங்ஙனங் கல்லாது தாமே கற்குங்கல்வி பயன்றராதொழியுமெனற் கையமின்று. மேற்கண்டவாறு நல்லாசிரியன்பாற் கற்றானாயினும் பிறர்க்குச்சொல்லும் சொல்வன்மையெய்தப்பெறானாயின் அக்கல்வியால் யாதொருபலனுமின்றாம். அச்சொல்வன்மை நன்கமையப் பெறுவனாயின் பொன்னினாற்செய்த புட்பத்திற்கு மணமமைந்தாலெனச் சிறப்புறுவன். கல்விப்பொருளுடையவர் தாங்கற்றறிந்தவாறு நல்வழியினொழுகலும், நன்மாணாக்கர்க்குக் கல்விபயிற்றலும், உறுதிப்பொருளினைத்தெனவுலகோர்க் கெடுத்துக்காட்டலுமாகிய விம்மூன்றனையும் கடமையாகக் கோடல்வேண்டும். சரீரசுகத்துக்கேதுவாகிய அன்னபானாதிகள்போல ஆன்மசுகத்துக் கேதுவாகிய ஞானவித்தைக்குங் கருவியாக நிற்பதும் கல்வியேயாம். இதனை

"பொருளல்ல வற்றைப் பொருளாகக் கொள்ளு
மருளானு மாணாப் பிறப்பு."

என்ற திருக்குறளானு நன்குணர்க.

இக்கருத்தை மேற்கொண்டே நமதன்னையார் பொருளெனவெடுத்தது, மேற்கூறிய கல்விப்பொருள், செல்வப்பொருளென்னு மிரண்டனுள், செல்வத்தாற் கல்வி



யும், கல்வியால்ஞானமும், ஞானத்தான் மெய்ப்பொருளுணர்ச்சியும் ஒருவனடைந்து, அவ்வாறுதானடைந்த வுண்மைப்பொரு ணிலையினின்று சுகாநந்தவாழ்வைப் பெறவேண்டுமென்னுங் கருத்தை யறிவுறுத்தற்கே "பொருடனைப்போற்றிவாழ்" என்றார். இதைநன்குணர்ந்த நம்மவர் உலகவின்பத்திற்குக் காரணமாகிய அநித்தியப்பொருள்களை யறவேயொழித்து நித்தியப்பொருளாகிய சச்சிதாநந்த நிலையறிந்து வாழ்வார்களாக.

---

## தந்தைக்கும் மகனுக்கும்நடந்த சம்பாஷணை.

(முன்தொடர்ச்சி.)

எமனைப்போன்று அச்சந்தரு முருவமுடைய இயமனிடத்தீர்த்துச் செல்லப்பட்டவுயிர் சிவந்தகண்ணினையும், மைக்குழம்பினையொத்த காந்தியினையுங்கொண்டிருந்து, மிருத்தியு, காலன், அந்தகன், இவர்கள் நடுவே கோரைப்பல்லோடுகூடிய பிளப்பான வாயையும் சுழல்விழியோடு கொடியபார்வையையும் பெற்று, பலவகைப்பட்ட விகாரமுடைய நோய்த்தெய்வங்களோடுங்கூடித் தண்டிப்பதிலேயே விருப்பமும் பாசந்தாங்கியகையும், பெருத்ததோள்களும், நடுக்கஞ்செய்யத்தக்க பெருத்தவடிவமுமுடைய அந்த இயமனைப்பார்க்கிறான். பின்னர் அவ்வியமனால் புண்ணியபாவங்கள் விசாரிக்கப்பட்டவுடனே விதித்தகதியைப் பெறுகின்றது. கூட சாக்ஷியானவனும, பொய் பேசினவனும் இரௌரவநரகத்தை யடைகிறான். அந்நரகத்தின் வடிவங் கூறுகின்றேன் கேளும்:—

அது இரண்டாயிரம்யோசனை விசாலமும், முழங்காலளவினையுடைய ஆழமுமுடையது. அது கடத்தற்கரிதானது. அதனுள் நிரம்பிய நெருப்புராசியையுடையன. செம்புமயமான நிலங் கொளுத்தப்பட்டிருந்த அழலாயுள்ளது. யமபடாள் பாவிகளை அதனுட்புகுவிப்பார். அவன் அவ் வெப்பத்தினையாற்றாது ஓடியோடிக் கால்வெந்து பரிதவிப்பன். அவனை ஒவ்வொருபகலும் எடுத்து சிறிதுபொழுது வெறுநிலத்து விடுத்து ஆற்றுவர். இங்ஙனம் அந்த ஆயிரங்காதமும் நடந்தால் பின்னர் அவன் அந்நரகத்தினின்றும் விடுபடுவான். அதன்பின்னர் மற்றபாவங்களொழியுநிமித்தம் அவ்வாறு வேறொருநரகத்தை யடைகிறான். இவ்வாறு எல்லாநரகத்தினின்றும் விடுபட்ட பாவியானவன், புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிக் கல்லாய் இவ்வாறு பலவகைப்பட்ட துன்பயோனிகளிற் பிறந்து, முடிவில் மானிடயோனியை யடைந்தாலும், மிகக்குள்ளன் கொடியன் அவயவங்கள் குன்றினவனுமாவன். சண்டாளன்முதலிய பலபிறப்பும் பிறப்பன். பின் மிக்கிருந்த புண்ணிய பாவச்சேடங்களோடு கூடி உயரத்தொடங்குகையில் முறையே சூத்திரன், வைசியன், க்ஷத்திரியன், வேதியன், தேவன்முதலாகிய உயிர்நிலை பெறுவன். ஒருவேளை பாவமே யதிகமாயின் முன்போலவே நரகங்களிலே வீழ்வான்.

புண்ணியசீலர்கள் எவ்வாறான வுயிர்நிலையெய்துவராயின் கேட்பீராக, விரைவில் விமானமேறி சந்தனம் பூசி புஷ்பந்தரித்து இயமனாற்காட்டப்பட்ட புண்ணியகதிக்குச் செல்கின்றனர். ஆடல்பாடலில் வல்லவரும், பொன்னணிபுனைந்த பூங்கொம்பொத்தவருமாகிய சூரமகளிர் பணிகேட்ப முன்னுள்ள இளமைத்தேகத்தினையடைந்து போகத்தை யனுபவிக்கத்தக்க தேவர்கள் பொன்னுலகையேனும் தான்விரும்பியவைகளில் ஏதேனுமொன்றை யடைவர். அவர் மனத்தில் திரிமூர்த்திகளுலகையேனும் மற்றையவுலகங்களையேனும் விரும்புவராயின் தக்ஷணமே பெறுவர். ஆனால், தாம்செய்த புண்ணியத்திற்குத்தக்க வுலகமெதுவோ அதுதான் கிடைக்கும். அதற்குத்தக்க சுகத்தைத்தானனுபவிப்பர். நல்ல அலங்காரத்தோடுங்கூடிய விமானமேறியுத்திரிவர். இவ்வாறிருக்குங்காலத்தில் தாஞ்செய்த புண்ணியமுடிந்துவிடுமாயின் அவர்கள் பூமியிலே அரசர்மனையிலேனும், நல்லோர்மனையிலேனும், நோய்த்துன்பமற்றவர் மனைகளிலேனும் பிறந்து நல்லொழுக்கங்களையோம்பி, சிறந்த வின்பப்பயனைத் துய்த்துப் புண்ணியத்தினையீட்டிப் பின்னும் சிறந்தமேலான கதியினையேயடைவர். இவ்வாறு சிறப்போடிருக்குங்காலத்தில் சிறிதுபாவ மதிகரிக்கின் மேற்கூறியபடி கீழ்நிலைமைக்கேபோவர். இவ்வாறு உயிர்களினது இன்பதுன்பங்களிப்பேர்ப்பட்டதென்று சொல்லப்பட்டது. இதற்குமேல் அவ்வுயிர்கள் எவ்வாறு கருவையடையுமோ அதனையுஞ்சொல்வோம்.

ஐய! கேளும்! உயிரானது நரகத்திருந்தாயினும், சுவர்க்கத்திருந்தாயினும் வெளிப்பட்டவுடனே புருடதேகம்பெற்று சுக்கிலவடிவாய்ப்பெண்ணுடம்பை யடைந்து இரஜசுவிற்கலந்து உந்தியின்கீழக கருப்பையுள் அந்தப் பெண்ணுண் வித்திரண்டுங்கலந்து வித்திலிருந்து முளைவெளிப்படுவதுபோல் அந்த மாமிசபிண்டத்தினின்றும் தலை மார்பு கை வயிறு கால் முதலிய அவயவங்கள் தோன்றி மட்டைக்குள் தேங்காய் எவ்வாறு பெரிகிக்கொண்டுவருமோ அவ்வாறு கருப்பையினுள்

ளே மேல்முகமுடையதாய் இருமுழந்தாளினுள்ளே இரண்டுகைகளையும் வைத்துக்கொண்டு வளர்கின்றது. அம்மிருதுவாகிய பிண்டம் ஜடராக்கினியின் சூட்டினால் வன்மைப்பட்டுக்கொண்டே வருகின்றது. புண்ணிய ஆன்மாவாயிருக்குமாயின் சுகநிலைமையும், பாபான்மாவாயிருக்குமாயின் துன்பநிலையிலுமிருக்கும். ஆப்பியாயனியென்னும் நாடி அக்குழவியினது உந்தியிற்கட்டுண்டு அப்பெண்ணின் வயிற்றிலுள்ள அன்னப்பெருங்குடலின் புழையுள்சேர்க்கப்பட்டு அவள்புசித்தவுணவு நீர் அந்நாடிவழியாக அச்சிசுவின் உடலிற்புகுந்து வளரச்செய்யும்.

கருவினுள்ளிருக்குஞ் சிசுவிற்கு முன்னைப்பிறப்பின் செய்கைமுற்றும் ஞாபகத்திற்குவரும். அதனால் வைராக்யத்தை யடைந்து கருப்பப்பீடைகளனைத்தையும் அனுபவித்து இம்முறை இக்கருப்பைவிட் டகன்றால் மறுபடி இங்ஙனமாகப்புரிவேன். இனி இங்குவராவழி தேடுவேன். என்று பலபிறவித்துயரையும் நினைந்து நினைந்து துயரப்பட்டுக்கொண் டங்கிருக்கும்.

இங்ஙனமிருக்கையில் ஒன்பது அல்லது பத்தாவது திங்களில் பெருங்குடலோடு பற்றுண்டுகிடக்கும் நாடிமுனையற்று விடுபட்டவுடனே மேல்நோக்கியிருந்த சிசு கீழ்முகமாகத் திரும்பி பிரசூதவாயுவினா லுறையுண்டு வயிற்றினைவிட்டு வெளிப்படுங்காலத்து பொறுக்கக்கூடாத வருத்தத்தினால் அழுது துயரமுற்று மிகுந்த இளைப்பையடைந்து வெளிப்படும்.

இங்ஙனம்பிறந்த சிசுவுக்கு வெளிக்காற்றுப்பட்டவுடனே களைதெளிந்து அறிவுதிக்கின்றது. உடனே மோகினியென்னும் பெயரினையுடைய விஷ்ணு மாயையால் மூடப்படுகின்றது. அம்மாயை மூடலும் முன்னிருந்த அப்பிறப்பின் ஞானமுதலியவெல்லாம் மறந்து போய்விடுகின்றது. பின்னர்வளர்ந்து முறையே கௌமாரம் யௌவனம் வார்த்திபம் ஆகிய இப்பருவங்களையடைந்து முடிவில் மரணமடைகின்றது. இவ்வாறே குலாலனது திகிரியைப்போலச்சுழன்று சுழன்று பிறந்தும் இறந்தும் நல்வினை தீவினைகளில் இன்பதுன்பப்பட்டும் கிடக்கும். இவ்வாறு பிறந்திறத்தலினால் இவ்வான்மாவினுக்கு ஏக்கமேபெரிதாக துயரடைந்து கிடக்கின்றனவாகலின். இவ்வினையுயிர்கட்கு எங்கும் கவலையொழியவில்லை. தாய்வயிற்றுறுந் துன்பமோபெரிது, அப்பால் யோனியில் நெருக்குண்டு வெளிப்படுந் துன்பமோ அதினினும் கொடிது. சீச்சீ இப்பிறவிகெட்டது. அப்பால், இளமையும், முதுமையும் தன்வயமற்றுப் பிறர்வசப்படாது. ஓகோ! அறப்பெரிது. அதுகிடக்க, இனிக் காமம், குரோதம், பொறுமை முதலிய துர்க்குணங்களாலீர்த்துத் தின்னப்பட்ட யவ்வனபருவமோ தாங்கலாற்றாத கட்டமானது. முதுமைப் பருவமோ துன்பமயமேயாய்விட்டது. இவை யிப்படியாக, மரணமென்பதோ அப்பப்பா? எவற்றினும் மேலாய துன்பப்பெருங்கடல். இதுபற்றியன்றோ “யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்” என்றார் மணிவாசகப்பெருமானும். இறந்துவிட்டாலோ இயமன்றூதுவர்வந்து ஈர்த்தீர்த்து அலைக்குமிடத்து அல்லலென்பது ஒருவழியா? மீட்டுமீட்டுங் கருக்குழியிலே வீழ்வதும், பிறப்பதும், சாவதும், நரகம்புகுவதுமாக சக்கரத்திட்டுச் சுழற்றினாற்போல மூலப்பகுதிபாசத்தாற் பிணிப்புண்டு, உயிர்கள் அலமருதலையடையும். இங்ஙனமான பலகோடி துன்பத்தால் ஆகுலப்பட்டுள்ள விச்சமுசாரத்துச் சுகமென்ப தெட்டுணையுமில்லை. ஐயனே! முத்திப்பொருட்டு முயலுகின்ற நான் இந்த மும்மறைக்கருமகாண்டத்தை யெங்ஙனம் பற்றுகேன். எங்ஙனம் பற்றக்கடவேன் என்றான்.

இவ்வாறுகூறிய மைந்தனைநோக்கி தந்தையானவர் ஏமைந்த! வித்தையைத் தானஞ்செய்த பெருத்த புண்ணியவலிமையால் இச் சமுசாரமென்னும் பெருங்கானகச்சரிதம் நன்றுகூறினாய். ஆயின் அதனிடத்து இரௌரவ நரகத்தியல்புகூறியதுபோல மற்றநரகவியல் கூறப்பட்டதில்லையன்றோ? பேரறிவாள! அவையெல்லாவற்றினையும் விரித்தெனக்குக் கூறுக என்றார். மைந்தன் கூறுவானாயினான்:—

தந்தையே! இரௌரவம் முன்கூறினேனன்றோ? இனி மகாஇரௌரவ நரகத்தைக் கூறுவல்கேட்டிடுதி? அந்நரகமெல்லாம் ஐம்பத்துநாலாயிரம் யோசனையாம். அதனடியில் பூமி செம்பாலாயதாம். அதன்கீழ் நெருப்புண்டு. அதனால் அது சிவக்கக்காய்ந்து மின்னலைப்போல மின்னிக்கொண்டு பார்க்கவும் பரிசிக்கவும் மிகுந்த பயமுள்ளதாயிருக்கும். அதனிடத்துப் பாவியானவன் கால்படாமற்கட்டி யீர்க்கப்பட்டுக், கையாலும் காலாலும், புரண்டு நடக்கின்றான். காகம், கழுகு, கொக்கு, கோட்டான், பருந்து, தேள், குருட்டீக்கண் முதலியவற்றால் பிடுங்கித் தின்னப்பட்டு, அவ்வழியில் இழுத்துச் செலுத்தப்படுவன். இவ்வாறு வறுக்கப்படும் அப்பாவியானவன் அப்பா! அம்மா! எனப் பயத்தோடிரைந்துகொண்டு சாந்தமற்றவனாய்ப் பதினாயிரம் வருடங்கிடந்து மிகுதுட்டனாகிய அவன் வெளிப்படுவான்.

அப்பால் அசிபத்திரவன நரகமென்னும் மற்றொரு வகை நரகத்தினைக்கேளும். அது ஆயிரம்யோசனை அளவினையும் எரிநெருப்போடு நிலத்தினையுமுடையது. அத



னுள் கொடியசூரியகிரணம் பிரளயகாலத்துத் தீப்போல எப்பொழுதும் பாவிகளைக் கொளுத்திக்கொண்டிருக்கிறது. அதனடுவே நுண்ணியதளிர்களையுடைய குளிர்ந்த சோலையொன்றுளதாகக் காணப்படும். அவைகளினிலை பழம் முதலியன வாள்முதலியப்படைக்கலம்போலுடையது. இன்னமும் பெரும்புலியின்நகத்தையும், பெருத்தகோரைப்பற்களையும், சாம்பல்வர்ணத்தை யுடைய பதினாயிரம்நாய்கள்பயங்கரமானசப்தத்தோடுகுலைத்துக்கொண்டேயிருக்கும். அதனுள்ளிருந்துவேதனைப்படும் உயிர்கள் அதிகதாகமும், நிலத்தின்சூட்டால்வெதுப்பப்பட்ட தேகத்தையுமுடையதாய் ஐயோ! அப்பா! அம்மா! என்று மிகுந்ததுயரத்தோடும் அழுதுகொண்டே போய் எதிரேதோன்றுகின்ற குளிர்ந்த நிழலையுடைய அவ்வனத்தைநோக்கிச் செல்வர். அவ்விடத்திலோ அடிக்குங்காற்றினால் அம்மரத்தினிலைகள் மேல்விழுந்து வாளினாலறுப்பதுபோல் தேகத்தை அறுக்கும். அவ்வுபத்திரவம் பொறுக்கமாட்டாமல் நிலத்தின்மேல்வீழ்ந்துபுரளுவர். அப்போது அங்குள்ளநாய்கள் மேல்வீழ்ந்து கடிக்கும். அதனாலும் மிகுந்த துயரப்படுவார்கள். இவ்வாறு அங்குள்ள வுயிர்கள் கொடியவேதனையோடு பரிதவித்துக்கொண்டிருக்கும்.

இதுவல்லாமலும் அதனினுங்கொடிய அச்சத்தைத் தரும்படியான தப்தகும்பநரகமென்றொரு நரகமுண்டு. அதைப்பற்றிச் சொல்லுகின்றேன் கேளும் என்று தகப்பனைநோக்கி மைந்தன் சொல்லுகின்றான். ஐய! அந்த நரகத்துள்ளே உடைபட்ட நெருப்புக்கடங்கள் நிரம்பியிருக்கும். அக்குடங்களுள் எண்ணெயிற்கலந்த அரப்பொடி நிரப்புண்டு காய்ந்துகொண்டேயிருக்கும். யமபடாள் பாவஞ்செய்தோனைப் பற்றிவந்து தலைகீழாக அக்குடத்துக்குள் அடைத்து வேக அவிப்பார்கள். அப்போது உடம்பிலுள்ள மாமிசம் புண்ணீர் முதலிய தாதுக்கள் வெளிப்பட்டு மண்டைவெடித்துக் கண்கரைந்து எலும்புமுறிந்துபோம். அங்குள்ள இருப்புமுகக் கழுகுகள் அறைந்தெடுத்துக்கொண்டுபோய் மென்று மறுபடியும் அதனுள்ளேகொண்டுவந்து வீழ்த்தும். சலசலவென்று கொதித்துக்கொண்டிருக்கும் எண்ணெயில் உடம்பின்கண்ணுள்ள தாதுக்களெல்லாம் உலோகங்கள் உருகினாற்போலும் உருகும். காலதூதுவர் காண்டி துடுப்பு முதலியகொண்டு துழாவிக் குத்திடுவர். இங்ஙனம் கொதிக்கும் எண்ணெயிற் சுழிகளுண்டாம். அச்சுழியில் பாவியர் சுழலமிட்டுலைவர். இவ்வளவு கொடுமைநேர்ந்ததே யாயினும், அப்பாவிகட்கு உயிரும் நீங்காது. உடம்பில் மறதியுமுண்டாகாது. அந்த யாதனாதேகம் அடிக்கடி தோன்றிக்கொண்டேயிருக்கும். அதனோடு அப்பெருந்துன்பத்தினை அனுபவித்துக்கொண்டே கிடக்கவேண்டும். கேட்டீரோ தந்தையே! கொடியபாவிகள் இந்நரகங்களைப்போல அனேகநரகங்களை மாறிமாறி அநுபவித்துக்கொண்டே கிடப்பார்கள். இதற்குத்திருஷ்டாந்திரமாக ஓர்கதை சொல்லுகின்றேன் கேளும் என்று சொல்லத்தொடங்கினான்.

ஐய! யான் இப்பிறப்பிற்குமுன் கழிந்த ஏழாவது பிறப்பில்வைசியகுலத்திற்றோன்றி பசு நீர்வேட்கையால் தடாகத்திற்குச் செல்லுகையில் போகவொட்டாமற் றடுத்தேன், அதனால் அப்பிறவிநீங்கியபின் அப்பாவம் என்னையடைந்து கொடியநரகத்திற்சேர்ந்தேன். அந்நரகத்தில் அழற்சிகை அஞ்சத்தக்கதாக விருந்தது. இருப்புமுகத்தினையுடையபறவைகள் சதைகளைப்பிடுங்கின. அவ்விடத்தில் பாவிகள் யந்திரங்களா லழுத்தப்பட்டு உடம்பிலுள்ள இரத்தம் கொப்பளித்துவரச் சேறுபட்டிருக்கும். இவ்விததுன்பங்களில் கிடக்கும் பாவிகளினுடைய அழுகுரலானது மேகமுழக்கம்போல் மனங்கவற்படுத்த, அதில் வீழ்ந்துகிடந்த வெனக்கு நிரம்ப நூறுவருடங்கழிந்தன. இங்ஙனம் இப்பெரும்பாவதுக்கத்துடனும், தாகம், எரிச்சல், வெப்பம் இவற்றுடனும் வருந்திநிற்கும் என்மேல் இன்பமாகக் களிப்பைச்செய்யும் இளங்காற்று வீசிற்று; அது பனிநிரைக்குடத்தினின்றும் வெளிப்பட்டதாகவு மிருந்தது. அக்குளிர்காற்றுப் பரிசித்ததனாலே அங்குள்ளாரனைவருக்கும் சிறிதுதுன்பங் கழிந்ததுபோலாயிற்று. முன்னாள் சுவர்க்கத்தி லிருந்தகாலத்து எவ்வாறின்பமுண்டாயிற்றோ அவ்வாறே யின்று நரகத்தினுமுண்டாயிற்று. அப்போது யாமனைவரும் மிக்கவியப்படைந்து விழிதிறந்து வானோக்கிநிற்கையில் ஒருதெய்வபுருடனைக் கண்டோம்.

அங்ஙனம் எங்களைநெருங்கி அந்தபுருடரிற் சிறந்தோன்வருகையில், அவனுக்குமுன் தண்டமொன்று கையிலேந்தி இயமன்றூதுவரிலொருவன் இங்குவா! இங்குவா! என்று அவனை யழைத்துவந்தான். அங்கு அப்புண்ணியவடிவினன் கொடுந்துன்பத்தாழ்ந்துகிடக்கும் பல்லாயிரநரகரையுநோக்கி இரக்கமனத்தினையுடையனாய் அத்தூதுவனைநோக்கி வினவலாயினான்.

ஓய்! காலபட! இக்கொடுநரகினைப் பார்க்கும்படி வரநேர்ந்ததே! யான் என்னபாவஞ் செய்தேன்! கூறுதி. யான் விதேகநாட்டின்கண்ணே சனகராசன்மரபிற் பிறந்து, கலைவல்லோனென்று புகழினையடைந்து, நீதியோடு மன்பதைபுரந்து, பலவேள்விகளையுஞ்செய்து, தருமத்தோடுலகை யோம்பினேனே! பயந்து போரினையொழிக்கவில்லையே! என்பால்வந்தவிருந்து முகஞ்சுளித்துப் போந்ததில்லையே! பிதிரர், தேவர், ஏவலர் இவர்

களிடத்து யான்செலுத்தத்தக்க கடன்களில் எட்டுணையும் தவறுநேர்ந்ததில்லையே! அயலவன் மனைவிமேலாயினும், பொருளிடத்தாயினும் இச்சைகொண்டதில்லையே! பருவகாலங்களிற் பிதிரரும், திதிகாலங்களிற் றேவரும், நீர்நிறைந்த தொட்டியினருகே பசுக்கூட்டங்கள் வந்தாற்போலும் வருகின்றாரன்றோ? அவர்கள் அவ்வில்லறத்தானாற் பயன்பெறாது வந்து பின்சென்றால் அவனது இட்டகருமம், பூர்த்தகருமம் என்னும் இருவகைக்கருமமும் ஒருங்குகெட் டழிகின்றன. பிதிரர் பெருமூச்செறிந்தால் அவ்வில்லறத்தோனது எழுபிறப்பின் புண்ணியபயன்கெடுகின்றது. அங்ஙனம் தேவர் பெருமூச்செறிந்தால் மூன்றுசென்மப் புண்ணியபயன் கெடுகின்றது. ஆதலால், தேவர்கருமத்தினும், பிதிரர் கருமத்தினும் யான் சோர்வின்றி முயற்சியோடும் தவறாது முந்தினேன். அப்படிப்பட்ட யான் பெருங்கொடுமையுள்ள இந்நரகினுக்கு எவ்வாறுவந்தேன் என்றான்.

கேளுந்தந்தையே! இங்ஙனம்யாம் கேட்டுக்கொண்டிருக்கும்போது அவ்வரசனால் வினவப்பட்ட கொடிய காலதூதுவன் அவ்வமயத்திற்குத் தக்கவாறு கூறலாயினான்.

கேளும் அரசரேறே! நீர்கூறியது உண்மையே. அங்கேது மையமில்லை. மற்றென்னவெனில், நும்மாற் சிறிதே தீவினைசெய்யப்பட்டுள்ளது. அதனை நுமக்கு ஞாபகஞ்செய்கின்றேன். முன்னம் விதற்பர்கோமான் மகளாகிய பீவரியென்னும் பெயரினையுடைய நும் மனைவி இருதுவாயிருக்கையில் அவளது இருதுகாலம் பயனற்றதாய்விட்டது. அழகுள்ள கேகயராசன் மகளிடத்து விழைவினனாய் நின்றுவிட்டாய். அங்ஙனம் அந்த இருதுபருவ தருமத்தினைக்கடந்த காரணத்தால் இக்கொடிய நரகத்தினுக்குவர்தீர். ஓமத்தீ யோம்பற்கடுத்தகாலம் வாய்த்தபோது அக்கினிதேவன் நன்கு திருத்தப்பட்டநெய் தன்பால் விழுதலை எவ்வாறு எதிர்பார்ப்பானோ அவ்வாறே மாதவிடாய்க்காலம் வந்தபோது, பிரஜாபதிஎன்னுந் தெய்வம் சுக்கிலம்விழுகையை யெதிர்பார்க்கும். அறப்பொருட்டாக வாகத்தக்க அந்த நியமத்தினை எவன்கடந்து ஏனையகாமநுகர்ச்சியால் அவாவுடையனாகின்றானோ அவன் பிதிரருக்குக் கடனுடையனாய்ப் பாவத்தினையடைந்து நரகமுறுவன். நீர்செய்தபாவமும் இவ்வளவிற்றே. வேறொன்றுமிராது. ஆதலால், உம்முடைய பெரும்புண்ணியப்பயனை அனுபவித்தற்குமுன் இச்சிறிய பாவப்பயனை நுகர்வதற்கு வாரும் வேந்தே! என்றான்.

இவ்வாறு சொல்லக்கேட்ட அரசனானவன் இயமபடனைநோக்கி வினவுகின்றான்:—

ஓய் காலதூதுவ! நீ என்னை எவ்விடம் அழைத்தாலும் வருகின்றேன். ஆயினும் யான் வினவும் சில வினாக்கட்கு விடை பகரல்வேண்டும். வயிரத்தையொத்த வலிய மூக்கினையுடைய இக்காகங்கள் இங்குள்ளவர்களின் கண்களைக் குத்தித்தின்னுகின்றன, மறுபடியும் அக்கண்கள் உண்டாகின்றன. இவர்கள் நாக்களானவை வாளாலீர்க்குந்தோறும் வளர்ந்துகொண்டே வருகின்றன. இன்னும் இங்குள்ள இப்பாவிகட்குப் பலவிதமான உபாதிகளைச் செய்யப்படுகின்றனரே? இவர்களுக்கென்னபாவத்தாலித்துன்பமுண்டாயிற்று கூறுக! என்றனன். காலதூதுவன் சொல்லத்தொடங்கினான்:—

அரசே! நீரென்னை வினவிய பாவப்பயனை யுள்ளவாறு உமக்குப் பகருவேன் கேளுதி! புருடன் என்பது உடம்பின்கண்ணே தனதென்னும் அபிமான பாசத்தாற் கட்டப்பட்டு, யானே உடம்பு, எனது உடம்பு என்றுகூறி, நனவு, கனவு, உறக்கம் என்னும் அவத்தைப்பட்டுவருகின்ற ஆன்மாவெனப் பொருள்படுகின்றது. பரமான்மாவென்னுங் கடவுள் எங்கும்நிறைந்தவனாகவே உடம்பின்கண் நிரம்பியிருக்கின்றான். ஆகலின், அப்புருடனென்னுஞ் சொல்லுக்குப் பொருளுமாவன். அப்புருடன் புண்ணியத்தினையும், பாவத்தினையும் ஒன்றன்பின் னொன்றாக முறையே அனுபவிக்கின்றான். அப்படிப்பட்ட புண்ணியமாவது, பாவமாவது நுகர்ந்தளவில் சமித்தொழியும். மானுடன்செய்த இருவினைகளையும் அனுபவியாதொழியாது. பாவஞ்செய்தவன் வறியனாய்ப் பஞ்சத்தினின்றும் பஞ்சமும், கவலையினின்றுங் கவலையும், அச்சத்தினின்றும் அச்சமும், மரணத்தினின்றும் மரணமும் அடைவன். உயிர்கள் கருமத்தினால் பலவகைப்பட்ட நிலைமையைப்பெறுகின்றன. விழாவினின்றும் விழாவும், சுவர்க்கத்தினின்றும் சுவர்க்கமும், தெய்வபக்தியுடையாரும் ஐம்புலனைத் தன்வயஞ்செய்தவரும், பொன்முதலிய தானஞ்செய்தவர்களும், நல்வினையையே அடைவார்கள்.

பாவிகளாற்கொலையுண்டவர்களோ? மிருகபயத்தால் வருந் துன்பத்தினையும், பாம்புமுதலியவற்றால்வரும் பயத்தினையும் பெறுவர். பாவத்தினைத் தாமேசெய்தவர்களுக்கு வேறு என்னவுரைப்பது. புண்ணியசீலரோவெனில், இல்லாமைமேற்கொண்ட காட்டினிடத்தும், நல்லசாந்தம்பூச்சு, நறுமலர்மாலை, இனியவாடை, அறுசுவையுண்டி, அழகியபணி, இன்பப்பாயல் முதலியவற்றினை யுடையராய் யாண்டும் புகழச்செல்வர். மானுடரின் அறமும், மறமும், இன்பதுன்பமென்னும் முனைகளை யுடையனவாம்.



ஓ! வேந்தே! வித்தானது முளையாவதற்கு நீரினையெவ்வாறு எதிர்பார்க்குமோ! அவ்வாறே அறமும் பாவமும் இடத்தினையுங் காலத்தினையும் எதிர்நோக்கும். அடியெடுத்து வைத்தலினால் நேர்ந்தபாவமும் முட்டைக்குந் துன்பத்தினைத்தரும். இவ்வாறே கெட்ட வெண்ணமுதலியன தலைவலிமுதலியவற்றினைத் தரும். அசுத்தமானவுண்டி வருபிறப்பினையும், சீத, வெப்ப, தாபத்தினையுந்தரும். மற்றதீவினைப்பயன்களையும் இவ்வாறே யுணர்ந்துகொள்ளுக. மானுடனானவன் எவ்விதத்திலேனும் பாவத்தையாயினும், புண்ணியத்தையாயினும், செய்வனேயொழியச் செய்யாதிரான். தேவத்தன்மையிலாயினும், மானுடத்தன்மையிலாயினும், ஏனையதிரியக்குத் தன்மையிலாயினும் புண்ணியபாவங்களை அவரவரனுபவிப்பார். பாவகருமத்தாலுண்டாகிற ஆற்றக்கூடாத துன்பங்களைப்பற்றி வினவினீரன்றோ! அவற்றையுங் கூறுகின்றேன் கேளும்.

ஏ! காவல! மானுடர் கெடுதலான எண்ணத்தோடு அன்னியன் மனைவியைப்பார்த்தாலும், கெட்டமனத்துடன் அவாவோடு பிறர்பொருளைக் காணினும், அவர்கள்கண்களை வயிரம்போன்ற மூக்கினையுடைய பறவைகள் பறிக்கின்றன. அவைகள் மீட்டும்வளர்கின்றன. இங்ஙனம் அப்பாவியர் எத்தனைநிமிடம் பார்த்திருந்தார்களோ அந்த நிமிடமொன்றற்கு ஆயிரமாயிரம் வருடமாக் இத்துன்பத்தினை யனுபவித்திருப்பர். எவன்பகைவனேயாயினும் நல்லறிவைக்கெடுக்கும்பொருட்டு எண்ணுவானோ, கெடுதியாகிய நூல்களைப் போதிப்பானோ, நூல்களின் உண்மைக்கருத்தினை மாறுபடுத்திக் கூறுவானோ, நன்மைதராத சொற்களைச் சொல்லுவானோ அப்படிப்பட்ட பாவத்தினையுடைய விவர்கள்தான் மலையுச்சியினின்றும் பலகாலும் கீழேவீழ்த்தப்படுவார்கள். தேவரையும், வேதியரையும், ஆசிரியனையும் நிந்தைகூறினவனுடைய நாவானது அடிக்கடி அறுக்கப்படுகின்றது. அன்னியர்மனத்தை நோகச்செய்தவர்களும், பிறர்க்குண்டாகும் நன்மையை மாற்றினவர்களும், நல்லோர்களுக்குத் துன்பவேதுக்களைச் செய்தவர்களும், உயிர்போமளவும் பிறருக்கு இடுக்கண்கள் செய்தவர்களுமாகிய இப்பாவியர் பனிக்கட்டியின்மேல் வீழ்த்தப்பட்டு பெருங்குளிரினால் மிகவருத்தப்படுவர்.

கொடிதாகிய எவ்வகைப்பட்ட மாமிசங்களையுமுண்டவர்கள் அச்சந்தரத்தக்க கோநாயினால் முதுகைப் பிளந்து தின்னப்படுவர். தனக்கு நன்மைசெய்தோனை மறந்து செய்ந்நன்றிகொன்ற அதமன் குருடுசெவிடுமுதலிய அங்கவீனனாய்ப் பசிதாகங்களினால் வருந்தி, காய்ந்த பானைகளிலிட்டு உதிரம்வடித்தெடுக்கக் குட்டயாதனை அனுபவித்துப்பின் பனிக்கட்டியின்மேற் கிடந்து குளிர்நோயடைந்து, இயந்திரங்களில் நசுக்குண்டு அசிபத்திரநரகமடைந்து, வாளாலறுப்புண்டு பின்காலசூத்திரநரகத்திற் றள்ளுண்டு சதைக்கப்பட்டுப் பல வேதனைப்பட்டும் தண்டனைமுடியாது. முடிவில் என்னவாக முடிவானோ யானறியேன்.

“என்னன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.”

என்பது வேதவாக்கியமல்லவா! எந்த வேதியர்கள் பிதிரர் சிராத்ததினத்தில் பெண்புணர்ச்சி செய்வார்களோ? அவர்கள் மலமும் உதிரமுஞ்சேர்ந்த நுரைகளை எல்லாவுறுப்புகளாலுங் குடிப்பார்கள். பொன்னைக்களவு செய்தவனும், பிரமகத்திசெய்தவனும், கள்குடித்தவனும், குருபன்னியைச்சேர்ந்தவனும் ஆகிய விப்பாவியர் கீழும்மேலுமாக எரிகின்ற நெருப்பில் ஆயிரம்வருடங்களாகச் சுடப்பட்டுப் பின்பு குட்டமுதலிய பெருநோயுடையவராகப் பிறந்து பிரமகற்பாந்தம்வரையில் இவ்வாறே அலைந்தலைந்துழல்வர். நரகத்துள்ளிருக்கும் உயிர்கள் இதனைவிட்டொழிந்துபோன எவ்வெப்பாவசேடங்களாலே யெவ்வெந்தக் கொடும்பிறப்பினை யெடுப்பாரோ அதனைக் கூறுகின்றேன் கேளும்.

இருபிறப்பாளன் பதிதனால் தனத்தைப் பெற்றுக்கொண்டால் கழுதையாகவும், உபாத்தியாயன் மனைவியை மனத்தாலிச்சித்தாலும், தாய்தந்தையரை யிழுத்தலைத்தாலும், நாகணவாய்ப் புள்ளாகவும், ஒருவனுடைய சோற்றையுண்டு அவனுக்குப் பகைசெய்தவன் குரங்காகவும், நம்பிக்கையாகவைத்தபொருளை வவ்வினவன் கழுதையாகவும், நம்பகத்துரோகஞ் செய்தவன் நாயாகவும், தானியதவசங்களைத் திருடினவன் கீரிப்பிள்ளையாகவும் எலியாகவும் பிறப்பார்கள். அயலான் மனைவியைத்தொட்டவன் பயங்கரமான கோநாய், நாய், நரி, கொக்கு, பருந்து, கோட்டான், பாம்பு இவைகளாகப்பிறப்பான். தமயன்மனைவி, குருவின்மனைவி, அரசன்மனைவி, இவர்களை யிச்சித்தவர்கள், ஆண்குயிலாகவும், செத்தப்பன்றியாகவும் பிறப்பார்கள். நிராயுதனாயுள்ளவனைக் கொன்றவன் கழுதையாவான். இன்னும் அனேகமான கொடியதீங்கான செய்கைகளைச்செய்த கொடியபாவிகள் புற்களாகவும், பூடுகளாகவும், புழுக்களாகவும், பலமரங்களாகவும், பலபறவைகளாகவும், பாம்புகளாகவும், கற்களாகவும்பிறந்து அவர்களனுபவிக்குந் துன்பத்திற்குக் கணக்கில்லையாகையால் அவைகளை விரித்துச்சொல்லின் பெருகுமெனவஞ்சி விடுத்தனன்.

எத்தகையவுயிர்களிடத்தும் இரக்கம், நல்லசொற்கள், மறுமைக்கினியதொழில், சத்தியம், உயிர்க்கினியமொழி, வேதத்தில்நம்பிக்கை, குரவர், தெய்வம், சித்தராதி பெரியாரைப்பூசித்தல், நல்லோருறவு, நல்வினையிற்சிந்தை, யாவரிடத்துநட்பு, அறிவு, தெளிவு, தருமவெண்ணம், ஆகிய விவையெல்லாம் சுவர்க்கத்திற் புகுவோர்க் கறிகுறிகளாம். ஓய்! அரசே! இதுகாறும் புண்ணியபாவியர்க்குண்டாகும் கதிகளைக்கூறினேன். நீரும் பார்த்துக்கொண்டுவந்தீர். இனி மற்றோரிடத்திற்குப் போவோம்வாரும் என்றழைத்த இயமதூதுவனை முன்னடத்தி விதேகராசன் போகமுயலுகையில், அந்நகரத்தில் பெருந்துன்பத்தை யனுபவித்துக்கொண்டிருக்குஞ் சீவர்கள் அரசனைநோக்கிக் கூறுவாராயினர். ஓய் மகாராசனே! எம்மீதருளுடையராய் இன்னும் முகூர்த்தகாலம் இங்குத்தாங்கியிரும். உமதுடம்பிற் றாக்கி வருங்காற்று எங்கண்மேற்படுதலால் மனக்களிப்பினையும், அறுவகை நோயையுந் தருகின்றது எனக்கூறினர். இம்மொழியைக் கேட்டவேந்தன் காலதூதனைநோக்கி வினவுகின்றான். நானிங்கிருந்தால் இவர்களுக்குச் சுகமுண்டாவதற்குக் காரணம்யாது! அவ்வளவு பெரும் புண்ணியம் உலகிலென்ன செய்திருக்கின்றேன் சாற்றுதி! என, இயமபடனுரைக்கலாயினன்.

ஐயா! பிதிரர், தேவர், விருந்தினர், ஏவலர், காக்கத்தக்க வேனையசுற்றத்தார், பெரியோர் ஆகிய விவரை உண்டிமுதலியவற்றால் உமதுதேகமுபசரித்தது. உமது மனம் அத்தருமத்தினிடத்திலேயே தங்கியிருந்தது. ஆதலின், புண்ணியமுடைய உமதுடம்பின் சம்பந்தமுடைய காற்று இப்பாவியர்மீது படுந்தோறும் அவர்கட்குச் சுகத்தைச்செய்கின்றது. அப்பொழுது அவர்கட்குத் துன்பமுண்டாகாது. மேலும் நீர் அஸ்வமேத முதலிய பெரியவேள்விக ளனைத்தினையுஞ்செய்து முடித்தவராதலின் உம்மைக்காண்டலினால் இயமன்றூதுவரும், நரகயந்திரங்களும், ஆயுதங்களும், தீயும், காகமும், மற்றெல்லாக்கருவிகளும் வலிகுறைந்து மெலியவாயிற்று என்றான். அதனைக்கேட்ட வரசன் என்னால் இவ்வுயிர்கள் சுகமடையும்பக்ஷத்தில் ஓ நல்லோனே! யானிவ்விடம்விட்டுப் பெயரேன்? இங்குத்தானே பெரும்பாரையைப்போலசைவற்றுக் கிடப்பேன் என்றான்.

அப்போது காலதூதுவன் வேந்தனைநோக்கி ஓமகாராசனே! போகலாம்வாரும் பீடையாற்சுற்றப்பட்ட இவரையொழித்துநீர்வருந்தித்தேடிய புண்ணியபோகத்தினை நுகரும்என்றான்.

அரசன், சுவர்க்கத்தேனும், பிரமலோகத்தேனும் துன்புறுவோர் துன்பத்தினையொழிக்க முயலாது தானொருவனேசென்று சுகமடைய வெண்ணுவோனுக்குச் சுகம் என்றுமுண்டாவதில்லையென்பது என்றுணிபு, ஆதலின், இங்கிப்பெருந்துயருழக்கு மிப்பிராணிகள் நானிருப்பதினாற் றுன்பமுறாதிருத்தலால் இவர்களைக்காவாது விடுவது பேச்சி மிக்கவிழிந்தது. இனி இவர்களுயிர்க்கு உறுதிதேடுவதே எனக்கு சுவர்க்கசுகமுண்டாவதற்காயினு மேலானதென்று தோன்றுகின்றது. ஆதலால் நீவிரைவிற்சென்றுவிடு என்றான்.

அதுகேட்ட காலதூதுவன் ஓய் வேந்தே! அறக்கடவுள், தேவர்கோமான் இவ்விருவரும் நின்னையழைத்துச்செல்ல வந்திருக்கின்றனர். நீர் மறுக்காதுபோம் என்றான். என்றலும்

அறக்கடவுள் ஐயா! அரசே! நீர் நன்கறம் புரிந்தவராதலின் உம்மைச் சுவர்க்கம் புகுவிப்பேன்? இவ் விமானமீதேறும்? என்றான்.

அரசன் அறக்கடவுளே! இந்நரகத்துத் துன்புறப்பட்ட பலவாயிரம பாவியர்கள் எம்மைக்காக்கவேண்டுமென்று இரக்கமுறுகின்றனர். ஆதலின் யான் வருதற்கிசையேன் என்றான்.

அதன்பின் இந்திரன் ஓய்! இறைவனே! இப்பாவஞ்செய்தவுயிர்களின் வினைப்படி நரகமடைகின்றனர். நீர்செய்த நல்வினையின்படி சுவர்க்கமடையவால்வேண்டும் என்றான்.

அப்பாலரசன் ஓய் தருமதேவதையே! தேவர்கோவே! எனக்கு எவ்வளவு சுகமுண்டாகுமென்பது உங்கட்குத் தெரிந்திருந்தா லதைச்சொல்லவேண்டுமென்ற அரசனைநோக்கித் தருமராஜன் கூறுவானாயினன்.

கோவே! மழையில் நீர்த்துளிகளைப்போலும், கங்கைக்கரையில் மணற்குவியலைப்போலும், ஆகாயத்தில் உடுத்திரள்களைப்போலும் நீர்செய்த புண்ணியத்திற்களவில்லை. இந்நரகிற்றுன்புறும் பாவியரிடத்துண்டான தயவினால் முன்னுண்டாயிருந்த புண்ணியம் ஆயிரம்பங் கதிகமாயிற்று. ஆதலால் சுகத்தை யனுபவிக்கும்பொருட்டுத் தேவருலகை யடைக என்றான்.

அப்போதரசன் அதனைக்கேட்டு ஓய் தேவர்கோவே! யான் இதுவரையினும் ஏதேனுஞ் சிறிது புண்ணியஞ் செய்திருப்பேனாயின் அதனால் இந்நரகத்துத் துன்புறும் பாவியரெல்லாம் துன்பத்தினின்றும் விடுபடுவார்களாக என்றான்.

அதற்கிந்திரன் அரசனைநோக்கி ஓய்! வேந்தே! இவ்வாறு இப்பாவியர்கட்காக நீர் தேடிக்கொண்ட பெ



ரும்புண்ணியத்தாலன்றோ? பாவத்தையொழித்து நரகத்தினின்றும் விடுபட்டுச் சுகமுற்றிருக்கின்றார்கள் பாரும் என்றான்.

கேட்டீரோ! தந்தையே! பின்பவ்வரசன்மேற் பூமழைபொழிந்தது. உடனே இந்திரன் அவ்வரசனை விமானமீதேற்றிச் சுவர்க்கம்புகுவித்தனன். அப்போது யானும், மற்றையரும் அந்நரகத்துள்ளே வேதனைப்படுத்தியிருந்த பாவத்தினின்றும் விடுவிக்கப்பட்டவராய் மேலே யாம் அடையத்தக்க மற்றொருபிறவியை யடைந்தோம். கேளும் அந்தணருள் உத்தமனே! எவ்வெப்பாவத்தால் எவ்வெப் பிறப்பினை யடைதல்வேண்டுமோ அவைகளெல்லாம் நேரேயனுபவித்த வென்னாலே கண்டவாறே யுமக்குக் கூறப்பட்டன. எனக்குச் செல் பிறவியுணர்ச்சி யுண்டாயிருப்பது வீணல்ல. தொழுதகு சிறப்புற்ற தந்தையே! இனியுமக்கு யான் கூறத்தக்க தென்னுள்ளதென்றான்.

அங்ஙனம் மகன்கூறியனவெல்லாம் முற்றுங் கேட்ட பிதாவானவன் மைந்தனைநோக்கி மைந்த! இதுகாறும் சமுசாரத்தி னிலைமையினையும், நாழிகை யளக்குங் கன்னல்வட்டிலைப்போல இடையறாது சுழன்றுகொண்டிருக்கும் இவ்வுடம்பினிலைமையுங் கூறினை; இவையாவுமறிந்தேன். ஆயின், இனியான் செயற்பாலதெதுவோ அதனைக் கூறல்வேண்டும் என, மகன்கூறுவானாயினன்:—

பிதாவே! ஐயமுறாது என்சொல்லினை நீர்நம்புவதுண்மையாயின் இவ்வில்லற வொழுக்கத்தினைவிட்டு, வானப்பிரஸ்தன் நிலைமை பெறுதல்வேண்டும். அங்ஙனம் பெற்றபின், அதனைவிதிப்படி யனுட்டித்து, வேள்விமுதலியவற்றினை முறையேவிடுத்து, நுங்கருத்தினைத் தன்னிலைநிற்கப்புரிந்து, சுகதுக்கமுதலிய துவந்துவங்களைவிடுத்து, எனதென்றெழும் புறப்பற்றையும், யானென்றெழு மகப்பற்றையு மொழித்துத் தனியேயிருந்து, மனத்தினையும், பொறிகளையும் தன்வசப்படுத்தி,

“நெடுநீர் மறவி மடிதுயிலி னான்கும்
கெடுநீரார் காமக் கலன்.”

என்பதூஉ ஒத்தாதலின் இந்நான்கு பெருந்தடைகளையுமொழித்து, விழிப்புள்ளவராய்ப்பிச்சையேற்றுண்ணும் துறவியாதிர். அத்துறவற வொழுக்கத்தினின்றும் போகமே பொருளெனக்கொண்டவராய், வெளிப்பரிசமுதலிய விடயசம்பந்தங்களை விட்டொழிந்தவர் பின்னர் யோகநிலையைப்பெறுவீர். அவ்வியோக மெத்தன்மைத்தெனின், நோய்கட்கு மருந்தையொத்தது. முத்திக்கு வித்தாயுள்ளது. தனக்கொப்பொன்றில்லாதது. அது உமக்குண்டாயின் நீர்செய்யும் யோகப்பழக்கம் மீட்டும் உமக்குப் பூதங்களோடுகூடுங் கூட்டுறவினை ஒழிக்கின்றது என்றான்.

அப்போது பிதாவானவர் குமாரா! எந்தயோகம் முத்திக்குக்காரணமாகுமோ? எதனால் யான் பூதங்களினின்றும் பிரிந்து, இனி என்றுமித்தகைய துன்பத்தினைப் பொருந்தேனோ? எதனால் சமுசாரக்கட்டினைத்து மற்றுவிடுமோ? எதனால் இரண்டுபடுந் திறமுண்டாவதில்லையோ? அப்படிப்பட்ட போகத்தினைக் கூறுதி! சமுசாரமென்னுங் கோடைவெயிலினால் உலர்ந்து பசையற்ற உடம்பினையும் மனத்தினையுமுடைய வென்னைப் பிரமஞானமென்னுங் குளிர்ந்த சொல்லமிர்தத்தினால் நனைத்திடுதி? அவித்தை, அஞ்ஞானமென்னுங் கொடிய விடப்பாம்பினால் கடியுண்டு விடந்தலைக்கேறிச் சாகக்கிடைக்குமென்னை உன்மொழி என்னுமருந்தால் பிழைப்பித்து, மனைவி, மக்கள், மாடம், பொருண் முதலிய எனதென்னும் மமகாரவிலங்குபூண்டுகிடக்கு மென்னை விரும்பத்தக்க வுண்மைப்பொருளுண்டு நல்லறிவை விளக்குதலினால் விடுவித்தி? என்றார்.

அதுகேட்ட சிறுவன் ஐயரே! கேளும். முன்னம் ஞானியான தத்தாத்ரேயர் நன்றாகக்காணப்பட்ட ஞானானுபவத்தால் அளர்க்கன் என்பவருக்கு யோகத்தினை எவ்வாறு கூறினரோ அதனைவிரித்துமக்குக் கூறுவல் என்றான்.

அங்ஙனங்கூறிய மைந்தன்முகநோக்கி மைந்த! அந்தத் தத்தாத்திரேயர் யார்மகன், அளக்கன்என்பவன் யார்! அச்சான்றோன் எவ்வாறு யோகநிலைமையை வினவினன். அதனைவிளங்கக் கூறுதிஎனத் தநயன் கூறுவானாயினன்.

ஐயரே! பிரதிஷ்டானமென்னும் நகரத்தில் கௌசிகனென்னும் பெயரினையுடைய ஓர்வேதியனிருந்தான். அவன் சென்றபிறவிகடோறுஞ்செய்த தீவினைப்பயனால் குட்டநோயால் மிகநோதலை யடைந்துகொண்டிருந்தான். அவன்மனைவி கொடுநோயால் வருந்துங் கணவனைத் தெய்வமாகவே நினைத்துக் கால்கழுவல், உடம்பினைத்தைவரல், எண்ணெய்பூசல், ஆடையுடுத்தல், உண்டியுதவல், கபம், உதிரம், சீழ் மூத்திரப்புரீடம் முதலியவற்றின் பெருக்கினைப் பல்காலுங்கழுவல், அந்தரங்கமான வுபசாரமனைத்தினையும் புரிதல், அன்போடுரையாடல், மிகவடங்கி யொழுகல்முதலியவைகளில் மிக்கபொறுமையுடையளாய், சிறிது மனங்கூசாது சிரத்தையோடு பூசித்துவந்தனள். அந்நோயாளியோ அறக்

கொடிய வெகுளியனாய் நிட்டூரவார்த்தைகளால் வைது, அச்சமுறுத்துவன். அக்கற்புடையாளோ, கொழுநன் அங்ஙனமாயினும் தான் வணங்கித்தொழுது மிகச்சிறந்தோனாகக்கொண்டு பணிபுரிந்திருந்தனள்.

பின்பந்த அந்தணன் உலாவித்திரியானாயினும் மனையாளைநோக்கி ஒருநாள் அடீ! பெண்ணே! இப்பட்டணத்து ராஜவீதியிலுள்ள கணிகைமாதொருத்தியை இன்றுகாலையிற் கண்டேன். இப்போது மாலையும் வந்தது. கண்டதுமுதல் அவண்மீதுண்டான அவாவினால் காமநோயதிகரித்து என்மனத்தினை விட்டொழிந்ததில்லை. அவள் என்னெஞ்சையொழித்தகலாள். அவள் வடிவமுற்றும் எத்துணைமேன்மையானது? அவளென்னை யணையாதொழியின் என்னுயிரழியும். பின்னர் உடம்பொன்றினையே நோக்குவை. மானுடர்க்குக் காமமென்பது மிகவினிமையன்றோ? அம்மாதோ பலராலும் இச்சிக்கப்படுகின்றவள். அவள்பால் யான் செல்வது முடிவுறாததேயாயினும் எண்ணமாத்திர மெனை விட்டகலாது துன்புறுத்துகின்றது என்றான்.

அங்ஙனங் காமத்தால்வருந்திய தலைவன் சொல்லைக்கேட்ட அக்கற்பினளாகிய நற்குலமாது தனதாடையை நன்றாகவுடுத்திக்கொண்டு, அவ்விலைமாதினுக்குப் பரியமாகக் கொடுக்கத்தக்க பணத்தினை யெடுத்துக்கொண்டு, ஓர் கூடையில் மெல்லியவஸ்திரங்களை உறுத்தாதபடிக் கனதியாகப்போட்டுத் தன்கணவனையெடுத்தக்கூடையில் மிருதுவாகவைத்து தன்றலைமீதெடுத்துக்கொண்டு இராசவீதி மார்க்கமாகச் செல்லும்போது அவ்விரவு மழைக்காலத்து கிருஷ்ணபக்ஷத்திருள்போலக் கறுத்து வழிதோன்றாது மின்னலால் வழிகண்டு மெல்லென நடக்கலாயினள். அப்போதவ்வழியில் மாண்டவியர் என்னுந் தொழுகுலச்செல்வர் களவுசெய்திலராயினுந் தம்வினையின் வலியால் களவுகுற்றத்தால் கழுவேற்றப்பட்டிருந்தனர். அக்கற்புடையாளது தலைமீதிருந்த கூடையானது கழுமரத்திலிருக்கும் முனிவனதுகாலிற்பட்டது. பட்டவுடனே அவன் தேகம் அசைவுற்று மிகுந்த வருத்தத்தை யுண்டாக்கினமையால் அதிகசீற்றங்கொண்டு கூறலாயினான்.

அனியாயமாக இவ்வாபத்துட்சிக்கி வருந்திக்கிடக்குமெனக்குமிக்கநோயுண்டாம்படிக்காரணமின்றியாராலசைக்கப்பட்டேனோ அப்படிப்பட்ட பாவியாகிய அதமன் சூரியனைநோக்குதலும் நாசத்தினையடையக்கடவன். என்று சபித்தனன்.

அப்போதந் நோயாளனைச் சுமந்துகொண்டுபோகுங் கற்பினள் முனிவனிட்ட கொடுஞ்சாபத்திற்கஞ்சி. அங்ஙனமாயின் சூரியனுதயமாகா தொழிக? வென்று தானுஞ் சபித்தனள். இவ்வாறு சபித்தலும் சூரியன் குணகடல் குளித்தெழுதலை யொழித்தனன். ஞாயிறெழாதொழியவும் உலகமுற்று மிருள்சூழ்ந்து என்று மிரவாகவேயிருந்தது. அவ்விருளில் பலபகற்போதிறந்தன. அதனால் அமரரும், அச்சமுற்றனர். வேதமோதலொழிந்தது. மந்திரங்களோதலாய கருமங்கள் ஒன்றுமின்றாயது. அந்தோ! உலகமெல்லாம் எவ்வாறு நாசமுறுகிற்கும். இரவு பகலென்னும் வேற்றுமை யில்லையாயின் பக்கமெங்குளது? மாசமேது? இருது எவ்வாறாம்? தக்ஷிணாயன உத்தராயணமெங்கே? யாண்டென்பது யாண்டுக்கிடந்தது. இவைகளில்லாதொழியின் காலவுணர்ச்சிக்கு மூலமுண்டோ? இக்கற்பினளுரையாற் சூரியன் புறப்படுதலில்லையாயிற்று. அக்கதிரவனெழுதலொழியின் மன்பதை ஸ்நானதானங்களைச் செய்யார். திக்கருமமும், வேள்வியும் நிகழுமா? வேள்வியில்லாவழி எமக்குத் திருத்தியுண்டாமோ? மாந்தர்கள் தக்கவாறு வேள்வியி னுரியபாகத்தைக் கொடுக்கின்றவாற்றாற் களிப்புற்றுப் பைங்கூழ்விளைய மழைபெய்வித்து மக்களைப் புரத்தல்செய்வேம். விளைவுண்டாயினவாற்றான் மானிடரெம்மைப் பூசிப்பார். அங்ஙனம் பூசித்தார் எண்ணத்தினையும் யாம் முற்றுவிப்பேம். யாம் நீர் பெய்விப்பேம். மாக்களெமக் கவிமழைபெய்விக்கின்றனர்.

எந்தமனிதன் எம்மைநோக்கி நித்த, நைமித்திக, பிறகருமங்களைத் தொடங்கி எமக்குரிய அவிர்ப்பாகங்களைக் கொடாது தானேநுகர்வனோ? அவனையழித்தற் பொருட்டேயாம் நீர், இரவி, நெருப்பு, காற்று, நிலம் இவற்றைக்கெடுத்துவிடுகின்றேம். இங்ஙனமாக அவைகளனைத்திற்குங் காரணனான பகலோனில்லாமையால் மழையின்றி மேற்கூறியவனைத்துங் கட்டோடே சாய்ந்தது. அந்தோ! இனிப் பகற்போதெவ்வாறுண்டாம். வேள்விபுரிதலொழிந்ததேபோலும். என்றிவ்வாறு சுரர்கள் ஒருவரோடொருவ ருரையாடி ஏக்கமுற்றுச் சிந்தித்துக் கிடந்தனர். இங்ஙனமிவ்வா றேங்கிக் கிடக்குமவர்களைநோக்கிப் பிரமன் கூறுவானாயினான்.

ஓய் தேவர்களே! ஒளி ஒளியானே யடங்குதல் வேண்டும். தவம் தவத்தானே யொடுங்குகின்றது. ஆதலால், என்னுரையைக் கேட்பீர்களாக. இம்மாதின் கற்பின் பெருமையால் இனிவேறு பரிகாரங்காணப் படுதலில்லை. அதனா லுங்கட்கும், மானுடர்க்கும் நேருந்துன்பமொழியாது. ஆயின், அத்திரிமுனிவரின் பத்தினியும்



பெருங்கற்பினளாகிய அனுசூயையிடம் நீவிரனைவருஞ் சென்று அவரை வழிபட்டு ஞாயிறெழுச்சியின்பொருட்டுப் பிரார்த்தியுங்களென் றேவினன். ஏவலும், தேவர் சென்று அவ்வம்மையைத் துதித்தனர்.

கேளுந்தந்தையே! பின்பவ்வாறே தேவராற் பூசிக்கப்பெற்ற அவ்வநுசூயையானவர் சுரரைநோக்கி நீவிரெதனைவிரும்பி வேண்டாநிற்கின்றீரென்றனர். தேவர் பண்டையவாறே தினகரன்றோன்றி பகலிரவென்னும் வேறுபாடுண்டாகவேண்டியே யென்றனர். அவ்வம்மையுற்றுநோக்கிக் கற்புடையாளது பெருமை கெடுவதல்லவாதலின், நீவிரனைவரும் அவ்வம்மையாரை நன்குபசரிமின். பழையவாறே இரவும்பகலு முண்டாதல்வேண்டும், அக்கற்புடையாள்கணவனு முயிர்பெற்றிருத்தல்வேண்டும். அங்ஙனம் பகலையாக்குகின்றேன் என்று கூறி அனுசூயை அக்கற்பினள்மனைக்குச் சென்றனள்.

இங்ஙனம் அம்மங்கலத் திருமனைக்குட்புக்கு அவராலுபசரிக்கப்பெற்று, க்ஷேமங்களையுசாவி, ஏ! செல்வத்திருமகளே! நீயும், உன்கணவனும், உன்னறமும் நன்றுவாழ்கின்றனிரோ? ஏ! சௌபாக்கியவதி! உன்கணவன்முகத்தினைக் கண்டமாத்திரையால் களிப்படைகின்றனையன்றோ? தேவரனைவரினும் நின்கொழுநன் சிறந்தோனாக நீ போம்புகின்றனையன்றோ? யான் ஏன் வினவுவதென்பையேல், மாதர்க்குக் கற்பொன்றினாலே எல்லாமேன்மையு முண்டாதல்வேண்டும். என் தலைவரை நான் பூசித்தலானே பெரும்பயனை யடைந்திருக்கின்றேன். மாதர்தங்களுக்குரிய தருமத்தினை நன்குணர்ந் தொழுகல்வேண்டும் என, அஃதெவ்வாறன்னையேயென வக்கற்பினள் வினாதலும், அனுசூயை கூறலாயினர்.

கற்புடையாளே! மனிதனுக்கு ஐவகைக் கடனுள்ளன. அவை தேவர்கடன், பிதிரர்கடன், மானுடர்கடன் முதலியனவாம், இல்லறத்தான் அக்கடனை எப்பொழுதுந் தீர்த்துவருதல் வேண்டும், தருமத்தினுக்கு மாறாது பொருளினைத்தேடி, தக்கவழியிற் செல்வுசெய்து சத்தியந்தவறாது இருத்தல்வேண்டும். இவ்வாறொழுகு மானுடமகன் தன்சாதிக்குத்தக்க புண்ணியவுலகினையேபெறுவன். பின்னர் பெருமுயற்சியால் பிரமலோக முதலியவற்றினைப் பெறுவன். இவ்வண்ணம் அரிதுமுயன்று ஆண்மகன் தேடிய வெல்லாத் தருமத்தினும் அரைப்பங்கு பயனை அவ் வாண்மகனுக்கு வாழ்க்கைத்துணையாய் நின்று பூசித்துவரும் மனைவி கொள்ளைகொள்கின்றனள். மாதர்க்கு வேறுவேள்வி, பிதிரர்கடன், விரதம் நோன்பு இவையாவுமில்லை. இவ்வகைய மாதர்கொழுநனையோம்புதல்செய்யவேண்டுமென்னுஞ் சத்தியவெண்ணம் ஒன்றினாலேதானே தாமிச்சித்த வுலகினைப் பெறுகின்றனர். ஆதலால், ஓ! பெருங்கற்பின் மாதே! கணவனை வழிபடுதலைப்பற்றி நினக்கு ஞாபகஞ் செய்தனன். உனக்கு மேலானகதி உன் கொழுநன்றான். அவனிடத்தே நின்னெஞ்சு எப்பொழுதுஞ் சென்றிருத்தல்வேண்டும். நாயகன் புரியும் எவ்வகைப்பட்ட நற்கருமத்திலும் சரியொத்த பாகத்தினை கற்புடைய மனைவி பெறுகின்றனள் என்றார். அதுகேட்ட கௌசிகன் மனைவி அன்போடு அன்னையே! நீர் நன்றுகூறினிர் என்றுமிகுந்த அடக்கவொடுக்கத்துடன் கூறுவளாயினள்.

இயற்கை மங்கலச் சருவலமாகிய என்னம்மே! எனக்குச் சிறிதேயுண்டாயிருந்த பதி பத்தியை வளர்க்கின்றனையே! யான் புண்ணியமுடையவளாயினேன். அருளப்பாட்டையும் பெற்றவளாயினேன். தேவராலும் நன்றருள் செய்யப்பெற்றேன். தேவரீர் கூறியசெய்தியானுமறிவேன். உண்மையே! மாதர்க்குக் கணவனோடொத்த நற்கதி சத்தியமாகவே வேறொன்றுமில்லை. ஆதலால் மாதர்க்குக் கணவனேயன்றோ பெருந்தெய்வம். தொழத்தகும் அநசூயைத் தாயே! நீரும் அத்திறத்துப் பெருங் கற்புடையவரன்றோ? யாவருந்தொழத்தகும் நீர் என் சிறுகுடிலுக்கு யாது கருமத்தா லெழுந்தருளியதோ அதனைப் பகறல்வேண்டும் என வினவினள். அப்போது அனுசூயையானவள் கூறுவாளாயினள்.

ஏ! கற்பினுக்கரசியே! இவ் விந்திரன் தேவர்களோடு என்பாலணுகிக் குறையிரந்தனன். இராப்பகலும், நற்கருமங்களும இழந்தோராய் வருந்தி முன்போலப் பகலிரவுண்டாகப் பெறுதல்வேண்டி நின்னை யிரக்கின்றனர். அவர்பொருட்டாக யானும் நின்பாலணுகிவந்தேன். யான் கூறுமொழிகளைச் சற்று நெஞ்சிருத்திக் கேட்பாயாக. தவமுடையாளே! பகலேயில்லாதொழியின் எத்தொழில்தான் நடக்கும். சூரியனைக் காணாவிடின் மழைபெய்யுமா? மழையில்லையாயின் பைங்கூழ் விளைவுண்டாமா? அது விளையாதொழியின் உலகம் பிழைக்குமா? உன்சொல்லால் உலகமே பாழ்படுகின்றது. உலகமனைத்திற்கு முண்டாயிருக்கும் பேரிடரை யொழிக்கவேண்டுமென்னுங் கருணை யுனக்குண்டாகுமாயின் கற்புடையாளே! முன்போலச் சூரியோதயமாம்படி அனுக்கிரகஞ்செய்யவேண்டும் என்றார்.

அங்ஙனம் அந்தப்பார்ப்பினியும், பெரும்புகழ்க் கற்பின் அநசூயையாரே! மாண்டவியமுனிவர் பெருஞ்சினம்பூத்தவராய்க் கதிரவனுதயமா[illegible] றிந்தொழி

வாயென்று என் தலைவரைச் சபித்தனரே! யானென் செயக்கடவேன் என்றாள்.

அதற்கனுசூயை ஓ! கற்புடையாய்! யான் சொல்லுஞ் சொல் உனக்கினிமையாயிருப்பின், யானென் மொழியால் உன் கணவன் முன்போல நல்லயாக்கையுடையனாய்ப் பிழைத்திருக்கச் செய்கின்றேன். யான் கற்புடையமாதரிடத்துப் பெரும்புகழையும், மகிமையையும் சிறப்புச்செயற்பொருட்டே எப்பொழுதும் முயல்வது. ஆதலால் இங்ஙனம் யானுன்னை யிரக்கின்றேனென்றார்.

பின்னரக் கௌசிகன்மனைவி அனுசூயையார் மொழியைக்கேட்டு அவ்வாறே யாகுகவென்றாள். அப்பால் பெருந்தவமுடையளாதலின் அவ்வனுசூயையார் பத்திரவும் ஓரிரவாகிய அவ்விரவில் அருக்கியநீரைக் கையிலேந்திச் சிந்தித்து மார்த்தாண்டனை வரக்கடவாயெனக் கூறினள். உடனே அப்பரிதியும் அன்றலர்ந்த ஆயிரத்திதழ்த் தாமரைமலர்போலும் செம்மண்டல முடையனாய் உதயகிரியிற் றோன்றினன். பின் பக்கணத்திற்றானே அக்கற்புடையாளது கணவன் ஆவிவிட்டவனாய் நிலத்தில்வீழ்ந்தனன். உடனே அக்கற்புடையாள் தாங்கிக்கொண்டனள்.

அப்போது அனுசூயையார் அம்மாதினைநோக்கி ஓ! சௌபாக்கியவதி! நீவருந்துதலொழிக? என்னாற்றலைப்பார்? யான் நெடுங்காலமாக என்கணவரைத் தொழுது சிறுதவமுடையவளாயிருக்கின்றேன். என் மனமானது எனது நாயகரோடு எல்லாநற்கருமங்களினும் ஒத்த வேறொருபுருடன் உள்ளானெனக் காணுமவிருப்பது எவ்வாறு சத்தியமாயிருக்கின்றதோ அப்படிப்பட்ட சத்தியத்தால் இவ்வேதியனும் நோயொழிந்து மீட்டும் இளமைபெற்று உயிர்பெற்றெழுந்து மனைவியோடு நூறாண்டு பிழைத்திருக்கக் கடவன்! என்கணவனுக்கொப்பான வேறுதெய்வத்தினைநான் பாராதது எவ்வாறுசத்தியமோ! அச்சத்தியத்தினால் இவ்வேதியன் மீட்டும் பிழைத்து நோயற்றவனாய் வாழ்க!! நான் எப்பொழுதும் என்கொழுநரை மனமொழி மெய்களால் வழுவின்றிப் பூசிப்பது எவ்வாறு சத்தியமோ? அச்சத்தியத்தால் இவ்விருபிறப்பாளன் பிழைக்கக்கடவன் என்று பிரமாணத்தோடு முக்காலுங் கூறினர்.

கேட்டீரோ! தந்தையே! பின்னரக்கௌசிகன் பிழைத்தெழுந்து, நோயொழிந்து, இளமைபெற்றவனாய்த் தன்தேகவொளியால் மனைமுழுவதும் பிரகாசிக்கச் செய்தவனாய் அமரர்களைப்போலும் மூப்பற்றவனாயிருந்தனன். அப்போது பூமழைபொழிந்தது. தேவதுந்துபி முழங்கிற்று. தேவர்களனைவரும் பெருமகிழ்வெய்தி அவ்வனுசூயைத் தாயைநோக்கி ஓ! மங்கலப்பெருக்குடையீர்! உனக்கென்னைவேண்டுமோ அதனைக் கேளும், வானவர்கட்காகத்தக்கபெருங்கருமத்தினை முடித்தீராதலால் அவர்கள் வரந்தரநிற்கின்றனர் என.

அனுசூயையாரும் யான் வேண்டும்வரத்திற்கு யான் தக்கவளேயென்பது உங்கட்குத் தோன்றுமாயின் பிரமன்விஷ்ணு மகேச்சுரன் இம்மூவரும் என்மகவாகப் பிறக்கக்கடவர். என்கணவரோடு யான் துன்பமொழிவின்பொருட்டு யோகத்தினைப் பெறுக என்றார்.

அப்போது முத்தேவரும் அவ்வாறே யாகுகவென்று அனுக்கிரகித்துப் பழையபடித்தத் தமிடஞ்சென்றனர் என்று மகன்கூறிய மொழியைக்கேட்டுத் தந்தையானவர் மகனைத்தழுவி சந்தோஷமுற்றிருந்தனர்.

## ஆய்ந்தோய்ந்துபாராதவன் தான்சாகக்கடவன்.

ஓர்பெரியகிராமத்திலே ஒரு ஏழைக்குடியானவன் ஐயமேற்றுக் கஷ்டஜீவனஞ் செய்துகொண்டு பிரமாணந்தமுற்றிருந்தான். அவனுக்கோர் மைந்தனுதித்து வளர்ந்துவருகையில் தந்தைக்கு இறுதிநாள் சமீபித்திருத்தலைக்கண்டு தகப்பனிடஞ்சென்று ஓ! தந்தையே! நான் சீவிப்பதற்கும், என்னுடைய கலியாணமுதலாகிய சடங்குகட்கும் பொருளீட்டி வையாமற் போய்விடுகின்றீரே! யான் எவ்வாறு ஜீவிப்பது என்று துக்கித்தான். தந்தையானவன் மகனைநோக்கி அப்பா! யானென் செய்வேன் நாம் ஜீவிப்பதற்கே மிகுந்த கஷ்டத்திலிருக்கின்றதே யானெவ்விதத்தில் பொருள் சம்பாதித்துவைப்பது! ஆயினும் பெரிதல்ல நீபோய் ஓரேடும், எழுத்தாணியுங் கொண்டுவாவென்றான். மகன் அக்கணமேசென்று ஏடும் எழுத்தாணியுங் கொண்டுவந்து தகப்பன்கையிற் கொடுத்தான். அதை அவன்வாங்கி "ஆய்ந்தோய்ந்துபாராதவன் தான்சாகக்கடவன்" என்று அவ்வேட்டில் எழுதி மகன்கையிற்கொடுத்து இதை பெரிய பட்டணங்களிற் கொண்டுபோய் விற்பாயானால், எந்த அரசராவது சக்கிரவர்த்திகளாவது வாங்கிக்கொண்டு நீ சொன்னபொருள் கொடுப்பார்கள். அதனால் நீ சீவித்திருவென்றுசொல்லி உயிர் விடுத்தனர்.

உடனே மகன் தந்தையை அடக்கஞ்செய்துவிட்டு செய்யவேண்டிய ஈமக்கடன் முதலிய கிரியைகள் முற்றுஞ் செய்துமுடித்துத் தகப்பன் எழுதிக்கொடுத்த சீட்டையெடுத்துக்கொண்டு பெரியபெரிய பட்டணங்கள்தோறும் போய் விலைகூறி வரும்போது ஒருபட்டணத்தையாளுஞ் சக்கிரவர்த்தி அவனையழைத்து அச்சீட்டைவாங்கி வாசித்துப்பார்த்து இவ்வாக்கியத்தில் ஏதோ ஒரு மகத்தான விஷயம் அடங்கப்பெற்றுள்ளது என்று யோசித்து, அச்சீட்டை வாங்கிக்கொண்டு அவன் சுமக்கும்படியான பொருளைக்கொடுத்துப் போகச்சொல்லி அனுப்பிவிட்டு இச் சீட்டைக் கொண்டுபோய் தன்னுடைய மந்திரவாளின் உறையில் போட்டு வைத்துக்கொண்டான். இவ்வாறிருக்கும் போது, அரசனுடைய பள்ளியறையை அலங்கரிக்கும் வேலைக்காரன் நெடுநாளாக தான் அலங்கரிக்கும் மஞ்சத்தின்மீது சயனித்துப் பார்க்கவேண்டுமென்கிற எண்ணமுள்ளவனாக விருந்தாலும் அரசனுடைய பயத்தால் அவ்வாறு செய்யாமலே தள்ளிக்கொண்டுவந்தான். இவ்வாறெழுகுநாளில் ஒருநாள் அறையை அலங்கரித்துவிட்டு உற்றுநோக்கும்போது இதுகாறுஞ் செய்யும் அலங்காரத்தைக் காட்டிலும் அன்றையதினம் அதிக சிங்காரமாகவிருந்தது. வேலைக்காரனுக்கோ அதைவிட்டுப் போக மனமில்லாமல் இன்றையதினம் இப்பஞ்சணையின்மீது சயனித்து அதனாலுண்டாகுஞ் சுகத்தை யறியவேண்டுமென்று துணிந்து மஞ்சத்தின்மீதேறிச் சயனித்தவுடனே அவனுக்குண்டான ஆனந்தம் இவ்வளவெனச்சொல்லிமுடியாததாயிருந்தது. அவன்சயனித்தபடி அவ்வறையை நோக்கும்போது அங்கோரிடத்தில் அரசன் போர்த்துக் கொள்ளப்பட்ட பீதாம்பரம் ஒன்று வைத்திருந்தது. அவ்வேலைக்காரன் அதையெடுத்து நெடுகமுக்காடிட்டு தன்தேசம்தெரியாமல் போர்த்துக்கொண்டவுடனே, தன்னுடைய ஏழ்மைத்தனத்துக்குத் தகுந்ததுபோலே சிலைப்பாயும் மணைக்கட்டைத் தலையணையுமோ, அதுவுமில்லாமல் கல்லைத்தூக்கித் தலையின்கீழ் போட்டுக்கொண்டோ படுத்துக்கொள்ளுகிறவன் அரசனுடைய அம்சதூளிகா மஞ்சத்தின்மீது படுத்தால் அவனுக்கென்னமாயிருக்கும். தன்னைமறந்து நித்திரைபோய்விட்டான். அரசனோ அன்றையதினம் கொலுமண்டபத்திலிருந்து வருவதற்குக் காலதாமதப்பட்டது. அரசன் மனைவி நெடுநேரம்பார்த்தும் தனது நாயகன் வாராமையால் பள்ளியறையைநோக்கி வந்து பார்க்கும்போது மஞ்சத்தின்மீதில் சயனித்திருப்பவனைக் கண்டு அரசனென்று கருதி அரசசபையில் ஏதோ மனவருத்தப்பட்டு யாருடனுஞ் சொல்லாமல் வந்து சயனித்துக்கொண்டிருப்பாரென்று யோசித்து மறுபடியும் மடைப்பள்ளிக்குப் போய் பழவர்க்கங்களும், பலகாரவகைகளும், பருகுந்தினுசுகளும் பெரியதோர் தாம்பாளத்திலெடுத்துக்கொண்டுவந்து பள்ளியறையில் வைத்துவிட்டு மஞ்சத்திலேறி அரசன்பக்கத்தில் ஒருபுறமாகத் தானுஞ் சயனித்துக்கொண்டு நித்திரை போய்விட்டனள்.





அரசன் சபாமண்டபங் கலைந்தவுடனே மந்திரியை அனுப்பிவிட்டுத் தான் தனதரண்மனைக்குவந்து பள்ளியறையில் போய்ப்பார்க்கும்போது தன்மனைவி அன்னியபுருஷனோடு சயனித்திருப்பதைக்கண்டு மிகுந்த கோபங்கொண்டு இருவரையும் வெட்டிவிட வேண்டுமென்று உறைக்குள்ளிருந்த மந்திரவாளைக் கோபத்தோடுபிடுங்கினான். பிடுங்கும்போது அதனுள்ளிருந்து என்னமோ ஒன்று காலின்பேரில்வீழ்ந்தது. அது என்னவென்று எடுத்துப் பார்த்தான். அது சீட்டாகவும் அதில் "ஆய்ந்தோய்ந்து பாராதவன் தான்சாகக்கடவன்" என்றுமெழுதியிருக்கக்கண்டு உருவிய வாளை உறைக்குள்ளேயே போட்டுக்கொண்டு மந்திரி வீட்டுக்குப்போய் அவனையழைத்துக்கொண்டு வந்து தன்மனைவி கெட்டநடையையுடையவளாயிருக்கின்றாள் பார்த்தாயாவென்று காண்பித்தான். மந்திரி நரபதியை நோக்கி ஓ அரசே! உமது சந்தேகம் நீங்கும்படியான தந்திரம் யானொன்று செய்கின்றேன் பாருமென்று அரசனை ஒருபுறமாக நிறுத்திவிட்டுத் தான் மறைவாக நின்றுகொண்டு மெல்லெனக் கையைத் தட்டினான். அரசன் மனைவி மிகுந்த சாக்கிரதையுடையவளாதலால் அதிக விரைவுடன் எழுந்து மந்திரியை நோக்கித் தேகம்வியர்க்கக் கோபங்கொண்டு மெல்லியகுரலுடன் அரசனும்யானும் சயனித்துக் கொண்டிருக்கும் அறைக்குள் வருவது உத்தமபுருஷனுக்கு நீதியல்லவே என்று அந்தப்புரத்திற்குப்போக எத்தனித்தாள்.

மந்திரி அவள்பின்னேசென்று அம்மணீ! மகாராஜா கொலுமண்டபத்திலிருந்து எப்போது வந்தனர் சொல்லவேண்டுந் தாயேஎன்றனன். இராணி ஏ! மந்திரீ! கோமான்வந்ததை யான்பார்க்கவில்லை. பள்ளியறையில் வந்து பார்க்கும்போது சயனித்துக்கொண்டிருந்தனர். சபாமண்டபத்தில் யாதுகாரணத்தாலோ மனவருத்தமடைந்திருக்கலாம், அதனால் வந்து ஒருவருடனும் பேசாது சயனித்துக் கொண்டாரென்று நினைத்து யானும் பக்கத்தில் சயனித்துக்கொண்டேன். நீ அறிவுடையவனாயிருந்தும் சயனகிருகத்திற்கு வந்ததுமல்லாமல் பின்றொடர்ந்து இவைகளையெல்லாங் கேட்பது தக்கதல்ல. எவ்வளவு தகாதகாரியம் நடந்தபோதிலும் ஏவலாளர்களால் எழுப்பவேண்டுமேயல்லது தனித்து தைரியத்தோடுவந்து என்னை இவ்வாறெழுப்புவது தகுதியல்லவே என்று போய் தன்அறைக்குட்புகுந்து கொண்டனள்.

மந்திரி பள்ளியறைக்குவந்து மஞ்சத்தின்மீது நித்திரை செய்பவனைத் தட்டி யெழுப்பினன். அவன் சுத்தமடையனாகையால் உடனே எழுந்திராது அந்தண்டையும் இந்தண்டையும் புரண்டு புரண்டு நிமிர்விட்டு வாயில்வந்ததைப் பினத்திக்கொண்டு எழுந்து உட்கார்ந்து கண்ணைத்துடைத்து மந்திரியைநோக்கிக் கைகால் நடுங்கப்பயந்து மஞ்சத்தினின்றும் கீழேவிழுந்து எழுந்து நின்றான். மந்திரி அவனைப்பார்த்து அப்பா! பயப்படவேண்டாம் உன்பக்கத்தில் படுத்துக்கொண்டிருந்தவர்கள் யார்! என்றுகேட்டான். அதற்கு வேலைக்காரன் சுவாமி! என்பக்கத்தில் யாருமேபடுக்கவில்லை, படுத்தவன் யாரொருவனோ! என்றான். மந்திரி அடே! நீ மகாராஜா சயனிக்கப்பட்டமஞ்சத்தின்மீது படுக்கத்தகுமா? என்றான், வேலைக்காரன் சுவாமீ! யான் கொண்டிருந்த நெடுநாளைய ஆசையால் படுத்துக்கொண்டேன் என்றான். மந்திரி இவ்வார்த்தையைக்கேட்டு அவனைக் காவலில்வைத்து, அரசனிடத்திற்போய் அரசே! உமக்குள்ளிருந்தசந்தேகம் நீங்கிற்றோ? என்றனன். இவ்வளவு திருஷ்டாந்திரமாகக்கேட்டும் அரசனது சந்தேகம் நீங்காமல் ராணியாகிய தனது மனைவியிடஞ்சென்று கோபத்தோடு அவளை நோக்கிப் பெண்ணே! நீ நமது வேலைக்காரனோடு மஞ்சத்தின்மீது படுத்துக்கொண்டிருந்தமையால் எண்ணெய்க் கொப்பரையில் மூழ்கிவாராது உன்னைச் சேர்க்கமாட்டேன். அப்படிச்செய்யா தொழிவையாயின் உன் தாயகஞ்சேரக்கடவாய் என்றனன். அதற்கவ் வுத்தமியானவள் அன்னியபுருடனாற் பரிசித்த இத்தேகம் இருந்தென்னபிரயோசனத்தை யடையப்போகிறது, கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில் மூழ்குவதே உத்தமமென்று யோசித்து எண்ணெய்க் கொப்பரை தயார்செய்யும்படி உத்திரவுசெய்தனள். இதனைக் கண்ட மகாராஜா சாந்தமுடையவனாய் பெண்ணே! கடவுளருளால்சிலநாளைக்குமுந்திகிடைத்த இந்துண்டுச்சீட்டினால் உன்னுடைய உண்மையையறிந்து கொண்டேன். நீ இங்ஙனஞ் செய்யவேண்டாமென்று தடைசெய்தனன்.

அதற்கம்மன்னன்மனைவி அரசே! அன்னிய புருடனால் ஸ்பரிசிக்கப்பட்ட அசுத்தமானஇவ்வுடல்உம்மால் தொடத்தக்கதன்று. நீர் தொடவேண்டாம். எட்டிநில்லுமென்று வணங்கி எண்ணெயில் விழப்போகுஞ்சமயத்தில் பாங்கிகளால்தடுத்து பெண்ணே! தெய்வகடாக்ஷத்தால்கிடைத்த இச்சீட்டை இங்கு கொதித்துக்கொண்டிருக்கும் எண்ணெயிற் போட்டுப் பரீக்ஷைசெய்கிறேன். என்று போடப்போகுஞ்சமயத்தில் மந்திரிவந்து ஓ! அரசே! இச்சீட்டை சிலநாளைக்குமுந்தி ஒருசிறுவன் கொண்டுவந்து தங்களிடம் விற்றானல்லவா? ஆகையால் இதை என்னுடைய மனைவி பதிவிரதையென்பது உண்மையாயிருக்குமாயின் இச்சீட்டு எண்ணெயினின்றும் வேகாமல் மிதக்கவேண்டுமென்று இதனுள்போடும் என்று சொல்லினான். அரசன் இதுவே தக்கதென்று தன்னுடைய இஷ்ட தேவதையைத் தியானித்துக்கொண்டு கொதித்துக்கொண்டிருக்கும் எண்ணெய்க் கொப்பரையில் இச்சீட்டை விட்டெறிந்தனன். எறிந்த அச்சீட்டானது வேகாமல் மிதந்துகொண்டிருந்தது. இவ்வாறிருப்பதைக்கண்ட ராணியானவள். இச்சீட்டினுடைய உண்மைமாத்திரம் வெளிப்பட்டதேயன்றி நமது உண்மை வெளிப்படவில்லையேயென்று கண்டோர் யாவருங்கலங்கும்படித் திடீரென எண்ணெய்க்கொப்பரையிற் குதித்தனள். குதித்தவுடனே கொதிக்கும் எண்ணெயானது பனிநீரைப்போல் குளிர்ந்து, எரிந்து கொண்டிருக்கும் அனலும் தணிந்துபோய் விட்டது. அப்போது தேவதுந்துபி முழங்க ஆகாயத்தினின்றும் புஷ்பவருஷம் பொழிந்தன. அவ்வரசன் தனதுமனையாட்டியைக்கட்டியணைத்து எனதரசியே! உன்னைப்போன்ற உத்தமியை இதுகாறும் இவ்வுலகில் யான்கண்டதில்லை! உன்னையொத்த உத்தமஸ்திரீகள் உலகிலிருப்பதினாலே யல்லவா சூரியசந்திரர்கள் கதிமாறாமலும், காலந்தவறாமல் மழைபெய்துகொண்டும், ஆகாயம் அந்தரத்தில் நின்றுகொண்டும் இருக்கின்றன எனப்புகழ்ந்து, மந்திரியைநோக்கி அறிவிற்சிறந்த அமைச்சே! நீ என்சந்தேகம் நீங்கும்படிச் சமயோசிதமானயுக்தி செய்தபடியாலன்றோ எனதுமனைவியை யானடையப்பெற்றேன். நீ இவ்வளவு செய்யாதிருப்பையேல் என்வாளுக் கிரையாக்கிவிட்டிருப்பேன் என்று மந்திரியைக்கனப்படுத்திச் சீட்டுவிற்ற சிறுவனை வரவழைத்து அவனுக்குத் தனதிராச்சியத்திற் பாதிகொடுத்துச் சுகமாக அரசாண்டுவந்தான். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் மிகுந்த பொறுமையுடன் எந்தக்காரியமும் நடத்திவருவோமாயின் கடவுள் கிருபையுண்டாய் அரசனைப்போலவும், அவன் மனைவியைப்போலவும் சுகமாகவாழ்வோம்.

---

## அறிவுடைமை.

சோர்வுவாராதபடிக்கும், பகைவராற் றுன்பம்வராதபடிக்கும், காக்கின்றதற்கு அறிவே காரணமாதலால், அவனிடத்து எப்போதும் சிந்தைவைத்து நடக்கவேண்டும்.

மனம்போனவழியிற் புத்தியைப் போகவிடாமல் நன்மார்க்கத்திற் செலுத்துவது அறிவேயாதலால், அதை சிந்தித்திருக்கவேண்டும்.



மாறிமாறிவரும் (ஸாத்விகம், ராஜஸம், தாமஸம்) எனும் முக்குணங்களின் தன்மையால் நல்லபொருளைத் தீயோரிடத்திலும் தீயபொருளை நல்லோரிடத்திலும் கேட்கினும், அவைகளின் தன்மைகளைப் பகுத்தறிந்து, உண்மை இஃதென்று கண்டறிவதே அறிவாம்.

அறிவில்லாத மனிதர் வறுமையிற் றுன்பப்படுவதற்குப் பலத்ருஷ்டாந்தம் வேண்டுவதில்லை; ஏனெனில், அறிவுடையவன் பலஹீனனாக விருந்தாலும் இக்கட்டுவந்தவிடத்துத் தப்பித்துக்கொள்வான்; அறிவிலான் பலசாலியாக விருந்தாலும் ஒருவனால் உயிரிழக்கும்படி நேரிட்டகாலத்தில் தப்பித்துக்கொள்வது கடினமென்று முன்னோருரைத்த பிரமாணத்தால் தெரிந்துக்கொள்ளலாகும்.

பின்வரும் நன்மை தீமைகள் இவ்விதமாக வருமென்று புத்திகூர்மையால் முன்னறிந்து நடப்பவர்களே அறிவுடையாரென்றும், அப்படிக்கறிந்து நடவாதவர்களறிவிலாரென்றும் பெரியோர் சொல்லியிருப்பதை நாமும் அநுபவமாக வறியவில்லையோ?

இதற்கொரு கதையுண்டு; எப்படியெனில், ஓர் தடாகத்தில் மூன்று மீன்களுண்டு; அவைகளிலொன்று வருங்காரியமறிந்து தக்கபடி முயலுமறிவுடையது; மற்றொன்று ஒருகாரியம் நேர்ந்தபின் தகுதியான யுக்தி செய்து பலனடையத்தக்க அறிவுளது; மூன்றாவது வருவது வராமற்போகாதென்று கருதி முயலாமலிருக்கும் புல்லறிவுளது. இம்மூன்று மத்ஸ்யங்களும் நெடுங்காலமாய் அத்தடாகத்தில் வாசஞ்செய்து வருகையிலொருநாள் ஓர்செம்படவன் மீன்பிடிக்கவந்தான். அவன் வந்த அரவங்கண்டு வருங்காரியமறிந்து முயல்கின்ற மீன்தடாகத்தின் பாதாளத்தில் மூழ்கி மண்ணைக் கடித்துக்கொண்டோரிடத்தில் அடங்கியிருந்தது. ஸமயோசித புத்தியுள்ள இரண்டாவது மீன் அப்படிக்குச் செய்யாமலிருந்தபடியால், செம்படவன் எறிந்த வலைக்குள்ளகப்பட்டு வருந்தித் தப்பிப்போக வென்னவழியென்றாலோசித்து ப்ராணனை யிழந்ததுபோல் அசையாமல் அவன் போட்டவிடத்திற் கிடந்து ஸமயம்பார்த்துத் துள்ளித்தொப்பென்று தண்ணீரிற்குதித்தோடிப்போய் க்ஷேமமடைந்தது. வந்தது வராமற்போகாதென்கிற நினைப்புள்ளமீன் வலையிலகப்பட்டதுமன்றிச் செம்படவனாற் கரையிற் போடப்பட்டவுடனே துள்ளித்துள்ளி விழுந்தபடியால் இது தண்ணீரில் வீழ்ந்தோடிப் போகுமென்று நினைத்துச் செம்படவன் அந்தக் காலால்மிதித்துக் கொன்றுபோட்டான். ஆதலால் வருங்காரியமறிந்து நடப்பவனை உத்தமபுத்திமானென்றும், ஸமயோசித புத்தியுள்ளவனை மத்யமனென்றும், வந்தது வரட்டுமென்றிருப்பவனை அதமனென்றுஞ் சொல்லவேண்டும்.

பழிபாவங்களுக் கஞ்சாதிருப்பது மூடருடைய தன்மை. அஞ்சி நடப்பது அறிவுடையவர்களுடைய செய்கையாம். ஆதலால் அறிவு எல்லாவற்றிற்கும் சிறந்ததென நம்பவேண்டும்.

எல்லாச்செல்வங்களுக்கும் அறிவே காரணமாதலால் அறிவுளோர்க்கொன்று மில்லாவிடினு மெல்லாமுண்டென்றும், அறிவிலார்க்கு எல்லாமுளவாயினுமொன்றுமில்லையென்றும் பலநூலிலுஞ் சொல்லியிருக்கின்றது.

ஆதலால் அறிவைநோக்கி யுலகத்தோடொத்து வாழவேண்டும்.

---

## நட்பு.

அன்பை விருத்திசெய்கின்ற நட்பாளரை யெக்காலத்துங் கைவிடாது நேசித்திருப்பதே ஸ்நேஹத்திற் கழகு.

அன்புடன் ஸ்நேஹிப்பவர்களை யெப்பொழுதுங் கைவிடாமல் அவர்கள் விருத்தியாகும்படிக்குத் தன்னாற்கூடிய வுதவிசெய்து புகழடைவதே பெருமையாம்.

நெடுங்காலமாய்ப்பழகிவருந் தொடர்ச்சியையுடைய நல்லோர்களை நன்குமதித்துக் காக்கவேண்டும்.

சுற்றத்தார் மகிழ்ச்சியடையும்படி யவர்களைத் தழுவிவாழ்தலால் அவர்கள் செய்யுமுரிமைகொண்டு பெருமையடையலாகும்.

இனிய் செய்கையுடைய நல்லவிவேகிகளின் நட்பைக்கொண்டு அவர்களோடு கூடிவாழ்வதைவிடத் தர்மம் வேறொன்றில்லை.

நட்பின்முறைமையில் "நீரும்பாலும்போல" வென ஒருவமையுண்டு; எப்படியெனில், பாலானது காய்ச்சப்படும்போது தண்ணீரானது தான் ப்ரவேசித்து அக்காய்ச்சல் வருத்தத்தை மேற்கொண்டு மித்திரனைக் காக்கவிரும்பிச் சுண்டிப்போகின்றது; அதுகண்டு பாலானதுபொங்கி நெருப்பில் வீழ்ந்தெரிந்து போகமுயல்கின்றது; அதைக்கண்டு பொறுக்காமற் றண்ணீர் மறுபடி மேல்விழுந்து பாலை நெருப்பில்விழவொட்டாமல் காக்கின்றது. இதுவே "க்ஷீரோதக ந்யாயம்" எனப்படும். பால் காய்ச்சப்படும்போது தண்ணீர் கலக்கப்படுவதும், அது சுண்டினவுடனே பால் பொங்குவதும்

பின்பு தண்ணீர் கலக்கப்படுமாகில் பொங்காமலடங்குவ்துந்தான்.

ஹீனரோடுகூடி துர்மார்க்கங்களை யநுஸரித்துப் பாபத்திற்கு ஹேதுவான காரியங்களைச்செய்கிறவன் நல்லகுடியிற் பிறந்தவனாக விருந்தாலும் அவிவேகியெனப்பெயர் பெறுவதுமல்லால் குலஹீநனென்றும் பெயர்பெறுவான்; ஆதலால் மேன்மக்களோடு நட்புச்செய்ய வேண்டும்.

செல்வம்வந்த காலத்திலுஞ் ஸ்நேஹத்தை மறவாம லதிகமான அன்பைச்செலுத்தித் தருந்தவுதவி செய்கின்றவர்களை ஸ்நேஹர்க்குள் தலைமையானவர்களாக வெண்ணவேண்டும்.

சுற்றத்தாரை விட்டுநீங்கித் தாம் விரும்பியவைகளைத் தம்மனவின்படிச்செய்து நடக்கின்ற அறிவீனர்களோ டுறவுசெய்யலாகாது, அதனால் தீங்குநேரிடுவதுமன்றிக் கீர்த்திக்குங் கேடுவரும்.

நம்மிடத்தில் யதார்த்தமாக நம்பிக்கைவைத்திருக்கின்ற ஸ்நேகிதரிடத்துப் பொய்சொல்ல வொருபோதும் விருப்பங்கொள்ளலாகாது, அப்படி விரும்பினால் வஞ்சகனென்கிற பெயருண்டாவதோடு ஸ்நேஹபங்கமும் நேரிடும்.

உரிமையாகநினைத்துச் சொல்லப்படும் யதார்த்தத்தைப் பொய்மையாகவெண்ணி மெய்யான ஸ்நேஹரை விரோதிக்கின்றவன் புத்திசாலியல்ல வென்பதற்கு ஸந்தேஹமில்லை. ஏனெனில், அதனால் அவனடையவேண்டிய எல்லாப்பயன்களையு மிழந்துவிடுவா னென்பதனாலேதான்.

விவேகமில்லாதவனுடைய நட்பைக் காட்டிலும் விவேகியினுடைய பகையினாற் பயனுண்டென்று பெரியோர் கூறியதற்குப் பொருளென்னவெனில், புத்திமான்களுடைய ஸ்நேஹத்தைவிரும்பித் தேடவேண்டுமென்பதுதான்.

மெய்யான நட்பாளருடைய வொருமை வியோகமுதலான காரணங்களாற் கெடமாட்டாது. எப்படியெனில், சந்த்ரன் மேகத்தினாற் சூழப்பட்டு நெடுந்தூரத்திலிருந்தாலும் ஆம்பல்களை அலர்ப்பித்து வாஸிக்கும்படிச் செய்யவில்லையோ?

அதிகஸ்நேஹத்தினால் அவிவேகிகள் ஸ்நேஹருடைய பெருமையையுங் குணங்களையுமறியாமற் போகிறதுமல்லாமல் அவர்களை யலக்ஷியஞ்செய்கிறார்கள், அஃதெப்படியெனில். சந்தன வ்ருக்ஷங்கள் அதிகமாயிருக்குங் காட்டிற் கருகிலிருக்கின்ற மூடர்கள் அதையெரிகரும்பாக வழங்குந் தன்மைபோலேதான்.

ஸம்பத்துண்டானால் ஸ்நேஹர்கள் அதிகமாய்க் கூடுவார்கள், ஆனால் அவர்கள் மெய்யான ஸ்நேஹிதரோ அல்லவோவென்று அறிவதற்கு தரித்ரம் உரைகல்லாயிருக்கும்.

ஆதலால் மேன்மைபொருந்தியவர்களுடைய நட்புக் கிடங்கொடாதிருப்பது வறுமையிலுங் கொடியதென் றுணரவேண்டும்.

## கொலை.

வதைசெய்வதையே விளையாட்டாக வுடையவன் மறுமையில் நரகபாதையில் வருந்துவானெனப் பெரியோருரைத்திருப்பதுமன்றி யிம்மையிலு மிரக்கமில்லாத கொலைபாதகனென்று பெயர்பெறுவான்.

கொல்லுந்தொழிலில் இச்சைவைத் திருக்கின்ற கொடியபாபிகளைக்கண்டால் எல்லாவுயிரும் அஞ்சி நடுநடுங்குமென்பது முற்கூறப்பட்ட வாக்கியமேயாம்.

அரசன் சந்தோஷிக்கும்படி யுத்தகளத்தில் சத்துருக்களைக்கொண்டு வெற்றிபெறுதலைக் கொலைசெய்வதென் றெண்ணவொண்ணாது; ஏனெனில், ஸமர்க்களத்தில் அபஜயப்பட்டிறக்கின்றவர்களுக்கு வீரஸ்வர்க்கமுண்டென்று பலக்ரந்தங்களிலுஞ் சொல்லியிருப்பதினாலேதான்.

ஒருப்ராணி வதைப்படும்போது பார்க்கின்ற மற்றொருவன் அதை மறுக்காமல் சும்மாவிருப்பானாகில் கொலைபாதகனிலுங்கொடியவனென்று இகழப்படுவான்.

குற்றமற்ற வுயிர்களை யிரக்கமில்லாமற் கொல்லுகின்ற பாபியானவன் காட்டில்சஞ்சரிக்குந் துஷ்டம்ருகங்களுக்கு மதிககொடியவனாக வெண்ணப்படுவான்.

அரசனானவன் துஷ்டரைக் கண்டுகொண்டு அவரவர்களுக்குத் தகுதியான தண்டனைசெய்வதில் நேரிடும் கொலையானதுகொலைபாதகமென நினைக்கப்படாது; ஏனெனில், துஷ்டநிக்ரஹமும் ஸிஷ்டபரிபாலனமும் இராசர்களுக்குரிய தர்மங்களாகையினாலேதான்.

மாம்ஸபக்ஷணஞ்செய்கிற வ்யாஜத்தினாலாகிலும் ஜீவவதைசெய்ய மனந்துணியாதவர்களை யாவருங் கைகூப்பித் தொழவேண்டுமென முன்னோருரைத்தனர்.

பஸுபந்தனமுதலிய யாகஞ்செய்வதிலும் தேவதாப்ரார்த்தனை செய்வதிலும் ஜீவவதைசெய்வது கொலைபாதகமல்லவென்று ஸ்ருதிகளிற் சொல்லப்பட்டிருந்தாலும் அவைகளைக்கூட இக்காலத்து வேதியரில் பலரும் நிஷேதித்திருக்கிறபடியால் அவர்கள் கொலைபாதகத்துக்கஞ்சின புண்யபுருஷரெனப் படுவார்கள்.

ஜீவவதைக் கிடங்கொடாமலிருப்பதே பரமதர்மமென வடநூலோரு முரைத்திருக்கின்றார்கள்.

ஆதலால் பஞ்சமஹாபாதகங்களி லொன்றாகிய கொலைபாதகத்தைக் கனவிலுங் கைக்கொள்ளலாகாது.

## மனோகரன்.

(முன்தொடர்ச்சி.)

சந்திரசேகரர்:— பெண்ணே! ஆளழகனாயிருப்பினும் அரைக்காசுக்கும் வழியின்றிய ஆண்டிப்பயலைச் சுகிப்பதிலும், அங்கஈனமுள்ள அரசனை மணந்து இராஜபத்தினியென் றவனியோர் புகழ்ந் துரைப்பக் கீர்த்திவாய்ந் திருப்பதே சிலாக்கியமன்றோ? அன்றியும், நம் சுலோசனருக்கென்ன அழகிற்குக் குறைச்சலா? மனையாளின்றிய மனவாட்டத்தால் இவ்விதக் கிழத்தனம்போல்இளைத்திருக்கின்றார். ஆகையால், இவருக்கு நமது அருந்தவப்புத்திரியாகிய சுந்தரியைத் திருமணஞ்செய்வதே நம் பெருமைக்கியன்ற கௌரவமாயிருக்கும். காதலி! நீ இதற்கு யாதும் தடங்கல் சொல்ல வேண்டாம்.

என, மொழிந்தவையனைத்துங் கவனித்துணர்ந்த இரதியும் மணாளன்கருத்துக் கிசைந்து, நாயகா! "பேதைமையென்பது மாதர்க்கணிகலம்" என்னுந் தன்மையாய் யான் ஓர் விதமாய் யோசித்துப் புகன்றவை யனைத்துங் குற்றமாகக் கருதாது உமதிஷ்டம்போல் நடாத்துவீரென்றிசைப்ப. சந்திரசேகரன் மனக்களிப்பெய்தி அத்தருணமே தமது ஊழியராகிய சம்பாதி சம்பாவென்பவர்களையேவித் தமதுபந்துமித்திரர்களைவரவழைத்துக் கலியாணச்சடங்குகட் கிணங்கிய ஏற்பாடுகள்செய்து சுலோசனனுக்கறிவிக்க. அன்னோன்மகிழ்வெய்தி, "சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல், மனோல்லாசமெய்தி வேதவேதியரை வரவழைத்து சுபமுகூர்த்தத்தில் பச்சைப்பந்தலியற்றி மணவறைப்பந்தல்கள் சோடித்து மனோல்லாசமாயிருக்கச் சுபமங்கிலிய ஸ்திரீகளால் சுந்தரிக்கும், சுலோசனனுக்கும் நலங்கிட்டு மங்களஸ்நானஞ்செய்வித்து ஆடை ஆபரணங்களாற் சிங்காரித்து பந்துஜனங்கள்முன்னிலையில் நாளையகாலையில் திருமணவைபவமென்று நிச்சயதார்த்தஞ்செய்து முடித்தனர். அப்பால், வந்தவிருந்தினருடன் பந்துமித்திரனைவரும் விருந்தமுதுண்டு மனோல்லாசமாய் அவரவர் மஞ்சத்தில் சயனித்திருந்தனர்.

இங்ஙனம், இவர்கள்நிலை இவ்வித ஆர்ப்பாட்டவேடிக்கையா யிருக்கையில், திருடர்களாகிய அஜாதன், ஜாதனென்பவர்க ளிருவரும் "கும்பலில் கோவிந்தம் போடுபவர்போல்" வந்தவிருந்தினருடன் சொந்த பந்துக்களைப்போல் அபிநயித்து அவர்களுடன் தாங்களும் அறுசுவை பதார்த்தத்துடன் திவ்யான்ன சுகபோஜனமுண்டு தாம்பூலந்தரித்து "விசுவாசபூனை வெண்ணெயைத்தின்றது" என்னும் பழமொழிபோல் ஓர் மூலையில் சயனிக்குந்தன்மையாய் விழித்திருந்து யாவரும் உறங்கியபிறகு மெல்லென எழுந்து "கோழிக்குஞ்சை பருந்து கவ்விக்கொண் டோடுவதுபோல், சுந்தரியை மஞ்சத்தோடு தூக்கிக்கொண்டு ஆரண்யமார்க்கமாய்ச் சென்று தமது வாசஸ்தானமாகிய மலைக்குகையில் விடுத்தனர். உடனே சயனித்திருந்த சுந்தரி விழித்துக்கொண்டு, ஆ! இஃதென்ன! விபரீதமென்று கலங்கிக் கண்ணீர்ததும்பக் கதறியழுது துயருறுவதைக் கண்ணுற்ற திருடர்கள் சுந்தரியின் மனதைத்தேற்றி மாதே! நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். யாங்கள் உன்மீது விருப்புற்று இங்ஙனம் கொணர்ந்தோம் ஆயினும், நீ எங்களுடன் மனோல்லாசமாய் வாழ்ந்திருப்பாய் சரசநாயகியென்றிசைப்ப. சுந்தரி ஆலோசித்து இவர்கள் திருடராகையால் நம்மை வஞ்சகமாய் அபகரித்துக் கொண்டு வந்தனர். இன்னும் பத்துநாளைக்குள் நம் தந்தை முதலாயினோரும் நம்மைத்தேடிக் கண்டுபிடித்து அழைத்துக்கொண்டுபோவார். ஆயினும், இத்தருணம் நாம் இவர்களை யேமாற்றி நமது கற்புநிலை தவறாமல் தப்பித்துக்கொள்வதே சிலாக்கியமெனக் கருதித் தந்திரமாய்ப் புகல்வாளாயினள்.

சுந்தரி:—ஐயா! ஜெயவீர பராக்ரமசாலிகளே! உம்மைப்போன்ற சாமார்த்தியம் தரணியைப்பரிபாலனஞ்செய்யும் அரசர்கட்குமிராது. அன்றியும், "கிணற்றுஜலத்தை வெள்ளங்கொண்டு போகுமா"? யானும்மையன்றி அந்நியருக்கு வாய்ப்பதருமையே, ஆயினும், நீங்கள் என்னைப் பத்துநாள்வரையினும் தீண்டலாகாது. அதன்பின் உமதிஷ்டம்போல் நடந்துக்கொள்வேன்.

ஜாதன்:—அண்ணா! இம்மாதரசி சொல்வதுண்மையே! "ஆக்கப்பொறுத்தவர் ஆறப்பொறுக்க வேண்டும்" என்பதுபோல், எப்போது நம்வசத்தில் அகப்பட்டனளோ? அத்தருணமே

நமக்குற்ற மனைவியாயினளென்று மதிப்பதற்கு ஆக்ஷேபனையுளதோ? அன்றியும், அவளிஷ்டப்படியே இன்னும் பத்துநாள்வரையினும் பொறுத்திருப்பதே சிலாக்கியமென யோசிக்கின்றேன்.

அஜாதன்:—தம்பீ! யானும், அவ்வாறே சம்மதித்தேன். பெண்ணே! இனி நீ தைரியமாயிருப்பாய். உனக்குவேண்டிய கனிவர்க்கங்களும் இதோ தந்தேன் அருந்திக் களைதெளிவாய். எமது ஆசைக்கிசைந்த சரசநாயகி.

சுந்தரி:—ஆ! ஹா!! அதற்கென்ன தடையா?

என, கனிவர்க்கங்களைப்புசித்து ஜலநீரருந்திக் களைதெளிந்து இனி எவ்வாறுகுமோ? என, மனமெலிந்து, நாம் இவர்களுக்குக் கெடுவிட்டிருக்கும் பத்து நாளைக்குள் நமதுதந்தை தமயன் பந்துமித்திரரனைவரும் நம்மைத் தேடிக்கொண்டுவந்து இத்திருடர்களைச் சித்திரவதைசெய்து நம்மையும் அழைத்துக்கொண்டு போவாரென்னும் ஆசையால் ஒருவாறு மனத்தைரியமாயிருந்தனள்.

இங்ஙனம், சுந்தரியின் நிலை மனமகிழ்வதும் துயருறுவதுமாகிய ஆற்றொணா ஆபத்தாயிருக்கையில், அஜாதன், ஜாதனென்னும் திருடர்கள்நிலை மோகசாகரத்தில்மூழ்கிய ஆனந்தமெய்தித் தம்மைமறந்து மதோன்மத்தராய் சுந்தரியின் அழகானந்த சௌந்தரியத்தைக் கண்ணுற்று வர்ணித்துக்கொண் டிருந்தனர்.

அப்பால், அரண்மனையிற் சயனித்திருந்தோரனைவரும் அருணோதயத்திலெழுந்து ஸ்நானபான நேமநிஷ்டை யாவுமுடித்துக்கொண்டு மணவரைப்பந்தலில்வந்தமரவும், சுந்தரியுடன் சயனித்திருந்த தாதிகள் வியப்புற்று. அடடா! இஃதென்ன ஆச்சர்யம் சயனித்திருந்த கலியாணப்பெண்ணைக் கட்டிலுடனே கள்வர் கவர்ந்தேகினரோ? யென்று அங்குமிங்குமாயலைந்து நாற்புரமுந் தேடிக்கொண்டிருப்பதைக் கண்ணுற்ற சகலரும் கவனித்துக் கலவரத்துடன் "கலியாணவாசலில் அலைகட லொலிப்பதுபோல்" குய்யோ! முறையோவெனக் கூச்சலிட்டு ஆச்சர்யமாய்ச் சம்பாஷிப்பதைக் கவனித்துணர்ந்த சந்திரசேகரனும், இரதியும் தமது அருந்தவப் புத்திரியைக் காண்கிலோமேயென்று ஆற்றொணாத் துயருற்று விசனப்படலாயினர்.

சந்திரசூடன்:— தந்தையே! இந்த ஆனந்தபுரியில்திருடருபத்திரவம் பெரிதென யான் ஆதியிற் சொன்னதைக் கவனித்துணராமல் சுலோசனன் வார்த்தையை நம்பி இங்ஙனம் வந்து என் அருமைத் தங்கையையிழந்து விசனமெய்தலாச்சுதே?

இரதி:— நாயகா நம் புதல்வன் அறியாச்சிறுவனாகிலும், மதியிலுயர்ந்தவன் அவன் வார்த்தையையுந் தடுத்து யான் நவின்றதையும் கவனியாது "பேராசை பொருள்நஷ்டம்" என்பதுபோல், விருத்தாப்பிய னாகிலும் பொருளுடையோன் மருமகனாகில் தரணியோர் புகழ்ந்துரைக்கும் பெருமைவாய்ந் திருப்போமென்று "விட்டிற்பூச்சி விளக்கொளியை நாடுவதுபோல்" வீணாக இந்நகரில்வந்து நமது அருந்தவப் புத்திரியை இழந்தோமன்றோ! இனி யாதுசெய்குதும் பிராணநாதா.

சந்திரசேகரன்:— பெண்ணே! நீ என்மீது இத்தகைய வெஞ்சினமுறுவது நன்கல்ல. எந்தெந்த காலத்தில் எவ்வெவ்வித கஷ்டநிஷ்டூரம் வாய்க்குமோ! அவை யனைத்தும் யான் கவனித்துணர்ந்தேனோ? "வெல்லம்போற் பாஷிப்பவர் வார்த்தையைக் கேட்ட புல்லறிவாளன் கதைபோலாயிற்றே" அன்றியும் இந்நகரத்தரசன் வார்த்தையை நம்பிவந்தேனன்றி என் மனச்செயலாய் வந்தவனல்லவே. இதைக் குறித்து விசனப்படுவதினால் ஆய பயனென்?

என, காணமற்போன கலியாணப்பெண்ணின் தாய்தந்தை தமயன் முதலாயினோரும் மனம்வெறுத்து விசனப்படுவதைக்கண்ணுற்ற சுலோசனன் ஆற்றொணா மனக்கவலையுற்று இஃதென்னவிபரீதம்? நமது அரண்மனையில் இத்தனைவீரர்களும் காவலாயிருக்க யாவரோ? துஷ்டக்கள்வரித்தகைய அநியாயமோசமாய் நம்மை அவமானஞ்செய்தாற்போல் கலியாணப்பெண்ணைக் கட்டிலோடு தூக்கிக்கொண்டு சென்றனரேயென்று, "காலாக்கினி ருத்திரன்போற் சினந்து" அருகிலிருப்போர் திடுக்கிடும்படியா யுரைக்கலாயினன்.

சுலோசனன்:— ஆ! ஹா! இஃதென்ன! விபரீதம்? நண்பர்காள்! எனது அரண்மனையில் இவ்வளவு போர்ச்சேவகர் காவலாயிருந்தும், திருடனைப்பிடிக்கத் திறமையற்றவராயினர். ஆயினும் பெரிதல்ல. யானிந்தக்ஷணமேசென்று எனது காதலியைத் திருடிக்கொண்டுசென்ற திருடர்களைத் தேடிப்பிடித்துக் கண்டதுண்டமாய்ச் சித்ரவதைசெய்து சுந்தரிக்கு யாதுந் துன்பமெய்தாமல் அழைத்துக்கொண்டுவருகிறேன்.



என, நவின்று, அருகிலிருந்த அமைச்சர்களை நோக்கி இத்தருணமே சேனைகளைச் சித்தப்படுத்துவீரென் றிசைப்ப. சேனாவீரர் யாவரும் யுத்தகோலத்துடன் ஈட்டி, பாலா, பரிசை, வல்லயம், வளைதடி, கத்தி, கட்டாரியென்னும் பற்பல ஆயுதங்களையுந்தாங்கி நால்வகைச் சேனைகளும் சூழ்ந்து அணியணியாய் பிரயாணமாகவும், சுலோசனன் தனுசைக் கரத்திலேந்தி அம்பறுத்தூணியை முதுகிலணிந்து காற்றை நிகர்த்த வேகத்தன்மையையுடைய வெண்புரவியின்மீது ஆரோகணித்துச் சேனாவீரர் புடைசூழ சுந்தரியை வஞ்சகமாய்த் திருடிச்சென்ற கள்வரைத் தேடிக்கொண்டு கானகமார்க்கமாய்ச் செல்வதாயினன்.

இங்ஙனம், இவர்கள்நிலை இவ்வித ஆர்ப்பாட்டமாயிருக்க, கள்வரிடஞ்சிக்கிக் குகையிற் சிறையிருக்கும் சுந்தரி ஆற்றொணா விசனமெய்தி ஐயையோ! விதிவசமே நாம் இங்ஙனம் வந்து எட்டுநா ளாய்விட்டதே! இன்னுமிருப்பது இரண்டுநாள்தானே இதுவரையினும் நம்மைத் தேடிக்கொண்டு எவர்களும் வரவில்லையே நம் கதி எவ்வாறுமோ? வென கண்ணீர்த்ததும்பக் கவலையுற்று விசனமாயிருந்தனள்.

ஜாதன்:— அண்ணா! நாம் கொண்டுவந்த சுந்தராலங்கிர்த சுகபோக சௌந்தர்ய காமரஞ்சனியைக் கலந்தணைந்து நமது காதலைத் தீர்த்துக்கொள்ள இன்னும் இரண்டுநாள்தான் இருக்கின்றது.

அஜாதன்:— தம்பீ! நீ புகல்வதைக் கவனித்தால் எனக்கு ஒருவாறு சந்தோஷமெய்திடினும் இந்தப்பெண்ணைத் தேடிக்கொண்டு யாவராயினும் வருவாராகில் நமது இருப்பிடத்தைக் கண்டுணர்ந்து அரசனுக்குத் தெரிவித்தால் "அக்கினியி லகப்பட்ட எறும்புக்கூட்டம் மடிவதுபோல்" நமது கள்ளவம்சமெல்லாம் காலனூ ரேகும்படிச் செய்வதற்குத் தடையுளதோ? வென என்மனம் வருத்துகின்றனவே.

ஜாதன்:— அண்ணா! "மிரண்டவன்கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பதுபோல் மனந்திகைத்து மாற்றானுக்குப் பயந்தால் நிதனுகுமேயன்றி தைரியமாயிருந்தால் யாதொரு கெடுதியும் சம்பவிக்காது. ஆகையால் அன்னியர் யாவராயினும் இங்ஙனம் வருவாராகில் அவர்களை வந்தவழி திரும்பிப் போகாமல் கொன்று அந்தகனுலகுக் கனுப்பிவிடுவோமாகில் அரசனுக்கு யார்போய்ச் சொல்வார்? நீர் திருடர்வம்ஸத்திற் பிறந்தும் தீரமின்றியவராய்த் திப்ரமையடையலாயினீர்.

அஜாதன்:— தம்பீ! நீ! எப்போதும் துடுக்குத்தனமாய் யாதொன்றையும் கவனித்துணராமற் செய்கின்றாய். ஆதியில் யான் வேண்டாமென்று தடுத்தும் இத்தகைய அற்பகாரியத்திற் பிரவேசித்து ஆபத்தடையச் செய்தனையே!

எனச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே சுலோசனன் தனது சேனாசயின்யங்களை யழைத்துக்கொண்டு திருடர் வசிக்கும் குகையருகில் வந்து அஜாதன் ஜாதன் முதலான திருடர்களை மடக்கிக்கொண்டு யுத்தஞ் செய்கையில் கள்வரின் சேனைகளெல்லாம் முனைந்து ஈட்டி, கத்தி, பாலா, பல்லயம் முதலாகிய ஆயுதங்களினால் சுலோசனன் சேனைகளையெல்லாந் தும்ஸஞ்செய்து கால்மாடு தலைமாடாகச் செய்து அமர்பொருதுந் தருணம் அஜாதனும், ஜாதனும் சுலோசனனைத் தமது ஆயுதங்களினால் சின்னாபின்னமாய் வெட்டியும், குத்தியும், சிதைத்தும், வதைத்துக்கொன்றுவிட்டு மனோல்லாசமா யிருந்தனர். அப்பால், சண்டையில் தப்பிப் பிழைத்து வந்தவர்களிற் சிலர் அரண்மனையில் வந்து சகலரையும் நோக்கி நிகழ்ந்தவையனைத்தும் விபரமாய்த் தெரிவித்தனர்.

சந்திரசேகரர்:—எனது அருந்தவப் புத்திரி! நின்னை அன்புடன் பெற்று வளர்த்து ஆனந்தபுரியிற் கொணர்ந்து தாரைவார்த்தேனேயென்று மனவருத்தமெய்தி துயரப்படுகையில் அருகிலிருப்போர் யாவரும் ஆச்சரியமெய்தி விசனப்படலாயினர்.

மனோகரன்:—ஐயா! நீவிர் இதனைக்குறித்து வியசனமெய்தவேண்டாம். யான் உமது அன்னம் புசித்து செஞ்சோற்றுக்கடன் தீர்ப்பதற்கு இதுவே தருணமாகையால், யான் ஆயுதபாணியாகச்சென்று உமது குமாரத்தியை அபகரித்துச்சென்ற திருடரைச் சின்னாபின்னஞ்செய்து சுந்தரியை அழைத்துக்கொண்டு வருகிறேன்.

என, யுத்தகோலத்துடன் தனுசைக்கரத்திலேந்தி அம்பறாத்தூணியை முதுகிலணிந்து காற்றை நிகர்த்த வேகத் தன்மையையுடைய வெண்புரவியின்மீது ஆரோகணித்து யுத்தசன்னத்தனாய்ப் புறப்படுகையில் சந்திரசூடனும் தனது நண்பனுக்குத் துணையாய்த் தானும் யுத்தகோலத்துடன் புறப்பட இருவரும் ஆரண்யமார்க்கமாய் வந்து திருடர்களை மடக்கிக்கொண்டு யுத்தஞ்செய்கையில் "இராமலக்ஷ்மணரை மூலபலசேனைகள் மடக்கிக்கொண்டு யுத்தஞ்செய்வதைப்போல்" திருடர்கூட்டமெல்லாம் புனைந்து இவ்விருவரையும் மனந்திகைத்து திப்ரமையடையும்படி அஸ்திரங்களையேவி ஜாடுகையில், மனோகரன் "கோபாக்னி ருத்திரனைப் போற் சினந்து" வில்லைக்குணத்தொனிசெய்து "பாரதப்போரில் துரியோதனாதி சேனைகளின்மீது அபிமன்னன்யுத்தஞ்செய்ததைப்போல்" கணைகளைவிடுத்து திருடரையெல்லாம்தும்சஞ்செய்துஅஜாதனையும்ஜாதனையும் கொன்றுவிட்டு சுந்தரியை அழைத்துக்கொண்டு அரண்மனையில்வந்தமர்ந்துநிகழ்ந்தவையனைத்தும் விபரமாய்ப் புகன்றனன்.

சந்திரசேகரர்:—அப்பா! மனோகரா! நின்பேருதவிக்கு யாங்கள் பதிலுபகாரம் யாதுபுரிகுவோம்.

மனோகரன்:—ஐயா! எல்லாம் உமது கிருபையன்றி அடியேன் சமர்த்தல்ல.

சுந்தரி:—தந்தையே இம்மஹானுபாவரே எனக்கிசைந்த மணாளனன்றி மற்றவரை யான் விரும்பேன்.

மனோகரன்:— ஆ! ஹா! இஃதென்ன தர்மசங்கடம்; அன்னங்கொடுத்து ஆதரித்திரக்ஷித்த வள்ளலின் சுபுத்திரியை யான் மணம்புரிவது நீதியோ!

அசரீரி:—அப்பா! மனோகரா! நீ இந்நகரத்தரசனாகிய நரேந்திரனுடைய அருந்தவப்புத்திரன் நின் தாய்தந்தை இறந்தபிறகு உன்சிறியதந்தை இராஜ்ஜியத்தை அபகரிக்கக்கருதி உன்னை ஓர் தாதிமூலமாய் காட்டில் போட்டுவிட உத்தேசிக்க, நீதெய்வாதீனத்தால் சந்திரசேகரபிரபுவீட்டில் வளர்ந்து அவர் புத்திரிக்கு ஏற்பட்ட ஆபத்தைத் தவிர்த்தாய். ஆகையால் நீ! யாதுந் தடைசொல்லாமல் சுந்தரியைக் கலியாணஞ் செய்துக்கொண்டு உன் தந்தை இராஜ்யத்தை நீயே ஆளக்கடவை.

என, மொழிந்தவையுணர்ந்த மனோகரன் மனமகிழ்ந்து அவ்வாறே நன்கெனச்சம்மதிக்கச் சந்திரசேகரனும் இரதியும் சந்திரசூடனும் மனமகிழ்வெய்தி சகல தேசத்தரசரையும் பந்துமித்திரரையும் வரவழைத்து வேதியரால் நியமித்த ஓர் சுபலக்கினத்தில் மணவரை சோடித்து சுமங்கலியஸ்திரீகளால் மனோகரனுக்கும் சுந்தரிக்கும் நலங்கிட்டு மங்களஸ்நானஞ் செய்துவைத்து நவரத்தினகசிதமாய் விளங்கும் ஆடை ஆபரணங்களாற் சிங்காரித்து மணவரையி லழைத்துக்கொண்டுவந்தமர்த்தி வேதவிதிப்படிக் கலியாணச்சடங்குகளனைத்தும் நடாத்தி வேதவேதியர்களும் பந்துமித்திரர்களும் ஆசீர்வதித்து அக்ஷதைத்தூவ மனோகரன் தனது திருக்கரத்தினால் சுந்தரியின்கழுத்தில் மங்கிலியஞ்சூட்டி மகிழ்வெய்தினன்.

அப்பால், வந்தவிருந்தினர் யாவரும் விருந்தமுதுண்டு மனோல்லாசமெய்த மறுநாள் மனோகரனை சிம்மாசனத்தமர்த்தி செங்கோலைக் கரத்திற்றந்து சுந்தரியை அருகிலுட்காரவைத்து ஆனந்தபுரியைப் பரிபாலனஞ்செய்வீரென்று மகுடாபிஷேகஞ்செய்து யாவரும் வாழ்த்தி ஆனந்தமாய்ச் சிலநாளங்கனமிருந்து பிறகு யாவரும் அவரவரிருப்பிட மேகினர்.

இராமதாஸர்:—ஏ! சந்திரசேகரப்பிரபோ! நின்சுபுத்திரிக்கேற்ற மணாளன்மனோகரனே! அஃதிடாதெனில் நரேந்திரன் உமக்கினிய மைத்துனமுறையாதலால் அவ்வரசனிறந்தபின் இச்சிறுவன் நின்பால் வளர்ந்து நின்மனதிற்கிசைந்த மருகனாயினன்.

சந்திரசேகரர்:—சுவாமின்! யாதும் தமது திருவருளன்றி அடியேன் மனச்செயலன்று

என, அவர் மலரடியில்வீழ்ந்து பணிதலும் இராமதாஸர் இம்மூவரையும்ஆசீர்வதித்துவிட்டுத் தமதிருப்பிடமேகினர்.

அப்பால், மனோகரன் தனதுபத்தினியாகிய சுந்தரியுடன்மருவி சுகித்து மைந்தரைப்பெற்று மனோல்லாசமாயிருந்தனன்.

---



## புலான்மறுத்தல்.

கொல்லாமையென்னும் வ்ரதமொன்றினாலேயே ஸகலதர்மங்களையும் எளிதிலடையலாமென்று சொல்லியிருக்கிறபடியால், புலாலுண்ண லென்னும் மாம்ஸபக்ஷணமுங் கொலைபாதகத்தோடு சேர்ந்ததென்றும், அதையும் விலக்கவேண்டுமென்றும், முன்னோர்களுரைத்திருக்கிறார்கள்.

பயனில்லாத தன்சரீரத்தின் மாம்சத்தை வளர்ப்பதின் பொருட்டு மற்றொரு ஜந்துவைக்கொன்று அதன் மாம்ஸத்தை உண்ணவிரும்புகின்றவன் அறிவில்லாத கொடியோனென்று சொல்லப்படுவான்.

த்ரவியத்தினாலுண்டாகும் பயனை யிழப்பதற்கு அதனைக்காப்பாற்றாமையே காரணமாகவிருப்பதுபோல அருளாலுண்டாகும் பயனை யிழப்பதற்கு மாம்ஸபக்ஷணங் காரணமாக விருக்குமெனப் படுவதால் புலாலைப் புசிக்கின்றவர்களுக்கு அருளில்லையென்பது ப்ரகாசமாய் விளங்குகின்றது.

ஸுகதுக்கங்களை உணரத்தக்கதாகிய தனதுடல் போன்ற மற்றொன்றினுடலை ஸம்பாரங்களால் இனிய சுவையுண்டாகும்படி சமையற்செய்து அதையுண்டு மகிழ்ச்சியடைகின்ற கொடிய பாதகர்களுடைய ஹ்ருதயங்களில் அருளென்னுந்தயை அணுமாத்ரமும் விளங்காதென்பது ஸத்யமே.

கொல்லாமையே அருளென்றும், கொல்லுதலே அருளில்லாத பாபச்செய்கையென்றும், அக்கொல்லுதலால்வந்த ஊனைத்தின்னுதல் அறனல்லாததென்றும், சொல்லிய நீதியையுணர்ந்து நடப்பதே தர்மமாம்.

ஒருயிரையுங் கொல்லாதவனாயும், புலாலையுமுண்ணாதவனாயுமிருக்கின்ற மஹாபுருஷனை எல்லாவுயிருங் கைகூப்பித் தொழுது வணங்குமென்று கூறப்பட்டிருப்பதின் பொருளென்னவெனில், இவ்விதப்பொருளையுணர்ந்தவன் மறுமையில் தேவர்களினு முயர்ந்தவனாவனென்பதுதான்.

தர்மங்களுக்குள்ளே சிறந்தது கொல்லாமையென்றும், அதனோடுகூடப் பொய்சொல்லாமையு முண்டாயிருக்குமாகில் அது எல்லாவற்றிலுஞ் சிறந்ததர்மமென்றும், பெரியோருரைத்திருக்கின்றார்கள்.

மோக்ஷத்திற்குறுதியைத்தரும் தர்மமார்க்கமென்னவெனில், யாதோருயிரையுங் கொல்லாமையாம். இதை வ்ரதமாகக் கொண்டவனது ஆயுளின்மீது யமனணுகுவதற் கஞ்சுவான்.

உலகமயக்கங்களை விட்டு ஸந்யாஸாஸ்ரமத்தைப் பெற்ற பெரியோர்களைப்பார்க்கிலும் உயர்ந்தவன் யாரெனின், யாதோருயிரையுங் கொல்லாதிருப்பவனும் புலாலை யுண்ணாமலிருப்பவனுந்தான்.

இன்பத்தையுஞ் செல்வத்தையு மதிகப்படுத்திக் கொள்வதின்பொருட்டு யாகாதிவிஷயத்தில் உயிரை வதைசெய்யலாகுமென்று சாஸ்த்ரப்ரமாண முண்டாயிருந்தாலும், அது சான்றோருக்கு ஒவ்வாத செய்கையாதலால் அதைக் கனவிலும் நினைக்கலாகாது.

ஒருவன் தனது உணவிற்காக ஒருயிரை வதைசெய்வதினா லுண்டாகிய பாபத்தை யறியாமற்போனாலும், அவனை அப்பாபம் விடாமல் தொடர்ந்துகெடுக்கும், அன்றியும் அவனை நல்லோர்கள் அருளுள்ளவனென்று நினையார்கள். ஏனெனில், ஒருப்ராணியைக் கொண்டுவந்து அதற்குவேண்டிய ஆஹாரத்தைக்கொடுத்து வளர்ப்பதினால் அந்தப்ராணி தன்னை ரக்ஷிக்கின்றவனென்று அவனிடத்து விஸ்வாஸத்தைப் பாராட்டிக்கொண்டிருக்க அதனிடத்துச் சற்றுமிரக்கமில்லாமல் அதை வதைத் துண்பதினாலேதான்.

இப்பிறப்பில் நோயினாலேயும் தரித்ரத்தினாலேயும் வருத்தப்படுகின்றவர்களே முற்பிறப்பில் உயிர்களை வதைசெய்த கொடியோர்களென்று பலநூலோருஞ் சொல்லி யிருக்கிறார்கள்.

ஆதலால், புலாலென்னும் ஊனை உண்ணாமலுங் கொலைசெய்யாமலு மிருக்கவேண்டும்.

---

## உபகாரம்.

தெய்வலோகத்தில் சகலஸுகமு முளதென்பதினால் அவ்விடத்தில் இரப்போருங் கொடுப்போருமில்லை; அதைப்பற்றி அவ்வுலகத்தில் உபகாரமென்பதுமில்லை. இவ்வுலகத்திலோவென்றால் இரப்போருங் கொடுப்போரு முண்டாயிருக்கின்றமையால் உபகாரஞ்செய்வதற் கிடமுண்டென்றும், உபகாரத்தைப்பார்க்கிலும் சிறந்தசெல்வம் வேறொன்றுமில்லையென்றும், சொல்லப்படுகையால் தெய்வலோகத்தைப்பார்க்கிலும் இவ்வுலகமே சிறந்ததென்று கூறப்பட்டிருக்கின்றது.

நல்லோர்கள் ப்ரதியுபகாரத்தை விரும்பாமலே உபகாரஞ்செய்வார்க ளென்பதற்கு நிதர்ஸனமென்னவெனில், உலகத்தாராலே ஒருநவியும்பெறாத மேகங்கள் கடல்நீரைத் தற்செயலாய்க் கொண்டுவந்துபெய்து உயிர்களை ரக்ஷிப்பதுவேயாம்.

உலகநடையை அனுசரித்துப் பலருக்கு முபகாரஞ்செய்பவன் இறந்தாலும் பூமியினிடத்து உயிருடன் வாழ்ந்திருப்பானென்றும், அவ்வித வுபகாரங்களைச் செய்யாதவன் எத்தனைகாலம் உயிருடனிருந்தாலும் செத்த பிணத்தோ டொப்பாவனென்றும் சொல்லியதற்குப் பொருளென்னவெனில், முன்னோர்களினது நீதிநூலின் பொருளையுணர்ந்து அவ்வழிபாட்டுக்கு மாறுபாடில்லாமல் உபகாரத்தைச்செய்துநடப்பவன் அறிவுடையவனென்றும், மனுஷ்யஜன்மமெடுத்தும் உயிரிற்குரிய அறிவும் அதற்குத்தக்கசெய்கையு மில்லாவிடின் அவன் அறிவிலானென்றும் அல்லது உயிரிலானென்றும் குறிப்பித்திருப்பதுவே யாம்.

உபகாரிகளிடத்துண்டாகிய செல்வம் பலருக்கு முபயோகமாகவிருக்குமென்பதற்கு த்ருஷ்டாந்த மென்னவெனில், ஊருக்குள்ளிருக்கும் குளத்துநீர் பலருக்கும் உதவியாக விருப்பதுபோலவும், அவ்வூர்மத்தியிலிருக்கும் மாமரம் தனக்குள்ள இலை காய் கனி முதலியவற்றைப் பிறருக்குத் தருவதுபோலவுமாம்.

உதவிசெய்வதே நலமென்றுணர்ந்திருக்கும் புத்திமான் தனக்கு தரித்ரம் வந்தகாலத்திலும் அவ்வுதவி செய்யும் நெறியைமறந்து தளரவிடமாட்டான்; ஆனால், உபகாரஞ்செய்வதற் கிடமில்லாத விஷயத்தில் தான் ஜனனமெடுத்தது நிஷ்பலமென்று வ்யஸனப்படுவான்.

உபகாரத்தின்பொருட்டுத் தன்னைப் பிறரிடத்து விற்பது கூடாதகார்யமானாலும், அது புகழையுண்டாக்குகின்றபடியால் அப்படி விலைப்படுவதினாலேயுங் குற்றமில்லையென்று பெரியோ ருரைத்திருக்கிறார்களென்பதற்கு ஹரிச்சந்த்ரனுடைய் சரித்ரமே நிதர்சனமாயிருக்கின்றது.

கீர்த்திபெற்று வாழ்வதற்குக் கல்வியாண்மை முதலாகிய காரணங்கள் பலவுண்டாயிருந்தாலும் அவைகளைப்பார்க்கிலும் உபகாரத்தால் வருவதே சிறந்த புகழென்றும், அப்புகழ் நெடுங்காலம் நிலைபெற்றிருக்குமென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

உலகத்தில் எப்பொழுதும் அழிவில்லாமல் புகழுடம்பினால் நிலைபெற்றிருப்பதற்கு உபகாரமே முக்யகாரணமா யிருக்கின்றதாதலால், மானுஷஸ்வரூபத்தைப் பெற்ற யாவரும் உபகாரஞ்செய்வதில் மனத்தளர்ச்சி செய்யலாகாது.

உபகாரியாகிய குணவானானவன் இஹத்திலும் பரத்திலும்எக்காலத்திலும் வாஸஞ்செய்வானென்பதற்குப் பொருளென்னவெனில், அவன் தான்செய்த தர்மத்தின் பயனால் ஸ்வர்க்கானுபவம்பெற்று மகிழ்ந்திருக்குங்காலத்தில் அவனது கீர்த்தி பூலோகத்திலும் நிலைபெற்றிருக்கு மென்பதுதான்.

பூமியினிடத்தி லெடுக்கப்படும் ஜன்மங்களில் மனுஷ்யஜன்மம் சிறந்தது. அந்தஜன்மமெடுத்தபின் உபகாரியென்று பெயரெடுப்பது அதிலுஞ்சிறந்தது. அப்படிக்கில்லாத ஜன்மம் ம்ருகஜன்மத்திலுந் தாழ்வானது; ஏனெனில், ம்ருகமும் வளர்ப்பவர்களுக்கு உதவிசெய்வதினாலேதான்.

ஆதலால், ஒப்புரவறிந்து உபகாரத்தைச்செய்து புகழடையவேண்டும்.

---

## ஈகை.

தமக்குள்ள செல்வத்திற்குத் தக்கபடி இரப்போருக்கில்லையென்று சொல்லாமல் கொடுப்பதையே ஆபரணமாகக் கொண்டவரிடத்து அச்செல்வம் பெருக்கமுற்றிருக்கும்.

ஒருவன் ஸன்மார்க்கத்தில்பிரயாசப்பட்டுச் சம்பாதித்த திரவியத்தி லெவ்வளவாகிலும் இரப்பவர்களின் குறிப்பறிந்து கொடுத்துத் தானும் சுகத்தை யனுபவித்திருப்பது அவனுக்கு சுகஜீவனமாம். அப்படியல்லாமல் திரவியத்தைத் தேடித் தானுமனுபவியாமல் எளியவருக்குங்கொடாமல் புதைத்துவைத்துக் காப்பாற்றுவதினால் அவனுக்குப் பயனில்லையாகினும், 'பொன்காத்த பூதம்' என்றுலக மிகழும் பயன்மாத்திர முண்டாயிருக்கலாம்.

அதிதிமுதலியோர் தங்கள் வறுமையாலிரந்து கேட்கினும் உபகாரஞ்செய்யாதவனுடைய திரவியம் எவ்வளவு திரளாக விருந்தாலும் பயனில்லாமற்கெடும். உபகாரத்திற் செலவுசெய்தால் அது விருத்தியாகிறது மல்லாமல் கீர்த்தியை யுண்டாக்கும்.

கிடைத்தபொருளில் நாலிலொருபாகம் தர்மகைங்கர்யத்தில் செலவு செய்யவேண்டுமென்று முன்னோர்கள் சொல்லியிருக்கின்றமையால், தனக்குண்டாகிய குறைவை நினையாமல் பிறருக்குக்கொடுப்பதே சிறந்த கொடையாம்.

செல்வத்தையுடைய ஒருவனிடத்தில் ஒருதரித்திரன் வந்தடுத்துத் தனதில்லாமையைச்சொல்லி இரந்து கேட்பானாகில் அனனது துபரத்தை நீக்காமல் தன்னைப்போலொத்த பாக்யவான்களுக்குக் கொடுத்துத் தானுமுண்டு களித்திருப்பவனுடைய செல்வம் அரிய தவஞ்செய்து பெற்றதாக விருந்தாலும் இரப்போருக்குதவாமையால் நிலையில்லாம லழிந்துவிடும். ஆதலால் தாத்ருத்வ மென்னுங் கொடையே உத்தமகுணமாம்.

த்ரவ்யமின்மையால் ஒருவன் புல்லமுதுபடியைக்கொண்டு காலங்கழிப்பவனாக விருந்தாலும், தானுண்ணும்போது வந்த அதிதிக்குத் தானுண்ணும் சாதத்தில்



கிஞ்சித்து பாகித்துக் கொடுத்துண்ணவேண்டும். அப்படிக்கொடாம லுண்போனை பிற்காலத்தில், 'இட்டுண்டுணாப்பாவி' யென்று உலகம்பழிக்கும்.

தனக்குந் தன்சுற்றத்தாருக்கு முதவுமென்றெண்ணித் தனக்குள்ள த்ரவ்யத்தைப் பிறருக்கீயாமல் பூமியினிடத்துப் பத்ரப்படுத்திவைக்கும் புல்லறிவாளர்களின் விவேகத்தின் தன்மையைக்கண்டு பூமிதேவி நகைசெய்வளென்று சொல்லவேண்டியதேயில்லை. ஏனெனில் பூமியினிடத்து வைத்தபொருளை அநுபவியாமல் இறந்தவர்களெத்தனைபெயர் என்று சொல்லக்கூடும்.

தானுண்டதும் ஒருவருக்குக் கொடுத்தது மாத்ரமே தன்பொருளென்றும், உபகாரத்திற்கொடுத்த அப்பொருள் மறுமைக்குத் துணையாமென்றும், அப்படி உபகாரஞ்செய்யாமல் காப்பாற்றிவைத்தபொருள் முடிவில் தனக்குதவாமற் போகுமென்றும் முன்னோர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

நூற்றிலொருவன் ஸூரனென்றும், ஆயிரத்திலொருவன் பண்டிதனென்றும், லக்ஷத்திலொருவன் ஸபையில் ப்ரஸங்கிக்கத்தக்க வாக்குடையவனென்றும், தாதாவானவன் உண்டோ இல்லையோவென்றும் சொல்லியதில் பொருளென்னவெனில், தாத்ருத்வமே எல்லாவற்றிலும் சிறந்தகுணமென்பதாம்.

பேரிகையின் த்வனி யோஜனைதூரத்திலும், மேகத்தின் கர்ஜிப்பு பன்னிரண்டு யோஜனை தூரத்திலும், தாதாவானவனுடைய கீர்த்தி எவ்விடத்துங் கேட்குமென்று சொல்லியிருக்கின்றது.

தாத்ருத்வம், இன்சொலுரைத்தல், மனோதைர்யம், பகுத்தறியும் அறிவு, ஆகிய இக்குணங்கள் அவரவர்களுக்கு ஸ்வபாவமாக வுண்டாகவேண்டுமே யல்லாமல் ஒருவராலே கற்பிக்கப்பட்ட குணங்களல்லவென், சிறப்பிக்கப்பட் டிருக்கின்றன.

இறந்துபோகவேண்டியநாள் இன்னந் தூரமாக விருக்கிறதென்றும், ஆதலால் தர்மத்தைப் பின்னாலே செய்வோமென்று ஆலஸ்யமாகவிராமல் உடனே தர்மத்தைச் செய்யவேண்டும்; ஏனெனில், நமது ஆயுளும் பொருளும் நாளைக்கிருப்பது நிஜமல்ல.

பலருக்கு முபகாரஞ் செய்பவர்களுடைய செல்வம் படுமுதலாய் முளைத்துக்காய்த்துப் பலனையளிக்கும் பனைமரத்தைப்போல விளங்கியிருக்கும். உபகாரஞ்செய்யாதவர்களுடைய செல்வம் எவ்வளவு மிகுதியாக விருந்தாலும் சுடுகாட்டுக்குள் வாழும் ஆண்பனையைப்போலிருக்குமே யல்லது வேறு ப்ரயோஜனத்தைக் கொடாது.

கீர்த்திபெறவேண்டுமென்றாலும், மறுமைக்குத் துணையாக விருக்குமென்றாலும், கேட்போர்களுடைய முகத்திற் கஞ்சியானாலும், நல்வழியில் ஸம்பாதித்தபொருளைக் கூடியமட்டிலும் உபகாரமாகச் செலவுசெய்கிறவர்கள் நல்லோர்களாலே கீர்த்திபெற்று வாழ்வார்கள்.

ஆதலால், யாவரும் உபகாரமுதலிய ஸத்கர்மங்களிற் செலுத்தப்படுந் தாத்ருத்வமென்னுஞ் சிறந்தகுணத்தைக் கைக்கொண்டு கீர்த்தியடையவேண்டும்.

---

இகபரசுகசாதனி சந்தாதாரர்களுக்குப்
பெருத்தலாபம்! பெருத்தலாபம்!!
இச்சமயத்தைக் கைவிடாதீர்கள்.

## பஞ்சதசப்பிரகரணம்.

இது அதிகபிரயோசனத்தைத்தரத்தக்கதோர் வசனகிரந்தம். கேள்வி உத்திரங்களாகச் செந்தமிழில் எளியநடையில் எழுதப்பட்டது. வேதாந்தவிஷயமெல்லாம் அதிகரிக்கமாட்டாத பேருக்கும், வேதாந்தமனைத்தும் படித்தாலும் அதன்அர்த்தம் தெளிந்தறியக்கூடாத சகலருக்கும் எளிதாக வேதாந்தத்தினுடைய உண்மைப் பொருளைக்கண்டனுபவித்து மோக்ஷமடையத்தக்கதாக. வேதாந்த சம்மதப்படிக்கு உலோகோபகாரமாக வித்தியாரண்ணியசுவாமிகள் தாமடைந்த பிர்ம்மானுபவத்தைப் பஞ்சதசப் (பதினைந்து) பிரகரணங்களாலே வெளிப்படுத்தியருளினார். வேதாந்தநூல்களைப் படிக்க விருப்பங்கொள்ளும் சுகுணர்களுக்கு ஏராளமான விஷயங்கள் அடங்கப்பெற்ற இந்நூலின்கணுள்ள முக்கிய விஷயங்களாவன; கூடஸ்ததீபம், தத்துவவிவேகம், துவிதவிவேகம், மகாவாக்கியவிவேகம், ஆத்மானந்தம், அத்துவிதானந்தம் என்பவைகளே. இப்புத்தகம் உயர்ந்த கிளேஸ்காகிதத்தில் அச்சிட்டு அழகான காலிகோபயிண்டு செய்யப்பட்டுள்ளது. இதன் விலை 1-0-0.

## கட்டளைக்கொத்து.

உலகத்தில் உண்மையான நித்தியசுகத்தை யடையவேண்டின் மதாசாரத்தை யனுஷ்டிக்கவேண்டியது ஆவசியகம். மனிதனுக்கு மதத்தைப்போல் சுகங்கொடுக்கத் தகுந்தது வேறொன்றில்லை. தனதான்னியங்களாலும், பெண்டுபிள்ளைகளாலும்வருகிற சுகமானது அற்பமானதாயும் அல்லலுடைய சமுசாரத்தை விர்த்திசெய்கிறதாயு மிருக்கிறது. கடவுள்சொரூபத்தையும், ஆத்மாவின் இலக்ஷணத்தையும், உலகத்தின் தன்மையையும்அறிவித்து, பயத்தைநீக்கி, மர்ணத்தைத்தவிர்த்து நித்தியமான பேரின்பத்தை யடையச்செய்வது மதமானதால் அது மிகவும் சிரேஷ்டமாகும். ஆகையால் மதவிசாரணைசெய்து, விசாரித்தறிந்தவண்ணம் அனுஷ்டிக்க எல்லோரும் முயலவேண்டுமென்பது அத்தியாவசியக

மான விஷயம். மதவிசாரணை செய்வதெப்படி? முதலில் கிரந்தங்கள் மூலமாக மதக்கோட்பாடுகளை யறிந்து பிறகு நல்லாசனைத்தேடி உபதேசம்பெறவேண்டும். எந்தக்கிரந்தங்களைப்படிக்க வாரம்பிப்பது? இந்தக்கேள்விக்குக் கீழ்வருமாறு சமாதானஞ் சொல்லப்படுகிறது.

அஞ்ஞானத்தையே காரணமாகக்கொண்டிருக்கும் சமுசாரபந்தத்தையுடைய ஜனங்கள் கடைத்தேறும் வண்ணம் நித்தியமுக்தனாகிய பகவான் வேதத்தையுண்டாக்கியருளினர். அந்தவேதமானது பலசாகைகளாகப் பிரிந்து ஜனங்களின் மனோவிர்த்திக்குத்தகுந்த மாதிரியாக விருக்கின்றன. அவ்வேதத்தின் பலசாகைகளின் காரணமாக பலசமயங்கள் ஏற்பட்டு பலசாஸ்திரங்களில் பிரதிபாதிக்கப்படும் ஜகஜீவபரங்களின் இலக்ஷணங்களைத்தெரிந்துகொள்ளுவதற்குக்கூறப்பட்டுள்ள விஷயங்கள் அந்தந்தசமயங்கட்கேற்றவாறு பரிபாஷா கலப்பினால் சுலபத்திலறிதற் கேலாதபடி யிருக்கின்றமையினைக் கருதி, அந்தந்த சமயங்களில் வல்லவர்களாகிய பெரியோர்கள் தங்களுக்குரிய சாஸ்திரங்களுக்குச் சோபானமாக எளியவசனநடையில் 1-சிவப்பிரகாசக்கட்டளை, 2-திருவாலவாய்க்கட்டளை, 3-வேதாந்த தத்துவக்கட்டளை, 4-ஆராதார ஜீவோத்பத்திசிந்தாமணி, 5-தத்துவதீபிகை, 6-ஞானக்கட்டளை, 7-தத்துவாமிர்தக்கட்டளை, 8-நாநாஜீவவாதக்கட்டளை, 9-உபதேசஉண்மைக்கட்டளை, 10-வேதாந்ததசாவத்தைக்கட்டளை, 11-வேதாந்ததசகாரியக்கட்டளை, 12-உபதேசசித்தாந்தக்கட்டளை, 13-சித்தாந்தக்கட்டளை, 14-சித்தாந்ததத்துவலக்ஷணம் ஆகிய இவைகளைச் சிறுநூல்களாகவியற்றி உபகரித்திருக்கின்றனர். இந்நூல்கள் பெரும்பாலும் கட்டளை என்கிற பெயரினாலேயே வழங்கிவருகின்றன. இவைகளுள் சிலசுத்தாத்துவிதிகளுக்கும் கேவலாத்துவிதிகளுக்கும் உரியனவாம். இக்கட்டளைகள் சித்தாந்தத்தில் ஒன்றற்கொன்று மாறுபட்டனவேயாயினும் தங்கள் சமயவுண்மையினை ஆராயப்புகுவோர் மற்றைச் சமயத்தினர் கொள்கையினையும் அறிந்துகொள்ளவேண்டுவது மிகாலமாகலின் இருவகைப்பட்ட இப்பதினான்கு கட்டளைகளையும் ஒன்றுசேர்த்து "கட்டளைக்கோத்து" என்னும் பெயரிட்டு, சுத்தவெண்மையான காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றது. மதவாராய்ச்சிசெய்ய வாரம்பிக்கும் ஆரியமதாபிமானிகள் இக்கட்டளைக்கொத்தை முதலில் படிக்கவேண்டும். ஆதலால், இது எல்லாருக்கும் மிக்க உபயோகமான புத்தகமெனக்கருதி இதன் விலையைக்குறைத்து 8-அணாவாக ஏற்படுத்தியிருக்கிறது.

ஆகிய இவ்விருபுத்தகங்களையும் "இகபரசுகசாதனி" சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் முக்கியமாய் வாசிக்க வேண்டியிருந்தபடியால் அவர்களுக்காகவே பாதிவிலையாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. வேண்டுவோர் 1904ஞு மே.மீ 31உக்குள் இகபரசுகசாதனி ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவேண்டியது. மேற்கண்ட தேதிக்குமேல் இவ்விலைக்குக்கிடைக்கமாட்டாது.

161190

இப்படிக்கு,
கொ-லோகநாதமுதலியார்.
"இகபரசுகசாதனி ஆபீஸ்" சென்னை.

## தபால் அறிக்கை.

### தபால்தலை புத்தகங்கள்.

ஜனங்களுடைய சௌகரியத்துக்காக, அரைஅணா ஒருஅணாத் தலைகள் அடங்கிய சிறு புத்தகங்கள் எல்லா எட் ஆபீசுகளிலும், டவுன் சப்ஆபீசுகளிலும், விலையாவதற்கு ஏதுவுள்ள இன்னும் இதர முக்கியமான இடங்களிலும், இப்போது கிரயத்துக்குக் கிடைக்கும். புத்தகத்திலுள்ள தபால்தலைகள் கோடைகாலத்திலும், மழைக்காலத்திலும், கெடாதிருக்கும்படித் தலைகள் அடங்கிய ஏடுகளின் மத்தியில் எண்ணெய்க் காகிதங்களைச் சேர்த்து தைக்கப்பட்டிருக்கின்றது.

அரைஅணா தலைகளையுடைய புஸ்தகங்களில் ஒவ்வொன்றிலும் நான்கு ஏடுகளும், ஒவ்வொரு ஏட்டிலும் ஆறுதலைகளும் அடங்கியிருக்கின்றன. அதாவது அந்தப்புஸ்தகம் ஒன்றில் மொத்தத்தில் 24-தலைகள் இருக்கின்றன. ஒருஅணாத் தலைகளையுடைய புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டேடுகளும், ஒவ்வொரு ஏட்டிலும் ஆறுதலைகளும் ஆக மொத்தத்தில், ஒரு புத்தகத்தில், 12-தலைகளும் அடங்கியிருக்கின்றன. ஒரு புத்தகத்தின் விலை அணா ($12\frac{1}{4}$) பனிரண்டேகால். வேண்டியவர்கள் மேற்குறித்த விலைப்படி ஒவ்வொரு புஸ்தமாகவாகிலும், எட்டு புத்தகங்களடங்கிய பாக்கெட்களாகவாகிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(Sd) எ. யூ. ப்ரான்ஷா.
இந்தியா போஸ்டாபீஸ், டைரக்டர்ஜனரல்.
கல்கத்தா,
1904ஞு ஏப்ரல்மீ 7உ

## அறிவிப்பு.

இகபரசுகசாதனிப் பத்திரிகாபிமானிகளுக்குத் தெரிவித்துக்கொள்ளும் விஞ்ஞாபனம்:—

"இகபரசுகசாதனி" யென்னும் பத்திரிகையின் அபிமானிகளாகிய நேயர்களே! ஆதியிலேயே பத்திரிகை வாயிலாக இப்பத்திரிகையை ஒருவருஷம்வரையில் நடத்திக்கொண்டு வரப்படுமென்று தெரிவித்திருந்தவண்ணம் 1904ஞு ஏப்ரல்மாதத்தோடு நிறுத்தப்பட்டது. சிலர் இதை விடாமல் நடத்திக்கொண்டு வரலாமேயென்று நினைக்கக்கூடும் இதை நிறுத்தியதற்கு முக்கியகாரணம் சந்தாதாரர்கள் அதிகமாகச் சேராமையாலும், இதனால் ஆபீசில் வாலாயமாய் நடக்கவேண்டிய வேலைகளுக்கு இடை இடையே தடைநேருவதாலும் இதுகாறும் அதனால்நேர்ந்த பலவித நஷ்டங்களைப்பற்றியுமே எனவறிக.

இங்ஙனம்,
கொ-லோகநாதமுதலியார்.